
# தாய்வீடு

THAIVEEDU APRIL 2021 ஏப்பிரல் www.thaiveedu.com



மு.தளையசிங்கத்தின்

## ‘ஒரு தனி வீடு’ நாவல்



## கோவிட்-19 முடங்குநிலை : அடைந்ததும் இழந்ததும்



## மியான்மரில் மீண்டும் இராணுவ ஆட்சி

இன்னும்...




- மனித உரிமைகள் பேரவை முடிவு
- தமிழகத்தில் சட்ட மன்றத் தேர்தல்
- தேவிபாரதியின் நிலமொழியில் இயன்ற ‘நீர்வழிப்படூஉம்’ நாவல்
- ஈழத்துப் புலம்பெயர் பெண் கவிஞர்களின் கவிதைகள்
- தமிழியல் ஆய்வுகள் - வரலாறும் வளர்ச்சியும்
- ஆண்டவனை மாற்றிய அதிசய மன்னன்
- இருட்டிய பிறகு ஒரு கிராமம்

....

NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law

RAMAN HOME COMFORT INC
HEATING
Quality Products, Certified Technicians, Reliable Service & Reasonable Prices
SAVE $2000 WHEN PURCHASING A NEW HIGH-EFFICIENCY FURNACE
LENNOX
Raman Chelliah
Sales Person
647-893-4414
Tel: 416-332-2989
Email: info@ramanhomecomfort.com
Scarborough: C105-6055 Steeles Ave. East, Scarborough, ON M1X0A7

15 years of Success
500+ Agents
Selva Vettyvel
Broker of Record
HomeLife/Future Realty Inc., Brokerage
416.568.4301
VettyvelLaw
Professional Corporation
Rishani Vettyvel
BARRISTER AND SOLICITOR
BBA, LLB, LLM
Real Estate Law
416.261.1544

AEREN Thiyagarajah BEng
Realtor
aeren.realtor@gmail.com
Dir: 647-888 3500
DILEEP Thangavel
Realtor
dileep.realtor@gmail.com
Dir: 416-666 2300
BUS: 905 201 9977 | FAX: 905 201 9229
HomeLife/ Future Realty Inc., Brokerage
Independently Owned And Operated
205 - 7 Eastvale Drive, Markham, ON L3S 4N8

அனைத்து மோட்கேஜ் தேவைகளுக்கும்
BonaFide
Mortgage Solutions Inc.
Brokerage Lic# 10216
Suren Nathan AMP
Mortgage Broker
License# M08004479
Dir. 416-436-1111
Office. 416-548-7475 Fax: 416-548-7496
suren@bonafidemortgage.ca, 7 Eastvale Drive, Unit 203, Markham, ON, L3S 4N8

ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
வீடு என்பது தொடுவானம் அல்ல
கலங்கரை விளக்கு...
Thana Yoganathan
Sales Representative
416.418.5749 www.thanahomes.com
HOMELIFE LANDMARK REALTY INC.BROKERAGE* OFFICE: 905-305-1600

வீடு வியாபார நிலையம்
வாங்க விற்க
HomeLife Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
Bus: 416-298-3200, Fax: 416-298-3440,
E-mail: kuna@kunahomes.ca
*Independently Owned and Operated.
Kuna Nagalingam
Sales Representative
Sujatha Kunasegar
Sales Representative
416.402.4545

RL RAMACHANDRAN LAW
PROFESSIONAL CORPORATION
CIVIL LITIGATION
REAL ESTATE
FAMILY
CORPORATE
EMPLOYMENT
WILLS & ESTATE
VITHU RAMACHANDRAN
J.D, B.Com (Honours)
Barrister & Solicitor
416-902-8225
VITHU@RAMACHANDRAN.LAW | FAX: 416-391-6056

RE/MAX
Royal Properties
Ahilan Thanabalasingham
Sales Representative
416.617.1767
Office: 905.471.0002
RE/MAX Royal Properties Realty Ltd.,
Brokerage
7595 Markham Road, Unit 19 Markham, ON L3S 0B6

UTHAYAN SIVARAJAH
416.301.5555
PYRAMID GROUP
SUGAN SIVARAJAH 416.890.9999
RAJ SIVARAJAH 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH 416.453.7777
ROYAL LEPAGE ignite
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
Independently Owned and Operated

Your Trusted Realtor
Buying | Selling | Leasing | Investing
RE/ON
Homes Realty Inc.
Brokerage
FREE HOME EVALUATION
Justin William
Broker of Record/ Owner
416.803.7344
www.reon.ca

DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan BDS, MFDS, FAGD
3150 Eglinton Ave E, Unit -5
Scarborough
Markham & Eglinton
3351 Markham Rd, Unit-129
Scarborough
Markham & Steeles(Red Building)
416.264.3232
416.609.2022

Siva Shanmuganathan
Broker
416-545-7482
Joy Selvanayagam
Broker
416-358-6928
Knowledge. Experience. Success
Siva & Joy Real Estate Team
HomeLife/Future Realty Inc., Brokerage *
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
*Independently Owned and Operated

SRI NADARAJASUNDARAM
Sales Representative
416-276-6666
RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

VENTHAN KANDIAH
Sales Representative
Cell : 6476286109
Residental
Commercial
Investment

RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Broker
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

உடனடி வேலை வாய்ப்பு!
Toronto தொழிற்சாலையில்
காலை, மாலை, இரவு நேர வேலை வாய்ப்புகள்
Shinol inc.
போக்குவரத்து வசதிகள் வழங்கப்படும்
தொடர்புகளுக்கு - 416-286-6375
(திங்கள் முதல் வெள்ளி 9:00மணி முதல் 5:00மணி வரை)

MORTGAGE ARCHITECTS
THEVEN KANKESU
Mortgage Agent FSCO Lic.: M08008759
1193A Brimley Rd. #7
Toronto, Ontario, M1C 5G3
T: 416.939.8789
F: 416.439.1965
theven.kankesu@mtgarc.ca
thevenk1.tk@gmail.com

Finding Homes to Fit Your Lifestyle
Suba Aynkharan
Broker
Cell: 416-722-4444
1265 Morningside Ave, Suite 203
Toronto, ON M1B 3V9
Tel: 416-287-2222
RE/MAX COMMUNITY REALTY INC., Brokerage

தாய்வீடு

**Publisher & Editor**
PJ. Dilipkumar
**பதிப்பாளர், ஆசிரியர்**
பி.ஜெ. டிலிப்குமார்

**நிறுவன வரைகலைஞர்**
கருணா

**ஆலோசகர் குழு**
அருண்மொழிவர்மன்,
சேரன்,
துஷி ஞானப்பிரகாசம்,
ஞானம் லெம்பட்,
கந்தசாமி கங்காதரன்,
பொன்னையா விவேகானந்தன்,
ரவிச்சந்திரிகா.

**ஓவியங்கள்**
டிராட்ஸ்கி மருது (இந்தியா),
ஜீவா (இந்தியா),
K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து),
பிருந்தாயினி(இலங்கை),
ரமணி (இலங்கை),
சௌந்தர் (இங்கிலாந்து),
றஷ்மி (இங்கிலாந்து).
எஸ். தர்மதாஸ் - செல்வன்(இலங்கை).

**புகைப்படங்கள்**
K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து),
சர்வேசன்,
துசியந்தன் துரைரத்தினம்.

**தட்டச்சு**
சாம் டானியல்.

**ஒப்புநோக்கல்**
கௌரி,
கந்தசாமி கங்காதரன்.

**பொது உறவுத் தொடர்பு**
குமணன் தம்பிஜயா

**ரொறன்ரோ விநியோகம்**
இராமநாதன் ரூபன்,
சசி,
மெய்யழகன்.

**மொன்றியால் தொடர்பு**
சுகுமாரன் சின்னையா.

**ஒட்டாவா தொடர்பு**
அலெக்ஸ் சிவசம்பு: 1-613 -276-7253

**அஞ்சல் முகவரி**
Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

**Tel :** 416-646-3422, 416-857-6406
**Fax :** 416-849-0594
**Web :** www.thaiveedu.com
**E-mail :** info@thaiveedu.com


## மியான்மர் - மற்றுமோர் அச்சுறுத்தல்

உலகளாவிய தமிழர்களிடம், தமிழகத் தேர்தல், ஐ.நா.வில் இலங்கை விவகாரம், கோவிட் தொற்றின் மூன்றாம் அலை போன்ற செய்திகள் பெற்ற கவனத்தை, மியான்மரில் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றிய செய்தி பெறவில்லையோ என்று தோன்றுகிறது.

தமிழர்களுக்கும் அடக்குமுறை ஆட்சியும் அதன்வழியே ஏற்பட்ட பேரிடர்களும் புதியதல்ல. இலங்கை தன்னையொரு ஜனநாயக அரசாகவே காட்டிக்கொண்டாலும் தமிழர்கள் வாழும் பகுதிகளில் ஏறக்குறைய 30 ஆண்டுகளுக்கு மேலாக இராணுவ ஆட்சியையே நடத்தியிருந்தது. இக்காலப்பகுதியில் தமிழர்களுக்கு ஏற்பட்ட இழப்புகளையும் வன்கொடுமைகளையும் விபரிக்க வேண்டியதில்லை.

இராணுவ ஆட்சி, சர்வாதிகார ஆட்சி என்பன உலகளாவிய வகையில் மிகக் குறைந்து விட்டன அல்லது ஓரளவுக்கு முடிவுக்கு வந்துவிட்டன. எனினும், நடைமுறையில் உள்ள ஆட்சியமைப்பு வடிவங்களுக்குள்ளும் அடக்குமுறைகளுக்கு இசைவாக கோட்பாடுகள் நிறைந்தே கிடக்கின்றன.

உலகம் தொற்றுநோய்ச் சுழலுக்குள் இடருற்றிருக்கும் இக்காலப்பகுதியில் மியான்மர் நாட்டில் ஏற்பட்டிருக்கும் இராணுவ ஆட்சியும் தொடர்ந்து நடைபெறும் படுகொலைகளும் உலகின் கவனத்தை ஈர்த்து, மானுட உரிமைகளைப் பேணும் அமைப்புகளிடையே பேரதிர்ச்சியைத் தோற்றுவித்திருக்கின்றன.

மியான்மருக்கு இராணுவ ஆட்சி புதியதல்ல, ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகள் வரையிலான இராணுவ ஆட்சி அங்கு நடைபெற்றிருக்கின்றது. ஆயுத பலத்தோடு கூடிய இராணுவம் மியான்மரில் தன்னை ஓர் அரசியல் கட்சியாகவே கருதிக் கொண்டிருக்கின்றது. நெருக்கடிகளைத் தொடர்ந்து, ஜனநாயகக் கோட்பாட்டின் அடிப்படையில் தேர்தல்களை நடத்தினாலும் பிற கட்சிகள் பெறும் வெற்றிகளை இராணுவத்தால் ஏற்க முடியாதிருந்தது.

2015இல் பெரும்பான்மை மக்களின் ஆதரவோடு ஆட்சிக்கு வந்த, ஆங் சான் சூச்சியின் ஆட்சியே கடந்த பெப்பிரவரியில் கவிழ்க்கப்பட்டிருக்கின்றது. மேற்குலகத்தால் விரும்பப்பட்டிருந்த சூச்சி, ரொஹிங்கியா மக்கள் மீதான இனவழிப்புக்குப் பின், மேற்குலகின் கடும் கண்டனங்களுக்கு உள்ளாகியிருந்தார். சில விருதுகளும் திரும்பப் பெறப்பட்டன. எனினும் இது மியான்மருக்குள் அவருடைய செல்வாக்கைப் பாதிக்கவில்லை என்பதே உண்மை.

கடந்த நவம்பர் 8ஆம் நாள் நடைபெற்ற தேர்தலில் சூச்சியின் கட்சி மீண்டும் பெரும்பான்மை பெற்றது. தேர்தல் நேர்மையாக நடைபெறவில்லை என்ற குற்றச்சாட்டைக் கூறிவந்த இராணுவத் தரப்பு, வேளை பார்த்து ஆட்சியைக் கைப்பற்றியிருக்கின்றது என்கின்றனர் நோக்கர்கள்.

இந்த இராணுவ ஆட்சியேற்பட்டு ஒரு வாரத்துக்குள் 400 பொதுமக்களுக்குமேல் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். மக்களால் தெரிவான உறுப்பினர்களும் ஊடகவியலாளரும் உட்பட நூற்றுக்கணக்கானோர் கைதாகியிருக்கின்றார்கள். இந்த வன்கொடுமைகள் இன்னமும் தொடர்வதாகவே செய்திகள் தெரிவிக்கின்றன.

இது, ஆட்சி மீது கொண்ட பேராசையால் நடந்ததா? இல்லை, வல்லரசுகளின் வணிகச் சிந்தனையை மையப்படுத்திய காய்நகர்த்தல்களின் விளைவா?

பொதுமக்களின் நலத்துக்கும் பெரும்பான்மை மக்களின் தீர்ப்புக்கும் எதிராக தீயதோர் ஆளுமை ஆயுதபலத்தை முன்னிறுத்தி எழுகின்றபோது, அதற்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டியது குடியாட்சிக் கோட்பாடுகளையும் மானுட உரிமைகளையும் போற்றுகின்ற ஒவ்வோர் ஊடகத்தினதும் பொறுப்பு என்பதை நாம் உணர்கின்றோம்.

அழகும் வளமும் பொருந்திய மியான்மர் நாடு, உலக வல்லரசுகளின் கனவுகளில் மிதக்கும் நாடும் கூட. சீனாவின் ஒரு புறத்தை எல்லையாகக் கொண்டிருக்கும் இந்நாட்டில் ஆளுமை செலுத்தச் சீனா விரும்புவதை அனைவரும் அறிவர். அதேவேளை, அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் கூட, மியான்மர் மீதான ஆளுமையில் பங்குகொள்ள பெருவிருப்பு இருக்கின்றது. ஏறக்குறைய இலங்கைக்கு ஏற்பட்டிருக்கும் சர்வதேச வல்லாதிக்க நெருக்கடி மியான்மருக்கும் உண்டு.

இவ்வாறான நெருக்கடிகளில், மக்களின் ஆதரவைப் பெற்று, நாட்டின் நலன்களுக்கேற்ப முடிவுகளை மேற்கொள்வதே அரசின் பணியாக இருக்க முடியும். உள்நாட்டு ஆட்சியைப் புரட்சிகளின் வழி மாற்றுவதால் அனைத்துலக நெருக்கடிகளை எதிர்கொள்ள முடியாது.

மியான்மரில் மீண்டும் அமைதியைக் கொண்டுவர வேண்டுமானால், உலகநாடுகளின் தம் நலம் கருதாத, ஒருங்கிணைந்த பெருமுயற்சியே இப்போது தேவை.


**பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு.**
**ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.**

# இம்மாதத் தாய்வீட்டில்...


மனித உரிமைகள் பேரவை முடிவு இலங்கையின் மீதான தற்காலிக அழுத்தம் 4
அ. கணபதிப்பிள்ளை

ஒரு பயணத்தின் முடிவும் புதிய பயணத்தின் துவக்கமும் 7
- விக்டர் ஐவன்
தமிழில்: மணி வேலுப்பிள்ளை

தமிழகத்தில் சட்ட மன்றத் தேர்தல் 9
நெல்லை ஜெயசிங்

மியான்மர் இராணுவம் ஆட்சிக் கவிழ்ப்பு: உள்ளகச் சிக்கல்களும் தலையீடுகளும் 14
ரூபன் சிவராஜா

பொருளாதாரப் பேரிடர் - உள்ளூர் வணிகம் எதிர்கொள்ளும் சவால்கள் 19
பொன்னையா விவேகானந்தன்

கோவிட்-19 முடங்குநிலை: அடைந்ததும் இழந்ததும் 21
அருவி இரவீந்திரன்

ஊடக அறம் 24
சுப்ரமணியம் ஜெயசீலன்

வாசிப்புக் கற்பித்தலுக்கு இன்றியமையாத எழுத்தறிவு எண்ணக்கருக்கள் 27
என். கிருஷ்ணகுமார்

தொற்றுப் பேரிடரும் தமிழ்மொழிக் கல்வியும் 30
அமுதா அன்பழகன்

சரியாகத் தமிழறிவோம்! எது சரி? ஏன் சரி? 33
மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

மர்மங்கள் நிறைந்த தீவு! 36
குமணன் தம்பிஜயா

கோள்களில் தரையிறங்கும் ரோவர்களும் மனிதர்களும் 38
குரு அரவிந்தன்

திருடப்பட்ட மூளை 41
சி. நற்குணலிங்கம்

சூயஸ் கால்வாய் 42
சுப்ரமணியம் ஜெயசீலன்

ஒட்டகம் ஆசனம் 45
பாதுசா ஆனந்தநடராசா

வசந்தகால வீட்டுப் பராமரிப்பு 49
வேலா சுப்ரமணியம்

இரண்டாயிரம் ஆண்டு பழமையானது 52
குமார் புனிதவேல்

காலக்கணித நோக்கில் சித்திரைப் புத்தாண்டு 54
பாலா. சிவகடாட்சம்

கேட்பது செவிச்செல்வம் 57
மாத்தளை சோமு

தேசியக் கலைஞன் புதுவை செல்வம் 60
ப. ஸ்ரீஸ்கந்தன்

கிழக்கிலங்கையில் மருத்துவக் கல்விக்கு வித்திட்ட உபவேந்தர் ரவீந்திரநாத் 62
வே. விவேகானந்தன்

என் நினைவில் நீர்வை பொன்னையன் 65
வசந்தி தயாபரன்

எனது மனப்பதிவில் தோழர் நீர்வை பொன்னையன் 67
ந. இரவீந்திரன்

‘அயோத்தி’ - ஒரு மானுட நலனோம்பு மையம் 71
- அப்துல் கலாம்
தமிழில்: எம்.ஆர். நிப்அத் முகம்மது

குன்றிலிருந்து கோட்டைக்கு 73
ஜீவா சதாசிவம்

மார்க்ஸியமும் மனவியலும் 75
சண்முகம் வெற்றிவேல்

‘அஷேரா’ உடல், உள ஏக்கங்களின் தேடல் 78
நிலாந்தி சசிகுமார்

தேவிபாரதியின் நிலமொழியில் இயன்ற ‘நீர்வழிப்படூஉம்’ நாவல் 80
தேவகாந்தன்

ஈழத்துப் புலம்பெயர் பெண் கவிஞர்களின் கவிதைகள் வெளிப்படுத்தும் புலம்பெயர் அனுபவங்கள் 83
அஷ்வினி வையந்தி

மு. தளையசிங்கத்தின் ‘ஒரு தனி வீடு’ நாவல் 90
மு. புஷ்பராஜன்

விடுதலைத் திணை அரசியலின் படைப்பியல் நீட்சி 93
ந. இரவீந்திரன்

எம்.என். சிறீனிவாஸ் (1916-1999) இந்திய சமூகவியல் - மானுடவியல் முன்னோடி 99
க. சண்முகலிங்கம்

யாழ்ப்பாணத்தில் தமிழ் நிகழ்ச்சிகள் ஒளிப்பதிவு. 102
P. விக்னேஸ்வரன்

தமிழ் இலக்கிய மரபில் மான்மியம் 108
த. சிவபாலு

மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறி 111
மல்லியப்புசந்தி திலகர்

இலெமூரியா அல்லது குமரிக்கண்டம் 113
அ. கணபதிப்பிள்ளை

தமிழியல் ஆய்வுகள் - வரலாறும் வளர்ச்சியும் 116
நா. சுப்பிரமணியன்

‘வேளிர்’ - கபிலரும் இருங்கோவேளும் 122
செல்வநாயகி ஸ்ரீதாஸ்

கர்நாடக சங்கீதமும் தமிழிசையும் 126
மைதிலி தயாநிதி

இசைத் தமிழ்ப் பாடற்பரப்பும் அவற்றின் சமகாலப் பயன்பாட்டு நிலையும் 130
கௌசல்யா சுப்பிரமணியன்

நான் பிறவாதிருந்திருந்தால்! 135
நெடுந்தீவு மகேஷ்

இருட்டிய பிறகு ஒரு கிராமம் 138
- காஷுவோ இஷிகுறோ
தமிழில்: என்.கே. மகாலிங்கம்

காலுங்காதலும் 145
வல்லிபுரம் சுகந்தன்

பனிவிழும் பனை வனம் 148
செல்வம் அருளானந்தம்

ஆண்டவனை மாற்றிய அதிசய மன்னன் 152
நிமால் நாகராஜா

# மனித உரிமைகள் பேரவை முடிவு

# இலங்கையின் மீதான தற்காலிக அழுத்தம்

- அ. கணபதிப்பிள்ளை

இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் முன்வைக்கப்பட்டருந்த தீர்மானமானது வெற்றி பெற்றதில் மேற்குலக ஜனநாயக சக்திகளுக்கே முழுப்பங்கும் கொடுக்கப்பட வேண்டும். அமெரிக்காவின் ஆட்சி மாற்றமும் பிரித்தானியாவின் கொள்கை மாற்றமும் கீழைத்தேய ஜனநாயகத்துக்குக் கொடுத்திருந்த மிகப்பெரிய அழுத்தமாகவே இதனைக் குறிப்பிடலாம். இதனைத் தற்காலிக அழுத்தம் எனப் பலர் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள்.

இலங்கை ஏற்கனவே ஒத்துக்கொண்டிருந்த நல்லிணக்கம் பொறுப்புக் கூறுதல் மனித உரிமைகளை மேம்படுத்துதல் தொடர்பான ஐ.நா. விதிமுறைகளிலிருந்து நழுவிவிட எடுத்த முயற்சிகளால் இலங்கை என்ற சிறியநாடு இராணுவ ஆட்சியின் தடத்தில் பயணிக்கப் போகிறது என்ற ஊகம் பல தரப்பாலும் முன்வைக்கப்பட்டது. அதேநேரத்தில் இலங்கை, மனிதஉரிமை மீறுதல்களைச் செய்துகொண்டிருக்கின்ற சீனா, எரித்திரியா, மியன்மார் போன்ற நாடுகளுடனான அந்தரங்கத் தொடர்புகளையும் வைத்துக் கொண்டிருந்தது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு ஆதரவாகச் செயற்பட்ட 11 நாடுகளைச் ரஷ்யச் சீனக் கூட்டு நாடுகளெனக் குறிப்பிடலாம். அதேவேளை வாக்கெடுப்பிலிருந்து ஒதுங்கி நடுநிலை வகிப்பதாகச் சொல்லிக்கொண்ட 14 நாடுகளில் இந்தியா, யப்பான் உட்படப் பல ஆபிரிக்க நாடுகளாக இருக்கின்றன. அமெரிக்கா, பிரித்தானியா உட்பட 22 நாடுகள் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்திருக்கின்றன.

இந்தியாவின் நடுவுநிலைமை என்ற முடிவுக்குத் தேர்தல்காலத் தமிழகத்தில் பல கண்டனங்கள் முன்வைக்கப்பட்டிருந்தமையினைக் காணமுடிந்தது. இந்தியாவின் நிலைப்பாடு குறித்துப் பலவகையான ஐயப்பாடுகள் பலதரப்பினராலும் தெரியப்படுத்தப்பட்டாலும் இந்தியா இலங்கையினைப் பகைத்துக் கொள்ளவிரும்பவில்லை என்பது இங்கேயும் வலியுறுத்தப்பட்டிருப்பதனைக் காணமுடிகிறது. இந்தியா இரண்டு விடயங்களை வலியுறுத்திவருகிறது. இந்தியா தமிழருக்கான சுதந்திரமானதும் சமத்துவமானதுமான வாழ்க்கையினை உறுதிப்படுத்த விரும்புகிறது. அதேவேளை இலங்கையின் இறையாண்மைக்குக் குந்தகம் ஏற்படாதவகையில் இந்தியா இலங்கையினைப் பாதுகாக்க வேண்டுமென்ற கொள்கையில் உறுதியாகவும் இருந்து வருகிறது.

இந்தியா சிறிய நாடாக இருந்தாலும் அதனை இந்தியா என்ற துணைக்கண்டம் தன்னுள் இணைத்துக் கொள்ளும் என்ற பயம் இலங்கையிலிருந்த பல தலைவர்களுக்கிருந்தது. 1950 களில் நேரு போன்ற தலைவர்கள் இந்தப் பயத்தினை நீக்கியதுடன் மலையகத் தமிழர்களின் குடியுரிமை நீக்கப்பட்டதனைக்கூட இந்தியா எந்தவிதமான எதிர்ப்பினையும் காட்டாமல் சாதாரணமாக ஏற்றுக் கொண்டது. 1957, 1983 இனக்கலவரங்கள் இடம்பெற்ற பொழுதும் அதனால் இந்திய வியாபாரிகளது சொத்துக்கள் அழிக்கப்பட்ட பொழுதிலும்கூட அதனைத் தடுத்து நிறுத்த எந்தவிதமான முன்னெடுப்புக்களையும் செய்திருக்கவில்லை. இதனாலேயே இலங்கைகயின் உள்நாட்டு விவகாரங்களில் இந்தியா தலையிடாது என்ற பொதுவான கொள்கையினை இலங்கை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. அத்துடன் அணிசேரா நாடுகள் உருவாக்கப்பட்ட காலங்களில் இந்தியத் தலைவர்களும் இலங்கையைத் திருப்திப்படுத்துவதற்காகத் தமது ஆதரவினை இலங்கைக்கு வழங்கியிருந்தமையினையும் காணமுடிந்தது. இலங்கை எடுக்கும் எந்த நடவடிக்கைகளிலும் இந்தியா இலங்கைக்குப் பக்கபலமாக இருந்து செயற்பட்டும் வந்திருக்கிறது.

இந்திரா காந்தியின் இந்தியா, வாஜ்பாயின் அகண்ட இந்தியா என்பனவெல்லாம் இலங்கையானது தனது வெளியுறவுக் கொள்கையில் சிறிது ஆட்டங்காணும் பொழுது கொடுக்கப்பட்ட அதிர்ச்சி வைத்தியமாகவே கொள்ளத்தக்கனவாக இருந்தன. பங்களாதேசத்தை உருவாக்கியதனைப் போல இந்திராகாந்தியால் தமிழ் ஈழத்தினை உருவாக்கியிருக்கமுடியும் என்ற எதிர்பார்ப்பு பலருக்கும் இருந்திருக்கக் கூடும் ஆயினும் 1983 இனக்கலவரத்துக்கு எதிராகச் சொல்லப்பட்ட எச்சரிக்கையும் ஜே.ஆர் ஜெயவர்த்தனாவின் சீனா, யப்பான், பாகிஸ்தான் ஆகிய நாடுகளைச் சார்ந்த வெளிநாட்டுக் கொள்கையும் ஏற்படுத்தியிருந்த அதிருப்தியின் விளைவாகக் கொடுக்கப்பட்டிருந்த இந்திய மேலாண்மையின் வெளிப்பாடுதான் அவ்வாறு வெளியுலகுக்குக் காட்டப்பட்டது.

கீழைத்தேய ஜனநாயகம் பெரும்பாலும் கம்யூனிச முலாம் பூசப்பட்டிருப்பதனை மேலைத்தேச ஜனநாயகம் ஒருபோதும் விரும்பியதில்லை. இதனால் அமெரிக்க ஐரோப்பிய நாடுகள் மூன்றாவது அணியொன்று உருவாகுவதனை உடைத்தெறிவதில் கரிசனை கொண்டிருந்தன. எகிப்து. லிபியா, யூகோஸ்லாவியா, இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா போன்ற நாடுகளில் அமெரிக்கா தனது கவனத்தினைச் செலுத்தி வந்திருக்கிறது.

அரசியற் புவியலாளர்களால் இருதயநிலம் (Heart Land) ஒருகாலத்தில் உலகை ஆளும், என்றும் ஓரநிலம் (Rim Land) ஒரு காலத்தில் உலகை ஆளும் என்றும் சொல்லப்பட்ட இருவேறுபட்ட கொள்கைகளை அமெரிக்கா அவதானத்துடன் கவனித்து வந்திருக்கிறது. இருதயநிலம் என வர்ணிக்கப்பட்ட சோவியத் ஒன்றியம் பிளவுபட்ட பொழுதும் அதனால் உலகை ஒருபோதும் ஆளமுடியாது என்ற உண்மையினை உலகத்துக்கு தெளிவுபடுத்தியது. ஓரநில நாடுகளது வளர்ச்சியானது உலகினை அச்சுறுத்திய பொழுதில் அவற்றின் வளர்ச்சியினைத் தடுத்து நிறுத்துவதில் இந்தியாவினைத் தன்பக்கம் திருப்பும் முயற்சியில் அமெரிக்கா வெற்றிகண்டது. எதனையும் காணாததைபோல் காட்டிக் கொண்டு இந்தியாவை அணுஆயுத வல்லரசாக்கிக் கொண்டதால் தன்னுடன் இணைத்துக் கொண்டது. அத்துடன் மூன்று சாத்தான்களான வட-கொரியா, ஈரான், ஈராக் நாடுகளின் அணுஆயுத வளர்ச்சியினைத் தடுப்பதன் மூலம் ஓரநில நாடுகளாக சீனா, யப்பான், கொரியா, வியட்னாம், பிலிப்பைந்து ஆகிய நாடுகளில் அமெரிக்காவின் ஆதரவும் எதிர்ப்பும் ஏற்படுமாறு அதன் நேச எதிரி நாடுகளை உருவாக்கிக் கொள்ளுகிறது.

உலகினைக் கட்டுப்படுத்தும் நாடு எது என்ற கொள்கை வெளி

வந்தகாலத்தில் அணுஆயுதம் விண்வெளி ஆக்கிரமிப்பு வெவ்வே றான போர்த் தந்திர உபாயங்கள் பற்றிய தெளிவு குறைவாக இருந்த பொழுதிலும் அக்கொள்கைகளில் நம்பிக்கை கொள்ளுவ தற்கான பல காரணிகள் வழக்காறுகளாகவும் கதைகளாகவும் நம்மிடையே உலாவிக் கொண்டிருந்தன. இதேபோன்ற கதைகள் எல்லா மக்களுக்கும் பொதுவானவை. ஓர் அரசன் தனது இராஜ தானியை அமைப்பதற்கான இடத்தினைத் தேடிக் கொண்டிருந்த பொழுது. அரசன் கண்ட அதிசயத்தினைச் சிலர் கதையாகச் சொல்லுவார்கள். ஒரு முயலை வேட்டைநாய் துரத்திக் கொண்டு போனது என்றும் குறித்த ஒரு இடத்தினை அடைந்ததும் அந்த முயல் திரும்பி அந்த வேட்டை நாயைத்துரத்திக் கொண்டு வந் தது என்றும் முடிவில் அந்த இடத்தையே அரசன் தனது அரணா கத் தெரிவு செய்தான் என்றும் சொல்லப்பட்டிருப்பதனைக் கதை களாகக் கேட்டிருக்கிறோம்.

இதுவே திருக்குறளில் வலியறிதல் காலமறிதல் இடனறிதல் என்று 48, 49, 50ம் அதிகாரங்களில் சொல்லப்பட்டிருப்பதனையும் காண முடிகிறது.

**பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்**
**வேந்தர்க்கு வேண்டும் பொழுது.**

என்றும்,

**நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்**
**நீற்கின் அதனைப் பிற**


என்ற ஈரடி கொண்ட ஏழு சொற்களால் நிகழ்த்திய பாடம் எக்கா லத்துக்கும் பொதுவான அரசியற் கோட்பாடென்பதனை இங்கு குறிப்பிட முடிகிறது.

இலங்கையின் மீது எடுக்கப்பட்ட ஐ.நா.வின் நடவடிக்கையானது அமெரிக்காவின் இராஜதந்திரத்தின் வெற்றியாகக் கொள்ளுபவர் கள் இந்த வரைவில் தமிழருக்குச் சாதகமான எதுவுமில்லை எனச் சலித்துக் கொள்ளுகிறார்கள். ஈழப்போர் முடிவடைந்து 12 வருடங் களாகக் காக்கப்பட மௌனம் இலங்கைக்கு எதிர்பார்த்திராத ஏமாற்றத்தைக் கொடுப்பதாக இருந்திருக்கிறது. கடைசி நேரத்தி லாவது இந்தியா கைகெடுக்கும் என இலங்கையின் நம்பிக்கை தளர்ந்திருக்கவில்லை. இந்தியா தனது அணியுடன் களமிறங்கியி ருந்தால் கிழக்குலக ஜனநாயகம் தனது கையினை உயர்த்தியி ருக்கும் என்ற நிகழ்வுதான் பலருக்கும் ஏமாற்றத்தினைக் கொடுத் திருக்கும் என்பதுதான் உண்மை நிலையாகும்.

இந்தியாவினதும் இலங்கையினதும் கைகள் கட்டப்பட்டு விட்டன. வாய்கள் அடைக்கப்பட்டு விட்டன. இலங்கையின் மீதான கண்காணிப் பின் அவசியம் சர்வதேச ரீதியில் உறுதிப்படுத்தப்பட வேண்டிய தேவை உருவாகியிருக்கிறது. இலங்கை மற் றுமொரு மியன் மாராக (பர்மாவாக) மாறுவது காலத்தின் கட்டாயமு- மில்லை, தேவையுமில்லை என்ற அர சியற் பார்வையினைப் பலர் அலட்சி யப்படுத்தி விடுகிறார்கள்.

இப்பொழுது சில தமிழ் அரசியல்வா திகள் எங்கள் பிரச்சினைகளை நாங் களாகவே பேசித்தீர்த்துக் கொள்ளுகி றோம் என்ற பழைய கோசத்தினைப் பாடத் தொடங்கியிருக்கிறார்கள்.

சிங்களவர்கள் இணங்காமல் தமிழர் களுக்குக் கொடுக்கப்படும் நீதியும் தீர்வும் என்றும் நிலைக்கப் போவ தில்லை என்பது அவர்களது வாத மாக இருந்து வருகிறது. நாங்கள் தேசிய நீரோட்டத்தில் இணையவில் லை சிங்களத்தைப் படிக்கவில்லை. வடக்கிலும் கிழக்கிலும் தேசியம் கொழும்பில் ஐக்கியம் என்ற இரட்டை அரசியல் சுழலில் சிக்கிக் கொண்டோம் என்ற ஆதங்கம் மேலோங்கு வதனைக் காணமுடிகி றது. இலங்கை அரசியலில் தமிழருக்குக் கிடைத்த அரசியல் சாபக்கேடு, அரசியல் செய்பவர்கள் ஒரே தவற்றினை எத்தனை தடவைகள் செய்தாலும் மக்கள் அதனைப் பெருமையுடன் ஏற்றுக்கொள்ளுகிறார்கள் என்ற திறமையுடன் செயலாற்றுவதுதான்.




சிங்கள இராணுவத்தினைச் சுதந்திரத்தின் பாதுகாவலர்களாகப் பார்க்கின்ற, சிங்களத் தலைமைகள் உருவாக்கிவிட்ட, பாராட்டும் பெருமையும் மக்களால் மறக்கடிக்கப்படாது என்றும் பேணப்பட வேண்டும் என்பது இலங்கையில் இராணுவ ஆட்சிக்கான விதை போடப்பட்ட நாள் என்பது பலருக்குத் தெரிவதில்லை. அதன் பின்னணியில் இராணுவத்தினர் மீது எந்தத் தவறுமில்லை என்ற கருத்தும் மக்களுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. மக்கள் அரசியல் வாதிகள் சொல்லுவதனை நம்புவார்கள் என்பதுதான் ஜனநாய கத்தின் அடிப்படைப்பாடம்.

போர் என்றால் எல்லாம் நடக்கும் என்ற விதிமுறை சில நாடுக ளது போரின் போது பின்பற்றப்படுவதில்லை. அதற்காக அந்தப் போரைப் போலத்தான் நாங்களும் செய்தோம் என்று சொல்லுவது சட்டப்படி சரியாகத் தோன்றலாம். ஆனால், நியாயப்படி அதில் உள்ள தவறுகள் சட்டவாட்சி நாடுகளில் முக்கியப்படுத்தப்படுவ தனைக் காணலாம். எல்லோருக்கும் ஒரேவிதமான சட்டம் தான் என்ற நாடுகளில் சட்டத்தினைப் பார்த்து குற்றவாளிகள் பயப்படு வார்கள். சட்டத்தை வளைக்க முடியும் என்பது வக்கீல்களிடமி ருந்து அரசியல்வாதிகளின் கையில் கொடுக்கப்படும் பொழுது சட்டத்தின் மீதான நம்பிக்கையினை மக்கள் இழந்து விடுகிறார் கள்.

இலங்கை நல்லிணக்கத்துக்கான பல வாய்ப்புகளைத் தவற விட்டிருக்கிறது. 13வது அரசியற் திட்டச் சீர்திருத்ததின் மூலம் இனஐக்கியத்துக்கான கதவு மீண்டும் ஒருதடவை தட்டப்படுகிறது.

இதில் மக்களைக் கேட்போம், மகாசங்கத்தினரைக் கேட்போம் என்று 12 வருடங்களைக் கடத்தியது பெரிய சாதனை என நினைப்பவர்களும் உயிரைக் கொடுத்தாவது இராணுவத்தைக் காப்போம் என உறுதியுடனிருப்பவர்களும் இலங்கையினைக் காப்பாற்றவேண்டும் என்ற உணர்வுடையவர்களா என்ற உண்மை யினை விளங்கிக் கொள்ளவேண்டியது அவசிய மாகும். அதுதான் நாட்டுப்பற்று. இனவாத அரசியலுக்கு அப்பாற்பட்டது.



kanapathipillai.a@thaiveedu.com

# ஒரு பயணத்தின் முடிவும் புதிய பயணத்தின் துவக்கமும்



- விக்டர் ஐவன்
தமிழில்: மணி வேலுப்பிள்ளை

பாரபட்சமின்றி அனைவரின் உரிமைகளையும் நிலைநிறுத்தி, அனைவரின் மதிப்பையும் நம்பிக்கையையும் ஈட்டி, சட்ட ஆட்சியை உறுதிப்படுத்தி, ஊழல் புரியாமல், சோடை போகாமல் ஆளும் ஒரு தற்கால அரசை உருவாக்குவது எங்ஙனம் என்னும் வினாவை நாம் கருத்தூன்றி ஆராயவேண்டும்.

இலங்கையின் பழைய ஊழியும், பழைய முறைமையும் வரலாற்று முடிவுக்கு வந்துவிட்டன என்று கூறலாம். எனினும் எமது சமூகம் மட்டுமல்ல, அதனை வழிநடத்தி, நெறிப்படுத்த வேண்டியோர் என்று கொள்ளப்படும் தலைவர்களும் கூட இதை இன்னும் புரிந்துகொள்ளவில்லை.

நாட்டின் பொருளாதாரம் முழுவதும் முற்றிலும் நிலைகுலையும் நிலையில் உள்ளது. அதை சீரமைக்க வேண்டியுள்ளது. அவ்வாறே அரசும், அரசியல் முறைமையும் முற்றிலும் நிலைகுலையும் நிலையில் உள்ளன. சமூக முறைமையின் கதையும் அதுவே.

உயிர்த்த ஞாயிறு பேரிடி இந்த நாட்டை மும்முரமான தீவிரவாதத்துள் தள்ளிவிட்டுள்ளது. இதுவே இலங்கையின் அரசியற் பயணத்தை ஈற்றில் ஒரு வரலாற்று முடிவுக்கு இட்டுச்செல்லலக் கூடியது. இத்தாக்குதல்கள் சிங்கள, தமிழ்க் கத்தோலிக்கர்களையும், கிறிஸ்தவர்களையும் இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்டவை. ஆனாலும் அவற்றால் பெரும் பீதியும் கலக்கமும் அடைந்தோர் சிங்கள பௌத்தர்களே.

தம்மை இலக்குவைத்து, தம்மைக் கருவறுக்க முஸ்லீம்கள் ஒரு திட்டத்தை முன்னெடுத்து வருவதாகச் சொல்லப்படும் கதைகளை சிங்கள பௌத்தர்கள் ஏற்கெனவே கேள்விப்பட்டிருந்தார்கள். தமக்குக் கலக்கமளித்த அக்கதைகளால் அவர்கள் முஸ்லீம் சமூகத்தின் மீது மிகுந்த அருவருப்பும் வெறுப்பும் கொண்டார்கள். ஏற்கெனவே அவர்களின் உள்ளத்தில் ஆழமாய் வேரூன்றிய முஸ்லீம்-விரோத உணர்வுகள் எல்லாம் திரண்டு ஓர் உருப்படியாக மேலோங்குவதற்கு உயிர்த்த ஞாயிறு பயங்கரம் துணைநின்றது.

## முஸ்லீம்-விரோத உணர்வுகள்:

சிங்கள பௌத்த பெரும்பான்மை மக்களிடையே முஸ்லீம்களைக் குறித்து ஊட்டப்பட்ட பீதியே அவர்களை ஒரு சிங்கள பௌத்த அரசாங்கத்தை அமைக்கும் எண்ணத்தை ஏற்றுக்கொள்ள வைத்தது. ஆட்சி அலுவல்களில் சிறுபான்மையோர் தலையிட இடங்கொடாத அரசாங்கத்தை அமைக்கும் எண்ணத்தைக் ஏற்றுக்கொள்ள வைத்தது.

தமிழ் மக்களுடன் மேற்கொள்ளப்பட்ட போராட்டம் நீடிக்கும்வரை முஸ்லீம்களை தமது சிறந்த நண்பர்களாக சிங்கள தீவிரவாதிகள் கருதியிருந்தார்கள். பிரபாகரனது ஈழப்போரைத் தோற்கடிப்பதில் வட-கீழ் முஸ்லீம்கள் கணிசமான பங்கு வகித்தது உண்மையே. ஈழ எதிர்ப்புப் போராட்டத்தில் தமது உயிர்களை ஈந்த முக்கிய போராட்ட வீரர்களின் பட்டியலில் முஸ்லீம்கள் பலரின் பெயர்களும் உள்ளடக்கப்பட்டன.

பிரபாகரனது ஈழப்போரின் தோல்விக்குப் பிறகு, சிங்கள பௌத்த தீவிரவாதிகளுக்கு, அவர்களது குறிக்கோளுக்கு நியாயம் கற்பிக்க, புதிய எதிரிகள் தேவைப்பட்டார்கள். அவர்கள் கண்டறிந்த புதிய எதிரிகள் முஸ்லீம்களே.




படம்: சேகான் குணசேகரா

திரைமறைவில் இயங்கிய ஒரு தரப்பே உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை நெறிப்படுத்தியதா என்பதை எண்ணிப் பார்க்கும்பொழுது, அதாவது சகரானும், அவரது தோழர்கள் சிலரும் தேசிய உளவுச் சேவையகத்தில் சேர்ந்திருந்ததாக அடிபடும் கதையை எண்ணிப் பார்க்கும்பொழுது பாரதூரமான பிரச்சினைகள் எழுகின்றன. இதுவரை இந்த விடயம் கருத்தூன்றி ஆராயப்பட்டதாகத் தெரியவில்லை.
தேசிய உளவுச் சேவையகம் எதற்காக சகரான் போன்ற ஒரு தீவிரவாதியை சேர்த்து வைத்திருந்தது என்ற வினா இங்கு எழுகின்றது. அவர் தேசிய உளவுச் சேவையகத்தில் சேர்ந்திருந்த காலத்தில் தீவிரவாத செயல்களில் ஈடுபட்டிருந்தாரா? அப்படியானால், அதைப்பற்றி தேசிய உளவுச் சேவையகம் அறிய வாய்ப்பில்லாது போனமை எங்ஙனம்?

சகரானால் அரங்கேற்றப்பட இருந்ததாகக் கொள்ளப்படும் தாக்குதல் நிகழப்போவதாக முன்கூட்டியே இந்திய உளவுச் சேவையகம் எச்சரித்தது தேசிய உளவுச் சேவையகத்தையே. அப்படி என்றால், தேசிய உளவுச் சேவையகத்தில் சேர்ந்திருந்த அதே சகரானைக் கைதுசெய்ய அதே சேவையகம் ஏன் உடன் நடவடிக்கை எடுக்கவில்லை?

ஆளும் கட்சிகள் தமது குறுகிய அரசியல் இலக்குகளை எய்துவ

தற்கு தேசிய உளவுச் சேவையகத்தை அல்லது அதன் அதிகாரிகளைப் பயன்படுத்த முடியுமா? மகிந்த ராஜபக்சாவின் ஆட்சியில் புரியப்பட்ட கொடிய குற்றங்கள் சிலவற்றில் முதுநிலை அதிகாரிகள் சிலர் சம்பந்தப்பட்டிருந்ததை, அவற்றைக் குறித்து குற்றவியல் புலனாய்வுத் திணைக்களமும் நீதித்துறையும் மேற்கொண்ட புலனாய்வுகள் மெய்ப்பித்துள்ளன. அதற்கு மூன்று எடுத்துக்காட்டுகளை இங்கு முன்வைக்கலாம்: (1) லசந்த விக்கிரமசிங்கா படுகொலை, (2) பிரகீத் எகனலிகொடை கடத்தல், காணாமல் போக்கடிப்பு, (3) ரவிராஜ் படுகொலை. சில ஆளும் கட்சித் தலைவர்களின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக தேசிய உளவுச் சேவையகத்தைச் சேர்ந்த சில அதிகாரிகள் புரிந்த படுகொலைகள் என்று இவற்றைக் கொள்ளலாம்.

உளவுச் சேவையகங்களைச் சேர்ந்த அதிகாரிகளின் குழுமம் ஒன்று ஆளும் கட்சியின் சம்பந்தமின்றி தாமாகவே முனைந்து கப்பம் வசூலிக்கும் நோக்குடன் புரிந்த கொடிய குற்றமே 11 இளைஞர்களின் கடத்தலும் காணாமல் போக்கடிப்பும். மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.யின்) இரண்டாவது கிளர்ச்சியின் பொழுதும் கப்பம் வசூலிக்கும் நோக்குடன் கடத்தல்கள் இடம்பெற்றன.

## பிரச்சினையின் சாரத்தை புரிந்துகொள்ளல்:

அத்தகைய குற்றங்கள் மகிந்த ராஜபக்சாவின் ஆட்சியில் மாத்திரம் நிகழவில்லை என்பதை நாம் புரிந்துகொள்வது முக்கியம். அதற்கு முன்னர் நிகழ்ந்த குற்றங்களிலும் தேசிய, படைத்துறை உளவுச் சேவையகங்கள் சம்பந்தப்பட்டிருந்தன.

அதிபர் பிரேமதாசா, லலித் அத்துலத்முதலி இருவரதும் படுகொலைகள் சர்ச்சைக்குரிய இரு மர்மக் கொலைகள் என்றே கொள்ளப்பட வேண்டும். அதிபர் பிரேமதாசா கொல்லப்பட்ட இடம், காவல்துறையின் நியம நடைமுறைக்கு மாறாக, உடனடியாக கழுவித் துடைக்கப்பட்டமை எங்கள் அனைவருக்கும் தெரியும். துப்பறிவாளர்கள் துப்புத் துலக்குவதற்கு ஏதுவாக காவல்துறை அதைச் சுற்றிக்காக்கவில்லை. வன்முறை இடம்பெற்ற காலத்தில் மூன்றந் தரபினர் புரிந்த சில கொலைகளுக்கு ஜே.வி.பி.யை அல்லது புலிகளை அல்லது படையினரைச் சாட்டும் வழக்கம் ஓங்கியதும் எமக்குத் தெரிந்த சங்கதியே.

வன்முறையுடன் கூடிய மோதல்கள் நீடித்த காலத்தில் இடம்பெற்ற நிகழ்வுகளை நாம் மீளவும் ஆராய வேண்டியுள்ளது என்பதை இந்த நிலைவரம் எமக்கு வலியுறுத்துகிறது. உயிர்த்த ஞாயிறு பேரிடியில் சகரான் சிங்கள, தமிழ்க் கத்தோலிக்கர்களைத் தாக்கினாரே ஒழிய, வெறுமனே சிங்கள பௌத்த மக்களை அல்ல. திரைமறைவில் ஒரு தரப்பு இயங்கியிருந்தால், அது ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை அல்லவா வீழ்த்தியிருக்கும்! கத்தோலிக்க தலைவர்கள் மதிநுட்பத்துடன் பிரச்சினையை அணுகியபடியால், அத்தாக்குதல் ஒரு கிறீஸ்தவ-முஸ்லீம் கலவரத்தை மூட்டவில்லை. மற்றும்படி, ஒரு பேரழிவு நேர்ந்திருக்கும் அல்லவா?

இலங்கை எதிர்நோக்கும் நெருக்கடிக்கு வாடிக்கையாக அளிக்கப்படும் விளக்கத்தை இதுவரை நிகழ்ந்த இன, சமய மோதல்கள் தகர்த்துவிட்டதாகவும் கூறலாம். முழு நெருக்கடியும் சிங்கள-தமிழ் மோதல் என்பதே வாடிக்கையான விளக்கம். ஆனால் இனக்குழுமங்கள், சமயங்கள், சாதிகள் அனைத்தும் பெருமளவு சம்பந்தப்பட்ட இன்னும் சிக்கலான, மிகவும் பாரிய நெருக்கடியே இது என்பது இப்பொழுது தெளிவாகியுள்ளது. ஆகவே தேசிய நெருக்கடிக்கு முன்வைக்கப்பட்ட பழைய தீர்வுகள் இனிமேல் செல்லுபடியாகா.

சுதந்திரம் தொட்டு எழுபது ஆண்டுகளுக்கு மேலாக பல்வேறு இனக்குழுமங்களையும் கடுமையாக வதைத்துப் பாய்ந்த இக்காட்டாறு இப்பொழுது அதன் வரலாற்று முடிவிடத்தை வந்தடைந்துள்ளது. இக்கொடிய ஆற்றுக்கு ஏறத்தாழ 1½ இலட்சம் பேர் பலியாகி இருக்கலாம். அதிரடிக் காயங்களுடனும் அகப்புண்களுடனும் உயிர்தப்பிய பல இலட்சக் கணக்கான மக்களின் உள்ளம் ஒடிந்துபோய் உள்ளமை இப் படிமுறையின் படுமோசமான விளைவாகும்.

## அகப்புண்களை ஆற்றுதல்:

இலங்கையின் சமூக முறைமை அழுகி நிலைகுலைய வழிவகுத்த தலையாய காரணியாக இந்நிலைவரத்தைக் கருதலாம். நீண்ட காலமாக ஆற்றப்படாமல் புரையோடிப் போயுள்ள அகப்புண்களை ஆற்றுவதற்கு தாக்கமான நடவடிக்கைகள் எடுப்பதன் மூலமே இந்நிலைவரத்தை திட்பமான முறையில் மாற்றியமைக்க முடியும்.

அதற்கு இலங்கை அரசு தகுந்த கட்டுக்கோப்பு ஒன்றை முன்வைக்காவிட்டால், வழக்கத்துக்கு மாறான அணுகுமுறைகளை பொதுமக்கள் கையாள வேண்டும். பல்வேறு வகையான, பல்வேறு விதமான அணுகுமுறைகளை அவர்கள் கையாளலாம். நியாயமான மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்யலாம். அல்லது உரிமைகளை வென்றெடுக்க கூட்டு நடவடிக்கை எடுக்கலாம்.

அண்மையில் தமிழரும் முஸ்லீம்களும் தமது உரிமைகளை நிலைநாட்ட கிழக்கிலிருந்து வடக்குவரை மேற்கொண்ட நடைபயணம் அத்தகைய நடவடிக்கைக்கு நல்லதோர் எடுத்துக்காட்டு. கத்தோலிக்க திருச்சபையினால் ஒழுங்குசெய்யப்பட்ட 'கரி ஞாயிறு' அத்தகைய வேறோர் எடுத்துக்காட்டு.

அத்தகைய நடவடிக்கைகளை ஒரு குறுகிய வட்டத்துள் முடக்குவதை விடுத்து பரந்துபட்ட முறையில் மேற்கொள்வது முக்கியம். அவற்றை மேற்கொள்ளும்பொழுது வன்முறையான, தீவிரமான எண்ணங்களை ஊக்குவிக்கும் செயல்களைத் தவிர்ப்பதில் கவனம் செலுத்த வேண்டும். தனிக்குழும அணுகுமுறையை விடுத்து பல்குழும அணுகுமுறையைக் கைக்கொள்ள வேண்டும். அமைதி காக்க வேண்டும். வெறுப்பிலிருந்தும், சீற்றத்திலிருந்தும் விடுபட வேண்டும். மற்றவர்களின் தவறுகளை மாத்திரமன்றி, தமது தவறுகளையும் உணர்ந்துகொள்ளும் ஆற்றலை வளர்க்க வேண்டும்.

மக்கள் நேரில் பங்குபற்றி ஆர்ப்பாட்டம் செய்தால் மட்டும் போதாது. புறவயமான, நியாயப்படியான சிந்தனைக்கு இட்டுச் செல்லும் உளவியற் பயிற்சிகளிலும் அவர்கள் ஈடுபட வேண்டும். அதற்கு, வாசிக்கும் பழக்கத்தை வளர்த்தெடுக்க வேண்டும். நாட்டில் நடப்பதை புரிந்துகொள்ளும் திறனை விரிவுபடுத்தும் வண்ணம் அவர்கள் வாசிப்பில் ஈடுபட வேண்டும். பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வேண்டிய அறிவை ஈயும் வெளியீடுகளை வாசித்து, உரிய விடயங்கள் குறித்து விவாதிக்க வேண்டும்.

சிங்கள, தமிழ்ச் சமூகங்களிடையே சாதியத்துக்கு அளிக்கப்பட்டுள்ள அங்கீகாரத்தை முடிவுறுத்த முயற்சி எடுக்கவேண்டும். எல்லா இனத்தவர்களுக்கும், சமயத்தவர்களுக்கும் சரிநிகர் மேன்மையும், சரிநிகர் உரிமைகளும் வழங்கும் கட்டுக்கோப்பினை உருவாக்கும் நிலையை நோக்கி நகரவேண்டும். இந்த இலக்கை எய்துவதற்கு இயன்ற நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொள்ள வேண்டும்.

பாரபட்சமின்றி அனைவரின் உரிமைகளையும் நிலைநிறுத்தி, அனைவரின் மதிப்பையும் நம்பிக்கையையும் ஈட்டி, சட்ட ஆட்சியை உறுதிப்படுத்தி, ஊழல் புரியாமல், சோடை போகாமல் ஆளும் ஒரு தற்கால அரசை உருவாக்குவது எங்ஙனம் என்னும் வினாவை நாம் கருத்தூன்றி ஆராய வேண்டும்.

**நன்றி:**

Victor Ivan, The end of a journey and beginning of a new one, Daily FT, Colombo, 2021-03-12, Mani Velupillai, 2021-03-13.

manivelupillai@thaiveedu.com

# தமிழகத்தில் சட்ட மன்றத் தேர்தல்

- நெல்லை ஜெயசிங்

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு இந்தியா. அதன் தென்கோடியில் அமைந்துள்ள தமிழ் நாட்டில் எதிர்வரும் ஏப்ரல் ஆறாம் நாள் சட்ட சபைக்கான தேர்தல் நடைபெற இருக்கிறது. இந்திய நாட்டின் அரசியல் அமைப்புக்கமைய மத்திய அரசுக்கும் மாநில அரசு களுக்கும் ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை பொதுத் தேர்தல் நடைபெறுவது வழக்கமாகும். இதனடிப்படையில் தமிழக சட்டமன்றத்திற்கு வரும் ஏப்ரல் ஆறாம் நாள் வாக்காளர்கள் நேரடியாக வாக்களித்து 234 உறுப்பினர்களை தேர்ந்தெடுக்க இருக்கின்றனர். இத்தேர்தலில் பெரும்பான்மை இடங்களில் வெற்றி பெறும் கட்சி அடுத்த ஐந்து வருடங்களுக்கு தமிழகத்தில் ஆட்சி புரியும். இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் அரசியல் என்பது செல்வம் கொழிக்கும் துறையாக கருதப்படுவதால் வெற்றி



பெற வேண்டும் என்பதற்கான போட்டி கட்சிகளிடையே மிகக் கடுமையாக இருக்கிறது.

ஏழு கோடிக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட தமிழ் நாட்டில் ஆறு கோடிக்கு சற்று அதிக வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர். மூன்று கோடி ஆண் வாக்காளர்கள் உள்ள நிலையில் அவர்களை விட பெண் வாக்காளர்கள் சற்று அதிகம் என்பது குறிப்பிடத்தக்கதாகும். மக்கள் அடர்த்திக்கும் நிலப் பரப்பிற்கும் அமைய 234 சட்டசபை தொகுதிகள் தமிழகத்தில் வரையறை செய்யப்பட்டுள்ளன. காலத்திற்கு காலம் தொகுதிகளின் எண் ணிக்கை மாற்றத்திற்கு உட்படுத்தப்பட்டபோதும் 1965 முதல் இன்று வரை 234 தொகுதிகள் மட்டுமே தமிழக சட்டபேரவைக்கு இருந்து வருகின்றன.

## தனித் தொகுதிகள்:

தமிழகத்தில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலின் போது பெண்களுக்கென தனித் தொகுதிகள் ஒதுக்கப்படுவது வழக்கம். ஆனால் சட்டசபை தேர்தலில் பெண்களுக்கென தனித் தொகுதி கள் ஒதுக்கப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். எனி னும் உள்ளாட்சி அமைப்புகள் போன்று பட்டியல் இனத்தவர்க ளுக்கான தனித் தொகுதிகள் சட்டசபை தேர்தலின் போது நெடுங் காலமாக இருந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். தமிழக மக்கள் தொகையில் 21%க்குமேல் பட்டியல் இன (Schedule casts) மற்றும் பழங்குடியினர் இருப்பதால் அவர்களில் 44 பேர் பட்டியல் இனத் திலிருந்தும், இருவர் பழங்குடியினத்திலிருந்தும் தேர்ந்தெடுக்கப்ப டும் வகையில் 46 தொகுதிகள் தனித் தொகுதிகளாக பிரிக்கப்பட் டுள்ளன. இத்தொகுதிகளில் இருந்து பட்டியல் இனத்தவர்கள் மட் டுமே பிரதிநிதிகளாக தேர்ந்தெடுக்கப்படுவர். ஆனால் அனைத்து மக்களுக்குமான பிரதிநிதித்துவம் என்பதால் பொது பிரிவினர் உட் பட அனைத்து பிரிவினரும் வாக்களித்தே தனித்தொகுதிக்கான MLA (Member of Legislative Assembly) தேர்ந்தெடுக்கப்படுகிறார். அதாவது, தொகுதி பட்டியலினத்தவர்க்கானதாக இருந்தாலும் எந்த தலித் MLAஆக வரவேண்டும் என்பதை தொகுதியின் பொதுப் பிரிவினரும் இணைந்து முடிவு செய்திடும் நிலை இருப் பதை கூர்ந்து கவனிக்க வேண்டும்.

தனித் தொகுதிகள் தவிர எஞ்சியுள்ள 188 தொகுதிகளும் பொதுத் தொகுதிகளாகும். இங்கு பொதுப் பிரிவினர் உட்பட எந்த ஒரு சமூகத்தை சார்ந்தவரும் தேர்தலில் போட்டியிட உரிமை உண்டு.

## தேர்தலில் அரசியல் கட்சிகள்:

சுதந்திரத்திற்கு முன்பு தொடங்கி 1967 வரை சென்னை மாகாண ஆட்சியாளராகவும் பின்னர் தமிழக ஆட்சியாளர்களாகவும் அகில இந்திய காங்கிரஸ் இருந்தது. அதன் பின் 1967 முதல் 2021 வரை திராவிட முன்னேற்றக் கழகமும் அனைத்திந்திய திராவிட முன் னேற்றக் கழகமும் மாறி மாறி தமிழகத்தில் ஆட்சி புரிந்துள்ளன. இக்காலப்பகுதியில் எம்ஜிஆர், கலைஞர் கருணாநிதி, ஜெயல லிதா ஆகிய ஆளுமைகள் முதலமைச்சர்களாக இருந்துள்ளனர். இக்காலகட்டத்தில் தி.மு.க ஐந்து முறையும் அதிமுக ஏழு முறை யும் ஆட்சி புரிந்துள்ளன. 1967க்குப் பின்னர் தேசிய கட்சியான காங்கிரஸ் கட்சிக்கு ஆட்சி அமைக்கும் வாய்ப்பு கிடைக்கவே இல்லை.

தற்போதைய தமிழக தேர்தலின் பின்னர் அதிமுக, திமுக என்ற இருபெரும் திராவிட கட்சிகளுள் ஒன்றின் தலைமையில் ஆட்சி அமையும் என்று அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இவ்விரு கட்சிகளும் பல சிறு கட்சிகளை இணைத்து கூட்டணிகளாக தேர்த லில் போட்டியிடுகின்றன. பல இன, மத, மொழி, கலாச்சாரம் கொண்ட இந்தியாவில் ஜாதிய வாதம் மிக ஆழமாக இருப்பதால் அதன் தாக்கம் அரசியலிலும் பிரதிபலிக்க தொடங்கி இருக்கிறது. எனவே தமிழ் நாட்டிலும் சாதிய அடையாளத்துடன் பல சிறு கட் சிகள் தேர்தல் களத்தில் போட்டியிட முன்வந்துள்ளன. எப்படியா வது வெற்றி பெறவேண்டும் என்பதால் பெரிய கட்சிகள் அவர்க ளையும் இணைத்துக் கொண்டு தேர்தலை சந்திக்கும் நிலையை



தமிழகத்தில் காணலாம்.

மத்தியில் ஆட்சி புரியும் தேசிய கட்சியான பாரதிய ஜனதா கட்சி, அதிமுக கூட்டணியில் 20 தொகுதிகளிலும், பலமுறை மத்தியிலும் மாநிலத்திலும் ஆட்சிபுரிந்த அகில இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி, திமுக கூட்டணியில் 25 தொகுதிகளிலும் போட்டியிடுகின்றன. இதேபோன்று இடதுசாரி சிந்தனைகளைக் கொண்ட CPIM, CPI ஆகிய தேசிய கட்சிகளும் திமுக கூட்டணியில் தலா ஆறு தொகுதிகளில் போட்டியிடுகின்றன. மேலும் அதிமுக கூட்டணியில் பாட்டாளி மக்கள் கட்சியும் திமுக கூட்டணியில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகமும், விடுதலை சிறுத்தைகள் கட்சியும் சில இஸ்லாமிய கட்சிகளும் இணைந்து களம் காண்கின்றன. இவ்விரு பெரும் கூட்டணிகளைத்தவிர நடிகர் விஜயகாந்தின் தேமுதிக கட்சியை உள்ளடக்கி சசிகலாவின் உறவினரான டி.டி.வி. தினகரனின் அ.ம.மு.க. தலைமையில் ஒரு கூட்டணியும் நடிகர் கமல்ஹாசனின் மக்கள் மய்யம் தலைமையில் ஒரு கூட்டணியும் தேர்தல் களத்தில் உள்ளன. இவை அனைத்துக்கும் மேலாக சீமான் தலைமையில் நாம் தமிழர் கட்சி 234 தொகுதிகளிலும் தனித்து போட்டியிடுகின்றது. கிருஷ்ணசாமி தலைமையிலான புதிய தமிழகம் கட்சியும் தனித்து போட்டியிட, மொத்தத்தில் பெரிய சிறிய கட்சிகள் என 20க்கும் மேற்பட்ட கட்சிகள் தமிழக சட்டமன்றத்திற்கான தேர்தலில் போட்டியிடுகின்றன.

## இரண்டு பெரிய திராவிட கட்சிகள்:

1967 முதல் இன்று வரை தமிழக அரசியலில் ஆதிக்கம் செலுத்தி வரும் திமுக, அதிமுக ஆகிய இரண்டு திராவிட கட்சிகளும் ஆட்சியை பிடிப்பதற்கான தேர்தல் போட்டியில் தீவிரம் காட்டி வருகின்றன. கடந்த பத்து ஆண்டுகளாக ஆட்சியில் இருந்து வரும் அதிமுக மீண்டும் ஆட்சியை தக்க வைத்துக் கொள்ள முயல்கிறது. ஆனால், மக்கள் பத்து வருட ஆட்சி மீது அதிருப்தியில் இருப்பதால் அக்கட்சி வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு என அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

அதிமுகவின் பொதுச்செயலாளராகவும் முதல்வராகவும் இருந்த ஜெயலலிதா 2016ம் ஆண்டில் மரணமடைந்தார். இதன் பின்னர் கட்சி கடுமையான நெருக்கடிகளை எதிர்கொள்ள தொடங்கியது. தலைமைத்துவத்திற்கான போட்டி கட்சிக்குள் வெளிப்படத்தொடங்கியது. ஜெயலலிதாவின் ஒற்றைத் தலைமையில் இயங்கிவந்த அதிமுக அவரது மறைவின் பின் பன்னீர்செல்வம், எடப்பாடி பழனிச்சாமி ஆகிய இருவரின் இரட்டைத் தலைமையில் இயங்கத் தொடங்கியமையால் கட்சிக் கட்டுப்பாட்டில் தொய்வு ஏற்படுவது தவிர்க்க முடியாததாகியது. இறுதியில் பன்னீர்செல்வம் உட்பட பலரையும் பின்னுக்கு தள்ளிய எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் சசிகலாவின் ஏற்பாட்டில் தமிழக முதல்வரானார்.

அதிமுக ஆட்சி தொடர மத்தியில் ஆட்சி புரியும் பாஜக ஆதரவு தர முன்வந்தது. ஆனால் ஆதரவு என்ற போர்வையில் பாஜக தமிழக ஆட்சியின் மீது மறைமுகமாகவும் நேரடியாகவும் தனது ஆதிக்கத்தை செலுத்தவும் தொடங்கியது. இதனால் மத்திய அரசு கொண்டு வந்த அனைத்து சட்டங்களையும் அதிமுக அரசு ஆதரிக்க தொடங்கியது. அத்துடன் மாநில உரிமைகளையும் விட்டுக் கொடுக்க தொடங்கியது. தமிழக மக்கள் இதனை விரும்பவில்லை. 'அம்மாவின் அரசு' என கூறிக் கொண்டு ஜெயலலிதா எதிர்த்த பல்வேறு திட்டங்களை மத்திய அரசு கொண்டு வந்த போது தமிழக அரசு ஆதரிக்க தொடங்கியது. எனவே பாஜக எதிர்ப்பு நிலையை உடைய தமிழக வாக்காளர்கள் இத்தேர்தலில் அதிமுகவிற்கு எதிரான நிலைப்பாட்டை எடுப்பர் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. தமிழகம் சமூக நீதிக்கான மண் என்பதால் ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தங்களை பின்பற்றும் பாஜகவுடன் அதிமுக கூட்டணி அமைத்ததை மக்கள் விரும்பவில்லை. மேலும் பசுவதை தடுப்புச் சட்டம், மதமாற்ற தடைச்சட்டம் போன்ற சட்டங்கள் கொண்டுவரப்படும் என பாஜக தனது தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதால் அதன் கூட்டணி கட்சியான அதிமுகவிற்கு இது பின்னடைவைத் தரும் எனவும் கூறப்படுகிறது.

மறுபுறம், திமுக ஸ்டாலினின் ஒற்றைத் தலைமையில் இயங்கிவருகிறது. திமுக கூட்டணியும் ஸ்டாலின் தலைமையில் பலமாக இருப்பதால் இத்தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. அதிமுக ஆதரவுடன் பாஜக நிறைவேற்றிய முத்தலாக் சட்டம், காஷ்மீர் மாநில உரிமை பறிப்பு சட்டம், குடியுரிமை சட்டம் என்பவற்றை எதிர்க்கும் சிறுபான்மையினர் அதிமுக விற்கு எதிராக திமுக விற்கு வாக்களிப்பர் என திமுக எதிர்பார்க்கிறது.

கலைஞர், ஜெயலலிதா ஆகிய இரு பெரும் தலைவர்கள் இல்லாமல் நடைபெறும் முதல் சட்டமன்ற தேர்தல் என்பதால் இது அனைத்து கட்சிகளின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் தேர்தலாகவும் பார்க்கப்படுகிறது. எனினும், திமுக 2019 மக்கள் அவை தேர்தலில் மிகப் பெரிய வெற்றியை பெற்ற நம்பிக்கையுடன் இத்தேர்தலை சந்திக்கிறது.

## தமிழக தேர்தல் களத்தில் சாதியம்:

தமிழகத்தில் பெரிய கட்சிகளின் தலைவர்கள் சாதிய அடையாளத்தை அடிப்படையாக கொண்டிராத போதும், ஆட்சி அமைக்க வாய்ப்பு இல்லாத பல்வேறு சிறு கட்சிகள் சாதியை மட்டுமே முன்னிறுத்தி தேர்தல் அரசியல் செய்வதைக் காணலாம். சாதிய வேறுபாடுகளை களையவேண்டிய இன்றைய காலகட்டத்தில் அரசியல் இலாபத்திற்காக மக்களின் சாதிய உணர்வுகளை தூண்டி சிறு சிறு கட்சிகளை உருவாக்கி அரசியல் பேரங்களை தொடர்ந்து நடத்தி வரும் அருவருப்பான போக்கையும் இன்றைய தேர்தல் முறையில் காணமுடிகிறது. இடதுசாரி கட்சிகள் நீங்கலாக பெரிய கட்சிகள் உட்பட அனைத்து கட்சிகளும் குறிப்பிட்ட தொகுதியில் வசிக்கும் பெரும்பான்மை சாதிய பலத்தின் அடிப்படையில் வேட்பாளர்களை தெரிவு செய்யும் போக்கையும் பெருமளவில் காணலாம். அரசியல் கட்சிகள் மறைமுகமாகவும் சில இடங்களில் வெளிப்படையாகவும் சாதி வேறுபாடுகளை ஊக்குவிக்கின்றன. ஆரோக்கியமான ஜனநாயகத்திற்கு இது ஆபத்தானது என்றபோதும், தடுத்து நிறுத்துவதற்கான முயற்சிகளை இன்றைய அரசுகளும் கட்சிகளும் செய்திட முன்வருவதாக தெரியவில்லை.

## மத அரசியல்:

இதே போன்று RSS (Rashtriya Swayamsevak Sangh) அமைப்பின் பின்புலத்தைக் கொண்ட பாஜக கட்சி தேர்தல் வெற்றிக்காக மதத்தை முன் நிறுத்தும் போக்கும் அண்மைக்கால தேர்தல் அரசியலில் அதிக அளவில் வெளிப்படத் தொடங்கி உள்ளது. இலங்கையில் பௌத்த மதத்தை அரசியலுக்கு பயன்படுத்துவதைப் போன்று, இந்தியாவிலும் பெரும்பான்மை மக்கள் பின்பற்றும் இந்து மதத்தை முன்நிறுத்தி தேர்தல் பிரச்சாரத்தை நடத்தும் யுக்தியை பாஜக கையாண்டு வருகிறது. இந்தியா முழுவதும் இந்துத்துவா கொள்கை ஊடாக ஆட்சி அதிகாரத்தை பெற முயலும் பாஜக, பெரியார் மண்ணான தமிழகத்திலும் தன் செல்வாக்கை நிலைநிறுத்த காய் நகர்த்தி வருகிறது. இதன் தாக்கம் காரணமாக இதுவரை திராவிடம் மட்டும் பேசிவந்த ஆண்ட ஆளும் கட்சிகளும்கூட மதத்தை தேர்தலுக்கு பயன்படுத்தும் நிலைமை உருவாகியுள்ளது. தமிழக தேர்தல் களத்திலும் இந்துத்துவ கோஷம் ஓங்கி ஒலிக்கத்தொடங்கிவிட்டது. தடையை மீறிய பாஜகா வின் வேல் யாத்திரையை இதற்கு உதாரணமாக கூறலாம். இதனால் மக்களை வாட்டி வதைக்கும் விலைவாசி உயர்வு, வேலையில்லா திண்டாட்டம், சமையல் எரிவாயு விலை உயர்வு போன்ற பொதுப் பிரச்சினைகள் பின்னுக்கு தள்ளப்பட்டு விட்டன. மதத்தால் மக்களை பிளவுபடுத்தும் இச்செயல் மக்களாட்சியின் மாண்புகளை சிதைப்பதுடன் பன்முகத் தன்மை கொண்ட இந்திய நாட்டின் வளர்ச்சிக்கும் பாதகமானதாக அமையும்.

234 தொகுதிகளில் போட்டியிட 6,297 பேர் வேட்புமனு தாக்கல் செய்த போதும் இறுதியாக கட்சிகளின் சார்பிலும் சுயேட்சை களாகவும் 3998 பேர் மட்டுமே போட்டியிடுவதற்கான தகுதியை பெற்றுள்ளனர். தமிழக தேர்தல் ஆணையத்தால் பல்வேறு தேர்தல் நடத்தை விதிமுறைகள், கட்டுப்பாடுகள் அமல் நடத்தப்பட்டுள்ளன. தேர்தல் ஆணையம் சுதந்திரமான அமைப்பு என கூறப்பட்ட போதும், நடைமுறையில் ஆட்சியாளர்களுக்கு இணங்கி செயற்படுவதாகவும் கூறப்படுகிறது. தேர்தல் நடத்தை விதி முறைகளை அமல் நடத்தும் பொறுப்பு இவ் ஆணையத்திற்கு உரியதாக இருந்தபோதும், சுதந்திரமாக செயல்படவும் போதிய ஆள் பலமும் இல்லாதிருப்பதால் தேர்தல் விதிமீறல்களானது முழுவதுமாக தடுக்கப்படுவதில்லை என கூறலாம்.

## தேர்தல் களத்தில் பணம்:

ஒரு வேட்பாளர் 30.8 இலட்சம் ரூபாவிற்கு உள்ளாக தேர்தலுக்கு செலவிட வேண்டும் என்பது தேர்தல் விதி. ஆனால் நடைமுறையில் பெரும்பாலான வேட்பாளர்கள் பல கோடிக்கு மேல் செலவிடுவதை கண்கூடாக காணலாம். இதனை ஆணையத்தால் தடுக்க முடிவதில்லை. மேலும் வாக்காளர்களுக்கு பணம் கொடுப்பது தண்டனைக்குரிய குற்றமாக கூறப்படுகிறது. ஆனால் நடைமுறையில் பல கட்சிகள் பல நூறு கோடி ரூபாவை வாக்காளர்களுக்கு கொடுத்து வருவதையும் காணலாம். பணமாக மட்டுமல்லாமல் பரிசுப் பொருட்களையும் வாரி வழங்கி வருகின்றனர். இக்கொடுமையை தடுக்க முடியவில்லை என தேர்தல் ஆணையமே ஒத்துக்கொண்டுள்ளது. இதனால் தமிழக தேர்தல் களத்தில் எளிய குடிமகன் மக்கள் பிரதிநிதியாக வரமுடியாது என்ற சூழ்நிலை நிலவுகிறது.

வாக்காளர்களுக்கு பணம் கொடுப்பதை ஆரம்பத்திலேயே தடுக்கும் எண்ணத்துடன் தேர்தல் ஆணையம் பறக்கும் படை என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தி, சட்ட விரோதமாக பணம் கொண்டு செல்வதை தடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. நடைமுறையில் இது ஒரு கேலிக்கூத்து என்றே கூறவேண்டும். தேர்தல் காலத்தில் தமிழ் நாட்டில் ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு 50,000 ரூபாய்க்கு மேல் எடுத்துச் செல்ல உரிய ஆவணம் இருப்பது கட்டாயமாகும். உரிய ஆவணங்கள் இல்லாதிருப்பின் பணம் முழுவதுமாக பறிமுதல் செய்யப்படும். இவ்வாறு இதுவரை பறிமுதல் செய்யப்பட்ட பணம் 100 கோடிக்கு மேல் என கூறப்படுகிறது. உண்மையில் இவை வாக்காளர்களுக்கு கொடுக்க கொண்டு செல்லப்பட்ட பணமோ அல்லது அரசியல்வாதிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணமோ இல்லை என அறியப்படுகிறது. பெருந்தொகையான பணம் அன்றாடம் தொழில் செய்து பிழைக்கும் மீன் வியாபாரிகள், பூ வியாபாரிகள், சிறு வணிகர்கள் அவ்வப்போது ஆவணம் இன்றி எடுத்துச் சென்ற பணம் இவ்வாறு பறிமுதலாக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. வங்கிகளின் ஏ.டி.எம். மையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்ட பெருந்தொகை பணமும் இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ள விந்தையும் நடந்துள்ளது. தேர்தல் ஆணையத்தின் சட்ட திட்டங்களில் உள்ள கோளாறுகளே இதற்கு அடிப்படை காரணமாக இருக்கிறது.

இந்தியாவிலேயே வாக்காளர்களுக்கு பணத்தை வாரி இறைக்கும் வழக்கம் தமிழ் நாட்டில்தான் அதிகம் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஆனால், அதனை தடுக்கும் வழிமுறைகள் இன்றளவும் பலவீனமாகவே இருக்கின்றன. இது தொடர்பாக பல வழக்குகள் பதிவு செய்யப்பட்டாலும் கடும் தண்டனை வழங்கப்படுவது இல்லை. தேர்தல் காலத்தில் தமிழகத்தில் பணப்புழக்கம் கணிசமாக அதிகரித்து காணப்படுவதும் வாடிக்கையாக இருக்கிறது. அண்டை மாநிலமான கேரளாவில் இது போன்று வாக்காளர்களுக்கு பணம் கொடுக்கும் வழக்கம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

STAY ONE STEP AHEAD OF CRA
X-CRA Officers are on staff.
SARVAA CPA
PROFESSIONAL CORPORATION
Our passion is to solve your tax problems:
- Unfiled Tax Returns - Last ten years (2011 - 2020)
- Appeals, Audits and Adjustments
- GST/HST Owner-Built & Rental Rebates
- Negotiate Collection, Garnishment and Payment Plan
- Voluntary Disclosure Program (VDP)
- Estate, Trust & Non-Residents
- US Tax (PTIN) - IRS 1040 & State Returns
CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS
Shawn Y. Sarvaa, CPA, CGA
2750 14th Ave., Suite 206
Markham ON L3R 0B6
ideas@sarvaacpa.ca
TECHNICAL EXCELLENCE | INTEGRITY | PROFESSIONALISM
VANCOUVER 604 398 7272
TORONTO 647 219 3110
CALGARY 403 879 7272

## தேர்தல் அறிக்கைகள்:

தாங்கள் ஆட்சிக்கு வந்தால் என்ன செய்வோம் என்பதை குறிப்பிட்டு தேர்தல் அறிக்கை வெளியிடுவது பல கட்சி ஆட்சி முறையில் வழக்கமான நடைமுறையாகும். இதனடிப்படையில் தமிழக கட்சிகள் குறிப்பாக ஆட்சியில் அமரக்கூடிய திராவிட கட்சிகளின் தேர்தல் அறிக்கைகள் வளர்ச்சியைவிட நடைமுறையில் சாத்தியம் இல்லாதவற்றை கூறுவதாக இருக்கின்றன. அனைவருக்கும் சலவை இயந்திரம் (washing machine) இலவசமாக வழங்கப்படும் போன்ற இலவச வாக்குறுதிகள் அதிகமாக இருக்கின்றன. தமிழக அரசுக்கு ஐந்து இலட்சம் கோடிக்கு மேல் கடன் சுமை இருப்பதை இவர்கள் கருத்தில் கொள்வது இல்லை. திராவிட கட்சிகளும் அதன் வேட்பாளர்களும் கோடிகளில் புரள்வதால் மக்களின் வறுமையை ஏழ்மையை தங்களுக்கு தேவையான வகையில் பயன்படுத்திக் கொள்வதைக் காணலாம். மக்களின் மறதி என்பது கட்சிகளின் மூலதனமாகிறது. நிறைவேற்றப் படாத கடந்த கால தேர்தல் அறிக்கைகளை, வாக்குறுதிகளை மக்கள் நிகழ் காலத்தில் மறந்து விடுகின்றனர். இலவசம் என்பதும் ஒருவிதமான மறைமுக கையூட்டு என்பதால் தேர்தல் ஆணையம் அதன் மீதும் கட்டுப்பாடுகளை விதிக்க முன்வர வேண்டும்.

போட்டியிடும் கட்சி வேட்பாளர்களில் இடதுசாரி வேட்பாளர்களை தவிர பெரும்பாலானவர்கள் கோடீஸ்வரர்களாவர். இதனை பார்க்கும் போது மக்களாட்சியில் சாமானியர்கள் ஆட்சியாளர்களாக வரலாம் என்பது தமிழ் நாட்டில் வெறும் கவர்ச்சிகரமான கோஷமாக மட்டுமே இருப்பது தெளிவாக தெரிகிறது. தமிழகத்தில் அரசியலானது செல்வம் கொழிக்கும் தங்கச் சுரங்கமாக மாற்றப்பட்டிருப்பதால் செல்வமும் செல்வாக்கும் உள்ளவர்கள் மட்டுமே அரசியலில் இடம்பெற்றுள்ளனர்.

மேலும் மக்கள் தொகையிலும் வாக்காளர் எண்ணிக்கையிலும் பெண்கள் அதிகம் காணப்பட்ட போதும் அரசியலில் அவர்களுக்கான இடம் மிகவும் குறைவாகும். சீமானின் நாம் தமிழர் கட்சி மட்டும் 50% பெண் வேட்பாளர்களை போட்டியிட வைத்துள்ளது. மற்ற கட்சிகள் 10%க்கும் குறைவான தொகுதிகளையே பெண்களுக்கு வழங்கியுள்ளன. பெண்களின் வாக்குகளை கவர்வதற்காக கவர்ச்சி திட்டங்களை அறிவித்துள்ள திராவிட கட்சிகளும் பெண்களுக்கு மிக குறைந்த தொகுதிகளையே வழங்கியுள்ளன.

## அரசியல் ஆளுமைகள்:

திராவிட அரசியலில் மிகப்பெரும் ஆளுமைகளாக இருந்த கலைஞர் கருணாநிதி, செல்வி ஜெயலலிதா இருவரும் இல்லாத சூழ்நிலையில் தமிழகத்தில் 16வது சட்டமன்றத்திற்கான தேர்தல் நடைபெற இருக்கிறது. ஆளுமைக்கான வெற்றிடம் இல்லை என்பதை நிரூபிக்கும் போட்டியாளர்களாக திரு. ஸ்டாலினும் திரு. பழனிச்சாமியும் களத்தில் உள்ளனர். இதனிடையே ஜெயலலிதாவின் நிழலாக கடந்த 30 வருடங்களாக இருந்த சசிகலா, சிறையிலிருந்து விடுதலையாகி வெளியில் வந்துள்ளார். ஆறு வருடங்கள் தேர்தலில் போட்டியிட முடியாது என்று நீதிமன்ற தீர்ப்பு இருந்த போதும் அவர் தீவிர அரசியலில் இறங்குவார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் சில வெளிப்புற அரசியல் அழுத்தம் காரணமாக தற்காலிகமாக அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். தேர்தல் முடிந்த பின்னர் சசிகலா தனது அரசியல் சுயரூபத்தை காட்டுவார் எனவும் நம்பப்படுகிறது.

இன்றைய தமிழக தேர்தலானது இதுவரை இல்லாத ஒரு தோற்றத்தை ஏற்படுத்தி இருப்பதாக தெரிகிறது. திமுக, அதிமுக என இருபெரும் கூட்டணிகள் களத்தில் பலமாக இருந்த போதும் மாற்று ஆட்சியை தருவோம் என ஏனைய கட்சிகள் கூறிவருவதையும் காணலாம். குறிப்பாக கமல்ஹாசன் தலைமையிலான மக்கள் நீதி மய்யம் கட்சி, சீமான் தலைமையிலான நாம் தமிழர் கட்சி, தினகரன் தலைமையிலான அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் ஆகிய கட்சிகள் திராவிட கட்சிகளுக்கு மாற்று தாங்களே எனவும் கூறி வருகின்றன. அதிமுக கூட்டணியில் இடம்பெற்றுள்ள மத்தியில் ஆட்சி புரியும், தமிழகத்தில் 3%ற்கும் குறைவான வாக்கு வங்கியை உடைய பாஜக, அதிமுகவுடன் இணைந்து ஆட்சி அமைக்கும் எனவும் கூறி வருகிறது. இவ்வாறு ஐந்து முனைப் போட்டியில் பல கட்சிகளும் நம்பிக்கையுடன் தேர்தலை சந்திக்கும் நிலையில் திமுக கூட்டணி வெற்றி பெற்று திமுக ஆட்சி அமைக்கும் என பல்வேறு கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

## வாக்களிப்பு முறை:

அறிவியல் கண்டுபிடிப்புகளும் தொழில்நுட்ப கட்டமைப்பும் அதிக அளவில் உள்ள ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் வாக்குச் சீட்டு அடிப்படையில் இன்றளவும் தேர்தல் நடைபெற்று வரும் நிலையில் இந்தியாவில் மின்னணு வாக்கு இயந்திரங்கள் (Electronic Voting Machine) வாயிலாக வாக்களிக்கும் முறை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. 100 % நம்பகத்தன்மை இவ்வாக்களிப்பு முறையில் இல்லை எனவும் இதனை முறைகேடு செய்து முடிவுகளை மாற்ற முடியும் எனவும் அரசியல் நோக்கர்கள் கூறுகின்றனர். குறிப்பாக முன்னாள் IAS அதிகாரி திரு. தேவசகாயத்தை உள்ளடக்கி ஆய்வொன்றை செய்த நிபுணர் குழு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் முறைகேடு நடக்க வாய்ப்பு உண்டு என கூறியுள்ளது. ஆனால், அதனை தேர்தல் ஆணையம் ஏற்க முன் வரவில்லை.

வாக்குச் சீட்டு முறைகளில் வாக்களித்தவர் தான் யாருக்கு வாக்களித்தோம் என்பதை 100% உறுதிப்படுத்திக் கொள்கிறார். அதே போன்று மின்னணு வாக்குப்பதிவில் உறுதிப்படுத்திக் கொள்ள இயலாது. இவ்வாறான குறைபாடுகள் இருந்த போதும் அதனை நிரூபிக்க முடியாதிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். வாக்குச்சீட்டு முறைக்கான வலியுறுத்தல்கள் பல தளங்களில் பேசப்பட்டு வருகின்றன. ஆனால் அதனை ஏற்க ஆளும் பாஜக தலைமை, தேர்தல் ஆணையம், உச்ச நீதிமன்றம் என்பன தயாராக இல்லை. 1999 அளவில் பரீட்சாத்தமாக மின்னணு இயந்திரம் அறிமுகப்படுத்தப்பட்ட போது மிகக் கடுமையாக அதனை எதிர்த்து பாஜக போராட்டம் நடத்தியது. ஆனால், இன்று அதனை ஆரவாரத்துடன் வரவேற்கும் போக்கை காண்கிறோம்.

## ஒப்புகை சீட்டு இயந்திரம்:

வாக்களிப்பு முறையில் உள்ள நம்பகத்தன்மை கேள்விக்குள்ளாக்கப்பட்டதன் விளைவாக தேர்தல் ஆணையம் VVPAT (VOTER VERIFIED PAPER AUDIT TRIAL) எனும் வாக்களித்ததை உறுதி செய்யும் (ஒப்புகை சீட்டு) ஒரு மின் இயந்திரத்தையும் வாக்குச்சாவடிகளில் அறிமுகப்படுத்த முன்வந்துள்ளது. அதாவது தேர்தலின் போது யாருக்கு வாக்களித்தோம் என்பதை தெரிந்து கொள்வதற்காக விவிபேட் கருவியானது மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பொருத்தப்படுவதாகும். வாக்குப்பதிவின் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதற்கான ஏற்பாடாக இது கூறப்படுகிறது. அதாவது வாக்கு இயந்திரத்தில் பதிவான வாக்குகள் விவிபேட்டில் பதிவான ஒப்புகை சீட்டுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்படும் என்று தேர்தல் ஆணையம் கூறுகிறது. இது ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதாக இருந்தபோதும் இது அனைத்து தொகுதி வாக்குச் சாவடிகளிலும் பொருத்தப்படாமல் மிக குறைந்த அளவிலேயே நடைமுறைப் படுத்தப்படும் எனவும் தேர்தல் ஆணையம் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது. இந்நிலையில் ஆளும் கட்சிக்கு சாதகமாக செயல்படுதல் என்றில்லாமல் தேர்தல் ஆணையம் சுதந்திரமாகவும் நடுநிலையுடனும் செயல்பட முன் வந்தால் மட்டுமே உண்மையான மக்களாட்சியை காணமுடியும்.

கொரோனாவின் பல்வேறு அச்சுறுத்தல்கள் குறிப்பாக இரண்டாம் அலை ஆரம்பமாகி இருப்பதால் போதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை தேர்தல் ஆணையம் செய்துள்ளது. குறிப்பாக வாக்களிக்கும் வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கையை அதிகரித்திருப்பதுடன் முகக்கவசம் அணிந்து வருவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இயந்திர வாக்களிப்பு என்பதால் கையுறைகளும் வழங்கப்படும் என கூறப்படுகிறது. வரும் ஏப்ரல் 6ம் திகதி தமிழகமெங்கும் 6 கோடி 29 இலட்சம் வாக்காளர்கள் EVMல் அளிக்கும் வாக்குகள் அன்றைய தினமே எண்ணப்படாமல் 25 நாட்கள் கடந்து மே 2ம் திகதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

நாமும் தேர்தல் முடிவிற்காக காத்திருப்போம்.



jeyasingh@thaiveedu.com


BUYERS
If Yathavann Doesn't Negotiate at Least
$10,000 Off The List Price,
He'll Give You $2000
Cash on Closing.
FREE Home Inspection When You Buy With Us.
Sellers
Your Home SOLD in 60 Days
Guaranteed!
OR I'LL SELL IT FOR FREE**
**SOME CONDITIONS MAY APPLY
For More Information On My
Exclusive Guaranteed Sales Program
ORDER A FREE REPORT BY VISITING
WWW.HOUZZVALUE.CA
Free Home Evaluation.
No Cost. No Obligations
RE/MAX
Crossroads Realty Brokerage Inc.
Independently Owned & Operated
Off:416.491.4002
YS
YATHAVANN
SELVARAJAH
Sales Representative
416-992-4474

# மியான்மர் இராணுவம் ஆட்சிக் கவிழ்ப்பு: உள்ளகச் சிக்கல்களும் தலையீடுகளும்

- ரூபன் சிவராஜா

பெப்பிரவரி முதலாம் நாள் மியான்மர் இராணுவம் ஆட்சிக் கவிழ்ப்புச் செய்து நாட்டின் ஆட்சியதிகாரத்தைத் தம்வசப்படுத்திய செய்தி உலக அரசியலின் பேசுபொருளாகியுள்ளது. தேசிய ஜனநாயகக் கட்சியின் தலைவர் Aung San Suu Kyi உட்பட்ட அரசியல் தலைவர்கள், முக்கிய பாராளுமன்ற உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டு வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். தலைநகர் ரங்கூன் உட்பட்ட, ஆட்சிக்கவிழ்ப்பிற்கு எதிரான கண்டன ஒன்று கூடல்களில் குறிப்பிட்ட தொகை மக்கள் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றனர்.

மியான்மாரில் இராணுவ ஆட்சி, ஆட்சிக்கவிழ்ப்பு என்பன புதியதோ அன்றி அதிர்ச்சிக்குரிய நிகழ்வோ அல்ல. தெற்காசிய வரலாற்றில் பல தசாப்தங்கள் இராணுவ ஆட்சியின் கீழ் வைத்திருக்கப்பட்ட நாடு அது. 1948ல் பிரித்தானிய காலனித்துவ ஆளுகையிலிருந்து விடுதலைபெற்ற பின்னரான... இற்றைவரையான 70 ஆண்டுகளுக்கு மேலான உள்நாட்டு முரண்பாடுகள், இராணுவ ஆட்சி வரலாற்றையும் கொண்டுள்ளது. இது மூன்றாவது இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பு. 1962லிருந்து 2011 வரையான 50 ஆண்டுகள் இராணுவ ஆட்சிக்குள் இருந்தது. 2011லிருந்து உள்ளக மற்றும் வெளியக அழுத்தங்கள், மற்றும் பொருளாதார நலன்கள் சார்ந்த தெரிவுகள் 'ஜனநாயகப் பாதை'யில் நகர்வதற்கான நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தியிருந்தது.

தற்போதைய இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பினை மேற்கு கண்டித்திருக்கின்றது. ஐ.நா.வில் அவசர கூட்டம் கூட்டப்பட்டு ஆராயப்பட்டுள்ளது. கைதுசெய்யப்பட்ட அரசியல் பிரதிநிதிகள் விடுவிக்கப்பட வேண்டும், இராணுவத்தின் ஓராண்டுகால அவசரகாலச் சட்டம் உடனடியாக நீக்கப்பட்டு, ஜனநாயக நடைமுறைகளுக்கு மதிப்பளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் எழுப்பப்பட்டுள்ளன. அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் பொருளாதாரத் தடை தொடர்பான அச்சுறுத்தலை விடுத்துள்ளன. ஐ.நா.வில் பாதுகாப்புச் சபையில் வீட்டோ அதிகாரமுள்ள சீனாவும் ரஸ்யாவும் சர்வதேச கூட்டு நடவடிக்கைகளிலிருந்து மியான்மாரைக் காப்பாற்றிவிடுகின்றன. 2017ல் ரொகிங்ய மக்களுக்கெதிரான இன அழிப்பிற்கெதிராக தீர்மானங்களிலும் இவ்விரு நாடுகளும் அவ்வாறே நடந்துகொண்டன. இம்முறை இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பிற்கு எதிரான நடவடிக்கைகளையும் தமது வீட்டோ அதிகாரத்தின் மூலம் முறியடித்துள்ளன.

மியான்மாரின் இராணுவ ஆட்சிபீடத்தின் முதன்மை ஆதரவு சக்தியாகச் சீனா தொடர்ச்சியாக இருந்து வந்துள்ளது. அதேவேளை சீனாவைத் தமது இருப்பிற்கான அச்சுறுத்தலாகவும் மியான்மாரின் இராணுவம் பார்த்துவந்துள்ளது. இராணுவ ஆட்சிபீடம் சீனாவில் முழுமையாகத் தங்கியிருக்கும் நிலையில் இருந்த அதேவேளை, சீனாவின் நலன்கள் மற்றும் தலையீடு சார்ந்த அச்சமும் இராணுவ ஆட்சிபீடத்திற்கு இருந்து வந்துள்ளது என்கிறார் நோர்வேஜிய சமூக மானிடவியல் பேராசிரியரும் மியான்மர் மற்றும் இலங்கைத் தீவின் அரசியல் சூழ்நிலைகள் தொடர்பான ஆய்வு அறிதலும் அனுபவமுமுள்ள கிறிஸ்தியான் ஸ்தொக்க.

மியான்மர் நாட்டின் மொத்த சனத்தொகை 52 மில்லியன் (2014 கணக்கெடுப்பின்படி). பல்வேறு இனத்துவக் குழுக்களைக் கொண்டுள்ளது. எட்டு வரையான அரசினால் அங்கீகரிக்கப்பட்ட இனத்துவத் தேசிய இனங்கள் மியான்மாரில் உள்ளன. ரொகிங்யா போன்ற இன்னும் பல அங்கீகரிக்கப்படாத, குடியுரிமை மறுக்கப்பட்ட சிறுபான்மை இனங்களும் உள்ளன. இதில் 68 வீதமான பெரும்பான்மையினர் பர்மியர்கள். அவர்களே அரசியல் மேலாதிக்கம் செலுத்திவருபவர்களுமாவர். ஏனைய சிறுபான்மை இனக் குழுமங்களின் சுயாட்சி உரிமைகள் தொடர்பான முரண்பாடுகள் ஆயுத மோதல்களுக்கும் உள்நாட்டுப் போர்களுக்கும் இட்டுச் சென்றன. 85 வீதமானவர்கள் பௌத்தர்கள், 4 வீதமானவர்கள் கிறிஸ்தவர்களும் 4 வீதமானவர்கள் முஸ்லீம்களுமாவர்.

ஆட்சிக் கவிழ்ப்பிற்கு இராணுவபீடம் சொல்லும் காரணம், கடந்த ஆண்டு (2020) நவம்பரில் நடந்த தேர்தலில் மோசடிகள் நடந்துள்ளன என்பதாகும். தேர்தல் ஆணையத்திற்கு பல முறைப்பாடுகள் கொண்டுசெல்லப்பட்டபோதும், அவை தேசிய ஜனநாயக கூட்டமைப்பு அரசாங்கத்தினால் தடுக்கப்பட்டுள்ளன என்பதுமாகும். நாட்டின் தேசிய பாதுகாப்புக் கருதித் தாம் ஆட்சிப்பொறுப்பேற்றதாக இராணுவபீடம் கூறியிருக்கிறது. தேர்தல் ஆணையத்தினைத் தாம் மறுசீரமைத்து, ஓராண்டுக்குள் புதிய தேர்தலை நடத்தி, தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனநாயக அரசாங்கத்திடம் ஆட்சிப் பொறுப்பு கையளிக்கப்படுமென இராணுவத் தளபதி Min Aung Hlaing கூறியிருக்கின்றார்.

ஆனால் உண்மை நிலவரம் வேறானது. தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தலோ, இறைமை அச்சுறுத்தல் சார்ந்த பிரச்சினைகளோ அங்கு இல்லை. இது முற்றிலும் அதிகாரம் சார்ந்த முரண்பாடுகளின் விளைவு என்பது மியான்மர் நிலைமைகளை அறிந்த ஆய்வாளர்களின் பார்வையாகும்.

மியான்மாரின் பழைய பெயர் பர்மா. வடகிழக்கில் சீனாவையும், தென் கிழக்கில் தாய்லாந்தினையும், கிழக்கில் லாவோசினையும், மேற்கில் இந்தியா மற்றும் வங்கதேசத்தினையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. 1948 வரை பிரித்தானியக் கொலனித்துவ ஆட்சிக்குட்பட்டிருந்த மியான்மாரில் அவர்களின் வெளியேற்றத்திற்குப் பிற்பட்ட காலங்களில் முற்றிலுமாக அமைதியற்ற பல்வேறு முரண்பாடுகளால் சூழப்பட்ட வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்ட காலங்களாகவே இருந்து வந்திருக்கின்றன. இம்முரண்பாடுகள் இராணுவ ஆட்சியதிகாரத்தை கைக்கொண்டிருந்த அதிகார மையங்களுக்கும் ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும்

வலியுறுத்தி வந்த சக்திகளுக்குமிடையிலுமான முரண்பாடுகளாக இருந்துள்ளன.

1962ல் இராணுவம் ஆட்சிக்கவிழ்ப்பு முதன்முதலில் நிகழ்த்தப்பட்டு ஜெனரல் Ne Win தலைமையில் இராணுவ ஆட்சி நிறுவப்பட்டது. அந்தக் காலப்பகுதியிலிருந்து அதாவது 1962ம் ஆண்டிலிருந்து 2011 வரையான அரைநூற்றாண்டு காலங்கள் மியான்மாரில் இராணுவ ஆட்சியே நிலவி வந்திருக்கின்றது. தென்கிழக்கு ஆசியாவில் செல்வச் செழிப்பான நாடுகளில் ஒன்றாக விளங்கி வந்த அந்நாடு இராணுவ ஆட்சிக்குட்பட்ட காலங்களில் உலகின் மிக வறிய நாடுகளில் ஒன்றென்ற நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தது. சர்வதேச ரீதியில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தது. ஆனபோதும், சீனாவுடன் தொடர்ச்சியான வணிக மற்றும் படைத்துறை உறவும் ஏனைய சில ஆசிய நாடுகளுடன் வணிக உறவும் இருந்து வந்துள்ளது.

இராணுவ ஆட்சிக்கு எதிரான போராட்டங்கள் முன்னரும் பல தடவைகள் நடந்துள்ளன. 1988ல் இராணுவ ஆட்சிக்கு எதிரான மக்கள் போராட்டம் முதன்முதலில் எழுந்தது. ஜனநாயகத்தை நிலைநிறுத்தக்கூடிய வகையில் மறுசீரமைப்புகள் கொண்டுவரப்பட



வேண்டும். சுதந்திரமான முறையில் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு, மக்கள் போராட்டங்கள் நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டன. எதிர்ப்புப் போராட்டங்கள் பௌத்த துறவிகள் மற்றும் மாணவர் சமூகம், தொழிற்சமூகங்களால் நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டன.

அன்றைய நாட்களில் அதாவது 1988இல் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் இராணுவத்தினரால் கடுமையாக தாக்கி அழிக்கப்பட்டனர். பெரும் ரத்தக்களறியில் 3,000ற்கும் மேற்பட்ட மாணவர்கள் கொல்லப்பட்டனர். பலநூற்றுக்கணக்கானோர் சிறையில் அடைக்கப்பட்டனர். தொடர்ந்து 1990ம் ஆண்டு (இராணுவ ஆட்சி நடத்தப்பட்டு முப்பது ஆண்டுகளுக்குப் பின்னர்) ஜனநாயக முறையில் தேர்தல் நடத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டது. 1990ம் ஆண்டு நடத்தப்பட்ட அத்தேர்தலில் National league for democracy - ஜனநாயகத்திற்கான தேசியக் கூட்டமைப்பு மக்களின் பெரும்பான்மை ஆதரவுடன் வெற்றி பெற்றது. 1930-1940 வரையான காலப்பகுதியில் பிரித்தானிய ஆட்சிக்கு எதிராக நாட்டின் விடுதலையை வலியுறுத்தி போராட்டத்தினை முன்னெடுத்த ஜெனரல் Aung Sanன் மகள்தான் Aung San Suu Kyi - அவரே ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் தலைவரும்.
ஜனநாயகத்திற்கானதும் மக்கள் உரிமைகளுக்கானதுமான அமைதி வழிப் போராட்டத்தினை முன்னெடுத்து வந்த Aung San Suu Kyi 1990ம் ஆண்டு, இராணுவ ஆட்சி மையத்தினால் விட்டுக்காவலில் வைக்கப்பட்டார். இராணுவ ஆட்சிக்கெதிரான மக்கள் புரட்சிகளுக்கு தலைமை தாங்கினார் என்ற குற்றசாட்டின் பேரிலேயே அவர் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார்.

1990ம் ஆண்டு நடத்தப்பட்ட தேர்தலில், ஏறத்தாழ 90 வரையான அரசியல் கட்சிகள் போட்டியிட்டன என்று தகவல் தெரிவிக்கின்றன. இதில் Aung San Suu Kyi தலைமையிலான தேசிய ஜனநாயகம் கட்சி பெரும்பான்மை மக்களின் ஆதரவுடன் வெற்றியீட்டியது! ஆனபோதும், ஜனநாயகத் தேர்தலை புறக்க ணித்த இராணுவ ஆட்சிப்பீடம் தேர்தலில் போட்டியிட்ட அனைத்துக் கட்சிகளையும் தடைசெய்ததோடு, தேர்தலில் வென்ற கட்சியிடம் ஆட்சியதிகாரத்தைத் கையளிக்கவும் மறுத்தது. தேசிய ஜனநாயகக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற இடங்களைப் பறித்து, அவற்றில் இராணுவத்தை சேர்ந்த வேட்பாளர்களை உறுப்பினர்களாக நியமித்தது. 1990ம் ஆண்டிலிருந்து Aung San Suu Kyi பல்வேறுதடவைகள் விட்டுக்காவலில் வைக்கப்பட்டார்.

வன்முறையற்ற அமைதி வழிமுறைகள் மூலம் ஜனநாயகத்திற்காகவும் மனித உரிமைகளுக்கான அவரது போராட்டங்களுக்காக 1991ம் ஆண்டு நோர்வேயினால் அவருக்கு சமாதானத்திற்கான நோபல் விருது வழங்கப்பட்டது. அவர் நோபல் விருதினை நோர்வேக்கு பயணம் சென்று பெற்றுக்கொள்ளாத வகையில் அவர் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்தார். சமாதானத்திற்கான நோபல் விருது அவருக்கு வழங்கப்பட்டதை அடுத்து பர்மாவின் இராணுவ ஆட்சி அதிகார மையத்திற்கெதிரான அனைத்துலக அழுத்தம் அதிகரித்தது எனலாம்! ஆனபோதும், அனைத்துலக சமூகத்தின் அழுத்தங்கள் மியான்மாரின் அரசியல் மாற்றத்திற்கு வழியேற்படுத்தவில்லை.

2007லும் தலைநகர் உட்பட்ட நகரங்களில் பெருமெடுப்பிலான அமைதிப் பேரணிகள், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. பௌத்த துறவிகள் பல்லாயிரக்கணக்கில் எதிர்ப்பு பேரணிகளில் கலந்து கொண்டிருந்தனர். ஒரு லட்சம் வரையிலான பௌத்த துறவிகளும் மக்களுமாக இராணுவ ஆட்சிக்கு எதிராகவும் ஜனநாயகம், மனித உரிமையை வலியுறுத்தியும் போராட்டங்களை முன்னெடுத்தனர். மியான்மாரின் அரசியல் தலைவிதியைத் தீர்மானிக்கும் சக்தியாக பௌத்த துறவிகள் கிளம்பிய செய்திகள் அன்றைய காலகட்டத்தில் உலக ஊடகங்களில் முக்கிய செய்தியாகியிருந்தன.

2007ல் புத்த பிக்குகளை மோசமாகக் கையாண்ட விதம், 2008ல் ஏற்பட்ட ‘நர்கிஸ் சூறாவளி’ இடரில் 138,000க்கும் அதிகமானோர் பலியாகியமை என்பன அரசியல் ஆட்சி முறைமை சார்ந்த மறுசீரமைப்புகளைக் கோரிநின்றது. ஜனநாயகத்திற்குத் திரும்பும் பாதையில், 2008ல் தமது அதிகார நலன்களை நிலைநிறுத்தும் இலக்கோடு அரசியலமைப்பு மாற்றத்தினைக் கொண்டுவந்தனர். அதற்கமைய 2010ல் தேர்தல் நடத்தப்பட்டு, 2011ல் நாடாளுமன்றம் அமைக்கப்பட்டது. புதிய அரசியலமைப்பும், தேர்தல் நடத்தப்பட்ட முறையும் ஜனநாயகத்திற்கான அமைப்பு மற்றும் சிறுபான்மை இனங்களின் விமர்சனங்களுக்கு உட்பட்டன.

அரசியலமைப்பின் மூன்று முக்கிய கூறுகள் இராணுவத்தின் தொடர்ச்சியான பிடியினை உறுதிப்படுத்தும் நோக்கில் கொண்டுவரப்பட்டன. நாடாளுமன்றத்தில் 25 சதவீத இடங்கள் இராணுக் கட்சியின் (Union solidarity and development party) பிரதிநிதிகளுக்குரியது என்பதோடு மூன்று முக்கிய அமைச்சகங்களும் அவர்களுக்குரியது. பாதுகாப்பு அமைச்சு, உட்துறை விவகாரங்கள் மற்றும் எல்லைப் பாதுகாப்பு ஆகியன அவையாகும். நாடாளுமன்றம் மேலவை (தேசிய அவை), கீழவை (உறுப்பினர் அவை) என இரண்டு அவைகளைக் கொண்டது. இரண்டிலும் படைப்பிரிவைச் சேர்ந்த 25 வீதமானவர்கள் பிரதிநிதித்துவம் அரசியலமைப்பு மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அத்தோடு அரசியலமைப்பு திருத்தங்கள், மாற்றங்களுக்குக் குறைந்தது 75 சதவீத உறுப்பினர்களின் ஆதரவைப் பெற வேண்டும் என்பதும், அரசியலமைப்பின் முக்கிய மூன்று இராணுவபீடத்திற்குச் சாதகமாக அவர்களாலேயே கொண்டுவரப்பட்ட அம்சங்கள்.

வெளிநாட்டுப் பின்னணியையுடைய வாழ்க்கைத் துணை அல்லது பிள்ளைகளையுடைய எவரும் ஜனாதிபதியாக முடியாது. இந்த விதிமுறை Suu Kyiஐ மனதிற்கொண்டு உள்ளடக்கப்பட்டதாகும். அவருடைய மறைந்த கணவர் பிரித்தானியாவைச் சேர்ந்தவர் என்பதோடு இரண்டு மகன்களும் பிரித்தானியக் குடியுரிமையை வைத்திருப்பவர்கள் என்பது, அவர் ஜனாதிபதியாவதைத் தடுக்

கின்றது. கடந்த தேர்தலின் (2015) பின்னர் NLD கட்சியைச் சேர்ந்த தனக்கு நெருக்கமான Htin Kyawஎன்பவரை ஜனாதிபதி வேட்பாளராக நியமித்து தனது கட்டளைகளை அவர் நடைமுறைப்படுத்துவார் என்பதையும் தெளிவுபடுத்தினார். நாடாளுமன்றத்தினூடாக அரச ஆலோசகர் என்ற புதியதொரு பதவியை NLD கட்சி உருவாக்கியது. நடைமுறையில் அந்தப் பதவி அவரை அரசாங்கத்தின் அதிகாரம் மிக்க தலைவராக்கியது.

2015ல் ஒபாமா தலைமையிலான அமெரிக்க நிர்வாகம் நாட்டின் மீதான பொருளாதாரத் தடையை நீக்கியதோடு, மியான்மாருக்கு விஜயம் செய்த முதல் அமெரிக்க ஜனாதிபதி என்ற பெயரும் ஒபாவுக்கு உண்டு. அமெரிக்காவைத் தொடர்ந்து மேற்கின் பல்வேறு நாடுகளும் வணிக, நிதி நிறுவனங்களும் தடைகளை நீக்கின. 2012ம் ஆண்டின் ஆரம்பத்தில் உலக வங்கி மியான்மருடன் மீண்டும் உறவைப் புதிப்பித்தது. அரச நிறுவனங்களுக்கு கடன் வழங்கியது. அத்தோடு கடன் முகாமைத்துவம் மற்றும் வெளிநாட்டு முதலீட்டுச் சட்டம் குறித்த தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கியது. மிகப் பெரிய அளவிற்கு வெளிநாட்டு மூதலீடுகள் நாட்டிற்குள் செல்லத்தொடங்கியது.

2015 தேர்தலில் Aung San Suu Syi பெரும் வெற்றியடைந்தார். தொடர்ந்தும் பெரும்பான்மை ஆதரவு அவருக்கு மக்கள் மத்தியில் உள்ளது. இம்முறைத் தேர்தலிலும் பெரும் வெற்றியடைந்தார்.

தேர்தல் நடத்தப்பட்ட முறை அல்ல பிரச்சினை. தேர்தல் முடிவுகள்தான் இராணுவபீடத்திற்குப் பிரச்சினை.

கடந்த ஐந்து ஆண்டுகளில் தமது அரசியல் வகிபாகமும் அந்தஸ்தும் பலவீனமடைந்த நிலையில், மேலும் ஐந்து ஆண்டுகள் தமது அதிகார இருப்பினைக் கேள்விக்கு உட்படுத்திவிடுமென்ற அச்சமே புதிய அரசாங்கம் கூடவிருந்த சில மணி நேரங்களுக்கு முன்னர் ஆட்சிப் பறிப்பு முடிவினை இராணுவபீடம் எடுக்கவைத்துள்ளது. 80 வீதமான நாடாளுமன்ற இருக்கைகளை தேசிய ஜன நாயகக் கூட்டமைப்பு வென்றது. இது இராணுவக் கட்சிக்கு பெருத்த வீழ்ச்சியும் அவமானமும்.

பத்து ஆண்டுகளுக்கு முன்னர் (2011) ஜனநாயகத் திறவுக்கு இராணுவ ஆட்சிபீடம் இணங்கியமைக்கான பின்னணிகளில் முக்கியமானது நாட்டின் மீதான சீனச் செல்வாக்கினைக் குறைத்து, மேற்கினை நாட்டுக்குள் அனுமதிப்பதாகும். அதன் மூலம் ஒருவகைச் சமநிலையை உருவாக்குகின்ற நோக்கத்திலானது என்கிறார் பேராசிரியர் ஸ்தொக்க. மேற்கினை உள்வர அனுமதித்தல் என்பது சீனாவைக் கையாள்வதில் ஒரு எதிர்வலுவினை உருவாக்குவதும், சீனாவைக் கையாள்வதற்கான ஒரு துருப்புச் சீட்டாகக் கையாள்வதும் தொடர்பான மியான்மர் இராணுவ ஆட்சியாளர்களின் நோக்கத்தைக் குறிக்கின்றது. மேற்கின் உள்நுழைவு என்பது சீனாவை முற்றிலுமாக அரங்கிலிருந்து அகற்றவில்லை. ஆனால், சீனாவின் அதிகாரம் ஒருபடி பின்தள்ளப்பட்டது என்பதில் உண்மையுள்ளது.

2015 தேர்தலில், Aung San Suu Kyiன் தேசிய ஜனநாயகக் கூட்டமைப்பு பாரிய வெற்றி பெற்றது. இராணுவ பீடம் தமக்குச் சாதகமாக அரசியலமைப்பினை மாற்றியிருந்தபோதும் Aung San Suu Kyiன் பாரிய வெற்றியும் அவர் அரசாங்கத்திற்குத் தலைமை தாங்குகின்ற நிலை உருவாகியமையும் இராணுவபீடத்தின் அதிகார நலன்களுக்கு எதிரான விளைவுகளை ஏற்படுத்தின. சீனாவிற்கு சார்பாக வலுச்சமநிலை மாறுவதற்கு ஏதுவான சூழல் அமைந்தது. Suu Kyi மேற்கின் செல்லப் பிள்ளையாக இருந்தார் என்பதும் சமாதானத்திற்கான நோபல் விருது உட்பட்ட பல்வேறு மனித உரிமை விருதுகளை மேற்குலகம் அவருக்கு வழங்கியிருந்தமை உலகறிந்தது. ஆனால் அவர் பதவிக்கு வந்த பின்னர் மேற்கு எதிர்பார்த்த தாராளவாத ஜனநாயகவாதியாக செயற்படவில்லை. அவரின் நடவடிக்கைகளும் நிலைப்பாடுகளும் மேற்கிற்கு ஏமாற்றத்தைக் கொடுத்தன.

அவர் முதன்மையாகப் பர்மிய-பௌத்த ஜனநாயகப் புரிதலுடன் உள்நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு முக்கியத்துவம் கொடுத்ததோடு, இராணுவ பீடத்துடனான மேற்கின் உறவு சார்ந்தும், மேற்கின் அரசியல் ஈடுபாடு வணிக, பொருளாதார ஈடுபாடாக மாறியதையிட்டு அதிருப்தியடைந்ததாகவும் சுட்டிக்காட்டுகிறார் பேராசிரியர் கிறிஸ்தியான் ஸ்தொக்க.

ஆனால் மேற்கின் அணுகுமுறை என்பது, ஜனநாயகம், நல்லாட்சி, மனித உரிமை, கருத்துச் சுதந்திரம், அபிவிருத்தி, என்ற பேர்களில் தமது வணிக பொருளாதார நலன்களுக்குச் சாதகமான சூழ்நிலைகளை ஏற்படுத்துவதே இறுதி இலக்கு. குறிப்பாக ஆசிய, ஆபிரிக்க மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இத்த கையை சொற்பிரயோகங்களுடனேயே அமெரிக்காவும் மேற்கும் தலையீடு செய்து களமிறங்குகின்றன. இதற்குப் பல்வேறு உதாரணங்களை வரலாற்றிலிருந்து கூறமுடியும். முரண்பாடுகள், உள்நாட்டுப் போர்கள் நடைபெறும் நாடுகளில் மேற்கினால் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகளுக்குப் பின்னால் அவர்களின் பொருளாதார நலன்கள் இருந்திருக்கின்றன என்பதுவும் அறியப்பட்டதே.

மியான்மாரைப் பொறுத்தவரையிலும் ஜனநாயகப் பாதைக்குத் திரும்புதல் என்ற அணுகுமுறை, மேற்கத்தைய வணிகத் தரப்புகள் போட்டிபோட்டுக் கொண்டு இராணுவ பீடத்துடன் உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்குரிய கதவுகளைத் திறந்தது. எனவே இது பரஸ்பரம் மியான்மர், சீனா உட்பட்ட பிராந்தியத் தரப்புகள் மற்றும் மேற்கு ஆகியவை தத்தமது நலன்களுக்கான அறுவடையைக் கருத்திற்கொண்டு முன்னெடுத்த அணுகுமுறைகளாகும்.

2012லிருந்து மதரீதியான வன்முறைகள், குறிப்பாக நாட்டின் முஸ்லீம் சமூகத்திற்கு எதிரான அடக்குமுறைகள் அதிகரித்தன. பௌத்த தேசியவாதம் வன்முறையோடு மீள் எழுச்சியடைந்தது. ராக்கின் மாநிலத்தில் (Rakhine province) ரொகிங்ய மக்களுக்கு (Rohingya) மக்களுக்கு எதிரான படுகொலைகளும் வன்முறைகளும் அதிகரித்தன. Rakhine முரண்பாடு என்பது அடிப்படையில் மத முரண்பாடு அல்ல. அது ரொகிங்ய மக்கள் மீதான அப்பட்டமான இன ஒடுக்குமுறை. 1982ல் ரொகிங்ய மக்களின் குடியுரிமை பறிக்கப்பட்டு, பல்வேறு அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. மியான்மாரின் பௌத்த பெருந்தேசியவாதம் அம்மக்கள் மீதான பாரிய வன்முறைகளை 2015 காலப்பகுதியில் கட்டவிழ்த்துவிட்டது. 2017ல் இராணுவ வன்முறைகளில் 6,700 வரையான ரொகிங்ய மக்கள் கொல்லப்பட்டதோடு, 700,000 வரையான ரொகிங்யர்கள் சொந்த நிலங்களிலிருந்து வெளியேற்றப்பட்டு, வங்கதேச எல்லைகளை நோக்கி விரட்டப்பட்டனர்.

இந்த நடவடிக்கைகளை இன அழிப்பு என ஐ.நா வரையறை செய்தது. அத்தோடு இதனுடன் தொடர்புபட்ட சில இராணுவ ஜெனரல்களின் பெயரைக் குறிப்பிட்டு, இன அழிப்பு, போர்க் குற்றம், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக விசாரணைகளை நடத்துமாறும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் முன்னிறுத்துமாறும் கோரியிருந்தது.

Rohingya முஸ்லீம் சிறுபான்மையினர் மீதான மியான்மர் அரச இராணுவ இயந்திரத்தின் இன அழிப்பு நடவடிக்கைக்கு தார்மீக எதிர்ப்பினையோ கண்டனத்தையோ வெளிப்படுத்தவில்லை என்ற அடிப்படையில் 2012ம் ஆண்டு Aung San Suu Kyiக்கு வழங்கப்பட்ட மனித உரிமை விருதினை அமெரிக்க Holocaust Museum 2018ல் மீளப்பெற்றது 1997ம் ஆண்டு Oxford பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட சுதந்திரத்திற்கான விருதும் (Freedom Award) கடந்த 2017 நவம்பர் மாதம் மீளப்பெறப்பட்டது.

## விருது மீளப்பெறுகை தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் இப்படிக் குறிப்பிட்டிருந்தது:

'இராணுவ சர்வாதிகாரத்திற்கு எதிரான நீண்ட எதிர்ப்புப் போராட்டம், மியான்மர் மக்களின் சுதந்திரத்திற்கும் மனித உரிமைகளுக்குமாக ஓங்கி ஒலித்த உங்கள் குரல் உலகெங்கிலுமுள்ள பல மில்லியன் கணக்கான மக்கள் மத்தியில் நீங்கள் உருவாக்கிய உத்வேகத்தின் அடிப்படையில் உங்களுக்கு 2012ல் விருது வழங்கியதில் நாம் பெருமைகொண்டோம். இப்போது மிகுந்த வருத்தத்துடன் அந்த விருதினை மீளப்பெறுகிறோம். இந்த முடிவிற்கு நாம் இலகுவில் வரவில்லை.'



அருங்காட்சியகம் ரொகிங்ய மக்களுக்கெதிரான மியான்மர் இராணுவத்தின் நடவடிக்கைகளையும் அதற்கான Aung San Suu Kyisன் பதில்களையும் நுணுக்கமாகக் கண்காணித்து வந்ததோடு, மியான்மர் மற்றும் வங்கதேசத்திற்குப் பல பயணங்களை மேற் கொண்டு முதற்கட்ட ஆதாரங்களையும் சேகரித்துள்ளது. இன அழிப்புத் தொடர்பான ஆதாரங்களையும் வெளியிட்டிருந்ததாக 2018ல் The Guardian செய்தி வெளியிட்டிருந்தது.

மியான்மர் நாட்டின் இராணுவ சர்வாதிகார ஆட்சியை எதிர்த்துக் குரல் கொடுத்து, அதற்காக 15 ஆண்டுகள் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்த Aung San Suu Kyi நெல்சன் மண்டேலாவுடன் ஒப்பிடுமளவிற்கு சர்வதேச சமூகத்தால் கொண்டாடப்பட்டவர். ஆனால் 2017ல் ரொகின்ய மக்கள் மீதான வன்முறை, அழிப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கிற்கும் Aung San Suu Kyi இற்குமிடையிலான உறவில் விரிசலும் பரஸ்பரம் கசப்பும் ஏற்ப டத்தொடங்கியது. ரொகிங்கிய மக்கள் மீதான இராணுவத்தின் இன அழிப்பு நடவடிக்கைகள் தொடர்பான குற்றச்சாட்டுகளை நிராகரித்து இராணுவத்தினைப் பாதுகாத்தார். மேற்குக்கும் Aung San Suu Kyi இற்குமிடையிலான விரிசல், சீனா Aung San Suu Kyi இனை நெருங்க வழிவகுத்தது.

சீனாவிற்கு மியான்மர் சார்ந்து தொலைநோக்கு அடிப்படையி லான இலக்குகள் உள்ளன. சீனாவின் வணிகம் மிகப்பெருமளவில் கடலை மையப்படுத்தியது. இந்துமா கடலுக்கு மலாக்கா நீரிணை ஊடான சுற்றுப்பாதையைத் தவிர்த்து நேரடிப் போக்குவரத்துப் பாதைக்கு மியான்மர் அவசியமான தளம். Rakhine கரையோ ரத்திலிருந்து (Port of Kyaukphyu ) சீனாவின் தென்மேற்கு மாநில மான Yunnanற்கு ஆழ்கடல் வழியான எண்ணெய் மற்றும் எரிவாயு குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை சீனாவின் புதிய பட்டுப் பாதைத் திட்டத்துடன் (Belt and Road) தொடர்புபட்டது. 2015ற்குப் பின்னர் மியான்மாரில் சீனாவின் தலையீடு அதிகரித்துள்ளதான பார்வை நிலவுகிறது.

மியான்மாரில் சீனாவின் வகிபாகமும் தலையீடுகளும் சிக்கலான பரிமாணங்களைக் கொண்டதாகவும் பார்க்கப்படுகின்றது. ஒரு தளத்தில் அல்ல, பல தளங்களில். அதாவது அரசியல், இரா ணுவ, பொருளாதாரம் என அனைத்திலும் சீனா களமிறங்கி நிற் கின்றது. அங்குள்ள சிறுபான்மை இன ஆயுதப் போராட்டக் குழுக்களுடனான சமாதான முயற்சிகளில் சீனா அனுசரணைப் பாத்திரம் வகிக்கின்றது. சமாதான முயற்சியில் சீனாவின் நிலைப் பாடு ஒடுக்கப்படுவோரின் உரிமைகள், கோரிக்கைகளின் நிலைப் பட்ட அணுகுமுறை அல்ல. மாறாக, பொருளாதார நிலைப்பட்ட சமாதான அணுகுமுறை அவர்களுடையது. பொருளாதார மேம்பா டும், மக்களை வாழ்க்கைத்தர நெருக்கடிகளிலிருந்து மீட்கும் திட்டங்கள் சமாதானத்திற்கான அடிப்படைகளை உருவாக்கும் என்பது சீனாவின் முரண்பாட்டுக் கையாள்கை, சமாதான அணுகு முறை. Aung San Suu Kyi தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டமைப்பின் ஆட்சிக்காலத்தில் சீனா தனது, வகிபாகத்தினை யும் செல்வாக்கினையும் பலப்படுத்தியமை இராணுவபீடத்திற்கு உவப்பானதாக அமையவில்லை.

மியான்மர் விடயத்தில், பல பந்தையக் குதிரைகளில் பணம் கட் டுகின்ற அணுகுமுறையைச் சீனா கடைப்பிடித்து வந்துள்ளது. ஒன்று சறுக்கினால் மற்றொன்று என்பதே அந்த அணுகுமுறை. பொதுவாகவே பனிப்போருக்குப் பின்னான காலத்தில் உலகநா டுகளின் வெளியுறவுத் தீர்மானங்களும் நகர்வுகளும் கோட்பாட்டு இலட்சியங்களின் அடிப்படையில் எடுக்கப்படுவதில்லை. நலன்க ளின் அடிப்படையில்தான் எடுக்கப்படுகின்றன. இதற்கு உலகநா டுகள் எதுவுமே விதிவிக்கல்ல. ஐ.நா மனித உரிமைப் பேரவை யில் சிறிலங்காவிற்கு ஆதரவாக கியூபா வாக்களித்தமை என்பது இதற்குரிய முக்கியமான எடுத்துக்காட்டு.
மேற்கு தனது பொருளாதார நலன்களுக்காக பெயரளவில் பெரி தாகவும் செயலளவில் சிறிதாகவேனும் ஜனநாயகம், நல்லாட்சி, சமாதானம் போன்றவற்றை ஏற்றுமதி செய்கின்றது. சீனா கோட் பாட்டு இலட்சியங்களின் அடிப்படையில் வெளியுறவு முடிவுகளை எடுப்பதில்லை. பொருளாதார நலன் சார்ந்தே அதன் முடிவுகள் அமைவன. பொருளாதார ஸ்திரத்தன்மை, அபிவிருத்தி நிதியுதவி என்பனவே சீனாவின் வெளியுறவு மூலோபாயங்கள். அந்த வகை யில் மியான்மாரைத் தளமாகப் பேணுதல் என்ற இலக்கிற்குரிய முடிவுகளையே சீனா எடுக்கும். மியான்மாரின் உள்நாட்டுச் சக்தி-களுடன் தனது நலனுக்குரிய வகையில் உறவைப் பேணும் முடி-வினையே அது எடுக்கும். அது இராணுவபீடமாயிருந்தால் என்ன, ஜனநாயக கட்சித் தலைவர்களாக இருந்தால் என்ன. அந்தந்தக் காலகட்டத்தில் அதிகாரத்தில் உள்ளவர்களுடன் உறவைச் சீனா பேணும். இராணுவ ஆட்சி எத்தனை காலம் நீடிக்கும் என்பது யாரும் அறியாதது. தற்போது அதிகாரத்தைக் கையில் வைத்தி ருப்பவர்கள் இராணுவத்தினர். எனவே அவர்களைப் பாதுகாக்க எண்ணுகிறது சீனா.

தென்-கிழக்கு ஆசியாவில் சீனாவிற்கு எதிரான அமெரிக்க அணி திரட்டலுக்கு மியான்மாரும் அமெரிக்க நலன்களுக்கு முக்கியமா னது. இந்தியாவும் மியான்மாரில் தனது வகிபாகத்தை உருவாக்கு வதில் முனைப்புக் கொண்டுள்ளது. ஜப்பானும் ஏற்கனவே சமா தான அனுசரணை, அபிவிருத்தி நிதியுதவி ஆகியவற்றினூடு ஒரு வகையான பொருளாதார அதிகாரத்தை மியான்மாரில் கொண்டுள் ளது. இந்தியா, ஜப்பான் ஆகிய இரண்டும் பிராந்தியத்தில் சீனா வின் போட்டி சக்திகள். அமெரிக்காவின் ஆதரவு சக்திகள். அள வுகளில் வேறுபாடிருப்பினும் இலங்கை போன்று மியான்மாரும் சிக்கலான உள்நாட்டு முரண்பாடுகளைக் கொண்டுள்ளது. மட்டு மல்லாது புவிசார் அரசியல் முரண்பாட்டுச் சக்திகளால் தத்தமது நலன்களுக்காகக் கையாளப்படும் தேசமும்கூட.

பிராந்திய மற்றும் சர்வதேச சக்திகளின் இரண்டு கூட்டு(கள்) பர் மாவை மையம்கொண்டுள்ளன. அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றி யம், ஜப்பான், அவுஸ்திரேலியா, இந்தியா ஆகிய நட்பு சக்திக ளின் கூட்டு ஒரு புறம். இது சர்வதேச மற்றும் பிராந்திய சக்திகள் இணைந்த கூட்டு. மற்றையது சீனாவின் நலன்கள் சார்ந்த தலை-யீடு. இதில் சீனா தனிப்பெரும் தரப்பு எனினும் பிராந்தியத்தின் கம்போடியா மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகியன சீனாவின் ஆதரவு சக்தியாக உள்ளன.



rooban.s@thaiveedu.com



# Lower rates.
# Exceptional service.

Connect with an insurance company that puts clients first.
Discover why The Co-operators is the right choice
for your Auto and Home insurance.

Ask us about our significant discounts, 24-hour
Emergency Claims Service, free Identity Theft coverage
with our Home policies, and Accident Forgiveness
Endorsement option. All backed by our
Claims Guarantee.

**Senthooran Punithavel**

Phone: **416-396-0707**
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca

**We've Moved**
**Our New Address**

10 Milner Business Court - Unit 708
Scarborough, ON M1B 3C3

## குறைந்த கட்டணங்கள்
## பெரும்பயன் நல்கும் சேவைகள்

வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும்
எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்

வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு
The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்

உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

24 மணிநேர அவசர கேட்பனவுச் சேவை வழங்கப்படும்

Home Auto Life Investments
Group Business Farm Travel

the co-operators®
A Better Place For You®

# பொருளாதாரப் பேரிடர்




# உள்ளூர் வணிகம் எதிர்கொள்ளும் சவால்கள்

**- பொன்னையா விவேகானந்தன்**

கோவிட்-19 தொற்றுநோய் பரவத் தொடங்கியதிலிருந்து நடைமுறைப்படுத்தட்ட முடக்கநிலை (lockdown) ஓராண்டைக் கடந்து நீண்டு செல்கின்றது. அலை ஒன்று, அலை இரண்டு, அலை மூன்று என தொடரும் தொற்றுநோய்ப் பரவல் தடுப்பூசிப் பயன்பாட்டுடன் மெல்ல மெல்ல நிறைவுக்கு வரும் என உலக நாடுகள் பலவும் எதிர்பார்க்கின்றன.

பெரும்பாலான நாடுகள் முடக்கநிலை தொடர்பில் ஓராண்டு காலத்தைக் கடந்துள்ளன. இந்த ஓராண்டில் அனைத்து நாடுகளும் பொருளாதாரம் தொடர்பில் கடுமையாகவே பாதிக்கப்பட்டுள்ளன. வளர்ச்சியடைந்த நாடுகள் இந்தப் பேரிடரை ஒருவாறு எதிர்கொண்டு, பெருவீழ்ச்சிகளைக் கட்டுப்படுத்திவர, வளர்ச்சியடைந்து வரும் நாடுகளே பெருமளவில் திணறிக்கொண்டிருக்கின்றன.

இந்தப் பொருளாதாரப் பேரிடரை எதிர்கொள்வதில் கனடா, எவ்வகைச் சவால்களைச் சந்திக்கின்றது என்பதையே இக்கட்டுரை மேலோட்டமாக விளக்க முயற்சிக்கின்றது.

கடந்த ஓராண்டுக்கும் மேலாக, கனடாவின் பொருளாதாரக் கட்டமைப்பு கடும் சீர்குலைவுக்கு உட்படாதவகையில் அதைப் பேணிச்செல்லும் நோக்குடன், கனடிய அரசு தன்னாலான முயற்சிகளைச் செய்து வருகின்றது. இவ்வாறான சடுதியான அசாதாரண சூழலில் ஏற்படும் பேரிடர்களில் இருந்து மக்களைக் காக்க வேண்டிய பொறுப்புணர்ந்து மைய, மாகாண அரசுகள் செயற்படுகின்றன எனினும், நீடித்துச்செல்லும் பொருளாதாரப் பேரிடர்களை எத்துணை காலத்துக்குத் தாங்கிச் செல்லப் போகின்றன என்பது பெரு வினாவே.

கடந்த ஓராண்டிலும் அடுத்துத் தொடர்கின்ற ஆண்டிலும் கனடாவின் வலுவான பொருளாதாரத் தளங்கள் தொடர்ந்து வலுவிழந்து செல்கின்றன என்பதையே பொருளாதார ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன.

அரச வருவாய்கள் பெரு வீழ்ச்சியை எதிர்கொள்ளும் அதேநேரத்தில் அரச திறைசேரியின் இருப்பும் வேகமாகக் குறைந்து செல்கின்றது. ஒரு நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைகின்றபோது நட்பு நாடுகள் கைகொடுப்பது பொதுவான வழமை. ஆனால் இந்தத் தொற்றுநோய் அனைத்து நாடுகளையும் பாதிப்புக்குள்ளாக்கியிருக்கின்றது. யாரும் யாருக்கும் உதவ முடியாத நிலை.

கனடாவின் முதன்மை வருவாய்களாக இருக்கக் கூடிய சுற்றுலாத்துறை, ஏற்றுமதிகள் என்பன கடுமையான பாதிப்புக்குள்ளாகியுள்ளன. அதேவேளை வருமான வரி மூலம் அரசுக்குக் கிடைக்கும் பெருந்தொகையும் முடக்கப்பட்டுள்ளது. தொழில் இழப்புகள், வணிக நிறுவனங்களின் வருவாய் வீழ்ச்சி என்பனவே பொருளாதார வீழ்ச்சியின் முதன்மைத்தளங்களாக உள்ளன. ஒரு நாட்டின் முதுகெலும்பாக இருக்கக்கூடிய உள்நாட்டு உற்பத்தியும் வணிகமும் 1961ம் ஆண்டுக்குப் பின்னரான பெருவீழ்ச்சியைக் காட்டுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

சரிந்துவிட்ட பொருளாதாரத்தை மீளக்கட்டமைக்கும் முயற்சியில் கனடா அரசு முன்னுரிமை கொடுப்பது உள்ளூர் உற்பத்தியையும் வணிகத்தையும் மேம்படுத்தும் திட்டங்களுக்குத்தான் என்பது தெளிவாகின்றது. வருமான இழப்பீடு, வரிக்கழிவு, மானியம் என்ற திட்டங்கள் வாயிலாக இந்த முயற்சிகளை அரசு மேற்கொள்கின்றது.

உள்ளூர் விற்பனையில் உணவுப் பொருள் தொடர்பான வணிகங்களைத் தவிர, பெரும்பாலான பிற வணிகங்கள் வீழ்ச்சியடைந்துள்ளன. குறிப்பாகப் பெரும் பொருளாதாரச் சுழற்சியைக் கொண்ட வாகன வணிகம் பெரும் சரிவைச் சந்தித்துள்ளது. முடக்கநிலை, வீட்டிலிருந்து வேலை, இணையவழி வணிகம் என்பன போக்குவரத்தைக் குறைத்துள்ளன. பெரும்பாலன புதிய வாகனங்கள் தேங்கிக் கிடக்கின்றன. ஆண்டுதோறும் அறிமுகமாகும் புதிய உற்பத்திகள் நிறுத்தப்பட்டுள்ளன. இத்துறை தொடர்பான ஆயிரக்கணக்கானோர் பணியிழந்துள்ளனர்.
விழாக்கள், கொண்டாட்டங்கள் மட்டுப்படுத்தப்பட்டதனால் அவை தொடர்பான வணிகங்கள் பெரு வீழ்ச்சியடைந்துள்ளன. சுற்றுலாப் பயணிகளில் தங்கியிருந்த வணிகங்கள் பேரடி வாங்கியுள்ளன. நட்சத்திர விடுதிகள் உட்பட, பல விடுதிகளை அரசு வீடற்றோருக்கு வழங்கியுள்ளது. நகர மையங்களில் உள்ள உணவகங்கள் பல நிரந்தரமாக மூடப்படும் நிலையை நோக்கிச் செல்கின்றன. பெரும்பாலான உணவகங்கள் அரசு வழங்கும் இழப்பீடுகளிலும் மானியத் திட்டங்களிலுமே தமது இருப்பை நீடித்திருக்கின்றன.

நாட்டின் சிறு அலகுகளை நிர்வகிக்கும் மாநகராட்சி, நகராட்சி என்பன, உள்ளூர் வணிகம் வாயிலாகப் பெறப்படும் வணிகத்தி-

லேயே பெரிதும் தங்கியிருக்கின்றன. இந்த வணிகங்களின் வீழ்ச்சி உள்ளூர் அரச நிர்வாக அலகுகளைக் கடுமையாகவே பாதிக்கும். உள்ளூர் வணிகங்களை மேம்படுத்தும் திட்டங்களுக்காக மாநக ராட்சிகள் கணிசமான நிதி ஒதுக்கீட்டைச் செய்து வருகின்றன.

உள்ளூர் வணிகங்களைப் பெருமளவில் பாதிப்படையச் செய்தது, இணையவழி வணிகங்களே. உள்ளிருப்புக்காலத்தின்போது, பல ரும் தமது தேவையான பொருட்களை இணையவழியாக பெறத் தொடங்கியிருந்தனர். இணையவழி வணிகங்களும் போட்டியிட்டு வாடிக்கையாளர்களுக்குப் வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுத்தன. மிக விரைவான வழங்கல்கள், பொருளை திருப்பி அனுப்புதல், மாற்றுதல் போன்ற வாய்ப்புகள் வாடிக்கையாளரை ஈர்க்கவே, கணிசமானோர் இணையவழி வணிகத்துக்குள் ஆட்பட்டுவிட்டனர். இந்தத் தொற்றுநோய்க்காலத்தில் அமேசன் (Amezon) இணைய வழி வணிகம் பெருவளர்ச்சி கண்டுள்ளது.

இணையவழிக் கொள்வனவின்போது, விலைகள் குறைவாக இருப் பதாகவும், வணிக நிறுவனங்களில் ஏறியிறங்கி பிடித்த ஒரு பொரு ளைத் தேடுவதை விட இது எளிதாகவும் நேரத்தைச் சேமிக்கக்கூடி யதாகவும் இருக்கின்றது எனவும் இணையவழி வாடிக்கையாளர் தெரிவிக்கின்றனர். இணையவழி வணிகத்தில் இருக்கும் தெரிவு கள் உள்ளூர் கடைகளில் இல்லை என்பதுவும் இவர்கள் கருத்து.

ஆனால், நமது சுற்றாடலில் உள்ள உள்ளூர் வணிக நிறுவனங் கள் நமது இருப்பில் வலுவான பங்கு வகிக்கின்றன என்ற உண் மையை உணர்த்துவதற்கு அரச நிர்வாக அலகுகள் முயற்சி எடுத்து வருகின்றன. சுற்றாடலில் வாழ்வோரின் இருப்பின் சுழற்சி, உள்ளூர் வணிகங்களில் மேம்பாட்டிலேயே தங்கியிருக்கின்றது.

உள்ளூர் வணிகம் சிறக்கும்போதுதான் உள்ளூர் உற்பத்திகளும் பெருகும். உணவகங்களின் விற்பனை வீழ்ச்சி, பல பாற்பொருள் பண்ணைகளின் வருவாயைக் கடுமையாகப் பாதித்துள்ளது. உள் ளூர் தொழிற்சாலைகள் உற்பத்தியைக் குறைத்துப் பல பணியா ளர்களை நீக்கியுள்ளன. உள்ளூர் வணிகம் செழிக்கும்போது அங்கு பணியாற்றும் சுற்றாடலில் வாழும் பணியாளர்கள் பேணப் படுவர். அரச அலகுகள் வருவாயைப் பெறும். அந்த வருவாய் மக்கள் நலத்தைப் பேண உதவும். எப்போதுமே சுற்றாடலில் நலத்தைப் பேணுவதில் உள்ளூர் வணிகங்கள் கணிசமான பங்கு வகித்து வருகின்றன. அவ்வப்போது நடைபெறும் சமூக நிகழ்வுக ளுக்கு கொடை வழங்குபவர்களும் இவர்களே.

சமூகநலன் கருதி, உள்ளூர் வணிகத்தைப் பேணிச்செல்ல வேண் டியது சுற்றாடலில் வாழும் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

தொற்றுநோய் தொடர்பான முடக்கநிலைக் காலத்தில் கடந்த ஆண்டு கோடைகால மகிழ்ச்சிகளை மக்கள் இழந்துவிட்டிருந்த னர். தொடர்ந்த குளிர்கால விடுமுறைகளும் கொண்டாட்டங்களும் கூடத் தடைப்பட்டிருந்தன. இவ்வாண்டில் எதிர்ப்படும் கோடை-காலமும் எவ்வாறு அமையும் என்பது கேள்விக்குறியாகவே இருக் கின்றது. கணிசமான மக்களின் சேமிப்பு பல பில்லியன் டொலர்க ளாக உயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஓராண் டில் முடக்கநிலை காரணமாகச் சுற்றுலா, பொழுதுபோக்கு என்ப வற்றுக்கான செலவுகளை மக்கள் கணிசமாக மீதப்படுத்தியிருந்த னர். சேமிப்பாளர் பலரும் எதிர்வரும் கோடைகாலத்தில் சுற்றுலா, பொழுதுபோக்கு என அப்பணத்தைச் செலவு செய்ய முயற்சிப்பர். இது மக்கள் தடுப்பூசி இட்டுக்கொள்வதிலேயே தங்கியிருக்கின் றது. கணிசமாக பணத்தைச் சேமித்தோர் சிலர், தமது பணத்தை வீட்டுச்சந்தையில் முதலிட முயற்சிக்கின்றனர். இதுவும் வீட்டு விலை உயர்ச்சிக்கு ஒரு காரணமாகும் எனச் சொல்லப்படுகின் றது.

கனடாவில் குறிப்பாக ரொறன்ரோ பெரும்பாகத்தில் தொடர்ச்சி யாக உயர்ந்துவரும் வீடுகளின் விலை வரலாறு காணாத சாதனை உயர்வாகவே கருதப்படுகின்றது. பொருளாதார நிபுணர்களும் அதிர்ச்சின் உச்சத்தில் நின்றே இவ்வுயர்வை நோக்குகின்றனர். வேலை வாய்ப்புக்கருதி நகர்களின் மையங்களில் பெரும் வாடகை கொடுத்து வாழ்ந்த மக்கள், ‘வீட்டிலிருந்து வேலை’ என் பதன் காரணமாகப் புறநகர்ப் பகுதிகளில் வீடுகளை வாங்க முற் படுகின்றனர். முதலீட்டாளர்களும் வீட்டுக்கடனுக்கான வட்டிவீதம் குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து, புதிய முதலீடுகளுக்கு முற்படு கின்றனர்.

இதை விடவும் அண்மையில் வெளியாகியிருக்கும் மற்றுமொரு செய்தி, வீடுகளின் விலை குறித்து மேலும் அச்சமடைய வைத்தி ருக்கின்றது. கனடா அரசு, முதலீடுகள், வேலை வாய்ப்புகளைக் கருதி 10 இலட்சம் குடிவரவாளர்களை வரவழைக்கவிருக்கின்றது. இதில் ஏறக்குறைய அறுபது விழுக்காட்டினர் கொங்காங் போன்ற நாட்டிலிருந்து முதலீடுகளுடன் அழைக்கப்படுவார்கள் என ஒரு கருத்து நிலவுகின்றது. இத்தகவல் உண்மையாயின், மற்றுமொரு படிநிலை வீட்டு விலையுயர்வுக்கு இவர்கள் காரணமாகவிருப்பர். அனல் பறக்கும் வீட்டு வணிகச் சந்தையின் கொதிநிலை குறைய வாய்ப்பில்லை என்றே தோன்றுகின்றது. இந்த விலையுயர்வு, வீட்டு வாடகையையும் உயர்த்தத் தொடங்கியிருக்கின்றது என்ப தைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

ஓராண்டைக் கடந்து நீடிக்கும் இந்தப் பேரிடர்காலம் கனடாவில் மட்டும் இருபத்தையாயிரத்துக்கு மேற்பட்ட (நேரடியாகவும் மறை முகமாகவும்) இறப்புகளை ஏற்படுத்தியதோடல்லாமல் அன்றாட வாழ்வியல் சார்ந்து பல பாரிய மாற்றங்களை ஏற்படுத்தி வரு கின்றது. மூன்றாம் அலை பேரலையாக இருக்கக்கூடும் என மருத் துவத் தரப்பு எச்சரித்துள்ளதையும் கவனத்தில் கொள்ள வேண் டும்.

இப்பேரிடரில் இருந்து மீண்டெழுந்து வழமைக்குத் திரும்புதல் என்பது, தொற்றுநோயின் பரவலைத் தடுப்பதில் மட்டுமல்ல, மக் கள் அரசுக்கு வழங்கும் பாரிய ஒத்துழைப்பிலும் தங்கியிருக்-கின்றது.



vivekanandan.p@thaiveedu.com

*தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveedu.com***
***Fax: 416-849-0594 Tel: 416-646-3422***




# கோவிட்-19 முடங்குநிலை:
## அடைந்ததும் இழந்ததும்



**- அருவி இரவீந்திரன்**

டிசம்பர் 2019ல் இருந்து இந்த உலகம் மாறிவிட்டது. முதல் கோவிட்-19 தொற்றாளர் வூஹானில் கண்டு பிடிக்கப்பட்டபோது, நான் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. ஒரு சாதாரண நோய் என்றுதான் நினைத்தேன். அதுவும், சீனாவில்தானே, நான் ஏன் கவலைப்படவேண்டும் என்று நினைத்தேன். ஆனால், சில நாள்களுக்குப் பின்பு, கனடாவில் முதல் தொற்றாளர் அடையாளம் காணப்பட்டார். இந்தச் செய்தி யைக் கேட்ட பிறகும், நான் அதிர்ச்சி அடையவில்லை. சில மாதங்கள் கடந்து, மார்ச் மாதத்தில், நாடு முழுக்க இந்த நோய் பரவிவிட்டது. அந்த நேரத்தில், மார்ச் விடுமுறை வந்தது. விடு முறையில் மூன்று நாள்கள் கடந்து போய்விட்டன. அப்போது எனக்கு ஒரு மின்னஞ்சல் வந்தது. அந்த மின்னஞ்சலில், இன்னும் இரண்டு வாரங்களுக்குப் பள்ளிக்கூடம் மூடியிருக்கும் என்று எழு-தியிருந்தது. இந்தச் செய்தியைப் பார்த்தவுடன், மகிழ்ச்சியில் தலை கால் தெரியவில்லை.

அந்த இரண்டு வாரங்கள் பல மாதங்களாக மாறிவிட்டன.

முடங்குநிலையில் நான் புதியன பலவற்றைக் கற்றுக்கொண்டேன் என் தம்பி அகரனும் நானும் சேர்ந்து யோகாசனம் கற்று, ஒவ் வொரு நாளும் காலையில் செய்தோம். யோகாசனம் உடலுக்கும் மனதுக்கும் புத்துணர்வைத் தருவதை நானும் உணர்ந்தேன். போகப்போக, எனது பெற்றோரும் யோகாசனம் செய்யத்தொடங்கி னார்கள்.

முடங்குநிலையின் முதல் சில நாட்கள் மிகவும் சலிப்பாக இருந் தன. ஆனால், சமூகவலைத் தளங்கள் நான் புதிதாகப் பலவற் றைக் கற்க உதவின.

விதவிதமாகக் கூந்தலை அழகுபடுத்தப் பழகினேன். அம்மாவின் பார்வையில் நெருப்புத் தெரிந்ததால், கண்ணாடியில் பார்த்து என் தலையில்தான் பழகினேன். மருதாணி போடப் பழகினேன். உடற் பயிற்சியும் கொஞ்சம் பழகினோம். நன்றாகச் சமைக்கத் தெரிந்தவ ரான அம்மம்மாவுக்கு, அவர் YouTubeல் கண்டுபிடித்த புதுவ கைப் பணியாரங்கள் செய்ய உதவினோம். அம்மம்மா YouTubeல் கண்டுபிடித்த புதுப்பணியாரம் ஒன்றின் பெயர் ‘உருளைக்கிழங்கு வடை’. பிற்சா, கேக், பாண், பணிஸ், பக்கோடா என்று எங்கள் பரிசோதனை நீண்டது. சில வேளைகளில் புகை எச்சரிக்கைக் கருவி சத்தம் போட்டது. அதனால், அப்பாவும் சத்தம் போட்டார்.

இப்படியே வாரங்கள் போக, ஒரு புதிய அனுபவம் என்னை வர வேற்றது, மெய்நிகர் வகுப்பு (Virtual classroom). எப்போதும் பள் ளிக்கே சென்று வந்ததால், மெய்நிகர் வகுப்பை நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. ஒவ்வொரு நாளும் வீட்டில் இருந்து தொடர்ந்து கணினித்திரையைப் பார்க்கவேண்டியிருந்தது. மிகவும் எரிச்சலாக இருக்கும், ஆனால் எனது பாதுகாப்புக்கும் என்னுடைய குடும்பத் தின் பாதுகாப்புக்கும் இது தான் ஒரே வழி.

மெய்நிகர் வகுப்பின் தொடக்கத்தில், ஆசிரியர்களும் சரி, மாண வர்களும் சரி, பெரும்பாலும் எல்லோருமே பழகும் நிலையிலேயே தொடங்கினோம். அதனால்தான், முதலில் எனக்கு பள்ளியிலி ருந்து நிறைய வீட்டுவேலை கிடைக்கவில்லை. பொழுதுபோக் குக்கு அதிக நேரம் கிடைத்தது.

இந்த முடங்குநிலை என்பது, என் வாழ்க்கையில் ஒரே ஒரு வாய்ப் பாகத்தான் இருக்கும். இந்த வாய்ப்பை நான் தவறாகப் பயன்ப டுத்த விரும்பவில்லை.

மேலதிகமாகக் கிடைத்த இந்த நேரம் பொன்னானது. எனவே பயன்மிக்கதாக இந்த நேரத்தைப் பயன்படுத்த எண்ணினேன்.

அடுத்த ஆண்டு நான் எட்டாம் வகுப்புக்குப் போவதால், புதிய தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு இந்த நேரத்தைப் பயன்ப டுத்தினேன். எனக்குப் பிடித்த நூல்களை வாசித்தேன்.

மெய்நிகர் வகுப்போடும் குடும்பத்தோடும் நாள்கள் சென்று விட்

டன. அப்போது கோடை விடுமுறை என்னை அன்புடன் வரவேற்றது. கோடைகால விடுமுறையிலும், என் வகுப்புகள் எல்லாம் மெய்நிகர் வகுப்புகளாகவே நடைபெற்றன. படிக்க மிகவும் கடினமாக இருந்தது. ஆனாலும் சமாளித்துத் தொடர்ந்தேன். வேறு வழி?

கோடை விடுமுறையில் எங்கள் குடும்பத்தோடு படங்கள் பார்த்தேன், சமைத்தேன். மொத்தத்தில், நான் இந்த இனிமையான தருணங்களை எனது குடும்பத்தோடு கழித்தேன். கோடை விடுமுறையும் வேகமாக முடிந்தது. அதன் பின்பு, பள்ளிக்கூடமும் நெருங்கி வந்தது. இந்த முறையும், நான் மெய்நிகர் வகுப்பையே விரும்பினேன். இந்த முடிவு ஒரு சோகமான முடிவு, ஏனென்றால் தொடக்க நிலைப் பள்ளியில் இது என்னுடைய கடைசி ஆண்டாக இருக்கும். என் நண்பர்களையும் பார்க்க முடியாது, ஆசிரியர்களையும் பார்க்க முடியாது. எட்டாம் வகுப்பு நன்றாகப் போனது என்று சொல்லமுடியாது. கண் எரிச்சல், குறுக்கீடுகள், கவனம் சிதறல், அதிக ஒலி, எப்போதும் ஒரே நிலையில் அமர்ந்திருப்பது போன்ற காரணங்களால் மெய்நிகர் வகுப்பு மிகவும் கடினமாக இருந்தது.

கோவிட்-19, வாழ்வை அச்சுறுத்தியது. பல சிக்கல்களைத் தந்தது. இழப்புகளை ஏற்படுத்தியது. ஆனால் மறுபக்கத்தில் இருந்து பார்க்கும்போது, கவனத்தில் கொள்ளப் பல விடயங்கள் இருக்கின்றன. என்னுடைய பெற்றோருக்கும் வேலை இல்லாமல் போய் விட்டது. கவலைதான். ஆனால் எனக்கு குடும்பத்தோடு நிறைய நேரம் கழிக்கக்கூடிய ஓர் அரிய வாய்ப்பைத் தந்தது இந்த முடங்குநிலை.

மேலும், என்னுடைய அன்றாட நடவடிக்கைகளிலும் மாற்றத்தை ஏற்படுத்தியது. எடுத்துக்காட்டாக, நான் செய்திகளை வாசித்தேன். தொலைக்காட்சியிலும் செய்திகளைக் கவனிக்கத் தொடங்கினேன். நிகழ்வுகளைப் பற்றியும் சுவையான செய்திகளையும் பார்த்த, படித்து குடும்பத்தினரோடு பகிர்ந்துகொண்டேன். ஒவ்வொரு நாளும் கோவிட் தொற்றாளர் எண்ணிக்கையைப் பார்த்து, வரும் நாள்களில் எண்ணிக்கை எப்படி இருக்கும் என்று எதிர்வுகூற நானும் முயன்றேன். கணிப்புகளைச் செய்தேன். விளைவாக, செய்திகளைப் பார்ப்பதும், கேட்பதும் வழக்கம் ஆனது. இந்தப் புது நடவடிக்கைகள் எனது மனதை வெவ்வேறுபாதைகளில் திருப்பியது.

கடந்த ஓராண்டுக்கு மேலாக, ஒரு வகைச் சிறைக்குள், ஒரு வட்டத்துக்குள் அடைபட்டிருக்கிறேன். ஆனால், சலிப்பான சூழ்நிலையை எதிர்கொள்ள கோவிட்-19 எனக்கு உதவியிருக்கிறது. கோவிட்-19 எனது எண்ணங்களுக்குப் புதிய சாளரங்களையும் திறந்துவிட்டிருக்கிறது.

இது என்னுடைய கோவிட்-19 அனுபவம்.

இந்த இடத்தில் எனது தோழி வீட்டில் நடந்த சம்பவத்தையும் சொல்லவேண்டும்.

செப்ரெம்பர் மாதத்தில் எனது தோழி தனது 13வது பிறந்தநாளைக் கொண்டாடினாள். அந்த நேரம் கடுமையான கட்டுப்பாடுகள் இருந்தன. ஒரு வீட்டில் 15 பேர் மட்டுமே அனுமதிக்கப்பட்டார்கள். ஆனால், எனது தோழியின் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் குறைந்தது 17 பேர் இருந்தனர்.

தெரிந்தே தவறு செய்தனர்.

தவறு என்று தெரிந்ததனால், எல்லோரும் பயந்து பயந்து மெதுவாகக் கதைத்தார்கள். அத்துடன், 'திடீரென யாராவது வந்தாலும்' என்று எனது நண்பியின் உறவினர்கள் பலரும் முகக்கவசத்தைக் கையில் கட்டி வைத்திருந்தார்கள். ஒரு கட்டத்தில் எல்லாப் பயமும் மறைந்துபோனது. தோழியின் உறவினர்கள் எல்லோரும் ஆடிப்பாடி, கதைத்துச் சிரித்து நேரத்தை மகிழ்ச்சியாகக் கழித்தார்கள். பிறகு, அவர்கள் வட்டமாக அமர்ந்து கதைக்கத் தொடங்கினார்கள். அத்துடன் குரல்களை உயர்த்தத் தொடங்கினார்கள். குரல்களை உயர்த்துகிறோம் என்பதும் அவர்களுக்கு உறைக்கவில்லை. அப்போது அவர்கள் ஏதோ சத்தங்களை கேட்டார்கள். கதைச்சுவையிலும் அதிக இரைச்சலாலும், அவர்களால் அந்தச் சத்தங்கள் என்னவென்று கண்டுபிடிக்க முடியவில்லை. கண்டுபிடிக்க நினைக்கவுமில்லை. அவர்கள் அந்த சத்தத்தை பொருட்படுத்தாமல் தங்களின் கதைகளைத் தொடர்ந்தார்கள். ஒரு நிமிடம் போயிருக்கும். முன்கதவில் 'தடதட'வென்று யாரோ அடிப்பது போல பலத்த சத்தம் கேட்டது. முதலில் ஏதோ கீழே விழுந்து விட்டது என்றே பலரும் நினைத்தனர். ஆனால் ஒன்றும் விழவில்லை என்று உணர்ந்ததும், அங்கிருந்த எல்லோரும் அமைதியாகி விட்டார்கள். பேய்ப்படத்தில் வரும் அமைதி போல இருந்ததாம். அவர்களுடைய மகிழ்ச்சியான முகங்கள் இறுகிவிட்டன. குழப்பத்தில் என்ன செய்வது என்று தெரியாமல் நின்றார்கள். சில வினாடிகளில் எல்லாரும் வேகமாக ஓடி ஒளித்தார்கள். எனது நண்பி அவளுடைய மாமாவுடன் வீட்டின் பின்புறத்துக்கு ஓடினாள். அந்த நேரம் பார்த்து, மழை சோவென்று பொழிந்துகொண்டிருந்தது. பயத்துடன் இருவரும் முகக்கவசத்தை அணிந்துகொண்டு மழையில் நனைந்தபடி காத்திருந்தார்கள். நண்பியின் தம்பி அலுமாரிக்குள் ஒளிந்து கொண்டான். நண்பியின் பக்கத்து வீட்டு நண்பி மேசைக்கு கீழே. பெரியவர்கள் சிலர் ஒன்றுமே நடவாதது போல தொலைக்காட்சி பார்த்தார்கள், அல்லது நடித்தார்கள். நண்பியின் அம்மா சமையலறையில். சமைக்கிறாவாம்.

கதவில் மேலும் இரண்டு பலமான அடி விழுந்தது நண்பிக்குக் கேட்டதாம். 'பயத்தில் என் உடல் பதறியது. இதயம் அம்மாவின் Grinder மாதிரி வேகமாக அடித்தது காதுக்குள் கேட்டது' என்றாள் என் நண்பி. காவல்துறையினர் வந்து என்ன செய்வார்கள்? என்ன சொல்வார்கள்? என்று நினைத்து அவளின் இதயம் துடித்துக் கொண்டிருந்தது. அவள் அச்சத்துடன் காத்திருந்தாள். பயத்தில் அழுகை வந்தது. 'நல்ல காலம், மழை பெய்ததால் நான் அழுதது எனக்கு மட்டுமே தெரியும்' என்றாள் அவள்.

நண்பியின் அப்பா கதவருகே நின்று கதவைத் திறக்காமல் காது கொடுத்துக் கேட்டார். பழக்கமான ஒரு குரல் கேட்டது. கதவைத் திறந்தார். வாசலில் எழுந்த வெடிச்சிரிப்பு வீட்டுக்குப் பின்னால் இருந்த நண்பிக்குக் கேட்டது. தமிழ்ப் படங்களில் வருவது போல சிரிப்புப் போலீஸ் வந்திருக்கிறதோ? என்று நண்பி நினைத்தாள். சிரிப்போடு கைதட்டலும் கேட்டது. நண்பி அவளுடைய மாமாவுடன் வீட்டினுள் சென்றாள். கதவை உடைப்பது போலத் தட்டியது காவல்துறையினர் இல்லை, நண்பியின் மாமியும் இரண்டு பிள்ளைகளும்.

இப்போது 20 பேர்.

ஒளித்திருந்த எல்லோரும் சிரிப்புக் கேட்டு ஒவ்வொருவராக வெளியே வந்தனர். பலருக்கும் முகம் வியர்த்திருந்ததாம்.

மாமி, வீட்டின் அழைப்பு மணியை அழுத்தி இருக்கிறார். ஆனால் யாரும் கதவைத் திறக்கவில்லை. அதனால் தான் நண்பியின் மாமி கதவை கடுமையாகத் தட்டியிருக்கிறார்.

அழுதுகொண்டு ஒளித்திருந்த நண்பி, சிரித்துக்கொண்டு இந்தக் கதையைச் சொன்னாள்.


மாமி தான் வருவதாகத் தொலைபேசியில் சொல்லியிருக்கலாம். களவு செய்யும்போது சிலருக்குத்தான் மூளை வேலை செய்யும்.

இப்படி பல வீடுகளிலும் ஒன்றுகூடல்கள், விருந்துகள் நடந்திருக்கின்றன. இவற்றைச் சொல்லிப் பெருமைப்படமுடியுமா?

நாங்கள் எல்லோரும் கொரோனா ஆபத்தை ஒன்றாகவே எதிர்கொள்கிறோம். இப்படிச் சிக்கல்கள் வரும்போது, நாங்கள் நம்பிக்கையுடன் இருக்கவேண்டும். பாதுகாப்பு அறிவுரைகளை அனைவரும் பின்பற்றுவோம். நாங்கள் எல்லோரும் பாதுகாப்பாக இருப்பதை ஒரு கடமையாகவே பார்க்கவேண்டும். நாங்கள் எங்களைப் பாதுகாப்பாக வைத்திருந்தால், எங்கள் குடும்பத்தையும் பாதுகாப்பாக வைத்திருக்கலாம் என்பதை மறவாதிருப்போம்.

ஒரு நாள், எங்களுடைய வாழ்வு முற்றிலுமாக வழமைக்குத்திரும்பும்.

எந்தச் சூழ்நிலையையும் புன்னகையோடு
எதிர்கொள்வோம். மகிழ்ந்திருப்போம்.



aruvi.r@thaiveedu.com



Mega Financial Group
WE ARE PROVIDING A LIFETIME
FAMILY PROTECTION
SAVE BIG
ON COVERAGE FOR YOUR MOST PRECIOUS ASSET
OUR PRODUCTS AND SERVICES
Life Insurance products
Critical Illness Insurance
Disability Insurance
Dental & Drug Insurance
Travel Insurance
Non-Medical Insurance
Mortgage Insurance
RRSP's Investments
RESP-Education Saving Plan
Final Expense Products
(Through Funeral Homes)
INDUSTRIAL ALLIANCE
Canada Life
Sun Life Financial
UL Mutual
LaCapitale
Assumption Life
RBC Insurance
Empire Life
Desjardins
Manulife Financial
www.megafinancial.ca
RAJ NADARAJAH
President & CEO
Dir: 416-666-1120
raj@megafinancial.ca
Office: 416-293 5559 • Fax: 416-293 9409
PH28 -4168 Finch Ave. E., Scarborough, ON., M1S 5H6

# ஊடக அறம்

- சுப்ரமணியம் ஜெயசீலன்

இந்த பிரபஞ்சத்தில் நமக்கு தெரிந்த உயிரினங்களில் மனிதர் தனித்துவமாக திகழ்வதற்கு ஒரு சில ஆற்றல்கள் அல்லது நாகரீக வளர்ச்சிப்படிகளை ஏதுக்களாக சுட்டிக்காட்ட முடியும். அந்த வகையில் மனிதரின் தொடர்பாடல் திறன் மண்ணுலகின் ஏனைய ஜீவராசிகளைவிடவும் தன்னை மிளிரச் செய்யக்கூடிய தகமைகளில் ஒன்றாக கூறமுடியும். தொழில்நுட்ப விஞ்ஞான வளர்ச்சி காலமாற்றம், நாகரீக முன்னேற்றம் என்பனவற்றின் அடிப்படையில் இந்த தொடர்பாடல் இன்றளவிலும் மேம்பட்டு வருகின்றது என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது. எனினும், இந்த வளர்ச்சி ஆரோக்கியமானதா? சமூகத்திற்கு தகவல்களை வழங்கும் ஊடங்கள் செய்தி அறிக்கையிடலை எவ்வாறு கையாள்கின்றன? என்பது பல்வேறு கோணங்களில் ஆராயப்பட வேண்டிய பேசுபொருளாகவே காணப்படுகின்றது.

செய்தி ஊடகங்கள் பொதுவாகவே இந்த மானுட சமூகத்தின் மிகப் பெரிய தாக்கச் சக்திகளில் ஒன்றாக திகழ்கின்றது என்றால் அது பிழையாகாது. நாட்டில், அரசியல் பரப்பில், மாணவர் சமூகத்தில், இளைஞர் யுவதிகள் மத்தியில் என எந்தவொரு பரப்பிலும் செய்திகள் மிக வலுவான ஆளுமையை செலுத்தக்கூடியவை. இவ்வாறான ஓர் பின்னணியில் செய்தி அறிக்கையிடப்படும் போது மிகைப்படுத்தியோ, பரபரப்பூட்டியோ அல்லது பக்கச் சார்பான விதத்திலோ செயற்படுவதானது ஓர் சமூகத்துரோகச் செயலாகவே கருதப்பட வேண்டியுள்ளது.

செய்தி அறிக்கையானது துல்லியமானதாகவும், பக்கச்சார்பற்றதாகவும், செம்மையானதாகவும், எளிமையானதாகவும் இருக்க வேண்டுமென கூறப்படுகின்றது. எனினும், இன்றைய காலத்தில் எந்தவொரு ஊடக தளத்தினை எடுத்துக்கொண்டாலும் தங்களது செய்தி அறிக்கைகளை ஜனரஞ்சமாக்கும் பகீரதப் பிரயத்தனங்களில் ஊடக நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளதனால் செய்தி அறிக்கையிட ஒழுக்கவிதிகள் மறந்து அல்லது மழுங்கடிக்கச் செய்யப்பட்டு வருகின்றதனை நாம் கண்கூடாக நாள்தோறும் காண முடிகின்றது.

ஊடகங்களில் பரபரப்பூட்டக்கூடிய செய்தி அறிக்கையிடல் அல்லது தொடர்பாடல் உத்திகள் இன்று நேற்று உருவானவை அல்ல. வரலாற்றுக் காலம் முதலே இந்த பிழையான செல்நெறி காணப்படுவதனை மறுப்பதற்கில்லை. பண்டைய ரோம பேரரச காலங்களிலும் தகவல் பரிமாற்றத்தின் போது பரபரப்பூட்டக்கூடிய வகையில் திரிபுபடுத்தப்பட்ட தகவல்களை வெளியிடும் ஒரு பாங்கினை காண முடிந்துள்ளது. அமெரிக்காவின் நியூயோர்க் பல்கலைக்கழகத்தின் ஊடகத்துறை பேராசிரியர் மிச்சல் ஸ்டீபென்ஸ் செய்தியின் வரலாறு என்னும் பிரபல நூலில் இந்த விடயம் பற்றி சுட்டிக்காட்டுகின்றார். ரோம ஆட்சிக் காலத்தில் நாம் இன்று பயன்படுத்தும் வர்த்தமானி அறிவித்தல் போன்றதொரு அறிவிப்புப் பலகையில் தகவல்களை பரிமாறும் முறைமை காணப்பட்டதாகவும், அப்போதே தகவல்கள் திரிபுபடுத்தி வெளியிடும் கலாச்சாரம் உருவாகியிருந்தது எனவும் அவர் குறிப்பிடுகின்றார். 16ம், 17ம் நூற்றாண்டுகளில் ஒடுக்கப்பட்ட மக்களிடம் செய்தியை கொண்டு சேர்க்கும் நோக்கில் செய்தி அறிக்கையிடலில் இந்த உணர்வுபூர்வமான பரபரப்பூட்டும் உத்தி பயன்படுத்தப்பட்டது.

கால மாற்றத்துடன் அதிகளவு நேயர்கள், வாசகர்கள், சந்தாதாரர்களைக் கொண்ட ஊடக நிறுவனங்களிலும் அதிக லாபமீட்டும் கலாச்சாரமொன்று உருவாகியுள்ளது. குறிப்பாக இணைய ஊடகமாகவோ அல்லது ஒளி, ஒலி மற்றும் அச்சு ஊடகமாக இருந்தாலும் சரி வாசகர் வட்டத்தினை அடிப்படையாகக் கொண்டே அந்த ஊடக நிறுவனத்தின் செய்தி அறிக்கை தரப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுகின்றது. சுருங்கக்கூறின் செய்தியின் உட்கிடக்கை அது சொல்லப்படும் பாங்கினை விடவும் ஜனரஞ்சகமான வர்த்தக பெறுமானம் சேர்க்கப்படும் செய்தி அறிக்கையிடல்கள் ஊடகப் பரப்பில் முன்னிலை வகிக்கும் ஒரு நிலைமை அறிந்தோ அறியாமலோ உருவாக்கப்பட்டுள்ளது.

80களில், 90களில் செய்தியின் தரத்திற்கும் நம்பகத்தன்மைக்கும் துல்லியத்திற்கும் கொடுக்கப்பட்டு முக்கியத்துவம் இன்று இழக்கப்பட்டு, ஜனரஞ்சகமான அல்லது வர்த்தக பெறுமதியை அடிப்படையாகக் கொண்ட ஒரு துறையாக செய்தி அறிக்கையிடலும் மாற்றம் பெற்றுள்ளது. ஒரு செய்தியை எத்தனை பேர் பார்வையிடுகின்றார்கள் அல்லது செவிமடுக்கின்றார்கள் என்ற அடிப்படையில் ஊடக நிறுவனங்களின் வருமானம் தங்கியுள்ளதே இந்நிலைக்குக் காரணமாகும்.

ஊடக நிறுவனங்கள் தற்பொழுது காத்திரமானதும் சமநிலையானதுமான செய்தி அறிக்கையிடல் நெறிமுறையிலிருந்து விலகி மக்களின் உணர்வுகளை தூண்டி, அதனை சந்தைப்படுத்தி, லாபமீட்டிப் பிழைப்பு நடத்த வேண்டிய போட்டி மிகு துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன என்றால் அது மிகைப்பட்டுவிடாது.

அண்மைக் காலமாக இலங்கையின் ஊடகப்பரப்பில் காணக் கிடைத்த செய்திகளின் பெறுமானம் வருத்தமளிக்கும் வகையிலேயே காணப்படுகின்றது. வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை, இணைய வழி ஊடகங்கள் ஒன்றுக்கு ஒன்று தாங்களும் சளைத்தவர்கள் அல்ல என்ற வகையில், சமூக பிரக்ஞையை உதாசீனம் செய்து செய்தி அறிக்கையிடலில் ஈடுபடுகின்றனவா என்ற சந்தேகம் எழும் அளவிற்கு அண்மைக்கால செயற்பாடுகள் காணப்படுகின்றன.

ஊடக நிறுவனங்களுக்கும் இந்த சமூகத்தில் சில தார்மீக கடப்பாடுகள் காணப்படுகின்றன. ஒரு மக்கள் சமூகத்தின் போக்கினையே மாற்றக்கூடிய, அவர்கள் மீது மிகப் பெரிய தாக்கத்தைச் செலுத்தும் வல்லமை வெகுஜன ஊடகங்களுக்கு உண்டு. எனவே செய்தி அறிக்கையிடலின் போது ஊடகங்கள் மிகுந்த சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டிய விடயங்களில், தெரிந்தோ தெரியாமலோ புகழ்பூத்த ஊடக முன்னோடிகள் முதல் கத்துக்குட்டிகள் வரையில் மெத்தனப் போக்கை பின்பற்றுகின்றார்களா அல்லது பொருளாதார செழுமையை அளவுகோலாக கருதும் இந்த சமூக ஓட்டத்தில் இவை வேண்டுமென்றே உதாசீனம் செய்யப்படுகின்றதா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

சமூக ஊடகங்கள் முதல் தொலைக்காட்சி, வானொலி மற்றும் பத்திரிகை என்ற அனைத்து வடிவங்களிலும் செய்தி அறிக்கையிடப்படும் போது பரபரப்பூட்டக்கூடிய செய்திகளுக்கு அதீத முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. அண்மையில் இலங்கையில் இடம்பெற்ற தனி மனித அந்தரங்கத்துடன் தொடர்புடைய சம்பவங்கள் குறித்தான செய்திகளை நாம் நோக்கின் இந்த விடயம் வெளிச்சமாகும்.

பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் பெண் ஒருவரை கொலை செய்த விவகாரம் இலங்கை ஊடகங்களில் மிதமிஞ்சிய அளவில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. அந்த சம்பவத்தின் நியாய அநியாயங்கள் பற்றிய வாத விவாதங்களை நாம் இங்கு சீர்தூக்கிப் பார்க்க வேண்டியதில்லை. எனினும், சமூக ஊடகங்களிலும் பிரல் யமான தொலைக்காட்சிகளிலும் இந்த செய்திக்கு வழங்கப் பட்ட முன்னுரிமை அதற்காக ஒதுக்கப்பட்ட நேர அளவு, சமூ கத்தை எந்த தளம் நோக்கி இந்த ஊடகங்கள் நகர்த்த முயற் சிக்கின்றன என்பதனை புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். இந்த சம்பவம் இடம்பெற்ற நான்கு ஐந்து நாட்களாக பிரதான சிங்கள தொலைக்காட்சி செய்தி ஊடகங்களில் மொத்த நேரத்தில் குறிப்பிடத்தக்களவு நேரம் இந்த கொலை குறித்த செய்திக்கு ஒதுக்கப்பட்டதுடன், சமூக ஊடகங்களிலும் இந்த சம்பவத்திற்கு மிதமிஞ்சிய அளவில் முக்கியத்துவம் வழங்கப்பட்டிருந்தது.

இவ்வாறான செய்தி அறிக்கையிடல்கள் சமூகத்தை சீர்படுத்துவ தற்கு மாறாக சமூகத்தை மேலும் பிறழ்வான ஓர் நிலைக்கு இட் டுச் செல்லும் என்பதே நிதர்சனம். ஏனெனில் இவ்வாறான சம்ப வங்களை திரும்ப திரும்ப காண்பித்து பிழையான வழியில் செல்ல துளியும் எண்ணாதவர்கள் மத்தியில் கூட இவ்வாறான செய்தி அறிக்கையிடல் பிழையான எண்ணப்பாடுகளை விதைக் கும் என்பதே உளவியல் ஆய்வாளர்களின் கருத்தாக காணப்ப டுகின்றது. சினிமாக்களை பார்த்து குற்றவாளிகளாக மாறியவர்கள் பற்றி நாம் கடந்த காலங்களில் கேள்விப்பட்டதுண்டு. அதே போன்று இந்த சம்பவத்தை நாடகப் பாங்கில் செய்தி அறிக் கையாக வெளியிட்டு குற்றவாளிகளை ஹீரோவாக்கும் முனைப்புக் களில் பல ஊடகங்கள் கூடுதல் சிரத்தை எடுத்துக் கொண்டிருந் தன.
இணைய வழி ஊடகங்களும் தனது தளத்தின் பார்வையாளர் எண் ணிக்கையை கூட்டும் நோக்கில் சில மூன்றாம் தரமான அணுகு முறைகளை பின்பற்றி வருகின்றன, குறிப்பாக அநேகமான செய்தி அறிக்கைகளின் தலைப்பிற்கும் அவற்றின் உள்ளடக்கத் திற்கும் எந்தவிதமான பொருத்தப்பாடும் இருப்பதே இல்லை. மிக வும் உன்னிப்பாக அவதானித்தால் அந்த தலைப்பு செய்தியின் எந்தவொரு விடயத்துடனும் தொடர்புபடுத்தவே முடியாத வகையி லும் சில சந்தர்ப்பங்களில் காணப்படுகின்றன.

கூகுள் அட்ஸ் (Googleads), யூடிப் சந்தாதாரர்கள் (YouTube sub- scribers), பார்வையாளர்கள் (Viewers) மூலம் பணமீட்ட முயற்சிக் கும் பெரும்பாலான ஊடகங்கள் செய்தி அறிக்கையிடும் போது உண்மை யதார்த்தங்களை மழுங்கடிக்கச் செய்து பார்வையா ளர்களின் உணர்வுகளைத் தூண்டி பிழைப்பு நடத்துகின்றன. தர மான ஊடக நிறுவனங்கள் இல்லை எனக்கூறவில்லை. எனினும், பெரும்பாலானவை இந்த சந்தைப்படுத்தல் பொறியில் சிக்கி சுயத்தை இழந்து பரபரப்பூட்டும் செய்தி அறிக்கைகளை வெளி யிடுகின்றன.

பிந்திய செய்திகளை முந்திக்கொண்டு வழங்குவதில் 'நாங்கள் தான் நம்பர் வன்' என்ற மாயையில் அநேகமான சமூக வலைத் தளங்களும் ஏனைய ஊடகங்களும் அடிப்படை ஊடக நெறிக ளுக்கு பிறழ்வாக செய்தி அறிக்கையிடல்களை மேற்கொள்கின் றன. உதாரணமாக சம்பவம் ஒன்றுடன் தொடர்புடையவரின் இன, மத, அடையாளங்களை தலைப்பில் எழுதி அந்த ஒட்டுமொத்த சமூகத்தையும் காயப்படுத்தி சுகம் காணும் ஊடக கலாச்சாரம் உருவாகியுள்ளது. சமூக ஊடகத்தில் ஓர் செய்தியோ அது சார்ந்த புகைப்படமோ அல்லது காணொளியோ வெளியிடப்படும் போது பின்பற்றப்பட வேண்டிய அடிப்படை ஊடக ஒழுக்க விதிகள் பின்பற்றப்படுவதேயில்லை எனலாம். ஒரு விபத்துச் சம்ப வம் இடம்பெற்றால் அது குறித்த தொகுக்கப்படாத காட்சிகளை முந்திக்கொண்டு வெளியிட்டு சோக ரசத்தை விற்றுப் பிழைக்கும் ஊடகங்களே இன்று ஏராளம் காணப்படுகின்றன. எதனை காண் பிக்க வேண்டும், எதனை காண்பிக்கக் கூடாது என்ற வரையறை கள் ஊடகவியலாளர்களும் ஊடக நிறுவனங்களும் தெரிந்திருக்க வேண்டும். இதனையே செய்தி தொகுப்பு (News editing) எனக் கூறப்படுகின்றது.

வீட்டு வன்முறைகள், தகாத உறவு, போதைப் பொருள் கடத்தல், பாலியல் வன்கொடுமைகள் போன்ற சம்பவங்கள் தொடர்பில் செய்தி அறிக்கையிடும் போது குற்றம் சுமத்தப்பட்ட நபர் அல் லது நபர்கள் நீதிமன்றில் குற்றவாளி என நிரூபிக்கப்படும் வரை யில் அவர்களை ஊடகங்கள் குற்றவாளிகளாக சித்தரிப்பது ஒரு சமூக விரோத செயலாகவே நோக்கப்பட வேண்டும். எனினும், இலங்கை ஊடகங்களில் சந்தேக நபர்களுக்கு நீதிமன்றம் தண் டனை விதிக்கப்பட முன்னதாகவே ஊடகங்கள் தண்டனை வழங் கும் ஒரு மரபினை அண்மைக்காலமாக காணமுடிகின்றது. மொழி ஆளுகை, சொற் பிரயோகம், சந்தேக நபர்களை வெளி உல கிற்கு அறிமுகம் செய்யும் விதம் உணர்வுபூர்வமானது என்பத னால், இந்த விடயங்களில் ஊடகங்கள் மிகுந்த கவனம் செலுத்த வேண்டியது அவசியமானது.

முச்சக்கர வண்டி சாரதி ஒருவர், 10 மில்லியன் ரூபா பணப் பையை தனது வண்டியில் விட்டுச் சென்ற உரிமையாளருக்கு மீள ஒப்படைத்தால், அதனை செய்தி அறிக்கையிட்டு சமூகத்திற்கு முன்னுதாரணத்தை உருவாக்கும் ஆரோக்கியமான ஊடக கலாச் சாரம் மிக வரையறுக்கப்பட்டதாக காணும் அதேவேளை, தனி மனித உறவுகள், பாலுறவு போன்ற விடயங்களை சுவைபட வாச கர்களை போதையில் திளைக்கச் செய்யும் செய்தி அறிக்கையி டலையே இன்றைய அநேக ஊடகங்கள் பிரதான உத்தியாக பின் பற்றுகின்றன.

சமூகத்தின் போக்கினை நிர்ணயம் செய்யக்கூடிய, ஆட்சி மாற்றம் செய்யக்கூடிய, தனி மனிதர்களில் மாற்றங்களை செய்யக் கூடிய அபரிமிதமான திறன் கொண்ட ஊடகங்கள், பொருளாதாரத்தை முதன்மைப்படுத்தி செய்திகளை சந்தைப்படுத்துவதில் தரங் கெட்டு விட்டனவா என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது.

ஓர் அராசங்க அதிகாரி கையூட்டல் பெறும் போது அந்த விடயம் அம்பலப்படுத்த வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது. அது ஊடகங்களின் தார்மீக பொறுப்புகளில் ஒன்றாகும். எனினும், அவர் எவ்வாறு கையூட்டல் பெற்றுக் கொண்டார் என்பதனை சுவைபட விபரிப்பது குற்றவாளிகளை பிடிபடாமல் எவ்வாறு குற் றம் இழைப்பது என்பதற்கான ஒரு பாடமாக அமையுமே தவிர குற்றச் செயல்களை குறைக்காது.

இரத்தினபுரி கஹாவத்தை பிரதேசத்தில் பெண்கள் தொடர் கொலை செய்யப்பட்ட சம்பவங்களின் போது பாடசாலை மாண வன் ஒருவன் குற்றவாளி என ஊடகங்கள் முந்திக்கொண்டு செய்தி அறிக்கையிட்டதும், பின்னர் உண்மையான குற்றவாளி வேறு ஒருவர் என்பது விசாரணைகளின் மூலம் புலனாகியிருந்த மையும் ஊடகங்களின் தொழிற் போட்டியின் ஆபத்து நிலையை விபரிக்கும் சிறந்த உதாரணமாக குறிப்பிட முடியும்.

ஏனெனில், 'குற்றவாளி' என தலைப்புச் செய்திகளில் வெளிச்சம் போட்டுக் காட்டும் ஊடகங்களினால் ஏதெனும் தவறு நடந்திருந் தால், அதனை கடைசி பக்கத்தில் சிறிய செய்தியாக வெளியிட்டு, 'பிழை திருத்தம்' செய்துகொள்கின்றன. எனினும் இதனால் பாதிக் கப்பட்ட நபருக்கு ஏற்பட்ட இழப்பு, இவ்வாறான பதில் செய்திக- ளின் மூலம் ஈடு செய்ய முடியாதது என்பதனை ஊடக நிறுவனங் கள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஊடகங்கள் செய்தி அறிக்கையிடும் போது மிகைப்படுத்திய பக் கச்சார்பான செய்திகளை வெளியிட்டு வருவதாக பரவலாக குற் றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுவருகின்றன. பரபரப்பூட்டக்கூடிய செய்தி அறிக்கையிடல்களினால் ஊடக நிறுவனங்கள் கடந்த சில ஆண்டுகளாக மக்களின் நம்பிக்கையை இழந்து வரும் நிலையை அவதானிக்க முடிகின்றது. எனவே ஊடக நிறுவனங்களும் ஊடக வியலாளர்களும் மக்களின் நம்பிக்கையை கட்டியெழுப்பக்கூடிய வகையில் செய்திகளை நம்பகமானதாகவும், பக்கச்சார்பற்றதும் துல்லியமானதுமான வகையில் வெளியிடுவதற்கு கூடுதல் முன் னுரிமை அளிப்பதன் மூலம் இந்த பரபரப்பூட்டக்கூடிய நெறிபி றழ்வான செய்தி அறிக்கையிடல் கலாச்சாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும் என்பது உறுதி.



jeyaseelan.s@thaiveedu.com


1ST MORTGAGE SPECIALS
5 Year Variable 2.35%
5 Year Fixed 3.24%
*Some Conditions Applied, Please Call For More Details
2ND MORTGAGE SPECIALS
Up To 80% in GTA. 75% on other major cities.
No Income Verification.
No Minimum Credit Score.
Quick Closing
Rates from 7.99% to 12.99%
-digi Media Creations-
BonaFide Mortgage Solutions Inc.
the true freedom...
Brokerage Lic# 10216
Canada Trust
Scotiabank
STREET CAPITAL
FIRST NATIONAL FINANCIAL LP
MCAP
ICICI Bank
MERIX
Suren Nathan AMP
Mortgage Broker
License# M08004479
Dir. 416-436-1111
Office. 416-548-7475 Fax: 416-548-7496
suren@bonafidemortgage.ca,
7 Eastvale Drive,Unit 203, Markham, ON, L3S 4N8

# வாசிப்புக் கற்பித்தலுக்கு இன்றியமையாத எழுத்தறிவு எண்ணக்கருக்கள்

- என். கிருஷ்ணகுமார்

## அறிமுகம்:

உலகில் பல வாசிப்புக் கற்பித்தல் அணுகுமுறைகள் தோன்றியுள்ளன. எனினும் இவை காலத்திற்குக் காலம் செய்யப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் மாற்றமடைந்து வந்துள்ளன என்பதை அவதானிக்கலாம்.

வாசிப்பு என்பது ஒரு சிக்கலான அறிகைச் செயன்முறையாகும். எனவே பிள்ளைகளிடத்தில் வாசிப்பு ஆற்றலை ஏற்படுத்த கடும் பிரயத்தனமெடுத்து கற்பிக்க வேண்டும் எனக் கூறப்படுகின்றது. அதேபோல இது ஒரே நாளில் சாத்தியமாகக்கூடிய விடயமுமன்று. இதன் காரணமாகவே ஆசிரியர்கள் எவ்வளவு பிரயத்தனமெடுத்தாலும் பல சந்தர்ப்பங்களில் வகுப்பறையிலிருக்கும் எல்லா பிள்ளைகளையும் வாசிக்கச் செய்ய முடியாமலிருக்கிறது.

அதிகமான பிள்ளைகள் அவர்களுடைய வகுப்பு மட்டத்திற்குரிய வாசிப்பு ஆற்றலைவிட குறைவான ஆற்றலையே கொண்டிருக்கிறார்கள் என ஐக்கிய அமெரிக்காவில் 2013 ஆண்டு National Assessment of Education Progress இனால் செய்யப்பட்ட ஆய்வு குறிப்பிடுகிறது. குறிப்பாக, நான்காம் ஆண்டில் கற்கும் 65%ஆன பிள்ளைகள் வகுப்பு மட்டத்தை விட குறைந்த வாசிப்பு ஆற்றலையே கொண்டிருக்கின்றனர் என மேலும் குறிப்பிடுகின்றது. இவ்வாறு வகுப்பு மட்டத்தைவிட குறைந்த வாசிப்பு ஆற்றலுடைய பிள்ளைகள் தரம் 8ல் 64%ஆக உள்ளனர் என இவ் ஆய்வு மேலும் குறிப்பிடுகின்றது.

எந்தவொரு பிள்ளையும் கல்வியில் பின்தங்கி இருக்கக்கூடாது என்பதனை உறுதிப்படுத்துவதற்கான தனியான சட்டத்தையும் (No Child Left Behind Act), 99% எழுத்தறிவு வீதத்தையும் கொண்ட ஐக்கிய அமெரிக்காவிலேயே மூன்றில் ஒரு பகுதி பாடசாலைப் பிள்ளைகள் வகுப்பு மட்டத்திற்குத் தேவையான வாசிப்பு ஆற்றலைக் கொண்டிருக்கவில்லை என ஆய்வுகள் கூறுகின்றன. எனவே இந்நிலைமை வாசிப்புப் பற்றி மிகவும் குறைந்த கரிசனையையுடைய இலங்கை போன்ற நாடுகளில் மிகவும் அதிகமாக இருக்க வாய்ப்புகள் இருக்கின்றன. எனினும் இதுவரை வாசிப்பை முன்னிலைப்படுத்திய ஆய்வுகள் எதுவும் நடைபெறவில்லையாயினும் தேசிய ரீதியில் தேசிய பரீட்சைகள் திணைக்களத்தினால் நடத்தப்படும் பரீட்சைப் பெறுபேறுகளுக்கான மதிப்பாய்வுகளின்படி பிள்ளைகளின் வாசிப்புத் திறன் வகுப்பு மட்டங்களுக்கு உரித்தான அளவைவிட குறைவாகவே இருக்கிறது என்ற முடிவுக்கு வரலாம்.

வாசிப்புப் பற்றி உலகளாவிய ரீதியில் செய்யப்பட்டுள்ள ஆய்வுகள் பல புதிய கற்பித்தல் உத்திகளை பரிந்துரைக்கின்றன. இவை விஞ்ஞான பூர்வமான ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்ட வாசிப்புக் கற்பித்தல் போதனையையே முன்னிலைப்படுத்துகின்றன. மிகவும் முக்கியமாக National Reading Panel தனது ஆய்வில் எந்தவொரு எழுத்தறிவுக் கற்பித்தலும் குறைந்தபட்சம் பிரதானமாக ஐந்து எழுத்தறிவுக் கூறுகளைக் கொண்டிருக்க வேண்டும் என பரிந்துரைக்கின்றது. அவையாவன ஒலிகள் பற்றிய விளக்கம், எழுத்தொலி, சரளமான வாசிப்பு, சொற்களஞ்சியம் மற்றும் கிரகித்தல் என்பன ஆகும். இவற்றுடன் எழுத்துச் செயற்பாடுகளையும் ஒரு கூறாகச் சேர்த்துக்கொள்ள முடியும்.

## ஒலிகள் பற்றிய விளக்கம் (Phonological awareness):

வாசிப்புக் கற்பித்தலில் உள்ள ஐந்து எழுத்தறிவுக் கூறுகளில் மிகவும் முக்கியமான கூறுதான் ஒலிகள் பற்றிய விளக்கமாகும். நாம் பேசும் மொழியில் காணப்படும் சத்தங்களை (Phoneme), ஒன்றுசேர்ப்பதற்கும் (Blending), சத்தங்களை சிறிய பகுதிகளாகப் பிரிப்பதற்கும் (Segmending), அவற்றை மாற்றிக் கையாளுவதற்குமான (Manupulate) ஆற்றலையே ஒலிகள் பற்றிய விளக்கம் என்று கூறுகிறோம். ஒலிகளைச் சரியாக இனங்காண கற்றுக்கொள்கின்ற பிள்ளைகள் எழுத்துக்களை இலகுவாக இனங் கண்டுக்கொள்ளவும் எழுத்துக்களைச் சேர்த்து சரியாக வாசிக்கவும் கற்றுக்கொள்வார்கள் என ஆய்வுகள் கூறுகின்றன.

பல சிறிய சத்தங்களின் (Phoneme) சேர்க்கைதான் நாம் பேசுகின்ற மொழி. நாம் பேசும்போது பல சிறிய சத்தங்களை மிக வேகமாக ஒன்றுசேர்த்து சொற்களாகப் பேசிவிடுகிறோம். படம் என்ற சொல்லை உதாரணமாக எடுத்துக்கொள்வோம்.

ப் + அ + ட்+ அ + ம் = படம் என்று கூறுகிறோம். இச்சொல்லில் ஐந்து ஒலியன்கள் காணப்படுகின்றன. வாசிப்புக் கற்றலில் பிள்ளைகள் இவ்வாறு ஒலிகளைச் சேர்த்து சொற்களாக்கும் ஆற்றலில் பாண்டித்தியமடைய வேண்டும். குறிப்பிட்ட இவ்வாற்றல் எழுத்துக்களை வேகமாக ஒன்றுசேர்த்து சொற்களாக வாசிக்கும் ஆற்றலை விருத்தி செய்ய உதவுகிறது.

அதேபோல நாம் பேசுகின்ற மொழியில் காணப்படும் சொற்களை சிறிய ஒலிகளாகப் பிரிக்கும் ஆற்றலை விருத்திசெய்துக்கொள்வது பிழையின்றி எழுதுவதற்குத் துணைபுரிகின்றது. உதாரணமாக ஆடு எனும் சொல்லை எடுத்துக்கொள்வோம். ஆடு = ஆ + ட் + உ இவ்வாறு சொற்களை மிகச் சிறிய சத்தங்களாகப் பிரிக்கின்ற ஆற்றல் பிள்ளைகளிடத்தில் வளர வேண்டும்.

ஒரு சொல்லில் காணப்படும் முதல் ஒலி, இடையொலி, கடையொலி என்பனவற்றை மாற்றிக் கையாளுதல், இறுதியொலியை மாற்றுதல், முதல் ஒலியை நீக்கிப் பயன்படுத்தல் போன்றன ஒலிகளை மாற்றிக் கையாளுதல் என்று சொல்லப்படும்.

## எழுத்தொலிகள் (Phonics):

வாசிப்புக் கற்பித்தல் போதனையானது எழுத்தொலிகள் கற்பித்தலை மையமாகக் கொண்டே உருவாக்கப்படுகின்றது. எழுத்தொலிகள் என்பதை ஒலி வடிவத்தையும் வரி வடிவத்தையும் ஒன்றாக இணைப்பது அல்லது ஒலி வடிவத்திற்கும் வரி வடிவத்திற்குமான தொடர்பு ஆகும். அதாவது எழுத்துக்களுக்குரிய (வரிவடிவம்) சரியான சத்தத்தை இனங்கண்டு வாசிப்பது என்று எளிமையாகக் கூறலாம். பிள்ளைகள் தனியெழுத்துக்களை இனங்கண்டு வாசிப்பதில் நன்கு பரிச்சியமடைவது வாசிப்பிற்கு அடிப்படையானதாகும். நன்கு முறைமைப்படுத்தப்பட்ட எழுத்தொலிப் போதனை அல்லது எழுத்துக் கற்பித்தல் போதனையே பிள்ளைகளின் வாசிப்புக் கற்றலில் வெற்றியைத் தரும் என National Reading Panel Report குறிப்பிடுகின்றது.

பிள்ளைகள் தரம் ஒன்றிலேயே வாசிப்பினைக் கற்றுக்கொள்வதற்கு,



எழுத்தொலிகளில் பாண்டித்தியம் பெற்றுக்கொள்ள வேண்டியது மிக அவசியமாகும். எழுத்துக்களுக்கும் சத்தங்களுக்குமான தொடர்பு, அகர வரிசையில் காணப்படும் விதிமுறைகள் (Alphabet principales) என்பன தரம் ஒன்றிலேயே கற்பிக்கப்பட வேண்டியன வாகும். எழுத்தொலிகள் பற்றிய போதனைக் குறைபாடுகள் வாசிப் பில் குறைபாடுடைய பிள்ளைகளை உருவாக்கிவிடும்.

பிள்ளைகளிடத்தில் எழுத்துக்களை இனங்காணும் ஆற்றல் நன்கு விருத்தியடைந்தாலே குறிவிலக்கல் (Decoding) செய்யும் ஆற்றல் விருத்தியடையும். எழுத்துக்களைச் சேர்த்து சொற்களாக வாசித் தல், சொற்களைப் பிரித்து எழுதுதல், கற்ற எழுத்துக்களைக் கொண்ட வாசிப்புப் பகுதி (Decodables) மற்றும் சொற்பரிச்சியம் (Automaticity) என்பன மிகவும் முக்கியமான பயிற்சிகளாகும்.

## சரளமான வாசிப்பு (Fluency):

சளமான வாசிப்பு என்பது மிகவும் முக்கியமான ஆற்றலாகும். சரி யாகவும் (பிழையின்றி), உரிய வேகத்துடனும், பொருத்தமான தொனியேற்ற இறக்கத்துடனும் வாசிப்பதையே சரளமான வாசிப்பு என்று கூறலாம். உரிய வேகம் என்பது சர்வதேச நியமங்களின்படி தரம் ஒன்றின் முடிவில் நிமிடத்திற்கு 60 சொற்களையேனும் வாசிக்க வேண்டும் என்பதாகும். சரளமான வாசிப்பானது பிள்ளை கள் வாசிக்கும் பகுதியை முழுமையாக விளங்கிக்கொள்ள உத வும்.

சரளமாக வாசிக்கும் ஆற்றலையுடைய பிள்ளைகள் வாசிப்பில் ஈடுபடும்போது குறிவிலக்கல் செய்வதில் அவதானம் செலுத்தமாட் டார்கள். அவர்கள் தாம் வாசிக்கும் பகுதியின் பொருளை அனு பவிப்பதிலேயே அவதானம் செலுத்துவார்கள்.

## சொற்களஞ்சியம் (Vocabulary):

சொற்களஞ்சிய விருத்தி என்பது இன்னொரு மிக முக்கியமான எழுத்தறிவுக்கூறாகும். பிள்ளைகள் கல்வியில் வெற்றியடைய சொற்களஞ்சியத்தை விருத்தி செய்துக்கொள்வது மிகவும் அவசி யமாகும். அதிகமான சொற்களைத் தெரிந்திருந்தால்த்தான் இலகு வாக வாசிக்கவும் வாசித்தவற்றை புரிந்துக்கொள்ளவும் முடியும். சொற்களஞ்சியம் என்பது நாம் பேசும் மொழியில் நாம் தெரிந்தி ருக்கும் சொற்களின் தொகுப்பாகும். அதாவது எமக்குத் தெரிந்த அனைத்து சொற்களும் எமது சொற்களஞ்சியமே.

சொற்களஞ்சியம் என்பது பிள்ளைகளிடத்தில் கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய நான்கு வழிகளிலும் விருத்தியடையும். பிள்ளைகள் வாசிக்கும் பகுதியிலுள்ள அனைத்து சொற்களினதும் பொருள் தெரிந்திருக்கும்போதே அப்பகுதியின் பொருளை விளங் கிக்கொள்வார்கள். பிள்ளைகளிடத்தில் சொற்களஞ்சியம் விருத்திய டையும்போதே அவர்கள் தாம் வாசிக்கும் பகுதிகளை முழுமை யாக விளங்கிக்கொள்வார்கள்.

சொற்களஞ்சியத்திற்குரிய சொற்களை முதலாம் மட்ட சொற்கள், இரண்டாம் மட்ட சொற்கள், மூன்றாம் மட்ட சொற்கள் என மூன்று வகையில் பிரித்து பிள்ளைகளுக்கு பொருத்தமானவற்றைக் கற் பிக்கலாம். பிள்ளைகளுக்கு ஏற்கனவே தெரிந்த சொற்களை முத லாம் மட்ட சொற்களாகவும் உயர் வகுப்புகளில் கற்கக்கூடிய சொற்களை மூன்றாம் மட்ட சொற்களாகவும் தாம் தற்போது கற் பிக்க வேண்டிய சொற்களை இரண்டாம் மட்ட சொற்களாகவும் பிரித்து தெரிவு செய்து கற்பிக்கலாம்.

## கிரகித்தல் (Comprehension):

வாசிப்பினுடைய நோக்கமே கிரகித்தல்தான். ஆனால், பல சந்தர்ப் பங்களில் வாசிப்பின்போது கிரகித்தல் நடைபெறாமலே போக லாம். காரணம் நாம் வாசிக்கும் பகுதியில் இருக்கும் எல்லா சொற்களும் எமக்கு பொருள் தெரிந்த சொற்களாக இருக்க வேண் டும். அப்போதே வாசித்தவற்றைப் புரிந்துக்கொள்ள முடியும். கிர கித்தலுக்கு சொற்களஞ்சிய விருத்தி மிகவும் அவசியமானதாகும். அதேபோல் ஏனைய கூறுகளும் வாசித்துக்கிரகித்தலுக்கு துணை புரிகின்றன.

தொடர்ச்சியாக வழங்கப்படும் பயிற்சியின் மூலமே கிரகித்தல் விருத்தியடையும். அதேநேரம் கிரகிக்கும் திறன் விருத்தியடையா விட்டால், அது பிள்ளைகளின் வாசிப்புத் திறனை மட்டுமின்றி அவர்களின் எதிர்கால கல்வி வாழ்க்கையையும் பாதிக்கும்.

## முடிவு:

தற்காலத்தில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஐந்து எழுத்தறிவு எண் ணக்கருக்களையும் இணைத்து தினமும் கற்பித்தால்த்தான் ஒரு வகுப்பிலுள்ள சகல பிள்ளைகளும் வாசிக்கக் கற்றுக்கொள்வார் கள் என்ற கலந்துரையாடல் வலுப்பெற்று வருகிறது. அதேபோல தினமும் நன்கு திட்டமிட்டு, அதிக பிரயத்தனத்துடன் வாசிப்பு கற்பிக்கப்பட்டாலே பிள்ளைகள் வாசிக்கக் கற்றுக்கொள்வார்கள் என்றும் கூறப்படுகிறது. அதேபோல கடந்த ஐம்பது ஆண்டுகளாக கற்பிக்கப்பட்டு வந்த முறைமை அதிக பலனைத் தரவில்லை என்றும் ஆய்வுகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. எனினும் இலங்கை போன்ற வளர்ந்து வரும் நாடுகளின் ஆரம்பக் கல்வி கலைத்திட்டத்தில் இத்தகைய புதிய மற்றும் விஞ்ஞான ரீதியான ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்ட சீர்திருத்தங்கள் இடம் பெறாமை கவலைக்குரியதே.



krishnakumar.n@thaiveedu.com



உறவுகள் பிரியும்போது மலைகளையே சுமக்கவேண்டிவருகிறது
உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும்
இலகுவாகவும் அமைத்திட நாங்கள் உதவுகிறோம்
Chapel Ridge
FUNERAL HOME INC.
PROVIDING PEACEFUL FINAL ARRANGEMENTS
8911 Woodbine Ave., Markham, ON L3R 5G1
Chapel Ridge
Chapel Ridge
Call :
Vilosan Sivatharman B.Eng
முதலாவது கனடியத்தமிழ் Funeral Director
416 993 0826
Call :
Christeen Seevaratnam
Funeral Counsellor
416 258 6759
எங்களுடைய சேவைகள் மார்க்கம் / மிஸிஸாகா (Dundas & Cawthra ) பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது




Ceycan Transhipping Inc.
INTERNATIONAL FORWARDING LOGISTICS
EXCLUSIVE SOLE AGENTS FOR CEYLON SHIPPING LINES IN CANADA
REGULAR PERSONAL EFFECTS SHIPMENTS BY SEA & AIR TO SRI LANKA
OUR AGENTS ACROSS CANADA
Head Office
(905) 673-9873
Toronto/ New Market/Durham region
Sam (647) 986-2393
Brampton/Mississauga/Halton /Peel region
Neel (647) 891-9445
Ottawa
Iggy - 613 799 3519 /613 237 3569
Hamilton/Waterloo /St Catherines
Dharmaweera (519) 760-1280
Montreal
Gana (514) 573-0093
Edmonton/Calgary
Randy (604) 399-8785
Email : randy.kulasekare@kmrgloballogistics.com
Vancouver/British Columbia
Randy (604) 273-4911
KMR Global Logistics Ltd.
135 & 140 - 14480 Knox Way Richmond
British Columbia, V6V 2Z5
Email : admin@kmrgloballogistics.com
United Kingdom :
Atlas Shipping 430 High Rd
Willesden London NW10 2HA
Tel: 02024596633 - Mobile 07949143535
AIR CANADA
For Shipping Schedule Visit
www.ceycantranship.com
For further information contact
Kumar (905) 673-9873
SRI LANKA'S BEST CLEARING FACILITIES
COLOMBO
Ceylon Shipping Lines Ltd
760 Dr Danister De Silva Mw,
Colombo 9
Tel : 2680301 – 308
KANDY
Ceylon Shipping Lines Ltd
175 Parangantota Road
Mavilmada - Kandy
Tel : 812 234356/57/59
BATTICALOA
Ceylon Shipping Lines Ltd
134 Main Street
Addalachenai - 09
Tel : 067 2277302
1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9
sales@ceycantranship.com web: ceycantranship.com

# தொற்றுப் பேரிடரும் தமிழ்மொழிக் கல்வியும்

- அமுதா அன்பழகன்

அறிவார்ந்த எதிர்கால சமூகத்தை உருவாக்கும் நோக்குடன், அனைத்து நாடுகளும் மேற்கொண்டிருந்த கல்விக்கட்டமைப்புகள் தொற்றுநோய்ப் பரவல் காலத்தில் பெரிதும் சீர்குலைவுக்கு உள்ளாகியுள்ளன. அரசுகளின் கல்விக்கட்டமைப்புகளைக் கடுமையாகப் பாதித்த இப்பேரிடர் உலக அசைவியக்கத்தில் முதன்மை பெறவல்ல பொருளாதாரம், அரசியல், சமூகம் போன்ற தளங்களிலும் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. வலுமிக்க அரச நிர்வாகங்களும் நிலைகுலையுமளவுக்கு இதன் பாதிப்புகள் வலிமை பெற்றிருந்தன.

இக்கட்டுரையானது, புலம்பெயர்ந்தோரின் தமிழ்க்கல்விச் சூழலை இப்பேரிடர் எவ்வாறெல்லாம் பாதித்திருந்தது என்பதை அவதானிப்புகளின் வழியே கண்டறிய முற்படுகின்றது.

அரச கல்விக் கட்டமைப்புகளைப் போலவே, ஏனைய கல்விக் கட்டமைப்புகளும் பள்ளிகளிலும் வகுப்புகள் நடைபெற்ற சமூக மையங்களிலும் மாணவர்கள் கூடிப் பயில்வதையே பெரு மரபாகப் பின்பற்றி வந்துள்ளன. குறிப்பாக ஆரம்பநிலை வகுப்புகள், மேல்நிலை வகுப்புகள் என்பவற்றுக்கான கற்பித்தல் முறைகள் வகுப்பறைச் சூழலை மையப்படுத்தியே கட்டமைக்கப்பட்டிருந்தன.

தொடக்கத்தில் தொற்றுநோயின் பரவலையும் அது ஏற்படுத்திய தாக்கத்தையும் உணரத் தொடங்கிய அரசுகள், சடுதியாகப் பள்ளிகளை இழுத்து மூடின. உலகின் ஒருசில நாடுகளைத் தவிர, வேறெந்த நாடுகளுக்குமே அடுத்து என்ன செய்வது? என்று தெரிந்திருக்கவில்லை. கல்வியியல் வல்லுநர்கள் இணையவழிக் கற்பித்தலைப் பரிந்துரைத்திருந்தாலும் அதை உடனடியாக நடைமுறைப்படுத்தும் வல்லமையைப் பெரும்பாலான நாடுகள் கொண்டிருக்கவில்லை. பொருளாதார வசதி படைத்த நாடுகள் பலவும் கூட இவ்விடயத்தில் திணறின.

அரசுகள், நாடு தழுவிய கல்விசார் நடவடிக்கைகள் அனைத்தையும் முடக்கியபோது, புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழ்மொழியைப் பெரிதும் வகுப்பறைச் சூழலையே மையப்படுத்திக் கற்பித்து வந்த தமிழர் கல்விக்கட்டமைப்புகளும் அத்தருணத்தில் கல்விச் செயற்பாடுகளை நிறுத்த வேண்டியேற்பட்டது. தமிழ்க்கல்விக்கான வகுப்பறைகளில் பாடநூல்களும் ஆசிரியரை முதன்மைப்படுத்திய கற்பித்தல் முறைகளுமே மேலோங்கியிருந்தன. இந்நிலையில் அடுத்துக் கல்வியை எவ்வாறு தொடர்வது என்ற நிலையில் கல்விக்கட்டமைப்புகள் பெரும் சவால்களை எதிர்கொண்டன. இந்த சவால்களே கற்றல், கற்பித்தல் தொடர்பிலான புதிய வடிவங்களைக் கண்டறியத் தூண்டின எனலாம்.

இப்பேரிடர்க்காலம் தமிழ்மொழி கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் ஏற்படுத்திய தாக்கங்களை தீமை கருதியும் நன்மை கருதியும் இருதளங்களில் நோக்கலாம். முதலில் இப்பேரிடரின் போது அடையாளப்படுத்தப்பட்ட தீமைகளை நோக்குவோம்.

## தொற்றுநோய்க்காலம் - தமிழ்மொழிக்கல்வியில் ஏற்படுத்திய எதிர்மறை விளைவுகள்:

- தொடர்ச்சியாக இருபது ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்ற வகுப்பறையை மையப்படுத்திய கல்விச்சூழல் சடுதியானதொரு தாக்கத்துக்குட்பட்டபோது பெற்றோர், மாணவர், ஆசிரியர் போன்றோரின் உளவியலில் தாக்கங்கள் ஏற்பட்டன. தொடர்ச்சியானதும் வலுவானதுமானதொரு தளத்தில் இயங்கிய கல்விச் சுற்றோட்டத்தின் இடைநிறுத்தமானது, தன் தொடர்ச்சியைச் சற்று இழந்திருந்தது என்றே கூற வேண்டும். தாய்மொழிக் கல்விச் செயற்பாட்டில் ஈடுபாட்டுடன் இணைந்திருந்தவர்களில் பலர் அடுத்து இக்கல்வியை எவ்வாறு தொடர்வது என்பதில் உடனடித் தீர்வைப் பெறமுடியாதவர்களாகவே இருந்தனர்.
- ஐரோப்பிய நாடுகளில் கட்டமைக்கப்பட்ட தமிழ்மொழிக்கல்வி பெரிதும் பாடநூல்களையும் அதற்கான வழிகாட்டல்களிலுமே தங்கியிருந்தது. வீடுகளுக்குள் முடக்கப்பட்ட மாணவர்களில் பெரும்பாலானோர் தன்னிச்சையாகப் பாடநூல்களைக் கற்றுகொள்ள முடியாதவர்களாக இருந்தனர்.
- மொழிக்கல்வியின் வெற்றி, வாரந்தோறுமான தொடர் கற்கையிலேயே தங்கியிருக்கின்றது. பேரிடர்க்காலத்தில் இத்தொடர்ச்சி பாதிக்கப்பட்ட நிலையில், கணிசமான மாணவர் தமிழ்மொழிக் கல்வியில் வெளிப்படுத்திய ஈடுபாட்டில் தொய்வு ஏற்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.
- இப்பேரிடர்க்காலத்தின் பின்னாட்களில் இணையவழி வகுப்புகள் பரவலாகப் பரிந்துரைக்கப்பட்டன. அவற்றை முன்னெடுக்கும் தகைமையைக் கொண்டிருந்த கல்விக்கழகங்கள் கூகிள் வகுப்பறை, ஸ்கைப் போன்ற இணையத்தளங்கள் வழியாக வகுப்புகளை நடத்தின. இதன் வழியே பலரும் நெருக்கமாகக் கூடிக் கற்கும் வாய்ப்பு, குழுநிலைப் பணி, மேலதிக விளக்கங்களைப் பெறுதல் போன்ற வாய்ப்புகள் இல்லாது போயின.
- புலம்பெயர்ந்தோர் வாழ்வுச் சூழலில் ஒன்றிணைந்த வகுப்பறைக் கல்வி முதன்மையானதாகக் கருதப்படுகின்றது. மாணவர்கள் ஒருவரோடொருவர் தமக்குள் அறிமுகமாவதுடன் நெருக்கமாகப் பழகித் தமக்கிடையேயானதொரு வலைத்தொடர்பை ஏற்படுத்திக் கொள்வர். இதுவே பின்னாட்களில் ஒருங்கிணைந்த சமூக வலிமைக்கு வித்திடுவதாக அமையும். வீடுகளில் இருந்தபடியே பயிலும் இணையவழிக் கல்வியில் இது சாத்தியமற்றதாகியது.
- கல்வி தொடர்பான தொடர்ச்சியான கணினிப் பாவனை, பொருளாதார நெருக்கடி போன்ற காரணங்களினால் விருப்புத் தேர்வான தாய்மொழிக்கல்விக்கான நேர ஒதுக்கீட்டைப் பெற்றோரும் பின்தள்ளினர்.

## தொற்றுநோய்க்காலம் - தமிழ்மொழிக்கல்வியில் ஏற்படுத்திய நன்மைகள்:

- ஐரோப்பிய நாடுகளில் வடிவமைக்கப்பட்ட தாய்மொழி கற்பித்தலானது பெரும்பாலும் ஆசிரியரை மையப்படுத்தியதாகவே இருந்து வருகிறது. இந்தப் பேரிடர்க்காலத்தில் கணிசமான மாணவர்கள் பெற்றோர் உதவியுடனும் தொலைபேசி வாயிலான ஆசிரியர் தொடர்புடனும் தாமாகவே மொழிக்கல்வியைத் தொடர முற்பட்டனர். இச்சூழல் மேற்குலக நாடுகளில் போற்றப்படும் மாணவர் மையக்கல்வியை நோக்கித் தமிழ்மொழி கற்பித்தற் செயற்பாட்டை நகர்த்தியிருக்கின்றது. இதனை இப்பேரிடர்க்காலத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க நன்மையாகக் கருதலாம்.
- புலம்பெயர்ந்தோருக்கான தமிழ்மொழிக்கல்வி தொடர்பில் மிகப் பொருத்தமான இலத்திரனியல் மென்பொறிகள், செயலிகள் இல்லை என்பது பெருங்குறையாகவே இருந்து வந்துள்ளது. இந்தப் பேரிடர்க்காலம் அவற்றின் தோற்றத்துக்கு வித்திட்டிருக்கின்றது. தமிழ்மொழி கற்றலுக்கான சிறந்த செயலிகளைப் பலர் உருவாக்கியுள்ளனர்.
- மாணவர்கள் பலரும் நாளாந்தப் பள்ளிகளில் கற்றலின்போது புதிய உத்திகளையும் இணையவழி மூலவளங்களையும் பயன்படுத்தினர். தமிழ்ப்பள்ளிகளில் அவற்றைப் பயன்படுத்தும் வாய்ப்பு மிகக் குறைவாகவே இருந்தது. ஆனால் இந்தத் தொற்றுநோய்க்காலத்தில் தமிழ்க்கல்வியோடு இணையவழித் தொழில்நுட்பங்கள் இணையத் தொடங்கியுள்ளமை சிறப்புக்குரிய மாற்றமாகக் கருதப்படுகிறது.
- கடினமான இக்காலப்பகுதியில் ஆசிரியர்களும் பெற்றோர்களும் பிள்ளைகளின் கல்வி தொடர்பில் கணினி வழிப்பட்ட இணையவழித் தொழில்நுட்பங்களைத் தெரிந்துகொள்ள முற்பட்டனர். இவ்வகைத் தேடலும் கற்றலும் தமிழ்மொழிக்கல்வியை அடுத்த தளத்துக்கு நகர்த்த உதவியது. குறிப்பாக, தமிழாசிரியர்கள் கணினிசார் தொழில்நுட்ப அறிவினை முனைந்து கற்றுக் கொண்டனர்.
- இனிவரும் காலங்களில் மாணவர் கற்றலில் கணினிவழித் தொழில்நுட்பப் பயன்பாட்டை நிரந்தமாக்குவதற்கு இந்த இடர்க்காலம் உதவியிருக்கின்றது. இணையவழியாகவே மேலதிக பாடப்பயிற்சிகள், வீட்டுவேலைகளைச் செய்தல், திருத்தப்பட்ட விடைத்தாள்களுக்கான பின்னூட்டங்களை வழங்குதல் என்பன எதிர்காலத்தில் சாத்தியப்படலாம்.
- ஒலிப்பதிவுகள், காணொளிகள், ஆவணப் படங்கள், மின்னூல்கள் போன்ற கற்றலுக்குரிய துணை மூலவளங்களை எந்நேரத்திலும் எவ்விடத்திலும் பயன்படுத்தக்கூடிய வாய்ப்புகளை இது தோற்றுவித்திருக்கின்றது.
- வகுப்பறையோடு இணைந்த செயலி வழியான பயன்பாடுகள் மாணவரிடையே கற்றல் மீதான ஆர்வத்தைத் தூண்டும்.
- ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகள், பயிற்சிகள், சந்திப்புகள் என்பவற்றையும் கூட, எளிதாக நடத்திச் செல்லுமளவுக்கு மிகப் பொருத்தமான இணையத்தளங்கள் இக்காலப்பகுதியில் தோன்றிவிட்டன.
- இவை எல்லாவற்றிற்கும் மேலாக, இவ்விடர்ச் சூழல் தளர்வுற்றபோது மாணவர் மிகுந்த ஆர்வத்துடன் வகுப்பறைகளை நாடி வந்ததை அவதானிக்க முடிந்தது. இணையவழிக் கல்வியில் ஏற்பட்ட சலிப்பும் கூடிக் கற்பதிலுள்ள களிப்பும் அவர்கள் முகங்களில் பிரதிபலித்தன.

இவ்வாறாக இவ்விடர்க்காலம் கல்வித்துறையில் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாகத் தமிழ்மொழிக்கல்வியில் கணிசமான மாற்றங்களுக்கு இது வித்திட்டுள்ளது.

இப்பேரிடர்க்காலம் உலகளாவிய அசைவியக்கத்தை மிகக் கடுமையாகவே பாதித்து வருகின்றது. குறிப்பாக, உலகப் பொருளாதாரக் கட்டமைப்பும் சமூக ஊசாட்டமும் சீர்குலைவுக்கு உள்ளாகி புதிய வடிவங்களில் மேலெழ முயற்சிக்கின்றன. எனினும், பெருவளர்ச்சி பெற்றிருந்த கணினித் தொழில்நுட்பமும் அதனை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்ற தகவல் தொழில்நுட்பமும் இந்த உலக இயக்கத்தைத் தாங்கிச் செல்கின்றன. இதன்வழியே-தான் உலகளாவிய கல்வித்துறையும் தன்னைத் தக்க வைத்துக் கொண்டிருக்கின்றது.

எவரும் எதிர்பார்த்திருக்காத பொழுதில், தோற்றம் கொண்ட இந்தப் பேரிடரை மானுடகுலம் மிகச் சாதுரியமாகவே எதிர்கொண்டு வருகின்றது. இவ்விடரிலிருந்து மீண்டெழக்கூடிய அனைத்துச் சாதகமான வாய்ப்புகளையும் பயன்படுத்தி வருகின்றது. இவ்வகையில் புலம்பெயர்ந்தோருக்கான தமிழ்மொழிக்கல்வியும் வாய்ப்பான சூழல்களை உருவாக்கி, அதன்வழியே பயணிக்கத் தொடங்கியுள்ளது.


amutha@thaiveedu.com



BUY OR SELL

PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
www.pyramidgroup.com

POWER BROTHERS REAL ESTATE



UTHAYAN SIVARAJAH BROKER 416.301.5555
RAJ SIVARAJAH BROKER 416.843.3333
KUMAR SIVARAJAH SALES REPRESENTATIVE 416.453.7777

@uthayansivarajah @uthayansivarajah

ROYAL LEPAGE ignite Realty, Brokerage
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
INDEPENDENTLY OWNED AND OPERATED

INTEGRITY | KNOWLEDGE | SUCCESS | TEAMWORK

# சரியாகத் தமிழறிவோம்! எது சரி? ஏன் சரி? 2

- மாவிலி மைந்தன்
சி. சண்முகராஜா

உலக மொழிகளின் தாய்மொழி என்று கூறப்படும் நமது தாய் மொழியாம் தமிழ் மொழி கால வெள்ளத்தில் எதிர்நீச்சல் போட்டு மேன்மேலும் இளமை பொலிந்து இன்றும் வாழும் மொழியாக நிலைபெற்று வருகிறது. எம்மொழியின் இருப்பை என்றென்றும் நிலை நிறுத்துவதற்கு அதனை நாங்கள் சரியாகப் பேசுவதையும், எழு-துவதையும் உறுதி செய்ய வேண்டியது எமது கடமையாகும். மார்ச் மாதத் தாய்வீடு இதழில் இக்கட்டுரையின் பகுதி 1ல் ஐகா-ரம், ஔகாரம் ஆகிய எழுத்துகளின் சரியான பயன்பாடுகள் பற்றியும், குறிப்பிட்ட சில எழுத்துகளின் சரியான ஒலிப்பு முறைகள் பற்றியும், பிறமொழிச் சொற்கள் தமிழில் எப்படிச் சரியாகப் பயன் படுத்தப்படவேண்டும் என்பது பற்றியும் எழுதியிருந்தேன். இக்கட்டுரைத் தொடரின் இந்த இரண்டாவது பகுதியில் தமிழ் எழுத்திலும் பேச்சிலும் பொதுவாகப் பலரும் தவறிழைக்கக்கூடிய மயங்கொலிச் சொற்கள் பற்றியும், 'கள்' என்னும் பன்மை விகுதி பற்றியும் தெளிவாக்க விரும்புகிறேன்.

### மயங்கொலிச் சொற்கள்:

தமிழில் கிட்டத்தட்ட ஒரே மாதிரியான ஒலிப்பினைக் கொண்ட சில எழுத்துகள் இருப்பதை நாம் அறிவோம். இவ்வகையான சொற்கள் ஒலிப்பின் போது நுண்ணிய வேறுபாடுகளைக் கொண்டிருப்பதால் எது சரி, எது பிழை என்று தெரியாத மயங்கத்தில் பலரும் பிழையான எழுத்துகளைச் சொற்களில் எழுதுவதும், உச்சரிப்பதும் பொதுவாக நிகழ்கிறது. சொற்களில் சரியான எழுத்துகளைப் பயன்படுத்தாது அல்லது உச்சரிக்காது போனால் அச் சொற்கள் முற்றிலும் வேறுபட்ட பொருளைக்கொடுத்துக் கருத்தைச் சிதைத்து விடும் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

மயங்கொலி எழுத்துகளாக (ற) றகரம், (ர) ரகரம், (ண) ணகரம், (ந) நகரம், (ன) னகரம், (ல) லகரம், (ழ) ழகரம், (ள) ளகரம் ஆகிய எட்டு எழுத்துகளையும் குறிப்பிடலாம். இந்த எழுத்துகள் வரும் சொற்களை எழுதும்போது எந்த எழுத்து சரியானது என்பதில் பலருக்குக் குழப்பம் காணப்படுகிறது. அதுபற்றித் தெரிந்தவர்களிடம் கேட்டறிவதற்கும் அந்த எழுத்துகளை வேறுபடுத்திச் சரியாக எப்படிக் கேட்பது அல்லது சொல்வது எனத் தெரியாது திகைப்பவர்களும் உண்டு.

### 'ற, ர' ஆகிய எழுத்துகளை எப்படி அழைப்பது?.

'ற' என்னும் எழுத்து வல்லினத்தைச் சேர்ந்ததால் அதனை வல்லின றகரம் என அழைக்க வேண்டும்.

'ர' என்னும் எழுத்து இடையினத்தைச் சேர்ந்ததால் அதனை இடையின ரகரம் என அழைக்க வேண்டும். இதற்கு மூவின எழுத்துகளையும் நன்கு அறிந்திருக்க வேண்டியது இன்றியமையாதது.

### 'ண, ந, ன' ஆகிய எழுத்துகளை எப்படி அழைப்பது?

க, ச, ட, த, ப, ற ஆகிய வல்லின எழுத்துகளுக்கு இணையான வரிசையில் ங, ஞ, ண, ந, ம, ன ஆகிய மெல்லின எழுத்துகள் வருகின்றன. அதாவது க-ங, ச-ஞ, ட-ண, த-ந, ப-ம, ற-ன என்ற வாறு வல்லின எழுத்துகளுக்கு இணையான வரிசையில் மெல்லின எழுத்துகள் தமிழ் நெடுங்கணக்கில் அமைந்துள்ளன.

'ண' என்னும் மெல்லின எழுத்து வல்லின (ட) டகரத்துக்கு இணையான வரிசையில் இருப்பதால் இதனை 'டண்ணகரம்' என அழைக்க வேண்டும். இவ்வெழுத்தைப் பேச்சு வழக்கில் 'மூன்று சுழி ண' என அழைப்பதும் உண்டு. இந்த எழுத்து மேல்வாய் அண்ணத்தின் நடுப்பகுதியை நாக்குத் தொடுவதால் பிறக்கிறது.

'ந' என்னும் மெல்லின எழுத்து வல்லினத் (த) தகரத்துக்கு இணையான வரிசையில் இருப்பதால் இதனைத் 'தந்நகரம்' என அழைக்க வேண்டும். இந்த எழுத்து நாவின் நுனி, மேற்பல்லின் அடிப்பகுதியைத் தொடுவதால் பிறக்கிறது.

'ன' என்னும் மெல்லின எழுத்து வல்லின (ற) றகரத்துக்கு இணையான வரிசையில் இருப்பதால் இதனை றன்னகரம் என அழைக்க வேண்டும். இந்த எழுத்தைப் பேச்சு வழக்கில் 'இரண்டு சுழி ன' என அழைப்பதுமுண்டு. இது மேல்வாய் அண்ணத்தின் நுனிப்பகுதியை நாக்குத் தொடுவதால் பிறக்கிறது.

### 'ல, ழ, ள' ஆகிய எழுத்துகளை எப்படி அழைப்பது?

'ல' என்னும் எழுத்தை ஒற்றல் லகரம் என அழைக்க வேண்டும். உச்சரிக்கும்போது நாக்கு முன் அண்ணத்தின்மேல் ஒற்றும்போது இதன் ஒலி தோன்றுவதால் ஒற்றல் லகரம் எனப்படுகிறது.

'ழ' என்னும் எழுத்து, சிறப்பு ழகரம் என அழைக்கப்படுகிறது. இது தமிழில் ஒரு சிறப்பான எழுத்தாக இருப்பதால் அப்படி அழைக்கப்படும். இவ்வெழுத்து 'ம' வரி வடிவத்தின் அடிப்படையில் அமைந்திருப்பதால் பேச்ச வழக்கில் 'மௌவளவு ழ' எனவும் அழைக்கப்படுவதுண்டு.

'ள' என்னும் எழுத்தை வருடல் ளகரம் என அழைக்க வேண்டும். உச்சரிக்கும்போது நாக்கு நடு அண்ணத்தை வருடி வருவதால் 'வருடல் ளகரம்' எனப்படுகிறது. இவ்வெழுத்து, பொது ளகரம் எனவும் அழைக்கப்படும். இதனை அதன் வரி வடிவத்தின் அடிப்படையில் பேச்சு வழக்கில் 'கொம்பு ள' எனவும் அழைப்பார்கள்.

லகர, ழகர, ளகர எழுத்துகள் தற்காலத்தில் மிகவும் மோசமாக எழுதப்படுகின்ற, உச்சரிக்கப்படுகின்ற நிலை காணப்படுகின்றது. தமிழ் ஆசிரியர்கள், மேடைப் பேச்சாளர்கள், ஊடக அறிவிப்பாளர்கள் போன்றோர் இதில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டியது மிகவும் அவசியம். எழுதும் போதும் மிகவும் கவனமெடுத்து எழுத வேண்டும். மாற்றி எழுதிவிட்டால் பொருள் முற்றிலுமாக வேறுபட்டுவிடும்.

எடுத்துக்காட்டாகக் கட்டுரைகளிலும் கவிதைகளிலும் எனது கண்ணில் பட்ட ஒரு சிலவற்றை இங்கே தருகின்றேன்.

'ஒழித்து விளையாடினான்.' - ஒளித்து விளையாடினான் என வர

வேண்டும். (ஒழித்தல் - அழித்தல், ஒளித்தல் - மறைத்தல், பதுங்குதல்).

'பேச விளைவோர் தொடர்பு கொள்ளுங்கள்.' - பேச விழைவோர் என வரவேண்டும். (விளைதல் - பயிர் விளைதல், உண்டாதல். விழைதல் - விரும்புதல்)

நாட்டை ஆழ்வோர் - நாட்டை ஆள்வோர் என வரவேண்டும். (ஆழ்தல் - மூழ்குதல், ஆள்தல் - அரசு புரிதல்)

இவ்வாறாகத் 'தமிழைத் தமில்' எனவும் 'வாழ்க என்பதை வாள்க' எனவும் 'மொழியை மொளி' எனவும் இவை போன்ற பல சொற்களை அவற்றின் லகர, ழகர, ளகர வேறுபாடுகள் இல்லாமல் உச்சரிப்பதும், எழுதுவதும் பொதுவாகவே காணப்படுகிறது. முக்கியமாகத் தமிழுக்கேயுரிய சிறப்பு எழுத்தான (ழ) ழகரம் வருகின்ற சொற்களைப் பலரும் சரியாக எழுதுவதும் உச்சரிப்பதும் இல்லை என்பது மிகவும் கவலைக்குரியதாக இருக்கிறது.

**தமிழுக்கேயுரிய சிறப்பு எழுத்தான (ழ) ழகரம் வருகின்ற சொற்களைப் பலரும் சரியாக எழுதுவதும் உச்சரிப்பதும் இல்லை என்பது மிகவும் கவலைக்குரியதாக இருக்கிறது.**

தமிழாசிரியர்கள் மாணவர்களுக்கு இவற்றின் சரியான ஒலிப்பு முறைப் பயிற்சிகளைச் செய்யப் பழக்குவது மிகவும் இன்றியமையாதது. அதற்கு முதற்படியாக ஆசிரியர்கள் அவ்வகையான சொற்களைச் சரியாக உச்சரிக்கப் பழகிக்கொள்ள வேண்டும். 'ஏழைக் கிழவன் வாழைப் பழத் தோலில் வழுக்கி விழுந்தான். பழக்க வழக்கம் தெரியாதவன் அழுகி ஒழுகி விழுந்த வாழைப் பழத்தை மொழுக்கு மொழுக்கென்று குடித்தான்' போன்ற பயிற்சிக்குரிய சொற்றொடர்களை எனது பள்ளிக்காலத்தில் தமிழாசிரியர் தந்து பயிற்றுவித்ததை நினைவு கொள்கிறேன். சிறப்பு ழகரம் தமிழ் மொழிக்கேயுரிய தனித்தன்மையான சிறப்பான எழுத்தாக இருப்பதால், சிறப்பு ழகரம் வருகின்ற சொற்களைச் சரியாக எழுதிக்கொள்வதற்கும், சரியாக உச்சரிப்பதற்கும் பயின்று கொள்வது மிகமிக இன்றியமையாதது.

## 'கள்'ளில் வரும் மயக்கம்:

வாழ்த்துகள் சரியா, வாழ்த்துக்கள் சரியா? இந்தக் கேள்விக்கான விடை தருவதற்குப் பல தமிழறிஞர்களுக்கே இப்போது குழப்பமாக இருக்கிறது. 'கள்' என்னும் பெயற்சொல் விகுதி பன்மையைக் குறிக்கப் பயன்படுகிறது. அத்துடன் பனை, தென்னை போன்றவற்றிலிருந்து வடிக்கும் மதுவைக் குறிக்கும் தனிச்சொல்லாகவும் அது இருக்கிறது. எனவே 'கள்' என்னும் பன்மை விகுதியைச் சரியான இலக்கணத்துடன் பயன்படுத்தாது போனால் அது இணையும் சொல்லோடு சேர்ந்து தனிச்சொல் தரும் பொருளைக் கொடுப்பதாக மாறிவிடலாம்.

அக்காலத் தமிழில் 'கள்' பன்மை விகுதி அஃறிணைப் பொருளில் மட்டுமே வரக்கூடிய ஒரு விகுதியாக இருந்தது. அஃறிணையில் ஒரு பெருளைக் குறிப்பதற்கு வழங்கும் பெயற்சொற்களைப் பன்மையாக்குவதற்கு 'கள்' விகுதியைச் சேர்த்துக்கொள்ளும் இடமும் உண்டு என்கிறார் தொல்காப்பியர்.

உயர்திணைக்கு 'கள்' விகுதி சேர்க்கக் கூடாது என்பது இலக்கணம். தமிழ் இலக்கணத்தில் மக்கள், தேவர். நரகர் தவிர்ந்த அனைத்தும் அஃறிணையில் அடங்கும். எடுத்துக் காட்டு:

நாய் + கள் - நாய்கள், பூனை + கள் - பூனைகள், இலை + கள் - இலைகள்

உயர்திணைச் சொற்களின் உறுப்புகளைக் குறிப்பிடும்போது அவை அஃறிணையாகக் கருதப்பட்டு அவற்றோடு 'கள்' பன்மை விகுதி இணைந்து வரும். எடுத்துக்காட்டு:

கால் + கள் - கால்கள், கை + கள் - கைகள்

இவ்வாறாகக் 'கள்' விகுதி முதலில் அஃறிணைப் பன்மைக்கே பயன்பட்டது. முற்காலத்தில் 'அர், ஆர், இர், ஈர், ஓர்' போன்ற பல விகுதிகள் உயர்திணைப் பன்மையைச் சுட்டுவனவாகப் பயன்பட்டு வந்தன. கவிஞர், தலைவர், ஆசிரியர், எழுத்தாளர் போன்ற சொற்கள் பன்மையைக் குறிப்பதற்கு மட்டுமன்றி மரியாதைச் சொற்களாகவும், ஆண் பெண் பேதம் காட்டாத சொற்களாகவும் வழங்குகின்றன. மனிதர்கள், வாசகர்கள், எழுத்தாளர்கள், ஆசிரியர்கள் என்று தற்காலத்தில் பயன்படுத்தப்படுவது போன்று உயர்திணைப் பன்மைச் சொற்கள் பண்டைத் தமிழில் பயன்படுத்தப் படவில்லை. உயர்திணையில் 'அர்' போன்ற விகுதி வரும் பன்மைச் சொற்களுடன் மேலும் 'கள்' விகுதி சேர்க்கப்படும்போது அச்சொற்கள் இரட்டைப் பன்மை விகுதி பெறுகின்றன. இப்படிக் 'கள்' விகுதி சேர்க்கவேண்டிய தேவை இல்லை. சங்க காலத்தின் பிற்பகுதியில் இவ்வாறான இரட்டைப் பன்மை விகுதி சேர்க்கப் பட்டு வழக்கத்தில் வந்துவிட்டதால் அதனை 'வழுவமைதி'யாகத் தற்காலத்திலும் வழக்கத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

## 'கள்' விகுதி சேரும் போது ஏற்படும் மாற்றங்கள்:

'கள்' விகுதி சொற்களோடு சேரும்போது ஏற்படும் மாற்றங்களை அறிந்து கொண்டால் எழுதும் போதும் பேசும் போதும் பிழையின்றிச் சொற்களைப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

**(ல்) லகர ஒற்றும் 'கள்' விகுதியும்.**

அ. ஒரு சொல்லின் முதலெழுத்து குறிலாக இருந்து இறுதி எழுத்து (ல்) லகர ஒற்றாக இருந்தால் அதனுடன் 'கள்' விகுதி இணையும் போது லகர ஒற்று (ற்) றகர ஒற்றாக மாறும். எடுத்துக் காட்டு:

சொல் + கள் - சொற்கள், பல் + கள் - பற்கள். இங்கே 'ல்', 'ற்' ஆக மாறியுள்ளது காண்க.

ஆ. லகர ஒற்று ஓரெழுத்துக் குறில் முன்னால் மட்டுமே றகர ஒற்றாக மாறும் என்பதும் கவனிக்கத்தக்கது. எடுத்துக்காட்டு:

மயில் + கள் - மயில்கள், பதில் + கள் - பதில்கள். இங்கே லகரம் மாறாதிருப்பதைக் காணலாம்

இ. இதேபோல ஒரு சொல்லின் முதலெழுத்து நெடிலாக இருந்து இறுதி எழுத்து லகர ஒற்றாக இருந்தால் அதனுடன் கள் விகுதி இணையும் போது லகர ஒற்றில் எந்த மாற்றமும் ஏற்படாது. எடுத்துக்காட்டு:

கால் + கள் - கால்கள், நூல் + கள் - நூல்கள்

**(ள்) ளகர ஒற்றும் 'கள்' விகுதியும்.**

அ. ஒரு சொல்லின் முதலெழுத்து குறிலாக இருந்து இறுதி எழுத்து (ள்) ளகர ஒற்றாக இருந்தால் அதனுடன் 'கள்' விகுதி இணையும் போது ளகர ஒற்று (ட்) டகர ஒற்றாக மாறும். எடுத்துக் காட்டு:

முள் + கள் - முட்கள், புள் + கள் - புட்கள்

ஆ. ஒரு சொல்லின் முதலெழுத்து நெடிலாக இருந்து இறுதி எழுத்து ளகர ஒற்றாக இருந்தால் அதனுடன் 'கள்' விகுதி

இணையும் போது ளகர ஒற்றில் எந்த மாற்றமும் ஏற்படாது. எடுத்துக் காட்டு:

நாள் + கள் - நாள்கள். வாள் + கள் - வாள்கள். இதை நாட்கள், வாட்கள் என்று எழுதுவது பிழை. நாட்கள் என்பது அன்றைய நாளில் இறக்கிய கள்(மது) என்னும் பொருள் படும்.

**மகர ஒற்றும் 'கள்' விகுதியும்.**

ஒரு சொல்லின் இறுதியில் மகர ஒற்று (ம்) இருந்து அதனுடன் கள் விகுதி இணையும்போது அந்த மகர ஒற்று (ங்) ஙகர ஒற்றாக மாறும். எடுத்துக்காட்டு:

மரம் + கள் - மரங்கள், பழம் + கள் - பழங்கள். இங்கே 'ம்', 'ங்' ஆக மாறியுள்ளதைக் காண்க.

**பிற ஒற்றெழுத்துகளும் 'கள்' விகுதியும்.**

பிற மெய்யெழுத்துகள் முன் குறில் வந்தாலும் நெடில் வந்தாலும் மாற்றமடையாது இயல்பாகவே 'கள்' விகுதி இணையும். எடுத்துக்காட்டு:

எண் + கள் - எண்கள், தேர் + கள் - தேர்கள், மான் + கள் - மான்கள்

**ஓரெழுத்து ஒருமொழியும் 'கள்' விகுதியும்.**

'கள்' பன்மை விகுதி, ஒரு சொல்லோடு இணையும் போது (க்) ககர ஒற்று மிகும் இடங்களும், மிகா இடங்களும் இருக்கின்றன. எங்கு மிகுந்து வரும் எங்கே மிகாது என்பதில் பலருக்கும் குழப்பம் இருக்கிறது. இது பற்றிச் சரியான புரிதல் தேவையானது.

அ. பொருள் தரும் ஓரெழுத்துள்ள சொற்கள் நெடிலாக இருந்து கள் விகுதி இணைந்தால் (க்) ககர ஒற்று மிகுந்து வரும். எடுத்துக்காட்டு:

பூ + கள் - பூக்கள், ஈ + கள் - ஈக்கள், பா + கள் - பாக்கள். இங்கே (க்) கர ஒற்று மிகுந்துள்ளது காண்க.

ஆ. (ஐ) ஐகாரத்தில் முடியும் ஓரெழுத்துச் சொற்களுடன் 'கள்' விகுதி இணைந்தால் ககர ஒற்று மிகாது இயல்பாகப் புணரும்.

கை + கள் - கைகள், பை + கள் - பைகள்

**இருகுறில் சொற்களும் 'கள்' விகுதியும்.**

இரு குறில் எழுத்துச் சொற்களுடன் 'கள்' விகுதி சேரும்போது ககர ஒற்று மிகும்.

பசு + கள் - பசுக்கள், அணு + கள் - அணுக்கள்.

**உகர ஒலியில் முடியும் சொற்களும் 'கள்' விகுதியும்.**

அ. உகர ஒலியோடு முடியும் ஒரு சொல்லுடன் 'கள்' விகுதி இணையும்போது ககர ஒற்று மிகுந்து வரக்கூடாது. இது மிக முக்கியமானது. எடுத்துக்காட்டு:

இனிப்பு + கள் - இனிப்புகள், உறுப்பு + கள் - உறுப்புகள், எழுத்து + கள் - எழுத்துகள், வாழ்த்து + கள் - வாழ்த்துகள். இவ்வாறான சொற்களோடு (க்) ககர ஒற்று மிகுத்து எழுதுவதும் பேசுவதும் இப்போது வழக்கமாகிவிட்டது. அது தவறானது. சான்றாக, இனிப்புகள் என்பதை இனிப்புக்கள் என ககர ஒற்று சேர்த்துச் சொல்லும்போது இனிப்பான கள் என்ற பொருளும் வருகின்றதல்லவா? எனவே இவற்றை இனிப்புக்கள், உறுப்புக்கள், எழுத்துக்கள் வாழ்த்துக்கள் எனக் ககர ஒற்றைச் சேர்த்து எழுதுவதும் பேசுவதும் பிழையானது என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

ஆ. ஒற்று இல்லாமல் வரும் உகர ஒலிச் சொற்களுக்கும் ககர ஒற்று மிகாது. எடுத்துக் காட்டு:

கொலுசு + கள் - கொலுசுகள், உறவு + கள் - உறவுகள்

இ. ஓரெழுத்தோ, ஈரெழுத்தோ, பல எழுத்தோ அவற்றில் 'வு' வரும் போதும் ககர ஒற்று மிகாது இயல்பாகப் புணரும். எடுத்துக் காட்டு:

தீவு + கள் - தீவுகள், ஆய்வு + கள் - ஆய்வுகள், கதவு + கள் - கதவுகள்

## 'கள்' விகுதி வராத ஒருமை பன்மையற்ற சொற்கள்:

நீர், காற்று, நன்றி, வணக்கம் போன்ற எண்ணிக்கையிலற்ற சொற்களைக் 'கள்' விகுதி சேர்த்துப் பன்மையில் பயன்படுத்துவது தவறு. நன்றி, வணக்கம் என்ற சொற்கள் முழுமையான மன உணர்வைக் குறிப்பன. 'நன்றி மறப்பது நன்றல்ல' எனவும், 'எந்நன்றி கொன்றார்க்கும்' எனவும், 'நன்றி ஒருவர்க்குச் செய்தக் கால்' எனவும் திருவள்ளுவர், ஔவையார் போன்ற சான்றோரின் சொற்றொடர்கள் எவற்றிலும் நன்றிகள் என வந்ததில்லை. எனவே நன்றிகள், வணக்கங்கள் எனப் பன்மையில் பேசுவதையும் எழுதுவதையும் தவிர்த்துக் கொள்ளுவோம்.

இந்தக் கட்டுரையிலே மயங்கொலி தரும் எழுத்துகள் கொண்ட சொற்களினதும், 'கள்' பன்மை விகுதியினதும் சரியான பயன்பாட்டை எடுத்து விளக்கியிருந்தேன். இயலுமான வரை தமிழைச் சரியாக அறிந்து கொண்டு சரியாகப் பேசுவோம், எழுதுவோம்.

(வளரும்)



shanmugarajah@thaiveedu.com

JM ACCOUNTING AND FINANCIAL SOLUTION INC.
"We provide reliable year around Tax and Accounting services."
Our Services included:
* E- file
* Personal Tax Returns (T1)
* Self-Employed Tax Returns
* Business, HST and Payroll Registrations & Bookkeeping
* Corporate Tax Returns (T2)
* Canada Revenue Agency's Audit assistance
Starting from $24.90 Plus tax
Phone: (647)- 351- 5622 / (416)- 722-5338 Fax: (647)- 351- 5620
1193A, Brimley Road, Suite 5, Scarborough, ON, M1P 3G5
jmaccfinancial@gmail.com

# மர்மங்கள் நிறைந்த தீவு!

- குமணன் தம்பிஐயா

முந்நூறு வருடங்களுக்கு முன்னர், பசுபிக் பெருங்கடலின் தென் கோடியில் வெகு தொலைவில் இருந்த ஒரு குட்டித்தீவை நோக்கி போய்க் கொண்டிருந்தது அந்தக் கப்பல். ஆழ்கடலின் பேரலைகளுடன் போராடிப் போராடியே மாலுமிகள் களைத்துப் போனார்கள். அழகாகத் தெரிந்த அந்த தீவில் கொஞ்ச நாட்கள் ஓய்வு எடுக்க அவர்கள் மிகவும் ஆசைப்பட்டனர். ஆனால் அந்தத் தீவில், இன்றுவரை புரியாத புதிராக தொடரும் மர்மம் ஒன்று தங்களை வரவேற்கப் போகின்றது என்பது அப்போது அவர்களுக்கு தெரிந்திருக்க நியாயமில்லை.

தீவில் இறங்கிய அவர்கள் திகைத்துப் போனார்கள். அவர்களை வரவேற்றவர்கள் தீவின் ஆதிக்குடிகள் அல்ல. அண்ணாந்து பார்க்குமளவான மிகப் பிரமாண்டமான சிலைகள் அடுக்கடுக்காக வரிசையில் நின்றபடியே வரவேற்றன. அதுவும் ஐந்து, பத்து சிலைகள் கிடையாது. மொத்தம் 887 கற்சிலைகள். ஒவ்வொரு சிலையின் எடையும் பல தொன்கள் இருக்கும்.

ஒரு ஈஸ்டர் தினத்தில் அங்கே இறங்கி ஆச்சரியப்பட்டு நின்ற அந்த டச்சுக்காரர்கள் போலவே தான், இன்றும் கூட அந்த தீவிற்கு போகும் அத்தனை பேரும் வாய் பிளந்து நிற்கிறார்கள்.

ஆதிக்குடிகளால் ராபா நுய் என அழைக்கப்பட்டதும், ஈஸ்டர் தினத்தில் கண்டுபிடிக்கப்பட்டதால் பிற்காலத்தில் ஈஸ்டர் தீவு என பிரபல்யம் பெற்றதுமான இந்தத் தீவு, தென் அமெரிக்காவின் சிலி நாட்டுக்கு மேற்கே கிட்டத்தட்ட 2,300 மைல் தொலைவில், ஆளரவமற்ற பசிபிக் பெருங்கடலில் உள்ளது, சிலி நாட்டில் இருந்து மிகத்தொலைவில் இந்த தீவு இருந்தாலும் இது சிலி நாட்டிற்கே சொந்தமானதாகும். 1888ம் ஆண்டில், ஈஸ்டர் தீவு சிலி நாட்டுடன் இணைக்கப்பட்டது.

அலைகடலுக்கு நடுவே தன்னந்தனியனாக அமைந்திருக்கும் இந்த தீவில் இந்தப் பெரிய சிலைகளை யார் செதுக்கினார்கள்? ஏன் செதுக்கினார்கள்? செதுக்கியவர்கள் பூமியின் மனிதர்கள் தானா? அல்லது வேற்றுக்கிரக வாசிகள் வந்து தங்கி, சிலைகள் செய்து விட்டுப் போனார்களா?

உலகத்தை உலுக்கிய கேள்விகள் இவை.

இந்த தீவின் ஆதிக்குடிகள், கடலோடுவதில் கில்லாடிகளான பாலிசினியர்கள். அவர்கள் கி.பி 400ம் ஆண்டில் கட்டுமரத்தினில் பயணித்து இந்த தீவினை வந்தடைந்ததாக ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். இந்த பாலிசினியர்கள் தைவான், தென்கிழக்கு ஆசியா (குறிப்பாக பிலிப்பைன்ஸ், மலேசியா, கிழக்கு இந்தோனேசியா), மைக்ரோனேஷியா, மடகாஸ்கர் ஆகியவற்றின் பூர்வீக மக்களின் தோற்றத்தை கொண்ட ஒரு இனக்குழுவினர். இந்த தொடர்புக்கு மரபணு, மொழியியல் மற்றும் தொல்பொருள் சான்றுகள் துணைபுரிகின்றன.

ஈஸ்டர் தீவின் வரலாறு பற்றி எந்த பதிவுகளும் இல்லை. வாய் வழி கதைகள் வழியாகவே சரித்திரம் சொல்லப்பட்டு வந்திருக்கிறது. 1722ல் டச்சுக்காரர்கள் வந்த நேரத்தில், சுமார் 3,000 மக்கள் தீவில் வாழ்ந்தனர் என்றும் அவர்கள் தங்களுக்கு நன்றாக உணவளித்து, மிகவும் நட்பாக இருந்தனர் என்றும் டச்சு கடற்படை கப்டன் ஜேக்கப் ரோஜெவன் எழுதி வைத்திருக்கிறார்.

வெறும் 63 சதுரமைல் நிலப்பரப்பு கொண்ட இந்த ஈஸ்டர் தீவினில், நிலத்திற்கு வெளியே நீட்டிக் கொண்டிருக்கும் ஈஸ்டர் தீவு தலைகள் மிகவும் மர்மமானவை. மோய் என்று அழைக்கப்படும் இந்த சிலைகளில் பெரும்பாலானவை உண்மையில் முழு உடல் கொண்ட சிற்பங்கள் தான், ஆனால் பெரும்பாலும் வயிற்றின் கீழே மண்ணில் புதையுண்டபடியே காணப்படுகின்றன. இந்த சிலைகளின் பின்புறத்தில் குறியீடு அல்லது சித்திர எழுத்துக்கள் செதுக்கப்பட்டு உள்ளன. சிலைகளில் மிகப்பெரியது 70 அடிக்கு மேல் உயரம் கொண்டது.

இந்த சிலைகளை பூர்வ குடிகள் தமது கடவுளுக்கு பிரியமானது என்று செதுக்கியிருக்கலாம் என சில ஆய்வாளர்கள் நம்புகிறார்கள். இல்லவேயில்லை, வேற்று கிரக வாசிகளின் விபரீத விளையாட்டு இது என்று வாதிடுபவர்களும் இருக்கிறார்கள்.

இந்த தீவில் 70 அழிந்துபோன எரிமலைகள் உள்ளன. அந்த எரிமலைப் பாறைகளில் இருந்தே அத்தனை சிலைகளும் செதுக்கப்பட்டிருக்கின்றன.

இந்தப் பெரிய சிலைகளை ஆதிக்குடிகள் ஏதாவது ஒரு காரணத்திற்காக செதுக்கியிருந்தாலும், எப்படி தீவு முழுக்க பல இடங்களுக்கு இந்த பாரிய உருவங்களை நகர்த்தியிருப்பார்கள் என்ற கேள்வி ஆய்வாளர்கள் மத்தியில் பூதாகரமாக எழுந்தது.

1980களின் ஆரம்பத்தில் சில அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள், இதே போன்ற பிரமாண்ட சிலைகளை, நவீன தொழில்நுட்பங்கள் ஏதுமில்லாமல், பழைய காலத்திலிருந்த கருவிகளைக் கொண்டு நகர்த்த முடியுமா என்று முயற்சி செய்து பார்த்தார்கள். ஆனால் அந்த முயற்சி தோல்வியில் முடிந்தது. பின்னர் ஹவாய் பல்கலைக்கழகத்தை சேர்ந்த பேராசிரியர் டெரிகன்ட் என்பவரும், கலிபோர்னிய மாகாண பல்கலைகழகத்தை சேர்ந்த பேராசிரியர் கார்ல் லிப்போ மற்றும் தொல்லியல் ஆய்வாளர் சர்ஜிகோ ராபுவும் இணைந்து, 12 ஆண்டுகால தொடர் ஆய்வின் இறுதியில் இந்த கற்சிலைகள் எப்படி அந்தக் காலத்தில் நிறுவப்பட்டிருக்கும் என்பதை வெறும் பதினெட்டு பேர்களை கொண்டு செயல்படுத்திக் காட்டினர்.

ஈஸ்டர் தீவின் சுற்றுச்சூழல் ஒரு தனித்துவமான சூழல் மண்டலமாக கருதப்படுகிறது. அதன் ஆரம்ப காலனித்துவ காலத்தின் போது, தீவில் பரந்த காடுகளும், பனைகளும் இருந்தன. முற்கா



லத்தில் கடின நார்போன்ற ஒருவகை புற்கள் இங்கு இருந்திருக்கின்றன. அவற்றை அக்கால மக்கள் பயன்படுத்தியிருக்க வேண்டும். பின்னர், தீவில் அமைக்கப்பட்ட சிலைகளை நகர்த்துவதற்காக அவை அழிக்கப்பட்டதாகவும், மரங்கள் அழிக்கப்பட வெறும் நிலமாகிய தீவினில் மண்வளம் குன்றி, தொடர்ந்து மரங்கள் வளர்வது நின்று போனதாகவும் கருதப்படுகிறது. இதனால் ஈஸ்டர் தீவு மிகக் குறைந்த மரங்களையே இப்போது கொண்டுள்ளது, புல், மற்றும் புதர்களே இப்போது இத்தீவில் அதிகம்.

சக்கரைவள்ளிக் கிழங்கு இங்கு பயிரிடப்படுகின்றது. இது சிலி நாட்டில் இருந்து கொண்டுவரப்பட்டிருக்கலாம். இச்சமூகத்தில் ஒருகாலத்தில் நரமாமிசம் உண்ணும் பழக்கம் அல்லது நரபலி கொடுக்கும் பழக்கமும் இருந்ததாக சொல்லப்படுகிறது.

ஐரோப்பியர்கள் தீவுக்கு வந்த பிறகு, பழங்குடியினருக்கு இடையேயான போர், பொருட்கள் மற்றும் வளங்கள் இல்லாதது, நோய், அடிமைத்தனம், மற்றும் காலனித்துவம் ஆகியவை ராபா நுய் சமூகத்தின் பெரும்பகுதியை அழித்தன. டிசம்பர் 1862 ல் பெருவியன் அடிமை வர்த்தகர்களின் கப்பல்கள் தீவுக்குச் சென்று தீவின் உழைக்கும் மக்கள் அனைவரையும் அடிமைத்தனத்திற்கு இழுத்துச் சென்றன. 1888ல் ஈஸ்டர் தீவு சிலியுடன் இணைக்கப்பட்ட போது, தீவில் 200க்கும் குறைவான பழங்குடி மக்களே இருந்தனர்.

மக்கள் இவ்வாறு மோசமான நிலையில் இருந்தபோது மிஷனரிகள் தீவுக்கு வந்தனர். இங்கே ஒரு சமூகம் அழிந்து போவதை அவர்கள் கண்டார்கள். தீவின் குடிமக்களை கிறிஸ்தவ மதத்திற்கு மாற்ற ஐரோப்பியர்களுக்கு அதிக நேரம் எடுக்கவில்லை. முதலாவதாக, பழங்குடி மக்களின் ஆடைகளின் முறை மாற்றப்பட்டது, தொடர்ச்சியாக பூர்வகுடிகள் பச்சை குத்திக்கொள்வது மற்றும் உடல் வண்ணப்பூச்சு பயன்படுத்துவது தடைசெய்யப்பட்டது. தீவின் கட்டடங்கள் மற்றும் பிற ஆலயங்களின் கலைப் படைப்புகள் வந்தவர்களால் திருடப்பட்டன. தீவில் வசிப்பவர்கள் தங்கள் மூதாதையர்களின் நிலங்களை கைவிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. மேலும் அவர்கள் தீவின் ஒரு சிறிய பகுதியில் ஒதுங்கி வசிக்க வேண்டிய கட்டாயமும் ஏற்பட்டது.

1964 முதல், ஈஸ்டர் தீவில் ஒரு விமான நிலையம் இயங்கி வருகிறது, இது வெளி உலகத்துடனான உறவை பலப்படுத்தியுள்ளது. ஒவ்வொரு ஆண்டும், குறைந்தது 20,000 சுற்றுலாப் பயணிகள் இந்த மர்மமான தீவை பார்வையிடுகிறார்கள்.

ஈஸ்டர் தீவுக்கு செல்வதற்கு மிகவும் பொருத்தமான காலம் அக்ரோபர் முதல் ஏப்ரல் வரை ஆகும், இந்த காலகட்டத்தில் காற்றின் வெப்பநிலை 22-30 டிகிரி செல்சியஸ் வரை வெப்பமடைகிறது. மேலும் கடலில் உள்ள நீர் 20-23 டிகிரி செல்சியஸ் வரை இருக்கும். மே முதல் செப்ரெம்பர் வரை பெரும்பாலும் மழை பெய்யும், வானிலை காற்று மற்றும் மேகமூட்டத்துடன் இருக்கும், இருப்பினும் அது இன்னும் சூடாகவும் வெப்பநிலை 17 முதல் 20 வரை மாறுபடும்.

ஈஸ்டர் தீவு 1995 முதல் யுனெஸ்கோ உலக பாரம்பரிய சின்னமாகவும் அறிவிக்கப்பட்டது. 2002ல் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி இந்த தீவின் மக்கள் தொகை 3,791.

பூமியில் மிகவும் நம்பமுடியாத பழங்கால நினைவுச்சின்னங்களான இந்த மோய் சிலைகளை உருவாக்கியவர்கள் எங்கிருந்து வந்தார்கள்? ஏன் இந்தப் பெரிய சிலைகளை உருவாக்கினார்கள்? எப்படி அவர்கள் மறைந்தார்கள்? இந்தக் கேள்விகளுக்கு இன்றும் கூட சரியான பதில்கள் இல்லை. சரித்திரத்தின் புதிர்களாகவே அவைகள் தொடர்ந்தும் நீடிக்கின்றன.

இந்த தீவின் மர்மத்தைப் பற்றி நிறைய கற்றுக்கொள்வதற்கும், சில விசித்திரமான கோட்பாடுகளை நிராகரிப்பதற்கும் அறிவியல் உதவி செய்கின்றது. ஆனாலும் கேள்விகளும், கருத்து வேறுபாடுகளும் ஈஸ்டர் தீவை சுற்றி இன்னும் உள்ளன.



kumanan.t@thaiveedu.com

# கோள்களில் தரையிறங்கும் ரோவர்களும் மனிதர்களும்

- குரு அரவிந்தன்

வேற்றுக் கோள்களில் சென்று குடியேறுவதே தற்போது முன்னேறிய நாடுகளின் முக்கிய குறிக்கோளாக இருக்கின்றது. மனிதர் சுற்றுலாப் பயணத்தை அதிகம் விரும்புவதும் இதற்கொரு காரணமாகும். 'நண்டு கொழுத்தால் வளையில் இருக்காது' என்று சொல்வார்கள். இதைப்போலத்தான் மனிதரும், அறிவு வளர்ச்சி காரணமாக புலம் பெயர்வதில் அதிக ஆர்வமாக இருக்கின்றனர். வேற்றுக்கிரகங்களுக்குச் செல்ல ஆசைப்படுகின்றனர். தொடக்கத்தில் தனது சுற்றாடலிலே முடங்கிக்கிடந்த மனிதன், கடற்பாதைகளைக் கண்டறிந்தான். கடல் வழிப்பாதைகளை மனிதன் கண்டு பிடித்திருக்காவிட்டால், வேறு நாடுகள் கடலுக்கு அப்பால் இருப்பதே எமக்குத் தெரியாமல் போயிருக்கும். விமானத்தைக் கண்டு பிடித்தார்கள். அதன் போக்குவரத்திற்கு வான்பாதைகளும் அமைக்கப்பட்டதால் உலகம் குறுகியதாகப்போய்விட்டது. தொழில் நுட்பவசதிகள் காரணமாகத் தொடர்பு சாதனங்கள் வர்த்தக மயமாக்கப்பட்டதால், இன்று உலகம் முழுவதும் இலகுவாகத் தொடர்பு கொள்ள



முடிகின்றது. இத்தகைய முன்னேற்றங்களில் நன்மைகள் இருப்பது போல, தீமைகளும் இருக்கின்றன. புதிய கண்டுபிடிப்புக்கள் இல்லாவிட்டால் மனித இனம் எப்போதோ அழிந்திருக்கும். எது சரி எது தவறு என்பதை நாங்கள்தான் தீர்மானித்து, எமது வாழ்க்கைக்கு எது சிறந்ததோ அதன்படி வாழப் பழகிக்கொள்ள வேண்டும்.

ஒரு காலத்தில் தொலைபேசி, வானொலி, தொலைக்காட்சி என்று புதிய கண்டுபிடிப்புக்கள் அறிமுகமாகின. இதற்கு அடுத்ததாக வந்த கணினியுகம் பெரிய மாற்றங்களைக் கொண்டு வருவதில் முக்கியமான பங்கு வகித்தது. புதிய கண்டுபிடிப்புகள் பல நன்மைகளைத் தேடித்தந்தன. இப்போது, வீட்டுக்கு ஒரு கணினியாவது அனேகமாகப் பாவனைக்கு வந்து விட்டது. கணினி இல்லாவிட்டாலும் அதன் சில தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் கைத்தொலைபேசிகள் மக்களின் பாவனையில் முக்கிய இடம் பிடித்திருக்கின்றன. இதை எல்லாம் கடந்து இப்போது விண்வெளி யுகம் ஆரம்பித்திருக்கின்றது. எண்ணுக்கணக்கற்ற கோள்கள் பிரபஞ்சத்தில் வலம் வந்து கொண்டிருக்கின்றன. எல்லையற்ற வானமாக இருந்தாலும், நாங்கள் இப்பொழுதும் சூரியக் குடும்பத்திற்கு உள்ளேதான் இருக்கின்றோம். பிரபஞ்சத்தில் எங்கள் பூமி ஒரு துளியளவுகூட இல்லை. சூரியக் குடும்பத்திற்கு வெளியே செல்லும் திறனோ அல்லது வசதிகளோ இன்னும் எங்களிடம் இல்லை. சூரியக்குடும்பத்தைப் பற்றியே முழுமையாக இன்னும் நாங்கள் அறிந்துகொள்ளவில்லை. இப்போது முதற்கட்டமாக சூரியக்குடும்பத்தைப் பற்றிய ஆய்வுகளைத்தான் மேற்கொண்டிருக்கின்றோம். இதன் காரணமாகத்தான் விண்வெளி நிலையம், சந்திர மண்டலப் பயணம், செவ்வாய்க்கிரகம் நோக்கிய பயணம் என்று ஒவ்வொன்றாக ஆரம்பமானது. எமக்கு மிக அருகில் உள்ள இடங்களையே முதலில் இதற்காகத் தெரிந்தெடுத்திருக்கிறார்கள். இப்போது உள்ள வேகநிலையில் செவ்வாய்க் கிரகத்திற்குச் செல்வதற்கு ஏழு மாதங்கள் எடுக்கின்றன. எல்லாக் கோள்களிலும் முதல் ரோபோக்கள்தான் பரீட்சாத்தமாக தரை இறங்குகின்றன. ரோபோக்களைத் தொடர்ந்து இயற்கைக் கோளான சந்திர மண்டலத்திலும், செயற்கைக் கோளான விண்வெளி நிலையத்திலும்தான் மனிதர் இதுவரை காலடி பதித்திருக்கின்றனர். அடுத்து மனிதர் காலடி பதிப்பது அனேகமாகச் செவ்வாய்க் கோளாக இருக்கலாம். அதற்கு முன்னோடியாக ரோவர்கள் செவ்வாய்க் கிரகத்திற்குச் சென்றுவிட்டன.

கோள்கள் என்று குறிப்பிடும் போது, சூரியக்குடும்பத்தில் (Solar System) உள்ள கோள்களை இயற்கைக் கோள்கள் (Planets) துணைக்கோள்கள் (Natural Satellite-Moon), குறுங்கோள்கள் (Dwarf Planet-Eris,Pluto,Ceres) என்று கோள்களை இனம் கண்டு வகைப்படுத்தி இருக்கிறார்கள். குறுங்கோள்களின் பகுப்புக்குள் அவை இல்லாவிட்டால், விண்பாறைகள் (asteroid) என்று அவற்றைக் குறிப்பிடுகின்றார்கள். இவற்றைவிட மனிதரால் உற்பத்தி செய்யப்பட்ட செயற்கைக் கோள்களும் உண்டு. உதாரணமாக வான்வெளியில் உலாவரும் விண்வெளி நிலையத்தைச் செயற்கைக் கோள் என்று எடுக்கலாம். இனிவரும் காலத்தில் முன்னேறிய நாடுகள் தமெக்கெனத் தனித்தனியாக இது போன்ற விண்வெளி நிலையங்களையும் அமைக்கலாம். விண்வெளிப் பயணத்தை எடுத்துக் கொண்டால் மனிதரின் தரை இறக்கம் இதுவரை, அதாவது 2021ம் ஆண்டுவரை இயற்கைத் துணைக் கோளான சந்திர மண்டலத்திலும், செயற்கைக் கோளான விண்வெளி நிலையத்திலும் மட்டுமே நடந்திருக்கின்றன. இவற்றைவிட தரை இறக்கங்கள் பல இடங்களில் நடைபெற்றாலும் அங்கெல்லாம் ரோபோக்களே தரை இறக்கப்பட்டிருக்கின்றன. ரோபோக்களைத் தரை இறக்கிச் செயற்பட வைக்கும் திறன் இதுவரை சில நாடுகளிடம் மட்டுமே இருக்கின்றன. அமெரிக்கா, ரஷ்யா, சீனா, யப்பான் மற்றும் ஐரோப்பிய விண்வெளி நிலையம் ஆகியன மட்டுமே தரை இறங்கும் ரோபோக்களைச் செயற்பட வைக்கக்கூடிய

நிலையில் இருக்கின்றன. இந்தியா செவ்வாக்கிரகத்தில் 2014ம் ஆண்டு ரோபோக்களைத் தரை இறக்கினாலும் அவை செயற்பட வில்லை.

அனேகமான கோள்கள் நீள்வட்டப்பாதையிலேயே சூரியனைச் சுற்றி வருகின்றன. முதலில் எமக்கு அருகே உள்ள துணைக் கோளான சந்திரனைப் பார்ப்போம். கற்பனையில் மட்டும் நிலா வைப் பற்றி வர்ணித்துக் கொண்டிருந்த நாம் நிலாவில் காலடி வைப்போம் என்று நினைத்தும் பார்த்திருக்க மாட்டோம். சந்திர னுக்கும் பூமிக்குமான தூரம் சுமார் 240,000 மைல்களாகும். சந் திரனுக்கான முதலாவது செயற்கைக் கோள் லூனா - 1, 1959ம் ஆண்டு அனுப்பப்பட்டு சந்திரனுக்கான முதலாவது பயணத்தை ரஷ்யா ஆரம்பித்து வைத்தது. அதன் தொடர்ச்சியாகப் பல செயற் கைக் கோள்கள் சந்திரனின் சுற்றுப் பாதைக்கு அனுப்பப்பட்டன.

தொடக்கத்தில் அமெரிக்கா அனுப்பிய அப்பலோ-8 சந்திரனுக்குச் செல்வதற்கு 69 மணித்தியாலங்கள் தேவைப்பட்டது. அப்பலோ-11 சந்திரனுக்குச் செல்வதற்குப் 62 மணித்தியாலங்கள் எடுத்தது. ஹரிஸோன் செயற்கைக் கோள் அதன் வேகம் காரணமாக, புளுட்டோ நோக்கிச் செல்லும் போது, 8 மணித்தியாலங்களில் சந் திரனைக் கடந்து சென்றது. இவை எல்லாம் அந்த நேரம் சந்திரன் விண்வெளியில் இருக்கும் தூரத்தையும், எமது செயற்கைக் கோள் களின் வேகத்தையும், அவை செல்லும் பாதையையும் பொறுத் தது. தொடக்க காலங்களில் சந்திரன் பூமிக்கு அருகேதான் இருந் தது. ஆனால் காலப்போக்கில் சந்திரன் பூமியை விட்டு வருடத் திற்கு 1.5 அங்குலங்கள் மெல்ல விலகிச் செல்வது அவதானிக் கப்பட்டது. சந்திரனின் ஒரு பக்கம்தான் எமக்குத் தெரிகின்றது, மறுபக்கம் எமக்குத் தெரிவதில்லை. சந்திரனின் ஒரு மாதம் என் பது சுமார் 29 நாட்களும், 13 மணித்தியாலங்களுமாகும்.

அமெரிக்காவும் சீனாவும் இயற்கைத் துணைக்கோளான சந்திர னில் தமது கொடியை நாட்டி இருக்கின்றன. வெற்றிகரமாக ரோவர்களைத் தரை இறக்கிய பெருமை ரஷ்யா, அமெரிக்கா மற் றும் சீனாவுக்கு உண்டு. செயற்கைக் கோள்களைச் சந்திரனின் சுற்றுப்பாதைக்கு அனுப்பிய பெருமை ரஷ்யா, அமெரிக்கா, சீனா, யப்பான், ஐரோப்பிய விண்வெளி நிறுவனம், இந்தியா ஆகி யவற்றுக்கு உண்டு. இதுவரை அமெரிக்கா மட்டும்தான் மனிதர்க ளைச் சந்திரனில் தரை இறக்கி இருக்கின்றது. நீல் ஆம்ஸ்ரோங் தான் சந்திரனில் 1969ம் ஆண்டு யூலை மாதம் 20ம் திகதி முதலா வதாக கால் பதித்தார். இதைத் தொடர்ந்து 1972ம் ஆண்டு வரை 12 விண்வெளி வீரர்கள் சந்திரனில் கால் பதித்திருக்கிறார்கள்.

சந்திரனில் இதுவரை கால் பதித்தவர்களின் பெயர்கள் பின்வரு மாறு: Neil Alden Armstrong, Buzz Aldrin, Alan Bean, Pete Conrad, Alan Shepard, Edgar Mitchell, David Scott, James Irwin, John Young, Charles Duke, Eugene Cernan, Harrison Schmitt. இவர்கள் எல்லோரும் ஆண்களே, பெண்கள் இதுவரை சந்திரனில் காலடி பதிக்கவில்லை. இவர்களில் நால்வர் இன்றும் உயிருடன் இருக் கின்றார்கள். சந்திரனில் மனிதரைத் தரை இறக்குவதில் அமெ ரிக்கா நாசாவின் அப்பலோ-11, அப்பலோ-12, அப்பலோ-14, அப் பலோ-15, அப்பலோ-16, அப்பலோ-17 ஆகியன ஈடுபட்டன. முதன் முதலாக வேற்றுத் துணைக்கோளில் வாகனமோட்டிய பெருமை அப்பலே-15ல் சந்திரனுக்குச் சென்ற டேவிட் ஸ்கொட் டுக்கும், அதில் பயணித்த பெருமை ஜேம்ஸ் இர்வின் என்பவரை யும் சாரும். 1972ம் ஆண்டுக்குப்பின் இன்றுவரை யாரும் சந்திர னில் காலடி வைக்கவில்லை. 2024ம் ஆண்டு ஒரு ஆணையும், ஒரு பெண்ணையும் சந்திரனுக்கு அனுப்பும் திட்டம் அமெரிக்கா வின் நாசாவுக்கு இருக்கின்றது.


செயற்கைக் கோள்களில் ஒன்றான சர்வதேச விண்வெளி நிலையம் (The International Space Station (ISS)) பூமியில் இருந்து சுமார் 250 மைல் உயரத்தில் அமைக்கப்பட்டது. 15 நாடுகள் ஒன்று சேர்ந்து இந்த நிலையத்தை விண்வெளியில் அமைப்பதற்குச் சுமார் 10 வருடங்கள் எடுத்தன. 357 அடி நீளமும், 460 தொன் எடையு முள்ள இந்த நிலையம் ஒரு உதைபந்தாட்ட மைதானமளவு இடத் தைக் கொண்டது. 1998ம் ஆண்டு நிர்மானிக்கப்பட்ட இந்த நிலை யம் ஒரு விநாடிக்கு ஐந்து மைல்கள் வேகத்தில் விண்வெளியில் நகர்ந்து கொண்டிருக்கின்றது. 90 நிமிடங்களுக்கு ஒரு முறை உலகைச் சுற்றி வருகின்றது. இந்த நிலையத்தில் தங்கி இருப்ப வர்கள் ஒரு நாளைக்கு 16 சூரிய உதயத்தையும், 16 சூரிய மறை வையும் காணமுடியும். இங்கு செல்வதற்கு குறைந்தது ஆறு மணி நேரம் எடுக்கின்றது. சில சமயம் 3 நாட்களும் எடுக்கின்றது. 2000ம் ஆண்டு நவம்பர் மாதம் 2ம் திகதி பில் ஷெப்பேட், யூரி ஜிட் சென்கோ, ஸேஜி கிரிஹல்வ் ஆகிய மூவரும் செயற்கைக்கோ ளான விண்வெளி நிலையத்தில் கால் பதித்தனர். இவர்களைத் தொடர்ந்து, பத்தாவது ஆண்டு நிறைவுவரை, 19 நாடுகளில் இருந்து 202 பேர் விண்வெளி நிலையத்திற்குச் சென்று திரும்பி யிருந்தனர். 2020 வரை 396 பேர் சென்றிருக்கிறார்கள். இந்த விண் வெளி நிலையம் ஆறு விண்கலங்களை ஒரே நேரத்தில் இணைக் கக்கூடிய வசதிகளைக் கொண்டது. இங்குள்ளவர்கள் இதுவரை 205 தடவைகள் நிலையத்தைச் சுற்றி விண்வெளியில் நடந்திருக் கிறார்கள். விண்வெளி நிலையத்தில் 665 நாட்கள் தங்கியிருந்து பெக்கி விற்சென் என்ற பெண்மணி சாதனை படைத்திருக்கின்றார்.

இவற்றைவிட புதன், வெள்ளி, செவ்வாய், வியாழன், சனி ஆகிய கோள்களில் ரோவர்கள் தரை இறங்கி இருக்கின்றன. குறுங்கோள் களிலும் ரோவர்களின் தரை இறக்கங்கள் நடைபெற்றிருக்கின்றன. சனிக்கிரகத்தின் சந்திரனான ரிற்ரானிலும் ரோவர் தரை இறங்கி யது. அமெரிக்காவின் நியர் (NEAR) என்ற விண்கலம் 1996ம் ஆண்டு புறப்பட்டு 221 மில்லியன் மைல்கள் பயணித்து ஈரோஸ் என்ற குறுங்கோளில் பெப்ரவரி 12ம் திகதி 2001ம் ஆண்டு தரை இறங்கியது. இதுவே குறுங்கோளில் நடந்த முதலாவது தரை யிறக்கமாகும். ஒசிறிஸ்ரெக்ஸ் என்ற விண்கலம் 2016ம் ஆண்டு 207 மில்லியன் மைல்களுக்கு அப்பால் உள்ள 'பென்னு' என்ற குறுங்கோள் நோக்கி அனுப்பப்பட்டது. 2018ம் ஆண்டு குறுங்கோ-ளின் சுற்றுப்பாதையைச் சென்றடைந்தது. 2020ம் ஆண்டு அக்டோ பர் மாதம் குறுங்கோளில் உள்ள மாதிரி மண்துகள்களைக் சேக ரித்துக் கொண்டு 2021 பூமியை நோக்கித் திரும்பிப் புறப்பட்டது. 2023ம் ஆண்டு செப்ரெம்பர் 24ம் திகதி இந்த விண்கலம் பூமியை வந்தடையும். 2004ம் ஆண்டு ஐரோப்பிய விண்வெளி நிலையத் தின் ரொசிட்டா என்ற விண்கலம் 2014ம் ஆண்டு Comet 67P/Churyumov-Gerasimenko (67P) என்ற வால்நட்சத்திரத்தில் தரை இறங்கியது. யப்பான் தனது ரோவரை இற்ரோஹாவா என்ற குறுங்கோளில் 2005ம் ஆண்டு தரை இறக்கியது. 2014ம் ஆண்டு யப்பானால் அனுப்பப்பட்ட ஹயாபுஸா-2 என்ற விண்கலம் 3.25 பில்லியன் மைல்கள் பயணித்து RYUGU என்ற குறுங்கோளில் இருந்து மாதிரி மண்ணையும், கற்துகள்களையும் கொண்டு வந் தது.

விண்வெளியில் சென்று தங்க விரும்பியவர்களுக்காக ஹோட்டல் ஒன்று 2025ம் ஆண்டு கட்டப்பட இருக்கின்றது. Orbital Assembly Corporation (OAC) என்ற நிறுவனத்தினர் 'வோஜெயர்' என்ற இந்த ஹோட்டலை விண்வெளியில் அமைக்க இருக்கிறார்கள். விண்வெளி நிலையத்தைப் போல, இந்த ஹோட்டலும் சுமார் 250 மைல்கள் உயரத்தில் அமையலாம். 400 பேர் தங்கக்கூடிய வசதி களைக் கொண்டதாக இந்த ஹோட்டல் இருக்கும். சூரிய சக்தி மூலம் இதற்குத் தேவையான மின்சாரம் பெற்றுக் கொள்ளப்படும். பயணிகள் தங்கக்கூடிய முறையில் செயற்கை முறையில் ஈர்ப்பு விசை ஏற்படுத்தப்படும். நாசாவின் ஓய்வு பெற்ற அனுபவம் மிக்க சில திறமைசாலிகள் இந்தத் திட்டத்திற்கு உதவ இருப்பதாகத் தெரிகின்றது. ஸ்பேஸ் எக்ஸின் 'ஸ்டார்ஸிப்' பயணத்திட்டங்கள் சரிவர இயங்குமானால், இந்த ஹோட்டலுக்கான விண்வெளிப் பய ணங்கள் இலகுவாக நடைபெற வாய்ப்புண்டு. விண்வெளி பற்றிய ஆய்வாளர்களுக்கு, அங்கு சென்று ஆய்வுகளை மேற்கொள்ள இது பெரும் உதவியாக இருக்கும். இத்திட்டம் சரிவரச் செயற்ப டுமானால், இரவு வானில் சந்திரனுக்கு அடுத்தாக ஒளிதரும் பெரிய செயற்கைக் கோளாக இது இருக்கும். எது எப்படி இருந் தாலும், உங்களுக்கு விண்வெளிப் பயணத்தில் ஆர்வம் இருந் தால், இப்பொழுதே நீங்கள் இந்த ஹோட்டலில் முன்கூட்டியே ஒரு அறையைப் பதிவு செய்து வையுங்கள். விண்வெளிக்குச் சென்ற முதல் தமிழன் என்ற மிக உயர்ந்த சாதனையை வரலாற் றில் நீங்கள் நிலைநிறுத்த முடியும்.


**உசாத்துணை:**

- https://en.wikipedia.org/wiki/List_of_rovers_on_extraterres-trial_bodies
- https://www.ctvnews.ca/sci-tech/perseverance-rover


kuruaravindan@thaiveedu.com




BRING YOUR PARENTS AND GRANDPARENTS WORRY FREE

Visit your one stop solution center
for all your super visa insurance needs...

SuperVisa.Today

www.supervisa.today #416 321 6000

# திருடப்பட்ட மூளை

சி. நற்குணலிங்கம்

கண்ணுக்குத் தெரியாத கோடிக்கணக்கான இணைப்புக்களைக் கொண்டதே மனிதமூளை. மனித நரம்பு மண்டலத்தின் தலைமையானதும், மனித உறுப்புக்களில் சிக்கலானதும் இதுவாகும். வளர்ந்த மனிதரின் மூளை எடை 1.5 கிலோகிராம். மனிதமூளை மணிக்கு 431கி.மீ. வேகத்தில் செயற்படக்கூடியது. 'மனித மூளை தான் உலகத்திலேயே மிகவும் சிக்கலான நிறுவனம்' என்று அறிவியல் பற்றி அதிகம் எழுதிய ஐசக் ஆசிமோவ் குறிப்பிட்டுள்ளார். 'உலகின் அதிவிரைவு கணினி ஒரு நொடிக்கு மேற்கொள்ளும் கணக்குகளைவிட அதிகமாகவே மனிதமூளையால் மேற்கொள்ள முடியும்' என்கிறார் போஹென். உலகிலேயே மிக மிக ஆச்சரியம் மனிதமூளை. மனிதமூளை (Human Brain) என்பது ஒரு இயந்திரம். இச்சிறப்பு வாய்ந்த மூளை எல்லோருக்கும் ஒரே மாதிரி தொழிற்படுகிறதா? என்றால் அது கேள்விக்குறிதான்.


இவரின் மூளை ஆச்சரியமான மூளைதான். இவர் 1879ம் ஆண்டு பங்குனி மாதம் 14ம் திகதி ஜேர்மன் வூர்ட்டம்பேர்க்கில் பிறந்தார். 1905ல் சூரிச் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர். யூதர் இனத்தைச் சேர்ந்தவர். குறிப்பிடத்தக்க பயன்பாட்டுக் கணிதத் திறமைகள் கொண்ட, ஒரு கோட்பாட்டு இயற்பியல் அறிஞர் ஆவார். 20ம் நூற்றாண்டின் மிக முக்கியமான அறிவியலாளராக பொதுவாகக் கருதப்படுகிறார். இந்த நூற்றாண்டின் சிறந்த மனிதர் என்ற பெயர் இவருக்கு வழங்கப்பட்டது. ஒளிமின் விளைவைக் கண்டுபிடித்து விளக்கியமைக்காகவும், கோட்பாட்டு இயற்பியலில் அவர் செய்த சேவைக்காகவும் 1921ல் இவருக்கு இயற்பியலுக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. இச்சிறப்பு வாய்ந்த மூளைக்கு உரித்துடையவர் ஆல்பர்ட்ஐன்ஸ்டைன் (ALBERT Einstein) ஆவார். தற்காலத்தில் பொதுப் பயன்பாட்டில் ஐன்ஸ்டைன் என்ற சொல், அதிக புத்திக்கூர்மை உள்ள ஒருவரைக் குறிக்கும் சொல்லாக மாறிவிட்டது. இவர் சார்பியல் தத்துவத்தையும், போட்டோ எலக்ட்ரிக் செல்லையும் கண்டுபிடித்ததோடு நிற்கவில்லை. இவர் தான் குளிர்சாதனப்பெட்டியையும் கண்டுபிடித்தார். இவர் 300க்கும் அதிகமான அறிவியல் ஆய்வுகளை நிகழ்த்தியுள்ளார். வித்தியாசமான சாதனைகள் புரிந்த மூளை என்பதால் இவரின் மூளை திருடப்பட்டது.


இவர் 1955.04.18ல் தனது 76வது வயதில் காலமானார். பின்னர் பிரின்ஸ்டன் பல்கலைக்கழக மருத்துவமையத்தில் அவருக்கு உடற்கூறு பரிசோதனை செய்த நோயியல் துறையைச் சார்ந்த ஹார்வி, உலகின் மிகப் பிரபலமான ஐன்ஸ்டைனின் மூளையை அனுமதி இல்லாமல் எடுத்துச் சென்று ஒரு கண்ணாடிக் குடுவைக்குள் போட்டு வைத்துக்கொண்டார். மூளையை திருடியமை காரணமாக மருத்துவமனை நிர்வாகம் அவரைப் பணியிலிருந்து நீக்கியது. ஆனாலும் அவரது மூளையை ஹார்வி தானே வைத்திருந்ததோடு, இதை வேறு யாரும் வைத்துக்கொள்ள விரும்புவார்கள் என்று நான் நினைக்கவில்லை என்றும் குறிப்பிட்டுக்கொண்டார். தாமஸ் ஹார்வி 1996ம் ஆண்டு கனடாவில் உள்ள இரண்டு விஞ்ஞானிகளிடம் 'இம் மூளையை ஆய்வு செய்ய விருப்பமா' என வினாவியபோது அவர்கள் அதனை ஏற்றுக்கொண்டதால், அந்தக் களவாடப்பட்ட மூளை அவர்களிடம் ஆய்வுக்காக ஒப்படைக்கப்பட்டது. அவர்கள் மூளையை ஆராய்ச்சி செய்து அது சின்ன மூளை என்றும், அதன் எடை 1230 கிராம் மட்டுமே என்றும் கூறினர். அத்துடன் பசை செல்கள் (GLIA) அதிகம் இல்லை என்றும், அதன் சுவர் மடல்கள் (Parietal Lobes) மற்றவர்கள் மூளையைவிட 15% அதிகமாக இருந்தாகவும் குறிப்பிட்டனர்.

அந்தப் பகுதியே கணிதச் சிந்தனைகளை உருவாக்குகிற பகுதி எனவும், அது பலமாக இருந்ததால்த்தான் மிகவும் அதிகமான கணிதங்களை மிகவும் எளிதில் போடும் ஆற்றல் ஐன்ஸ்டைனுக்கு இருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளனர். இவரது மூளையில் சுவர் மடலின் நெடுகே ஓடும் சில்வியன்பிளவு (Sylvian Fissure) என்கிற ஒரு பகுதியைக் காணவில்லை. அதனால் நரம்பணுக்கள் எளிதில் தொடர்பு வைக்கவும், தகவல் பரிமாறவும் முடியும். இந்த மூளை மின்னோட்ட இயந்திரத்தின் காரணமாக சொற்களின் தேவையின்றியே அவரால் பிம்பங்களைச் சிந்திக்க முடிந்தது என்றும், கணக்குகளுக்குக் கணித மொழியில் விடை காண முடிந்ததென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவரது மூளை இப்படிப்பட்டதாக இருந்ததால்த்தான் இறந்த பின் திருடப்பட்டுள்ளது.
இறந்த பின்னும் இவரது மூளையின் பெறுமதியும், மதிப்பும், மரியாதையும் குறையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



natkunalingam@thaiveedu.com





# சூயெஸ் கால்வாய்

- சுப்ரமணியம் ஜெயசீலன்

மனிதரின் அசாத்தியமான திறமைகளினால் இந்த உலகின் போக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் மாற்றம் பெற்றுள்ளது என்றால் அது மிகைப்படாது. அந்த வகையில் கடல் போக்குவரத்தில் மனித வர்க்கம் படைத்த வரலாற்று சாதனைகளில் ஒன்றாக சூயெஸ் கால்வாய் நிர்மானிப்பினை குறிப்பிட முடியும். எகிப்து நாட்டில் அமைந்துள்ள இந்த கால்வாய் மத்தியதரைக் கடலையும் செங்கடலையும் இணைக்கும் வகையில் நிர்மானிக்கப்பட்டுள்ளது. உலகில் வேறும் எங்குமில்லாத புவியியல் அமைவிடம் இந்தக் கால்வாய் நிர்மானத்தை வெற்றிகரமாக முன்னெடுக்க உதவியது எனலாம். சுமார் 300 மீற்றர் அகலத்தையும் 163 கிலோ மீற்றர் நீளத்தையும் கொண்டமைந்த இந்தக் கால்வாய் 1869ம் ஆண்டில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

கடல்களை இணைக்கும் வகையில் செயற்கையாக உருவாக்கப்பட்டுள்ள இந்த கால்வாய் கப்பல் போக்குவரத்து துறையில் திருப்புமுனையாக அமைந்துள்ளது. ஏனெனில், இந்த கால்வாய் பாதையின் ஊடாக பயணம் செய்வதனால் பெருமளவு நேரத்தை சேமிக்க முடிவதுடன் ஆசியாவையும் ஐரோப்பாவையும் கப்பல் போக்குவத்தில் இணைக்கும் ஒரு கேந்திர நிலையமாக சூயெஸ் கால்வாயை அடையாளப்படுத்த முடியும். இந்தக் கால்வாய் பிரெஞ்சு பொறியியலாளர் பெர்டினார்ட் டி லெஸ்லிப்ஸ் என்பவரினால் நிர்மானிக்கப்பட்டது. பொதுவாக இந்த விடயங்களை நம்மில் பலர் அறிந்திருப்போம் என்ற போதிலும், சூயெஸ் கால்வாய் பற்றி தற்பொழுது அதிகம் பேசப்பட்டு வருகின்றது. அதன் முக்கியத்துவம் கப்பல் ஒன்று கால்வாயில் தரைதட்டி நிற்பதனால் உலகப் பொருளாதாரமும், நுகர்வோர் சமூகமும் எதிர்நோக்கும் நெருக்கடிகள் பற்றிய சுருக்கமான ஒரு நோக்காக இந்த பத்தி அமையவுள்ளது.

ஜப்பானிய ஷொய் கிஷன் காய்சா நிறுவனத்துக்கு சொந்தமான தாய்வானின் எவர் கிரீன் மரைன் நிறுவனத்தின் கீழ் குத்தகை அடிப்படையில் நிர்வாகம் செய்யப்பட்டு வரும் எவர் கிவன் என்னும் பாரிய சரக்கு கப்பல் கடந்த மார்ச் மாதம் 23ம் திகதி சூயெஸ் கால்வாயில் தரைதட்ட, கால்வாய் பாதையை அடைத்துக் கொண்டது. கடுமையான புழுதிப் புயல் காரணமாக கப்பல் திசை மாறி கால்வாயின் பக்கவாடுகளில் மோதுண்டதனால் இவ்வாறு ஸ்தம்பித்துள்ளது. காலநிலை காரணிகளினால் மட்டும் இவ்வாறு விபத்து நேர்ந்திருக்க வாய்ப்பில்லை எனவும் இது தொழில்நுட்ப அல்லது மனித தவறினால் ஏற்பட்டிருக்கலாம் எனவும் மாறுபட்ட விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில், இதுவரையில் இந்த விபத்து குறித்து விசாரணை முடிவுகள் வெளியாகவில்லை.

கொவிட்-19 நுண்மித் தொற்று அனர்த்தத்தினால் உலகப் பொருளாதாரம் அடைந்துள்ள பின்னடைவு நிலையில் மீள்வதற்கு இன்னும் குறிப்பிட்டளவு கால அவகாசம் தேவைப்படும் என பொருளியல் நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ள நிலையில், மற்றுமொரு பேரிடியாக இந்த சரக்கு கப்பல் விவகாரம் பூதாகாரமாகியுள்ளது.

உலக வர்த்தகத்தின் பன்னிரெண்டு வீதமான அளவு, ஆண்டுதோறும் சூயெஸ் கால்வாயை ஊடறுத்து செல்கின்றது என்ற ஒரு புள்ளிவிபரத் தகவல்கள் இந்த பிரச்சினையின் விசாலத்தை புரிய வைப்பதற்கு போதுமானது. எவர் கிவன் என்ற இந்த சரக்கு கப்பல் சுமார் 400 மீற்றர் நீளமுடையது என்பதுடன் 224,000 தொன் எடையுடையது என்பது குறிப்பிடத்தக்கது.

### சூயெஸ் கால்வாய் ஏன் முக்கியத்துவம் வாய்ந்தது?


சூயெஸ் கால்வாய் அமைந்துள்ள இடமே கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாகும். ஐரோப்பாவுடன் அரேபிய கடல், இந்து சமுத்திரம் மற்றும் ஆசிய பசுபிக் நாடுகளை இணைக்கும் வகையிலான ஒரேயொரு கப்பல் போக்குவரத்துப் பாதையாக சூயெஸ் கால்வாய் அமைந்துள்ளது. இந்த கால்வாய்ப் பாதையை ஊடறுத்து மேற்கொள்ளும் பயணங்களினால் பாரியளவில் காலம் சேமிக் கப்படுகின்றது என்பது முக்கியமான ஏதுவாகும்.

உதாரணமாக இத்தாலியிலிருந்து இந்தியா நோக்கி கப்பல் பயணம் மேற்கொள்ள வேண்டுமாயின் 4400 கடல் மைல்களை கடக்க நேரிடும். மணிக்கு 20 நொட்ஸ் (20 knots) என்ற வேகத்தில் கப்பல் பயணித்தால் ஒன்பது நாட்களில் பயண தூரத்தை சென்றடைய முடியும். எனினும் இந்த பயண தூரத்தை இதற்கு அடுத்தடியாக காணப்படும் மிகவும் குறுகிய கடற்பாதையின் ஊடாக, அதே கப்பல் வேகத்தில் பயணித்தால் 10500 கடல் மைல்களை கடக்க நேரிடும். அதாவது மூன்று வாரங்கள் தேவைப்படுகின்றது. ஒரே பயண இலக்கினை சூயெஸ் கால்வாய் வழியாக அடைவதற்கு ஒன்பது நாட்களும் வேறும் வழியாக பயணிப்பதற்கு சுமார் 21 நாட்களும் தேவைப்படுகின்றது.

இந்த உதாரணம் ஊடாக சூயெஸ் கால்வாய் கப்பல் போக்குவரத்தில் எவ்வளவு பெரிய தாக்கத்தை செலுத்துகின்றது என்பதனை புரிந்து கொள்ள முடிகின்றது. குறிப்பாக உலகப் பொருளாதாரம் ஏற்றுமதி இறக்குமதி துறையில் பெருமளவு தங்கியுள்ள நிலையில் நீண்ட காலத்தை போக்குவரத்திற்காக செலவிடுவதனை எந்தவொரு தரப்பும் விரும்பப்போவதில்லை. சூயெஸ் கால்வாயின் கப்பல் போக்குவரத்துப் பயணப் பாதைக்கு நிகரான மாற்று கப்பல் போக்குவரத்து பயணப் பாதைகள் எதுவும் கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது. ஐரோப்பாவையும் ஆசிய பசுபிக் நாடுகளையும் இணைக்கக்கூடிய வகையில் வேறு எந்தவொரு நிலப்பரப்பிலும் இவ்வாறானதொரு கால்வாயினை அமைக்கக்கூடிய சாத்தியமில்லை. இந்த சூயெஸ் கால்வாய் ஊடாக ஆண்டு தோறும் சுமார் 19,000 கப்பல்கள் பயணிப்பதாக லொயிட்ஸ் கப்பல்துறை சஞ்சிகை தெரிவிக்கின்றது.

கொவிட் நோய்த் தொற்று காரணமாக உலக அளவில் பொருட்கள் விநியோக சங்கிலியில் முடக்க நிலைமை காணப்பட்டதாகவும், சூயெஸ் கால்வாய் கப்பல் போக்குவரத்தில் ஏற்பட்ட தடையானது பெரும் பொருளாதார தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உடற் பயிற்சிக்காக பயன்படுத்தப்படும் சைக்கிள் முதல் நாம் உண்ணும் சீஸ் வரையில் அனைத்துப் பொருட்களுக்குமான




கேள்வி உயர்வடையும் எனவும் பொருட்களின் விலையில் சடுதியான உயர்வினை எதிர்பார்க்க முடியும் எனவும் குறிப்பாக எரிபொருள் விலையில் மாற்றத்தை எதிர்நோக்க நேரிடும் எனவும் ஊகங்கள் வெளியிடப்பட்டது.

உலகின் 80 வீதமான பொருட்கள் கடல் மார்க்கமாக அல்லது கப்பல் வழியாகவே போக்குவரத்து செய்யப்படுகின்றது. எவர் கிவன் கப்பல் தரைதட்டியதனால் சூயெஸ் கால்வாய் கப்பல் போக்குவரத்தில் ஏற்பட்டிருந்த ஸ்தம்பித நிலையானது கப்பல் விநியோக செலவினை மேலும் உயர்வடையச் செய்யும். கப்பலில் பொருட்களை கொண்டு செல்வதற்கான கிரய அதிகரிப்பானது அந்தப் பொருட்களுக்கான விலை நிர்ணயத்தில் நேரடித் தாக்கத்தை செலுத்தும் அதேவேளை, அது நுகர்வோரின் கொள்வனவு இயலுமையை வலுவிழக்கச் செய்யும் என்பது குறிப்பிடத்தக்கது.

கப்பல் தரைதட்டியிருந்த காரணத்தினால் சுமார் 300க்கும் மேற்பட்ட கப்பல்கள் கால்வாயின் இரண்டு முனைகளிலும் முடங்கியிருந்தன. எவர் கிவன் கப்பல் தரைதட்டியதனால் நாள் ஒன்றுக்கு 9.6 பில்லியன் டொலர் பெறுமதியான பொருட்கள் முடங்கியிருந்ததாகவும் மணித்தியாலத்திற்கு 400 மில்லியன் டொலர் பெறுமதியான பொருட்கள் ஸ்தம்பித்திருந்ததாகவும் லொயிட்ஸ் கப்பல் துறைசார் நிறுவனம் தெரிவிக்கின்றது. இந்தக் கால்வாய் பாதை மூடப்பட்டிருப்பதனால் நாள் தோறும் எகிப்து சுமார் 14 மில்லியன் டொலர் வருமானத்தை இழக்க நேரிட்டதாக சூயெஸ் கால்வாய் அதிகாரசபையின் தலைவர் ஒசாமா ராபீ தெரிவிக்கின்றார்.

மிகவும் விசாலமான கப்பல் என்பதனாலும் பாரியளவில் சரக்கு காணப்படுவதனாலும் இந்த கப்பலை கால்வாய் பாதையிலிருந்து அகற்றுவது சுலபமானதல்ல என கப்பல்துறைசார் வல்லுனர்கள் தெரிவித்திருந்தனர். குறிப்பாக கப்பலின் எடையை குறைப்பது எளிதில் செய்யக் கூடியதல்ல எனவும், இதனால் கப்பலை துரித கதியில் அகற்றுவது நடைமுறைச் சாத்தியமற்றது எனவும் நிபுணர்கள் தெரிவித்திருந்தனர்.

சூயெஸ் கால்வாய் வழியாக பயணம் செய்யும் சில கப்பல்கள் ஆபிரிக்கா வழியாக பயணத்தை தொடர்ந்துள்ள நிலையில் சில கப்பல்கள் இடைநடுவில் ஸ்தம்பித்து நின்றன.

இவ்வாறான ஒரு பின்னணியில் கடந்த 29ம் திகதி (29-03-2021) எகிப்து நேரப்படி பிற்பகல் 3.00 மணியளவில் தரைட்டிய சூயெஸ் கால்வாயின் போக்குவரத்துப் பாதையை முடக்கியிருந்த எவர்கிவன் கப்பல் வெற்றிகரமாக மீட்கப்பட்டது.

பல்வேறு தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் வல்லுனர்களினால் தரைதட்டிய இந்தக் கப்பலை மீட்கும் சவால் துரித கதியில் வெற்றிக்கொள்ளப்பட மாட்டாது என அறிவிக்கப்பட்ட போதிலும், ஒரு வார காலத்திற்குள் கப்பல் மீட்கப்பட்டது.

தரைதட்டிய பகுதியை தூர்வாரல் (Dredging) அதாவது அந்தப் பகுதியில் காணப்படும் மண்ணை அகழ்ந்து எடுத்தல், படகுகள் மூலம் இழுத்தல் அல்லது தள்ளுதல் (Tugs), கப்பலின் எடையை குறைத்தல் ஆகிய சில வழிமுறைகளைப் பயன்படுத்தி இந்த கப்பல் தரைட்டலிலிருந்து மீட்கப்பட்டிருந்தது.

இந்தக் கப்பற்பாதையில் தேங்கிக் கிடக்கும் கப்பல்களை முழுமையாக ஒரு முனையிலிருந்து மறுமுனைக்கு வெளியேற்றுவதற்கு குறைந்தபட்சம் நான்கு நாட்கள் தேவைப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

தரைதட்டலிருந்து மீட்கப்பட்ட கப்பல் பூரணமாக பரிசோதனை செய்யப்பட்டு அதில் ஏதேனும் தொழில்நுட்ப கோளாறு காணப்படுகின்றதா என்பது கண்டறியப்பட்டதன் பின்னரே அதனை பயணம் செய்ய அனுமதிக்கப்படும் என சூயெஸ் கால்வாய் அதிகார சபையின் தலைவர் ஒசாமா ராபீ தெரிவிக்கின்றார். ஏனெனில் கால்வாயில் எவ்வித கோளாறும் கிடையாது என்பதனால் இந்த விபத்து எவ்வாறு நேர்ந்தது என்பது கண்டறியப்பட வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டுகின்றார். கப்பல் விபத்து எதனால் ஏற்பட்டது என்பதனை அறிந்து கொண்டால் நட்டஈடு கோரிக்கை முன்வைப்பது குறித்து கவனம் செலுத்தப்பட முடியும் என தெரிவிக்கின்றார்.

கப்பல் தரைதட்டியதனால் பயணம் முடக்கப்பட்டிருந்த கப்பல்கள் வந்த வரிசையின் அடிப்படையில் பயணம் செய்ய அனுமதிக்கப்படும். அதேவேளை, கால்நடைகள் உள்ளிட்ட அவசரமாக பயணம் செய்யப்பட வேண்டிய சரக்குகளை உள்ளடக்கிய கொள்கலன்களைக் கொண்ட கப்பல்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கப்பல் பாதை வழமைக்கு திரும்புவதற்கு சில வாரங்கள் தேவைப்படும் எனவும், ஐரோப்பா உள்ளிட்ட துறைமுகங்களில் கொள்கலன் கப்பல் சேவைகளின் வேலைப்பளு வெகுவாக அதிகரிக்கும் எனவும் லொயிட்ஸ் சஞ்சிகையின் சுட்டிக்காட்டியுள்ளது.



jeyaseelan.s@thaiveedu.com

# MORTGAGE SOLUTIONS

## SAVE UPTO 75% REFINANCE

## MONTHLY SAVING $2,409

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit -2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card -1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credt Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 2.9% | | $1,605.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,524.55 |



**KIRUBA THANABALASINGHAM**

Mortgage Agent Lic# M12002440

info@mortgagesolutions.ca

www.MortgageSolutions.ca

Ultimate Mortgage and Finance Solutions Inc. Lic#11995

## Prime + 1% Lower Rate

## $50,000 EQUITY LOAN

## GET APPROVED WITHIN 24 HOURS

**416.298.2777**

## $375 Mo.

## MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5

# ஒட்டகம் ஆசனம்

- பாதுசா ஆனந்தநடராசா

ஆசனப் பயிற்சிகளைச் செய்யும் பொழுது சில ஆசனங்களின் தோற்றமானது மிருகங்களைப் போன்ற தோற்றத்தில் அமைவதால் அந்த மிருகங்களின் பெயராலேயே அவ்வாசனங்களையும் குறிப்பிடுவர். அதேபோல், இந்த ஆசனத்தில் பின் பக்கமாக வளைந்து குதிகால்களைத் தொடும்பொழுது ஏற்படும் உடலின் தோற்றமானது, ஒட்டகம் நிற்பதைப் போன்ற தோற்றத்தினை அளிப்பதனால் ஒட்டக ஆசனம் எனப்பட்டது. உடல் முழுவதையும் பின்பக்கமாக வளைத்து குதிகால்களைத் தொடுவது என்பது இலகுவாக செய்துவிடமுடியாது. நீண்ட நாள் பயிற்சியில் இருப்பவர்களால் மட்டுமே இந்த ஆசனத்தைச் செய்ய முடியும். நீண்ட நேரம் முன்னால் வளைந்திருந்து வேலை செய்பவர்களுக்கு இது ஒரு சிறந்த ஆசனம் ஆகும்.

## ஆசனத்திற்குத் தயார்படுத்தல்:





இந்த ஆசனம் முழங்காலில் நின்று செய்யும் ஆசனமாகும். சவாசனம் நிலையில் உடலையும், மனதையும் நன்றாக ஆறுதல்படுத்திய பின்னர், வீராசன நிலைக்குச் செல்லவும். வீராசன ஆசனத்தில் கால்கள் இரண்டையும் நேராக நீட்டி வைத்து வலது குதிகாலை மடித்து, வலது குதிகாலை வலது புட்டத்தின் அடியிலும், இடது காலை மடித்து இடது குதிகாலை இடது புட்டத்தின் அடியிலும் வைக்கவும். இரண்டு குதிக்கால்களுக்கும் இடையில் புட்டப் பகுதி இருக்க வேண்டும். முழங்கால்களிலிருந்து கால் விரல்கள் வரை நிலத்தில் பதிந்திருக்கும். இரண்டு கைகளையும் நீட்டி தொடைப் பகுதியின் மேல் வைத்து, உள்ளங்கை கைகள் தொடைப் பகுதிகளுக்கு மேல் இருக்குமாறு வைத்திருக்கவும். முழங்கைகள் சிறிது மடித்த நிலையில் இருக்கும். முதுகு, கழுத்து, தலை நேராகவும் உடலைத் தளர்வாகவும் வைத்திருக்கவும். இந்த வீர ஆசன நிலையிலிருந்து ஒட்டக ஆசனத்திற்குத் தயார்படுத்த வேண்டும்.

## ஆசனத்திற்கு செல்லும் முறை:

மேற்குறிப்பிட்டவாறு வீராசனம் நிலையிலிருந்து முழங்கால்களில் நிற்கவும். கைகளை உடலுக்கு இரு பக்கமாகவும் வைக்கவும். கால் பாதங்கள், தொடைப்பகுதி, முழங்கால்களை ஒருங்கிணைத்தவாறு சேர்த்து வைத்திருக்கவும். கால் பாதங்களின் மேல் பகுதி நிலத்தில் ஆறுதல் அடைந்த நிலையில் இருக்கும். கால் விரல்கள் பின்பக்கமாக நீட்டப்பட்டு இருக்கும். உடல் பகுதியையும் மேல் நோக்கி நீட்டி நேராக நின்ற நிலையில் மூச்சை சமமாகவும், சீரான நிலையிலும் வைத்திருப்பதில் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மூச்சை வெளி விட்டவாறு உள்ளங்கைகளை புட்டப் பகுதியில் வைத்து இடுப்பு பகுதியை முன்பக்கமாகத் தள்ளவும். தொடைப் பகுதியை முக்கோண நிலையில் செங்குத்தாக வைத்திருக்கவும். உடலின் வசதிக்கேற்ப தலையைப் பின்பக்கமாக வளைத்து முதுகுத் தண்டு வடத்தையும் பின் பக்கமாக வளைப்பதன் மூலம் உடலானது பின் நோக்கி தள்ளப்படும். உடல் முழுவதையும் ஆறுதல் நிலையில் வைத்திருக்க வேண்டும். முதுகுப் பகுதி தசைகள் உள்பக்கமாக நன்கு மேலே இழுக்கப்பட்டிருக்கும். விலா எலும்புகள் நன்கு விரிவடைந்த நிலையில் நெஞ்சுப் பகுதி அகட்டப்பட்டு மூச்சு நிலை இயல்பாக இருக்கும். தோள்பகுதியை பின் பக்கமாக தள்ளி கைகளை நன்றாக நீட்டி தோள்களுக்கும் பாதங்களுக்கும் இடையில் நேர்கோட்டில் வைத்திருக்கவும்.

மூச்சை உள்ளே இழுத்தவாறு தலையை பின்பக்கமாக தொங்க விட்ட நிலையில் வலது கையால் வலது குதிக் காலையும், இடது கையால் இடதுகுதிக்காலையும் பிடிக்கவும். மூச்சைச் சீராக

உள்ளே இழுத்து வெளியே விடவேண்டும். இதுவே ஆசனத்தின் முழு நிலை ஆகும்.

## ஆசனத்தில் நிலை கொள்ளல்:

இந்த ஆசனத்தில் நிலை கொள்ளும் பொழுது உடற் பாரமானது கைகளிலும், கால்களிலும் சமமான நிலையில் இருக்குமாறு வைத்திருத்தல் வேண்டும். தோள்களைப் பின்பக்கமாக வளைத்து வைத்திருப்பதற்கு கைகள் நங்கூரம் போன்ற நிலையில் குதிகால்களில் அழுத்தி வைக்கப்பட்டு இருக்க வேண்டும்.

முதுகுப் பகுதியானது வளைக்கப்பட்ட நிலையில் நிலத்துக்கு சமாந்தரமாக இருக்கும். நெஞ்சுப் பகுதி மேல் நோக்கி நன்கு விரிக்கப்பட்டு அகன்ற நிலையில் இருக்கும். தொடைகள் வெளிப் பக்கமாக மேல்நோக்கித் தள்ளப்பட்டு இருக்கும். வயிற்றுத் தசைகள் நன்கு இழுக்கப்பட்டு இருக்கும். புட்ட பகுதியை இறுக்கி முதுகெலும்பின் அடியில் வால்ப் பகுதி எலும்பு முன் தள்ளப்பட்டு இருக்கும். முதுகின் மேல் பகுதியும், கைகளின் மேல் பகுதியும், தோள்கள், மற்றும் கழுத்துப் பகுதியும் முழுமையாகத் தூண்டப்பட்டு இயக்கம் பெற்றிருக்கும். கண்கள் திறந்த நிலையில் இருக்

கும். உள்ளங்கைகள் உறுதியாக குதிகால்களைப்பிடித்தவாறு இருக்கும். ஆரம்பத்தில் இப்பயிற்சியை செய்யும்பொழுது கடின-மாக இருந்தால் கால் பாதங்களின் முன் பக்கத்திற்கு அழுத்தம் கொடுத்து பயிற்சியைச் செய்யலாம்.

## ஆசனத்தில் இருந்து வெளிவரும் முறை:

மூச்சை வெளியே விட்டவாறு குதிகால்களைப் பிடித்திருக்கும் உள்ளங்கைகளைத் தளர்த்தவும். உடலை மெதுவாக உயர்த்தி வலது குதிக்காலில் பிடித்திருக்கும் வலது கையை உடலுக்குப் பக்கவாட்டில் கொண்டு வரவும். பின்பு இடது குதிகாலைப் பிடித் திருக்கும் இடது கையையும் உடலுக்கு இடப்பக்க மாகக் பக்க வாட்டில் கொண்டுவரவும். பின்பு தொடைப் பகுதியிலிருந்து நெஞ் சுப் பகுதி வரை உடலை நேராக்கி நேராக முழங்கால்களில் நின்று இதற்கு மாற்று ஆசனமாக சிசு ஆசனத்தில் ஓய்வு கொள் ளவும்.

## மாற்று ஆசனம்:

ஒட்டக ஆசனத்தை பின்பக்கமாக உடலை வளைத்துச் செய்த நிலையில் உடலின் சமநிலைத் தன்மையைப் பேணுவதற்காக மாற்று ஆசனமாக முன்னால் குனிந்து செய்யும் ஆசனமான சிசு ஆசனத்தை செய்ய வேண்டும். வீராசனத்தில் இருந்து புட்ட பகு தியை குதிகால்களில் வைத்து முன்னால் குனிந்து நெற்றியால் நிலத்தைத் தொடவும். கைகள் இரண்டும் உடலுக்கு பக்கவாட்டில் நிலத்தை தொட்டவாறு இருக்கும். உள்ளங்கைகள் மேல் நோக்கி யும் இருக்கும். இந்த நிலையில் மூச்சை உள்ளிழுத்து, வெளி விட்டவாறு உடலை ஆறுதல் படுத்தவும்.

## மூச்சின் தன்மை:

பயிற்சியில் முழுமையடைந்த நிலையில் நெஞ்சுப் பகுதி நன்றாக அகட்டி விரிக்கப்பட்டிருக்கும் பொழுது, நீண்ட மூச்சை ஆறுதலா கவும் மெதுவாகவும் உள்ளே எடுத்து வெளிவிடவேண்டும். தலையை பின்னால் சாய்த்துப் பயிற்சிக்கு செல்லும் பொழுது மூச்சை உள்ளே இழுத்து படிப்படியாக பயிற்சிக்கு செல்லும் பொழுது மூச்சை வெளி விட்டவாறு இருக்க வேண்டும். இவ் ஆசனத்தில் மூச்சுநிலையை ஆறுதலாக உள்ளெடுத்து வெளி விடுவதில் கவனம் கொள்ள வேண்டும். பயிற்சியை விட்டு வெளி-வரும் பொழுது மூச்சை வெளிவிட்டவாறு வரவேண்டும்.

## பயிற்சியின் கால அளவு:

திரும்பவும் இந்த ஆசனத்தை மூன்று தடவைகள் வரை செய்ய லாம். ஆரம்ப நிலை பயிற்சியாளர்கள் 30 வினாடிகள் வரை பயிற் சியைச் செய்யலாம். படிப்படியாக மூன்று நிமிடங்கள் வரை பயிற்சியில் நிலை கொள்ளலாம்.

## பொதுவான தவறுகள்:


- கைகளை இறுக்கமாக வைத்திருத்தல் கூடாது.
- பின் பக்கமாக சாய்த்து தொங்கவிட்ட தலையை இறுக்கமாக வைத்திருக்கக்கூடாது.
- தொண்டைப் பகுதியை வலிவரும் அளவுக்கு வளைத்து வைத்திருக்கக்கூடாது.
- பயிற்சியை விட்டு வெளிவரும் பொழுது உடனே கால்களை நீட்டக்கூடாது. இதனால் முழங்கால் மூட்டுக்கள் கழருவதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படலாம். இருந்த பின்பே கால்களை நீட்ட வேண்டும்.
- கடுமையான மலச்சிக்கல், அதிக வயிற்றுப்போக்கால் அவதிப் படுபவர்கள் இவ்வாசனத்தை செய்தல் கூடாது.
- ஒற்றைத் தலைவலி, மன அழுத்தத்தினால் ஏற்படும் தலைவலி நோயால் பாதிக்கப்படுபவர்கள் இவ்வாசனத்தை செய்யக்கூ டாது.
- இதயநோயால் சத்திரசிகிச்சை செய்து கொண்டவர்கள் கடுமை யான முறையில் இப்பயிற்சியை செய்யக்கூடாது.

## ஆசனத்தின் பயன்கள்:

- தசைகளின் செயற்பாட்டைப் பார்ப்போமாயின் முதுகுப் பகுதி, நெஞ்சுப் பகுதி, வயிற்றுப் பகுதி தசைகள் மற்றும் தோள் பகுதி, கைப்பகுதி தசைகள் யாவும் இழுத்து நீட்டப்படுகின் றன. இதனால் இப்பகுதிகளின் இறுக்க நிலையானது குறைவ டைந்து இலகுவாக நீட்டி வளைக்கும் தன்மையை ஏற்படுத்து கின்றது.
- வயிற்றுப்பகுதி நன்கு இழுக்கப்படுவதால் சீரண சக்தி அதிக ரிப்பதோடு வயிற்றுப் பிரச்சினைகளைக் குறைக்கிறது. மாதவி டாய் கோளாறுகள் சீராக்கப்படுகின்றன.
- நெஞ்சுப் பகுதியானது நன்கு விரித்து இழுக்கப்படுவதனால் நுரையீரலுக்கு காற்றின் கொள்வனவு அதிகரித்து பிராண வாயு வின் ஓட்டம் அதிகளவில் ஏற்பட வழிவகுக்கின்றது. இதனால் இழுப்பு நோய், சுவாசக் குழாயின் உட்புறச் சுவரில் ஏற்படும் வீக்கம் மற்றும் நுரையீரல் சம்பந்தப்பட்ட நோய்களை குறைக் கிறது.
- எலும்புகளின் முக்கிய பகுதிகளான முதுகுத் தண்டு வடம், கால் எலும்புகள், கை எலும்புகள் நன்கு நீட்டி வளைக்கப்படு கின்றன. இதனால் மூட்டுக்களில் ஏற்படும் பிரச்சினைகள் மற் றும் கால் கைகளை நீட்டி வளைப்பதற்கு இலகுவான நிலையை ஏற்படுத்துகின்றது. அத்துடன் ஆசனங்களின் நிலை-களை இலகுவாக்கி நீண்ட நேரம் ஆசனங்களில் நிலை கொள்ள முடிகிறது.
- இந்த ஆசனத்தை செய்வதன் மூலம் தியானம் செய்பவர்கள் எளிதான இருக்கை நிலை அமைத்துக்கொண்டு நீண்ட நேரம் தியானம் செய்ய முடிகிறது.
- உடலுக்கு நல்ல தோற்றத்தையும், உடல் உறுதியையும்











கொடுக்கிறது.

- பின்னால் வளைவதன் மூலம் முதுகுத் தண்டுவட நரம்புகள் தூண்டப்பட்டு கூனல் முதுகு, தோள்களின் இறக்கம் இவற்று டன் முதுகுப் பகுதி முழுவதும் சீரான இயக்கத்தைப் பெறு கின்றன. கழுத்தின் முன்பகுதி நன்கு இழுக்கப்படுகிறது இத னால் தைராய்டு சுரப்பிகள் ஒழுங்குபடுத்தப்படுவதுடன், தைராய்ட் கூடிக் குறைவதனால் ஏற்படும் பிரச்சினைகளை சமன் செய்கிறது.
- உடல் முழுவதற்கும் இரத்த ஓட்டம் அதிகரிக்கப்படுகின்றது. வயிற்றுப்பகுதி, முதுகுத் தண்டுவடம், கழுத்துப்பகுதி மற்றும் உடல் முழுவதற்கும் சீரான உயிர்சக்தி ஓட்டத்தை ஏற்படுத்து கின்றது.
- சுவாதிட்டானம் மற்றும் விசுத்தி சக்கரத்தின் செயல்திறன் அதி-கரிக்கப்படுவதனால் மனதில் தெளிவு நிலை ஏற்படுகின்றது. இதனால் நமது செயல்பாடுகளை அறிவுபூர்வமாக செய்ய முடி கிறது.

## பயிற்சியின் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை:

இந்த ஆசனத்தை பொறுத்தவரையில் உடலை இலகுவாக வளைப்பதற்கு ஏற்ற முறையில் உணவின்பின் நான்கு மணி நேர இடைவெளியும், சிற்றுண்டியின்பின் இரண்டு மணிநேர இடை-வெளியும் முக்கியமானதாகும். ஏனெனில் உடலைப் பின்னால் வளைக்கும் பொழுது உடல் இலேசானதாக இருக்க வேண்டும். மலசலம் வெளியேற்றப்பட்டிருக்க வேண்டும். கவனத்தைச் சிதற விடாது பயிற்சியின் படி முறைகளில் வைத்து பயிற்சியில் ஈடுபட வேண்டும். அப்பொழுதுதான் பயிற்சியின் முழுமை நிலையை அடைய முடியும்.

பயிற்சியின் தோற்றமானது பார்ப்பதற்கு இலகுவானதாக இருந்தா லும் செயல்முறையில் கவனித்துச் செய்யப்படவேண்டிய பயிற்சி யாகும். பயிற்சி பெற்ற ஆசிரியரின் உதவியுடன் இவ்வாசனத்தைச் செய்ய வேண்டும். அத்துடன் பயிற்சிக்குள் செல்லும் படி முறை களில் முழுக்கவனமும் இருக்க வேண்டும். உடலை பின்னால் வளைக்கும் பொழுது உடனே வளைத்துவிட முடியாது. முதுகுத் தண்டு வடத்தை நெகிழ்வு தன்மையுடன் வைத்திருப்பதன் மூலம் இப்பயிற்சியை எளிதாக ஆக்க முடியும். இப்பயிற்சியை செய்வ தன் மூலம் உடலின் சுறுசுறுப்பு தன்மை அதிகரிப்பதுடன், உறு தித் தன்மையையும் பேணப்பட்டு உடலானது இளமைத் தோற் றத்தை நீண்ட நாட்கள் வைத்திருப்பதற்கு உதவியாக இருக்கும்.

pathusha@thaiveedu.com

■ ■ ■




Bringing Your Dreams To Life!
மனையும் மனை சார்ந்த நிலமும்
மகிழ்வுற மக்கள் பெற்று விற்றிடவும்
மனமுறப் பணிவதே மகேசனின் பணி
RE/MAX
Mahesan Subramaniam
BROKER
RE/MAX
REAL ESTATE
CENTRE
INC. BROKERAGE
INDEPENDENTLY OWNED AND OPERATED
Free Home Evaluation with No Obligation
416-816-0141
141-1140 Burnhamthorpe Road West, Mississauga, ON L5C 4E9
Office : 905-270-2000 Fax : 905-270-0047
* Not intended to solicit properties already listed for sale, or buyers under contract.


அன்னையின்
பிரகதி
சித்தா மூலிகைச்
சிகிச்சை நிலையம்
இயற்கையே இன் மருந்து.
காய்ச்சல், புற்றுநோய் மற்றும் மரபணு
நோய்கள் வரை சிகிச்சை அளிக்கப்படும்
நிவாரணம் பெற அழையுங்கள்
Master Healer Premila. S
பாரம்பரிய மரபணு சித்த மருத்துவர் (இராசவைத்தியம்) இரசவாதி
Hereditary Siddha Practitioner (Royal Physician Treatment),
Spagyric Alchemist (CAN)
Alchemist Siddha System of Medicine (IND),
Natural Medicine Practitioner© (CAN)
PHONE: 647-278-3100
Email: pragatishc@gmail.com
Web: www.pragatisiddha.com
880 MARKHAM ROAD, SCARBOROUGH, ON, M1H 2Y2
(Painted Post & Markham Rd)

# வசந்தகால வீட்டுப் பராமரிப்பு (Spring - Home Maintenance)

- வேலா சுப்ரமணியம்

கடந்தகாலக் கட்டுரைகளில் குறிப்பிட்டது போல் காலநிலைக்கு ஏற்றவகையில் வீட்டைப் பராமரித்து வந்தால் திடீரென ஏற்படும் பாரிய செலவுகளைத் தவிர்த்துக்கொள்ளலாம். அந்தவகையில் குளிர்காலம் முடிவடைந்து கோடைகாலத்தை எதிர்பார்த்து நிற்கும் எங்களுக்கு வசந்த காலத்தில் எந்தவகையில் வீட்டைப் பராமரிக்கலாம் அல்லது கோடைகாலத்திற்கு தயார்ப்படுத்தலாம் என்பது பற்றி குறிப்பிடுவது பொருத்தமானது.

### மரத்தளம் - Deck:

பொதுவாகக் குளிர்காலத்தில் தேங்கிக்கிடந்த பனிப்படிமானங்கள் கரையத் தொடங்கியதும் நீர், மரப்பலகைக்குள்ளேயோ அல்லது மரச் சட்டங்களுக்குள்ளேயோ உட்புகத் தொடங்கலாம். மரச்சட்டங்களில் உரிய எதிர்ப்புத் தன்மையற்றுப் போய்விட்டால் உட்புகும் நீரால் மரம் உரிய காலத்திற்கு முன்னர் உக்கிப் பழுதடைந்துவிடும். இக்காலத்தில் நீர்க்கறை, பொருமல் என்பவற்றை அவதானிப்பதன் ஊடாக கோடைகாலம் வரும்போது உரியமுறைப்படி



நீர் எதிர்ப்புக்குரிய பூச்சுக்களை பூச (Water Resistent Paint) எம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ளலாம். அத்துடன் Mold, Moss போன்ற பங்கஸ் பிடிக்காமல் இருப்பதற்காக ஒருதடவை Power Washer உதவியுடன் கழுவியும் விடலாம்.

### குளிரூட்டி - Air conditoner:

குளிரூட்டியைச் சுற்றி சருகுகள், குப்பை கூழங்கள் குவிந்திருக்க வாய்ப்பு உள்ளது. அவற்றைச் சுத்தப்படுத்துவதோடு குளிரூட்டியைச் சுற்றியுள்ள வலைப்பகுதியினை (Net) Garden hose மூலமோ அல்லது Vacum Cleanerஇன் உதவியுடனோ, சுத்தம் செய்து காற்றோட்டம் தடைப்படாதவாறு குளிரூட்டி இயங்கக்கூடிய நிலையை உறுதிசெய்தல் வேண்டும்.

### அத்திவாரம் - Foundation:

பனி உருகி கரைந்தோடும் காலப்பகுதியாகவும் மழைப்பொழிவு அதிகமுள்ள காலமாகவும் இக்காலம் விளங்குவதால் பொதுவாக நிலக்கீழ் அறையில் தண்ணீர் உட்புகும் இடர் இக்காலத்தில்த் தான் அதிகமாக இருக்கும். எனவே, மயிரளவு (Hairline Crack)



வெடிப்பினாற்கூட தண்ணீர் உட்புகும் வாய்ப்பு இருப்பதால், நிலைமை மோசமாகுமுன்னர் சற்று கூர்ந்து அவதானித்தால் உரிய நடவடிக்கைகளை ஆரம்பத்திலேயே எடுத்துவிடமுடியும்.

### வாகனக் கொட்டகைக் கதவு:


வாகனக் கொட்டகைக் கதவு திறப்பதற்குப் பொதுவாக மோட்டர்கள் பொருத்தப்பட்டிருக்கலாம். அதன் தொடர்பைத் துண்டித்துவிட்டு கையால் கதவை ஒரு தடவை திறந்து பார்த்து, கதவு தடைகளின்றி இலகுவாக திறந்து மூடுகிறதா என்பதை உறுதிசெய்து கொள்ளுங்கள். தடைகள் இருந்தால் over head springஐ சரி செய்ய வேண்டிய தேவை இருக்கலாம். அத்துடன் உரிய முறையாக வேலை செய்கின்றனவா? என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

### தண்ணீர் பீலிகள் - Gutters:

அடைபட்டு இருக்கக்கூடிய பீலிகளை நன்கு சுத்தம் செய்து இலகுவில் நீர் வழிந்தோடும் தன்மையை உறுதி செய்தல் வேண்டும். அத்துடன் கீழ் நோக்கி விழும் குழாய்கள் (Downspout) உரிய முறையில் நீரை வெளியேற்றுகிறதா? என்பதையும் அவதானித்தல் நல்லது. முக்கியமாக அதன் அடியில் பொருத்தப்பட்டிருக்கும் Leader pipes அடைக்காதிருக்கின்றதா என்பதை உறுதி செய்வதோடு நீர் நேரடியாக அத்திவாரத்திற்கு அடியில் உட்புகாதவாறு பார்த்துக்கொள்ளல் வேண்டும். குறிப்பாக அத்திவாரத்தில் இருந்து 5 அடிக்கு வெளியே நீர் சென்றடையும் விதத்தில் அவை பொருத்தப்பட்டிருப்பது சாலவும் சிறந்தது.

### கூரை - Roof:

Chimney, Skylightஐ அண்டிய பகுதிகளில் நீர்க்கசிவு ஏற்படலாம். இக்காலப்பகுதியில் Attic ஊடாக நீர்க்கசிவுக்கான அடையாளங்களை இலகுவாகக் கண்டுகொள்ளலாம். பொதுவாக 15-20 வருடங்களுக்கு கூரையில் போடப்பட்டிருக்கும் Shingles நின்றுபிடிக்




கும் என்றாலும், காற்று மற்றும் புறக்காரணிகளால் பழுதடைந்துள்ள அல்லது இடைவெளியாக உள்ளவற்றை பழுதுபார்ப்பது அவசியம்.

### மரங்கள்:

வீட்டைச் சுற்றி மரங்கள் இருப்பது ஆரம்பத்தில் நன்றாகத்தான் இருக்கும். ஆனால் காலப்போக்கில் அதுவே பெரிய பிரச்சினை ஆகிவிடும். வளர்ந்த மரங்கள் கூரையையோ, யன்னல்களையோ தாக்கி சேதங்களை உண்டு பண்ண வாய்ப்பு இருக்கின்றது. கொப்புக்கள் வளர்ந்து பாரம் ஏறமுதல் அவற்றை கத்தரிப்பதற்குரிய சிறந்த காலம் இதுவே. மரங்கள் அளவுக்கு அதிகமாக வளர்ந்திருந்தால் அதற்குரிய தொழில்சார் வல்லுனர்களை நாடுவதே சாலவும் சிறந்தது.

### வாகனப்பாதை - Driveway:

வாகனப்பாதைக்கு குளிர்காலத்தில் உப்பால் குளிப்பாட்டி இருப்போம். இந்த வருடம் அவ்வளவாக இல்லாவிட்டாலும் போட்ட உப்பு தங்கி இருந்து அதற்குரிய பணியைச் (அரிப்பு) செய்து கொண்டே இருக்கும். Asphalt, Inter-lock, congrete என்று எந்த வகை வண்டிப் பாதையாக இருந்தாலும் இக்காலப் பகுதியில் Power washerன் உதவியுடன் முதலாவது வேலையாக வண்டிப் பாதையை நன்றாகக் கழுவி உப்பின் தன்மையை இல்லாது செய்தல் வேண்டும்.

குறிப்பாக Inter Lock உள்ளவர்கள் கல்லின் இடைவெளிகளில் பூண்டுகள் முளைப்பதை அவதானிக்கலாம். எனவே அவை முளைக்க முன்னர் அதனைத் தடுக்கக்கூடிய விதத்தில் உரிய மண்ணைப் போட்டு (Brush stone dust) பாதுகாக்கலாம். Congrete வாகனப்பாதையாக இருந்தால் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறையாவது அதனை Seal பண்ணத் தவறக்கூடாது. Asphalt வாகனப் பாதையாக இருந்தால் இருக்கக்கூடிய வெடிப்புகளை, அடைத்த பின்னர் நல்ல வெப்பமான காலநிலை வரும்போது இரண்டு வருடத்திற்கு ஒருமுறையாவது Seal பண்ணத் தயாராதல் வேண்டும்.

### கவனத்தில் கொள்ளவேண்டிய மேலும் சில...

- வெப்பமாக்கியுடன் பொருத்தப்பட்டிருக்கும் ஈரப்பதனாக்கியை (Cenral humidifier) முற்றாக நிறுத்தி விடுங்கள்.
- வெப்பமாக்கிக்கோ (Furnace), Fire placeக்கோ முதன்மை விளக்குகள்(Pilot Lamps) பொருத்தப்பட்டிருந்தால் அவற்றை நிறுத்தி விடலாம்.
- வெளிவளவிற்கோ அல்லது முன்வளவிற்கோ (Back Yard & Front Yard) போகும் குழாய்களின் நீரை நிறுத்தி இருந்தால் (Shut Off) அவற்றைத் திறந்துவிடலாம்.
- 3 மாத்திதுக்கு ஒருமுறை வெப்பமாக்கிக்குரிய வடிகட்டியை (Filters) மாற்றிவிடவேண்டும் என்ற அடிப்படையில் அதனையும் உறுதி செய்து கொள்ளுங்கள்.
- யன்னல்களுக்குரிய வலைகளைச் (Net) சுத்தப்படுத்தி அல்லது அவசியம் ஏற்பட்டால் பிரதியீடு செய்து தயார்ப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.
- தண்ணீர் வெளியேற்றத்திற்குரிய வெளிப்புறப் பாதைகள் அடைபட்டிருந்தால் அவற்றை சுத்தம் செய்தல் வேண்டும்.
- பூக்கன்றுகள், காய்கறி வைப்பவர்கள் மண்ணைத் தயார்செய்து தேவை ஏற்பட்டால் பசளைகளைப் போட்டு தமது பணிகளை ஆரம்பிக்கலாம்.



velasubramaniam@thaiveedu.com



வீடு வாங்க விற்க...
10 வருட வீட்டுப்பரிசோதனை அனுபவத்துடன்
வீட்டுப் பரிசோதகர் வீடு விற்பனை முகவரானால்...
வாங்கப் போகிறீர்களா?
தரமான வீடு தவறிப்போகாது
பிடித்த வீடு மலிவாய் கிடைக்கும்
வாங்கியபின் ஏமாற்றங்கள் இல்லை
பெருவருவாய் தரும் முதலீடு
விற்கப் போகிறீர்களா?
இலவச வீட்டுப் பரிசோதனையும் ஆலோசனைகளும்
விற்றபின் வரும் தடங்கல்கள் தவிர்ப்பு
சந்தை விலைக்குக் குறையாத பெறுமதி
உச்சப் பெறுமதிக்கான உபாயங்கள்
www.vela4homes.com
$ Cash incentive for referrals
Toronto
2,100/M
Condo - 155 Dalhousie. St
1 BR+ 1 WR, 743 Sft- Loft
Toronto
629,000
Condo - 38 Elm St.
1 BR+1 WR, 697 SFT
Peterborough
689,000
Best investment
3+2 Bedrooms, 1+1 Kitchen
4 WR + Walkout Bsmt
Fully Renovated
Separate Entrance
Dual Units (city approved)
Pickering
789,900
Town House
Finch/Altona
3+1 Bedrooms,
3 WR
Upgraded
Terrece
Chairman's Club Award Winner 2015
Chairman's Club Award Winner 2016
Chairman's Club Award Winner 2017
HOMELIFE HIGHER STANDARDS
Vela Subramaniam
Experienced Home Inspector
Sales Representative
Dir: 416-786-0760
info@vela4homes.com
www.vela4homes.com
Homelife/Future Realty Inc. Brokerage
Independently Owned and Opereated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8


# இரண்டாயிரம் ஆண்டு பழமையானது

- குமார் புனிதவேல்

அண்மையில் டாக்டர் அப்துல் கலாம் அவர்கள் குறிப்பிட்ட அனுபவம் ஒன்றை எனது நண்பர் முகநூலில் பகிர்ந்திருந்தார். கலாம் அவர்கள் சிறு வயதில் ஒரு குருவி வளர்த்தார். அது வளர்ந்து சில காலத்தின் பின் பறந்து சென்றுவிட்டது. அதனைத் தொடர்ந்து கலாம் அவர்கள் ஒரு அணிலை வளர்த்துள்ளார். அதுவும் சில காலத்தின்பின் ஓடிவிட்டது. இதனைத் தொடர்ந்து அவர் ஒரு மரத்தை நட்டார். அவரை விட்டுச் சென்ற இரண்டுமே திரும்பி வந்துவிட்டன.

நான் பல தசாப்தங்களுக்குப் பின் தாய்மண்ணை மிதித்தபோது பல மாற்றங்களைக் கண்டேன். ஆனால் நான் விட்டுச் சென்ற மரங்கள் என் வரவை எதிர்பார்த்த வண்ணமிருந்தன. எனவே மரங்களின் பயன்கள் பற்றி பகிர்ந்து கொள்ளலாம் என்று எண்ணுகிறேன்.

- **பயன்:** இன்று உலகளவில் ஒரு பெரும் பிரச்சினை புவி வெப்பமடைதலாகும். இந்நிலை தொடருமானால் பல நாடுகளும் நகரங்களும் கடலால் அழிவுறுவது நிச்சயம். இந்த வெப்பமடைதலுக்கு காடுகள் அழிக்கப்படுவதும், காற்று மண்டலத்தில் கரியமிலவாயுவின் அதிகரிப்பும் பல பனித்தடங்கள் கரைவதும் முக்கிய காரணிகளாகும். மரங்கள் கரியமிலவாயுவை உள் எடுத்து தமக்குள் வைத்துக்கொண்டு எமக்கு பயன் தரும் பிராணவாயுவை வெளிவிடுகின்றன. ஒரு ஏக்கர் தரையில் வளர்ந்த மரங்கள் இருப்பின் அவை ஒரு வருடத்தில் உங்கள் வாகனம் (42,000 கி.மீட்டர் செல்கையில்) வெளிவிடும் காபனிரொக்சைட்டை உள்வாங்கி பிராணவாயுவை வெளிவிடும்.
- **பயன்:** மரங்கள் துர்மணமுடைய வாயுக்கள், அதாவது நைட்ரஜன் ஒக்சைட், அமோனியா, சல்பர்-ஈரொக்சைட், ஓசோன் வாயுக்களை உள் எடுப்பதுடன், காற்று மண்டலத்திலுள்ள தூசுகளையும் அப்புறப்படுத்தும் வன்மையுள்ளன.
- **பயன்:** ஒக்சிஜன் வாயுவை பிராணவாயு என்பதன் காரணம், அது ஒருவர் உயிருடன் இருப்பதற்கு அத்தியாவசியமான வாயுவாகும். ஒரு ஏக்கர் தரையிலுள்ள வளர்ந்த மரங்கள் பதினெட்டு மனிதர்களுக்கு வேண்டிய பிராணவாயுவை உற்பத்திச் செய்யும்.
- **பயன்:** ஒரு நகரத்தின் வெப்பநிலையானது மரங்களை வெட்டுவதனால் அதிகரிக்கின்றது. அமெரிக்காவின் லாஸ்-ஏஞ்சலிஸ் நகரத்தில், நகரவளர்ச்சிக்காக மரங்கள் வெட்டப்படுவதால் சென்ற ஐம்பது வருடங்களில் வெப்பநிலை $60^F$ ஆல் அதிகரித்துள்ளது. இதற்கு காரணம் வெப்பத்தைக் குறைக்கும் மரங்கள் வெட்டப்பட்டு, உஷ்ணத்தை உள் இழுத்து வைத்துக் கொள்ளும் கட்டடங்களும், பாதைகளும் கூடியமையே. மரங்கள் வீடுகளையும், பாதைகளையும் மூடி வளர்வதால் அப்பகுதியில் $100^F$ வரை வெப்பத்தை குறைக்கும்.
- **பயன்:** தனிவீடுகள் உள்ள வளவுகளில் தக்கமுறையில் மரங்களை நடுவதனால் வீட்டைக் குளிர்படுத்தும் சாதனங்களின் தேவையை ஐம்பது சதவிதிதத்தால் குறைக்கலாம். இதனால் குளிர்ப்படுத்தும் உபகரணங்களை இயக்க உபயோகிக்கும் எரிபொருள், மின்சாரச் செலவு மீதப்படுவதுடன், காபனிரொக்சைட் வெளிவிடுவதும் குறைக்கப்படுகிறது.
- **பயன்:** பொதுவாக மரங்கள் நட்டால் அவற்றிற்கு தண்ணீர் வேண்டும் என்று நாம் எண்ணுவதுண்டு. மரங்கள் இருப்பதனால் நீர் ஆவியாவது தவிர்க்கப்படுகிறது. மேலும் அது வளிமண்டலத்தில் நீராவியினை கூட்டுகின்றது. இவ்விடத்தில் ஔவைப்பாட்டி குறிப்பிட்ட 'தளரா வளர்தெங்கு தான் உண்ட நீரைத் தலையால் தருகிறது' என்ற கருத்து நினைவுக்கு வருகிறது.
- **பயன்:** மரங்கள் நீரோட்டத்தின் வேகத்தை தடுக்கின்றன. தரையில் விழுந்த மழைநீர் வேகமாக ஆறுகளுக்கு ஓடி அதன் வழி கடல் சென்று அடையாமல், தரையில் ஊறி நிலநீரைக் கூட்டுவதற்கு மரங்கள் காரணமாக அமையும்.
- **பயன்:** மண் அரிப்பு ஒரு பெரும் பிரச்சினை என்பதை யாவரும் அறிவோம். முன்பு குறிப்பிட்டது போல் மரங்கள் அடர்ந்துள்ள பகுதிகளில் நீர் வேகமாக ஓடாத நிலையில் மண் அரிப்பும் பெரிதும் தவிர்க்கப்படும். மண் அரிப்பு தடுக்கப்பட்டால் மலைச்சரிவுகள் குறைவாகும்
- **பயன்:** நான் கற்ற பள்ளிக்கூடத்தில் நிரம்பவே மகோகனி மரங்கள் இருந்தன. அவற்றின் நிழலில்தான் நாங்கள் கிளித்தட்டு, பிள்ளையார் பந்து முதலான பல விளையாட்டுகள் விளையாட முடிந்தது. இப்போதுதான் புரிகிறது சூரியக்கதிர்களால் தோல் எரிவதனை தவிர்பதற்கு ஏதுவாய் அது அமைந்துள்ளது என்ற விடயம். சூரியனிலிருந்து வரும் UV கதிர்கள் தோல் புற்றுநோய் முதற்கொண்டு பல நோய்களுக்கு காரணமாகின்றன. எனவே மரங்களை நடுவது நோய்களைத் தடுக்கின்றது.
- **பயன்:** மரங்கள் நடுவது அவற்றின் காய், பழங்களைப் பெறுவதற்காகவும் இருக்கலாம். உதாரணமாக ஒரு அப்பிள் மரம் வருடம் ஒன்றிற்கு 15 முதல் 20 மரக்கால் பழங்களைத் தரும். ஒருவர் தனது சின்னப் பூந்தோட்டத்தில் ஓர் அப்பிள் மரத்தை நடுவதனால் எத்தனை இறாத்தல் அப்பிள் பெற முடியும்? அம்மரம் வேரூன்றியபின் அவர் அந்த வீட்டில் உள்ள வரை அப்பிள் செலவு இல்லை!
- **பயன்:** பல ஆராய்ச்சிகளின் விளைவாக சில பிள்ளைகள் அதீத துடியாட்டத்துடன் இருப்பதை ADHD எனக் குறிப்பிடுவர். மற்றைய எல்லா விடயங்களிலும் நன்றாக இருக்கும் இக் குழந்தைகள் அதிக துடிப்புடன் செயற்படுவதால் கல்வியில் பின்தங்கி இருக்கக் கூடும். அத்தகைய குழந்தைகளை மரங்கள் செறிவான இடத்தில் குடியிருத்துவதால் அவர்கள் மன நிலை சாந்தியடைவதை அவதானித்துள்ளார்கள்.
- **பயன்:** சோலையாக மரங்கள் உள்ள சுற்றாடல் வீடுகளில் அடிதடி சண்டைகள் குறைவாக இருப்பதை அவதானித்துள்ளார்கள். இது மரங்கள் மனிதர்களின் மனதில் அமைதியை ஏற்படுத்துவதைச் சுட்டிக் காட்டுகிறது.
- **பயன்:** உங்கள் சுற்றாடல் இலைதுளிர்காலமா? கோடைக் காலமா? இலையுதிர்காலமா அல்லது பனிக்காலமா என்று அறிவுறுத்துவது மரங்களே என்றால் மிகையாகாது. அதுவும் ஒரு பயன் தானே?



- **பயன்:** மரங்கள் குழந்தைகளுக்கு வீடாகவும், வளர்ந்தவர்களுக்கு உள்-உணர்வை வெளிக்கொண்டுவரும் உந்துகோலாகவும் அமைந்துள்ளது. ஆதியில் புத்தர் அசோக மரத்தடியில் ஞானம் பெற்றதும் அப்பிள் மரத்தடியில் நியூட்டனுக்கு விஞ்ஞான விளக்கம் வந்ததும் நாம் அறிந்ததே. அதற்குக் காரணம் மரத்தடியில் இருக்கும் பிராணவாயுவின் செறிவா என்பது ஆராய்ச்சிக்குரியதே.
- **பயன்:** ஆதிகாலத்தில் பஞ்சாயத்து கூடுவதும் வழக்கு விசாரித்து தீர்ப்பு தரப்பட்டதும் மரத்தடியிலேயே. இது தமிழர் மட்டுமல்ல அனைத்து சமூகத்திற்கும் பொதுவானதே.
- **பயன்:** பல சிறு ஊர்களுக்கும், அமைப்புகளுக்கும் அடையாளமாய் மரங்கள் நின்றுள்ளன. உதாரணத்திற்கு மாவடிச்சந்தி, புளியடிவீதி, இலுப்பையடிச்சந்தி, வேம்படிப்பள்ளி, அரசடிச்சந்தி எனப் பல மரங்கள் அடையாளங்களாயுள்ளன.
- **பயன்:** பல உயிரினங்களுக்கும் மரங்கள் ஒதுங்கிடமாக அமைந்துள்ளன. பறவைகள் மட்டுமல்ல எறும்பு, கரையான் போன்ற ஊர்வனவும் மரங்களை நாடி ஒதுங்குவதை அறிவீர்கள்.
- **பயன்:** தார்வீதியும் சிமேந்துக்கட்டடமும் நெரிசலாக உள்ள இடத்தில் மரங்களிருந்தால் மனதுக்கு எழுச்சியும் பார்வைக்கு குளிர்ச்சியும் செவிக்கு இரைச்சலைத் தவிர்த்து அமைதியையும் தரும். மேலும் தூசியைக் குறைத்து சுவாசத்தை இலகுவாக்கும்.
- **பயன்:** மரங்கள் உங்கள் காணியின் பெறுமதியைக் கூட்டுவிக்கும். வீதியோரம் மரம் நடப்பட்டுள்ள வீதியில் உள்ள வீடுகளின் பெறுமதி அதிகமே என்பதை அறிவீர்கள். இதனால்தான் புதுவீடுகள் கட்டும் வேளையில் வீதியோரத்தில் மரங்களை நடுவதுண்டு.

மரங்களால் இவ்வளவு பயன்கள் உண்டு என்பதால் நாம் அனைவரும் நினைவுக்கல்லை நடாமல் மரத்தை நடுவோம். உங்கள் பூட்டப்பிள்ளைக்கு அப்பிள் பழம் கொடுக்க விரும்பினால் வீட்டில் ஒரு நல்ல அப்பிள் மரத்தை நடுங்கள். அடுத்த முறை நீங்கள் மரத்தைக் கண்டால் அதில் உங்களுக்கு மதிப்பு வரவேண்டும்.

சில வருடங்களுக்கு முன் இலங்கையில் தலைமன்னாருக்கு சென்றபோது அங்கு நடுச்சந்தியில் ஒரு 'பேயோபாப்' மரத்தை கண்டேன். அது ஏழு நூற்றாண்டுகளுக்கு முன் அரேபிய வியாபாரிகளால் கொண்டுவந்து நடப்பட்டு, அதைச்சுற்றி குதிரைகள் கட்டப்பட்டதாக அறிந்தேன். இங்கு அத்தகைய மரம் ஒன்று இணைக்கப்பட்டுள்ளது, இந்த மரம் இரண்டாயிரம் வருடம் பழமையானது.

**உசாத்துணை:**


- The state's newly-released climate change assessment offers some sobering clues (2021)
- https://yaleclimateconnections.org/2018/10/climate-change-impacts-in-california-by-2100/
- The estimated yield of fruit trees (2021) https://www.starkbros.com/growing-guide/article/estimated-yield-for-fruit-trees
- Baobab tree in Pallimunai (2021) https://www.lonelyplanet.com/sri-lanka/jaffna-and-the-north/mannar/attractions/baobab-tree-pallimunai/a/poi-sig/1195287/357446



kumar.punithavel@thaiveedu.com




# காலக்கணித நோக்கில் சித்திரைப்புத்தாண்டு

- பால. சிவகடாட்சம்

இன்று தமிழ்மக்கள் உட்பட உலகெங்கும் வாழும் மக்களில் மிகப்பெரும்பாலானோர் இன, மத, மொழி பேதமின்றிக் கொண் டாடும் புத்தாண்டு தினமாக ஜனவரி முதலாம் திகதியை அடை யாளம் காட்டுவது கிரகேரியன் நாட்காட்டி. இந்நாட்காட்டி கிறீத் துவுக்குப்பின் 1582ல் போப் கிரகரி என்பவரால் மறுசீரமைப்புச் செய்யப்பட்ட பழைய கிறீஸ்த்தவ நாட்காட்டியாகும்.

அப்படியானால் கிரகேரியன் நாட்காட்டிக்கு முன்னர் இந்தியாவி லும் இலங்கையிலும் நாட்காட்டி என்ற ஒன்று இருந்தது கிடை யாதா என்ற கேள்வி எழலாம். ஒன்றல்ல பல இருந்தன. கலியுக-வருடம், சாலிவாகன சகவருடம், விக்கிரமவருடம், கொல்லவருடம் என்று பல்வேறு நாட்காட்டிகள் இந்தியத் துணைக்கண்டத்தின் பல் வேறு பிரதேசங்களிலும் பயன்பாட்டில் இருந்துவந்துள்ளன.

ஆண்டு, மாதம், திகதி என்பவற்றுடன் கூடவே நட்சத்திரம், கிழமை, திதி, கரணம், யோகம் என்னும் ஐந்தையும் கணித்துத் தருவதுதான் பஞ்சாங்கம். இவை எல்லாமே கால அளவுகள். சூரி யன், சந்திரன், நட்சத்திரங்கள், கிரகங்கள் என்பவற்றின் நிலை-களை அவதானித்துக் கணிதத்தின் மூலம் பெறப்பட்ட காலக்கணி தமே பஞ்சாங்கம்.

அரசர்கள் போர்களில் தாம் பெற்ற வெற்றிகளையும் கோவில்க ளுக்கும் தனிப்பட்டோருக்கும் கொடுத்த நிலதானம் மற்றும் பிற கொடைகளையும் ஆண்டு, மாதம், திகதியுடன் கல்லிலும் செப்பி லும் பதிவுசெய்ய இந்தப் பஞ்சாங்கங்களே அன்று உதவின. இந் தப் பஞ்சாங்கத்தின் துணைகொண்டுதான் எமது முன்னோரின் வர லாற்றை இன்று நாம் அறிந்து கொள்ள முடிகின்றது.

பதினான்காம் நூற்றாண்டில் பாண்டியப்பேரரசின் வீழ்ச்சிக்குப் பின் னர் நிலைபெற்ற மதுரை சுல்தான்களின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்த வீர கம்பண உடையார் மதுரையில் ஆட்சிப்பொறுப்பை ஏற்ற நாள் குறித்த சாசனம் ஒன்றை இங்கு நோக்குவோம்.

'இராஜகம்பீர ராஜ்ஜியம் கைக்கொண்டு ஸ்திர சிம்மாசனத்தில் பிரித்விராஜ்ஜியம் பண்ணி அருளாநின்ற சகாப்தம் ஆயிரத்து இருநூற்று எண்பத்தேழின்மேல் செல்லாநின்ற வர்த்தமான விஸ் வாவசு சம்வத் சாரத்து விருச்சிக ஞாயிற்று பூர்வபக்க சஷ்டியும் அவிட்டமும் பெற்ற புதன்கிழமை நாள்' (A.R.No. 55 of 1892. Ep. Ind. Vol. VI. P,322).

இச்சாசனம் விஸ்வாவசு வருடமாகிய சகவருடம் 1287 கார்த்திகை மாதம் வளர்பிறைப் பக்கத்தில் ஆறாம் திதியான சஷ்டியும் அவிட்ட நட்சத்திரமும் சேர்ந்த புதன்கிழமையில் வீர கம்பண உடையார் மதுரையின் சிம்மாசனத்தில் அமர்ந்ததைக் குறிப்பிடு கின்றது. இந்நாள் கிரகேரியன் நாட்காட்டியில் பொது ஆண்டு 1365 நவம்பர் 19ம் திகதியாகும் என்பதைத் தொல்லியல் ஆய்வா ளர் உறுதிப்படுத்தியுள்ளனர்.

வீர கம்பண உடையார் தொடர்பான மற்றுமோர் சாசனத்தில் 'கலி யுக வருஷம் நாலாயிரத்து நானூற்று எழுபத்து இரண்டாகிய (4472) சகாப்தம் ஆயிரத்து இருநூற்றுத் தொண்ணூற்று மூன்று (1293) செல்லா நின்ற விரோதிகிருதி வருடம் மிதுன ஞாயிற்று அபரபக்கப் பஞ்சமியும் புதன்கிழமையும் கொண்ட அவிட்டத்து நாள்' குறிக்கப்பட்டுள்ளது. கலியுக வருடம் 4472க்குச் சமமான சாலிவாகன சகவருடம் 1293 ஆகிய விரோகிருதி வருடத்தில் ஆனிமாதத்துத் தேய்பிறைப்பஞ்சமியும் புதன்கிழமையும் அவிட்ட நட்சத்திரமும் கூடிய நாள் இங்கே பதிவு செய்யப்பட்டுள்ளது.

இச் சாசனத்தில் ஒன்றல்ல இரண்டு நாட்காட்டிகள் கூறப்பட்டிருப் பதைக் காணலாம். இவற்றுள் ஒன்று கலியுக ஆண்டு. மற்றையது சாலிவாகன சக ஆண்டு. கலியுக ஆண்டில் இருந்து 3101ஐக் கழித்தால் கிரகேரியன் ஆண்டு வரும். சாலிவாகன சக ஆண்டு



வடமேற்கு இந்தியாவின் தமசேன (Damasena) மன்னன் காலத்து நாணயத்தில் பிரமி எழுத்து எண்களில் பதியப்பட்டுள்ள சகவருடம் 153 (232 C.E)

டன் 78ஐக் கூட்டினால் கிரகேரியன் ஆண்டுவரும். இதன்படி இந்த சாசனத்தில் கூறப்படும் நாள் கிரகேரியன் நாட்காட்டியில் பொது ஆண்டு 1371 ஜூன் மாதம் 4ம் திகதியாகும் என்பதை பேராசிரி யர் ஹூல்ச் உறுதிப்படுத்தியுள்ளார்.

இன்று சிறீரங்கம் கோவிலுக்குரிய இணையதளத்தில் (srirangam-info.com) தரப்பட்டுள்ள காலக்கணிப்பின் துணைகொண்டு, கம் பண உடையாரின் மேற்படி சாசனத்தில் தரப்படுள்ள ஆண்டு, மாதம், திதி நட்சத்திரம், கிழமை என்பவை எவ்வித முரண்பாடும் அற்ற துல்லியமான கணிப்பு என்பதை உறுதிப்படுத்தமுடியும். பண்டைத்தமிழரிடம் நாட்காட்டி என்று எதுவும் இருக்கவில்லை என்று எவரேனும் கூறமுடியுமா?

நாட்காட்டி என்று இருக்கும்போது அதில் வருடப்பிறப்பு, மாதப் பிறப்பு, திகதி மற்றும் கிழமைநாள் என்பன தவறாமல் இடம்பெற வேண்டும். தமிழ்மக்கள் பின்பற்றும் பஞ்சாங்கத்தில் இவையெல் லாம் உண்டு. கிரகேரியன் நாட்காட்டியில் மாதங்களுக்கும் கிழமை நாட்களுக்கும் பெயர் உண்டு. தமிழ்மக்கள் பின்பற்றும் நாட்காட்டி முறையில் ஆண்டுகளுக்கும் பெயர் உண்டு. அதற்

கும் ஒரு காரணம் உண்டு.

சாலிவாகன சகாப்தத்தின் தொடக்க ஆண்டை முதலாவது ஆண் டாகக் கொள்வோர் சிலர். தொடக்க ஆண்டை 0 ஆண்டாகக் கருதி அதற்கு அடுத்த ஆண்டையே முதலாவது ஆண்டாகக் கணக்கில் எடுப்பவர் வேறு சிலர்.

உதாரணமாகத் தொடக்க ஆண்டை முதலாவது ஆண்டாகக் கொள்வோருக்கு வரும் சித்திரையில் (ஏப்ரல் 14, 2021) பிறக்க இருக்கும் ஆண்டு சாலிவாகன சகவருடம் 1944 ஆகும். யாழ்ப் பாணம் இரகுநாதையரின் வாக்கிய பஞ்சாங்கம் அப்படித்தான் கூறுகின்றது. அதே சமயம் தமிழ்நாட்டில் இப்புத்தாண்டு சகவரு டம் 1943ஆகக் கொள்ளப்படுகின்றது. யாழ்ப்பாணப் பஞ்சாங்கம் நடந்து கொண்டிருக்கும் (current) சக ஆண்டையும் தமிழ்நாட்டு சிறீரங்கம் பஞ்சாங்கம் கடந்துபோன (expired) சக ஆண்டையும் குறிக்கின்றன. பண்டைக்காலத்து சாசனங்களிலும் இந்தக்குழப்பம் காணப்படுகின்றது.

சாசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சக ஆண்டு சென்ற ஆண்டா அல்லது நின்ற ஆண்டா என்பதைத் தீர்மானிப்பதில் வரலாற்று ஆய்வாளர்கள் பெரும் சிக்கலை எதிர்கொள்ளுவதுண்டு. ஒருசில சாசனங்களில் சக ஆண்டுடன் கூடவே ஆண்டின் பெயரும் குறிப்பிடப்பட்டிருக்கும். சென்ற ஆண்டாயினும் நின்ற ஆண்டாயி னும் ஆண்டின் பெயர் மாறுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பிறக்க இருக்கும் தமிழ்ப் புத்தாண்டை சக ஆண்டு 1943 என்று கணிப்போருக்கும் சக ஆண்டு 1944 என்று கொள்வோருக்கும் இந்த ஆண்டு பிலவ வருடமாகும். அறுபது ஆண்டுகளுக்கு ஒரு முறையே பிலவ வருடம் வரும். சாசனத்தில் சக ஆண்டும் அதன் பெயரும் குறிப்பிடப் பெற்றிருப்பின் எந்தவித சந்தேகத்துக்கும் இடமின்றி ஆண்டினை உறுதிப்படுத்தலாம், வரலாற்று ஆய்வாளர் களுக்கே இதன் அருமை நன்கு புரியும்.

எதற்காக இந்த அறுபது ஆண்டுக் கணக்கு என்றும் சிலர் கேள்வி எழுப்புவதுண்டு. வியாழன் சூரியனை ஒரு முறை சுற்றிவர பூமிக் கணக்கில் 12 வருடங்கள் எடுக்கும். வியாழனில் ஒருமாதம் என் பது பூமிக்கு ஒருவருடமாகும். பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை சூரியனும் ஒரே நட்சத்திரத்தைக் கடந்து செல்வர். ஐந்து வியாழ வருடங்கள் பூமியில் 60 வருடங்களாகும். இதனை வியா ழச்சக்கரம் என்றழைப்பர். ஒரு மனிதரின் சராசரி ஆயுட்காலத்தை இது குறிப்பதாக அக்காலத்தில் கருதப்பட்டது.

அறுபது ஆண்டுப் பெயர்கள் தமிழில் இல்லை என்பது மற்று மொரு குற்றச்சாட்டு. பன்னிரண்டு மாதங்களின் தமிழ்ப் பெயர்க ளும்கூட சமஸ்கிருதப் பெயர்களின் தமிழ் வடிவங்களாகும். இவற் றின் தூய தமிழ்ப்பெயர்கள் தமிழ் நிகண்டுகளிலும் காலக்கணித நூல்களிலும் காணப்படுகின்றவாயினும் பொதுவழக்கில் அவற் றைப் பயன்படுத்துவோர் இல்லை.

மாதங்களுக்கு நட்சத்திரங்களின் பெயர்கள் வைக்கப் பெற்றதன் காரணத்தையும் இங்கு விளக்குவது அவசியமாகின்றது. இந்தியா வில் முதன்முதலில் தொடங்கப் பெற்ற காலக்கணிதம் சந்திரனின் கலைகளை அடிப்படையாகக் கொண்டதாகும். ஒரு அமாவாசை யில் இருந்து அடுத்த அமாவாசை வரை அல்லது ஒரு பௌர் ணமியில் இருந்து அடுத்த பௌர்ணமி வரையிலான காலமே ஒரு மாதம் எனப்பட்டது. வடமொழியில் 'மாச' என்பது சந்திரனையும் மாதத்தையும் குறிக்கும். தமிழிலும்கூட திங்கள் என்பது சந்திர னையும் மாதத்தையும் குறிக்கப் பயன்படுவதை நோக்கலாம். பன் னிரண்டு மாதங்களும் 360 நாட்களும் கொண்ட ஒரு வருடமே முதன்முதலில் உருவாக்கப்பட்டது.

ஒரு தினத்தில் சூரியன் உதிக்கும் வேளையில் எந்த நட்சத்திரம் சந்திரனுக்கு அருகில் காணப்படுமோ அதுவே அன்றைய நாளின் நட்சத்திரமாகும். ஒரு குறிப்பிட்ட மாதத்தில் எந்த நட்சத்திரம் முழுநிலவுக்கு அருகில் காணப்படுகிறதோ அந்த நட்சத்திரத்தின் பெயரே அந்த மாதத்துக்கு வழங்கப்பட்டது. முழுநிலவுக்கு அரு கில் சித்திரை நட்சத்திரம் காணப்படும் மாதமே சித்திரை எனப் பட்டது. அவ்வாறே விசாக நட்சத்திரத்தின் அருகில் முழுநிலவு காணப்படும் மாதம் வைகாசி ஆயிற்று. முழுநிலவுக்கு அருகில் கார்த்திகை நட்சத்திரம் காணப்படும் மாதம் கார்த்திகை எனப் பெயர்பெற்றது.

| நட்சத்திரத்தின் பெயர் (சமஸ்கிருதம்) | மாதத்தின் பெயர் (சமஸ்கிருதம்) | நட்சத்திரத்தின் பெயர் (தமிழ்) | மாதத்தின் பெயர் (தமிழ்) |
|---|---|---|---|
| சைத்திர | சைத்திர | சித்திரை | சித்திரை |
| விசாக | வைசாக | விசாகம் | வைகாசி |
| ஜியேஷ்ட / அனுஷ | ஜியேஷ்ட / அனுசி | கேட்டை / அனுஷம் | ஆனி |
| பூர்வ ஆஷாட | ஆஷாட | பூராடம் | ஆடி |
| சிராவண | சிராவண | திருவோணம் | ஆவணி |
| பூர்வ பத்ரபாத | பத்ரபாத | பூரட்டாதி | புரட்டாசி |
| அஸ்வினி | அஸ்வின | அச்சுவினி | ஐப்பசி |
| கிருத்திகா | கார்த்திக | கார்த்திகை | கார்த்திகை |
| மிருகசீரிஷ | மார்கசீரிஸ | மிருகசீரிடம் | மார்கழி |
| பூஷ்ய | பௌஷ(தைசிய) | பூசம் | தை |
| மாக | மாக | மகம் | மாசி |
| உத்தர பல்குனி | பல்குண | உத்தரம் | பங்குனி |

தெலுங்கரும் கன்னடரும் பின்பற்றும் சந்திரமாத நாட்காட்டி வேறு. தமிழரும் சிங்களவரும் மலையாளிகளும் பின்பற்றும் சூரிய மாத நாட்காட்டி வேறு. பன்னிரண்டு இராசிகளில் சூரியன் சஞ்சரிப்பதை ஆதாரமாகக்கொண்டு உருவாக்கப்பட்டது சூரிய நாட்காட்டி. இதற்கிணங்க இந்நாட்காட்டியில் மாதங்களுக்கு மேடம், இடபம், மிதுனம், கர்க்கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனு, மகரம், கும்பம். மீனம் ஆகிய இராசிகளின் பெயரே கொடுக்கப்பட்டுள்ளன.

சூரிய நாட்காட்டியில் வசந்த சமவிராக்காலத்தை (spring equinox) ஒட்டிவரும் மாதம் மேடஞாயிறு (மேடச்சூரியன்) என்று அழைக்கப் பட்டது. இம்மாதத்தைத் தமிழர் 'சித்திரை' என்றே இன்றும் குறிப்பிட்டு வருகின்றனர். எனினும் கேரளத்தில் மேட ஞாயிறு என்று குறிப்பிடும் வழக்கம் இன்றும் உள்ளது.

பண்டுதொட்டு ஐரோப்பாவிலும் இந்தியாவிலும் மேடராசியே (Aries) விண்வெளிமண்டலத்தில் முதலாவது இராசியாகக் கணிக் கப்பட்டு வந்துள்ளது.

ஐரோப்பிய சோதிடக்கலையின் தந்தை எனக்கருதப்படும் மார்கஸ் மனிலியஸ் என்பார் ஒகஸ்டஸ் சீசரின் (பொ.ஆ. முதலாம் நூற் றாண்டு) சமகாலத்தவர் ஆவார். பன்னிரண்டு இராசிகள் பற்றியும் அந்தந்த இராசிகளில் பிறந்தோரின் பலன்களையும் தமது AS-TRONOMICA என்னும் நூலில் இவர் விபரித்துள்ளார். இராசி மண்டலத்தில் மேடமே முதலாவது இராசி என்பதை இவர் பின் வருமாறு வருணிக்கின்றார்.

'வெளிறிய சூரியன் மெல்ல மெல்ல மேலெழுந்து ஆட்டை முன் னிறுத்திச் செல்லும் இராசிகளின் ஊர்வலப்பாதையில் செல்ல முற் படுகையில் அதன் கதிர்கள் பொன்னிறத்தில் ஒளிரும்.'

இராசிமண்டலத்தில் ஆட்டை (மேடராசியை) முன்னிலைப்படுத்தும் இக்கருத்து சங்க இலக்கியமான நெடுநல்வாடையிலும் கூறப்படு கிறது.

திண்ணிலை மருப்பின் ஆடுதலையாக
விண்ணூர்பு திரிதரும் வீங்கு செலல் மண்டிலத்து
முரண் மிகு சிறப்பின் செல்வனொடு நிலை இயஉரோகிணி

என்று வரும் இப்பாடலுக்கு

'விண்வெளியில் வலிமையான கொம்புகளை உடைய ஆடு வழி நடத்திச்செல்லும் இராசிமண்டலத்தில் முரண்படும் சிறப்புமிக்க சந்திரனோடு இணைந்திருக்கும் உரோகிணி நட்சத்திரம்' என்று பொருள் கூறமுடியும்'.

ஞாயிறு (சூரியன்) பயணிக்கும் பன்னிரண்டு இராசிகளையுடைய விண்வெளி மண்டலத்தில் வட்டத்தில் முதலாவதாகக் கணிக்கப் படும் இராசி மேடராசி என்பதால் சூரியநாட்காட்டியில் மேட ஞாயிறு (மேடமாதம்) முதலாவது மாதம் ஆகிறது. தமிழ்ச்சாசனங் களில் 'மேட ஞாயிறு' என்றே இம்மாதம் குறிக்கப்பட்டிருப்பினும் தமிழ் மக்களால் இம்மாதம் 'சித்திரை' என்றே அழைக்கப்படுகின் றது.

சந்திரமாத நாட்காட்டியைப் பின்பற்றும் தெலுங்கர் கன்னடருக் கும் சூரிய நாட்காட்டியைப்பின் பற்றும் தமிழர், சிங்களவருக்கும் புதுவருடப்பு நாளான சித்திரை மாதப்பிறப்பு வெவ்வேறு நாட்க ளில் வரும் என்பது அனைவரும் அறியவேண்டிய விடயம். கடந்த ஆண்டு தெலுங்கரின் யுகாதி என்னும் சித்திரை வருடப்பிறப்பு 2020 மார்ச் 25ம் திகதியிலும் தமிழரின் சித்திரை வருடப்பிறப்பு 2020 ஏப்ரல் 14ம் திகதியும் வந்துள்ளன என்பது கவனிக்கத்தக்கது. இவ்வருடம் தெலுங்கரின் புத்தாண்டும் தமிழரின் புத்தாண்டும் அடுத்தடுத்த நாளில் வருவது குறிப்பிடத்தக்கது.

சந்திரமாத நாட்காட்டியில் பங்குனி மாதத்தில் வரும் அமா வாசையை அடுத்த பிரதமை திதியே சித்திரைமாதத்து முதல் நாளான தெலுங்கரின் 'யுகாதி' எனப்படும் வருடப்பிறப்பு நாளா கும். இந்நாள் கிரகேரியன் நாட்காட்டியில் 2021 ஏப்ரல் 13ம் திகதி வருகின்றது

தமிழ் சிங்கள மக்கள் பின்பற்றும் சூரிய நாட்காட்டியில் சூரியன் மேடராசிக்குள் செல்லும் (மேஷ சங்கிராந்தி) தினமே சித்திரை முதல் திகதியாகவும் புத்தாண்டு தினமாகவும் அமைகின்றது. இதன்படி தமிழ், சிங்களமக்களின் சித்திரை வருடப்பிறப்பு கிரகே ரியன் நாட்காட்டியில் 2021 ஏப்ரல் 14ம் திகதி வருகின்றது.


பலநூறு ஆண்டுகளாக இலங்கைத் தமிழரும் சிங்களவரும் மருத்து நீர் வைத்து நீராடிப் புத்தாடை அணிந்து சித்திரைப்புத்தாண்டு கொண்டாடி மகிழ்ந்திருக்கிறார்கள் என்பதற்கான ஆதாரங்கள் ஒன்றல்ல பலவற்றைக் காட்டமுடியும்.

கண்டிமன்னர் ஆட்சிக்காலத்தில் சித்தரைப்புத்தாண்டு தினத்தன்று அரண்மனை மருத்துவர்களால் தயாரிக்கப்பட்ட மருத்துநீர் ஊர் மக்களுக்கு வழங்கப்பட்டமை குறித்து இற்றைக்கு முன்னூற்றைம் பது வருடங்களுக்கு முன்னர் கண்டியில் வாழ்ந்த றொபர்ட் நொக்ஸ் (Robert Knox) என்னும் ஆங்கிலேயர் பதிவு செய்துள் ளார்.

இன்று எமக்குக் கிடைக்கப் பெறும் நூல்களில் சித்திரைப்புத் தாண்டு பற்றியும் அந்நாளில் மருத்துநீர் வைத்து முழுகுவது பற் றியும் புத்தாடை அணிவது பற்றியும் விசேட உணவுகள் தயாரித்து உண்பது பற்றியும் விளக்கும் தமிழ்நூல் சரசோதிமாலையாகும். இந்நூல் இற்றைக்கு எழுநூறு ஆண்டுகளுக்குமுன் அதாவது கி.பி. 1310ம் ஆண்டு ஜூன் மாதம் 10ம் திகதி புதன்கிழமை தென் னிலங்கை வேந்தன் பண்டித பராக்கிரமபாகுவின் அரசவையில் அரங்கேற்றம் கண்டது. இதன்மூலம் எழுநூறு ஆண்டுகளுக்கும் மேலாக இந்துத் தமிழ் மக்கள் சித்திரைப்புத்தாண்டு கொண்டாடி வந்துள்ளமை உறுதியாகின்றது. எனினும் சித்திரைப்புத்தாண்டு என்பது காலக்கணிதத்தை அடிப்படையாகக் கொண்டதேயன்றி ஒரு மதத்துடனோ மொழியுடனோ சம்பந்தப்பட்டது அன்று.


**உசாத்துணை:**

- Hultzch E. Ranganatha Inscription of Gopanna; Saka- Samvat 1293, E.I. Vol VI No.33, p.322-330
- சிவகடாட்சம், பால. சரசோதிமாலை பகுதி 1 ஒரு சமூக பண்பாட்டுப் பார்வை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை 2014
- http://srirangaminfo.com/nakshatra-calculator-find-birth-star.php


Sivakadadcham@thaiveedu.com








# கேட்பது செவிச்செல்வம்

- மாத்தளை சோமு

கேளுங்கள் கொடுக்கப்படும் என்றார் மக்களுக்காகச் சிலுவை சுமந்த யேசுநாதர். கேள்வி கேட்கப்பட வேண்டும். கேட்டால் கிடைக்கும். ஆனால் உனக்காகக் கேட்காதே. அது சுயநலம். மற்றவர்களுக்காகக் கேள். நாட்டுக்காகக் கேள். உலகத்துக்காகக் கேள். உலகத்துக்காகக் கேள்வி கேட்பதற்கு என்ன வேண்டும்? நல்ல எண்ணம்..., நல்ல நோக்கம் வேண்டும். பணத்தால் கேட்க முடியாது, பண்பால் கேட்கலாம். அதிகாரத்தால் கேட்க முடியாது, அன்பால் கேட்கலாம். மமதையால் கேட்க முடியாது, நல்ல மனதால் கேட்கலாம்.

கேள்வி கேட்பது மனிதருக்கே உரியது. அது கல்வியோடு தொடர்புடையதாகும். கல்வி பள்ளியில் பெறுவது. கேள்வி வாழ்க்கைப் பாதையில் பெறுவது. கேள்வி இல்லாத கல்வி சரியானது அல்ல. பள்ளியில் கொஞ்சம் கற்று, கேட்கிற அறிவைப் பெற்று கேள்விகளால் உயர்ந்தவர்கள் உண்டு. கேள்வி கேட்பதாலும், மற்றவர் சொல்வதைக் கேட்பதாலும் அறிவு வரும். அதனை 'கேள்விஞானம்' என்றார்கள். கல்வி மட்டும் கற்ற எவரையும் 'கல்வி ஞானத்தான்' என்று எவரும் அழைப்பதில்லை. கல்வியிலும் கேள்வியிலும் வென்றவரையே, நின்று நிதானமாய்ச் சொல்லலாம் ஞானம் பெற்றவர் என்று. ஞானம் கற்றாலும் வரும், கேட்டாலும் வரும். கேள்வி கேட்க ஆழமான கல்வி வேண்டும். கேள்வி என்ற சொல்லிலேயே 'கேள்' என்ற சொல் இருக்கிறது. கேள்வி கேட்டால் பதில் கிடைக்கும். கிடைக்க வேண்டும்.

கேள்வி என்பது அறிவோடு தொடர்புடையது. கேள்வி கேட்பதற்கு அறிவு வேண்டும். அறிவில்லாமல் கேள்வி கேட்க முடியாது. எதையும் அப்படியே ஏற்காமல் ஏன்? எதற்கு? என்ற கேள்வி கேட்க வேண்டும். கேள்வி கேட்பதால் தான் வருகிற பதிலில் பகுத்தறிவு பெற முடியும். கிரேக்கப்பேரறிஞர் அதைத்தான் சொன்னான். ஆகவே கேளுங்கள், கேட்டால் தான் பதில் வரும். ஒவ்வொரு மனிதரும் கேள்வி கேட்கலாம். கேள்வி கேட்பது அடிப்படை உரிமையாகும். கட்சி அரசியல், சினிமா, மதமாயம், மூடநம்பிக்கை போன்ற மாயையிலிருந்து விடுபட வேண்டுமாயின் கேள்விகளைக் கேட்க வேண்டும். கேள் என்பதில் கேட்பதும் உண்டு. கேள்வி கேட்பதும் உண்டு. ஆகவே தான் திருவள்ளுவர் கேள்வி என்ற தலைப்பில் ஒரு அதிகாரத்தையே எழுதியிருக்கிறார். அதில் அவர் தந்திருக்கும் முதற்குறளே கேள் - கேள்வி என்பதற்கான விளக்கமாக மட்டுமல்ல செல்வம் என்பதற்குப் புது விளக்கமும் தருகிறார்.

**செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்**
**செல்வத்துள் எல்லாம் தலை**

குறள்: 411

இதனை தமிழறிஞர் ஜி.யு.போப்

'Wealth of wealth is wealth acquired be ear attent; Wealth mid all wealth supremely excellent'. என்று ஆங்கிலத்தில் உரை எழுதியிருக்கிறார். ஆக திருவள்ளுவர் கூறுவது செல்வத்திலே பெரிய செல்வம் செவிச்செல்வம் என்பதே.

வீடு, சோலைக்காடு, பணம், பளிச்சிடும் நகை, தோட்டம் ஆகியன செல்வம் என்பர். ஆனால் அவையெல்லாம் செல்லும் செல்வம். நிரந்தரமாய் நிற்கிற செல்வம் அன்று. ஆனால், காதால் கேட்கிற செல்வம் மட்டுமே செவிச் செல்வம். ஒருமுறைக் கேட்டாலே வாழ்வு வரை நிற்கும். எனவேதான் திருவள்ளுவர் செவிச் செல்வம் என்றார். அதனை

**கற்றில னாயினுங் கேட்க அஃதொருவற்கு**
**ஒற்கத்தின் ஊற்றாந் துணை.**

குறள்: 414

என்ற குறளில், நூல்களைக் கற்காவிட்டாலும் கற்றவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்வது நடை தளர்ந்த மனிதருக்கு உதவிடும் ஊன்றுகோலைப் போல துணையாக அமையும் என்கிறார். எனவே ஒரு மனிதர் கற்காமல் இருந்திருந்தாலும் கேட்க வேண்டும். யாரிடம் கேட்பது? ஆத்திசூடியில் ஔவை அற்புதமாய்ப் பதில் சொல்கிறார். மேன் மக்கள் சொற் கேள் என்பதே அந்த பதில். யார் மேன் மக்கள்? பத்து மாதம் சுமந்த தாய், வாழ்வைச் சுமக்கும் தந்தை, கல்வியைத் தரும் குரு, அறம் செய்யும் மனிதர், அமுதமே கிடைத்தாலும் அதனைத் தானே உண்ணாது உறவுக்கும் ஊருக்கும் பகிர்ந்து கொடுக்கும் அன்பானவர். சுயநலமில்லாத மனிதர். இவர்கள் சொல்வதைக் கேள். இவர்கள் மேன்மக்கள். இவர்கள் சொல் அமுதம். அதைக் கேட்க வேண்டும்.

## யோசிக்க வைக்கும் வாசிப்பு:

மண்ணில் மனிதர் கால்பட்ட நாள் முதல் விண்ணில் கால் வைத்த காலம் வரை அறிவியல் கல்வியின் வளர்ச்சி, மனித வாழ்க்கைக்கு ஆக்கபூர்வமான வாய்ப்புகளை, வசதிகளை பல்வேறு வடிவில் கொடுத்திருக்கிறது. ஆனாலும் அந்த அறிவியல் புயல் வேகத்தில் வளர்ந்தது அல்ல. அணு அணுவாய் வளர்ச்சி பெற்றது. இவ்வளர்ச்சிக்கு கல்வி மட்டுமல்ல வாசிப்பும் பெரும் உதவி புரிந்திருக்கிறது. வாசிப்பு என்பது கற்றலின் இன்னொரு வடிவம். இது கல்வியில் முக்கிய இடத்தைப் பெறுகிறது. வாசிக்கிற மாணவர் தான் கல்விச்சாலையில் வெற்றி பெற முடியும்.

ஒரு இனமோ, ஒரு நாடோ, ஒரு மனிதரோ கல்வி வாசிப்பை மட்டும் கொண்டால் வெற்றியடைய முடியாது. கல்விச் சாலைகள் தொழிலுக்கான கல்வியைத்தான் தருகின்றன. ஏனையவற்றுக்கு அறிவியல், தொழில்நுட்ப, பொது அறிவு, சமூகம், இனம் சார்ந்த நூல்களையும் வாசிக்க வேண்டும். வாசிப்பு மனிதரை பூரணமாக்கும். வாசிப்பின் மூலம் பல்லறிவைப் பெறலாம்.

நேற்றைய மனிதர் அச்சுறுத்தல் இல்லாத விஞ்ஞானத்தில் இருந்தனர். ஆகவே நூல்களை வாசித்தனர். உலகின் தலை சிறந்த அறிஞர்கள் கடைசி மூச்சு நிற்கும் வரை நூல்களை வாசித்தார்கள். அவர்கள் தமது வீட்டிலேயே அதற்காக நூலகங்களை வைத்திருந்தார்கள். நூல்கள் வாசிக்கிற பழக்கம் ஒரு கடமையாக அன்றைக்கு இருந்தது. பள்ளி ஆசிரியர்களும் கல்வி நூல்களோடு நல்ல நூல்களை வாசிக்குமாறு தூண்டினார்கள். வாசிப்பு ஒரு

கலை வாசிக்கிறபோது மனம் ஒரு நிலையில் நிற்கும். அது தவ நிலைக்கு ஒப்பாகும். ஒரு அறிஞர் வாசிப்பு தியானத்திற்கு சமம் என்றார். முன்பெல்லாம் குழந்தைகள் அவர்களின் பருவ எல்லைக்குள் வருகிற நூல்களைப் படித்தார்கள். இளைஞர்கள், பெரியவர்கள் அவ்வாறே வாசித்தார்கள். மேலைநாடுகளில் வாசிப்பை குழந்தைகளில் இருந்தே ஊக்கப்படுத்துகிறார்கள். குழந்தைகள் பிறந்த நாளுக்கு நூல்களும் பரிசளிக்கப்படுகின்றன. நண்பர்களிடையே பரிசுப் பொருளாகப் புத்தகங்களே பரிசளிக்கப்படுகின்றன. முதியவர்களின் உற்ற நண்பனாக நூல்களே இருக்கின்றன. குழந்தைகளின் வாசிப்பை ஊக்கப்படுத்த நூலகங்களில் அவர்களுக்குக் கதை சொல்லப்படுகின்றன. இவ்வழக்கம் இன்றைக்கும் இருக்கின்றது. அவர்கள் முற்றும் முழுதாக நவீன விஞ்ஞான வசதிகளில் மயங்கிப் போகவில்லை. ஆனால், மூன்றாம் உலக நாடுகளில் பரவியுள்ள விஞ்ஞான வசதிகள் வாசிப்பைக் குறைத்தே இருக்கின்றது.

தொலைக்காட்சிகளின் மாயங்களுக்கு அடிமையாகிப் போகிற பழக்கம் தமிழ்நாட்டிலும், தமிழர்களிடையேயும் வேரூன்றி வருகிறது. செய்தியைப் பத்திரிகைகளில் படிக்கிற பழக்கம் மறைந்து வருகிறது. செய்தியைக்கூட தொலைக்காட்சிகள் மூலம் தெரிந்து கொள்ளலாம் என்பதே பதிலாக வருகிறது. ஆனால் தொலைக்காட்சிகளில் மூலவேர்கள் கட்சிக்காரர்களிடமும், பெரிய வர்த்தக முதலாளிகளிடமும் சிக்கியிருக்கின்றன என்பதை மறந்தே அவர்கள் தரும் செய்திகளைப் பார்க்கிறார்கள். தொலைக்காட்சிகள் பார்ப்பவர்களின் உணர்வுகளைத் தூண்டி, அறிவை மயக்கிச் சிந்தனைத் திறனை மழுங்கடிக்கிற வேலைகளைத் தொடர்ந்து செய்து வருகின்றன. பார்க்கிறவர்களின் பார்வைக்குள் காட்சி மூலம் போதையைச் செலுத்தி, தான் கொடுக்கிற சொல்கிற கருத்துகளில் மயங்கிப் போகிற வேலையை சுலபமாக தொலைக்காட்சிகள் செய்கின்றன. இதனால் தொலைக்காட்சி பார்ப்பவர்களின் சுய சிந்தனை மழுங்கடிக்கப்பட்டுள்ளது. ஆகவே அவர்களின் சிந்திப்புத் திறன் குறைந்து விடுகிறது.

சிந்தித்து ஒரு கருத்தை ஏற்காமல் பார்த்துக் கருத்தை அப்படியே ஏற்பது ஆபத்தானது. மேலும் தொலைக்காட்சியின் போதையில் சிக்கிவிடுபவர்கள் சிந்திப்பதை நிறுத்தி விடுகிறார்கள். எது சரி, எது தவறு என்பதைப் பிரித்து அறிய முடியாத ஆற்றல் அற்றவர்களாகப் போய்விடுகிறார்கள் அவர்கள். இதிலிருந்து மீள்வது எவ்வாறு? மீள முடியுமா? மீள முடியும்! ஆனால் தொலைக்காட்சி தகவல்களின் நம்பகத் தன்மையை உணர்ந்து அறிகிற திறன் வேண்டும். இத்திறனை வளர்க்க நூல்களும் உதவும்.

வாசிப்பவன் யோசிப்பான். கண்டதைக் கற்றவன் பண்டிதனாவான். வாசிப்பு ஒரு வகை அறிவே. வாசிப்பு தெரியாததை, புரியாததை, அறியாததை அறிய வைக்கும் சக்தி கொண்டது. வாசிக்கின்ற சமூகமே யோசிக்கும். வாசிப்பு வசித்துவம் தரும். (வசித்துவம் - எல்லாவற்றையும் தன்வசமாக்கும் சித்தி)

மேலை நாடுகளில் வீட்டுக்குவீடு நூலகம் வைத்திருக்கிறார்கள். ரயிலில் போகிற போது, பேருந்தில் போகிற போது, டாக்டருக்காகக் காத்திருக்கிற போது புத்தகங்களை வாசிக்கிறார்கள். வாசிக்க நேரம் இல்லையென்று அவர்கள் சொல்வதில்லை. அணுகுண்டு விழுந்த பிறகும் அந்தத் துன்பத்தில் முடங்காத ஜப்பான் இன்று எழுந்து நிற்பதற்கு இரண்டு காரணம் உண்டு. ஒன்று தாய்மொழிக் கல்வி. மற்றது வாசிப்பு. முதலாம் மற்றும் இரண்டாம் உலக யுத்தங்களின் போது கூட நூலகங்கள் பாதுகாக்கப்பட்டன. ஆகவே நூல் வாசிப்பு ஒவ்வொருவருக்கும் முக்கியமானது. நூல்கள் வீட்டில் இருக்க வேண்டும். நூல்கள் இருந்தால் அது நூலகமாகும். நூலகம் இல்லா வீடு பாழாகும். பெரிய அறிஞர்களிடம் நூலகம் இருந்தது வரலாற்றுத் தகவல். அவரிடம் தொலைக்காட்சி இருந்தது ஒரு தகவலே அல்ல. எப்போதும் தொலைக்காட்சி பார்ப்பவர் இயல்பாய் சிந்திப்பவர் அல்ல. நல்ல நூல்களே சிறந்த நண்பர்கள். மனித வாழ்க்கையின் துணையாகவும் தூணாகவும் நிற்க உதவுவது நூல்களே. மனிதர்கள் இறந்து போவார்கள். ஆனால் புத்தகங்கள் சாவதில்லை. புத்தகங்கள் ஆயுதங்களுக்குச் சமமாகும். வரலாற்றைப் பார்த்தால் பாசிஸவாதிகளும், இனவாதிகளும் நூல்களை எரித்திருக்கிறார்கள். யுத்தங்களின்போது நூலகம் பாதுகாக்க வேண்டும் என்பது சர்வதேச விதியாகும். ஆனால் ஈழத்தில் யாழ்ப்பாணத்தில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட புத்தகங்கள் இருந்த யாழ்ப்பாண நூலகத்தையே எரித்தார்கள். நூல்களைப் பார்த்து அவர்கள் பயந்திருக்கிறார்கள்.

விதியை வெல்லும் மதி நூல்களில் இருக்கிறது. நூலே மனிதரின் ஆதாரக் கோலாகும். நூல் வைத்திருப்பவரும், அதைப் படிப்போரும் எப்போதும் வெற்றி பெறுவர்.



somu@thaiveedu.com


இப்பொழுது....

கிண்டலில் (Kindle) பெற்றுக்கொள்ளலாம்

kindle









# கடன் தொல்லையா?




பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

**Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்**

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com



# தேசியக் கலைஞன் புதுவை செல்வம்

ஆழத்து முத்துக்கள்

- ப. ஸ்ரீஸ்கந்தன்

வன்னித் தெருவெளி அரங்கின் முன்னோடிகளில் முதன்மையானவர். கலை மக்களுக்கானது என இயங்கும் சமூக செயற்பாட்டாளர். மண்ணில் அவலப்பட்ட மக்களுக்குத் தான் சார்ந்த கலையூடாக நம்பிக்கை யூட்டி, முகத்தில் மலர்ச்சியை ஏற்படுத்திய மகாகலைஞன். சன்னங்களின் இரைச்சலுக்கும் சனங்களின் அந்தரிப்புக்கும் மத்தியில் அரிதாரம் பூசிய கலைஞன். தேசியத் தலைவரின் பெருமதிப்புக்குரிய தெருவெளிக் கலைஞன் புதுவை செல்வம் அவர்களை இம்மாத ஆழத்துமுத்துக்களில் பதிவிடுவதில் தாய்வீடு மகிழ்வுறு-கிறது.

கூத்துக்கலைக்கும் ஏனைய எமது பாரம்பரிய கிராமியக் கலைக்கும் புகழ்பெற்றது புத்தூர் கிழக்கிலுள்ள கருகப்பை என்ற அழகிய கிராமம். காவோலைச் சூழ் எரியும் வெளிச்சத்திலும் பெற்றோமக்ஸ் ஒளியிலும் கூத்துக்களை அரங்கேற்றிய தொன்மையான கலைஞர்கள் நிறைந்த ஊர். அந்தக் கிராமத்தில் நாகமுத்து - பார்வதி இணையரின் மகனாக புதுவை செல்வம் அல்லது புதுவை அன்பன் என்ற செல்வம் பிறந்தார். இவரது தாயும் தந்தையும் வாழையடி வாழையாக வளர்ந்து வந்த பெரும் கூத்துப் பரம்பரையின் வாரிசுகள் என்பதால் செல்வத்தின் சிறுவயதிலேயே கூத்தின் வேட்கையும் ஆற்றலும் அவரை ஆட்கொண்டிருந்தன.

நாடகங்கள், உலக நாடக வரலாறுகள் பற்றி சரளமாகப் பேசிய செல்வம், வன்னித் தெருவெளி அரங்கு குறித்துக் கூறிய தகவல்கள் புதினமாகவும் பெரும் அனுபவமாகவும் எனக்கு அமைந்து போனது. அவர் சொன்னவை கொஞ்சம். சொல்லாமல் விட்ட கதைகள் பல. இருந்தும், இதை எழுதலாமா, வேண்டாமா என்று கேட்டே இதனை எழுதுகிறேன்.

வழமை போல் பாடசாலை, கல்வி, தொழில் பற்றிக் கலைஞரிடம் கேட்டு வைத்தேன். அதற்கு தனக்கே உரித்தான கவிதா வடிவில் இவ்வாறு உரைத்தார்.

**நான் கவிஞன் அல்ல,**
**நல்லபெரும் கலைஞனுமல்ல,**
**மெத்தப் படித்த பண்டிதனும் அல்ல,**
**பள்ளிப் பருவத்தில் கொள்ளிக்குடம் சுமந்த பாவி.**

**பத்து வயதில் பெத்த அப்பனைத் தொலைத்து**
**தோட்டம் துறவு என வாழ்வைத் தேடிய பாமரன்.**
**அப்பன் எனக்கு விட்ட சொத்து**
**கூத்தும் கூத்தோடு கூடிய வறுமையும்.**

கருகப்பை அண்ணாமார் ஆலய (ஈஸ்வரர் கோயில்) திருவிழாவின் போது வருடந்தோறும் கலைநிகழ்வுகள் இடம்பெறுவது வழக்கம். சரித்திர, இதிகாச நாடகங்கள், இசை நாடகங்கள், வடமோடி, தென்மோடி கூத்துகள் மற்றும் பாரம்பரிய கிராமியக் கலைகள் என்பன அங்கு அரங்கேறும். பூதத்தம்பி, கர்ணன், அபிமன்யு, இந்திரகுமாரன், அரிச்சந்திரா, ஸ்ரீவள்ளி, சத்தியவான் சாவித்திரி போன்றவை மேடையேற்றப்பட்ட நாடகங்களில் சிலவாகும். இவ்வாறு இவரது தந்தையார் பூதத்தம்பியாக நடித்த பூதத்தம்பி நாடகத்தில் பூதத்தம்பியின் மகன் செல்லப்பாவாக செல்வம் நடித்திருந்தார். இதுவே இவரது நாடகப்பிரவேசமாகும். அப்போது இவருக்கு வயது 10. ஆரம்பத்தில் தன் தந்தையிடமும், தந்தை இறந்து போக பின்னர் உடுப்பிட்டி அண்ணாவியார் சின்னக்குட்டி அவர்களிடமும் நாடகக் கலையைக் கற்றுத்தேர்ந்தார்.



எழுபதுகளில் ஆவரங்காலைச் சேர்ந்த அற்புதசிங்கம் என்பவரின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வந்த அற்புதாலயா கலாமன்றத்தினருடன் இணைந்து செயற்பட்ட செல்வம், ஆரம்ப நாட்களில் வசன ஒப்புநோக்குனராக மேடையின் பின்னால் இயங்கி வந்தார். ஒரு முறை மன்றத்தினர் தயாரித்த கே.எம். வாசகர் எழுதிய ‘கலையும் கண்ணீரும்’ என்ற நாடகம் அரியாலை காசிப்பிள்ளை அரங்கில் மேடையேற இருந்தது. நாடகத்தின் பிரதான பாத்திரமான சித்திர சேனன் என்ற சிறப்பியாக நடிக்கும் அற்புதசிங்கம் கொழும்பிலிருந்து வரத் தாமதமாகிவிட்டது. அதனால், செல்வமே அப்பாத்திரத்தில் நடிக்க ஒப்பனை செய்து மேடையேறக் காத்திருந்த போது அற்புதசிங்கம் வந்து சேர்ந்துவிட்டார். எனினும் வேடம் போட்டபின்னர் அதனைக் கலைக்கக் கூடாது என்று தன்னை நடிக்க வைத்த அவரது பெருந்தன்மையை நன்றியுடன் நினைவு கூர்ந்தார். அன்றிலிருந்து அற்புதாலயா கலாமன்றம் மேடையேற்றிய நாடகங்களில் பிரதான பாத்திரங்கள் ஏற்று இவர் நடிக்க ஆரம்பித்தார்.

அற்புதாலயா கலாமன்றத்தின் புகழ்பெற்ற இன்னுமொரு நாடகமான குமணனில் பெருந்தலைச்சாத்தனாராக செல்வம் நடித்திருந்தார். இந்நாடகம் 30 தடவைகள் நாடகப் போட்டிகளில் பங்குபற்றி 27 தடவைகள் முதற்பரிசைப் பெற்றுக்கொண்டது. ஒரு தடவை மகாஜன கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற நாடகப் போட்டியின் போது இவர்கள் பங்குபற்றுவதைத் தடுப்பதற்காக, வேறு ஒரு திகதிக்குப் போட்டி பிற்போடப்பட்டுள்ளதாக இவர்களது மன்றத்துக்கு யாரோ தந்தியடித்து விட்டனர். ஆனால், குறித்த திகதியில் போட்டி நடைபெற்றது. இரு நடிகர்கள் இல்லாமல் நாடகத்தை மேடையேற்ற வேண்டிய சூழ்நிலை இவர்களுக்கு ஏற்பட்டது. இந்த இக்கட்டான நிலையில் தனது பாத்திரத்தையும் இடையே வேடங்களை மாற்றி மற்ற இரு நடிகர்களின் பாத்திரங்களையும் ஏற்று நடித்ததோடு நாடகத்தில் வரும் ஒலி வசனங்களையும் பேசி இவர் அசத்தினார். 52 நாடகங்கள் பங்குபற்றிய போட்டியில் இவர்களது குமணன் நாடகம் முதற்பரிசைப் பெற்றுக் கொண்டது. அத்தோடு, பெருந்தலைச்சாத்தனாராக நடித்த கலைஞர் செல்வத்துக்கு சிறந்த நடிகருக்கான பரிசு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இப்போட்டிக்குப் பிரதான நடுவராகக் கடமையாற்றிய கவிஞர் கந்தவனம் அவர்கள் இத்தெரிவு குறித்துப் பின்வருமாறு கூறினார். ‘பெருந்தலைச்சாத்தானாராக வேடமேற்றவர் பாத்திரத்தைப் பூரணப்படுத்தியிருந்தார். இதைவிட சற்றே கூடுதலாக நடித்திருந்தால் கூட பாத்திரத்தின் தன்மை கெட்டிருக்கும்.’

தனது கிராமத்தின் எழுச்சிக்காகவும் மக்களிடையே மாற்றங்களை ஏற்படுத்தவும் பொதுப்பணிகளில் ஈடுபட்ட செல்வம், அவற்றைப் பிரதிபலிக்கும் வகையில் தனது 17வது வயதில் நாடகங்களை எழுத ஆரம்பித்து மேடையேற்றினார். அந்த வகையில் 'வீர அபிமன்யு' நாட்டுக்கூத்தை எழுதிய இவர், அதில் பிரதான பாத்திரத்தில் நடித்திருந்தார். தாமு கந்தையா என்ற ஊர்ப் பெரியவரின் வேண்டுகோளுக்கிணங்க கூத்துக்கலையை வளர்க்க வேண்டி உடுப்பிட்டி முத்தையா அண்ணாவியாரிடம் ஆடல், பாடல்களைப் பயின்றார். இதனது நீட்சியாக, 'காத்தவராஜன்' என்ற சிந்துநடைக் கூத்தை நெறியாள்கை செய்து இவர் மேடையேற்றினார். அக்கூத்தில் வருகின்ற சாதியம், பெண்ணியம் சார்ந்த பிற்போக்குத்தனமான விடயங்களை மீள்வாசிப்புக்கு உட்படுத்தி, கூத்தின் மரபு தவறாது அதனை சீரமைத்திருந்தார். 60 அடி நீளமான அரங்கில் மேடைப்பொருட்களைக் கொண்டு காட்சி மாற்றங்கள் செய்தமை குறிப்பிடத்தக்கது.

## வன்னி தெருவெளி அரங்கு:

'நாடகம் மொழிக்கு முந்திய கலைவடிவம். உணர்ச்சிகளின் வெளிப்பாடு. கடவுளுக்குச் சேவகம் செய்வது போல ஆரம்பித்து பின்னர் மன்னர்கள், அரசியல் என மாற்றம் பெற்று தற்போது சமூக அரங்காக வீச்சம் பெற்றுள்ளது' எனக்கூறும் கலைஞர் செல்வம் ஈழத்து நாடக வரலாற்றில் வன்னித் தெருவெளி அரங்கு முக்கியமான புதிய பரிமாணம் என்கிறார். பிரதி எழுதுவதற்கு தாள்களும் அரங்கேற்றுவதற்கு சிறு வசதியும் இல்லாத, யுத்த நெருக்குவாரத்துக்குள் உருவாக்கம் பெற்ற அரங்கு. ஆற்று வெள்ளத்தில் அள்ளுப்பட்டுப் போகிற வள்ளம் போல கலைஞர்களால் காவித்திரியப்பட்ட அரங்கு.

நிச்சயம் என்றோ நிரந்தரம் என்றோ ஒன்றுமில்லை, நேற்று நாடகம் நடந்த சந்தியில் இன்று பிணங்கள் இருக்கலாம். நேற்றைய பார்வையாளர்களில் சிலர் இல்லாமல் போயிருப்பர். சில வேளைகளில் கலைஞர்களும். எனினும், தெருவெளி தொடரும். மிதிவண்டிகளில் அரிதாரம் பூசிய கலைஞர்கள் வரிசையாகச் செல்லும் காட்சி அலாதியாக இருக்கும். போகிற போக்கில் வீடுகளைத் தட்டி நாடகம் நடக்கவிருப்பதை பறைசாற்றுவர். கூடவே, உணவும் கேட்பர். ஒருநாளில் 5 மேடையேற்றங்கள் நடக்கும். கிராமம் கிராமமாக 20 நாட்கள் தொடர்ச்சியாக ஓடுவர். இவ்வாறு பல்வேறு குழுக்கள் வெவ்வேறு திசைகளில் ஓடிக்கொண்டிருப்பர். இந்திய இராணுவம் வெளியேறிய நாட்களில் விலகிய இடங்களில் முன்னோக்கியும், இலங்கை இராணுவம் துரத்திய போது மன்னாரிலிருந்து பின்னோக்கியும் தெருவெளி அரங்குகள் மாறின. ஒப்பனை வசதிகளற்ற நிலையில் கழிவு எண்ணையை உடலில் பூசிக்கொண்டு தீப்பந்தங்களை ஏந்தும் போது உடல் எரிவு தாங்கமுடியாது. ஆயினும் ஆட வேண்டும், குதிக்க வேண்டும், பாட வேண்டும், வளவுகளுக்குள் சென்று கிடைக்கின்ற மேடைப் பொருட்களைச் சேகரித்து காட்சி அமைக்க வேண்டும்.

வன்னித் தெருவெளி அரங்கு என்ன செய்தது? யுத்தத்தின் அகோரத்தாலும் இழப்புக்களாலும் நாளுக்கு நாள் ஏற்பட்ட இடப்பெயர்வுகளாலும் அரசின் எரிபொருள், உணவுத் தடைகளாலும் மலேரியா போன்ற கொள்ளை நோய்களாலும் வாழ்க்கை வெறுத்துப் போய், நம்பிக்கை இழந்திருந்த மக்கள் சிரிச்சதும் அழுததும் தம் கதைகளை மனம் விட்டுக் கதைத்ததும், பேரெழுச்சி கொண்டதும் இந்தத் தெருவெளி அரங்க கலைஞர்களால்த்தான் சாத்தியமாயிற்று என்பது மிகையான கூற்றல்ல.

தெருவெளிக் கலைஞர்களுக்கும் மக்களுக்குமான பிணைப்பு இரத்தபாச உறவைப் போன்றது. மக்கள் தங்கள் பிள்ளைகள் போல் தெருவெளிக் கலைஞர்களைப் பார்த்துக்கொண்டனர், பாதுகாத்துக் கொண்டனர். பொதுவாகப் பெண் கலைஞர்கள் வீடுகளிலும் ஆண் கலைஞர்கள் வாசிகசாலை, பாடசாலை போன்ற பொது இடங்களிலும் இரவில் தங்குவதுண்டு. ஒரு தடவை இவர்கள் இரவு சாப்பிடவில்லை என்பதை அறிந்து கொண்ட ஒரு வயோதிப தாய், அந்த இரவிலும் வீட்டிலிருந்த நெல்லைக்குற்றி, அரிசியாக்கி, பின் அதனைக் கஞ்சி காய்ச்சி கலைஞர்களுக்குக் கொடுத்திருந்தார். இவ்வாறான பல சம்பவங்களை கலைஞர் செல்வம் விபரித்தார். இவ்வாறு மக்கள் கலைஞர்களை நம்பினர். மக்கள் புதிய பிறப்பு எடுத்தது போல் தோற்றம் பெற்றனர்.

வன்னித் தெருவெளி அரங்கு எவ்வாறு இயங்கியது என கலைஞர் செல்வம் கூறிய கருத்துக்களின் சுருக்கமான வடிவத்தை மேலே தந்துள்ளேன். இதுவரை பெரிதாக எழுதப்படாத வன்னித் தெருவெளி அரங்கு குறித்த பதிவுகள் நிறைய வெளிவர வேண்டுமென தாய்வீடு விரும்புகிறது. நிற்க, இனி வன்னித் தெருவெளி அரங்கில் கலைஞர் புதுவை செல்வத்தின் பங்களிப்புப் பற்றிப் பார்ப்போம்.

இந்திய இராணுவம் வெளியேறிக் கொண்டிருந்த காலகட்டத்தில் 'மனிதன் வேட்டையாடுகிறான். மனிதனே வேட்டையாடப்படுகிறான்' என்ற கருவூலத்தை மையமாகக் கொண்ட 'களத்தில் காத்தான்' என்ற சிந்துநடைக் கூத்தை எழுதி, அதில் பிரதான பாத்திரத்தில் இவர் நடித்திருந்தார். ஆயிரம் தடவைகளுக்கு மேல் இந் நாடகம் மேடையேற்றம் கண்டது குறிப்பிடத்தக்கது.

அடுத்து, கிட்டுவின் மரணத்தை மையமாக வைத்து 'சதியை வென்ற சாவுகள்' என்ற புதுமோடி வகை கூத்தை எழுதி அறிமுகப்படுத்தினார். கலைஞர் செல்வம் பிரதான பாத்திரத்தில் நடித்த இந்நாடகம் 300 தடவைகளுக்கு மேல் மேடையேற்றப்பட்டது. இந் நாடகத்தைப் பார்த்த தேசியத்தலைவர் 'நெஞ்சுக்குள் இருந்து நான் சொல்ல நினைப்பதைச் சொல்லியிருக்கிறீர்கள். இந்நாடகத்தை பல கமராக்கள் கொண்டு வீடியோவில் பதிவாக்க வேண்டும்' என்று பாராட்டியுள்ளார். இந்நாடகம் 2004ன் பிற்பகுதியில் கலை பண்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் 19 இவரும் இவரது குழுவினரும் பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ், நோர்வே, டென்மார்க், சுவீடன் ஆகிய நாடுகளுக்கு மேற்கொண்ட கலைப் பயணத்தின் போது மேடையேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

உள்ளூர் இடப்பெயர்வின் போது மக்கள் செய்த உதவிகள், உதவிகள் மறுக்கப்பட்ட மக்கள் குறித்தான 'அவலங்கள்' என்ற இவரது தாளலய நாடகம் ஏறத்தாள 600 தடவைகள் மேடையேற்றம் கண்டது. இதே போல், முற்றிலும் சிறுவர்கள் நடித்த 'குருத்தோலை அழுவதேன்' என்று இவர் எழுதிய அபத்த நாடகம் இடப்பெயர்வுகளின் அவலங்களுக்கான அரசியலைச் சொல்லியது.


வன்னித் தெருவெளி அரங்கின் பெருமளவிலான பிரச்சார நாடகங்களை, கூத்துகளை இவர் எழுதி, நெறிப்படுத்தியுள்ளார். 'நெருப்பு நதியில் நீந்திய மனிதர்கள்', 'வெள்ளைப் புறா சிவப்பானதேன்', 'மனிதம் உறங்கினால்...', 'ஒரு தாயின் கதை', 'உயிர்த்தெழுவோம்', 'இவர்களும் மனிதர்கள்', 'பொறுத்தது போதும்' போன்றன இவ்வாறு இவர் எழுதி நெறிப்படுத்திய தெருவெளி நாடகங்களில் ஒரு சிலவாகும்.

பின்னைய நாட்களில் உரும்பிராய் காந்திஜி வாசிகசாலைக்காக 'மனங்கள் மாற வேண்டும்', உரும்பிராய் AMI கல்வி நிறுவனத்துக்காக 'இது விதியல்ல', 'மனவிலங்கு', 'ஒரு தாயின் கதை' ஆகிய நாடகங்களையும் வரணி நாட்டார் கலை இலக்கிய மன்றத்துக்காக 'காத்தவராஜன்' கூத்தையும் மேடையேற்றியுள்ளார்.

புதுவை அன்பன் என கவிதாவுலகில் அறியப்பட்ட இவர் புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக பொன்விழா, கருகப்பை ஈஸ்வரர் கானங்கள், வெற்றிமுரசு, இந்திரவிழா ஆகிய இறுவட்டுகளுக்காகப் பல பாடல்களை எழுதியுள்ளார்.

கலைக்கும் மக்களுக்கும் ஆற்றிய சேவைக்காக எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா அமைப்பினரின் கலைமாமணி, கோப்பாய் பிரதேச சபையினரின் செம்புலக்குரிசில் வட மாகாணசபை பண்பாட்டு அமைச்சின் கலைக்குரிசில் ஆகிய விருதுகள் இவருக்குக் கிடைத்துள்ளன.

மண்ணையும் மக்களையும் அவர்தம் கலைகளையும் நேசித்த மகத்தான கலைஞனைப் பதிவிடுவதில் தாய்வீடு பெருமை கொள்கிறது. அவர் மென்மேலும் கலைப்பணி ஆற்ற வாழ்த்துகிறோம்.



sriskandan@thaiveedu.com

# கிழக்கிலங்கையில் மருத்துவக் கல்விக்கு வித்திட்ட

# உபவேந்தர் ரவீந்திரநாத்

- வே. விவேகானந்தன்

வடஇலங்கையைப் பூர்வீகமாகக் கொண்டு, கிழக்கிலங்கையை செழுமைப்படுத்திய கல்விச் சான்றோர்களுள், உபவேந்தர், கலாநிதி ரவீந்திரநாத் அவர்களுக்கு ஒரு தனியிடம் உண்டு.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலே கொக்குவில் கிராமத்தில், சிவசுப்பிரமணியம் சரஸ்வதி இணையருக்கு மூத்த மகனாக ரவீந்திரநாத் அவர்கள் 1951ம் ஆண்டு ஜனவரி மாதம் 30ம் திகதி பிறந்தார். குழந்தைப் பருவத்தில், வனப்பும் செழிப்பும் மிக்கவராகக் காணப்பட்டமையால், இவரது தாத்தா பாட்டிமார் இவரை, இந்திரன் எனச் செல்லப் பெயர் கொண்டு அழைத்து வந்தனர்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை ஸ்ரீ இராமகிருஸ்ண வித்தியாசாலையில் ஆரம்பித்தார். சிறுவயதிலேயே இவரது அறிவாற்றலையும் கிரகிக்கும் தன்மையினையும் நன்கு அவதானித்த அப்போதைய ஸ்ரீ இராமகிருஸ்ண வித்தியாசாலை ஆசிரியர்களுள் ஒருவரான அமரர் கிருஸ்ணபிள்ளை, இவரை பாடசாலைக்கு சேர்க்கும் வயதெல்லைக்கு முன்னரேயே பாடசாலையில் சேர்த்துக் கொண்டார்.

ரவீந்திரநாத் இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் தொடர்ந்தார். அங்கு பயிலும்போது அறிவு, ஒழுக்கம், பண்பு என்பவற்றில் சிறந்து விளங்கியமையால், வகுப்பு மாணவ தலைவனாகவும் இல்ல விளையாட்டுப் போட்டிகளின் போது இல்லத் தலைவராகவும் செயற்பட்டு ஆசிரியர்களினதும், சக மாணவர்களினதும் நன்மதிப்பைப் பெற்றார். தொடர்ந்து கொழும்பு அக்குனாஸ் கல்லூரியிலும் கற்று, 1973ம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார். அங்கு விவசாய பீடத்தில் இணைந்து விவசாய பட்டப்படிப்பினை மேற்கொண்டார்.

விவசாயப் பட்டப் படிப்பினை சிறப்புத் தேர்ச்சி பெற்று நிறைவு செய்ததும், அங்கேயே விவசாய, விஞ்ஞான பீடத்தின் உதவி விரிவுரையாளராகப் பணியாற்றத் தொடங்கினார். பின்னர், கிழக்கிலங்கையில் கரடியனாறு பிராந்திய அபிவிருத்தி ஆராய்ச்சி நிறுவனத்தில், ஆராய்ச்சி உத்தியோகத்தராகத் தனது பணியைத் தொடர்ந்தார்.

1981ம் ஆண்டு அக்ரோபர் மாதம் பத்தாம் திகதி வந்தாறுமூலை மத்திய மகாவித்தியாலயம், பல்கலைக்கழகக் கல்லூரியாகத் தோற்றம் பெறவும், பின்னர் அது பல்கலைக்கழகமாக உயர்ச்சி பெறவும் ரவீந்திரநாத் அவர்களின் பங்களிப்பு அளப்பரியதாகும். அங்கு பல சிரமங்களுக்கு மத்தியில் விவசாய பீடத்தினை நிறுவி, உதவி விரிவுரையாளராகவும் பின்னர் சிரேஸ்ட விரிவுரையாளராகவும் பணியாற்றினார். அதேவேளை London Imperial Collageல் பட்ட மேற்படிப்பினை மேற்கொண்டு, 1987ம் ஆண்டு கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். ரவீந்திரநாத் தனது அயராத முயற்சியினால் பின்னர் விவசாய பீடத்தின் தலைவராகவும், 2004ம் ஆண்டு கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகத்தின் தற்காலிக உபவேந்தராகவும், 2005ம் ஆண்டு, நிரந்தர உபவேந்தராகவும் பதவி உயர்வு பெற்றார்.

விவசாயக் கல்வித்துறையில் மிகவும் ஆர்வம் கொண்ட பேராசிரியர் ரவீந்திரநாத் அவர்கள், தனது அயராத முயற்சியினால், பட்ட



மேற்படிப்புக்காக பொதுநலவாய கல்விசார் உத்தியோகத்தர்களுக்கான புலமைப் பரிசினையும், ஆராய்ச்சிகளுக்காக இலண்டன் இயற்கை வள நிறுவனத்தின் துறைசார் புலமைப் பரிசினையும் பெற்றுகொண்டார். மேலும், 1998ம் ஆண்டு, அந்த ஆண்டிற்கான சிறப்பு விஞ்ஞான தொடர்பூடலுக்கான விருதினையும் பெற்ற பெருமைக்குரியவராவர். விவசாயத்துறை தொடர்பான கருத்தரங்குகளிலும் மகாநாடுகளிலும் இலங்கை உட்பட இந்தியா, பிரித்தானியா, நோர்வே, கனடா ஆகிய நாடுகளுக்கும் சென்று கலந்து கொண்டார். பிரித்தானியா, நோர்வே பல்கலைக்கழகங்கள், அவரது கண்டுபிடிப்புக்களையும் நிறுவல்களையும் பாராட்டி, அவரை

ஒரு விவசாய விஞ்ஞானியாகப் பிரகடனப்படுத்தின.

1981ம் ஆண்டு காலப்பகுதியில், கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக, விவசாய பீடத்தின் உப பிரிவான விவசாய உயிரியல் பிரிவில் முதுநிலை விரிவுரையாளர்கள் எவரும் இருக்கவில்லை. இதனை அவதானித்த ரவீந்திரநாத் அவர்கள் தனது கடமைகளுக்கப்பால், அப்பிரிவினை செயற்படுத்தவும் அதன் உட்கட்டமைப்பினை மறுசீரமைக்கவும் அயராது உழைத்து திறம்பட இயங்கச் செய்தார்.

விவசாய பீடத்தோடு விஞ்ஞான, மருத்துவ பீடங்களை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் உருவாக்கிய பெருமை உபவேந்தர், ரவீந்திரநாத் அவர்களைச் சாரும். கிழக்குப் பிராந்திய வைத்தியர்கள், கல்விச்சான்றோர் மேற்படி துறைகளை உருவாக்க வேண்டும் என்ற எண்ணக் கருவை முன்வைத்ததும், அதனைச் செயற்படுத்த சகல முயற்சிகளையும் துரிதமாக மேற்கொண்டார். பல்கலைக்கழக ஆணைக்குழுவை அடிக்கடி சந்தித்து, மருத்துவபீடக் கோரிக்கையினை வலியுறுத்தினார். அத்துடன், அப்போது உயர்கல்வி அமைச்சின் செயலாளராகப் பணிபுரிந்த கலாநிதி தாரா டீமெல் அவர்களிடமும் அக்கோரிக்கையை வலியுறுத்தி, இறுதியாக அனுமதி பெற்று, வைத்திய பீடத்தினை நிறுவினார். கிழக்கு மாகாணத்துக்கு மருத்துவக் கல்வி வசதி கிடைத்ததையிட்டு மக்கள் மகிழ்வு கொண்டனர்.

பேராசிரியர் ரவீந்திரநாத் அவர்கள், நிர்வாகப் பணிச்சுமைகளுக்கு அப்பால், தான் மாணவர்களுக்கு ஆற்றவேண்டிய விரிவுரைகளைத் தானே நடத்தி வந்தமை, அவரது கடமையுணர்ச்சியை எடுத்துக்காட்டுவதாக அமைந்தது. தகுந்த முறையில் தயார் செய்து, தமிழ் மொழியிலோ அல்லது ஆங்கில மொழியிலோ மாணவர்கள் இலகுவில் விளங்கிக் கொள்ளும் வண்ணம், விரிவுரைகளை நடத்துவது அவருக்குக் கைவந்த கலையாகும். அத்துடன், தான் ஒரு பேராசிரியர் என்றோ அல்லது உபவேந்தர் என்றோ கர்வம் கொள்ளாது, சர்வசாதாரண ஒரு மனிதனாக, மிகவும் எளிமையாக மாணவர்களோடு பழகி வந்தமையால், மாணவர்கள் மத்தியில் மிகுந்த மதிப்பும், மரியாதையும் கொண்டவராக விளங்கினார்.

மாணவர்களின் கல்வியில் அக்கறை கொண்ட பேராசிரியர் ரவீந்திரநாத் அவர்கள், தான் பாண்டித்தியம் பெற்ற விவசாயத்துறையில், நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார். அவற்றுள் 'குருந்தாவரம்', 'களைகள்', 'RECENT TRENDS IN PEST MANAGEMENT' ஆகிய நூல்கள் குறிப்பிடத்தக்கனவாகும். சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் விவசாயம் தொடர்பான கட்டுரைகள் பலவற்றையும் எழுதியுள்ளார்.

ரவீந்திரநாத் அவர்கள் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தராகப் பணியாற்றிய போது பிரித்தானியா, நோர்வே, நேபாளம் ஆகிய நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களுடன் தொடர்பு கொண்டு, கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், உயிரியல் விஞ்ஞானத் துறையில் புலமைப் பரிசில் பெற்று, முதுமானிப் பட்டப்படிப்பைத் தொடர ஏற்பாடுகள் செய்தார். 2004ம் ஆண்டு நோர்வேப் பல்கலைக்கழகம், மூவருக்கு உயிரியல் விஞ்ஞானத் துறையில் புலமைப் பரிசினை வழங்கியிருந்தது. இதே காலகட்டத்தில் ருகுணுப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் ரஞ்ஜித் செனாரத்ன அவர்களுடன் இணைந்து, நேபாள நாட்டுப் பல்கலைக்கழகத்துடன் சர்வதேச சூழலியல் மற்றும் அபிவிருத்திக் கற்கை நெறியில் புலமைப்பரிசில் பெற்று, கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் முதுமானிப் பட்டப்படிப்பினை மேற்கொள்ள ஒழுங்கு செய்தார். ருகுணுப் பல்கலைக்கழக உபவேந்தர் ரஞ்ஜித் செனரத்ன, உபவேந்தர் ரவீந்திரநாத் அவர்களுடன் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஒன்றாகப் படித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது..


விரிவுரையாளர், பேராசிரியர், உபவேந்தர் என்ற பதவி நிலைகளுக்கு அப்பால், ரவீந்திரநாத் அவர்கள் மட்டக்களப்பில் செயற்பட்டு வந்த சமூக, சமய, கல்விசார் அமைப்புகளுடன் இணைந்து பொதுப் பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். மட்டக்களப்பைத் தனது நிரந்தர வாழ்விடமாக, மாற்றிக் கொண்ட ரவீந்திரநாத் அவர்கள், தன் பிள்ளைகளை உயர் கல்வி பெற வின்சன்ட் மகளிர் கல்லூரியில் சேர்த்திருந்தார். 1999ம் ஆண்டு முதல் 2002ம் ஆண்டு வரை அப்பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளராகவும் செயற்பட்டார். அக்கால கட்டத்தில் செங்கலடி மகா வித்தியாலயம், வின்சன்ட் மகளிர் கல்லூரி போன்றவற்றில், போதிய விஞ்ஞான ஆய்வுகூட வசதிகள் இன்மையால், கிழக்குப் பல்கலைக்கழக ஆய்வு கூடங்களில் செய்முறைப் பயிற்சிகளை மாணவர்கள் மேற்கொள்ள உதவி செய்தார். அத்துடன் பல்கலைக்கழக விரிவுரையாளர்களைக் கொண்டு கருத்தரங்குகளையும் ஏற்பாடு செய்தார். அதன் பயனாக மருத்துவத் துறைக்குப் பிரவேசிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது. 2001ம் ஆண்டு இலங்கை விஞ்ஞான மேம்பாட்டுச் சங்கம் (Sri Lanka Association of the Advancement of Science) நடத்திய மாணவர்களுக்கான ஆய்வு செயற்பாட்டுப் போட்டியில், வின்சன்ட் மகளிர் கல்லூரி முதலிடத்தைப் பெற்றுப் பெருமை கொண்டது.

பேராசிரியர் ரவீந்திரநாத் அவர்களின், சமூகப் பொறுப்புணர்வின் உச்சத்தை, 2004ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ம் திகதி, சுனாமிப் பேரனர்த்தத்தின் போது, பலரும் அறியக்கூடியதாக இருந்தது. பல்கலைக்கழக அனைத்துத் தரப்பினரையும் ஒருங்கிணைத்து, சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவுப் பொருட்களை விநியோகித்தல், மருத்துவர்களை அழைத்து முதலுதவி மற்றும் மருத்துவ சேவைகளை வழங்குதல், நீர்நிலைகளை ஆராய்ந்து நன்னீர் பெற ஒழுங்கு செய்தல், கூடாரங்களில் தற்காலிகமாக வசித்த மக்களின் நலன்களைப் பேணுதல், மாசடைந்த விவசாய நிலங்களை ஆய்வு செய்து மீண்டும் விவசாயம் செய்ய ஆவன செய்தல் என அவர் ஆற்றிய பணிகள் அளப்பரியனவாகும்.

சைவ சமயத்தில் ஆழ்ந்த பற்றுக் கொண்ட ரவீந்திரநாத், பல்கலைக்கழக வளாகத்தில் இருக்கும் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தின் தலைவராகவும், இந்து மாமன்ற ஒன்றியத்தின் தலைவராகவும் இருந்து சமய, கலை, கலாச்சார செயற்பாடுகளுக்கு ஊக்கமளித்தார். மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சீலாமுனைக் கிராமத்தில், இராமகிருஸ்ண மிசனால் மேற்கொள்ளப்பட்ட சுனாமி வீடமைப்புத் திட்டத்தில், ரவீந்திரநாத் அவர்களின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கது. சுவாமி ஜீவானந்த ஜி மகராஜ் மற்றும், கொழும்பு இராமகிருஸ்ண மிஷனின் சமய, சமூகப் பணிகளிலும் ரவீந்திரநாத் தன்னை இணைத்துக் கொண்டார்.

கிழக்குப் பல்கலைக்கழக வளர்ச்சியே தனது வாழ்வாகவும் மூச்சாகவும் எண்ணி வாழ்ந்த உபவேந்தர் ரவீந்திரநாத் அவர்கள், 2006ம் ஆண்டு டிசம்பர் மாதம் 15ம் திகதி காலை கொழும்பில், இலங்கை விஞ்ஞான மேம்பாட்டுச் சங்கம் (SLAAS) ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கில் கலந்து கொள்ளச் சென்றபோது இனம்தெரியாத ஆயுததாரிகளால் கடத்தப்பட்டுக் காணாமலாக்கப்பட்டார். ஏறக்குறைய பதினைந்து வருடங்கள் ஆகும் நிலையிலும், அவர் உயிருடன் இருக்கிறாரா?, இல்லையா? என்பதனை அறிய முடியாது, அவரது குடும்பத்தினர் வாழ்ந்து வருவது மிகப் பெரிய சோகமாகும்.

கால் நூற்றாண்டுக்கு மேலாக, கிழக்குப் பல்கலைக்கழகத்தில் உபவேந்தர் ரவீந்திரநாத் அவர்கள் பணியாற்றிய போது, அவரிடம் படித்த மாணவர்கள், நண்பர்கள், அவருடன் பணியாற்றிய விரிவுரையாளர்கள், சமூக, சமயப் பணிகளில் இணைந்து பயணித்த சமூகப் பணியாளர்கள், கல்விச்சான்றோர் எனப் பலரும் மட்டக்களப்பிலும், இலங்கையின் பல பாகங்களிலும், உலகின் பல நாடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் அனைவரது உள்ளங்களிலும் ரவீந்திரநாத் அவர்கள் நீக்கமற நிறைந்துள்ளார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அவருடன் படித்த நண்பர் ஒருவர், தனது மகனுக்கும் தான் நடத்திவரும் ஆங்கில மொழி மூலமான தனியார் விஞ்ஞானக் கல்வி நிலயத்துக்கும் ரவீந்திரநாத் அவர்களின் பெயரைச் சூட்டி, 2004ம் ஆண்டு அவர் மூலமாகவே திறந்து வைத்து, இன்றுவரை நடத்திவருவது, ரவீந்திரநாத் அவர்களின் பெருமைக்கு சிறந்த ஓர் உதாரணமாகும்.



vivekananthan.v@thaiveedu.com

உலகின் முன்னணி காணி, வீடு விற்பனை நிறுவனமான **RE/MAX** முதல் தடவையாக யாழ் மண்ணில்

RE/MAX NORTH REALTY
Each office is independently owned and operated.

கனடாவிலிருந்து தாயகத்தில் எப்பாகத்திலும் வீடு காணி வாங்க விற்க சிறந்த ஒரு நண்பர் உங்களை வழிநடத்த

LKR 15,000,000 CAD $ 109,025

Beach Side Land for sale in Pothuvil
(Sangamam Village, Thirukovil)
Land Size: 01 Acre

LKR 77,500,000 CAD $ 574,582

Famous and spacious Commercial
Building For sale in Prime Location Jaffna
Land Size - 34 Perch • Building Size - 5358sqft

LKR 140,000,000 CAD $ 1,015,257

Famous Palmera Eco Resorts for sale
in Nilaveli, Trincomalee
Land Size :- 143 Perch • Total Sqft :- 38,932

LKR 6,000,000 CAD $ 43,236

House For Sale
in Memorial Lane, Manipay
Land size - 16.05 Perch

LKR 5,000,000 CAD $ 35,449

House For Sale
in Urumpirai West
Land size - 41.9 Perch

LKR 28,000,000 CAD $ 204,219

Brand New 2 Story House
For Sale in Vannarpannai
Land Size - 23.1 Perch

LKR 10,000,000 CAD $ 70,877

Land for sale in Kanagar village,
Pottuvil
Land Size - 732 Perch

LKR 2,800,000 CAD -$ 20,476

Land For Sale
in Muthamil Road, Kottaddy
Land Size - 13.2 Perch

LKR 6,800,000 SOLD

House For Sale in Thinaveli
Land Size - 23.12 Perch

LKR 22,000,000 CAD $ 159,281

Land for sale in Tanankilappu,
Chavakachcheri
Total Land Size - 110 Larchams

LKR 2,000,000 CAD $ 14,450

Land For Sale In Valvettithurai
Land Size - 30 Perch

LKR 2,100,000 SOLD

Land for sale in 3rd Cross St,
Paasaiyoor
Land Size: - 30 Perch

LKR 4,000,000 CAD $ 28,937

Land For Sale In Valvettithurai
Land Size - 60 Perch

LKR 9,000,000 CAD $ 65,480

Land For Sale In Valvettithurai
Land Size - 83.8 Perch

LKR 12,000,000 CAD $ 87,692

House with Land For Sale
in Allarai North
Land Size - 125perch

LKR 600,000,000 CAD $ 4,395,926

Luxurious Business complex For Sale
In Kiramakottu Junction Point Pedro
Land Size - 61 Perch • Total Sqft - 50,771

LKR 27,500,000 SOLD

Two Story Luxury House
For Sale in Nallur
Land Size: - 10 Perch

LKR 36,000,000 CAD $ 262,381

Land For Sale
in Palaly road, Vasavilan
Land Size - 150 Perch

LKR 3,000,000 CAD $ 21,677

Land for Sale In Valvettithurai
Land Size - 45 Perch

LKR SOLD

Land For Sale in Kaithady
Land Size - 38 Perch


Lathan Varatharajah
Broker Owner
+94 76 493 3331
lathan@remaxnorth.lk


Sarmilin Rajeevan
Real Estate Representative
+94 77 227 6498
sarmilin@remaxnorth.lk

வீடு, காணி வியாபாரம் வாங்க விற்க
நம்பிக்கையுடன் நாடுங்கள் நட்பான
விற்பனை முகவர்கள் ஒரே முகவரியில்

+94 77 566 0000 • +94 21 468 0780
www.remaxnorth.lk
111C Kannathiddy Road,
Jaffna, Sri Lanka


Nitharsan Antonrasa
Real Estate Representative
Mobile: +94 77 222 0243
nitharsan@remaxnorth.lk


M.T. Mohamed Ismail
Real Estate Representative
+94 77 221 6916
ismail@remaxnorth.lk



# என் நினைவில் நீர்வை பொன்னையன்

- வசந்தி தயாபரன்

உழைக்கும் மக்களுக்கான உரிமைப்போராளியாகவும் அசையாத கொள்கைப் பிடிப்பாளராகவும் வாழ்ந்து, நீர்வேலி மண்ணுக்கும் இலங்கை முற்போக்கு உலகுக்கும் பெருமை சேர்த்த ஒருவரே, கடந்த ஆண்டு மறைந்த நீர்வை பொன்னையன் அவர்கள். தொண்ணூறு வயதை நிறைவு-செய்த இரண்டு தினங்களில், மார்ச் 26, 2020 அன்று அவர் எம்மிடம் இருந்து விடைபெற்றுக்கொண்டார்.

நாற்பதுகளின் பிற்பகுதியானது, சிந்தனைகளோடு மட்டும் தேக்கமுற்று விடாது, செயல்பாட்டிலும் முழுமூச்சாக ஈடுபடலே சமூக மாற்றம் என்ற ஒன்று ஏற்பட வழிவகுக்கும் என்ற புரிதலுடன் ஓர் இளைஞர் கூட்டம் புறப்பட்ட ஆரம்ப நாட்களாக அது பதிவாகியுள்ளது. அன்று அடக்குமுறைகளைக் கண்டு வெகுண்டெழுந்த நீர்வேலி வாலிபனான இராமலிங்கம் பொன்னையா, பதின்ம வயதில் போராட்டப்பாதையை வரித்துக்கொண்டு, பிற்பாடு தான் உயர்கல்வி கற்கச்சென்ற கல்கத்தாவில் கம்யூனிசச் சித்தாந்தங்கள் பற்றிய மேலும் ஆழமான புரிதலையும், போராட்டங்கள் குறித்த நேரடி அனுபவங்களையும் பெற்றுக்கொண்டு, தனது வாழ்வின் இறுதிவரை ஒரு போராட்ட குணமிக்க முற்போக்காளனாகவே வாழ்ந்து மறைந்தார்.

புரட்சியின் தொட்டிலாக விளங்கிய வங்காளத்தில் அவர் பெற்ற கற்றறிவு, பட்டறிவு என்பன பெறுமதி மிக்கவை. அத்துடன் நவீன இலக்கியப் பரிச்சயம், அமைப்பு ரீதியான செயற்பாட்டு அனுபவங்கள் என்பவற்றையும் அவர் அங்கு தாராளமாகப் பெற்றுக்கொண்டார். மாணவப்போராளியாகத் தன்னை மாற்றிக்கொண்ட நீர்வை, கல்கத்தா - சரம்புரில், இந்திய மக்கள் கலாசார மன்றத்தின் கிளை தாபிக்கப்பட்டபோது, அதன் செயலாளராகப் பொறுப்பு வகித்தார். நீர்வையின் ஆளுமையின் பெரும்பங்கு இக்காலகட்டத்திலேயே உருவாக்கியிருந்தது. பேராசிரியர் சபா ஜெயராசா அவர்கள், 'மார்க்சியத்தைத் திரிபுபடுத்தும் சிறுமை கண்டு பொங்கும் தெளிவுடைய கண்ணோட்டம், அவரது ஆளுமைக்குரிய பலமாயிற்று. கண்மூடித்தனமான பின்பற்றுதல் அல்லது கொள்கைகளை நீர்த்துப்போக விடுதல் அவரிடம் இல்லை' என்று ஓரிடத்தில் குறிப்பிடுகிறார். வங்காளத்தில் கம்யூனிச இயக்கச் செயற்பாடுகளில் மிகத்தீவிரமாக ஈடுபட்டு, அவர் பெற்றுக்கொண்ட மனோபலம், அசையாத கொள்கைப்பற்று என்பவையே இவற்றுக்கான ஊற்றுக்கண்களாகத் திகழ்ந்தன என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

வங்காளத்திலிருந்து பட்டதாரியாகத் திரும்பிய நீர்வைக்கு கிராமிய மக்களின் பிரச்சினைகள், பீடித்தொழிலாளர், மில் தொழிலாளர், நெசவுத்தொழிலாளர், பஸ் தொழிலாளர் என்போரின் பிரச்சினைகள் எல்லாமே சொந்தப் பிரச்சினைகளாயின! அரச அதிகாரிகள் ஏழை விவசாயிகளை ஏய்ப்பதை அவரால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. சாதியம் எனும் நஞ்சூட்டல், சமூகத்தில் தொடர்ந்தமை கண்டு அவர் சினம் கொண்டார். வீதியில் இறங்கிப் போராடிய பொன்னையா என்ற துடிப்புமிக்க இளைஞன், பிற்பாடு பேனாவையும் தனது ஆயுதமாகக் கொண்டார். 1947ல் தனது அரசியல் பயணத்தை ஆரம்பித்த நீர்வை, பத்தாண்டுகளின் பின்னர் 1957ல் எழுத்துப் பயணத்தையும் தொடங்குகிறார். நீர்வேலிக் கிராமத்தானாக மட்டுமன்றி, 'நீர்வை பொன்னையன்' ஆகவும் அவர் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டார்.

எழுத ஆரம்பிக்குமுன் கே. பொடேகாட்டின் 'கவாகெரி', பிரேம்சந்தின் 'சிருஷ்டி' என்ற இரு கதைகளையும் தான் மொழிபெயர்ப்புச் செய்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார். பிற்பாடு, அவரது முதலாவது சிறுகதை 'பாசம்' ஈழநாடு பத்திரிகையிலும், இரண்டாவதாக 'மேடும் பள்ளமும்' கலைச்செல்வி இதழிலும் வெளியாகின. நீர்வை வர்க்கப்போராட்டத்தையும், அடக்குமுறைகளையும் பற்றி மிக உத்வேகத்துடன் பல தசாப்தங்களாக எழுதினார். அவை, 14 சிறுகதைத்தொகுப்புகள், 4 ஏனைய நூல்கள், 6 தொகுப்புநூல்கள் என வளர்ந்தன. அவற்றில் ஒன்று சிங்களமொழியிலும், இன்னுமொன்று ஆங்கிலமொழியிலும் பெயர்க்கப்பட்டுள்ளன. அவர் காலமாகும்போது, 'பாசப்பிரவாகம்' என்ற தலைப்பிலான அவரது இறுதித்தொகுதி அச்சில் இருந்தது. கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக அது வெளிவராமல் முடங்கியிருந்தமை காலத்தின் சதி! 'பாசம்' என்ற முதற்கதையுடன் எழுத்துலகில் நுழைந்து, 'பாசப்பிரவாகம்' தொகுதியுடன் அவர் தனது எழுத்தை நிறுத்திக் கொண்டமையும் ஒரு வியப்பூட்டும் நிகழ்வாகவே அமைந்துவிட்டது! அவரது சித்தாந்தம் எவ்வாறு அவரது வாழ்வை நடத்திச்சென்றதோ, அவ்வாறே ஆழ்ந்து அகன்ற வாசிப்பு அவரது எழுத்தினை

வடிவமைத்தது. பாடசாலைக் கல்வியின்போது, ஆங்கில இலக்கியத்தின் தலைசிறந்த படைப்புக்களைக் கற்றுக்கொண்டது போன்றே, வங்காளத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் இலக்கிய நண்பர்களின் தொடர்பு, கலை இலக்கியத்துறையிலும் ஈடுபாட்டை ஏற்படுத்தியது என நீர்வை கூறுகிறார். நாட்டார் இலக்கியத்திலும் இசையிலும் அவர் பெரும் ஈடுபாடு கொண்டதும் அக்கால கட்டத்திலேதான். அவர் பயின்ற சரம்பூர் கல்லூரியின் 'வில்லியம் கேரி' நூலகமும் அவரது வாசிப்பு வேட்கைக்குத் தீனி போட்டது. முன்ஷி பிரேம்சந்த், முல்க்ராஜ் ஆனந்த், கே.ஏ.அப்பாஸ், தகழி சிவசங்கரம்பிள்ளை, எமிலி ஜோலோ, விக்ரர் ஹியூகோ, மாப்பசான் முதலிய எழுத்தாளர்களின் படைப்புக்கள், நீர்வையின் கருத்தியலுக்கும் எழுத்தாற்றலுக்கும் வளம்சேர்த்தன.

மக்கள் எழுச்சிக்கான கருத்துக்களையே முற்போக்கு எழுத்துக்கள் காவிச்செல்கின்றன. அக்கோட்பாடுகள் கலை இலக்கிய உருவைப் பெறுகையில், அவை 'எழுத்தாளர்' என்ற வகையில் அச்சிந்தனையாளர்களை ஒன்றுதிரட்டவும், மக்களுடன் அவர்கள் உறவாடவும் வழிவகுக்கின்றன. எனவேதான் மக்கள் இயக்கத்தின் இன்னொரு போராட்ட வடிவமான எழுத்தை அவர் வரித்துக் கொண்டார். இவை எல்லாவற்றையும் ஒருங்கே புலப்படுத்துவதாக நீர்வையின் கோபமும் ஆவேசமும் கொப்பளிக்கும் எழுத்துக்கள் எம்மை வந்தடைந்துள்ளன. 'மார்க்ஸியப் பாதையில் செல்லும் முற்போக்கு எழுத்தாளரான நாம் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவாகவும், சுரண்டலுக்கும் சூறையாடலுக்கும் எதிராகவும் குரலெழுப்ப வேண்டும்' என்பது அவரது எழுத்தின் திடமான நோக்காகப் பதிவாகியுள்ளது.

சமூகமாற்றங்களை ஏற்படுத்த வேண்டுமாயின், அடிப்படை மாற்றங்கள் எங்கு எப்படி முளைவிட வேண்டும் என்ற தெளிவு பொதுவாகவே முற்போக்கு எழுத்தாளர்களுக்கு உண்டு. அவ்வகையில், நீர்வையின் எழுத்துக்கு மனிதாபிமானம் என்ற பண்பு வலுச் சேர்த்தது. கொள்கைப்பிடிப்பு என்ற தூண் அதனைத் தாங்கி நின்றது. அதில் தடுமாற்றமோ தள்ளாட்டமோ அவரது இறுதிக்காலம்வரை ஏற்பட்டதில்லை. எங்காவது கொள்கை வழுவல்களைக் காணுமிடத்து, நீர்வைக்குக் கண்மண் தெரியாத கோபம் வருவதும், அன்றுடன் அத்தொடர்புகளை முற்றாகத் துண்டித்துக்கொள்வதும் அவரது பண்புகளாக இருந்தன.

வங்கத்துக்குப் போவதற்கு முன்பும், மீண்டபின்பும் நீர்வை கம்யூனிஸ்ட் கட்சியில் முழுநேர ஊழியராக இருந்தார். மக்கள் பிரசுராலயம் கம்யூனிஸ்ட் கட்சியின் கட்டுப்பாட்டில் இருந்ததாகவும், அதன் வெளியீடான 'தேசாபிமானி' பத்திரிகை ஆசிரியர் குழுவில் இருந்தபோது, நூற்றைம்பதிற்கும் அதிகமான கட்டுரைகளை, தான் அதில் எழுதியிருப்பதாகவும் நீர்வை குறிப்பிடுகிறார். அங்கு, பீற்றர் கெனமன், எச்.ஜீ.எஸ். ரத்னவீர, பிரேமலால் குமாரசிறி, கே. இராமநாதன், எச்.எம்.பி. மொஹிதீன் எனப் பல தோழர்களுடன் இணைந்து செயலாற்றிய அனுபவம் அவருக்கு வாய்த்தது. கம்யூனிஸ்ட் கார்த்திகேசன் என்றும் அவரது அன்புக்கும் மதிப்புக்கும் உரியவராக இருந்தார். 2019 வரை, கார்த்திகேசனதும் கைலாசபதியினதும் நினைவுப் பேருரைகளை ஆண்டுதோறும் ஏற்பாடு செய்து நடத்துவதில் நீர்வை சளைத்ததில்லை.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்துடனான தொடர்பு, அவரை எச்.எம்.பி. மொஹிதீன், பிரேம்ஜி ஞானசுந்தரம், என்.கே. ரகுநாதன், செ. கணேசலிங்கம், கா. சிவத்தம்பி, முஹம்மது சமீம் உட்பட இன்னும் பலருடன் இணைத்தது. இறுகிய சமூகக்கட்டுப்பாடுகளை புரட்டிப்போட்ட எழுத்துக்கள் அவரிமிருந்து பிறக்கத் தொடங்கின. 'நான் அரசியல்வாதியல்ல, இலக்கியவாதியுமல்ல. அரசியல் கலை இலக்கியச் செயற்பாட்டாளன்' எனத் தன்னை அவர் அழைத்துக்கொண்டார். கடுமையாக நோய்வாய்ப்படும் காலம்வரை, தொடர்ந்து செயற்பட்ட நீர்வையின் உற்சாகம் கண்டு நான் வியந்ததுண்டு. கொழும்பில் நீர்வை வாழத்தொடங்கிய போது, விபவி மாற்றுக் கலாசார நிறுவனத்தில் தமிழ்ப் பிரிவுப் பொறுப்பாளராக அவர் ஆற்றிய கலை இலக்கியப் பணிகள் மிகவும் காத்திரமானவை. அக்காலகட்டத்தில், விபவியும் இலங்கை முற்போக்குக் கலை இலக்கியப்பேரவையும் இணைந்து நடத்திய தொடர் ஆய்வரங்குகள் குறிப்பிடத்தக்கன. அங்கு வாசிக்கப்பட்ட கட்டுரைகள், பிற்பாடு இரண்டு தொகுதிகளாக நூலுருப்பெற்றன.

2002ன் முற்பகுதியில், அவர் இலங்கை முற்போக்கு கலை இலக்கியப் பேரவையினை (பிற்பாடு, பேரவை என்ற சொல் மன்றம் என மாற்றப்பட்டது) முகமது சமீம், கவிஞர் ஏ. இக்பால், சிவா சுப்பிரமணியம், கே. சோமசுந்தரம், சண்முகம் சுப்பிரமணியம் என்ற ஐந்து நண்பர்களுடன் சேர்ந்து ஆரம்பித்து, மிகவும் செவ்வையாக அதனை நடத்திவந்தார். பின்னர், இன்னும் சில முற்போக்குச் சிந்தனையாளர்கள் மன்றத்தில் இணைந்து செயற்பட்டனர். மன்றத்தின் நேசசக்திகள் எனவும் ஆலோசகர்கள் எனவும், தகவம் வ. இராசையா, பேராசிரியர் சபா ஜெயராசா, டாக்டர் எம்.கே. முருகானந்தன், கலாநிதி செல்வி திருச்சந்திரன் ஆகிய நால்வரையும் 'நினைவலைகள்' எனும் நூலில் நீர்வை குறிப்பிடுகின்றார். அம்மன்றம், 2006ம் ஆண்டிலிருந்து மாதாந்தக் கூட்டங்கள், நினைவுச் சொற்பொழிவுகள், நூல் வெளியீடுகள், விமர்சன அரங்குகள், சிறுகதைப் பயிலரங்குகள் எனப் பலவற்றை நடத்தி வந்தமையை இங்கு நாம் குறிப்பிடவேண்டும். அக்காலகட்டத்தில், முற்போக்கு இலக்கிய எழுச்சி, நான்கு முன்னோடி எழுத்தாளர்கள் என்ற இரு நூல்களை பூபாலசிங்கம் புத்தக நிறுவனத்தின் ஆதரவுடன் அவர் வெளியிட்டார். அவ்வாறே, 2002ல் முற்போக்கு இலக்கிய முன்னோடிகள் எனும் நூலையும், 2018ல் இலங்கை முற்போக்கு இலக்கிய எழுத்தாளர்கள் எனும் நூலையும் தனது மன்றத்தினால் வெளியிட்டார். இவை, நீர்வையின் நினைவுகள் எனும் தேட்டம் வழியாக எமக்குக் கிடைத்த வரலாற்று ஆவணங்கள்.

எனது தந்தை தகவம் வ. இராசையாவுடன் நீர்வை கொண்டிருந்த நட்பு மிகவும் அற்புதமானது. எனது தந்தை மறைந்ததன் பின்னரான பத்தாண்டு காலப்பகுதியில், நான் நீர்வைக்கு இன்னுமொரு மகளானேன். இறுதிநாட்களில், எவராலுமே வாசிக்க முடியாதபடி கீறலாக மாறிப்போன அவரது கையெழுத்தை வாசிக்கவும், அச்சில் வருபவற்றை ஒப்புநோக்கவும், நான் பழகிக்கொண்டேன். கையெழுத்துப் பிரதிகளில் உள்ள அவரது சிறுகதைகளை விமர்சிக்கின்ற நட்புரிமையை அவர் எனக்குத் தந்திருந்தார். ஒரு மாபெரும் ஆளுமை, என் தந்தையைப் போலவே என்னிடம் பாசத்தைக் காட்டியதும், உரிமை எடுத்துக்கொண்டு என்னிடம் பல பொறுப்புக்களை ஒப்படைத்ததும், தனது மன்றப்பணிகளில் என்னையும் இணைத்துக்கொண்டதும், அடுத்த தெருவில் வாழ்ந்ததால் எங்கள் வீட்டிற்கு அடிக்கடி வந்து ஆரோக்கியமான கலந்துரையாடல்களில் ஈடுபட்டதும் கடந்த வருடத்துடன் நிறைவுக்கு வந்தது. பாசத்துடன் அன்பாகப் பேசும் நீர்வையின் முகம் எனது கண்களில் நிழலாடுகிறது. அன்றைய கல்கத்தா, புரட்சிகர மாணவர் ஒன்றியம் பற்றியும், தோழியரான றேணுஹா சட்டர்ஜி, பாரதி மஜூம்தார், தோழர்களான சௌத்ரி, வேணி மாதவன், சட்டர்ஜி, மட்டக்களப்பு கிருஷ்ணன் குட்டி, கார்த்திகேசன் மாஸ்டர் என்போர் பற்றியும் அவர் எனக்குக் கதைகதையாகச் சொன்ன எந்த ஒரு விடயமுமே எனது நினைவை விட்டு அகலப் போவதுமில்லை.

'அவரது வாழ்வும் எழுத்தும் ஒன்றையொன்று தழுவியவை' என்று பேராசிரியர் சபா ஜெயராசா எழுதியுள்ளதை அவருடன் இறுதி-வரை பயணித்த பலரும் ஏற்றுக்கொள்வர். அதுவே அவரது எழுத்துக்களுக்கான அறவழிப்பதையாகவும் அமைந்தது. இலங்கை அரசின் 'சாகித்திய ரத்னா' விருது ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னர் அவருக்கு வழங்கப்பட்டதையும் இங்கு நான் குறிப்பிட வேண்டும். 'இல்லாரும் உள்ளாரும் இல்லாத' ஓர் உன்னத சமுதாயத்தை நோக்கிப் பயணிக்க அவர் அவாவினார். நீர்வை, அதையே தனது வாழ்வின் செய்தியாகவும் விட்டுச்சென்றுள்ளார். அந்த நெடிய, மெல்லிய, உரமிகுந்த மனிதரின் ஆளுமைக்கு, அவரது எழுத்துக்கள் மட்டுமன்றி, அவரது தொடர் செயற்பாடுகளும் சான்றாக நிலைத்துவிட்டன.

'நான் வரித்துக்கொண்ட அரசியல் தளமும், அதற்கேற்றவாறு நான் கட்டமைத்துள்ள கலை இலக்கியச் செல்நெறியும் சரியானது என அனுபவரீதியாகத் தெளிவாகத் தெரிந்து வைத்துள்ளேன். எனது இருப்பிற்காகவோ, வேறு சில சலுகைகளுக்காகவோ நான் விலைபோகவில்லை. அன்றிலிருந்து இன்றுவரை எதுவிதத் தடம் புரள்வுமின்றி எனது இலட்சியப்பாதையில் நான் உறுதியுடன் பயணித்துக் கொண்டிருக்கிறேன்.' என்பது அவரது வாக்குமூலம்!

ஒரு போராட்டக்காரனாக தனது வாழ்வை வாழ்ந்து காட்டிய நீர்வை பொன்னையன் அவர்கள் எமது நினைவில் வாழ்கின்றார்.



vasanthy.t@thaiveedu.com

# எனது மனப்பதிவில் தோழர் நீர்வை பொன்னையன்

- ந. இரவீந்திரன்

நீர்வை பொன்னையன் எம்மைவிட்டு நீங்கி ஓராண்டு கடந்த நிலையில் அவர் விட்டுச் சென்ற நினைவுத் தடங்களை மீட்டுப் பார்க்கும் அவசியமுள்ளது. அவர் வாழ்ந்த காலத்திலேயே அவர் பற்றிய மதிப்பீடுகள் பலவடிவங்களில் வெளிப்பட்டன. அவரது இறுக்கமான கருத்தியல் நிலைப்பாடு காரணமாக அவரைப் பலரும் நெருங்க இயலாதவரெனக் கண்டபோதிலும் சமூகநல நாட்டம் மிக்க பக்கத்தில் எவ்வகையிலும் புறக்கணித்துவிட முடியாதவர் என்ற வகையில் நீர்வை கவனிப்புக்கு உரியவராக இருந்து வந்தார். இலங்கா இரத்தினா விருதுவரை அவர் அடையாளப்படுத்தபட வேண்டியவராக இருந்துள்ளார்.

தனக்கான அரசியல் இலக்கியத் தளத்தில் சமரசத்துக்கு இடமளிக்காதவர் என்ற ரீதியில் நானும் கூட அவருக்கு மாறுபட்ட அணிக்கு உரியவன் தான், என்னுடனும் அதிகம் நெருங்கமாட்டார் என்ற நினைப்பு எனக்கு இருந்ததுண்டு. ஊரில் இருந்தவரை நான் யாழ் ஸ்ரான்லி வீதியில் உள்ள யாழ்ப்பாணம் அச்சகத்தில் 'தொழிலாளி', 'செம்பதாகை' ஆகிய பத்திரிகைகள் அச்சிடப்படும் பொழுது உதவிபுரிகிற வேலைகளில் இருப்பேன். அருகேயுள்ள யாழ்ப்பாணம் புத்தகசாலைக்கு நீர்வை வந்து நின்று உரையாடுவதைக் கண்டிருக்கிறேன். அப்போதெல்லாம் அவருடன் தொடர்பு கொள்ள முயற்சித்ததில்லை. இரு நிறுவனங்களும் ஒரே கட்சிக்கு உரியனவாக இருந்த காலத்தில் நான் அங்கு செல்லவில்லை. இருவேறு கட்சிகளாகப் பிளவுபட்ட பின்னர் இரண்டும் எதிர் தரப்பினருக்கானவை என இயங்கத் தொடங்கிய பின்னரே நான் அங்கு செல்லும் நிலை இருந்தது.


பிளவுபட்ட இரு தரப்பினரும் மற்ற அணியினரைக் கண்டாலே முகத்தைத் திருப்பிக்கொண்டு போகிற நிலை. உள் நாட்டு யுத்தம் தீவிரப்பட்டிருந்த புதிய மிலேனியத்தின் தொடக்க கட்டத்தில் நீர்வையைக் கொழும்பில் சந்திக்க நேர்ந்தது. வெள்ளவத்தைக் கடற்கரையில் அவர் நடைப்பயிற்சியில் வேகமாக நடந்து வந்த போது எதிர் பக்கமாக அவரைக் கடந்து செல்ல இருக்கிறேன். ஒரு முன்னோடி முற்போக்கு இலக்கிய கர்த்தா என்ற வகையில் ஒரு சிரிப்புடன் கடந்துவிட நினைப்பு. மாறாக அவர் நின்று என்னுடன் உரையாடத் தொடங்கினார். குடும்ப நிலவரங்கள் பற்றிய உசாவல் எனது மனைவியைச் சிறுவயதில் நன்கு அறிந்தவர். தோழர் கே.ஏ. சுப்பிரமணியம் குடும்பத்துடன் அப்போதெல்லாம் மிக நெருக்கமான உறவு அவருக்கு இருந்தது. அவர்களது மூத்த மகன் இவர் வீட்டில் குழந்தையாக வளர்ந்தவர். கட்சி பிளவடைந்த பின்னர் அத்தகைய உறவுகள் எப்படிக் காணாமலாகின என்ற ஏக்கத்தினை அக்குடும்பம் உணர்வலைகளாக வெளியிட்டு வரக் கண்டிருக்கிறேன்.

முதற்தடவையாக தாம் நடத்தும் கருத்தரங்கு நிகழ்வில் கே. டானியல் படைப்புகள் பற்றி உரையாற்ற அழைப்பு விடுத்தார். எனது கட்சியிடம் அதற்கான அனுமதியைக் கோரிய போது கட்சியும் அவ்வாறு பங்குபற்றுவதனை அனுமதித்திருந்தது. பின்னர் பல உரைகளை முற்போக்கு கலை இலக்கிய மன்றத்தில் நிகழ்த்தினேன். அவற்றில் சில கட்டுரைகளாக்கப்பட்டு அந்த அமைப்பு வெளியிட்டிருந்த தொகுப்பு நூல்களில் இடம்பெற்றிருந்தன. 'முற்போக்கு இலக்கியத்துக்குக் கைலாசபதியின் பங்களிப்பு', 'முற்போக்கு இலக்கிய முன்னோடிகள்' ஆகிய தனி நூல்களையும் எழுதவைத்து அந்த அமைப்பு வாயிலாக வெளியிட்டார் நீர்வை பொன்னையன். எந்தவொரு கூட்டத்திலும் எனது உரைகளில் அவர்களது அமைப்பின் நிலைப்பாட்டுக்கு மாறுபட்டு நான் சார்ந்த கட்சி நிலைப்பாட்டையே தொடர்ந்து வலியுறுத்த நான் தவறியதில்லை. இருப்பினும் நீர்வை எப்போதும் அதை மறுத்துரைக்காமல் தொடர்ந்து என்னுடனான தொடர்பை விருத்தித் திசையிலேயே வளர்த்து வந்தார். இந்த அம்சம் சார்ந்து இங்கு வலியுறுத்திப் பேச அவசியம் உள்ளது.

முற்போக்கு கலை இலக்கிய மன்றமும் சரி நீர்வை பொன்னையனும் சரி நான் செயலாளராக இயங்கிய தேசிய கலை இலக்கியப் பேரவையை அங்கீகரித்ததில்லை. அதேவேளை எனது பேச்சிலும் அவர்கள் வெளியிட்ட நூல்களிலும் தே.க.இ.பே. குறித்து நான் எழுதுவதில் எந்தக் குறுக்கீட்டையும் அவர்கள் செய்ததில்லை. எனது கருத்தியல் நிலைப்பாட்டை அவர்களால் ஏற்கவியலாது இருந்த பொழுதிலும் அவற்றை வெளியிடவும் விருத்தி செய்யவும் தொடர்ந்து களம் அமைத்துத் தந்தனர். எனது அரசியல் - இலக்கிய கருத்தியல் நிலைப்பாடுகளை எனது அணி ஏற்கவியலாமல் என்னை வெளியேற்றிய பின்னரும் தொடர்ந்து நீர்வை எனது கருத்து நிலையை வெளிப்படுத்தவும் வளர்த்தெடுக்கவும் களம் அமைத்துத்தர மறுக்கவில்லை.

உண்மையில் நீர்வை உட்பட அவரது அமைப்பைச் சேர்ந்த எவரும் எனது கருத்துகள் அனைத்துடனும் உடன்பட்டிருக்கவில்லை. எனது அமைப்பினருக்கு இருந்த அதே நிலைப்பட்ட ஏற்கவியலாத் தன்மைகள் எல்லோரிடமும் இருந்தன. இரட்டைத் தேசியம், திணை அரசியல், ஆன்மீக நாத்திகம் என்பவற்றில் ஒவ்வொருவர் ஒருசில நிலைகளை ஏற்ற போதிலும் அவற்றுடன் முழுதாக உடன்பட்டுவிட இயலாத தயக்கம் எல்லோருக்கும் இருக்கிறது. மார்க்சியத்தின் அடிப்படை என மார்க்ஸ், லெனின் ஆகியோர் வர்க்கப் போராட்டத்தை வலியுறுத்துவர் இனிப் பாட்டாளி வர்க்கம் ஆட்சியை வென்றெடுத்துப் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைப் பிரயோகிப்பதனூடாக வர்க்கங்கள் அற்ற பொதுவுடமை சாத்தியப்படும் என்பதனை ஏற்காத ஒருவர் மார்க்சியராக மாட்டார் எனவும் கூறியுள்ளனர்.

வர்க்கப் போராட்டத்தின் வாயிலாக மட்டும் வரலாறு இயங்கவில்லை. முழுச் சமூக சக்திகளாக இயங்கும் சாதி, தேசங்கள் எனும் திணைகளிடையேயான போராட்டங்கள் வர்க்கப் போராட்டத்தினின்றும் முற்றிலும் வேறுபட்ட இயக்க முறை உடையன எனச்சொல்லும் எனது நிலைப்பாடு அவர்களால் அப்படியே ஏற்று



விட இயலாமல் இருப்பதில் ஆச்சரியமில்லை. இனியொரு பாட்டாளி வர்க்கப் புரட்சி எழுச்சி ஏற்படுவதாக அன்றி விடுதலைத் தேசிய முன்னெடுப்பு மூலமாகவே சோசலிசக் கட்டுமானம் சாத்தியமாகும் வகையில் வரலாற்றுச் செல்நெறி மாற்றம் ஏற்பட்டுள்ளமையை அதற்குரிய பரிமாணத்துடன் வேறு எவருமே முன்வைக்காதுள்ளனர். இன்றைய உலகில் மார்க்சியர்கள் தீர்மானகரமான சக்தியாக இயங்கவியலாது இருப்பதற்கான காரணம் இத்தகைய அடிப்படையான (பண்பு ரீதியிலான) வேறுபட்ட வரலாற்று முன்னெடுப்புக்குத் தலைமை ஏற்றாக வேண்டும் எனக் கூறி எந்தவொரு நாட்டுக்குமுரிய கொம்யூனிஸ்ட் கட்சியும் இயங்க முன்வரவில்லை என்பதில் அடங்கியுள்ளது. அதிகாரத்தில் இருக்கும் எந்தக் கட்சியும் இத்தகைய வரலாற்றுச் செல்நெறி மாற்றத்தை அங்கீகரிக்கவும் இல்லை.

அவ்வாறு முழுமையாக ஏற்கவியலாத கருத்துகளுடன் இருந்த அதேவேளை, தனது கருத்து நிலைக்கு மாறாகத் தன்னால் எதிர்தரப்பென அடையாளப்படுத்தப்படுகிற கே.ஏ. சுப்பிரமணியத்தின் நிலைப்பாடுகளைச் சரியெனத் தனது அரங்குகளிலேயே வலியுறுத்துகிற ஒருவனான என்னை நீர்வை எக்காரணம் கொண்டு ஏற்றார் என்பது கவனிப்புக்கு உரியது. தேசிய கலை இலக்கியப் பேரவையிலிருந்து நான் வெளியேறிய பின்னரும் அவரது முற்போக்கு கலை இலக்கிய மன்றத்தில் சேர்ந்து இயங்க உடன்பட்டிருக்கவில்லை. அவ்வாறு தனித்து இருக்க வேண்டாமெனப் பலரும் வலியுறுத்தியபொழுது தனியொரு அமைப்பு என்றில்லாமல் வெவ்வேறு அமைப்பினரும் சுதந்திரமாக கருத்தாடலை முன்னெடுக்கும் அரங்காக 'புதிய பண்பாட்டுத் தளம்' என்பதை உருவாக்குவோம் என்ற முடிவுக்கு வந்தோம். அதன் அங்குரார்ப்பணக் கூட்டம் அட்டனில் இடம்பெற்றது. பயணத்துக்குச் சிரமமாக இருந்த பொழுதிலும் அட்டன் வந்து அக்கூட்டத்தின் தலைமைப் பொறுப்பை நீர்வை ஏற்று மிகச் சிறப்பாக அந்த நிகழ்வை நிறைவாக்கித் தந்தார். அந்த அமைப்பின் சஞ்சிகையான 'புதிய தளம்' முதல் இதழ் அவரது தலைமையில் கொழும்பில் வெளியிடப்பட்டது. அதன் ஆசிரியர் குழுக் கூட்டங்களுக்கு வெள்ளவத்தையிலிருந்து கல்கிசைக்கு அவர் வந்து கலந்துகொண்டு முன்வைத்த கருத்துகள் வலுமிக்கன. அந்த சஞ்சிகையின் நோக்கத்தை வலியுறுத்தித் தொடர்ந்து வெளிவர வேண்டும் என்ற விருப்பம் அவருக்கு இருந்தது.

அறுபதாம், எழுபதாம் ஆண்டுகளில் இயங்கிய இடதுசாரிச் செயற்பாட்டாளர்களது செவ்விகள் தொடர்ந்து இடம்பெற வேண்டுமென ஆசிரியர் குழு கருதியிருந்தது. முதல் இதழில் வெளிவந்த மறைந்த ம.பா.சி. அவர்களது செவ்வி பெரு வரவேற்பைப் பெற்றிருந்தது. இரண்டாவது இதழுக்கு தோழர் எம்.ஏ.சி. இக்பால் இடமிருந்து நேர்காணலைப் பெற்றிருந்தோம். அதனை ஆசிரியர் குழுவில் விவாதித்த போது ஒரு விடயத்தை நீக்க வேண்டுமென நீர்வை வலியுறுத்தினார். 'மு. கார்த்திகேசன், வி.ஏ. கந்தசாமி, கே.ஏ. சுப்பிரமணியம் போன்றோர் துரோகமிழைத்துக் கட்சியைப் பிளவுபடுத்திப் போனதால் சண் ஆதரவுக்குழு என்ற நிலையை இறுதியில் வந்தடைந்தோம்' என்பதாக இக்பால் கூறியிருந்தார். அந்த வசனத்தை மட்டும் நீக்கிவிட்டு செவ்வியை வெளியிடலாமென நீர்வை சொன்னார்.

வெவ்வேறு கருத்துடைய பலரது செவ்விகளையும் தொடர்ந்து வெளியிட இருக்கிறோம் இந்தக் கருத்தின் தவறை வெளிப்படுத்துகிற பேட்டிகள் தொடர்ந்து வரும் என்ற வகையில் இக்பாலின் அபிப்பிராயத்தை அப்படியே வெளியிடுவோம் எனக் கேட்டுக் கொண்டேன். ஏனைய தோழர்களும் அக்கருத்தை வலியுறுத்தியமையால் நீர்வை முழுதாக மனமொப்பாத போதிலும் இறுதியில் உடன்பாட்டைத் தெரிவித்தார். காலையிலிருந்து மதியம் வரை அந்த அமர்வு இடம்பெற்றிருந்தது. பொழுதுபட்ட வேளையில் நீர்வை தொலைபேசியில் தொடர்புகொண்டார். 'நான் 'கொம்யூனிஸ்ட் கார்த்திகேசன் நினைவுக்குழுத்' தலைவராக இருக்கிறேன். அவரால் வழிப்படுத்தப்பட்டவர்கள் நாங்கள். என்னை ஆசிரியர் குழுவில் ஒருவராக கொண்டிருக்கிற சஞ்சிகையில் அவரைத் துரோகமிழைத்ததாகச் சொல்கிற வசனம் வெளிவருவது நல்லதல்ல. எனக்கு அதில் உடன்பாடில்லாத அதேநேரம் நான் அங்கம் வகிக்கிற ஏனைய அமைப்புகளுக்கும் அதனால் நெருக்கடி. தயவுசெய்து அந்த வசனத்தை நீக்கிவிடுங்கள்' என்று நீர்வை பொன்னையன் கேட்டுக்கொண்டார். 'எவரும் தமது கருத்தைச் சுதந்திரமாக வெளியிட இடமளிக்கும் தளம் என்று கூறிச் செவ்வியைப் பெற்றிருக்கிறோம். அந்த வசனத்தை நீக்குவது சரியல்ல, உங்களது அணிக்குரிய கார்த்திகேசன், வி.ஏ. கந்தசாமி ஆகியோரது பெயரை எடுத்துவிடுவோம். 'மணியம் கட்சியைப் பிளவுபடுத்திய பின்னர்...' என்பதாக அந்த வசனத்தை விட்டுவைக்கலாம்' என்று சொன்னேன். 'இல்லையில்லை, அப்படி இருவரது பெயர்களை மட்டும் நீக்குவது சரியல்ல, முழுதாக வரட்டும். மூன்றாவது இதழில் மறுபக்கத்தை வெளிப்படுதலாம்' என்று நீர்வை அமைதிகொண்டார்.

மூன்றாவது இதழ் வெளிவர முடியாமல் போகிற அளவில் அந்தப்

பிரச்சினை பெரிதாகிப் போனது. ‘புதிய பண்பாட்டுத் தளம்’ அதனது செயற்பாட்டை தற்காலிகமாக நிறுத்திக்கொள்ள வேறு பல காரணங்களும் இருந்தனவாயினும் இந்தப் பிரச்சினையும் அடிப்படைக் காரணங்களில் ஒன்றாக இருந்தது. நாங்கள் முகங் கொண்ட நெருக்குவாரங்களைவிட நீர்வை அதிகம் சிரமத்துக்காளானார். அவருக்கே உடன்பாடின்றி, இடதுசாரி இயக்க வீச்சினை வெளிப்படுத்தும் வகையில் அதற்குப் பங்களித்த பல்வேறு கருத்து நிலைப்பட்ட ஆளுமைகளைப் பதிவிடுவது என்ற நிலைப்பாட்டில் அந்தச் செவ்வி வெளிவந்தது என்பதனைக் கொம்யூனிஸ்ட் கார்த்திகேசன் ஆதரவாளர்களில் பலரால் ஏற்க இயலாமல் போனது. வேறெந்த ஆளுமைகளை விடவும் கொம்யூனிஸ்ட் கார்த்திகேசன் மீது நீர்வை மிகமிக அதிக ஈடுபாட்டைக் கொண்டுள்ளார் என்பதனை அவரோடு நெருங்கிப் பழகுகிற எவரும் புரிந்துகொள்வர். அதனை மேவி ‘புதிய தளம்’ மீது அவருக்கு நாட்டம் வருவதான சந்தேகம் எப்படி ஏற்பட இயலுமாயிற்று என்பது புரியாத புதிர்!

தோழர் கார்த்திகேசன் நூற்றாண்டை நினைவுக்குழு ஏற்பாட்டில் காத்திரமான ஆய்வுரைகளுடன் கொழும்பில் நடத்த வேண்டுமென நீர்வை திட்டமிட்டிருந்தார். என்னையும் ஆய்வுரை ஒன்றைத் தயாரித்து சமர்ப்பிக்கத் தயாராக இருக்கப் பணித்திருந்தார். அவ்வாறு செய்ய இயலாமல் போன நிலையில் கூட ஒரு பிரசுரத்தை வெளியிட்டிருந்தார் என்பதை மறந்துவிட இயலாது. முன்னதாக ‘நினைவலைகள்’ என்ற தன் வரலாற்று நூலில் தோழர் கார்த்திகேசன் தன்னைச் செப்பனிட்டிருந்தார் என்ற அம்சத்தைப் பெரிதும் வலியுறுத்திக் காட்டியிருந்தார். அவர்கள் பிளவடைந்து 1972இல் ‘இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்)’ என இயங்கத் தொடங்கிய போது தோழர் கே.ஏ. சுப்பிரமணியம் தம்முடன் சேர்ந்து இயங்க வரவேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. அவ்வாறில்லாமல் தோழர் சண்முகதாசன் தலைமையில் தொடர்ந்து இயங்கியது தொடர்பில் கடும் கோபம் நீர்வைக்கும் அவரது அணியைச் சேர்ந்தவர்களுக்கும் இருந்தது. பின்னர் 1978 இல் கே.ஏ. சுப்பிரமணியம் பிளவடைந்தபோது கார்த்திகேசன் அணியினர் முன்வைத்த காரணங்களையும் உட்படுத்தி இருந்தார்.

அந்தக் காரணங்களை முன்னிறுத்தி 1972இல் வெளியேறாமல் போனதற்கு கட்சிக்கான ஸ்தாபன ஒழுங்கமைப்புப் பேணப்படவில்லை என்பதனையே கே.ஏ. சுப்பிரமணியம் வலியுறுத்துவார். அந்த விடயத்தில் கோட்பாட்டை அவர் முன்னிறுத்தத் தவறினார் என்ற குற்றச்சாட்டு நீர்வைக்கு இருந்தது. குறுங்குழுவாத நிலைப்பாட்டைக் கைவிட்டு வெகுஜன மார்க்கத்தை முன்னெடுக்க வேண்டும், அதற்குரிய வகையில் ஐக்கிய முன்னணி கட்டியெழுப்பப்பட வேண்டும் என்பன இரு பிளவுகளிலும் முன்வைக்கப்பட்ட காரணங்கள். ஸ்தாபனக் கட்டுக்கோப்பு பின்பற்றப்பட வேண்டும் என்பது மேலதிகமாக கே.ஏ. சுப்பிரமணியம் வலியுறுத்திய அம்சம். இந்த மேலதிக விடயத்தில் நீர்வைக்கு உடன்பாடு இல்லாமல் இல்லை. என்னுடன் அவர் தொடர்பை வளர்த்ததில் அந்தத் தோழர்கள் இடையே ஊடாடியிருந்த அந்த உடன்பாட்டு அம்சங்களை இணைப்பதும் காரணியாக இருந்தது.

அப்படியிருந்தும், தனது ‘நினைவலைகள்’ நூலில் தோழர் கே.ஏ. சுப்பிரமணியம் பற்றி மிகத் தவறான விடயங்களை அவர் வெளிப்படுத்தி இருந்தார். ஏற்கனவே முற்போக்கு கலை இலக்கிய மன்றக் கருத்தரங்குகளில் அந்த விடயங்கள் பேசுபொருளாக இருந்து, அவையொவ்வொன்றையும் ஆதாரங்களுடன் நான் மறுத்துரைத்திருக்கிறேன். அவ்வாறிருந்தும் அவற்றை மீண்டும் கூறிய ‘நினைவலைகள்’ நூலை ஒப்பு நோக்குவதற்கு என்னிடம் நீர்வை தந்தார். எனக்கு பெரும் அதிர்ச்சியும் குழப்பமும் இருந்த போதிலும் எழுத்துப் பிழைகளைத் திருத்திக் கொடுத்தேனே அன்றிக் கருத்துப் பிழைகளைப் பற்றிப் பிரஷ்தாபிக்கவில்லை. ஏற்கனவே பல தடவைகள் சொன்ன பின்னரும் எழுதியிருப்பதால் அதனைக்கூறி ஆகவேண்டும் எனக் கருதுகிறார் என எண்ணியிருந்தேன்.

நூல் வந்த பின்னர் இந்த விடயம் பேசுபொருளாயிற்று. கே.ஏ. சுப்பிரமணியம் அங்கம் வகித்த கட்சிப் பத்திரிகை நான் மெய்ப்புப் பார்த்த நூலில் அவர் பற்றி மோசமாக எழுதப்பட்டதைச் சுட்டிக்காட்டி நீர்வை மீதும் என்மீதும் தாக்குலைத் தொடுத்திருந்தது. அந்த இதழ் வந்த ஓரிரு நாட்களில் நீர்வை வீட்டுக்கு வந்திருந்தார். பல தடவைகள் நான் சொன்ன பின்னரும் தவறான குற்றச்சாட்டுகளை நீங்கள் சொல்லியிருந்தமையாலேயே இவ்வாறு நேர்ந்திருக்கிறது என்றேன். அந்த நிலைமைக்காக அவர் பெரிதும் வருந்தினார். ‘அந்த நூல் நீங்கள் கூட்டங்களில் வந்து பேசுவதற்குப் பல வருடங்களுக்கு முன்னரே எழுதப்பட்டு வந்தது. பின்னர் எழுதியவற்றில் அவை சொல்ல நேர்ந்திருக்காது. உங்களிடம் புரூஃவ் பார்க்கத் தந்ததே வெறும் எழுத்துப் பிழைகளை நீங்கள் பார்க்காமல் இதுபோன்ற கருத்துப் பிழைகளைத் திருத்த வேண்டும் என்பதற்காகத் தான். நானும் திரும்ப எல்லாவற்றையும் மீட்டுப் பார்க்கத் தவறிவிட்டேன். இனி ஒரு பதிப்புக் கொண்டு வருவேன். இரண்டு பகுதிகளைத் தனித்தனி நூலாக்குவேன். அப்போது இந்தத் தவறைத் திருத்த முடியும்’ என்று நீர்வை கூறியிருந்தார். அவ்வாறு புதிய பதிப்பு ஒன்று வரவில்லை என்பது துரதிர்ஷ்டம்!

இருப்பினும் அந்த இரு தோழர்களதும் கோட்பாட்டு உறுதி, ஸ்தாபனக் கட்டுக்கோப்புக்கு உரிய முக்கியத்துவத்தை வழங்குதல் என்ற பண்பின் வெளிப்பாடாகவே நீர்வை என்னுடன் நெருக்கத்தை வளர்த்துக் கொண்டார் எனப் புரிந்து கொள்வதில் சிரமமேதும் இருக்க இயலாது. இதன்பொருள் கொம்யூனிஸ்ட் கார்த்திகேசன் மீதான ஈர்ப்பை நீர்வை குறைத்துக்கொண்டார் என்பதல்ல. என்னுடைய கருத்துகள் அனைத்துடனும் நீர்வை உடன்பட்டதாக கொள்ள இயலாது என்றேன். கே.ஏ. சுப்பிரமணியம் இன்றிருந்தாலும் அதே போன்று சிலபல விவகாரங்களில் ஒவ்வாமையை வெளிப்படுத்த இடமுண்டு. வர்க்கக் கோட்பாடு என்பது அத்தகைய வலுப்பட்ட ஓரம்சம். திணை அரசியல் என்பது அடையாள அரசியலில் இருந்து வேறுபட்டிருப்பதே வர்க்கப் போராட்டத்தை இன்னொரு வடிவில் ஏற்பதனால் என்றபோதிலும் இதுவும் அடையாள அரசியல் தான் எனக் குற்றஞ்சாட்டுபவர்கள் இருந்தபடிதான்!

ஆயினும் திணை அரசியல் எனது கண்டு பிடிப்பல்ல. அது தோழர் கே.ஏ. சுப்பிரமணியத்துடையதுதான். நான் கட்சிக்கு வந்த போது சாதி அமைப்புக்கு எதிரான போராட்டம் முடிவுக்கு வந்து விட்டது. அதன் வரலாற்றெழுத்து முயற்சியூடாக பலவற்றைக் கற்றேன். அவற்றைவிட அதிகளவில் தோழரிடம் உடனிருந்து கேட்டறிந்த விடயங்கள் பற்பல. தோழர் கே.ஏ. சுப்பிரமணியத்தைக் கண்டடைந்த 1974 முதல் அவர் விடைபெற்ற 1989 வரை நான் அதிகம் ஊடாட்டம் கொண்ட ஆளுமையாக அவர் இருந்தார். சாதியம் குறித்தும் அதனைத் தகர்க்கும் போராட்டங்களுக்கான கருத்தியலையும் எந்தவொரு புத்தகத்தில் இருந்து கற்றுக்கொண்டதைவிட அதிகமாக அவரிடம் இருந்தே அறிந்துகொண்டேன். அவற்றின் ஒழுங்கமைக்கப்பட்ட திரட்சியே திணை அரசியல் சார்ந்த கோட்பாடுகள். இதனைச் சரிதான்என நான் உறுதிகொண்டது தோழர் நீர்வை அவர்களுடனான தொடர்பாடலின் வாயிலாக. இரு தோழர்களுடைய இறுதிப் பதினைந்து வருடங்களில் அவர்களுடன் நெருங்கி ஊடாடி இருக்கிறேன். அவர்களது செயற்துடிப்பு அனுபவங்களை அசைபோட்டசைபோட்டு அறிவுத் திரட்சியாக எனக்குள் கடத்த ஏற்ற பக்குவப்பட்ட முதிர்ச்சி நிலைகளின் வழங்கல்கள் அவை!

நீர்வை பொன்னையன் எழுத்துப் பதிவுகள் வாயிலாக பலவற்றை எமக்கு வழங்கி உள்ளார். எழுதித் தீராத பக்கங்களாக நடைமுறை ஊடாக அவர் கற்றுத் தந்தவை இருந்தன. இடதுசாரி இயக்கம் சாதித்தவை குறித்த தெளிவு இன்றைய தலைமுறைகளுக்கு தெரிவதில்லை. போதிய பதிவில்லை, பிற்போக்குவாத அலை உண்மைகளை மறைத்துப் பொய்களைப் பரப்புரை செய்ய இடமளித்திருப்பது என்ற காரணங்களுக்கு அப்பால் சாதனைகளை நிகழ்த்திய ஆளுமைகள் ஒருவர் மீது மற்றவர் சுமத்திய குற்றப்பத்திரிகைகள் ஒட்டுமொத்த இயக்கத்தையே குறை மதிப்பீடு செய்ய வழிவகுத்திருந்தது என்பதும் கவனிப்புக்கு உரியது. இதனைத் திருத்திக்கொண்டு சமூகமாற்ற சக்திகள் வல்லமை பெறவும் கடந்தகால வரலாற்றுச் சாதனைகளைக் கோட்பாடாக்கவும் ஏற்ற தெளிவை ஏற்படுத்துவதாக நீர்வையிடம் இருந்து பெற்ற தொடர்பாடல்கள் அமைந்திருந்தன!



raveendran.n@thaiveedu.com

# ‘மனவெளி மேகங்கள்’ கவிதை நூலுக்கு முதற் பரிசு

கனடியக் கவிஞர் ‘மாவிலி மைந்தன்’ சண்முகராஜாவின் ‘மனவெளி மேகங்கள்’ கவிதை நூலுக்கு முதற் பரிசு.




தமிழ்நாடு திருவள்ளுவர் இலக்கிய மன்றம் தனது 46ஆவது ஆண்டுவிழாவை முன்னிட்டு இவ்வாண்டு நடத்திய சிறந்த மரபுக் கவிதை நூல்களுக்கான தெரிவுப் போட்டியில் கனடாவைச் சேர்ந்த கவிஞர் மாவிலி மைந்தன் சி. சண்முகராஜாவின் ‘மனவெளி மேகங்கள்’ என்ற கவிதைத் தொகுப்பு நூல் முதற் பரிசைப் பெற்றுள்ளது.

தமிழ்நாட்டில் பல இலக்கிய ஆளுமைகளினால் ஆரம்பிக்கப்பெற்ற இத் திருவள்ளுவர் இலக்கிய மன்றம், இவ்வாண்டு நல்லழகம்மை - செல்லப்பன் அறக்கட்டளை நிறுவனத்தோடு இணைந்து நடத்திய மரபுக் கவிதை நூல் தெரிவுப் போட்டிக்குத் தமிழகத்திலிருந்தும் பிற நாடுகளிலிருந்தும் 50க்கும் மேற்பட்ட கவிதை நூல்கள் தெரிவிற்காக அனுப்பப்பட்டிருந்ததாக அறியப்படுகிறது. இத்தெரிவுப் போட்டியில் கனடாவில் வாழும் ஈழத்தவரான கவிஞர் மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா அவர்களின் ‘மனவெளி மேகங்கள்’ மரபுக் கவிதைத் தொகுப்பு நூல் முதற் பரிசைப் பெற்றுள்ளது. இந்நூல் இவரது இரண்டாவது கவிதைத் தொகுப்பு நூல் என்பது குறிப்பிடத்தக்கது.

மார்ச் மாதம் 07ஆம் திகதி சென்னையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் கவிஞர் மாவிலி மைந்தன் சார்பாக அவருக்குரிய பரிசு, கேடயம், சான்றிதழ் ஆகியவற்றைத் தமிழ்நாடு கவிதை உறவு மாத இதழ் முதன்மை ஆசிரியர் கலைமாமணி ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

பரிசு பெற்ற கவிஞர் மாவிலி மைந்தன் சண்முகராஜா அவர்கள் இலங்கையிலும், ஓமான் நாட்டிலும் மருத்துவத் தாதிகள் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளராகப் பணியாற்றியவர். கனடாவில் ரொறொன்ரோ கிழக்குப் பொது மருத்துவ மனையில் அவசர நோயாளர் பிரிவில் மேலாளராகக் கடமையாற்றி 2013இல் பணி ஓய்வு பெற்றவர். அண்ணாமலைப் பல்கலைக் கழகம், கனடா வளாகத்தில் தமிழில் முதுகலைப்பட்டம் பெற்றவர். கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தின் ஆரம்பகாலத் தலைவராகப் பணியாற்றியவர் என்பதும், தற்பொழுது கவிஞர் கழகத்தின் கவிதைப் பயிலரங்கு ஆசிரியராகப் பணியாற்றுகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. அவரது கவிதை நூல் பரிசு பெற்றமைக்காக எமது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் கவிதை இலக்கியப் பணி மேன்மேலும் சிறக்க வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்!



# அயோத்தி

## ஒரு மானுட நலனோம்பு மையம்

- அப்துல் கலாம்
தமிழில்: எம்.ஆர். றிப்அத் முகம்மது

**அயோத்தி மண்ணை சர்ச்சையிலிருந்து மீண்டு செழுமையை நோக்கி நகர்த்துவதற்கு குடிமக்களைத் தூண்டும் வண்ணம் டாக்டர் அப்துல் கலாம் கண்ட கனவையே அவரது இந்த உரை பிரதிபலிக்கின்றது. வெறுமனே நல்லிணக்கம் பற்றி அல்லாமல், அந்த நல்லிணக்கம் 10 ஆண்டுகளில் மெய்ப்படும் வண்ணம் ஆக்கபூர்வமான தீர்வுகளையும் முன்வைத்துள்ளார். ஆனால் அவர் இலக்குவைத்த பத்தாண்டுகள் கரைந்தோடியும் நல்லிணக்கம் மெய்ப்படாமல் போனதே, அயோத்தி இன்று கண்டுள்ள பேரிழப்பாகும். கடந்த ஆண்டு வழங்கப்பட்ட உச்ச நீதிமன்றத் தீர்ப்பு 'இராம ஜென்ம பூமி அறக்கட்டளைக்கு' அயோத்தியைப் பரிசளித்து 'பாபர் மசூதியை' வேறிடத்தில் அமைக்க வழிகோலியிருக்கின்றது. ஓர் அறிவியல் மேதை சமூக இணைப்பைப் பற்றிக் கனவு கண்டார். ஆனால் அறிவாளிகள் எனப்படுவர்கள், சமூகங்களின் பிளவையே மென்மேலும் நிலைநிறுத்த விழைகின்றனர். இன, மத பேதங்களைக் கடந்து சமூகங்களின் இணக்கத்தை அறிவியல் ரீதியாக அணுகுவதன் மூலம் எவ்வாறு மெய்ப்படுத்தலாம் என்பதை, அவருடைய கொள்கையில் பயணித்திருந்தால் பத்து ஆண்டுகளில் அதில் பாதியையாவது அனுபவித்திருக்கலாம். அதனையொட்டியே இவ்வாக்கம் பிரசுரமாகின்றது.**


மனிதகுலத்தைப் பண்பட வைப்பதில் அடிநாதமாக விளங்கும் இரு மதங்களின் நம்பிக்கை மூலம் வளம் பெற்ற ஒரு தெய்வீக நிலமே அயோத்தி. மனிதகுல வரலாற்றின் தோற்றுவாயையும் அதன் காலாதிகால போராட்டங்களையும் நற்பேறுகளையும் அது குறிக்கின்றது. இப் புனித பூமி எதிர்கால இந்தியாவில் எவ்வாறு அறியப்படும்? என்று நான் எண்ணினேன்.

2020ம் ஆண்டாகும் போது, மனிதகுலம் வேண்டி நிற்கும் சேவைகளை நிறைவேற்றக் கூடிய ஒரு களங்கமற்ற சின்னமாகவும், தேசத்தின் இணக்கமுற்ற ஒருமைப்பாட்டுக்கான கலங்கரை விளக்கமாகவும் புனித பூமியான அயோத்தி மிளிர்வதை என் அகக்கண் கொண்டு பார்க்கிறேன். நவீன முன்னேற்றங்களைப் பிறப்பிடமாகக் கொண்ட பல்பரிமாண சிகிச்சை மையமாகவும் உடல், உள, ஆன்மீகம் சார்ந்த பிரச்சினைகள் அனைத்தையும் போக்கும் தலமாகவும் அயோத்தி அமைவதைக் கற்பனை செய்து பார்க்கின்றேன். அது நான்கு வகையான சிறப்பம்சங்களைக் கொண்டமைய வேண்டும்.

முதலாவது, சகல வயதினரும் பயன் பெறத்தக்க வகையிலான குறைந்த செலவுள்ள மருத்துவ நிலையமாக அது வளர்ச்சியுற வேண்டும். தேசத்தின் வறியவர்களும் மூத்தவர்களும் பயன்பெறும் சிறந்த சுகாதார சேவைகளை வழங்கும் இல்லமாக அம் மருத்துவ நிலையம் தொழிற்பட வேண்டும். 70% ஆனோருக்கு இலவச மருத்துவம் என்னும் வகையில் இந்தியாவில் இதுவரையில் நடைமுறையிலுள்ள அம்முறைமையைக் கொண்டே அது தொழிற்படவும் வேண்டும். ஆண்டுதோறும் பார்வையிழக்கின்ற இலட்சக்கணக்கானோருக்குப் பார்வை வழங்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயலாற்றும் நூற்றுக்கணக்கான வைத்தியர்களைக் கொண்ட அமைவிடமாகவும் உடல் அவையங்களின் குறைகளை நீக்கி இயங்க வைக்கும் பல்துறை நிபுணர்களைக் கொண்ட இடமோகவும் வாழ்வில் அல்லலுற்றோரை ஆற்றுப்படுத்தக் கூடிய தலமோகவும் அது திகழவேண்டும். பாரம்பரிய மருத்துவ முறைகளான ஆயுர்வேத மருத்துவம், யுனானி மருத்துவம், சித்த மருத்துவம், நாட்டு வைத்தியம், யோகாசனம் போன்றவற்றுடன் நவீன மருத்துவம் இணக்கம் கண்டு, தேவையறிந்து, திறன்பட மருத்துவ சிகிச்சை வழங்கும் மையமாகவும் அம்மண் அமைய வேண்டும்.

இரண்டாவதாக, வெகுசனத்தை அல்லல்பட வைக்கின்ற தேசிய சுகாதார பிரச்சினைக்கு தொழிநுட்ப ரீதியிலான தீர்வைப் பெற்றுத் தரத்தக்க உயர் தரத்திலான ஆய்வுகள் நடைபெறும் தலைசிறந்த இடமாக அது தோற்றம்பெற வேண்டும். உலகிலேயே 4வது இடத்தில் மிகப் பெரியளவில் பொருளாதாரத்தை நாம் ஈட்டியிருந்த போதிலும், ஒவ்வொரு நொடியும் தேசத்தில் ஒரு பிள்ளை போசாக்கற்ற நிலையில் பிறப்பதையும், ஆயிரம் பிள்ளைகளில் 53 பிள்ளைகள் தமது முதலாவது பிறந்த நாளைக் கூட உயிருடன் கழிக்க முடியாத நிலைமையையும் நாம் இன்னும் கண்டு கொண்டுதான் இருக்கின்றோம். அதேசமயம், உலக சனத்தொகையில் பாதி காசநோயாளர்கள் இந்தியர்களே. குருதிச்சோகை நோய் உள்ள பெண்கள் உலகளவில் இந்தியாவிலேயே உச்சபட்சத்தில் உள்ளனர். சில மாநிலங்களில் இது 60%இலும் அதிகமாக உள்ளது. தூய நீர், போசாக்குள்ள உணவு போன்றவை பல இலட்சக்கணக்கானோரின் வாழ்வில் இன்னும் மிகுந்த சவாலாக இருந்து வருகின்றது. தேசிய நலன்களில் அதிமுதன்மை வாய்ந்தவையாக விளங்கும் இந்த சிக்கல் வாய்ந்த விடயங்களை வினைத்திறன் மிக்க முறையிலும் பரந்தளவிலும் குறைந்தளவு வளங்களைப் பயன்படுத்தி நிறைந்த பயன் விளைவிக்கும் வண்ணமும் எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம் என்பதில் மானுட நலனோம்பு மையம் கவனம் செலுத்த வேண்டும். முக்கியமாக அவை பின்தங்கிய கிராமங்களில் வாழும் 70 கோடிப் பேரையும் சென்றடைய வேண்டும். மனித குலத்தை ஆண்டாண்டு காலமாகத் தொற்றியுள்ள நோய்களுக்கான தடுப்பூசிகளைக் குறைந்த விலையில் மேம்படுத்தும் சர்வதேச ஆய்வு நிறுவனங்களுடன் உறவு பூண்ட நிலையமாகவும் அது அமைய வேண்டும்.

மூன்றாவதாக, மானுட நலனோம்பு மையம் உடலியல் நலனையும் ஆன்மீக நலனையும் ஒன்றிணைப்பதற்கு அதிமுதன்மை வழங்க வேண்டும். பல் சமய ஆன்மீகத் தலமாக அது தோற்றம் பெற வேண்டும். வண்ண வண்ணப் பூக்களும் பறவைகளும் காட்சி தரும் பசுமையான சூழலாக அது தோற்றம் பெற வேண்டும். அச்சூழல் மிகச் சிறந்த முறையில் ஆன்மாவைப் பக்குவப்படுத்தும் வண்ணமும் ஆன்மீகத்தை நெறிப்படுத்தும் வண்ணமும் அமைக்கப்பட வேண்டும். பல்வேறுபட்ட சமயங்களின் நெருக்கமான பிணைப்பால், அந்நலனோம்பு மையம் அனைத்து சமய நம்பிக்கைகளிலுமுள்ள அருஞ்சிறப்புகளை ஈட்டி அத்தகைய நல் விட



யங்களைத் துவண்டு போகும் ஆன்மாக்களை ஆற்றுகின்ற அருமருந்தாகப் பயன்படுத்த வேண்டும். மேலும் மனிதர்கள் தெய்வீக நெருக்கத்தை அடையவும் தமது ஆன்மீக அகவுணர்வை விழிப்படையச் செய்வதற்குமான கல்விச் சாலையாகவும் அது இருக்க வேண்டும்.

மானுட நலனோம்பு மையத்தின் நான்காவது தூணாக, உலகில் உள்ள அனைவருக்கும் பெறுமதிமிக்க அறிவை அள்ளி வழங்கும் தளமாக அது அமைய வேண்டும். பன்முகம் கொண்ட நம்பிக்கைகளை ஒன்றிணைத்துப் புடமிடும் மையமாக அது விளங்க வேண்டும். அது தேசத்தையே பெருமை கொள்ளச் செய்யும் அளவுக்கு விழுமியங்களைக் கற்றறிந்து அவ்விழுமியங்களைப் பின்பற்றும் வண்ணம் இளையோரைத் தூண்ட வேண்டும்.

அயோத்தியில் மதங்களை ஒன்றிணைப்பது முடியுமா? ஊழலிலிருந்தும் ஒழுக்கக் கேடுகளிலிருந்தும் சிகிச்சையளிக்கப்பட்ட சமூக உருவாக்கத்தை அங்கு முன்னெடுக்கலாமா? என்பவையே எம் முன் உள்ள கேள்விகளாகும். மானுட நலனோம்பு மையம் அதி சிறந்த பண்பாட்டைக் கற்பிக்கும் கல்வித் திட்டத்தைப் பற்பல சமயங்கள் எனும் ஒளிக்கற்றை கொண்டு ஆய்வுக்குட்படுத்தும் இடமாக அமைய வேண்டும். மேலும் அதனை இளையோர் நடைமுறைப்படுத்தத்தக்க வகையில் திறன்பட அவர்களுக்கு அறிவூட்டவும் வேண்டும்.

அதனை உருவாக்குபவர்கள் யார்?

அந்த நிலையம் அரசாங்க, தனியார், சமூகக் கூட்டு ஆதரவு கொண்டதாக உருவாக்கப்படவும் ஆளப்படவும் செயற்படுத்தப்படவும் வேண்டுமென்ற யோசனையை நான் முன்வைக்கின்றேன். அரசாங்கம், கட்சிகள், நிறுவனங்கள் உட்பட பல்வேறு துறைகளைச் சேர்ந்த உயர் தொழிலாளர்கள், ஓய்வுபெற்ற படையினர், சகல சமூகங்களையும் சேர்ந்த அறிஞர்கள், ஏனைய பங்குதாரர்கள் என்று அனைவரும் இதில் ஒன்றிணைய வேண்டும். அரசாங்கமும் தனியார் துறையும் இந்த நிலையத்தின் அபிவிருத்திக்குத் துணை செய்ய வேண்டும். அந்த நிலையம் இன, மத, சாதி, நிற, பால், தேச பேதமைகளைக் கடந்த மானுட நலனோம்புகையின் தனியடையாளமாகத் திகழ வேண்டும்.

அறிவொளிவீசும் குடிமக்கள் பரிணாமம் அடையும் உலகின் தலை சிறந்த இடமாக அயோத்தியை அடுத்த பத்தாண்டுகளில் நாம் காணலாம். பயன் விளைவிக்கும் கல்வி வழங்கும் இடமாகவும் பல் சமயங்களும் ஒன்றிணைந்து தமது நெறிகளைப் பகிர்ந்து கொள்ளும் இடமாகவும் பேதமையின் பிடிகளிலிருந்து விடுபட்ட எண்ணங்களைக் கொண்ட இடமாகவும் தேசிய மாற்றத்துக்கான ஆக்கத்திறன் வியாபித்த இடமாகவும் அது அமைய வேண்டும். எமது ஐக்கியம் மிக முக்கியமானது. ஏனெனில் நாம் அறிவார்ந்த சமூகத்தைக் கட்டியெழுப்ப எத்தனித்துக் கொண்டிருக்கின்ற அதே வேளை, எதிர் சக்திகள் எமது பொருளாதார வளர்ச்சிக்கும் சமூக அமைதிக்கும் செழுமைக்கும் எதிராக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறு, மாற்றமடைந்த அயோத்தி தேசத்தின் வருங்காலம் மீதும் அதில் வாழும் நூறு கோடி மக்கள் மீதும் மகத்தான தாக்கத்தை உண்டாக்கும். இன்றைய நிலையில் இது விளைவுகளை விபரிக்கும் தருணமாகவே இருக்கின்றது. அது மெய்ப்பட காலம் எடுக்கும். எமது தற்சமய செயற்பாடுகளைச் சீர் செய்வதே இப்போது எமக்குள்ள பெரிய வாய்ப்பாகும். அவை, எமது கடந்த காலப் பகையுணர்வுகளை மனதில் வைத்து ஆட்சி நடத்தும் போக்கை விடுத்து, எமது எதிர்கால வேட்கைகளைக் கொண்டே அமைய வேண்டும். மனித நேயத்தை மேம்படுத்துவதற்காக நாம் செய்த செயற்பாடுகளையே எமது வருங்கால தலைமுறை வணக்கஞ்செய்யும். மாறாக, சமாதானத்தையும் ஒருமைப்பாட்டையும் கூறுபோடும் செயற்பாடுகளையல்ல. ஆயிரம் வருடங்களாக முரண்பாடுகளுக்கு வழிகோலிய தலைமுறைகளைப் போலல்லாது, சகோதரத்துவத்தையும் தெளிந்த அறிவையும் கொண்ட தேசத்தை நிலைநாட்டிய முன்னுதாரணம் மிக்கவர்களாக இன்றைய தலைமுறையினர் நினைவு கூரப்பட இருப்பது, இன்றைய தலைமுறையினருக்கு இப்போது கிடைத்திருக்கும் பொன்னான வாய்ப்பாகும். அயோத்தியில் மானுட நலனோம்பு மையம் நிறுவப்படுவதற்கு இந்த இலையுதிர் காலத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம், எமது கடந்தகாலத்து இலைகளை உதிர வைத்து, ஒரு எதிர்காலத்தை உருவாக்கும் மாபெரும் முயற்சியாக அமையும். எல்லாவற்றுக்கும் மேலாக மனிதநேயமும் தேசமும் செழிப்புற்று அனைத்து சமுதாயத்துக்கும் ஊக்கத்தை வழங்குவதாய் அது அமையும்.

அயோத்தியில் மானுட நலனோம்பு மையத்தை எவ்வாறு வளர்க்கலாம் என்னும் கருத்தை நாட்டு மக்களும் நாடாளுமன்றமும் மாநில மன்றுகளும்
ஆராய்ந்து முடிவெடுத்தல் வேண்டும்.

www.abdulkalam.com



rifath.m@thaiveedu.com

# குன்றிலிருந்து கோட்டைக்கு

ஜீவா சதாசிவம்

மலையகக் கல்வியாளரும் உயர் அரச பதவிகளை வகித்து ஓய்வு நிலையில் இருப்பவருமான எம். வாமதேவன் அவர்கள் தனது தன்வரலாற்று நினைவுப் பகிர்வாக எழுதி இருக்கும் நூல், 'குன்றிலிருந்து கோட்டைக்கு'. 2020ம் ஆண்டு மார்ச் மாத நடுப்பகுதியில் கொரோனா எனும் கண்ணுக்குத் தெரியாத வைரஸ் உலகத்தையே உறைய வைக்க ஆரம்பித்தது. இன்னும் நிலைமையில் மாற்றமில்லை என்ற போதிலும், உலகம் இயங்காமலும் இல்லை. ஏதொவொரு வகையில் இயக்கம் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றது.

இந்த முடக்க காலப்பகுதியில் பலருக்கும் எழுந்த கேள்வி, என்ன செய்வது? எப்படி வீட்டிலேயே இருப்பது?. இக்காலப்பகுதியை, காத்திரமாகப் பயனுள்ள வழியில் பயன்படுத்திக் கொண்டவர்களும், நாட்களை அநாவசியமாகக் கழித்தவர்களும் இருக்கின்றனர். இவ்வாறு இருக்கும் போது எழுத்தாளர்கள் பலர் இக்காலத்திலேயே பல படைப்புக்களை உருவாக்கியது மாத்திரமன்றி அதனை இணைய வழியின் ஊடாக, அதாவது மெய்நிகர் (zoom) வழியாக வெளியிட்டு வைத்தும் உள்ளனர்.


பலர் தமக்குள்ள மேலதிக ஆற்றலையும் தம்மைத் தானே உணரச் செய்த காலமாகவும் இந்த கொரோனா காலப்பகுதி வரலாற்றில் தடம் பதித்துள்ளது. அது 2020. இந்தகாலப்பகுதியில் முடக்கத்தை தனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்ட கல்வியாளர் எம். வாமதேவன் 'குன்றிலிருந்து கோட்டைக்கு' எனும் நூலை அறுவடையாக தந்துள்ளார். ஆக, கொரோனா கால அறுவடையாக வெளிவந்த நூலே இது. பொதுவாக, சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள், நாவல்கள் போன்ற நூல்கள் அடிக்கடி வெளிவருவதை யாவரும் அறிவோம். இவ்வாறிருக்க ஒரு நினைவுப்பகிர்வு ஒன்றை வெளியிடுவது என்பது அடிக்கடி இடம்பெறுவதல்ல என்பதையும் அறிவோம். அவ்வாறான ஒரு நினைவுப் பகிர்வு நூலே 'குன்றிலிருந்து கோட்டைக்கு' எனும் நூல்.

சுயசரிதம் எழுதுவதென்றால் அதற்கென்று ஒரு தற்துணிவு தேவை. அவ்வாறு தற்துணிவுடன் இவ்வாறானதொரு நூலை வெளிக்கொணர்ந்துள்ளார் கல்வியாளர் எம். வாமதேவன். இந்நூலில் முதல் பக்கம் கொண்டு இறுதிப்பக்கம் வரையில் உள்ள அனைத்து விடயங்களுமே இப்போதைய இளம் சமூகம் உட்பட எதிர்கால சமூகத்தை ஆற்றுப்படுத்தவதாக அமையப்பெற்றுள்ளது.

இந்நூல் பற்றி சற்று விரிவாக பார்ப்போம்.

மலையகமான குன்றில் இருந்து கோட்டை (அக்கால இலங்கையின் தலைநகர் கோட்டை) என அழைக்கப்படும் கொழும்புக்கு என்பதாக இருந்தமையினாலேயே கோட்டை என்ற தலைப்பு உள்ளடக்கப்பட்டுள்ளது.

நூலாசிரியர் தான் குன்றான மலையகத்தில் இருந்த சிறு வயது முதல்..., பாடசாலையிலிருந்து பல்கலைக்கழகம் வரை, அதன் பின்னரான தொழில் முயற்சி, தொடர்ந்த மேலதிக கற்கை செயற்பாடுகள், கோட்டையில் தான் தொழில் பெற்றது முதல் அதனோடிணைந்த பயணம், அதனால் ஏற்பட்ட சிரமங்கள், எதிர்கொண்ட




சவால்கள், சவால்களுடன் பயணித்த தருணங்கள்... என பல தரப்பட்ட விடயங்களை தனது அனுபவத்துடன் பகிர்ந்துள்ள நூலாக இது அமைந்துள்ளது. வாசிக்கும் போது ஒரு மனசாட்சி மிகுந்த பதிவாகவே ஒவ்வொரு விடயங்களும் இழையோடிச் செல்கின்றது.

அறிமுகம், உருவாக்கம், தோட்டப்பாசாலையில் ஆசிரியராக, பல்கலைக்கழகத்தில், அரசபணியில் நுழைவு, அரச பணியில் நிலைபெறல், ஆய்வுத்தளத்தில், மீண்டும் அரச பணியில், ஓய்வுக்குப் பின்னர், சமூகத்தளத்தில் என பதினொரு அத்தியாயங்களுடன், 250 பக்கங்களைக் கொண்ட, குமரன் வெளியீடாக வெளிவந்துள்ளது.

## சமூகத்துக்கு இந்நூலின் முக்கியத்துவம்:

ஆயிரக்கணக்கான நூல்கள் வெளிவந்தாலும் அவை பொதுவாக எல்லோருக்கும் ஏதோவொரு வகையில் பயன்படும். ஆனால், சில

நூல்கள் முழுமையாக பயன் தரக்கூடியதாக இருக்கும். அதில் 'குன்றிலிருந்து கோட்டை'க்கு என்ற இந்த நூல் இளம் சமுதாயத்தினரை ஆற்றுப்படுத்துவதாகவே அமைந்துள்ளது.

ஒரு தனிமனித வாழ்வில் ஏற்பட்ட தாக்கம், மாற்றம் சமூகத்தில் எத்தகைய வளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்பதை தெட்டத் தெளிவாக புலப்படுத்தியுள்ளது. இந்த நூலை, தனது வளர்ச்சியில் பங்கெடுத்தது மாத்திரமன்றி அதனை கண்டு மகிழ்ச்சியடைந்த ஆசிரியர்களுக்கே சமர்ப்பணம் செய்திருப்பது, ஆசிரியர்களும் மாணவர்களுக்கும் இடையில் எத்தகைய நெருக்கம் இருக்கின்றது என்பதை சிந்திக்கச் செய்வதாக இருக்கின்றது.

ஓர் ஆசிரியர், நேர்மறை எண்ணம் இல்லாதவராக இருந்து தனது மாணவரை சமூகத்திற்கு சிறந்தவராக ஒப்படைக்க வேண்டும் என்ற உயரிய சிந்தனையின் வெளிப்பாடாகச் செயற்பட்டதன் பயனை இன்று நாம் கண்கூடாகக் காண்கின்றோம். 60ம் ஆண்டு காலப்பகுதியில் உள்ள ஆசிரியர்கள் பலரின் முழுமையான பங்களிப்பின் பயனாக இன்றும் அக்காலத்தில் கற்ற மாணவர்கள் மனங்களில் பல தசாப்பதங்களைக் கடந்தும் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இன்று, ஆசிரியர் மாணவர்களிடையேயான உறவு இவ்வளவு நெருக்கத்தைக் கொண்டிருக்கின்றதா என்று எண்ணத் தோன்றுகின்றது. ஒவ்வொரு அத்தியாயங்களில் உள்ள விடயங்களும் அதனை வாசிக்கும் இளம் சமூகத்திற்கு ஓர் ஊக்குவிப்பாகவும் மலையகத்தில் பிறந்தவர்கள் எந்தவகையிலும் சளைத்தவர்கள் அல்ல என்பதை உணர்த்துவதாகவும் இருக்கின்றது.

சமூக அக்கறைக்கொண்ட பலர் இன்று உச்சத்தை தொட்டுள்ளனர். வெறுமனே கற்றல் நடவடிக்கையில் மாத்திரம் ஈடுபடாது சமூக நடவடிக்கைகளில் ஈடுபட்டால் மாத்திரமே கற்றலுடன் இணைந்ததாக சமூக அக்கறையும் ஏற்படும். சமூக அக்கறை ஏற்படும் போது வளர்ச்சியும் தானாகவே வந்துவிடுகின்றது என்பதற்கு, இந்நூலாசிரியர் தான் கல்வி கற்ற காலத்தில் இருந்து இன்று வரை சமூக அக்கறையுடன் செய்யும் செயற்பாடு இங்கு குறிப்பிடத்தக்கது.

## அனுபவம்:

இந்நூலை வாசிக்கும் போது ஒரு நாவலை வாசிப்பது போன்ற உணர்வே எழுகிறது. பல இடங்களில் நாமே கதாப்பத்திரங்களாகவே மாறிவிடும் நிலைமை ஊடாக ஆசிரியரின் எழுத்து ஆளுமை தெரிகின்றது. இளம் வயது முதல் வாசிப்பில் அதீத ஈடுபாட்டுடன் இருந்த ஆசிரியர், தொடர்ச்சியாக பல ஆண்டுகள் பத்திரிகைகளுக்கு கட்டுரைகள், விமர்சனங்கள் எழுதி வருகின்றமையாலோ என்னவோ ஒவ்வொரு பக்கங்களையும் வாசிப்பதற்கு தூண்டுவதாக எழுத்தோட்டமும் அமைந்துள்ளது. கடந்து வந்த ஒவ்வொரு பாதையையும் மிகச் சுவாரஷ்யமாக இந்த நூலிலே பதிவு செய்துள்ளார்.

அரசதுறைக்குள் மலையகத்தவரின் பிரவேசம் மிகமிகக் குறைவாகவே காணப்பட்டது. இதற்கு இரண்டு காரணங்களை கூறலாம். பிரஜா உரிமை இல்லாமை, போதியளவு கல்வித்தகமை இல்லாமையே காரணம் எனலாம். ஆரம்பகாலத்தில் ஆங்கில மொழியிலேயே கல்வி கற்க வேண்டியிருந்தமையினால் சாதாரண தரம் சித்தி பெறுவோரின் எண்ணிக்கை மிகக் குறைவு.

அப்போது தோட்டப் பாடசாலைகளிற்கூட யாழ்ப்பாணம் அல்லது இந்தியாவைச் சேர்ந்த ஆசிரியர்களே அதிகம் இருந்தனர். ஒருசிலரே மலையகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தனர்.

பிரஜா உரிமை பிரச்சினையே இதற்கு பிரதானமாக இருந்தது. இக்காலப்பகுதியில் அரச துறைக்குள் நுழைந்து, தனக்கென தனியிடத்தை தக்கவைத்துக் கொண்டது மாத்திரம் அல்லாது, அரச துறைக்குள் எவ்வாறு செல்ல முடியும், அதற்கு எவ்வகையான கற்கை அவசியம் என்பது பற்றியும், இக்காலத்திலத்தில் இளம் தலைமுறையினர் அரச துறைக்குள் செல்ல எவ்வாறெல்லாம் முயற்சிக்கலாம் என்பதற்கு வழிகாட்டலையும் இந்நூல் தந்துள்ளது.

மலையகத் தமிழர் சமூகம் 'அமைச்சு செயலாளர்' எனும் உயர் அரச பதவியை அடைவது சாதாரணமானதல்ல. ஏனெனில் இலங்கை பிரஜை அந்தஸ்த்திலிருந்து விலக்கி வைக்கப்பட்ட மலையகத் தமிழர் சமூகம் அரசாங்க பாடசாலை கல்வி மறுக்கப்பட்டு, தோட்டப் பாடசாலைகளில் கற்று, அரச பணிகளில் சேர்வதே சிம்மசொப்பனமாக இருந்த நிலையில், இந்தச் சூழலில் இருந்து சென்று அத்தகைய பதவியைப் பெற்ற இரண்டாமவரே எம். வாமதேவன் அவர்கள். (மற்றையவர் பிரதாப் ராமானுஜம் - முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராமானுஜம் அவர்களின் புதல்வர்).

கொட்டகலை பகுதியில் ஆரம்பித்து, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தான் கல்வி கற்ற விதம் குறித்தும், அதற்காக அவர் எதிர்கொண்ட சவால்கள் குறித்தும் விரிவாக எழுதி உள்ளார். அவரது பயணம் நோக்கிய அனுபவங்கள் இளைய மலையகத்தவர் மத்தியில் ஒரு உந்துதலைத் தரவல்லது. அவரது அனுபவங்களை ஆடம்பரமில்லாது எடுத்தியம்பும் முறைமை இயல்பாக வாசகருக்கு சென்று சேர்க்கின்றன. பல இடங்களில் மனதைத் தொடும் சோகம் இழையோடும் அதேவேளை, வாய்விட்டுச் சிரிக்க நல்ல சுவையான சம்பவங்களையும் நிகழ்வுகளையும் பதிவு செய்துள்ளார்.

தனது சாதனைகளை மாத்திரம் பட்டியல் இடாமல், தான் சந்தித்த சவால்களை, அடைந்த தோல்விகளை பதிவு செய்கிறார். ஐம்பதாண்டுகால தன்வரலாற்று அனுபவங்களை அந்தந்த காலகட்ட அரசியல், தொழிற்சங்க, கல்விப் பின்புல, கலை இலக்கிய ஆளுமைகளையும் சம்பவங்களையும்கூட தொட்டுக் காட்டிக்கொண்டே செல்வதனால், தன்வரலாறாக மட்டுமன்றி ஒரு காலகட்ட மலையக வரலாற்றுப் பதிவாகவும்கூட அனையாளப்படுத்த முடிகிறது.

தமிழ் மொழி மூலம் கற்கும் மாணவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று ஆங்கில மொழி மூலத்தில் கல்வி கற்பதில் இருக்கக்கூடிய தயக்கத்தை தனது அனுபவங்கள் ஊடாக தகர்த்தெறிவதையும் அவதானிக்க முடிகிறது. இந்தப் பதிவுகள் தனியே எழுத்துக்களால் மட்டுமன்றி படங்களாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளது. மலையகம் எங்கள் தாயகம் என்று பேசிய இவரது வார்த்தைகள் எதிர்கால இளம் தலைமுறையினருக்கு ஒரு உத்வேகமாக அமையும். அனைவரும் வாசிக்க வேண்டிய நூல்.



*jeeva.s@thaiveedu.com*



# மார்க்ஸியமும் மனவியலும்

- சண்முகம் வெற்றிவேல்

மார்க்சும் ஏங்கல்சும் மார்க்ஸியத்தின் பிதாமகர்கள் ஆவர். அறிவு என்றால் என்ன? அது எவ்வாறு உற்பத்தியாகிறது? அறிவுக்கு எது நம்பகத் தன்மையை வழங்குகிறது? போன்ற கேள்விகளுக்கு விடை-தேட முயன்றபோது மார்க்ஸியம் பிறந்தது. இயற்கை விஞ்ஞானங்கள், சமூக விஞ்ஞானங்கள் ஆகிய இரண்டும் இணைந்த புள்ளியில் தன் சிந்தனையைச் செலுத்தி அங்கேயும் ஒரு அற்புதத்தை நிகழ்த்தினார் மார்க்ஸ்.

புலனுணர்வுகள், தருக்கவியல், பரிசோதனைச்சாலை, புலன்கடந்த அறிவு, உள்ளுணர்வு போன்றவற்றைத் தாண்டிச் சென்று சிந்தித்ததால் கம்யூனிஸ அறிக்கையை 1848ல் அவரால் முன்வைக்க முடிந்தது. பிரதிவிளைவு புலம்பெயர்வு. ஜேர்மனியிலிருந்து இலண்டனுக்குப் புலம்பெயர்ந்து தலைமறைவாக வாழ நேர்ந்தது. எனினும் மனிதப் பரிணாம வளர்ச்சியில் மார்க்ஸியத்தின் வகிபாகம் கனதியானது என்பது கற்றறிந்தார் முடிபாகும். இக்கட்டுரை மார்க்ஸியக் கோட்பாட்டு உளவியலைத் தமிழ் இலக்கியப் பரப்பிலிருந்து பார்வைக்குத் தருவதற்கு முயற்சிக்கிறது.

மனம் என்பது சார்புநிலை எடுக்கக் கூடிய ஒன்றென்பதே உளவியலாளர் சிக்மண்ட் பிராயுட் என்பரின் கருத்தாகும். ஏறத்தாழ ஐந்து காலக் கட்டங்களாக வளர்ந்து வந்த மனிதப் பரிணாம வளர்ச்சியில் நிலவுடமைப் பொருளாதாரத்தில் மார்க்ஸியம் முகிழ்த்ததேன்?

செய்தொழில் வேற்றுமையும் ஆண்டான் அடிமை வழிபாடும் நிலவுடைடமைச் சமுதாயத்திலேயே தோற்றங்கொண்டது. அதன் வளர்ச்சிப் போக்கில், சமுதாய அசமத்துவம் அசுர வேகங்கொள்ளலாயிற்று. மனித நேயம் மிக்க மார்க்ஸ் சமதாயச் சமத்துவத்தை அதன் அரசியல், பொருண்மிய, கருத்துநிலை நின்று சிந்திக்கலானார். பெறுபேறு 'மூலதனம்' என்ற உலகப் பிரசித்திபெற்ற நூல் வெளிவரலாயிற்று.

மூலதனத்தின் பேசுபொருட்களென இங்கு சிலவற்றையாவது அடையாளப்படுத்துவது அவசியமாகிறது. அரசியல் பொருளாதாரக் கருத்துக்களின் வரையறை - வரலாறு, உற்பத்தி உறவு, உபரி உழைப்பு, சுரண்டல், அந்நியமாதல், பொருளாதார நெருக்கடிகளின் மூலாதாரங்கள், புரட்சிக்கான அடிப்படைகள் போன்ற மிக அற்புதமான விடயங்களை மூலதனம் சுமந்து நிற்கிறது.

### உற்பத்தி உறவு:

மனிதர்கள் உற்பத்திச் செயற்பாட்டில் ஈடுபடும்போது, ஒருவிதமான பொருள்வகை உறவுகள் உருவாகின்றன. சிலர் உடமைதாரர்களாக, முதலாளிகளாக உற்பத்தி நடவடிக்கைகளில் பங்கேற்கின்றனர். இன்னும் பலர் உழைப்பாளிகளாக உற்பத்தியில் பங்கேற்கின்றனர். உழைப்பாளிகளிடையேயும் கருத்தாலும், கரத்தாலும் உழைக்கும் வர்க்கங்கள் உண்டு. மேலும் வேலைசெய்பவர், வேலைவாங்குபவர், பயிற்சி அளிப்பவர், படிஅளப்பவர், நியமன - நிர்வாக மேலாளர்கள் என்ற படிமமுறைப் பதவிகளும் பொருள் உற்பத்தியில் பங்கேற்கின்றன.

தவிர, உற்பத்திச் சக்தியில் தொழில் நுட்பத்திற்கும் காத்திரமான பங்குண்டு. இங்கே ஒரு முரண்நகையும் உண்டு. அதாவது தொழில்நுட்ப வளர்ச்சி எப்போதுமே ஆக்கபூர்வமானது என்பது அப்பாவித்தனமான கருதுகோளாகும். காட்டாக, சமீப காலங்களில், இராணுவப் பேரழிவுத் தன்மை கொண்ட தொழில்நுட்பங்கள் குடிமைச் சமூக வாழ்வினுள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த வரலாற்றுப் பொருள்முதல்வாத இயங்கியலில் ஆக்குவோன் மட்டுமன்றி அனுபவிப்போனும் உற்பத்தி உறவுகளே!

### உபரி உழைப்பு:

உற்பத்திச் சக்தியில் உழைக்கும் கரங்களுக்கு உயரிய இடமுண்டு. ஊதியமும் உண்டு. ஆனால் உபரி உழைப்பில் உரிமை கிடையாது. இங்கேதான் மார்க்ஸியக் கோட்பாடு நிலவுடமைப் பொருளாதாரத்தை விசாரணைக்கு உட்படுத்துகிறது. ஏழைகளின் உழைப்பில் ஊதிப்பெருக்கும் நிலச்சுவாந்தார்களின் மனவியலையும் உடல் உழைப்பாளிகளின் உளவியலையும் ஒருகணியப் பார்வைக்குத் தருகிறது. உற்பத்திப் பொருளிலிருந்து அதன் உழைப்பாளி எவ்வாறு அந்நியமாக்கப்பட்டுச் சுரண்டப்படுகிறான் என்பதை ஆதாரபூர்வமாகத் தொட்டுக் காட்டுகிறது.

### சுரண்டல்:

மனிதரின் உழைப்புத் திறனை மார்க்ஸ் முதன்மையான மனித இயல்பாகக் கொள்கிறார். இதுவே மார்க்ஸியத்தின் அரிச்சுவடியுமாகும். உழைப்பு படைப்புத் தன்மை கொண்டது. அது சமூகத் தன்னையும் கொண்டது. எனினும் நிலஉடமைச் சமுதாயத்தில் மனிதரின் இயல்பான உழைப்பு பலவழிகளில் சுரண்டப்படுகிறது. அவருக்கு வழங்கப்படும் ஊதியத்தின் வழியாகவும், உற்பத்திச் சாதனங்கள் வழியாகவும், மதம், அரசியல், அறிவுத்திருட்டு மற்றும் காலனியம் உலகமயம் போன்றவற்றின் ஊடாகவும் உழைப்பாளி விளைபயனை இழந்துவிடுகிறார். உழைப்புக்கு ஊதியம் பெறும்போது உழைப்பின் அறுவடையான உறுபொருளுக்கு உழைப்பாளி உரிமைகோர முடியாமல் போகிறது. இந்த இயக்க விசையில் தனது உழைப்பை இன்னொருவரிடம் பறிகொடுக்கும் உழைப்பாளி என்றுமே தனது பரிதாபகர நிலையைத் தக்கபடி புரிந்து கொள்வதில்லை என்பதை மார்க்ஸிய உளவியல் கோடிட்டுக் காட்டுகிறது. மார்க்ஸியத்தை படிப்பதன் பேறு என்பது அறிவைப் (Knowledge) பெற்றுக்கொள்வது மட்டுமன்று, கூடவே அறிகையை (cognition) வளர்த்துக் கொள்வதுமாகும். (பேராசிரியர் சிவத்தம்பி, இலக்கியமும் வாழ்க்கையும், பக்.180).

### அந்நியமாதல்:

உழைப்புக்கு ஊதியம் பெறுவதால் உற்பத்திப் பொருளுக்கு உரிமை கிடையாது. எனவே உழைப்பாளி தன் படைப்புலகத்திலிருந்து அந்நியப்படுகிறான். இந்த அந்நியப்படுத்தலின் ஆரம்பம் வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டிலேயே கால்கொள்வதைப் பார்க்கலாம். எனினும் வேதாகம அந்நியப்படுத்தலுக்கும் நிலவுடமைப் பொருளாதார அந்நியப்படுத்தலுக்கும் பாரிய வேறுபாடு உண்டு. முன்னையது சாபம், பின்னது சுரண்டல்.

### வேதாகமத்தின் அந்நியம்:

'ஆண்டவர் தன்னிலிருந்தே உலகையும் மனிதனையும் படைத்தார். இதுவே அவரது முதல் செயல். ஏடன் தோட்டத்தில்




கடவுள் மனித னைச் சுதந்திரமாக உலவ விட்டார். இருப்பினும் அந்தத் தோட் டத்திலிருந்த அறிவு மரத்தின் கனிகளுக்கு மனிதன் ஆசைப்படக் கூடாது எனக் கடவுள் தடை விதித்தார். இந்த முதல் செயலே அவரது அந்நியப்படுத்தலாக அமைந்துவிட்டது. அவர் கூடாது என விதித்த அறிவின் கனிகளை மனிதன் சுவைத்தான். முதல் மனிதன் அந்நியப்பட மறுத்திருக்கிறான். கடவுளின் கணக்கில் இதுவே மனிதரின் முதல் பாவம். முதல் மீறல். கடவுள் மனித னைத் தண்டித்தார். நீ ஏடன் தோட்டத்தை (சொர்க்கத்தை) விட்டு வேளியேறுவாயாக, பூமியில் தினசரி கடும் உழைப்பில் ஈடுபட்டு வியர்வையில் நனைந்த றொட்டியை உண்பாயாக என்று சபித் தார்.

இவ்வாறு உழைப்பே சாபம் ஆகியது. அந்நியமாதலின் கதை உலகில் இப்படித்தான் ஆரம்பித்தது. இறைவனுக்கும் மனிதருக்குமான அடிப்படையான முரண்பாடு இப்படித்தான் தொடங்கியது. மனிதர் சொர்க்கத்திற்கு அந்நியமாகிப் பூமிக்குப் புலம்பெயர்ந்தனர்.

கடவுள் உலகைத் தன்னிலிருந்து அந்நியப்படுத்தினார், (புறவயப்படுத்தினார்). பின் அவற்றோடு இயங்கியல் உறவு கொண்டார். எதிர்வுகளின் ஒன்றுபடுதலும் வேறுபடுதலும், கடவுளுக்கும் உலகுக்கும் இடையிலான இயங்கியலே மனிதகுல வரலாறு, சமூக வரலாறு என்பது ஹெகலியத் தத்துவம். அந்தத் தத்துவமும் மனிதரின் உழைப்பைப் புறவயப்படுத்தல் என்பது அந்நியமாதலே எனச்சுட்டுகிறது. (பேராசிரியர், ந.முத்துமோகன், மார்க்ஸியம் பயிலுவோம், பக். 117).

### அந்நியமாதலில் சமுதாய அடுக்குமுறை:

அந்நியமாதலில் பல வடிவங்கள் உண்டு. இனக்குழுமச் சமுதாயத்தில் மூலதனம், நிலம், உழைப்பு இவை உழைப்பாளிக்கே சொந்தமாய் இருந்தன. இன்று கூலியை மட்டுமே உழைப்பாளி உரிமை கோர முடியும். உழைப்பைச் சுரண்டலுக்கு இழந்த தொழிலாளி அவர் பயன்படுத்திய உழைப்புக் கருவிகளையே வெறுக்கத் தொடங்குகிறார். இந்த இயந்திரங்கள் முதலாளிக்காகத் தன்னைச் சக்கையாகப் பிழிகிறதாக உணர்கிறார். மேலும் உழைப்பாளி அவரது சமூகச் சூழலிலிருந்து அந்நியமாகிறார். உடன் வேலைசெய்யும் பிற உழைப்பாளிகளைத் தனக்குப் போட்டியாக வந்தவர்களாக உணர்கிறார். அந்நியமாதலுக்கு ஆட்படும் உழைப்பாளி மதம், மது, உடல் இச்சைகள் ஆகியவற்றில் மட்டும் தற்காலிகமாகத் திருப்திப்படும் போக்குக் காணப்படுகிறது.

வர்க்கம், சாதி, ஆண்டான் அடிமை என்ற பேதங்கள் எல்லாமே நிலவுடமைப் பொருளாதாரத்தில் கால்கோளிட்ட சுரண்டல் கருவிகளேயாம். ஆணாதிக்கம், சமயம், அரசு என்பன எல்லாம் இந்த முரணியக்கத்திற்கு முண்டுகொடுக்கின்றன என்பதை மார்க்ஸியம் பட்டவர்த்தனமாக்குகிறது.

இவ்வாறு அந்நியமாதல் என்பது சமூகத்தைச் சிதைக்கிறது. ஏற்றத்தாழ்வான சமூகத்தைச் சிருஷ்டிக்கிறது. மனித சமுதாயச் சிதைவைச் சுட்டிக்காட்டிய உரூசோ என்பார் ‘மனிதன் சுதந்திரமாகப் பிறக்கிறான். ஆனால் சமூகச் சூழல்கள் அவனுக்கு விலங்குகளைப் பூட்டிவிடுகின்றது’ என்றார். தவிர மனிதநேய மார்க்ஸிய நோக்கில் அந்நியமாதல் கறாரான கணிப்பை பெறுகிறது. மனிதரை மையப்படுத்தி அது சுரண்டலை, அடக்குமுறையை, உளவியல் வீழ்ச்சிகளைத் துரிதப்படுத்துகிறது.

### நிறைவாக,

மார்க்ஸிய மனிதநேய உளவியலானது ஏற்றத்தாழ்வான சமூகத்தை ஆதரிக்கவில்லை. மாறாக, சமஉரிமை உடைய சமுதாயத்தை உற்பவிப்பதற்கான உபாயங்களை முன்மொழிகிறது. ‘மார்க்ஸியச் சிந்தனையின் பிரயோகம் இல்லாமல் சமூக ஒடுக்குமுறைகளை ஒருபோதும் ஒழிக்க முடியாது’ என்றார் பேராசிரியர் கா. சிவத்தம்பி, (கார்த்திகேசு சிவத்தம்பி நேர்காணல்கள், பக்.180). இன்றைய தாயகச் சமுதாயத்திலும் சரி, புலம்பெயர்ந்த தமிழ்ச் சமுதாயத்திலும் சரி வர்க்கப் போராட்டங்களைப் பரக்கக் காணலாம். காட்டாக: கடந்த சில ஆண்டுகளுக்கு முன் கனடாவில் ஆசிரியர்களின் பணிப்புறக்கணிப்பு, நகரசுத்திகரிப்புத் தொழிலாளர்களின் பணிப்புறக்கணிப்பு, மற்றும் போக்குவரத்து, அஞ்சல் துறைகளைச் சேர்ந்தோரின் பணிப்புறக்கணிப்பு எல்லாமே கூலி உயர்வுக் கோரிக்கைகளை இலக்காகக் கொண்டவை என்பது தெளிவு.

தாயகத்தைப் பொறுத்தவரையில் வடக்குக் கிழக்கில் நடந்து முடிந்த போராட்டத்திற்கும், விளைபயனைப் பெறுவதில் நிகழ்ந்த ஏற்றத்தாழ்வுக்கும் காத்திரமான தொடர்புண்டு. அண்மையில் மலையக மக்களின் ஆயிரம் ரூபா அதிகரிப்பிற்கான போராட்டமும் மார்க்ஸியம் கூறும் சுரண்டல் வழியாக வருவது என்பது கவனிக்கத்தக்கது.

இந்த மலையக மக்களின் அயரா உழைப்பில் உந்தி எழும் தேசிய வருமானம் நாட்டைப் பாதுகாக்கிறது. ஆனால், அதியுயர் தேயிலைக் கொழுந்தில் ஒரு அவுன்சு கூட ஒருபோதும் இத்தேயிலைத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுவதில்லை. முரண்நகை என்னவெனில் இத்தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் சமூகத்திலும் தோட்ட உரிமையாளர்கள் இன்று உண்டு. அவர்களும் BOP தேயிலையை மட்டுமல்ல கடைசித் தரமான தேயிலையையும் கூட சகாயவிலைக்கு இத்தொழிலாளர்களுக்குக் கொடுப்பதில்லை. இதனையே மார்க்ஸியத்தின் அந்நியமாதல் என்னும் உளவியல் தெளிவாக்குகிறது. இந்த இயங்கியல் வரலாற்றுப் பொருள்முதல்வாத மனவியலை மனங்கொள்ளாத தொழிலாளர்களுக்கு வாழ்வதற்கு மட்டுமல்ல சாவதற்கும் உலகில் நிலமில்லை என்பதே மார்க்ஸியத்தின் உளவியல் உச்சாடனம் என்பது தெளிவு.

**உசாத்துணை:**

- மார்க்ஸியம் பயிலுவோம், பேராசிரியர், ந. முத்துமோகன்
- கார்த்திகேசு சிவத்தம்பியின் நேர்காணல்கள், நியூசெஞ்சரி புக் வெளியீடு.




vettivelu.s@thaiveedu.com

# கடன் பிரச்சனைகளா?

- கடன் அட்டை சிக்கல்கள்
- வங்கிக்கடன் சிக்கல்கள்
- கலக்சன் கம்பனி போன் தொல்லை
- ஊதிய கையகப்படுத்தும் சிக்கல்கள்
- இது போன்ற கடன் பிரச்சனைகளால் தினந்தோறும் வீட்டில் சண்டை

## நல்ல செய்தி

### எம்மிடம் தீர்வு உண்டு

நம்மால் 80% வரை உங்கள் கடன்களை குறைக்க முடியும், உங்களால் முடிந்த குறைந்த மாதக்கட்டணம் மட்டும் செலுத்தலாம். இது ஒரு கடன் ஒருங்கிணைப்பு பெறுவது போல.

## இலவச ஆலோசனை பெற

**JANNET FINANCIAL SERVICES INC.**

**Ms. Jennet Sam & Mr. Stalin Dominic**

Tel: **647-894-3876**

FaX: 905-471-8080

Email: jennet_renni@hotmail.com

உடன் அழையுங்கள் உடனடியாக உங்கள் புதிய வாழ்க்கையை தொடங்க




# வீடு | வணிகம்

★ வாங்க ★ விற்க ★ வாடகைக்கு...

Residential | Commercial

★ BUY ★ SELL ★ LEASE

# அதிகரிக்கும் வீட்டின் விலைகள்

## வீடு வாங்க - விற்க உகந்த தருணம்

## இன்றே தொடர்பு கொள்ளுங்கள்

Sell Your House for Highest Price - Here Are Some Recent Proven Results




$131,000 SOLD OVER ASKING

Mornigside & Stains

3 | 3 Town house




$180,000 SOLD OVER ASKING

Rossland & Chrch

5+2 | 7- Detached




$30,000 SOLD OVER ASKING

Middlefield & Finch

: 2+1 | : 2 Condo




$26,000 SOLD OVER ASKING

Rossland & Chrch

: 3+1 | : 3 Town House



CALL YOUR PROFESSIONAL SERVICE

**Rave**

**P. Raveenthiran**

Sales Representative

**Dir: 416-567-2462**

Email: realtor.rave@gmail.com

HOMELIFE HIGHER STANDARDS

HomeLife G1 Realty Inc.

Independently Owned & Operated

HomeLife/Future Realty Inc.,Brokerage

205-7 Eastvale Dr,Markham ON. L3S 4N8

Bus: 905.201.9977

MLS MULTIPLE LISTING SERVICE

List your property with me...

FREE!

- Home Evaluation
- Home Staging
- Professional Photography
- Social Media Marketing
- Just Listed & Feature Sheet

# ‘அஷேரா’ உடல், உள ஏக்கங்களின் தேடல்

- நிலாந்தி சசிகுமார்

சயந்தனின் படைப்புகளில் ஆறாவது, ஆதிரை வரிசையில் இன்று அஷேரா. இலங்கைக்கு சம்பந்தமற்ற ஒரு தலைப்பில், போருக்கு நெருங்கிய தொடர்புகளைக் கொண்டமைந்த புனைவுகளின் செறிவு. அஷேராவின் வரலாற்றுக்கும் உலகத்தின் அனைத்துப் பெண்களின் கதைகளுக்கும் மிக நெருங்கிய தொடர்புண்டு. அந்த வகையில்த்தான் நாவலை நாம் நோக்க வேண்டும். அதே சமயம் நாவலின் நகர்வு ஈழப்போரின் தாக்கத்தின் விளைவுகளை மீட்டிச் சென்றதையும் கொஞ்சம் கவனிக்கவே வேண்டும்.

இலங்கையில் வாழ்பவர்களும், புலம்பெயர்ந்து வாழ்பவர்களும் தமது படைப்புகளில் ஈழப் போர் மற்றும் அதன் தாக்கங்கள் குறித்த பதிவுகளை சேர்த்துக் கொள்கிறார்கள் என்பதை மறுக்க முடியாதுள்ளது. இதனை பல வாசிப்பினூடாக உணர்ந்து கொண்டுள்ளேன். இதில் ஏதும் அரசியல் நோக்கங்களோ அல்லது இலாப நோக்கங்களோ இருக்கக் கூடும் என்ற பலரது கருத்துக்களை செவிமடுத்திருந்த போதும் அவ்வாறாக வெளி வரும் படைப்புகளை வாசிக்கத் தவறுவதில்லை. வாசிக்கக் கிடைத்த புலம்பெயர் இலக்கியவாதிகளின் படைப்புகளில் அதிக நெருக்கம் இருப்பதாக உணர்ந்தேன். அதற்கு பெரும்பாலான புலம்பெயர் தேசத்து இலங்கை வாசிகள் யுத்தத்தால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பாதிக்கப்பட்டுச் சென்றதன் தாக்கமாகக்கூட இருக்கலாம்.

ஒரு வகையில் நோக்கும் போது பிறந்த இடம், இயக்கங்களின் சம்பந்தம், இடம்பெயர்ந்த வழி, நெஞ்சோரம் பட்ட வலி என அவர்களுக்குள் உள்ள ஒற்றுமை இதற்குக் காரணமாக இருக்கலாம் என்றே தோன்றியது. அனுபவங்களை புனைவுகளுடன் இணைத்து நாவலாக உருவேற்றும் போது அதில் சுவாரஸ்யமான பல அடுக்குகள் இருக்கத்தான் செய்யும். இருப்பினும் அவற்றை ஒழுங்கமைத்து கொண்டு செல்லும் யுக்தியே படைப்பை நிலைக்கச் செய்கிறது எனலாம்.

அந்தவகையில் சயந்தனின் ‘அஷேரா’ பல விடயங்களை முன் வைத்து புனையப்பட்டுள்ளது. இயக்கங்களின் தோற்றமும் நோக்கமும் ஒன்றாக ஒரே காலத்துடன் இருந்தாலும் அவை பயணித்த பாதைகளும் பயன்படுத்திய யுக்திகளும் வெவ்வேறானவை. ஒவ்வொரு போராட்டங்களிலும் நாம் பார்ப்பது இத்தகைய உட்பூசல்களும், கருத்து முரண்பாடுகளும், யார் கை ஓங்கி நிற்றல் என்ற எண்ணப்பாடுமேயாகும்.

முப்பது வருடங்களுக்கு முன்னர் தமிழீழத்தைப்பெற எத்தனையோ இயக்கங்கள் தோன்றிய போதும் அதனைப்பெற முடியோததற்கான காரணம் அபத்தமானது. அதை நினைத்து வெட்கப்படுவதா? வேதனைப்படுவதா? என்று தெரியவில்லை. அதேவேளை, இயக்கங்களுக்குள் ஏற்பட்ட கருத்து மோதல்களும் உட்பூசல்களும் ஒருகட்டத்தில் சொந்த இனத்தையும் சகோதரங்களையும் கொலை செய்யும் அளவில் வன்முறையையும் வக்கிரத்தையும் விதைத்துச் சென்றமையைத் தான் ஜீரணிக்க முடியவில்லை. பேரினவாத சிங்கள இராணுவம் கொன்ற தமிழ் மக்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் இயக்கங்களின் பெயரில் நடைபெற்ற கொலைகள் எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும் மன்னிக்க முடியாத ஈனச் செயலாகவே அவை பார்க்கப்பட வேண்டியது.


ஒரு சமயம் தமிழ் ஈழத்தாகம் நம் இளைஞர்களை வன்முறையாளர்களாக உருவாக்கி விட்டதோ என்றும், சகோதரத்துவத்தை பலி கொடுத்து விட்டதோ என்றும், பல இளைஞர்களின் எதிர்காலத்தை புலம்பெயர் தேசங்களில் அநாதரவாகக் கைவிட்டதோ என்றும் எண்ணத் தோன்றியது.

இந்நாவலில் வரும் ஒவ்வொரு பாத்திரங்களும் ஏதோ ஒரு வகையில் ஈழப் போரின் தாக்கத்திற்கு உட்பட்டிருப்பதைக் காணலாம். இயக்கங்கள் உருவாக உதவிய புலம் பெயர் தேசமே பின்னர் இயக்கத்தில் இருந்தவர்களுக்கும், இயக்கத்தில் இருந்து தலைமறைவாக வாழ விரும்பியவர்களுக்கும், அகதி அந்தஸ்த்துக் கொடுத்து வாழ வழிசெய்தது. மண் சொந்தமானால் பல இன்னல்கள் விலகும் எனக் கனவு கண்டவர்கள் கூட சொந்த மண்ணில் வாழ முடியாதுபோன சாபக்கேட்டை நினைக்கையில் மனம் கொஞ்சம் கனக்கத்தான் செய்தது. சாதாரணமான ஒரு குடும்பத்தில் பிறந்த ஒரு இளைஞன் தமிழ் ஈழம் மலர்ந்தால் சீதனம் கொடுக்கத் தேவையில்லை என்று தனது இரு அக்காக்களுக்காக இயக்கத்திற்கு வந்திருப்பான். அருள் குமரன் ஒரு பெண்ணுடன் தகாத முறையில் நடந்து கொண்டு அந்தப் பயத்தில் இயக்கத்தில் சேர்ந்து கொள்வான். இவ்வாறாக அற்ப காரணங்களுடன் இயக்கத்தை நாடியோர் பல அற்புதமான செயல்களை செய்து விட்டு சென்றதையும் இங்கு பதிவு பண்ணியுள்ளார்.

தாம் இயக்கத்தில் இருந்த நாட்களில் இருந்த இயக்கத்திற்கு விசுவாசமாகவும் அதே வேளை ஏனைய இயக்கத்தவர்களை ஜென்ம விரோதிகளைப் போல கொலை செய்ததையும் நினைத்து குற்றவுணர்வு மேலிட குமுறுபவர்களும், இயக்கச் செயற்பாடுகளில் அசகாய சூரத்தனத்தைக் காட்டியவர்களின் பெருமையையும் அங்கங்கே பதிவிட்டபடி நகர்கிறது நாவல்.

புலம் பெயர் தேசத்தில் ஒருவருக்கு ஒருவர் ஆறுதலாக இருக்கும் அருள்குமரனும் அற்புதமும் இலங்கையில் இயக்கத்து உறுப்பினர்களாக சந்தித்திருந்தால் அவர்களில் யார் யாரை கொன்றிருப்பரோ என எண்ணத் தோன்றியது. ஈழத்தில் தொலைத்த சகோதரத்துவத்தை புலம் பெயர் தேசத்தில் தேடும் மனிதர்களாக அவர்கள் தெரிந்தார்கள்.

அதேவேளை, பண்ணையார் போலவும், அடைக்கலம் கொடுத்த




கிழவி போலவும் யாராவது தமிழ் ஈழத்தைப் பெற்றுக் கொடுத்தால் போதும் என்று அனைத்து இயக்கத்தவர்களையும் ஆதரித்த மக்களுக்கு கிடைத்தது ஏமாற்றம் மட்டும் தானே.

ஈழப்போரின் மற்றுமொரு பரிமாணத்தை இந்நாவல் காட்டிச் செல்கிறது. ஆம், போருக்காக தமது குடும்பம், கடமை, ஆசை, காதல், இளமை, காமம் என அத்தனையையும் விலையாகக் கொடுத்தவர்களின் வாழ்க்கையைத் தான். புலத்தில் தேடிக்களைத்துப் போனவர்களின் சாட்சிகளாக இங்கு அருள்குமரனும் அற்புதமும் உருவகப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்நாவலின் வரும் கதாபாத்திரங்கள் அனைத்துமே இலட்சிய புருஷர்களாகவோ அல்லது இலக்கிய மாந்தராகவோ இல்லாமல் யதார்த்தங்களுள் ஒன்றிப் போனவர்களாக இருப்பது சிறப்புத்தான். ஆனால், யதார்த்தம் என்ற பெயரில் அளவுக்கதிகமாக தூசணங்களை அள்ளித் தெளித்திருந்தமை கொஞ்சம் சங்கடத்தை ஏற்படுத்தியது. எழுத்தாளர்கள் தங்களது எழுத்துக்களின் ஊடாக வசவுகளை காவிச் செல்வதை தவிர்க்கலாம் எனத் தோன்றியது. குறிப்பாக பெண்களின் உறுப்புகள், பாலியல் சார்ந்த தூசண வசவுகளை இல்லாதொழிக்க வேண்டும் என்று போராடுபவர்களின் மத்தியில் இவ்விதமாக சிறந்த எழுத்தாளர்களால் எதிர்கால சந்ததியினருக்கு போய்ச் சேர்வதைத்தான் ஏற்க முடியவில்லை. இவ்விதமான எழுத்துக்களை ஆதிரை மற்றும் ஆறாவடு எழுதிய எழுத்தாளரிடம் எதிர்பார்க்காததால் ரொம்பவே வருத்தப்பட்டேன். அத்துடன் அங்கங்கு உவமைப்படுத்தவும் பெண் உறுப்புகள் பயன்படுத்தப்பட்டமையும் வெறுப்பை ஏற்படுத்தின. பெண்களின் உறுப்புகளும், பாலியல் சார் தூசணங்களும் ஒரு சிலருக்கு கிளர்ச்சியைத் தூண்டலாம். அதனால், அவ்விதமான வாசகர்களிலும் பார்க்க, இவற்றை வெறுக்கும் வாசகர்கள் அதிகம் என்பதையும் கவனத்தில் கொள்வது அவசியம்.

அவை தவிர, அஷேரா மிக நுணுக்கமாக எழுதப்பட்ட யதார்த்தங்களுடன் கூடிய புனைவு. காமம், காதலை விட அதிகம் நுகரப்பட்ட ஒன்று. அதற்கு பால் பேதம் கற்பித்து, ஒருவருக்கு ஒரு சட்டம் இயற்றி தண்டிக்கும் இச்சமூகத்தின் கன்னத்தில் ஓங்கி அறைய முயற்சித்திருக்கிறார். காமப் பசியை போக்கிக் கொள்ள பெண்கள் தேர்ந்தெடுக்கும் வழி வகைகளும் அதனால் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களும் சமூகத்தினால் திணிக்கப்பட்டவையே என்பதை மறுக்க முடியாது. அருள்குமரனின் தாய் இறப்பதற்கு முன் சொன்ன வார்த்தைகளில் தொக்கிநின்று வாழவேண்டும் என்ற ஏக்கம், சமூகத்தின் மீதான பயத்தில் காணாமல் ஆக்கப்பட்டது. அதேவேளை ஆண்கள் தமது உடற்பசிக்கு பெண்களின் இயலாமையையும், போக்கிடமில்லாத நிலையையும், தனித்திருக்கும் சூழலையும் வெகு இலகுவாக பயன்படுத்திக் கொள்வதையும் அதனால் சமூகத்தின் பழிக்கு ஆளாகி அப்பெண் இறந்தாலும் எவ்விதத்திலும் தமக்கு பழி நேராமல் தம்மைக் காத்துக் கொள்வதிலும் கவனமாக இருப்பதை அங்கங்கு குறிப்பிடத் தவறவில்லை.

அனுதாபம் தேடியும் அதிகாரத்தைப் பிரயோகித்தும் நிகழ்த்தப்படும் பாலியல் வன்கொடுமைகள் இந்நாவலில் காணக்கூடியதாக இருந்தது. அற்புதம் தன் காமத்திற்கு, இரவில் பெண்களை ஆபாசமாகக் காட்டும் டிவி நிகழ்வுகளையும் ஒரு செம்மறி ஆட்டையும் பயன்படுத்தியதை சாதாரணமாய் எடுத்துக் கொண்ட அருள் குமரனால், அபர்ணாவை புரிந்தகொள்ள முடியவில்லை என்பது சமூக வளர்ப்பு. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தான் அருள்குமரனை காதலிப்பதாக அபர்ணா சொல்லாத போதும் அவள் தனித்திருப்பதை பயன்படுத்த நினைத்த அருள்குமரனின் ஆண் மனம் அவள் தன் கணவனுடன் சேர்வதை விரும்பாமலும், அதேவேளை கணவனுடன் அவள் சேர்வதை ஒரு தவறான செயலாகவும் ஒவ்வொரு முறையும் அவளை தூசண வார்த்தைகளால் பேசுவதும் அருவருக்க வைத்த செயலாக இருந்தது. கணவனிடம் அடிவாங்காமல் தப்பிக்க அவனது பலவீனமான காமத்தை அவள் பயன்படுத்தியதை அருள்குமரன் கொச்சைப் படுத்திப் பேசியது, தன் கணவனிடம் கூட ஒரு பெண் காமத்தை வெளிப்படுத்துவது தவறு என்பதைத்தானே குறிக்கிறது.

அவ்வாறெனில், இவ்வளவு காலமும் அவனது தாயை அவன் நிச்சயமாக தவறானவளாகவே நினைத்துக் கொண்டிருந்திருக்கிறான் என்பது உறுதியாகிறது.

இவ்வாறானவர்களால் பாலியல் சுதந்திரம் என்பது ஆண்களுக்கு மட்டுமேயானது பெண்களுக்கு அது இல்லை என்பதாக சமூகத்தில் கடத்தப்படுவதை தவிர்க்க முடியாது.

எந்தவொரு ஆணிடமும் பெண்கள் தமது அந்தரங்கங்களைப் பகிர முடியாது. ஏனெனில் அதன் அர்த்தமும் பொருளும் அவளை அன்றி எவராலும் புரிந்து கொள்ள முடியாது என்பதை அபர்ணா மற்றும் அருள்குமரனின் கலந்துரையாடல் உணர்த்தியது. இயல்பாகவும் அக்கறையுடனும் உரையாடும் பெண்களை தவறாகவும் தம்மீது காதல் வயப்பட்டவர்களாகவும் நினைத்து ஏங்குவதும் பின் அவ்வாறு இல்லை என்றான போது அவர்களை அவதூறாகப் பேசுவதும் இன்றளவும் சமூகத்தில் நடைபெற்றுக் கொண்டே உள்ளது.

எது எப்படியோ சயந்தனின் நாவல்களில் சுவாரஸ்யத்திற்கு பஞ்சமில்லை. அதே வேளை உச்சபட்ச புனைவுகளைக் கொண்டு இறுதியில் கதையின் கதாபாத்திரத்தில் இருந்து சாமர்த்தியமாக தன்னை விடுவித்துக் கொண்டார்.



nilanthy.s@thaiveedu.com

# தேவிபாரதியின் நிலமொழியில் இயன்ற

# 'நீர்வழிப்படூஉம்' நாவல்

- தேவகாந்தன்

தனிமையின் நிழல்', 'நட்ராஜ் மகராஜ்' ஆகிய நாவல்களுக்குப் பிறகு மூன்றாவதாக வெளிவந்திருக்கிற தேவிபாரதியின் அளபெடைத் தலைப்புக்கொண்ட நாவல் 'நீர்வழிப்படூஉம்'.

நாவலின் மதிப்பீட்டைச் செய்வதற்கு முன்பாக 'நீர்வழிப்படூஉம்' என்ற வார்த்தையின் அர்த்தத்தை அறிந்துகொள்வது அதன் புரிதலை இலகுவாக்கும்படிக்கான ஒரு ஊடுவழியினைத் திறந்துவிடுமென நம்பலாம். ஏனெனில் முதன்மையாய் ஒரு கதையைச் சொல்கிற நாவலாகவன்றி, உறவு மனங்களின் இறுகும் கனிவுகொள்ளும் தன்மையின் மூலத்தைப் பேசவந்த நாவலாக இது இருப்பதில், தலைப்பின் பொருளை ஒரு மர்மம்போல் இறுதிவரை காப்பாற்றிக்கொண்டு செல்லவேண்டிய அவசியமில்லை. கார்ட்டுகளெல்லாம் விரித்துப்போட்டு விளையாடும் ஒரு விளையாட்டாக இதை மாற்றிக்கொள்ளலாம்.

பள்ளம் கண்ட இடமெல்லாம் பாய்ந்தோடும் இயல்பு நீருக்குண்டு. நீர்வழிப்படூஉம் என்பது, நீரின் தன்மையை நிகர்த்திருத்தல் என்பதுமாகும். மனிதர்கள் நீர்வழிப்படுகிறவர்களாய் இருக்கிறார்கள். மனித இயல்பு அதுதான். இந்நாவலில் வரும் மனிதர்களும் தத்தம் பூர்வீக ஊர்களிலிருந்து வாழ்வின் நிமித்தம் ஓடிக்கொண்டே இருக்கிறார்கள். மனித சமுதாயம் விரிவுகொள்ளக் கொள்ள வாழ்வின் இறுகிவரும் சூழ்நிலையிலிருந்து தப்புவதற்காக அது இயல்பாக நடக்கவே செய்யும். அதுபோல் தினசரிகளின் நெருக்குதல்களால் வாழ்வு கடினமாவதும், பின் தெளிந்து இளகுவதுமாய் தண்ணென்ற நீரின் தன்மையை மனிதர் அடைந்துகொள்கிறார்கள்.

சென்னை திருச்சி மதுரை கோயம்புத்தூர் திருநெல்வேலியென நாம் (இலங்கைத் தமிழர்) அதிகமும் அறிந்த நிலப் பகுதியல்ல நாவல் விரியும் களம். அது கானல் விரிந்து கோடையில் தீப்பிடித்துவிடும்படி கனலும் ஈரோட்டுக்கு அயலிலுள்ள உடையாம்பாளையம், நாச்சிபாளையம், ரங்கபாளையம், தாராபுரம், வெள்ள கோயில் போன்ற ஊர்களாக இருக்கிறது.

காருமாமா என்ற, இந்நாவலின் கதையைச் சொல்லும் தன்னிலைப் பாத்திரமான ராசனின் மாமன் ஒருவரின் மரணத்திற்கு, போக்குவரத்துக் குறைவுள்ள அயலூர்களின் உறவினர்கள் பல்வேறு வசதிகளில் உடையாம்பாளையம் வந்து கூடுவதிலிருந்து நாவல் துவங்குகிறது.

எவ்வளவு இயல்பானது மரணம்! ஆனால் உறவினர்களை எவ்வளவு தூரம் உடைத்துப்போடும்படியாகப் பாதித்துவிடுகிறது! தெரிந்த விஷயம்தானெனினும் தெரியாத காட்சிகளாய் விரிந்து நாவல் மனத்தில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. மரணங்கள் கூட மனித உணர்வுகளின் வேட்கை குரோதம் பழி அவா ஆகியனவற்றின் காரணமாய் இப்பவோ எப்பவோ விளைந்த துவேஷங்களையும் அகற்றவே செய்கின்றன என்கிறது நாவல். உறவுகளின் ஒன்றுகூடலில் பின்னால் விளைவதுகூட ஒரு கொண்டாட்டமாகவே ஆகிவிடுகிறது. நிஜத்தின் அத்தனை அழகுகளும் நாவலில் வந்து நிரைத்து நிற்கின்றன.

புருஷன் காருவை தனியே கைவிட்டு செட்டி ஒருவனுடன் தன்னிரு குழந்தைகளையும் கொண்டு ஓடிவிட்ட மனைவி ராசம்மாவை, அவரது அக்கா தங்கை மச்சான் ஆதிய உறவுகளெல்லாம், அதுவே அவரது உடல்நிலையைச் சிதைவுறுத்தியும், மனநிலையைப் பேதலிப்பாக்கியும் அவரை அந்த வயதில் மரணிக்க வைத்ததென திட்டுகிறார்கள். காகிதம்கூட பொசுங்கும்படியான கிராமத்தின் அத்தனை கடுமையான வைதலின் மொழியாக அது இருக்கிறது.

உடையாம்பாளையத்திலும் இன்னும் அக்கம்பக்கமுள்ள சிற்றூர்களிலும் பண்ணயக்காரருக்கு குடிமைகளாக இருக்கும் இந்த நாவிதர்களின் வாழ்நிலையை, அதன் வலியை, மனச் சள்ளைகளை நாவல் தன்னுள்ளே கொண்டிருக்கிறது. பண்ணயக்காரருக்கு குடிமைகளாகவிருப்பதன் மூலமே ஒரு சமூகத்தின் எத்தனை பேர் வாழ்க்கையை நடத்திவிட முடியும்? அதனால்தான் தொழிலின்மையென்ற பளு உறவு வளையத்துள் உள்ளவர்களையும் அதை மீறிய கோபதாபங்களைக் கொள்ளும்படி ஆக்கிவிடுகிறது. கதைசொல்லியின் முத்தையன் வலசுப் பெரியப்பாவின் மனைவி சவுந்திரா தன் நோய் விழுத்திய உடம்போடும் அதன் நொம்பலங்களோடும் தன் உறவுக்கார்மேல், குறிப்பாக காருவின் மீதும் அவரது தமக்கை மீதும் கொள்ளும் குரோதம் அத்தனை ஆக்ரோஷமாக இருக்கிறது. அவர்கள் அழிவைக் காணாமல் தன் சாவு விழாதென்று அவள் நிலமே அறைகிறாள்.

இவ்வாறான தொழில் நெருக்கடிக் காலகட்டத்தில் மனித வாழ்வு சுகமாக இருந்திடாது. அதனால் அவர்கள் பல்வேறு தொழில்களைத் தொடங்குகிறார்கள். சில வாய்ப்பாக அமைகின்றன் சில தேய்ந்திறுகின்றன. ஆனாலும் அவர்கள் வாழ்கிறார்கள். விதிக்கப்பட்ட வாழ்வை வேறு என்ன செய்துதான் தொலைப்பது?

தன் முந்திய நாவல்கள் இரண்டையும்விட தேவிபாரதி இதில் காட்டும் வறுமையின் வெளிச்சம் மிகக் கூர்மையானது. பகட்டில்லாதது. இவற்றையெல்லாம் பார்க்கிறபோது படைப்பாளிக்கு அவர் கையாண்ட மொழியானது வெகுவாகக் கைகொடுத்திருக்கிறதென்பதை புரிந்துகொள்ள முடிகிறது. வெகுஜன நூல் வாசிப்பின் வேகத்தில் பக்கங்களைக் கடந்துவிடவே முடிவதில்லை. மொழி தன்னை ரசிக்காமல் செல்ல அனுமதி மறுக்கிறது. தாண்டிச் செல்வதையும் தடுக்கிறது.

மொழி ஊடகமானது மிக்க வலுவுடன் இந்த நாவலில் பிரயோகமாகியிருப்பதாய் நான் காண்கிறேன். மொழியென்று நான் சொல்வது கதைப் பிரசன்னத்தின் மொழியல்ல நிலமொழி. அந்த மண்ணின் மக்களின் வாயிலிருந்து கால காலமான பயில்வில் தேய்ந்தும் வளர்ந்தும் இழுபட்டுமான மொழி அது. தலைப்பின் சொல் அளபெடை இந்த மொழிப் பாவனையின் கூரான அடையாளக் கூறாக இருக்க முடியும். அவர்களது பேச்சு ஒரு ரசனையாயிருந்ததெனில், இறப்புத் துக்கத்தை ஒலியாய்ச் சொரியவிடும்

அவர்களது ஒப்பாரி இன்னொரு ரசனையாயிருக்கிறது. ‘துக்கத்தைக் கடந்த இசையாக அவை அப்போது ஒலிக்கத் தொடங்கியிருக்கும்’ என்கிறார் தேவிபாரதி. அது மெய்.

ஒப்பாரியும் ஒப்பாரி பற்றியும் ஐந்து பக்கங்களுக்கு நாவலில் விவரமிருக்கிறது. இவ்வாறு எந்த மண்ணிலும் துக்கத்தை ஒலித்து அடங்கும்முறை இருக்கவே செய்கிறது. ஆம்பராந்துக்கரைப் பெண்கள் அவற்றை ஒரு முயற்சியில் தங்கள் குரு உடுமலைப் பேட்டை லிங்கநாவிதனிடமிருந்து கற்றுக்கொண்டார்கள். அதையே சாவு வீடுகளில் அவர்கள் ஒலித்தார்கள். காருவின் செத்த வீட்டில் பெண்களின் ஒப்பாரி எழுகிறது. அயல்வந்து கூடுகிறது. ‘துக்கம் கேட்க வந்தவர்கள் மாமாவின் சடலத்தை ஒரு பார்வை பார்த்துவிட்டு அம்மாவின் பாடல்களைக் கேட்பதற்காகவும், பெரியப்பாவின் ஆட்டத்தைப் பார்ப்பதற்காகவும் சம்மணமிட்டு உட்கார்ந்து கொண்டார்கள்’ எனக் கூறும் தன்னிலைக் கதைசொல்லியான ராசன், அவ்வாறு கூட்டம் கூட்டமாக வந்தவர்கள் தொடர்ந்து செய்வதை, ‘அதன் பிறகே மாமாவின் மரணத்தைப்பற்றி அறிந்துகொண்டார்கள்’ என்பதன்மூலம் அவர்களை முதன்மையாய் ஈர்த்த அம்சத்தை விபரிக்கிறார். அத்தனைக்கு உக்கிரம் பெற்றிருந்திருக்கின்றன ஒப்பாரி இசைப்பும், உடுக்கையொலி எடுப்பும்.

கணவனின் சாவு வீட்டுக்கு, ஓடிப்போன ராசம்மா வருகிறாள். மட்டுமில்லை, அவளது மகன் சுந்தரத்தையும் யாரோ சென்று நேரத்தோடு அழைத்து வந்திருக்கிறார்கள். அவ்வாறெல்லாம் இறுதி-நேரத்தில் இசைவுகள் நடக்கும்.

மேலே வானம் போட்ட பெருமழையோடு வெகு விமரிசையாக காருவின் பூதவுடல் அடக்கம் செய்யப்பட்டு முடிகிறது. உற்றார் உறவினர் தத்தம் ஊர் திரும்புகிறார்கள். தன்னிலைக் கதை சொல்லியும் தன் முறைப் பெண் சாவித்திரியை அங்கே கண்டு உரையாடித் திரும்புகிறான்.

பின்னாலேதான் நினைவோட்டமாக லோகநாதபுரத்தில் காரு இறப்பதற்கு முன்னான காலத்தின் அவர்களது வாழ்வு நாவலில் சொல்லப்படுகிறது. அப்பா அம்மா தங்கைகள் அக்கா ஆகிய முழுக் குடும்பத்தின் கதையும் விரிகிறது. அதன் பின்னால் ஆசிரியப் பணி புரிந்த தந்தையின் மரணத்தோடு ஐந்து பிள்ளைக-ளைக்கொண்ட அந்தக் குடும்பத்தின் வறுமை வெளிப்படுத்தப் படுகிறது. இணையாக அந்தச் சமூகம் சுமந்த பொருளாதார நலிவுகளும் விவரிப்பாகின்றன.

முந்திய தலைமுறை நாசுவர்களாகவும் குடி நாசுவத்திகளாகவும் ஒடுங்க, அடுத்த தலைமுறை ஈரோட்டின் சாய பட்டறைத் தொழிலில் சென்று முடங்கிக்கொள்கிறது. ஏற்படும் நீர் வரட்சியும் அவர்கள் படும் அவலமும் கிராமமொன்றில் இயல்பாக எதிர்பார்க்கப் படக் கூடுமாயினும், அதை அவர்கள் தீர்க்க எடுக்கும் முயற்சியானது மனத்தை உலுப்புகின்றது. நீர் நிழல் பசுமைவெளியென சகலதும் இழந்த வறட்சி ஒருபோது விவரிக்கப்பட்டிருக்க, மறுபொழுதொன்றில் மாமழையால் அவர்கள் படும் அவத்தை சொல்லப்படுகிறது.

ஆயினும் அந்த அவலங்களுள்ளும் வறுமையினுள்ளும் அவர்களுக்கு காதலும் வருகின்றது. காதல் வந்தால் தோல்விகள் வராதிருக்குமா? அப்போது தற்கொலைகள் நிகழ்கின்றன. சாயப் பட்டறை வேலையில் அங்கு பயன்படுத்தப்படும் நைற்ரேட் என்ற விஷத்தை களவிலெடுத்துப் பாவித்து அவர்கள் தற்கொலைகளை மிகச் சுலபமாகச் செய்துகொள்கிறார்கள். இவற்றின் மூலமாக சாயத் தொழில் செய்யும் ஒரு இளைய சமூகத்தின் ஒரு புறம் தெளிவாகக் காட்டப்படுகிறது.

இந்த வாழ்க்கையானது இதுவரை நாவலில் சொல்லப்பட்ட வாழ்க்கையிலிருந்து மாறிப்போன ஒன்றாக இருந்தபோதிலும், அவர்களது வாழ்க்கைதான் அது. றேடியோ ரெலிவிஷன் என வசதி வாய்ப்புகளையும் அந்த வாழ்க்கை கொண்டிருக்கிறது. மூத்த தலைமுறை முதல் இளைய சமதாயம் ஈறாக சினிமாப் பாடல் கேட்டு மகிழ்கிறது. சினிமா பார்க்கிறது. பல தசாப்த காலத்தின் ஒரு சமூக வளர்ச்சி நாவலின் சில அத்தியாயங்களிலேயே அடக்கிவைக்கப்படுகின்றது. காலத்தில் மறந்துவிடாதபடி நினைவின் சுவடுகளைப் பாதுகாத்து படைப்பில் பதிவாக்கும் படைப்




பாளியின் முயற்சியை இங்கே கவனம்கொள்ள முடிகிறது.

இனி, காருவின் இறுதிச் சடங்கின் பின் தாலியறுப்பு நிகழ்வு நடக்கவேண்டும். சாவு வீட்டுக்கு வந்த ராசம்மா அந்தச் சடங்கிற்கும் தன் மகள் ஈஸ்வரியுடனும் மகன் சுந்தருடனும் வருகிறாள். தன்னிலைக் கதைசொல்லியான ராசனும் அவனது தாயார் முத்துவும் அவளின் சகோதரிகளும் அவர்கள் பிள்ளைகளும் வருகிறார்கள். ராசனின் அக்காக்களும் அத்தைகளும் முறைப்பெண் சாவித்திரியும்கூட வருகிறார்கள். அது ஊரினது அல்ல, குடும்ப உறவினர்களின் சடங்கு.

முறை மாப்பிள்ளையாதலால் சாவித்திரி மனத்தில் அவன்மீதான கனவுகள் எழவில்லையென யார் சொல்ல முடியும்? அல்லது அவனுக்குத்தான் தன் முறைப்பெண்மீது விருப்பமெழுவதைத் தடுக்க முடியுமா? ஒருவர்மீதான ஒருவரின் பிரியம் பேச்சுவாக்கில் சொற்களில் ஏறித் தொனிக்கிறது. ஆனால் ஈஸ்வரிக்கு அவ்வாறான எண்ணமேதும் அதுவரை இருந்ததாகத் தடயமில்லை. அந்த வயதும் அவளுக்கில்லை.

ராசம்மா தான் ஓடிப் போன ஆறு மாதங்களின் பின் செட்டி தன்னையும் குழந்தைகளையும் கைவிட்டுப்போன சோகத்தை தன் மைத்துனிகளுக்குச் சொல்கிறாள். பட்ட சீர்கேடுகளெல்லாம் கூறி கண்ணீராய்க் கொட்டுகிறாள். கேட்ட உறவுகள் தம் கோப தாபம் மறந்து துடித்துப் போகின்றன. பிள்ளைகளின் கோலமும் ராசம்மாவின் நிலையும் அவர்கள்மேல் இரக்கமாய்ப் படிகின்றன. பெண் பிள்ளை ஈஸ்வரியை எண்ணி அவர்களை அங்கேயே தங்கவைக்க யோசனை மனத்தில் கொள்கிறார்கள். அதனால் சடங்கு முடிந்ததும் புறப்படும் ராசம்மாவை இரண்டொரு நாள்கள் தங்கிப் போக

வற்புறுத்துகிறார்கள். ராசம்மா சம்மதிக்கிறாள்.

அப்போது தான் ஒருகாலத்தில் வாழ்ந்த வாழ்க்கையின் நினைவுகள் கிளர காரு வீட்டுள் செல்லும் ராசம்மாவுக்கு அங்கு கிடந்த உலோகத் தாயக் கட்டைகள் கிடைக்கின்றன. பெண்களும் பிள்ளைகளும் தாயம் விளையாடத் தொடங்குகிறார்கள். ராசம்மாவும் விளையாடுகிறாள்.

அவர்களில் சிலர் தாயக் கட்டைகளில் மந்திரம் செய்பவர்களாய் இருக்கிறார்கள். அவர்கள் கேட்கும் எண்ணிக்கைகள், கேட்டது கேட்டபடி விழுந்துகொண்டு இருக்கின்றன.

விளையாட்டு முடிவடையும் நேரம். ராசம்மா தாயக் கட்டை வீசும் முறை வருகிறது. இரண்டே இரண்டு எண் அவள் போட்டுவிட்டால் விளையாட்டு முடிந்துவிடும். அவளும், அவளுடன் கூடவிளையாடும் முத்துவும் வென்றுவிடுவார்கள். அதனால் ராசம்மாவை இரண்டே இரண்டு போட்டுவிட கேட்கிறாள் அவள். இரண்டு போட்டுவிட்டால் அவள் எது கேட்டாலும் தருவேன் என்கிறாள்.

அதுவொரு மாயத்தின் தருணம். அதுவே அவளை அவ்வாறு பேசவும் வைத்திருக்கிறதுபோலும்.

அப்போது ராசம்மா கேட்கிறாள், 'போட்டால் என்ன தருவாய்' என்று.

மாயம் வேலை செய்கிறது. ராசம்மாவுக்கு மைத்துனி சொல்கிறாள், 'உன் பெண்ணை என் மருமகளாக்கிக் கொள்கிறேன்' என.

சாவித்திரி திரும்புகிறாள். ராசன் நிமிர்கிறான். என்ன நடந்து கொண்டிருக்கிறது அங்கேயென அதிர்வுகள் வெடிக்கின்றன.

ராசம்மா ஒரு புளகிப்பில். அவள் தாயத்தில் இரண்டு எண் போட்டுவிட்டால் அந்தக் கணத்திலிருந்து அவளது வாழ்வே தலைகீழ் மாற்றம் கண்டுவிடும். பழி பாறி விழுந்துவிடும். அறுத்த சொந்தங்களின் இழைகள் கொஞ்சமேனும் வந்து இணைந்துவிடும்.

அந்த எண் விளையாட்டுச் சித்தியாலும் இரண்டு போட்டுவிட முடியும்.

எல்லோரது மனங்களும் பேருவகைகொண்டு அவள் வீசப் போகிற தாயக் கட்டைகளில் எண் இரண்டை எதிர்பார்த்து பார்வை பரத்துகின்றன.

ஆனால் நாவல், தாயக் கட்டையை உருட்ட ராசம்மாவை கடைசி வரை அனுமதிக்கவேயில்லை. அப்படியே நின்றுவிடுகிறது. வாசகன் அந்தரத்தில் மிதக்கிறான். அது ஒரு அற்புதமானதும் உச்சமானதுமான அடைவுதான்.

உறவுகளின் அன்பு பாசம் கருணை ஆதியாய உணர்வுகளின் சிதைவுறும் கணங்களைக் கொண்டதாக நாவலின் முற்பகுதி அமைய, சிற்றூர்களின் நாவித சமூகத்தினதும் பண்ணயக்கார சமூகத்தினதும் வாழ்முறையை இடையிலுள்ள பகுதி விளக்குகிறது. பிற்பகுதியை உறவுகளின் கோப தாபங்கள் இறப்பு, திருமண சடங்காசாரங்களில் மறந்து மனித இயல்பான மாண்பு வெளிப்படும் பகுதியாக மாறிப்போகிறது. இலக்கியத்தின் பண்பும் பயனுமான கதியில் பிரதி நன்கு அழுந்திக்கொள்வது நாவலின் வெற்றியாகிறது.

ஆனாலும்...

நாவல் வாசக மனத்தை தூக்கித் தூக்கிச் சென்று உச்சத்தில் மிதக்கவைக்கும் முடிவோடு நிறைவுறுகையில், அது நாவலின் பண்புதானா என்ற கேள்வி வாசகனிடத்தில் எழாமலிருக்க முடியாது.



devakanthan@thaiveedu.com


DEBT FREE CREDIT SOLUTION

Seeking freedom from DEBT?
We offer Total Debt FREE SOLUTIONS



Elankeeran .T
*Certified Insolvency Counsellor*
By Canadian Association of Insolvency and Restructuring Professionals (CAIRP)

- கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்.
  We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money.
- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்.
  We shield you from your creditors and offer you a guranteed protection.

SETTLEMENT
CONSUMER PROPOSAL
BANKRUPTCY

Cell. 416.834.7227 Fax. 1.877.800.789
Tel. 416.434.1522 freedebt.toro@gmail.com

Head Office:
10 Milner Business Court, Suite 334
Toronto, ON. M1B 3C6

Branch Office:
101 Palstan Road
Mississauga, ON. L4Y 4E7

www.TotalDebtFree.ca

# ஈழத்து புலம்பெயர் பெண் கவிஞர்களின் கவிதைகள் வெளிப்படுத்தும் புலம்பெயர் அனுபவங்கள்



- அஷ்வினி வையந்தி

புலம்பெயர்வு என்பது ஒரே அரசியல் பூகோள எல்லையை விட்டுப் பெயர்ந்து சமூக, அரசியல், பண்பாட்டுச் சூழ்நிலைகளால் பெரிதும் வேறுபட்ட பிரதேசத்தில் வாழ நேரிடுவதைக் குறிக்கின்றது. இவ்வாறு அரசியல், சமூக, பண்பாட்டு அம்சங்களில் பெரிதும் வேறுபட்ட நாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்பவர்களால் படைக்கப்படும் இலக்கியங்களையே புலம்பெயர் இலக்கியம் அல்லது புலம்பெயர்ந்தோர் இலக்கியம் என்ற சொற்றொடர் கொண்டு அழைக்கின்றோம்.

ஈழத்துத் தமிழ் இலக்கியத் தளத்திலே புலம்பெயர் இலக்கியங்களின் வரவானது புதிய அனுபவங்களையும், அதிர்வுகளையும் உருவாக்கி வருகிறது. புலம்பெயர் இலக்கியத்தில் மிக வீச்சான இலக்கிய வடிவமாகவும், அதிகம் படைக்கப்பட்டனவாகவும் புலம்பெயர் கவிதைகளே அமைகின்றன. இலங்கை இனப்போராட்ட சூழலின் தாக்கம் படைப்புக்களில் செல்வாக்குச் செலுத்த ஆரம்பித்த போது அவை கவிதைகளிலேயே அதிகமாக பதிவாகின. இனவுணர்வுச் சூழலையும், பெண்ணியத்தின் எழுச்சியையும், புலம்பெயர் வாழ்வையும் 1980களில் இருந்து பதிவுசெய்யத் தொடங்கிய ஈழத் தமிழர்களின் கவிதைகள் உணர்வு நிலையிலும், உள்ளடக்கத்திலும் மிக பெறுமதியானதாக அமைந்தன.

1980களில் புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களில் பெரும்பாலானோர் கலை, இலக்கிய முயற்சிகளில் ஏதோ ஒரு வகையில் தம்மை ஈடுபடுத்தியவர்களாக, இனங்காட்டிக் கொண்டவர்களாகக் காணப்பட்டனர். அதிலும் குறிப்பாகக் கவிதைத் துறையில் தம்மை இனங்காட்டியவர்களே அதிகமாகக் காணப்பட்டனர். குறிப்பாக பெண்கள் புலம்பெயர் இலக்கியத்துறையில் பல படைப்புக்களை ஆரம்ப காலம் தொட்டே படைத்துக்கொண்டு வருகிறார்கள். இவர்களின் இலக்கியத்துறையில் புலம்பெயர் கவிதைகள் குறிப்பிடத்தக்கன. அந்த வகையில் புலம்பெயர் கவிதைகள் பெண்ணியம் சார் பல பிரச்சினைகளை உணர்வுபூர்வமாக வெளிப்படுத்துகின்றன. புலம்பெயர் பெண்ணிய படைப்பாளிகளின் கவிதைகளின் பாடுபொருட்களை தாயகம், புகலிட அனுபவங்கள், இனவாதம், செய்தொழில், புகலிட வாழ்வுக் கெடுபிடிகள், பெண்நிலைவாதம், பாலியல் விடுதலை, பண்பாட்டுப் புரிதலின்மை, கலப்புத் திருமணம், சாதி, வேலையில்லாப் பிரச்சினைகள் எனப் பொதுவாகப் பிரித்து நோக்க முடியும்.

1983ல் உச்சத்தை அடைந்த இலங்கை இனக்கலவரமும், அதன் தொடர்ச்சியாக இலங்கையில் நடந்த தமிழினத்துக்கு எதிரான அரச அடக்குமுறையும், அதன் விளைவான ஆயுதப் போராட்டமும் பெண்களின் வாழ்வியலை பல நிலைகளிலும் துன்பத்திற்குள்ளாக்கி இருக்கிறது. இத்தகு பிரச்சினைகளுக்கு ஈடுகொடுக்க முடியாமல் நாட்டை விட்டு வெளிநாடுகளுக்கு புகலிடம் தேடிவந்த பெண்களுக்கு தாய்மண் சூழலில் மறுக்கப்பட்ட உணர்வுகளை புகலிடச்சூழல் சுதந்திரமாக வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பைத் தந்துள்ளது. தாய்நாட்டின் இனப்போராட்டச்சூழல், அது தந்த இழப்பு, இந்திய இராணுவத்தின் கொடுமைகள், உள்நாட்டு இடப்பெயர்வுகள் இவற்றால் அதிகமாகப் பாதிக்கப்படும் பெண்களின் நிலை, போரை எதிர்கொள்ளும் மனநிலை என இப்பாடுபொருள்



நீண்டு செல்வதைக் காணமுடிகிறது. ஈழத்துப் பெண்களால் பேசப் படும், படைக்கப்படும் பெண்ணிய இலக்கியம் எவ்விதமான மேற் கத்திய கோட்பாடுகளின் தாக்கமும் இன்றி உண்மையான பெண் விடுதலையைப் பேசுவதாக இருப்பதற்கு காரணம் போரின் வலியை உணர்ந்த அவர்களின் அனுபவமே படைப்பாக வெளிப் படுவதாலேயே ஆகும். இதனாலேயே புகலிட ஈழத்துப் பெண் கவிஞர்களின் கவிதைகள் தனித்த கவனம் பெறுகின்றன.

மைதிலி, பிரதீபா, அர்ச்சனா, சுமதி ரூபன், கல்யானி, மல்லிகா, ரஞ்சனி, சுல்பிகா, மைத்திரேயி, வசந்தி, நிருபா, ஔவை, நளாயினி, தர்மினி, மோனிகா, பாமினி, கௌசல்யா, ஆழியாள், பாமதி போன்ற பலரை இக்கவிதைப் பாரம்பரியத்தில் குறிப்பிடலாம். இப்பெண் படைப்பாளிகள் தங்களது கவிதைகளினூடாக தங்க ளது புலம் பெயர் அனுபங்களை வெளிப்படுத்தி உள்ளார்கள்.

அகதிநிலை, இனவாதம், நிறவாதம், மொழி புரியாமை, முரண் பட்ட வாழ்வு, பண்பாட்டு வேறுபாடு, பாலியல் அதிர்ச்சி போன்ற அம்சங்கள் வெளிப்படும் வகையில் புலம்பெயர் மக்களின் அவ லம் பற்றியும், முரண்பாடுகள் பற்றியும் பெண் கவிஞர்கள் தங்க ளது கவிதைகளினூடாக வெளிப்படுத்தியுள்ளார்கள்.

அந்தவகையில், ஆழியாளின் கவிதைகளில் அந்நியமும், தனிமை யும் வெளிப்படுவதை அவதானிக்கலாம். 'மரணம்' என்ற கவிதை யில் அவர் தனது தனிமையை வெளிப்படுத்த எடுத்துக் கொள் ளும் உவமை அதிர்ச்சி தரக்கூடியதாக உள்ளது. இதனை பின் வரும் கவிதை உணர்த்துகிறது.

**கலங்கரை விளக்கத்து**
**இரவுக் காவலாளியாகவும்**
**ஆறடிக் குழியுள்**
**மௌனம் புடைசூழ இறக்கப்பட்ட**
**பிணமொன்றைப் போலவும்**
**தனித்தே**
**மிகத் தனித்தே இருக்கின்றேன்**

பெண்களின் சிந்தனை விரிவடைதல், வேலை செய்தல், தனித்து வாழ்தல், புதிய சூழலுக்குத் தம்மைத் தயார்படுத்தல், அடக்கு முறையை எதிர்த்தல், அனைத்துலக நோக்கு ஆகியவற்றை உள் ளடக்கிய வகையில் பெண்களின் விழிப்புணர்வு தொடர்பாகவும் பெண் கவிஞர்கள் தங்களது அனுபவம் சார் கவிதைகளை எழுதி யுள்ளார்கள்.

அதாவது, பெண்களின் படைப்புக்களிலே பெண்களுக்கெதிரான அனைத்து ஒடுக்கு முறைகளுக்கும் எதிராக குரல் கொடுக்கும் நிலையையும், பெண்கள் மத்தியிலும், சமூகத்தின் மத்தியிலும் இருக்கும் கோட்பாடுகளைக் கேள்விக்கு உட்படுத்தும் சந்தர்ப்பங் களையும் அவதானிக்க முடிகின்றது. றஞ்சனி, மல்லிகா, நிருபா, மைத்திரேயி, பிரதீபா, ஆழியாள் ஆகியோரின் கவிதைகளிலே இதனைக் கண்டுகொள்ளலாம். பெண் கவிஞர்களின் 'மறையாத மறுபாதி' என்ற கவிதைத் தொகுதி இவ்வகையில் முக்கியமானது. இவை தவிர 'ஊடறு', 'பெண்கள் சந்திப்பு மலர்கள்' என்பவையும் கவனத்திற்குரியன.

அந்த வகையில் பெண்களுக்கு எதிரான அனைத்து ஒடுக்குமுறை களுக்கும் குரல் கொடுக்கும் வகையில் பின்வரும் பெண் கவிஞை களின் கவிதைகள் படைக்கப்பட்டுள்ளன.

**'சமையல் தொடங்கி படுக்கை வரை**
**இலவச சேவை வழங்கியது போதும்**
**சுமைகளும் துளித்துளியான துன்பத்தின்**
**வெளிப்பாடுகளும் மட்டும் உனதல்ல.**
**சூழவுள்ள சகலவற்றிலும்**
**உனக்கும் சம பங்குண்டு**
**வெளியே வா'**

- பாமினி

**என் ஆதித்தாயின்**
**முதுகில் பட்ட**
**திருக்கைச் சவுக்கடி**
**நான் காணும் ஒவ்வொரு**
**முகத்திலும்**
**தழும்பாய் தேமலாய்**
**படர்ந்து கிடக்கிறது**

- ஆழியாள்

**என் மகள்**
**வளர்ந்தவளானாள்**
**வினாக்களை வரிசையாக**
**அடுக்கினாள்**
**அம்மா**
**நாங்கள் ஏன்**
**அகதிகளானோம்?**
**என் தாய்நாடு எங்கே?**
**என் தாய்மொழி எது?**

- நிருபா

பெண் ஒடுக்குமுறையும், அதற்கெதிரான எழுச்சியும், பெண் தன் சுய அடையாளத்தை வெளிப்படுத்தலுமாக இதுவரை பயணித்து வந்த பெண் படைப்பாளிகளின் படைப்புகள் எவ்வளவு தூரம் முக்கியமோ, அதே அளவு பெண் தனக்கான மொழியைக் கட்ட மைக்கும் சிந்தனையும், அதற்கான செயற்பாடுகளும் தற்கால இலக்கிய உலகில் முக்கியமானவையாக அமைந்துள்ளன. எல்லா வற்றுக்கும் மேலாக பெண் தன்னை தன் எழுத்துக்களுக்கூடாக மறுபிரதி செய்தலும் தன் உணர்வுகளையும் தன் மொழியையும் எழுதுவதாக உள்ளன. உதாரணமாக ஆழியாளின், 'தடம்' என்ற கவிதையில் இடம்பெறும் பின்வரும் கவிதையை குறிப்பிடலாம்.

**‘வெகு இயல்பாய் என் தடமழியும்**
**வள்ளம் பதித்த நீர்ச்சுவடு போல’**

துவிதம் தொகுப்பில் அமைந்துள்ள ‘காமம்’ என்ற பிறிதொரு கவிதையில்,

**‘உயரும் மலையடிவார மண்கும்பிகளுள்**
**திணறி அடக்கமுறும் மனித மூச்சுகளும்’**

எனக் குறிப்பிடுவதைக் காணலாம்.

ஆணாதிக்க மொழியில் இருந்து விடுபட்டு பெண்கள் தமக்கான மொழியை உருவாக்குதலும் புலம்பெயர் பெண் படைப்பு நெறியாக அமைந்துள்ளதை அவதானிக்கலாம். தமிழ்ச்சூழலில் ரஞ்சனியின் எழுத்துக்களில் இதற்கான எத்தனத்தை அவதானிக்க முடியும்.

புலம்பெயர்ந்த தமிழர்கள் தம் தாய் மண்ணை இழந்தவர்கள். பூமி பந்தின் அனைத்து திக்குகளிலும் அகதிகளாய் திரிபவர்கள். இவர்கள் புலம்பெயர்ந்து உயிர் வாழ்வதற்கு தாயக நினைவுகள், புலம்பெயர்ந்த நாட்டில் கிடைக்கும் புது அனுபவங்கள், தாய் நாட்டுடன் புலம்பெயர்ந்த நாட்டை ஒப்புமை செய்யும் நிலை, உறவுகளின் பிரிவுத்துயர் ஆகியவற்றைத் தமது படைப்புக்களில் புலப்படுத்துகின்றனர்.

தாயகம் பற்றியதான இழப்பின் சோகமும், வருங்கால நம்பிக்கைகளையும் நிர்வாணியின் ‘எங்களின் தேசம்’ என்னும் கவிதையில் பின்வருமாறு புலப்படுகின்றது.

**எங்களின் தேசத்தில் உழுது பயிரிட்டு**
**பச்சையைப் பார்த்து பசியாறியவர்கள்**
**நாங்கள்**
**இன்று எம் தேசத்தில்**
**குண்டுகள் வீழ்ந்து பலியாவதும்**
**நாங்கள்**

இலங்கைத் தமிழர்களின் அன்றைய நிம்மதியான வாழ்க்கை, இன்றைய போர்ச்சூழல் வாழ்க்கை ஆகியவற்றை விவரிக்கும் விதமாக இக்கவிதை படைக்கப்படுள்ளது. மேலும், வருங்காலத்தில் எவ்வித பிரச்சினைகளும் இன்றி தாய்தேசத்தில் வளமாக வாழ்வோம் என்று இலங்கைத் தமிழர்களின் நம்பிக்கையைப் பிரதிபலிக்கிறது.

சந்திரவதனாவின் ‘இலவு காத்த கிளிகள்’ என்னும் கவிதை,

**பனியது பெய்யும்**
**அழகினைக் கண்டு**
**மனமது துள்ளும்**
**வெளியினில் சென்றால்**
**பனியது பெய்யும்**
**குளிரது அறைய**
**உடலது நடுங்கும்...**

என புலம்பெயர்ந்த தமிழரின் உள்மனதின் எண்ணங்களை பிரதிபலிக்கிறது. புலம்பெயர்ந்த தேசத்தின் அழகைக் கூட இரசிக்க முடியாத பொருளாதார நெருக்கடி நிலையில் தமிழரின் நிலை உள்ளதை உணர்கிறோம். மேலும் வருங்காலங்களில் தன்னுடைய குடும்பத்துடன் மகிழ்ச்சியாக வாழ்வோம் என்னும் நம்பிக்கையை சுமந்து அயல் மண்ணில் வாழும் புலம் பெயர்ந்தவரின் மனநிலையை உணர்த்துவதாக இக்கவிதை படைக்கப்பட்டுள்ளது.

நிர்வாணியின் ‘தமிழா நீ அழ வேண்டாம்’ என்னும் கவிதை,

**‘தமிழா! நீ அழவேண்டாம்**
**எதற்காக அழ வேண்டும்?**
**எல்லாம் இழந்துவிட்டாய்**
**உலகத்தின்**
**மூலைகளில் அகதியாய்’**

தாய்நாட்டையும், உறவுகளையும், உரிமைகளையும் இழந்து உலகின் எங்கோ ஒரு மூலையில் அகதியாய் வாழும் புலம்பெயர்ந்த தமிழர்களின் அவலநிலையினை உணர்த்துவதாக இக்கவிதை படைக்கப்பட்டுள்ளது.

பெண்கள் ஒடுக்கப்படுவது தொடர்பான பிரச்சினையானது சமூகத்தின் உற்பத்தி முறை மற்றும் உற்பத்தி உறவுகளுடன் தொடர்பு கொண்ட வரலாற்று ரீதியான ஒரு பிரச்சினையே என்னும் கருத்தை,

**சாப்பிடும் சோறு**
**பேசும் பேச்சு**
**சிரிக்கும் சிரிப்பு**
**எல்லாம் குழந்தைக்காக என**
**கரு சுமந்து...**

**நாளை**
**உன்னோட வண்டியில்**
**முன்நின்று சிரித்து வர**
**உன் இனிசியல் போட்டுக்கொள்ள**
**உனக்கு பிள்ளை பெற்றுத் தருவேன்**
**நான்கைந்து மணிநேரம்**
**ரத்த வெள்ளத்தில் மிதந்து...**

புலம்பெயர்ந்தோர் கவிதைகளில் தனிமை உணர்வு, குடும்பம் சார்ந்த பிரிவுத்துயர், தாய் மண் ஏக்கம் ஆகிய மூன்று நிலைகளில் தாயக நினைவுகள் வெளிப்படுவதை இக்கவிதை வரிகளின் மூலம் அறிய முடிகிறது.

‘எந்த ஆணுக்கு உள்ளது கருப்பை’ எனும் வெண்ணிலாவின் கவிதையின் வாயிலாக பெண்ணாகியவள் பத்துமாதம் கருச் சுமந்து வலித்தாங்கி இரத்த வெள்ளத்தில் குழந்தை பெற்றெடுக்கிறாள். ஆனால் இச்சமூகம் அக்குழந்தையை ஆணின் பெயரில்தான் அடையாளப்படுத்துகிறது என்பதை அறிய முடிகிறது. இதனை பின்வரும் கவிதை வரிகள் விளக்குகின்றன.

**கேட்டால் கிடைக்குந்தான்**
**உன் முத்தம்**
**உன் அரவணைப்பு**
**உன் ஆறுதல்**
**பச்சப்புள்ள கேட்டா**
**பாலூட்டுகிறோம்**
**கரு சுமந்து**
**குழந்தைத் தவமிருக்கும் பெண்களை**
**சுமக்க**
**எந்த ஆணுக்கு உள்ளது கருப்பை...**

சொந்த மண்ணிலிருந்து உயிருக்குப் பயந்து புலம்பெயர்ந்த தமிழர்கள் பிறநாடுகளின் மொழி, பருவநிலை, முகம், பண்பாடு ஆகியவற்றை அறியாத நிலையில் உலகெங்கும் அகதிகளாக வாழ்கிறார்கள். மேலும், சிரமங்களையும், வலியையும் தாங்கிப் பிள்ளைகளைப் பெற்றெடுக்கும் பெண்களை ஆண்கள் அன்புடன் அரவணைப்பதில்லை. அதற்கு மாறாக அடிமைப்படுத்துகிறார்கள். பெண்ணுக்குள்ள கருப்பையின் மகத்துவத்திற்கு நிகராக ஈடு செய்யக் கூடிய எவ்விதத் திறனும் ஆணிடம் இல்லை என்பதை இக்கவிதை உணர்த்துகிறது.

மேலைநாட்டு வாழ்க்கை முறையானது இயல்பாகவே இயந்திரமானது. உயிர் வாழ்வதற்காகவும், மேலதிக வருமானத்தை ஈட்டுவதற்காகவும், ஊரில் பட்டுவந்த கடன்களை அடைக்க வேண்டியும், ஓடி ஓடி உழைக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் புலம்பெயர்ந்தோரில் பலருக்கு இருந்திருக்கிறது. கணவன், மனைவி, பிள்ளைகள் என குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களும் ஒரு விதமான நேரசூசியில் பொதுவான ஓர் இணக்கப்பாட்டில் வேலைக்குச் செல்லும் நிலையினைப் பார்க்க முடிகிறது. கணவன், மனைவி மற்றும் பிள்ளைகள் ஒருவரை ஒருவர் பார்த்து பேசுவது, ஒரே மேசையில் அமர்ந்து உணவு அருந்துவது கூட கிழமைக் கணக்கில் இழுபடும் நிலைகளாக இருந்து வருகிறது. பாரம்பரியமாக மனைவியிடமிருந்து அன்புரிமையுடன் எதிர்பார்க்கும் பல்வேறு பணிவிடைகளையும் கணவன்மார்கள் பலரும் பணம் உழைப்பதான முயற்சியில் விட்டுக் கொடுத்து வருவதனையும் அவதானிக்க முடிகிறது.

அந்தவகையில், 'நினைவுத் தொடரில்' என்ற தலைப்பிலான பாமினியின் கவிதை வரிகள்,

**இயற்கை இழந்த**
**இயந்திரம் விழுங்கிய**
**தலைநகரில் எனது**
**நாட்களை இழக்க**
**நிர்பந்திக்கப்பட்டேன்...**

என, புலம்பெயர்ந்த தமிழர்கள் அந்நாடுகளில் வாழ்வதற்காகப் படுகின்ற பாடுகளை இயல்பாக விளக்குவனவாக அமைந்துள் ளன. தாயகத்திலுள்ள உறவுகளுக்குப் பணம் அனுப்ப வேண்டியும், மேலைநாடுகளின் அதிகரித்த வாழ்க்கைச் செலவுகளைச் சரி கட்ட வேண்டியும் இயந்திரமாக இவர்கள் உழைக்க வேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

முன்பின் அறிமுகம் இல்லாத நாட்டில் முற்றிலும் புதியதான ஒரு வாழ்வியற் சூழலில் தன்னை நிலைநிறுத்த முயற்சிக்கும் நிலையில் ஏற்படுகின்ற அந்நிய மனப்பான்மையின் வெளிப்பாடுகளாகப் பெண் கவிஞர்களால் எழுதப்பட்ட பல்வேறு கவிதைகள் காணப்படுகின்றன. நிறம், மொழி, நடையுடை பாவனை, இனம் முதலியன எல்லாமே இவ்விதமனோநிலையின் வெளிப்பாட்டுக்கு காரணமாக அமைகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

'பனித்துளி வாழ்வு' என்ற தலைப்பிலான அர்ச்சனாவின் கவிதை வரிகள் வருமாறு,

**உனக்கென வெளிநாட்டில்**
**ராசா வாழ்க்கை**
**செலவுக்குப் பணம் கேட்டு வருகின்ற**
**தபால்களின் கேலிகள்**
- அர்ச்சனா

தாயகம் பற்றி ஏக்கத்தின் உச்சநிலை வெளிப்பாடுகளாக இக்கவிதை வரிகள் அமைந்துள்ளன. வெளிநாட்டில் உள்ளவர்கள் தொடர்பாகத் தாயகத்தில் இருப்பவர்கள் கொண்டிருக்கின்ற மன நிலை வெளிப்பாட்டையும், வெளிநாடுகளில் தமிழர்கள் தாயகத்து நினைவுகளால் (நாடு, இனம், உறவு, சுற்றம்...) படுகின்ற அவஸ்தைகளையும் இங்கே உணர்வுபூர்வமாகப் பார்க்க முடிகிறது.

புலம்பெயர் கவிதைகளின் உள்ளீடுகளில் பெரும்பாலானவை தாயகம் பற்றிய ஏக்கங்களாகவே காணப்படுகின்றன. இந்த ஏக்கமானது தாயகம் பற்றியதாகவோ (ஊர், நாடு), குடும்பம் பற்றியதாகவோ, இன்னும் இவை தவிர்ந்த பிற விடயங்கள் பற்றியதாகவோ வெளிப்படலாம். இந்த ஏக்கத்தினை எழுத்தில் வடிக்கும் பாங்கு மிக அற்புதமாக அமைந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

'ஏக்கம்' என்ற தலைப்பில் ராஜாத்தி எழுதிய கவிதை பின்வருமாறு அமைந்துள்ளது.

**கோரப்பனிக்குளிரில்**
**உதடுகள் வெடித்து**
**உதிரம் சொட்ட**
**உறக்கமிழந்த அந்த இரவில்**
**ஸ்ரேலிங் பவுண்களை**
**எண்ணுகிறபோது**
**உனது நினைவுகள்**
**என்னை ஓலமிட்டு அழவைக்கும்**
- ராஜாத்தி

தாயையும், தாய்நாட்டையும் பிரிந்தவரின் சோகங்களைப் பல்வேறு நிலைகளில் இக்கவிதையினூடே தரிசிக்க முடிகிறது. இக்கவிதையின் இறுதி அடிகள் தாயகம் குறித்த ஏக்கத்தின் பல்வேறு தளங்களையும் வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளன.

புலம்பெயர் தேசம் தந்த புதிய சூழலில் தாயகம் பற்றிய ஏக்கம் பீறிடுகிறது. ஊர், உறவுகளுடன் கூடி உறவாடி இருந்த அந்த நாட்களை ஏக்கத்தோடு இரை மீட்கும் கவிதை வரிகளாக பின்வரும் கவிதை வரிகள் அமைகின்றன.

'ஒரு சனிக்கிழமையாய் இருக்கும் கிணற்றடியில் இறைத்துக் கொண்டிருக்கும் தண்ணீரில் அள்ளித் தோய்ந்து பலா இலையை மடித்துக் கோலி ஈர்க்கில் துண்டை முறித்துச்செருகி...'

என்பதாக அமைகின்ற இக்கவிதைகளிலே குடும்ப உறவுகளைப் பிரிந்த ஏக்கம் பலவாறு வெளிப்பட்டு நிற்கின்றது. அத்துடன் தேசம் பற்றி எரிகையிலே அதனை விட்டுவிட்டு வந்த குற்ற உணர்வையும் இக்கவிதையிலே கண்டுகொள்ள முடிகிறது.

பெண்ணியம் சார்ந்த கருத்துக்களைப் பாடுபொருளாகக் கொண்ட கவிதைகள் அண்மைக் காலங்களில் மிகப் பெருவரவாக வெளிவரத்தொடங்கி உள்ளன. மேலைத்தேய நாடுகளில் வழக்கில் உள்ள ஆண், பெண் சமத்துவம், பெண்ணியச் சிந்தனைகளின் பரம்பல், பெண்களிடையேயான விழிப்புணர்ச்சி இந்த நாடுகளில் பெண்களுக்கு கிடைக்கின்ற பொருளாதாரச் சுதந்திரம், அதிகரித்துக் காணப்படும் வாழ்க்கைச் செலவில் பெண்களின் பொருளாதாரப் பங்களிப்பின் இன்றியமையாமை முதலானவை இவ்வாறான சிந்தனைகளுக்கு உந்து சக்திகளாக அமைந்துள்ளன.

பெண்ணியம் சார்ந்த கவிதைகளில் பெண்ணின் தனித்துவம், ஆண், பெண் சமத்துவம், பெண் அடிமைத்தனம், ஆணாதிக்க எதிர்ப்புணர்வு, சீதன எதிர்ப்புணர்வு, அடிமை வாழ்வு எதிர்ப்பு முதலான விடயங்கள் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளமையினை பார்க்க முடிகிறது.

தமிழ்ச் சமூகக்கட்டமைப்பில் பெண்களுக்கிருந்த மரபுவழியான தளைகளை எல்லாம் உடைத்தெறியப் புலம்பெயர் சூழல் வாய்ப்பாக உள்ளமை பற்றிக் குறிப்பிடும் வசந்திராஜாவின் கவிதை வரிகள் வருமாறு,

**போர் தருகின்ற சோகங்களுக்குள்ளாலேயும்**
**ரகசியமாய் சிலிர்த்துக் கொள்ளுகின்றேன்...**

புலம்பெயர்ந்து வாழ்கின்ற நாடுகளின் தேசவழமைகள் பெண்களுக்கு எவ்வளவு தான் உரிமைகள் தந்தாலும் சொந்தநாட்டில் காலம் காலமாக உரிமை மறுக்கப்பட்டு வந்த அந்தச் சொந்த அனுபவம் சென்றடைந்த நாடுகளிலும் தலைதூக்க முற்படுவதை 'நாமும் மனிதராய்' என்ற மைத்திரேயியின் கவிதைவரிகள் புலப்படுத்துகின்றன.

**அன்றொரு விருந்தில் வழமை போல்**
**ஆண்களும் பெண்களும்**
**தனித்தனியாய் குழுமியிருந்தபோது**
**ஏதோ பகிடி கேட்டு**
**வாய்விட்டு நாம் சிரித்தோம்...**

குடும்பச்சூழலில் பெண்களிடமிருந்து பாரம்பரியமாக எதிர்பார்க்கப்படும் ஊழியங்களும், நியமங்களும் புலம்பெயர்ந்து சென்ற தமிழர்களிடையேயும் வழக்கில் இருந்து வருவதனையும் கவிதைகள் வெளிப்படுத்தத் தவறவில்லை. குறிப்பாக புலம்பெயர்ந்து சென்ற முதலாவது தலைமுறையினரிடையே இவ்வாறான ஓர் எதிர்பார்ப்பு இருந்துள்ளதனைக் காணமுடிகிறது. இதற்கு உதாரணமாக சுமதி ரூபனின் கவிதையை இவ்விடத்தில் சுட்டிக் காட்டலாம்.

**அவள் கால் சக்கரங்கள்**
**ஓய்வின்றி சுழல்கிறது**
**சூரியப்புலவின்முன் இங்கேயும்**
**பெண்ணின் பெருமைக்காய் எழுதல்**
**நிகழத்தான் செய்கிறது**
- சுமதிரூபன்

கல்யாணியின் ‘சாம்பற்பூச்சிகள்’ என்ற தலைப்பிலான கவிதை-வரிகள் ஆணாதிக்க சமுதாயத்தில் பெண்கள் மீது கட்டவிழ்த்து விடப்படுகின்ற வன்முறைகளையும், அதனை நியாயப்படுத்த முனையும் பிற்போக்குச் சக்திகளையும் கடிவதாக அமைகின்றன.

**எங்களைப் பாருங்கள்**
**எங்கள்**
**சேலையையும் ரவிக்கையையும் அல்ல**
**எமது உணர்ச்சிகளை**

- கல்யாணி

‘விற்பனை’ என்ற தலைப்பிலான பாமினியின் கவிதை,

**சமையல் தொடங்கி**
**படுக்கை வரை**
**இலவச சேவை**
**வழங்கியது போதும்**
**சுமைகளும்**
**துளித்துளியான**
**துன்பத்தின் வெளிப்பாடுகளும்**
**மட்டுமே உனதல்ல**

- பாமினி

என பெண் தனது உரிமைக்காகத் துணிந்து போராட வேண்டுமென அறைகூவல் விடுப்பதாக அமைந்துள்ளது.

‘ஆண்’ என்ற தலைப்பிலான பாமினியின் கவிதை வரிகள் பெண்கள் சொந்த நாட்டில் மட்டுமல்ல, புகலிடம் பெற்றுள்ள தேசங்களிலும் சீரழிக்கப்படுகின்றமையினை உணர்த்தி நிற்கின்றன.

**அன்று கூலிப்படை**
**எனதுடலை பதம் பார்த்தது**
**பின்பு அந்நிய இராணுவம்**
**தன்னை திருப்தி செய்தது…**

கூலிப்படையினர், இந்திய இராணுவத்தினர், மண்ணின் மைந்தர்கள், ஐரோப்பியர்கள் என எல்லோருமே பெண்களைச் சீரழிப்பதில் ஆண்களாக ஒரே மாதிரியாகவே செயற்படுகின்றமையினை இக்கவிதையினூடே காணமுடிகிறது.

‘ஏனிந்த வித்தியாசங்கள்’ என்ற தலைப்பிலான மல்லிகாவின் கவிதை வரிகள், பெண்கள் தொடர்பாகத் தாயகத்தில் பயில்நிலையில் இருந்து வரும் அதே கட்டிறுக்கங்களைப் புலம்பெயர்ந்த நாடுகளிலும் அமுல்படுத்த முனையும் யாழ்ப்பாணத்தின் சராசரித் தாய்மார்களையும், சமூகத்தையும் கடிவதாக அமைகின்றன.

**லொவி மரத்தினில் ஏறிக்கொள்ளவும்**
**நல்ல பழங்களை பிடுங்கியுண்ணவும்**
**இனி எனக்கு விலக்கப்பட்டுள்ளதாம்**
**நான் இனி வளர்ந்த பெண்ணாம்…**

எனத் தொடர்கின்ற கவிதை வரிகள் பெண்ணடிமைக்கு எதிராகப் பெண்கள் தங்களது மௌனத்தை உடைத்தெறிந்து கிளர்ந்தெழ வேண்டும் என அறைகூவல் விடுப்பதாக அமைகின்றது. பெண்கள் தங்களுக்கான சம இடத்தினை எந்தவிதமான விட்டுக்கொடுப்புக்களுமின்றி அடைந்து கொள்ளவேண்டும் என்ற உணர்வு அண்மைக் காலங்களில் வேகமாக வளர்ச்சி பெற்று வருவதனையும் இவ்விடத்தில் குறிப்பிடல் வேண்டும்.

சீதனக்கொடுமை (வரதட்சணை)யின் தாக்கத்தினைப் புலம்பெயர்ந்த நாடுகளிலும் உணரமுடிகிறது. பணம் என்பது இவர்களைப் பொறுத்தவரை அவ்வளவு பிரச்சினைக்குரிய ஒரு விடயமாக இல்லாது விடினும், தமது சமூகத்தைச் சீரழிக்கும் ஒரு விதமான கொடிய நோயாகவே இவர்கள் இதனைப் பார்க்கின்றனர்.

‘மாப்பிள்ளைக்கு வந்தனங்கள்’ என்ற தலைப்பிலான நிருபாவின்



கவிதையிலே,

**… பூமியை விட்டு நான்**
**செவ்வாயில் வாழச் சென்றால்**
**சூரியனையும் சந்திரனையும்**
**சீதனமாகக் கேட்பீரோ…**

எனக் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. என்ன விலை கொடுத்தாவது சாதி, மரபு, அந்தஸ்து, படிப்பு என்பனவற்றில் குறைவில்லாத மாப்பிள்ளையை வாங்கத் துடிக்கும் தமிழ்ச் சமூகத்தின் நிலையை,

**பதுங்கு குழியும் கூட**
**பாதுகாப்பற்றதே**
**எமது இன்றைய வாழ்வு**
**அஸ்தமித்த சூரியன்**
**அரங்கிற்கு வருமுன்பே**
**குண்டு கொட்டிச்**
**செல்லும் கொலைவிமானங்கள்**

என்ற கவிதை புலப்படுத்துவதாக அமைந்துள்ளது. காலம் காலமாகத் தமிழ்ச் சமுதாயத்தில் தொடர்ந்து வரும் சீதனக் கொடுமைக்கு எதிரான குரலை இக்கவிதையினூடே கேட்க முடிகிறது. சமூக வேறுபாடு, சீதனக்கொடுமை முதலான சமூகக் கொடுமை-களை, சமூக அழுக்குகளை இன்றைய இளைய தலைமுறையி

னர் வெறுத்து ஒதுக்கத் தலைப்பட்டுள்ளனர். ஆயினும் யாழ்ப்பாணத்துத் தமிழ்ச் சமூகத்திலே படிப்பு, சாதி, உத்தியோகம் இவை மூன்றும் இணைந்தே உள்ள மாப்பிள்ளைக்கான மதிப்பு இன்னும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. இலட்சங்கள் பல கொடுத்து மாப்பிள்ளையை விலைக்கு வாங்கும் வழக்கம் தாயகத்தில் மட்டுமல்லாது புலம்பெயர்ந்த நாடுகளிலும் பெருவழக்காக உள்ளதனைப் பார்க்க முடிகிறது.

ஆண், பெண் உறவு தொடர்பான விடயங்களை வெளிப்படையாகப் பேசும் பண்பு கீழைத்தேயச் சமூதாயங்களில் அருகியே காணப்படுகிறது. மேலைநாடுகளில் இந்நிலை நேர் எதிர்மாறானதாகக் காணப்படுகின்றது. தமது உணர்வுகள், விருப்பு வெறுப்புகள் மற்றும் பாலியல் தேவைகள் குறித்து கூச்சமின்றி வெளிப்படையாகப் பேசும் பண்பு மேலைநாட்டில் பரவலாக வழக்கில் உள்ளதனைக் காணலாம். புலம்பெயர் கவிதைகளிலும் இப்பண்பு பிரதிபலிக்கக் காண்கின்றோம். பெண்ணிய இலக்கிய வெளிப்பாடுகளில் ஏற்பட்ட ஒரு பாரிய மாற்றமாகவே இதனைக் கருத வேண்டி உள்ளது. பாலியல் குறித்த பல்வேறு விடயங்களைத் தமிழ் இலக்கியங்களின் வழிக்கண்டு கொள்ள முடிந்தாலும் பெண்ணே தனது உணர்வுகளை வெளிப்படுத்துவது மாதிரியான தன்மை புதியதாகவேபடுகிறது.

'புரிதலின் அவலம்' என்ற தலைப்பிலான ரஞ்சனியின் கவிதை வரிகள் ஆண், பெண் கலவியல் திருப்தி காணாத பெண் தனது ஏக்கத்தை வெளிப்படையாகச் சொல்வதாக அமைகின்றன. கவிதை வரிகள் பின்வருமாறு,

**முத்தங்களாகி கலவியில் மயங்கி**
**இறுக அணைத்து வியர்வையில் ஒட்டி**
**கரைந்து போகும் அடுத்த நிமிடமே**
**நீ ஆணாகி விடுகிறாய்...**

பாலுறவில் பேசாப் பொருளாக இருந்த உணர்வுகளின் கலாபூர்வமான சித்திரிப்பாக மேற்படி கவிதை அமைந்துள்ளது.

புலம்பெயர் பெண் படைப்பாளிகளின் கவிதைகளிலே போர்ச்சூழலினால் ஏற்பட்ட துயர அனுபவங்களும் வெளிப்படுகின்றமையைக் காணலாம். கலாவின் 'கோணேஸ்வரிகள்' என்ற கவிதை தமிழ்ப்பெண்களே இந்தத் தீவின் சமாதானத்திற்காக ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைத்தால் உடைகளைக் கழற்றி நிர்வாணப்படுத்திக் கொள்ளுங்கள் எனக் கூறுவதாக அமைந்துள்ளது.

**வீரர்களே வாருங்கள்**
**உங்கள் வக்கிரங்களைத் தீர்த்துக் கொள்ளுங்கள்**
**என் பின்னால்**
**என் பள்ளித் தங்கையும் உள்ளாள்....**

இவ்வாறே போர்க்களத்தில் ஒவ்வொரு வீரனிடமும் எதிரியின் தாயை, தாரத்தை, மகளை புணரும் விலங்கு மனம் வார்த்தெடுக்கப்பட்டுள்ளது.

கலாவின் 'விதைத்தவைகள்' என்ற தலைப்பிலான கவிதை போர் முனையிலிருக்கும் ஒரு தாயின் வலியைக் கூறுவதாக அமைந்துள்ளது. கசாப்புக் கடைக்காரனின் வாசலில் காத்திருக்கும் ஆடுகளைப் போலக் காத்திருக்கிறோம். நம்மையே பலிகொண்டு ஒரு தேவதையின் ஆட்சியை நிலைநிறுத்துவதாகச் சொல்லுவதை நம்ப வேண்டாம் என்பதாக இக்கவிதை அமைந்துள்ளது.

**ஆனால் என் தாய்**
**மண்டியிட்டு கதறுகிறாள்**
**சிதறுண்டு போன**
**உடலங்களையாவது**
**தன்னிடம் தரும்படி**
**அவள் அழுது புலம்புகிறாள்...**

தாய் நிலம் தன் பெண்களின் உயிர்குடிக்கும் எமனாகி விட்டதையும், தமிழ் பெண்களை ஈனப்பிறவியாய் நடத்தும் பேரினவாதிகளின் இழிசெயலையும், அவர்களின் கொலைவெறிச் செயலையும் துக்கம் கலந்த குரலில் இக்கவிதை மூலம் வெளிப்படுத்தியிருக்கிறார்.

இலங்கை வாழும் தமிழர்களை முற்றாக அழிக்கும் இனவெறி நடவடிக்கைகளை மேற்கொண்ட சிங்கள அரசு போரினால் மட்டும் இன்றி பல்வேறு வழிகளிலும் தமிழ் இனத்தின் வளர்ச்சியை முடக்கியது. இலங்கையில் போர் நடைபெற்ற வன்னிப் பகுதியில் இருந்து வெளியேறி வவுனியாவுக்கு வந்த கருவுற்றிருந்த தமிழ் பெண்களின் கருக்களை கலைக்குமாறு சிங்கள இராணுவ அதிகாரிகளால் வவுனியா மருத்துவமனை அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டது. இது தமிழர்களின் வருங்கால சந்ததியினரும் இலங்கையில் இருக்கக்கூடாது என்பதற்காக திட்டமிட்ட நடவடிக்கையாகும். மேலும் அது ஒரு இனத்தை கருவிலேயே அழித்தொழிக்கும் செயலுமாகும். இத்தகு கொடுமையான மனிதகுலச் சீரழிவையே தன் கவிதைகளில் சுட்டுகிறார் ஆஸ்திரேலியாவில் இருந்து கவிதை எழுதி வருகின்ற பாமதி. அவருடைய 'சமாதானம்' என்ற தலைப்பிலான கவிதை பின்வருமாறு.

**சமாதானப் பறவைகளே**
**உங்கள் இறக்கைகள்**
**எம் மக்களுக்காய் வலுப்பெற வேண்டும்**
**விடியாத அகதி முகாமில்**
**காத்திருக்கும் சிறுவர்களைப் பார்**
**கூட்டுப் புழுக்களானார்கள் பார் ...**

யுத்த பூமியில் சமாதானத்தின் தேவை பற்றி பார்க்குமிடமெல்லாம் மனித உயிர்கள் அழிக்கப்படுகையில் மனிதநேயமே இப்பூமியில் தொலைந்துவிட்டதாக எண்ணிய படைப்பு மன அமைதி பற்றியும் அமைதியின் தேவை பற்றியும் வலியுறுத்திப் பேசுகிறது. யுத்தத்தால் தொலைந்தோம் என்ற தலைப்பிலான பாமதியின் கவிதை போரினால் சீரழிந்து கொண்டிருந்த தமிழ்ச்சமுதாயத்தினை அடையாளம் காட்டுகிறது.

போர் எந்த அளவிற்கு ஈழத்து பெண்களின் வாழ்வியலைப் பாதித்துள்ளது என்பதை சோகம் ததும்ப வெளிப்படுத்துவதாக ஹம்சத்வாணியின் 'விசும்பும் வாழ்க்கை' என்ற தலைப்பிலான கவிதை அமைகின்றது.

**மண்ணில் வேர்விட முடியாத வாழ்க்கை விசும்பிற்று**
**வேதனை புண்களைத் தின்றன**
**இழவு வீட்டுக்குள் எப்படிச் சோறாக்குவது?**

போர்ச்சூழலில் தன் உடைமைகளை இழந்து வெட்ட வெளியில் குடும்பம் நடத்தும் நிலையிலும், அடிப்படை வசதிகள் கூட இல்லாத அகதிகள் முகாம்களில் வாழும் நிலையில் பெண்கள் மிக மோசமான சூழலையே அனுபவிக்கக்கூடும். ஒரு பெண் வெட்ட வெளியில் நின்று குடும்பம் நடத்துவது அவலமான பல பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும். இவ்வாறான ஒரு சூழலில் அதனை அனுபவித்தே ஆகவேண்டிய நிலையில் உள்ள அகதியாக்கப்பட்ட ஒரு பெண்ணின் அவலக்குரலாக இக்கவிதை ஒலிக்கிறது.

ஒட்டுமொத்தமாக நோக்கும்போது புலம்பெயர் பெண் படைப்பாளிகளின் கவிதைகளிலேயே போர் அனுபவங்கள், பாலியல் விடுதலை, பெண் விடுதலை, புலம்பெயர் நாடுகளில் அனுபவிக்கும் துன்பங்கள், சாதி, திருமண வாழ்க்கை, தாயக ஏக்கம் முதலிய அனுபவங்கள் வெளிப்படுவதனை அவதானிக்க முடிகிறது.

**உசாத்துணை:**
- கிருஷ்ணபிள்ளை விசாகரூபன், புலம்பெயர் கவிதைகள், யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி, யாழ்ப்பாணம், பக் 47-61
- குணேஸ்வரன்.சு., 2009, அலைவும் உலைவும் (புலம்பெயர் படைப்பிலக்கியம் குறித்த பார்வைகள்), தினைப்புனம் வெளியீடு, யாழ்ப்பாணம், பக் 33-39
- WWW.NOOLGAM.COM
- WWW.TAMILVU.ORG



ashwinivaiyanthy@thaiveedu.com



உங்கள் நம்பிக்கையோடு
எங்கள் 18 ஆண்டுகால சேவை...
STANDARD MORTGAGES INC
• Mortgages
• Refinance
• Second Mortgages
• Short Term Secured Loans
SMI
STANDARD
MORTGAGES INC.
Residential & Commercial
சுமையான கடன்களை சுகமான அனுபவமாக்கிட
Raj Subrayam AMP
Director
80 Corporate Drive, Suite # 307 Toronto, Ontario, M1H 3G5
Tel: 416 298 1700
Fax: 416 754 8651
www.standardmortgagesinc.com
raj@smi4loan.com

# மு. தளையசிங்கத்தின் ஒரு தனி வீடு நாவல்

- மு. புஷ்பராஜன்

**ஈழத்து இலக்கியப் பரப்பில் முக்கிய ஆளுமையாகத் தன்னை நிலைநிறுத்திக்கொண்ட மு. தளையசிங்கம் ஏப்ரல் 2, 1973ல் மறைந்தார். அவரது நினைவாக அவரது 'ஒரு தனி வீடு' நாவல் பற்றிய ஒரு பார்வை. இந்நாவல் 1985ல் கோவை பிரசுராலயத்தால் வெளியிடப்பட்டது. பின்னர், என்.கே. மகாலிங்கம் அவர்களின் ஆங்கில மொழிபெயர்ப்பு A Separate Home என்ற பெயரில் New Horizon Mediaவினால் 2009ல் வெளியிடப்பட்டது.**

இளவயதில் நிறைவேறாத காதலின் வெம்மை, அதற்கான வறுமை அவனுள் தீயாய் எரிகையில், அத்தீயின் காங்கையிலிருந்து விடுபட முயன்று, சுய தேடலின் மூலம் கல்வி, அரசியல், உலக அரசியல் ஆகிய அறிதல்களினூடாக தனது ஆழுமையைத் தனித்துவமாகச் செதுக்கிக்கொண்ட ஒருவனின் கதை.

மாமியார் வீடு என்ற முதல் பாகத்துடன் தொடங்கும் இந்நாவல், ஒரு சாதாரணனின் வாழ்வையும் சூழலையும் அவன் ஆவலையும் வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தாலும் நுண்மையான அரசியலின் சரடு அதனூடாக ஓடிக்கொண்டிருக்கிறது. சுருட்டு வியாபாரம், சோற்றுக்கடை எனத் தென்பகுதியோடு தொடர்புபட்டிருந்த வாழ்வு, பல தமிழ் மனங்களுக்கு தொலைவில் தெரியும் 'தூரத்துப் பச்சையாகவே' இருக்கிறது. அது படித்த எழுதுவினைஞர்களுக்கு அரச திணைக்களங்களாக அமைந்தன. பிரச்சினைகள் வரும்வரை எல்லாச் சௌகரியங்களையும் கொண்ட மாமியார் வீட்டு வாழ்வாகவே இருந்தது. இதை அவர்கள் நிரந்தர வாழ்க்கையாகவும் நினைத்துக் கொண்டிருந்தார்கள். உண்மையில் 'வாழ்கிறோம் என்ற நினைப்பில் செத்துக்கொண்டிருந்த சமுதாயம்' அது. அந்த மாமியார் வீட்டு நிலை, வாழ்வின் பொருளாதாரப் போராட்டத்திற்கான ஒரு நிலையே. அந்த நிலை 1956ன் பின்னர் முற்றிலும் வேறொன்றாக மாறியது. அதனால்தான் மாமியார் வீட்டிலிருந்து இரண்டாம் பாகம் 'நம்ம வீடாக' ஆரம்பிக்கின்றது.

சேதாவை இழந்த துயர், சிங்கராசனுக்கு தன் நிலையை மாத்திரம் உணர்த்தவில்லை. அது ஒரு புதிய திசையையும் காட்டியுள்ளது. அவனது பழைய நினைப்பிலிருந்த 'வெளியார் துண்டில்' கடை போடும் எண்ணம் அவனுக்கு இப்போது இல்லை. எதிலும் சுயத்தையே நாடினான். அவனது அறிவு கொம்யூனிஸ்ட் மாஸ்ரர் மூலம் விரிந்தது. அதன்மூலம் 'ஆதிப் பொதுவுடமை, நிலமானியம், முதலாளித்துவம், தொழிலாளர் புரட்சி, வர்க்க வேறுபாடு என ஒரு பரந்த தளத்தில் அவனது அறிவு சஞ்சரிக்கின்றது'. அவனைக் கடந்து செல்பவர்களை இப்போது புதிய ஒளியில் பார்த்தான். அதனால்தான் அவனது சின்னத்தங்கம் மாமியை பூர்சுவா வர்க்கத்துக்குள் இருந்து புரட்சிக்கு வித்திடும் ஒரு குறியீடாகப் பார்க்க முடிந்தது.

இந்த அறிவும் கொம்யூனிஸ்ட் மாஸ்ரரின் உறவும் நல்லதம்பி மாஸ்ரர் வரும் வரைக்கும்தான். அதன் பிறகு, சிங்கராசன் கொம்யூனிஸ்ட் மாஸ்ரர் காட்டிய கொள்கைக்கு மேலாகப் பார்க்கத் தொடங்கினான். அதுவரை அகன்று விரிந்த அவனது அறிவு, இப்போது ஆழம் காணத் தொடங்கியது. அதன் ஒளியில் கொம்யூனிஸ்ட் மாஸ்ரர் 'அன்றாட அரசியலில் விடயங்களில் அபிப்பிராயம் தெரிவிக்க மறுப்பதையும், நியாயமாகப் போராட விரும்பும் விடயங்களில் பின்நிற்பதையும் புரட்சி, புரட்சி எனக் கூறுபவர் யாரோ ஒருவருக்கு அடிமைபோல் பதுங்குவதையும் அவனால் உணர முடிகிறது.

1958ல் ஏற்பட்ட இன ஒடுக்குதல், 'மாங்காயைச் சுற்றியுள்ள இலையான்கள் போல் விழுந்து கிடந்த தீவுகளில்' ஒன்றான புங்குடுதீவிலும் எதிரொலித்தது. 'பாணந்துறையில் இருந்த இந்துக் கோவில் உடைக்கப்பட்டதோடு அங்கிருந்த ஐயருக்கும் மனைவிக்கும் நடந்த சித்திரவதை, கோயிலுக்குள் தஞ்சம் புகுந்தவர்கள் வெளியே எடுத்து உதைக்கப்பட்டு பெற்றோல் ஊற்றிக் கொழுத்தப்பட்டது. 'பாயாகலை'யில் சுருட்டுக் கடையில் நின்ற தமிழ்ப் பையன் ஒருவருக்கு நடந்த குரூரம். அஞ்சி ஒடுங்கி செய்வதறியாது மரத்தில் ஏறி ஒளித்திருந்தவனை கீழே விழுத்தி, கொதிக்கும் தாரை ஊற்றி, 'கலேவரை'யில் கால் வெட்டப்பட்டு, வயிறு கிழிக்கப்பட்டு காட்டிற்குள் குற்றுயிராய் ஊர்ந்த மனித உயிர்கள். அங்கங்கள் சிதைக்கப்பட்டு ஆற்று வெள்ளத்தில் மிதந்த சடலங்கள். தமிழ்ப்பெண்கள் தம் கட்டிய புருஷன் முன்னிலையிலேயே நிர்வாணமாக்கப்பட்டு, மிருகத்தனமாகக் கற்பழிக்கப்பட்ட கதைகள்'(பக்:331-332) இவையெல்லாம் அப்போதய பிரதமர் பண்டார நாயக்க தமிழர்கள் அனுபவிக்கட்டும் என்று ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்த, வேண்டுமென்றே தாமதப்படுத்திய அந்த 24 மணி நேரத்துள் நடந்தவைகளே.

இதையிட்டு சிங்கராசன் கொதித்துக்கொண்டு இருந்தவேளை, ஒரு உலகப் புரட்சி பேசிய தத்துவத்தின் பிரதிநிதியாகிய கொம்யூனிஸ்ட் மாஸ்ரர் இவ்வாறு கேட்டார் 'பாத்தியா நீங்கள் செய்த வேலையை? உங்களால் எத்தனை ஆயிரம் பேர் அநியாயமாக செத்திற்றினம்' அதற்கு சிங்கராசன் இவ்வாறு கூறுகிறான் 'உரிமை கேட்டதுதான் எங்கட குற்றம். அதற்கு அவங்க அடிக்கிறாங்க அதுதான் பெரும்பாண்மை ஆட்சி. அந்த ஒரு காரணம் போதும். அவங்கட தயவில நாங்க இருக்கக்கூடாது என்பதற்கு. இனி நாங்க சமஷ்ரி கேட்கக் கூடாது மாஸ்ரர். இனித் தமிழ் நாடு கேட்பது. அதற்காகப் போராடுவதுதான் தமிழன் செய்ய வேண்டிய வேலை.

சிங்கராசனிடன் இந்தச் சிந்தனையை ஏற்படுத்திய இன ஒடுக்கலினால், தென் இலங்கையிருந்து சேதா விதவையாக ஊர் திரும்புகிறாள். அவளது நிலை அவனை மேலும் துயருற வைக்கின்றது. அவளுக்கு ஆறுதலாய் இருக்க மனம் விழைகிறது. வாடியிருந்த அவன் காதல் செடியில் துளிர் தோன்றியது. இப்போது சிங்கராசனுக்கு சேதாவை அடைய எந்தத் தடையும் இல்லை. பணம் உருவாக்கிய முன்னைய மமதை, விதவை என்ற சமூகக் கருத்துருவாக்கத்தின் முன்னால் அற்பமாகிப் போனது. முன்னர் துள்ளி முறிந்த பொன்னம்பலத்தார்க்கும் இப்போது சொல்ல எதுவும் இல்லை. உண்மையில் சிங்கராசனது கருணைதான் பொன்னம்பலத்தார்க்குத் தேவையாக இருந்தது. ஆனால் சிங்கராசனுக்கு அது கருணை இல்லை. அவனது உரிமை. இன்று சமூகத்தால் அது மதிப்பிழந்திருந்தாலும் அவனுக்கான மகிமை அதுதான்.

பொன்னம்பலத்தார்க்கு சிங்கராசனிடம் சொல்ல எதுவுமில்லா விட்டாலும் சிங்கராசனுக்கு சேதாவிடம் சொல்ல விடயங்கள் இருந்தது. அதைச் சொன்னபோது அவளுக்கு விருப்பம் இருந்த போதும் அவனது போராட்ட உணர்வு அவளுள் அச்சத்தினையே ஏற்படுத்தியது. அவன் அவளைத் தேற்றித் தனது இலட்சியங்களை விளக்கிக் கூறியபோதும் 'அவள் அழுதுகொண்டே இருந்தாள்'. நாவல் முடிவடைகிறது.

மாமியார் வீடு என்ற முதல் பாகம் புதைந்த புங்குடுதீவு மண்ணின் மணத்துடன் அமைதியாக நகர்ந்த நாவல் இரண்டாம் பாகத்தில் அரசியல் கொதிநிலையில் வேகமெடுத்துப் பாய்ந்து செல்கின்றது.

மனம் விரும்பியவர்களை மணந்துகொள்ள முடியாது அதிகாரத்

தின் போக்கிற்கு பலியானவர்களாக சேதா, பரிமளம், ராணிஅக்கா ஆகியோர்கள் உள்ளனர். சிங்கராசன் கூட அந்த வகைதான். அதேவேளை அதிகாரத்தைக் கையில் வைத்திருந்தவர்கள் கூட இன ஒடுக்கலின் முன்னால் ஏதும் இல்லாதவர்களாக ஆகின்றார் கள். பிரதான பாத்திரமான சிங்கராசன் அக்கால மரபின்படி, ஒழுக்கமுள்ள நற்குண சீலனாகப் படைக்கப்படவில்லை. தனது பாலியல் தேவைகளுக்காக ராணி அக்காவைப் பாவித்துக் கொள்கிறான். அதில் அவனுக்கு எந்தச் சங்கடமும் இல்லை. அவ்வாறு பாவித்துக்கொண்ட பின்னர்தான் சேதாவிற்கான ஒரு துணையின் அவசியம் புரிகிறது. அந்த அவசியத்தின் யதார்த் தத்தை, சிங்கராசன் தனது உரிமையாகக் கருதிக் கொண்டாலும், அது உரிமையுமல்ல, கருணையுமல்ல. தமிழ்ச் சமூகத்தில் தனித் திருக்கும் ஒரு பெண்ணின் எதிர்கால நிலையற்றிய அச்ச உணர்வே அதன் யதார்த்தம். இதை தி. ஜானகிராமனின் 'மோக முள்' நாவலில் வரும் பாலுவிற்கும், அவனது நேசிப்பிற்குரிய ஜமுனாவிற்கும் உள்ள உறவிலிலும் நாம் கண்டு கொள்ளலாம். ஜமுனாவை பூசிப்பதற்குரிய புனித உருவாக பாலு கருதிக்கொண் டாலும், அவனது அறைக்கு அடுத்த வீட்டில் குடியிருந்த, வய தான ஆஸ்மாகாரனின் இரண்டாவது மனைவியான இளம் பெண் தங்கம்மாள் பெண் உடல் பூசிப்பதற்கு உரியதல்ல என்பதை உணர்த்தினாள். அவள் 'உறை கழன்ற வீணையாய்' பாலுவுடன் ஓர் இரவில் கரைந்த பின்னர்தான், பாலு, ஜமுனாவிடம் தன் முடி வைத் தெரிவிக்கின்றான். அவனுக்கும் அதே பயம். சிங்கராசனுக் குள்ள பயம். தமிழ் சமுதாயத்திற்குள்ள பயம்.

சிங்கராசனின் பார்வையின் விரிவு அதாவது மார்க்சியத்திற்கும் அப்பால் செல்வது என்பது, அவர் பின்னர் விரிவாக விளக்கிய, தமக்கான தத்துவத்தின் குறுக்கு வெட்டாகவே காணப்படுகிறது. இந்தக் குறுக்கு வெட்டுக் கொள்கை விளக்கத்தில், அரசியல் மணம் தேவைக்கு அதிகமாகவே வீசுகிறது. நல்லசிவம் மாஸ்ரரின் அறிவுரைகள் இவ்வாறு வருகிறது 'உங்கட நிரந்தரப் புரட்சியும் சர்வதேசியமும் இப்ப விழுங்கப்படக்கூடாதவை. ஒருவேளை அவை விழுங்கப்பட்டாலும் அவை தமிழன் வயிற்றில் சீரணிக்க முந்தி தமிழன் சிங்களவன்ர வயித்தில சீரணித்துவிட்டிருப்பான்.' எனத் தொடரும் நீண்ட கொள்கை விளக்கம் (பக்303) உரத்த குர லாகவே எனக்குள் ஒலிக்கிறது. இரண்டாம் பாகம் அவசரகதியில் முடித்து வைக்கப்பட்டதாகவே உணர்கிறேன். முதல் பாகத்திலி ருந்த இளம் பருவத்துக் காதலும் மணலின் காங்கையும் சூழலின் யதார்த்த விரிவும் இரண்டாம் பாகத்தில் இல்லை. விரிவான தளத் தில் இயங்கவேண்டிய இந்த நாவல் அவசரத்தில் குறுக்கப்பட்ட தாகவே உணர்கிறேன். காரணம்தான் என்ன? 'கலைச்செல்வி' இத ழில் நடந்த நாவல் போட்டிக்கு அனுப்பவேண்டிய தேவை காரண மாக இருக்கலாமா? இந்த அவசர குறுக்கத்தை அன்றோ அல் லது பின்னரோ அவர் அறிந்தே இருக்கிறார். அதனால்தான் 'போர்ப்பறை' முன்னுரையில் '... பிரபஞ்ச ஆத்மார்த்த காவியத் தையும் திரும்பவும் எடுத்து எழுதி முடித்துவிடவேண்டுமென்ற ஆவேசம் எழுகிறது. 'நாடும் வீடும்' என்ற பெயரில் பாதி திருத் தப்பட்டுக் கிடக்கும் 'ஒரு தனி வீடும்' தன்னை நினைவூட்டிக் கொள்கிறது. 56க்குப் பின் இலங்கையில் ஏற்பட்ட பிரச்சினை-களை ஓரளவிற்கு யதார்த்த பூர்வமாக விளக்க முயன்ற நாவல் அது என்பதே என் அபிப்பியாயம். ஆனால் அதன் ஆழம் வீடு வரை போவது நல்லது என்று நினைக்கிறேன் என்கிறார்.

1960ல் இந்நாவல் எழுதப்பட்டிருந்த போதிலும், அதற்கு முன்னும், அவருள் சிங்கள மேலாதிக்கத்தின் இன ஒடுக்குதல் பற்றிய உணர்வு இருந்தே உள்ளது. சிங்களம் மட்டும் சட்டம் இயற்றப் பட்ட பின்னணியில் எழுந்த 'தியாகம்' (1957) சுதந்திர தினம் தமிழர்களுக்கு எவ்வளவு அந்நியமானது என்பதை உணர்த்தும் 'பெப்ரவரி-4'ஆகிய சிறுகதைகள் அதை உறுதிப்படுத்துகிறது. இத்தோடு 1965ல் வெளியான புதுயுகம் பிறக்கிறது தொகுதியில் இடம்பெற்ற 'இரத்தம்' சிறுகதையையும் கவனத்தில் கொள்ளலாம். அக்கதை இவ்வாறு தொடங்குகிறது. 'இன்னும் இந்தப்பு... அவங் கடய ஊ... போறாங்கள்' நாகரீகம் கருதி விடுபட்ட சொற்களை இணைத்தால் மு. தளையசிங்கம் எதை முன்வைக்கிறார் என்பது தெரியும்,

அக்காலத்தில் மிகவும் பிரபலமாக அறியப்பட்ட முற்போக்கு எழுத்தாளர்கள் வர்க்க முரண்பாட்டை முன்னிறுத்தி இந்த இன ஒடுக்கலை, ஒரு சாரதாரண இனப் பிரச்சினையாக முன்வைத்தி ருக்கிறார்கள். தமிழ் சமூகத்தினுள் ஆழமாக வேரூன்றியிருந்த



சாதிய ஒடுக்கு முறைக்கு முன்னுரிமை கொடுத்தார்கள். 'மாவிட்ட புரம் ஆலயப் பிரவேசம்,' சாதி ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டக் களமான 'நிச்சாமம்' கிராமத்தின் போராட்டத்தீயை அவர்கள் தங்கள் படைப்புக்களில் கொண்டிருந்தார்கள். அதுவும் அவசியமானதுதான். ஆனால், சாதிய ஒடுக்கு முறைக்கு எதிராக அவர்கள் அதிக கவனம் கொண்டதுபோல் அக்கால இன ஒடுக்கு முறையிலும் அவர்களின் அதிக கவனம் குவிந்திருக்கவேண்டும். எல்லா ஒடுக்குமுறையும் எதிர்க்கப்பட வேண்டியதே. தேசியம் என் பதை அதிகரித்துவரும் இன முரண்பாட்டை பின்னொதுக்கி முழு இலங்கைக்குமான தேசியம் என்று கருதினார்கள். இன ஒடுக்கல் வர்க்கப் போராட்டத்தில் கரைந்து போகும் என அவர்கள் நம்பி னார்கள். அந்த நம்பிக்கையில் இன ஒடுக்கலுக்கு எதிரான கருத் துகளோடு ஒத்துப்போக முடியாதிருந்ததால், அப்போக்கை எதிர்க் கவும் செய்தார்கள். இன முரண்பாடுகளை அவர்கள் நேச முரண் பாடாக கருதினார்கள். மார்க்சியக் கட்சி சார்ந்தவர்கள் மட்டுமல்ல. முற்போக்கு நிலைகொண்ட பலரும் அவ்வாறுதான் கருதினார்கள். ஆனால் அது பகை முரண்பாடு எனக் கண்டுகொள்ளும்போது காலம் அவர்களைக் கடந்துசென்றுவிட்டது.

நாவல் உள்ளடக்கம் சார்ந்து மீள்நினைத்துப் பார்க்கையில சிங் கள மேலாதிக்க அரசுகளின் செயற்பாடுகள் தமிழர்களை எங்கு கொண்டுசென்று நிறுத்தும் என அவர் சரியாகவே கணித்துள்ளார். அதேவேளை எதிர்கால நலனுக்கு நிகழ்காலத்தைப் பலியிடுவது, அரசியல் அதிகார இறுக்கம் ஒரு உள்நாட்டுச் சர்வாதிகாரத்திற்கு வழிவகுக்கும் எனவும் கூறியுள்ளார். இதை அவர் மார்க்சியம் உரு வாக்கிய நடைமுறைகளை மனதுள் வைத்துக் கூறியிருந்தாலும் அது ஆயுதப் போராட்டத்தின் பொதுப் பண்பாகவே இருந்திருக் கிறது என்பதை நமது சொந்த அரசியல் சூழலும், சர்வதேச அரசி யல்களும் நமக்கு உணர்த்துகிறது. மு. தளையசிங்கம் வலியுறுத் திய இந்தத் தனித்த வீட்டுக்கான போராட்டக் கருத்தினை பிற் காலங்களில் அவரால் தொடரமுடியாமல் போய்விட்டது. அதற்கு அவர் வகுத்துக்கொண்ட தத்துவம் பற்றிய தேடல் காரணமாக இருக்கலாம். ஆனால், அக்காலத்தில் அப்படி ஒரு தேவை இருந்ததை அவர் முன்கண்டுகொண்டார். அது முக்கியமானதே. அவரின் பின்வந்த தலைமுறையின் இளைஞர் பலர் தமது சொந்த வாழ்வு அனுபவங்களின் வழியாய் அதே உணர்வை அடைந்தார்கள். அடைந்தது மட்டுமல்ல, அதை நடைமுறையிலும் செயற்படுத்தினர். இன ஒடுக்கலுக்கு எதிரான ஆயுதப் போராட் டம், பின்னர் அதன் செந்தத் தவறுகளாலும் உள்நாட்டுச் சதிகளா லும் பிராந்திய மற்றம் சர்வதேச அரசுகளின் சுயநல வேட்கைக-ளாலும் சிதைந்து போனது. அதைக் காண அவர் இல்லை. அது நம் கண்முன்னால் நிகழ்ந்திருக்கிறது,

மு. தளையசிங்கத்தின் இந்த நாவலின் இறுதி வரி இவ்வாறு வருகிறது. 'ஆனால் சேதா நிறுத்தவில்லை. அழுதுகொண்டே இருந்தாள்' என்பதுதான். இன்றும் அது பொருத்தமானதே. தமிழ் இனம் இன்றுவரையும் அழுதுகொண்டுதான் இருக்கிறது.



pushparajan.m@thaiveedu.com

# மோட்கேஜ்



புதிய, முதல் தரம் வீடு வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், 3ஆம், Bridge, Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்

# MORTGAGE NESAN
**416-908-5656**

## Residential / Commercial / Industrial / Investment Properties

- 1st, 2nd and 3rd Mortgages
- Refinance
- Secured Line of Credit
- New House Commitment, Pre-approval
- Home Equity Loan

### 1st Mortgage ('A' lender) Majaor, Under write Banks

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 659.62 | 1319.25 | 1429.19 | 2858.37 |
| 546,000 | 515.98 | 1031.96 | 1117.96 | 2235.92 |

### 1st Mortgage ('B' lender) Under write Banks, Trust, Cridit Union

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 765.04 | 1530.08 | 1657.59 | 3315.17 |
| 546,000 | 598.44 | 1196.88 | 1296.62 | 2593.24 |

### Private Mortgage ('C' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 1059.81 | 2119.62 | 2296.26 | 4592.52 |

### 2nd Mortgage ('D' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 98,000 | 179.15 | 358.29 | 388.15 | 776.30 |

### 3rd Mortgage ('E' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 49,000 | 113.72 | 227.43 | 246.39 | 492.77 |

### Secure Line of Credit & Loan

| Mortgage Amount | Secure Line of Credit | Home Equity Loan |
|---|---|---|
| 225,000 | 1005.95 / per month | 1276.51 / per month |

MORTGAGE ALLIANCE
Thavanesan Subra
Independently Owned and Operated
Brokerage # 10530

1585 Markham Rd, Unit # 407,
Toronto, ON. M1B 2W1
www. nesan.ca
mortgage@nesan.ca

SUBRA MORTGAGE SOLUTIONS INC.
Office: 1-844-878-2721
Fax: 647-351-3099

# விடுதலைத் திணை அரசியலின் படைப்பியல் நீட்சி

- ந. இரவீந்திரன்

'ஜீவநதி'இன் ஈழத்து நாவலிலக்கியச் சிறப்பிதழுக்கு ஒரு படைப்பாளியின் புதிய மிலேனியத்துக்கான படைப்புகளைப் பேசுபொருளாக்க வேண்டும் என்ற பொழுது எந்தத் தயக்கமுமின்றித் தெரிவுசெய்தாக வேண்டிய படைப்பாளியாக முற்பட்டு நின்றவர் தேவகாந்தன். அவரது படைப்புகளது விரிந்த தளங்களும் அவற்றை வெளிப்படுத்துவதற்கான வீச்சான அவருடைய கருத்தியல் புலமும் கள அனுபவங்களை உள்வாங்கி வடிவப்படுத்திய பாங்கும் எனப் பல காரணங்களால் இந்தத் தெரிவு அவசியப்பட்டது.

அதனை ஒரு கட்டுரைக்குள் அடக்குவது என்பது மிகுந்த சிரமத்துக்கு உரியது. ஒரு தனி நூலுக்கு உரிய களம் அது. விரித்துப் பேச அவசியப்படுகிற விடயப்பொருளுக்கான முன்னுரைக் குறிப்பாக இக்கட்டுரை அமைகிறது. இங்கு கவனங்கொள்ள வேண்டியுள்ள காலப் பரப்புக்கான தேவகாந்தனின் நாவல்கள் (ஜூலை 2019ல் காலச்சுவடு வெளியிட்டுள்ள 'கலாபன்' நாவலில் இடம் பெற்ற ஒழுங்குப் பிரகாரம்): 1. லங்காபுரம், 2. கதாகாலம் (மகாபாரதத்தின் மறுவாசிப்பு), 3. யுத்தத்தின் முதலாம் அதிகாரம், 4. நிலாச் சமுத்திரம், 5. கனவுச்சிறை, 6. கந்தில் பாவை, 7. கலிங்கு, 8. நதிமேல் தனித்தலையும் சிறுபுள். 9. கலாபன். 10. மேகலா கதா.

அனைத்து நாவல்களையும் ஒருமுகமாகப் படிக்கும் வேளையில் புதிய அரசியல் நோக்கு நிலை நின்று பார்க்கவல்ல உள்ளடக்கப் பாங்கு இந்த நாவல்களின் ஊடாக இழையோடி இருப்பதனை உணர இயலுமாயிருந்தது. எமது வாழ்வியலை இலக்கியமயப்படுத்தி இருப்பவை இந்த நாவல்கள். அவற்றின் கலைத்துவத் தாரதம்மியத்தைப் பற்றிப் பேசுவதைவிட்டு அரசியல் நோக்குக்கு ஏன் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்ற கேள்வி எழ இடமுண்டு. பொதுவாக நவீன தமிழிலக்கியங்களை ஆய்வுக்கு உட்படுத்தும் போது வர்க்க அரசியல், அடையாள அரசியல் எனும் வகை மாதிரிகளில் எவை சார்ந்து அவை வடிவம் பெற்றிருக்கின்றன என்பதாகப் பார்க்கும் நிலை நிலவுகிறது. எழுபதாம் ஆண்டுகள் வரை வர்க்க அரசியலும் எண்பதாம் ஆண்டுகளில் இருந்து அடையாள அரசியலும் தீர்மானகர வடிவங்களாக இயக்கம் பெற்றிருப்பது இந்திய அனுபவம். இலங்கையின் நவீன வரலாற்று செல்நெறி இவை இரண்டிலிருந்தும் வேறுபட்டதான திணை அரசியல் ஒழுங்கொன்றில் இயங்கி வந்திருப்பதான விடயம் இன்று பேசுபொருளாகி வருகின்றது.

தேவகாந்தனின் நாவல்கள் திணை அரசியலுக்கு, அதிலும் குறிப்பாக விடுதலைத் திணை அரசியல் நாட்டத்துக்கு எடுத்துக்காட்டாக அமைவன. மேற்கொண்டு தொடர்ந்து உரையாடுவதனூடாக இதனை விளக்கம்கொள்ள முயல்வோம்.

பின்வரும் நான்கு பகுதிகளில் இந்த உரையாடலைக் கட்டமைக்க இயலும்:

1. காலங்கள் தோறும் செயலாற்றும் யுத்த களம்.
2. தொடக்கம் பெற்ற புதிய யுத்தத்தின் முதலாம் அதிகாரம்.
3. நெடுயுத்தத்தின் நிறைவுறாத அத்தியாயங்கள்.
4. விடுதலையை அவாவும் கருத்தியல் தேடல்.

### காலங்கள் தோறும் செயலாற்றும் யுத்த களம்:

திணைக் கோட்பாட்டை தமிழிலக்கிய வரலாற்றுத் தொடக்கம் எடுத்துக் காட்டியிருந்தது. வர்க்க அமைப்புக்கு அப்பாலான ஒரு சமூக முறைமை இயக்கம் கொள்ளத் தொடங்கிய போது தனக்கென உருவாக்கிக் கொண்ட கோட்பாடு அது. ஐரோப்பியச் சமூகம் வர்க்கங்களைக் கொண்டிருந்ததோடு வர்க்கப் போராட்டங்கள் வாயிலாகச் சமூக மாற்றங்களைக் கண்டடைந்து வந்தது என்ற படிப்பறிவை எட்டியவர்கள் அதன் வழி எமக்கான விடுதலை மார்க்கத்தை கண்டடைய இயலுமென நம்பினர். அந்தப் புரிதலுடனேயே எமது சாதிச் சமூக முறையும் அணுகப்பட்டது. இன்னும் அந்த அவலம் நீடித்து வருகிறது. இங்கு எவ்வண்ணம் வர்க்கப் போராட்டம் முன்னதாக நடந்தேறி வந்ததெனத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டும் வரக்காண்கிறோம். இந்தத் தவறைக் களைவதன் பொருட்டு தமிழர் வரலாற்றை மறுவாசிப்புக்கு உள்ளாக்க வேண்டியுள்ளது. தமிழியல் எடுத்துக்காட்டும் மருத திணை மேலாதிக்கம் ஊடாக ஏற்றத்தாழ்வுச் சமூக முறை தோற்றம் பெற்ற வரலாற்றுத் தொடக்கத்தை அரசியல் செல்நெறிக்குரிய பிரத்தியேகத் தன்மையுடன் கவனத்தில் எடுப்பது அவசியமானதாகும். வென்றவர்கள் ஆதிக்க சாதி ஆகியமையும் வென்றடக்கப்பட்டவர்கள் பல படிநிலைகளுக்குரிய சாதிகளாக்கப்பட்டமையும் புதிய அணுகுமுறையுடன் கையாளப்பட வேண்டும்.

வட இந்தியாவில் ஏற்கனவே சாதிகள் தோற்றம் பெற்று அதற்கான கருத்தியலை வடிவமைக்கும் பிராமணர் தனிச் சாதியாக மேலாண்மை பெற்றும் இருந்தனர். இந்தச் சாதிபேதம் எவ்வகையில் தோற்றம் பெற்றது என்பதைக் கண்டறிவதற்கான தெளிவு இன்னமும் எட்டப்படவில்லை. தமிழகத்தில் மூவேந்தர் மேலாண்மை மருத திணையின் மேலாதிக்கத்துக்கான அரசியல் வடிவம். இந்த மேலாண்மையின் சமூக சக்தியாக கிழார்கள் இருந்தனர். வேந்தர்களும் கிழார்களும் வடக்கிலிருந்து வந்த பிராமணர்களுக்கு நிலங்களை வழங்கி அவர்களது சாதியக் கருத்தியலைத் தமிழர் வரலாற்றுக்கானதாக வரித்துக் கொண்டனர். நிலக்கிழார்கள் நிலப்பிரபுத்துவ சக்தியாக வளர்ந்து ஆளும் சாதியான வெள்ளாளர் என ஆனதோடு ஏனைய குடிகள் ஒவ்வொன்றும் சாதி அடையாளம் பெற வைக்கப்பட்டனர். ஆக, திணை மேலாதிக்கம் பெற்று முழுச் சமூக சக்தியாக ஆளவும் சுரண்டவும் ஏற்ற வகையிலான ஆட்சியுரிமையைச் சாத்தியப்படுத்திய வடிவம் சாதி என்ற புரிதலைத் தமிழர் வரலாறு எடுத்துக் காட்டியிருக்கிறது. தொடர் வளர்ச்சிக்குரிய சமூக மாற்றப்போக்கில் முன்னதாக அதிகாரமற்றிருந்த சாதி மேலாண்மை பெறுவதும், ஆதிக்கத்துடன் இருந்த சாதி ஆளப்படும் நிலைக்கு மாறுவதுமான சமூக அமைப்பு மாற்றச் செல்நெறியையும் தமிழக வரலாறே துலக்கமுற எடுத்துக் காட்டி நின்றது.

மூவேந்தர் ஆதிக்கம் பெறுவதற்கு முன்னரே குறிஞ்சி, முல்லை, நெய்தல் ஆகிய திணைகள் மருத திணையை விட ஆளுமை உடையனவாக இருந்துள்ளன. அவை ஏனைய திணைகளை வென்றடக்க முற்படவில்லை என்ற பொழுதிலும் வேளிர்கள் எனும் மன்னர் ஆட்சி முறை அங்கே இருந்துள்ளது. மூவேந்தர் எழுச்

சிக்கு மூன்று நூற்றாண்டுகள் முன்னரிருந்தே இவ்வகை வேளிர் கள் ஆட்சி இருந்துள்ளது. அப்போது பிற திணைகள் ஆக்கிரமிக் கப்படாதது மட்டுமன்றி உள்ளேயும் பெரிதாக சமூக ஏற்றத்தாழ்வு கள் இருந்ததில்லை. பெண்கள் பிற்காலத்துடன் ஒப்பிடப்படும் போது ஆளுமை பெற்றவர்களாக இருந்த போதிலும் வேளிர் ஆட் சிக் காலத்திலேயே ஆண் மேலாதிக்கம் இயல்பானதாக செயலாற் றத் தொடங்கியமையை ஆட்சியாளர்களாக ஆண்களே இருந்தனர் என்பதில் இருந்து அறிந்து கொள்ள இயலும். அந்தவகையில் ஏற்றத் தாழ்வுச் சுரண்டலின் முதல் வடிவம் முழுச் சமூக சக்தி யாக (திணையாக) ஆண்கள் பெண்களை ஒடுக்குதலுக்கு உட்ப டுத்தி ஆளுமைப் பறிப்புக்கு ஆட்படுத்தியதில் ஆரம்பித்துவிடுகி றது என்பது தெளிவாகிறது. இந்த ஒடுக்குதலுக்கு ஏற்ற கருத் தியல் ஆயுதம் அப்போதே கண்டறியப்பட்டுச் செயற்பட தொடங்கிவிட்டது. இது பிராமணியத்துக்கு முந்தியது. இந்த வர லாற்றுத் தொடக்கத்துக்கு உரிய கி.மு. ஆறாம் நூற்றாண்டில் ஆசீவகம் இங்கே இயங்கியது பற்றிய கருத்துகள் முன்வைக்கப் படுகின்றன. அதற்கான முழுமையான ஆதாரங்கள் இல்லாத போதிலும் மூவேந்தருக்கு ஓரிரு நூற்றாண்டுகளுக்கு முன்னரே ஆசீவகமும் பௌத்தமும் சமணமும் தமிழகத்தில் பரவலடையத் தொடங்கிவிட்டதற்கான ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவற்றின் வீச்சளவில் இல்லையெனிலும் பிராமணரது வருகையும் அப்போதிலிருந்து வர ஆரம்பித்திருந்தது. இவையனைத்தும் பெண்ணொடுக்கு முறைக்கு உரிய கருத்தியல்களைப் பரப்புரை செய்யத் தொடங்கிய மதப் பிரிவுகள் அவற்றை உள்ளீர்த்துத் தனக்குரிய வகையில் வளர்த்தெடுக்கிற பண்பு தமிழுக்கு அப் போதிருந்து இயலுமான பண்பு!

முப்பது வருடங்களுக்கு மேலாக யுத்தத்தினுள் வாழும் எமது வாழ்முறையின் பல்வேறு பரிமாணங்களைப் படைப்பாக்கம் செய் தவர் தேவகாந்தன். சாதி ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டம் அறுபதாம் ஆண்டுகளின் நடுக்கூறிலிருந்து ஆயுதப் போராட்ட மாக யாழ்ப்பாணத்தில் பரிணமித்தமையை 'யுத்தத்தின் முதலாம் அதிகாரம்' என்ற நாவலாக வெளிப்படுத்தியவர். ஈழப் போராட் டத்தை 'கனவுச் சிறை', 'கலிங்கு' நாவல்கள் பேசு பொருளாக்கி இருந்தன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக ஒடுக்கப்படு கிற பெண்களின் போராட்ட வடிவங்கள் சாதி, தேசிய இன ஒடுக்குமுறைகளுக்கு எதிரான போராட்டங்களுக்கு எதிரானவை போன்று இருந்தனவல்ல. பெண்ணொடுக்குமுறைக்கு எதிராகத் துலக்கமாக வெளிப்படாத யுத்தங்கள் வெவ்வேறு வடிவங்களில் உள்ளூர இருந்துவந்தன. முந்திய இலக்கியங்கள் பெண்ணொ டுக்குமுறைக்கான கருத்தியல்களை வெளிப்படுத்துவனவாக அமைந்தவை. அவற்றினுள்ளே மறைந்திருந்த பெண்ணின் போராட்ட வீறுகள் ஆங்காங்கே வெளிப்படாமல் இருந்ததில்லை. விடுதலைக் கவியான பாரதி ஆணுக்குப் பெண் சம உரிமை உடையவள் என்று முழங்கியதிலிருந்து பெண் விடுதலைக் குரல் கள் பல வடிவங்களில் வெளிப்பட்டு வரத் தொடங்கிவிட்டன.

இங்கு கவனிப்பைப் பெறும் தேவகாந்தனின் பத்து நாவல்களிலும் ஆணாதிக்கத்துக்கு எதிரான பெண் விடுதலைப் போராட்டக் குரல் கள் ஊடாடியபடியே இருக்கின்றன. பழைய இலக்கியங்களை மறுவாசிப்புச் செய்து நாவல்களாக வழங்கிய போது இரண்டாயி ரம் ஆண்டுகளுக்கு முன்னாக பெண்ணொடுக்கு முறைக்கு எதி ரான போருணர்வுகளையும் எதிர்ப்பு வடிவங்களையும் எடுத்துக் காட்டி வந்துள்ளார். மகாபாரதம் ('கதாகாலம்'), இராமாயணம் ('லங்காபுரம்') போன்ற இதிகாசங்களுடன் தமிழ் பௌத்தக் காப்பி யமான மணிமேகலையும் ('மேகலா கதா') இத்தகையன. 'மேகலா கதா' மணிமேகலையை அடி பிசகாது நாவலாக்கிய முயற்சி. தமிழ் பௌத்தம் ஈழத்தின் மணிபல்லவத்துடன்(நயினாதீவு) கொண் டிருக்கும் ஊடாட்டத்தை நாவலின் மையப் பொருளாக்கி உள் ளார் தேவகாந்தன். காதலுணர்வையும் உடைத்துத் துறவை நாடும் மணிமேகலை ஊடாக குடும்ப பந்தம் ஏற்படுத்தும் ஒடுக்கு முறைக்கு எதிரான கருத்துகளை ஆசிரியர் வெளிப்படுத்தத் தவ றவில்லை. 'மணிமேகலை' எனும் காப்பியத்தில் இடம்பெற்ற கந் தில் பாவை முற்பிறப்பு உரைக்கும் ஒரு தெய்வம். அந்தப் பண்பை உள்வாங்கி கி.பி. 1880 முதல் 2015 வரையான ஒரு குடும்பத்தின் பெண்கள் அடுத்தடுத்த தலைமுறைகள் கடந்தும் மனச்சிதைவு நோய்த் தாக்கத்துக்கு உள்ளாவதில் ஆணாதிக்கச் சமூகமுறைமைக்கான இடத்தைக் காட்டுவார்.

இராமாயணம், மகாபாரதம் என்பன நாட்டார் கதைகளாக மக்களி டையே தொடர்ந்து ஊடாடியபடி இருப்பவை. பல்வேறு ஆசிரி யர்களால் வேறுபட்ட வாசிப்பனுபவங்களுக்கு உரிய வண்ணம் ஏற்கனவே படைப்பாக்கம் செய்யப்பட்டவை. அவற்றை நாவலாக் குவதில் இன்றைய வாசிப்புக்கு உரியவாறு மறுபடைப்பாக்கும் வாய்ப்பை ஆசிரியர் பயன்படுத்திக் கொண்டுள்ளார். கதா காலம் கைவசமாகாத காரணத்தால் அதனைக் குறித்து இங்கு பேச இய லவில்லை. கம்பராமாயணத்திலிருந்து அடிப்படையான பல வில-கலை உடையது 'லங்காபுரம்'. குறிப்பாக, பெண் பாத்திரங்களின் சித்திரிப்பு கவனத்தை ஈர்ப்பன. ஆட்சியியல் சாத்தியப்படத் தொடங்குவதோடு பெண் ஒடுக்குமுறை ஆரம்பிப்பதனையும், அந்த மாற்றத்தை உள்வாங்காத தாயுரிமை வாழ்வியலும், அங் கும் மாற்றம் தலைகாட்டத் தொடங்குவதும் லங்காபுரம் நாவலின் பேசுபொருளாக இருந்தன. ஆயினும் பெண்களது போராட்டக் குணாம்சத்தை மையப்பொருளாக்கும் நாவல் அல்ல அது. எலு மொழி பேசிய இயக்கர் (பின்னர் சிங்கள இனக் குழும உரு வாக்கத்தின் அடிப்படையாக அமைந்த முன்னோடிகள்) தமிழ் மொழி பேசிய நாகர்களுடன் அந்நியோன்யமான வாழ்வைக் கொண்டிருந்த அதேவேளை அதிகார மோதல்களை அவ்வப் போது கொண்டிருந்த நிலையில் பிறநாட்டாருடன் யுத்தம் தொடங் கிய வரலாற்று வளர்ச்சியைப் பிரதான பேசு பொருள் ஆக்கி இருப்பது லங்காபுரம். பெண்ணை (சீதையை) ஒரு பொன்னாபர ணம் போல (உயிர்ப்பற்ற பொருளாக) வல்லாதிக்க மமதை கொண்டிருந்த லங்காபுர வேந்தனான இராவணன் கடத்தியிருந் தான். அதற்கப்பால் பெண் மோகம் கொண்டவனல்ல என்பதோடு இயக்கர் - நாகர் எனும் இனக்குழுமங்களிடையே நல்லுறவு பேணப்பட வேண்டும் எனும் அக்கறை உடையவன் இராவணன். இயக்கர் தலைவனான அவனது மனைவி மந்தாகினி (மண்டோதரி) நாகர் குலத்தவள். அவளையும் நண்பர்களாக உள்ள நாகர்களை யும் அரவணைக்கும் நோக்கில் தான் பிரமாண்டமாக கட்டியெழுப் புகிற தன்னிறையான சிவன் கழுத்தில் நாகர்களது கடவுளான நாகத்தை வளையவிட்டவன் இராவணன். ஆயினும், பெண்ணை வெறும் அலங்கார மணியாக கருதிக் கடத்திய அவனது செய லால் அனுமன் படையுடன் கூட்டமைத்து வந்த வட இந்திய வீர னான இராமனால் லங்காபுரம் நாசமாக்கப்பட இடமேற்படுத்திக் கொண்டான் என்பார் தேவகாந்தன்.

ஆணாதிக்கத்துக்கு எதிரான பெண் விடுதலைப் போர்க் குரலை வெவ்வேறு பரிமாணங்களில் வெளிப்படுத்துவனவாக 'நிலாச் சமுத் திரம்', 'நதிமேல் தனித்தலையும் சிறுபுள்' எனும் நாவல்கள் அமைந்துள்ளன. முதல் நாவல் நவம்பர் 2000ம் ஆண்டில் வெளி வந்தது. அது தமிழக கதைப்புலம் மட்டுமன்றி முற்றாகவே இந்தி யக் கதாமாந்தர்கள் பற்றியது. எண்பதாம் ஆண்டுகளுக்குப் பின் னர் பெண்ணிய வாதம் பேசுபொருளான சூழலில் சுதந்திர வாழ்வை நாடும் பெண் எதிர் நோக்கிய வாழ்வியல் நெருக்கடி அதன் களம். கனடாவில் புலச் சிதறலுக்கு ஆட்பட்டு வாழும் ஈழத் தமிழர் வாழ்க்கைப் போராட்டத்தில் பெண் பெற்றுள்ள சுயா தீனத்தைப் பேசுவது மற்றைய நாவல்.

பாடசாலைக் காலத்தில் மிகுந்த நம்பிக்கையுடன் எதிர்பார்க்கப் பட்ட மாணவி, சிறுமியாக இருந்த பொழுதே தந்தையை இழந்து வசதிகளைப் பறிகொடுத்தவள். அவள் நிலா காலத்தின் சமுத்திர மாக குமுறும் நிலைகளுக்குக் காரணியான வாழ்வியல் நெருக்கடி களைப் பேசுவது முதல் நாவல். தந்தையை இழந்த பின்னர் ஆங்கில மொழி மூலத் தனியார் பாடசாலையில் இருந்து தமிழ் வழிக் கல்வியை அரசாங்கப் பாடசாலையில் பெற நிர்ப்பந்திக்கப் பட்டவள். அறிவாற்றலில் மேலோங்கியிருந்தும், அனைவரது எதிர் பார்ப்பில் மட்டுமன்றி அவளே தான் எண்ணியபடி பெரிதினும் பெரிது கேட்டுச் சாதிப்பேன் என்று கொண்டிருந்த நம்பிக்கைகள் தகர்ந்து சாதாரண வாழ்வுக்குத் தள்ளப்பட்டவள். அவளது ஆளு மையைப் புரிந்துகொள்ளாத, இயல்பாக நல்லவனான கணவனால் குடும்பப் பொறுப்பற்றவள் எனக் காயப்படுத்தப்பட்ட போது குடும்பத்தைத் தகர்த்து வெளியேறியவள். அது விட்டேற்றித்தனம் எனக் கண்டித்த தாயையும் வெறுத்து தனியாக வாழ்ந்து சாதிக்க முனைந்தவள். முடிவில் தாயன்புக்கு ஏங்குபவளாக, தனது தாய் மைப் பொறுப்பை உணர வேண்டியவளாக வாழ்வியல் நிர்ப்பந் திப்பதை ஏற்கும் வகையைப் பேசுவது 'நிலாச் சமுத்திரம்'.

காயப்பட்டிருந்த அந்தப் பெண் ஆனந்தியிடம் அவளது மகள்




அற்புதா மீண்டும் தங்களுடன் வந்திணையும்படி கோரிய பொழுது அவள் பதிலிறுக்கும் இந்த இறுதிப் பக்க வாக்கியங்கள் நாவலைப் புரிந்துகொள்ள வழி வகுக்கும்: 'சொன்னால் விளங்கிக் கொள்வாளா என்று தயங்கினாள் ஆனந்தி. 'சொல்லுங்கள் அம்மா' என்று அற்புதா மறுபடி வற்புறுத்த, சொன்னாள்: 'குடும்பமென்றால் பிரியாமலே இருப்பதுதான் உத்தமம். தனித்தனியாய் வாழத் துவங்கிய பிறகு சுயாதீனமான வாழ்முறையும் கருத்துக்களும் உருவாகி வலுப்பெற்றுவிடுகின்றன. பிரச்சினைகளை ஒதுக்கி, மறந்து வாழத் தீர்மானித்துக் கொண்டால்கூட உடனடியாகவே இணைந்து வாழ்தல் சாத்தியமில்லாமலே இருக்கும். பல தளங்களில் வாழ்க்கையின் பெறுமானங்களை நான் மீறி நடந்திருக்கிறேன். பிரக்ஞையோடுதான் செய்தேன். ஒரு சுயாதீனமான பெண்ணாய் வாழ எனக்கு இந்த மீறல்கள் அவசியமாயிருந்திருக்கின்றன. ஒருவேளை... ஒருவேளைதான்... அந்த மீறல்கள் ஒரு போதாமையின் விளைவல்ல என்று எப்போதாவது எனக்குத் தோன்றுவதாக வைத்துக்கொள்வோம். அப்போது ஒருவகையான குற்றவுணர்வுக்கு நான் ஆட்படவேண்டி நேரலாம். மீண்டும் குடும்பம் குழம்புவதற்குத் தான் வாய்ப்பு அப்போது ஏற்படும்.'

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக ஆணாதிக்கக் கருத்தியல் மேலாதிக்கம் நிலைநிறுத்தப்பட்டு, அடக்க ஒடுக்கமாக குடும்பத்தினுள் கட்டுப்பட்டு இருக்க வேண்டியவள் பெண் என்ற கருத்து வலுப்பட்டிருந்தது. இந்த நிலைப்பாட்டில் பாரதியின் பெண்விடுதலைக் குரல் பலத்த அதிர்வை ஏற்படுத்திவிட்டிருந்தது. பெண் கல்வி பரவலாகி, உத்தியோகப் பதவியும் பெற்ற பின்னரும் பழைய கட்டுப்பெட்டித் தனத்தை எதிர்பார்ப்பது அர்த்தமற்றது. எண்பதாம் ஆண்டுகளுக்குப் பின்னர் திறந்த பொருளாதாரம் சாத்தியப்படத் தொடங்கி அனைத்தையும் கட்டுப்பாடற்ற சுதந்திர வர்த்தகப் பண்டமாக்கும் நுகர்வுப் பண்பாடு வலுப்படத் தொடங்கியபோது பெண்ணியவாதம் மேலோங்கி வந்தது. பெண்விடுதலை என்பதற்கும் அப்பால் கட்டற்ற வாழ்வியலில் பெண்ணுக்கும் சம உரிமை கோரும் நிலை உருவானது. இவற்றை 'நிலாச் சமுத்திரம்' நாவலில் வேறொரு கோணத்தில் பேசுபொருளாக வடித்திருந்த தேவகாந்தன், கனடா வாழ்வியலைப் பேசவேண்டி வந்தபோது பெண்களது சுயாதீனம் இன்னொரு தளப் பரிமாணத்தைப் பெற்றிருந்தது. அதனை 'நதிமேல் தனித்தலையும் புள்ளினம்' எனும் நாவலாக இரண்டு வருடங்களுக்கு முன்னர் வெளிப்படுத்தி உள்ளார்.

இந்தப் பகைப்புலம் அடியந்தமான பல மாற்றங்களை உடையது. கட்டுப்பெட்டித் தனத்துடன் வளர்ந்து வரும் குடும்ப உறவுக்குள் வெளிச் சமூக மாற்றங்களின் அதிர்வுகள் ஏற்படுத்தும் தாக்குறவில் இருந்து கனடாவில் எம்மவர் எதிர் நோக்கிய நெருக்கடி இன்னொரு வகையானது. அங்கே பெண்கள் தனி ஆளுமையுடன் வாழ ஏற்ற சமூக கட்டுமானங்கள் வலுவுடன் உண்டு. ஊரில் போல அங்கும் பெண் அடங்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் இருந்த ஆணுக்குத் தனது மனைவியின் ஆளுமை விளங்கவியலாத நெருக்கடி ஆகிவிடுகிறது. அங்கே தாய்மை பெண்ணின் பலமாக இருக்கிறது. தமிழகத்தில் சுதந்திரம் நாடும் பெண் வீட்டைத்துறந்து போவது போல அங்கே இல்லை. உழைத்துப்போடுவது எனது பொறுப்புப் பிள்ளையை வளர்ப்பது தாய் என்று ஊரில் நினைத்தது போலப் புலப்பெயர்வு வாழ்வில் இல்லை. அங்கு தாய்மை விலங்காகவன்றிப் பெண்ணின் பலமாக இருப்பதை மூன்று குடும்ப உறவுகளூடாக ஒரு ஆண் உணர்வதை ஆசிரியர் எடுத்துக் காட்டுவார். குடும்பத்தை விட்டு வெளியேற்றப்படும் நிலையை ஆண் எதிர்கொள்ள வேண்டிய வகையில் சட்ட ஒழுங்குகள் அமைந்துள்ளன. இங்கிருந்து சிரமப்பட வேண்டாம் ஊருக்குப் போய்விடுங்கள் என்று தாயுடன் உள்ள அவனது மகனே பல வருடங்களுக்குப் பின்னர் சந்திக்கும்போது சொல்ல வேண்டியும் வருகிறது.

பெண்ணுக்கு மட்டுமல்ல ஆணுக்கும் தனித்து வாழ ஏற்ற சமூக கட்டுமானம் ஊரில் இல்லாத நிலையில் கனடாவிலேயே சாத்தியம் என்பதனால் புலப்பெயர்வு வாழ்வை உதறிவிட்டு ஊர் திரும்பாமல் அங்கேயே தொடர்ந்து வாழ வேண்டிய நிர்ப்பந்தம். 'எந்தளவு தனியனானாலும் கனடாவில் அவரால் வாழ்ந்துவிட முடியும். தனியன்களுக்கான வாழிடம்தான் அது. தனியன்களைக் குறிக்கொண்டு அமைந்த அரசும் சட்டங்களும்தான் அங்கே பயில்விலிருக்கின்றன.

'ஆனால் இலங்கை அவ்வாறனதில்லை. அது சமூகங்களால் ஆன நாடு. ஊர்களால் ஆன தேசம். அது ஒழுக்கத்தின் அடிப்படையிலேயே ஒருவரோடு ஊடாட்டம் கொள்கிறது. ஐந்தொழுக்கமாக இல்லாவிட்டாலும் அதன் அக்கறை சமுதாய ஒழுக்கமாகவாவது எப்போதும் இருந்திருக்கிறது. எதுவெதுவெல்லாம் தனியன்களின் இச்சைக்கான வெளிகளாய் இருக்கின்றனவோ, அவையெல்லாம் அங்கே அடைக்கப்பட்டிருக்கின்றன. தனி மனிதர்களால் இசைகேடுகளை அங்கே கண்டுகொள்ளாமல் இருக்கக்கூடும். ஆனால் சமூகம் ஒழுக்கத்தை நிபந்தனையாக்கும். தன்மீது தன் உற்றாரும் நண்பர்களும் சொல்லும் அபவாதத்தில் பாதிக்கப்படாமல் அங்கே வாழ்ந்துவிடமுடியாது. அவரது நடத்தைகளின் பாரம் திரும்பத்திரும்ப அங்கே சுமத்தப்பட்டுக்கொண்டே இருந்துவிடும்'.

காலமும் இடமும் பெண் ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்ட களப் பரிமாணங்களை வெவ்வேறு வகையில் வடிவப்படுத்துவன. ஆணாதிக்கத்தில் இருந்து பெண் விடுபடுதல் அவசியம். அதேவேளை அவளுடன் கூட ஒன்றித்து வாழ்பவனாக ஆண் இருக்கிறான். இந்த தனிச் சொத்துரிமைச் சமூகத்தில் அவனும் பந்திக்கப்பட்டு இருக்கிறான். சாதி, தேசியம், நிறபேதம், வர்க்கம் என்ற வடிவங்களில் ஆண்களும் பெண்களும் ஒரேவகையில் ஒடுக் கப்படவும் சுரண்டப்படவும் வாய்ப்பாகியுள்ள வாழ்முறை. ஒரேப டித்தான இதற்குள்ளேயும் சம நிலையிலுள்ள பெண்ணை இதுவரை இருந்த கருத்தியல் வாய்ப்புடன் ஒடுக்கிச் சுரண்டி வந்தமையை ஆண்கள் விட்டொழிப்பது தமக்கான விடுதலைப்போராட்டத்தை முன்னெடுக்கும் பாதையின் ஈடேற்றத்துக்கு அவசியப்படுகிற ஒரு விவகாரம்!

## தொடக்கம்பெற்ற புதிய யுத்தத்தின் முதலாம் அதிகாரம்:

இன்றைய தலைமுறையினருக்கு முப்பது வருடங்கள் நீடித்த யுத்தம் பற்றித் தெரியும். முன்னதாக அறுபதாம் ஆண்டுகளின் நடுக்கூறில் இருந்து கடைக்கூறு வரை இடம்பெற்ற சாதியத்துக்கு எதிரான போராட்டம் பற்றி அதிகம் தெரிந்திருப்பதில்லை. அதனை நடத்தியிருந்த புரட்சிகரக் கொம்யூனிஸ்ட் கட்சி ('சீன சார்பு' என அறியப்படுவது) தமிழ் மக்களிடையே ஒரு போராட்டத்தை முன்னெடுத்தது மட்டுமன்றி, அகில இலங்கைக் கட்சியாக இயங்கியதில் சிங்கள மக்களிடையே இருந்துகூட மிகப் பெரும் பான்மையான தொழிலாளர்களையும் கணிசமான அளவில் விவசாயிகளையும் புத்திஜீவிகளையும் அணிதிரட்டி இருந்தது. அதன் உறுப்பினராக இருந்து வெளியேற்றப்பட்டவர் ரோஹண விஜயவீர் வடக்கில் முன்னெடுக்கப்பட்ட ஆயுதப் போராட்டம் போலத் தெற்கிலும் முன்னெடுக்கப்பட வேண்டுமென்ற அதிதீவிர நிலைப்பாடு ரோகண விஜயவீரவிடம் இருந்தது. சிங்கள இளைஞர்களை அணி திரட்டி 'மக்கள் விடுதலை முன்னணி' (ஜே.வி.பி.) என்ற அமைப்பை ஏற்படுத்திக் கொண்டார். அந்த அமைப்பு 'ஏப்ரல் கலவரம்' என வரலாற்றுப் பதிவாகியுள்ள போராட்டம் ஒன்றை 1971ல் முன்னெடுத்திருந்தது. இவ்வருடம் ஏப்ரலில் அதன் ஐம்பதாம் ஆண்டு நினைவு கூரப்படும். அப்போது அந்தக் கிளர்ச்சி அடக்கப்பட்ட போதிலும் மீண்டும் 1987-1989 வரையிலான மூன்று வருட உள் நாட்டு யுத்தத்தை அந்த அமைப்பினால் முன்னெடுக்க இயலுமாயிற்று. அதன்போது தலைவர்கள் அனைவரும் அழித்தொழிக்கப்பட்டு போராட்டமும் அடக்கி ஒடுக்கப்பட்டது. புனரமைக்கப்பட்ட அந்த அமைப்பு ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு ஜனநாயகப் பாதையில் இயங்கப்போவதாக கூறிச் செயற்பட்டு வருகிறது.

அறுபதாம் ஆண்டுகளின் சாதியத்துக்கு எதிரான போராட்டம் யாழ் குடாநாட்டின் பல கிராமங்களையும் பேரதிர்வுக்கு உள்ளாக்கி இருந்தது. தென்மராட்சிப் பகுதியை மையமாகக்கொண்டு நாவலாக்கி உள்ளார் தேவகாந்தன். சாதி ஒடுக்குமுறை இரத்தப்பலி எடுப்பதும் அதற்குப் பதிலடியாக ஒடுக்கப்பட்ட மக்கள் ஆயுதமேந்தி வீறுடன் போராடியதும் 'யுத்தத்தின் முதலாம் அதிகாரம்' நாவலின் பாடுபொருள். ஆயுத ரீதியில் பதிலடி கொடுப்பது அவசர முடிவுகளின் பாற்பட்டதாக அமைந்ததில்லை. கட்சி நிலைப்பாடு, கோட்பாட்டு விளக்கம், அமைப்பாக முடிவெடுத்தல் என்பவற்றின் வாயிலாகவே நிறைவாக்கப்படுவதை நாவல் சித்தரிக்கும். பன்றித்தலைச்சி அம்மன் கோவில் போராட்டம் தீர்மானித்த முறைமை சற்றுப் பிசகியதில் திட்டமிட்டதற்கு வேறுபட்ட வகையில் வன்முறைப் பிரயோகம் நேர்ந்ததாகவும் அதன் பின்னரான காவல்படைக் கெடுபிடியுடன் பலரும் தலைமறைவாக வேண்டியேற்பட்டமையும் பேசப்பட்டு, கட்சித் தலைவர்கள் சீனாவுக்கு ஓடித் தப்பிவிட்டார்களெனச் சனம் பேசியதாகவும் நாவல் வளர்ந்து செல்லும். எவ்வாறாயினும் பிரதான பாத்திரம் குடும்ப நிர்ப்பந்தங்களும் நெருக்கிய நிலையில் வன்னிக்கு விவசாயக் காணி நாடிப் பெறுவதற்கு செல்ல வேண்டியவனாகிறான். வன்னி எல்லைப் பிரதேசங்கள் சிங்கள ஆக்கிரமிப்புக்கு உட்படுவதைக் கண்ட போதிலும் தனக்கான காணி ஒன்றை உருவாக்கும் பொருட்டுக் காடழிக்க முயற்சித்த வேளையில் கொல்லப்பட்டு 'காணாமலாக்கப்பட்டான்'. இதனோடு யுத்தத்தின் முதலாம் அதிகாரம் முடிவுபெற்று தொடரும் அடுத்த அதிகாரங்களுக்கான களம் திறக்கப்பட்டு இருக்கும்.

ஆயினும் அந்த முதலாம் அதிகாரம் நெடுயுத்தத்தின் தொடக்க அத்தியாயமல்ல என்பதை ஆசிரியர் வலியுறுத்தத் தவறவில்லை. நெடுயுத்தத்தின் மூல காரணிகளும் தளகர்த்தர்களும் வேறொரு பரிமாணத்துக்கு உரியன. அந்த நூல் 2004ல் முதல் பதிப்பாக வெளிவந்த பொழுது நெடுயுத்தம் உச்ச நிலையில் இருந்தது. 2018 நவம்பரில் 'யுத்தத்தின் முதலாம் அதிகாரம்' நூலின் இரண்டாம் பதிப்பு வெளிவந்த பொழுது நெடுயுத்தமும் முடிந்து, மொத்தத்தில் வன்முறைப் போராட்டங்கள் அனைத்துமே தோல்வியில் முடிந்ததான மனப்பதிவை ஆசிரியர் கொண்டிருந்தார் என்பதனைப் புதிய பதிப்பின் முன்னுரை வாயிலாக அறியக் கிடைக்கிறது. அந்த முன்னுரையில் தேவகாந்தனின் கூற்று இது: 'தோற்றவர் வடுக்களும், வென்றவர் ஆவணங்களும் வரலாறெழுதியலில் மிகச் சிறிதளவு கண்டுகொள்ளப்பட்டாலும், யுத்தத்தின் மூல காரணம் அதில் முற்றாக நிராகரிக்கப்படுகிறது. பலவேளைகளில் நிஜங்கள் திரித்து எழுதப்படுகின்றன. நிலவுகின்ற வரலாறென்பது வென்றவர் பார்வையில் எழுதப்பட்டதென்பது மிகவும் சரியானதே. ஆயினும் வென்றவர் தோற்றவர் பார்வைகளுக்கும் அப்பாலான ஒரு தேடலில் அவை மாற்றீடு செய்யப்பட முடியுமென்பது இன்று நிரூபணமாகியுள்ளது. தோற்றவர் வென்றவர் ஆகிய இரு பகுதியினருமே இதை இலேசுவில் கண்டுகொள்ளப்போவதில்லையென்பது சோர்வு தருகிற விஷயம் தான்'.

சாதியத் தகர்ப்புப் போராட்டம் தோல்வியடைந்தது போன்ற தொனி ஏன் எழுப்பப்படுகிறது? ஆயுதப் போராட்டம் ஒரு நெருக்கடியை ஏற்படுத்தித் தற்காலிகமாக சிதற நேர்ந்ததனாலா? மட்டுவிலின் அந்தப் போராட்டம் நிறைவு பெற்ற ஒன்று. அதன் பின்னர் வெவ்வேறு இடங்களில் ஆயுதப் போராட்டம் தொடர்ந்தது. கோயில்களில் நுழைவதற்கான போராட்ட வேளைகளில் அவை மூடப்பட்டனவே அன்றிப் பின்னர் அனைவருக்குமாகத் திறக்கப்பட்டன. அந்தவகையில் கோயில் நுழைவுக் கோரிக்கை இறுதியில் வென்றெடுக்கப்பட்டதாக வரலாறு அமைந்தது. ஏனைய இடங்களின் தேநீர் கடைப் பிரவேசப் போராட்டங்களும் ஆயுதப் பிரயோகங்களினால் அதற்குரிய இடங்களில் நெருக்கடிகளைச் சந்தித்த பொழுதிலும் அனைத்துச் சமூகப் போராளிகளும் மீண்டெழுந்தனர், மார்க்சியர்களாகத் தொடர்ந்து இயங்கிவரலாயினர். எந்தவொரு வெற்றிபெற்ற போராட்டமும் இதுபோன்ற தற்காலிக நெருக்கடிகளைச் சந்திக்காமலில்லை!

ஒன்றுபட்ட ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்த கொம்யூனிஸ்ட் கட்சி 1972ல் கார்த்திகேசன், வி.ஏ. கந்தசாமி தலைமையில் பிளவடைந்தது. மீண்டும் ஒரு பிளவு 1978ல் கே.ஏ. சுப்பிரமணியம் தலைமையில் சண்முகதாசனை விட்டு நீங்கியவர்கள் இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சி (இடது) என இயங்கினர் இன்றுவரை புதிய ஜனநாயக மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட் கட்சி என இயங்குகின்றனர். தொடர்ந்து ஏற்பட்ட பிளவுகளால் தாம் சிறு குழுவென ஆகிய போதிலும் சண் தலைமையைத் தொடர்ந்து முன்னெடுத்ததாக எம்.ஏ.சி. இக்பால் கூறுவார். அந்தக் குழுவை ஆதரித்த கே.டானியல் சாதியத் தகர்ப்புப் போராட்டத்தை 1974ல் 'பஞ்சமர்' எனும் நாவலில் படைத்தளித்திருந்தார். தொடர்ந்தும் 'பஞ்சமர் நூல் வரிசை' நாவல்களை எழுதினார். டானியல் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத் தலைவர்களில் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அந்த அமைப்பு எந்தத் தேவையின் பொருட்டு உருவானதோ அதனை நிறைவாக்கிய பின்னர் அது செயற்பாட்டைக் கைவிடப்பட்டதாயினும் அதன் வாயிலாகச் சமூக மாற்றத்துக்காக உழைத்த கொம்யூனிஸ்ட்டுகள் தொடர்ந்தும் மார்க்சியத்தைப் பின்பற்றி இயங்குகின்றனர். பிளவடைந்த எந்த அமைப்பிலும் மட்டுவில் தோழர்கள் இணைந்து செயற்படாத போதிலும் அவர்கள் தம்மளவில் மார்க்சிய நேசிப்பைக் கைவிடவில்லை என்று வலியுறுத்திவரக் காணலாம்.

அறுபதாம், எழுபதாம் ஆண்டுகளில் வீறுடன் செயற்பட்ட கொம்யூனிஸ்ட்டுகளால் ஏன் தொடர்ந்து அதேவேகத்துடன் இயங்க இயலவில்லை எனக் கேட்க இயலுமே அல்லாது அனைத்தையும் கைவிட்டுக் காணாமல் போனார்கள் என்று சொல்லிவிட இயலாது. கொம்யூனிஸ்ட் கட்சி உதயமான நாற்பதாம் ஆண்டுகளில் 'சிறுபான்மைத் தமிழர் மகா சபை' தோற்றம் பெற்று சாதியத்துக்கு எதிராகப் போராடியது. அந்த அமைப்பில் இயங்கத் தொடங்கிய கொம்யூனிஸ்ட் கட்சியில் 1964ல் பிளவேற்பட்ட பொழுது ஒரு தரப்பினர் தொடர்ந்து சி.த.ம.ச. செயற்பாட்டில் நீடிக்க, பிளவுபட்ட மற்றத் தரப்பினர் 'தீண்டாமை ஒழிப்பு வெகு ஜன இயக்கத்தில்' முனைப்புக்காட்டி சாதி அமைப்புக்கு எதிராக தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அந்த வேகம் காரணமாகத் தமிழரசுக் கட்சிகூட சில செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியதாயிருந்தது. இவையனைத்தும் சாதியத்தில் பலமான அடியைக் கொடுத்த பின்னர் அந்த அமைப்புகளைத் தோல்வியடைந்தவையாக எப்படிக் கூற இயலும்?

தென்மராட்சிக் கிராமத்தில் துப்பாக்கி வேட்டு முழக்கம் ஒன்றை முதன்முதலாக கேட்டவர்கள் மத்தியில் இந்த உரையாடல் இடம் பெறுவதை நாவல் காட்டியுள்ளது. சாதிபேதம் பாராட்டும் நிலை அருகிவரக் காரணமான அன்றைய சூழலின் அடிப்படைக் காரணியை எடுத்துக்காட்டுவதற்கான அழகான முத்தாய்ப்பு இது:

'இவன் ஒப்புக்கொள்ள மாட்டான். தமிழரசுக் கட்சியினரின் பாத யாத்திரைகளதும் சாதிப் பிரிவினைகளைச் சட்டத்தின் மூலம் எதிர் கொண்டிருந்த அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை செய்த முயற்சிகளதும் விளைவே தமது அந்த வெற்றிகளென்று சாதிப்பான். ஆனால் இரண்டு பேரினதும் எண்ணங்களுக்கு மாறா கவே நிலைமை துரித வளர்ச்சியடைந்து கொண்டிருந்தது. சாதிப் போராட்டத்தில் துவக்குகள் பாவிக்கப்படத் துவங்கிவிட்டிருந்தன. கொலைகள் சில விழுந்தாயிற்று. எங்கோவாய் நடந்துகொண்டி ருந்த சாதிப் போராட்டம் ஊர் எல்லையில் வந்து நின்று உறும ஆரம்பித்திருக்கிறது. இரவு கேட்ட வெடிச்சத்தம் அதன் அடை யாளம்தான். இனி சரசாலை, மந்துவில், கொடிகாமம், கைதடி, அரியாலை ஆகிய பகுதிகளில் கொலைக் களங்கள் தவிர்க்க முடியாதபடி அமையும். வட்டாரம், கிராமம் அதன் மூடுண்ட புவி யமைப்புக் காரணமாய் ஒதுங்கியிருந்தாலும் அதன் பாதிப்பு இப் பவோ பின்னரோ தவிர்க்கப்பட முடியாதது. இவன் ஒதுங்கி வந்து விட்டாலென்ன, பாதிக்கவேபடுவான்'.

## நெடு யுத்தத்தின் நிறைவுறாத அத்தியாயங்கள்:

சாதியப் போராட்டத்தை முகங்கொண்ட மட்டுவில் போராளி வன் னிக் குடியேற்றப் பகுதியில் காணாமல் போனான். அங்கே சிங்க ளக் குடியேற்ற முனைப்பும் இருந்தது. ஆயினும் எழுபதாம் ஆண் டுகளின் கடைக்கூறில் தொடங்கப் பெற்று முப்பது வருடங்க ளுக்கு மேலாக நீடித்த நெடு யுத்தம் பேரினவாத அரசின் நில அபகரிப்புக்கு எதிராகத் தொடக்கம் பெற்ற ஒன்றல்ல. ஜேவிபி இனரின் ஏப்ரல் (1971) கிளர்ச்சியின் பின்னர் ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகள் யுத்த முனைப்புக் கொண்டதன் காரணத்தை ஆராய்ந்த ஆட்சியாளர் தீர்வுக்கான வழியாகத் தரப்படுத்தலை அறிமுகப்படுத்தினர். தரப்படுத்தலால் பல்கலைக்கழக வாய்ப்பை அதிகம் இழந்தது யாழ்ப்பாணச் சமூகம். அதனை எதிர்ப்பதற் கான வழிமுறையாக ஆயுதமேந்திய தமிழ் இளைஞர்களை அரச பயங்கரவாதம் ஒடுக்க முற்பட்டபொழுது வடக்கு - கிழக்கு பூரா வும் பரவிய யுத்தம் முப்பது வருடங்கள் நீடித்தது. 'கனவுச் சிறை' நாவல் 1981ல் இடம்பெற்ற யாழ்ப்பாண நூலகம் அரச படையின ரால் எரிக்கப்பட்டதுடன் தொடக்கம் பெற்றது என்பது கவனிப்புக் குரியது.

அந்த நாவல் 2001 சமாதானப் பேச்சுவார்த்தை தொடங்குவதோடு முற்றுப் பெற்றிருந்தது. யுத்தம் முடிந்த பின்னரான தமிழர் வாழ் வியலை 'கலிங்கு' நாவல் பேசுபொருளாக கொண்டிருந்தது. கால வளர்ச்சி நீடிப்பைக்காட்டியபோதிலும் அதன் தொடர்ச்சியாக புதிய நாவல் இல்லை என்பதை ஆசிரியர் வலியுறுத்துவார். இவ்விரு நாவல்கள் மேலும் காத்திரமாக அமைந்திருக்க இயலும். மக்க ளின் ஏற்பு நிலைக்கு மட்டுப்படுத்தும் சுய தணிக்கை ஆரோக்கிய மான படைப்பியலுக்கு இடந்தராமலாக்கி உள்ளது. இது குறித்து 'ஜீவநதி'யின் 2019 தை மாத (124 வது) இதழில் 'படைப்பூக்கச் சிதைவில் சுயதணிக்கை (தேவகாந்தனின் இரு நாவல்களை முன்னிறுத்தி ஒரு முன்னுரைக் குறிப்பு)' எனும் தலைப்பில் எழுதி யுள்ளேன். அவற்றைத் தவிர்த்து மேற்கொண்டு பேசவேண்டியுள்ள சில விடயங்களை இங்கு பார்க்கலாம்.

பேரினவாத ஒடுக்குமுறைக்கு எதிரான இந்தப் போராட்டம் இத் தனை காலம் நீடித்தது ஏன்? மிகப் பிரமாண்டமான யுத்தகளமாக விரிவு பெற்றது எப்படி? இவ்வளவு வீரியமிக்க படையொன்று மீள எழ முடியாத வகையில் முழுதாக அழிக்கப்பட இயலுமானது எவ் வாறு? இவை அனைத்துக்குமான பதில், இவற்றுக்குப் பின்னால் இந்தியா இருந்தது என்பதுதான். ஆளுமையுடன் இருந்த இலங் கையை அதனது கட்டுப்பாட்டுக்கு ஆட்படுத்தும் பொருட்டுப் போராட்டம் பிரமாண்டமாக வளரப் பின் தளத்தை வழங்கி, இலங்கை கட்டுப்பட இணங்கியபோது சகல வழிகளையும் அடைத்து மேடையை அகற்றிவிட்டதும் போராடும் அணிக்கு கள மாட இயலாத நிலை ஏற்பட்டது.

இன்றும் இனவாத அலை ஓயாமல் பேணப்படுவதற்கு இன்னமும் சிங்களத் தலைமைகளை இந்தியாவால் நம்ப இயலாமல் இருப் பதே காரணம். ஊடக ஊடுருவல் எம்மிடையே இனக்கொந்தளிப் பைக் கொதிநிலையில் பேணியபடி இருப்பதற்கு வகை செய்வ தாக அமைந்துள்ளது. இத்தகைய அடிப்படை அம்சம் நாவல்க ளில் வெளிப்பட்டில்லை என்றபோதிலும் யுத்தகால மக்களின் வாழ்வியலை வேறெந்தப் படைப்புகளை விடவும் தேவகாந்தனின் நாவல்கள் வெளிப்படுத்துவன. பலவிடயங்களை விவாதப் பொரு ளாக்கிய தேவகாந்தனின் படைப்புக் களம் இந்திய மேலாதிக்கத் திணை எமது தீராப்பிரச்சினையின் ஆணிவேர் என்பதையும் விவா தத்துக்கு எடுத்துக்கொண்டிருக்க வேண்டும்.

## விடுதலை அவாவும் கருத்தியல் தேடல்:


மோதலுக்குள் இயங்கும் சமூக சக்திகளின் (திணைகளின்) உள் முரண்பாடுகளைக் கவனத்தில் எடுத்து விடுதலையை நாடுவோர் பரந்த ஐக்கிய முன்னணியைக் கட்டியெழுப்பும் அவசியத்தை வலியுறுத்தும் கருத்தியல் தளம் தேவகாந்தனுடையது. வேறெந்தப் படைப்புகளை விடவும் மக்களை, அவர்களது வாழ்க்கைப் போராட்டத்தை மிக நுட்பத்துடன் அவரால் வெளிப்படுத்த இய லுமானதற்கு இந்தக் கருத்தியல் தளம் உதவியுள்ளது.

எழுபதாம் ஆண்டுகளின் நடுக்கூறில் வாழ்க்கை நெருக்கடி நிர்ப் பந்தித்த காரணத்தால் கப்பல் பணியாளராக நேர்ந்து பத்து வரு டங்களுக்கு மேலாக கடலோடி வாழ்வை மேற்கொண்டவர் தேவ காந்தன். அதன்போதான சிங்கள இளைஞர், பெண்கள் தரப் போடு ஊடாடிய அனுபவங்களை 'கலாபன்' (ஜூலை 2019) நாவ லில் காட்டி இருப்பார். அவரையே போல கடலோடி வாழ்வில் சிங்கள உழைக்கும் மக்களுடன் ஊடாடிய நண்பரை முன்னிறுத்தி அந்த நாவல் படைக்கப்பட்டிருந்தது. இயக்கங்கள் தலையெடுத்த பொழுது ஊருக்குத் திரும்பிய அந்த நண்பன் இயக்கம் ஒன்றால் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டுப் போயிருந்தான்

சாதிப் போராட்டம் என்பதை சாதியவாத அணுகுமுறைக்கு இட மளிக்காமலே எழுதுவது போன்றே தேசிய இன விடுதலைப் போராட்டக்களத்தை இனவாதம் அண்டாமல் அவரால் எழுத இய லுமாயிற்று. டானியலுடைய படைப்புகளில் ஓரிரு அம்சங்களில் சாதிவாதம் தலைகாட்டுவதான விமரிசனங்கள் உள்ளன. ஆயினும் அதைவிடவும் முக்கியத்துவமுடைய அம்சம், சாதியத் தகர்ப்புப் போராட்டத்தின் படைப்பாக்கத்தில் அவர் தொட்ட எல்லையை வேறெவராலும் தொட இயலாதிருக்கிறது. மட்டுவிலை மட்டுமே களமாக்கிக்கொண்டதால் மட்டுமே தீ.ஒ.வெ.இ. போராட்டம் தோல் வியுற்றதாக தேவகாந்தன் கருதுகிறார் என்பதற்கில்லை. டானியல் 'பஞ்சமர்' நாவலில் அனைத்துப் பகுதிகளது போராட்டங்களையும் உள்ளடக்கி இருந்தார். அதைவிட அவரிடம் இருந்த தலித் நிலைப்பாடு போராட்டத்தின் வெற்றிக்குரிய பக்கங்களை வெளிப் படுத்த வழிசமைத்துத் தந்திருந்தது. தலித்தியவாதப் பார்வை தவிர்க்கப்பட வேண்டும், சாதியத் தகர்ப்புக் களத்தை பூரணமாக வெளிப்படுத்த வேண்டுமாயின் தலித் நிலைப்பாடு வந்தமைவது அவசியமாகும். தலித் நிலைப்பாட்டை வரிப்பதற்கு தேவகாந்த னால் இயலாமல் போனாலும் தலித் ஆதரவு நிலையுடன் அந்தப் போராட்டத்தைப் படைப்பாக்கி உள்ளார் எனக் கூற இயலும்.

ஒப்பீட்டு ரீதியில் பெண் விடுதலைக் கருத்தியலுடன் பெண்ணியப் பிரச்சினைகளை அவரால் வெற்றிகரமாக படைப்பாக்க முடிந்துள் ளது. பெண் ஒடுக்குமுறையைப் பெண் உணர்வதைப் போல ஒரு ஆணால் எழுத்தில் கொண்டுவர இயலாது என்பது மெய். ஆயி னும் ஒவ்வொரு ஆணுடனும் தாயாக, சகோதரியாக, மகளாக பெண் ஊடாடியபடி இருக்கும் வாய்ப்புள்ள வகையில் பெண் உணர்வை வெளிப்படுத்துவதில் ஓரளவு வெற்றிபெற இயலும். வேறு தளத்தில் வாழ வைக்கப்பட்ட தலித் மக்களது உணர்வைத் தலித்தல்லாத ஒருவரால் முழுதும் வெளிப்படுத்திவிட இயலாது என்பதனையே புரிதல் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இவை தொடர்பில் மேலும் விரிவாகப் பேச அவசியம் உள்ளது. ஒவ்வொரு நாவலையும் தனித்தனியே எடுத்து ஒவ்வோர் அத்தியா யங்களாக ஆய்வுக்கு உள்ளாக்கும் அவசியம் உள்ளது. தேவ காந்தனின் படைப்புகள் பூரண ஈடுபாட்டுடன் படிக்கப்பட வேண் டும். பல பரிமாணங்களிலான விவாதங்கள் வாயிலாக எமக்கான விடுதலைத் திணை அரசியலுக்கு உரிய கருத்தியலை வெளிப்ப டுத்த முயற்சிப்போம்!




raveendran.n@thaiveedu.com


BUYING OR SELLING
Residential, Commercial, Land & Investment Properties
For Sellers:
Free Market Evaluation Available
Competitive Commission Packages Available
Will pay for Staging & Condition
WIll pay the Professional Photographer
Virtual Tour
Color Brochure
Will do open house until house get sold
Will market your home with social medias
For Buyers:
Will find the home in any area within your budget
Get you the lowest mortgage. rate
SATHY & NITHY
REAL ESTATE TEAM
NITHY
SATHYAKUMAR
Sales Representative
Dir: 416.728.2454
Email: realtornithy@gmail.com
SATHY
SIVASUBRAMANIAM
Broker
Dir: 416.624.5044
Email: realtorsathy@gmail.com
16th Avenue / 9th Line $1,550
FOR LEASE BEDROOMS:2 WASHROOMS:1
Morningside / Finch $1,200
FOR LEASE BEDROOMS:1+1 WASHROOMS:1
Pharmacy Ave/Lawrence Ave $1,600
FOR LEASE BEDROOMS:3 WASHROOMS:1
Victoria Park / Ellesmere $2,000
FOR LEASE BEDROOMS:2 WASHROOMS:1
Rossland/Wilson $599,900
FOR SALE BEDROOMS:3+2 WASHROOMS:2
Crowder Blvd / Leslie St $549,900
FOR SALE BEDROOMS:3+1 WASHROOMS:2
Simcoe/Britannia $509,000
FOR SALE BEDROOMS:4 WASHROOMS:3
Yonge/Front $659,000
FOR SALE BEDROOMS:1+1 WASHROOMS:1
King/Blue Jays $699,000
FOR SALE BEDROOMS:1 WASHROOMS:1
Lawrence Ave E/Orton Park $699,000
FOR SALE BEDROOMS:3+1 WASHROOMS:3
Finch / Victoria Park $759,000
FOR SALE BEDROOMS:3 WASHROOMS:2
Hoover Park/Tenth Line $769,900
FOR SALE BEDROOMS:3+1 WASHROOMS:3
Brock/Hwy 2 $799,000
FOR SALE BEDROOMS:3 WASHROOMS:4
Dufferin/Summeridge $889,000
FOR SALE BEDROOMS:3 WASHROOMS:4
Markham/Sheppard $799,000
FOR SALE BEDROOMS:4+2 WASHROOMS:3
Pharmacy/N.Eglinton $838,000
FOR SALE BEDROOMS:3+2 WASHROOMS:2
RE/MAX
Remax Realtron Realty Inc., Brokerage
Independently Owned And Operated
Bus: 905 470 9800
Web: realtorsathy.com

# எம்.என். சிறீனிவாஸ் (1916-99)

# இந்திய சமூகவியல் மானுடவியல் முன்னோடி

**- க. சண்முகலிங்கம்**




கிராமிய சமூகங்கள் பற்றி ஆய்வு செய்த சமூகவியலாளர் எம்.என். சிறினிவாஸ் இந்திய மானுடவியலின் முன்னோடிகளில் ஒருவராவர். இவர் பங்கேற்பு அவதானம் (Participant Observation) என்னும் கள ஆய்வு முறையை கிராமங்கள் பற்றிய ஆய்வில் அறிமுகம் செய்தார். 1848-49 காலப்பகுதியில் சிறினிவாஸ் மைசூரின் ராம்புர என்ற கிராமத்தில் தங்கியிருந்து கள ஆய்வை நிகழ்த்தினார். இக்கள ஆய்வினால் கிடைத்த தகவல்களையும், அனுபவப் பதிவுகளையும் ஆதாரமாகக் கொண்டு அவர் 'நினைவில் நிற்கும் கிராமம்' (The Remembered Village) என்ற ஆய்வு நூலை எழுதினார். 1976ல் வெளியிடப்பட்ட இந்நூலின் நான்காம் அத்தியாயம் 'விவசாயிகள் உலகம்' என்ற தலைப்பில் அமைந்துள்ளது. அவ்வத்தியாயத்தில் விவசாயக் குடியான்கள் பற்றி சிறினிவாஸ் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

> 'உழவுத் தொழிலுக்கு உதவும் மாடுகள் இல்லாமல் விவசாயம் என்ற தொழிலைச் செய்ய முடியாது. மாடுகள் மட்டுமல்ல பசுக்களும் முக்கியமானவை தாம். இதனைவிட விவசாயி சில பயிர்கள் பற்றிய அடிப்படையான அறிவைப் பெற்றிருக்க வேண்டும். விவசாயிகளுக்கே உரியதான மண்வகைப்பாடு ஒன்று உள்ளது. மண் பற்றிய அவர்களது அறிவியலோடு களைகள், பூச்சிகள், தாவரங்களை அழிக்கும் ஏனைய உயிரினங்கள் பற்றிய அறிவும் அவர்களிற்கு உண்டு (சிறினிவாஸ் 1980 : 131, எளிமைப்படுத்திய தமிழாக்கம்)

இக்கூற்றில் ராம்புர விவசாயிகளின் விலங்கு வேளாண்மையியல், தாவரவியல் அறிவு குறித்து சிறினிவாஸ் எடுத்துரைப்பதைக் காணலாம். உழவு மாடுகள் கிராமிய விவசாயத்தில் பெறும் முக்கியத்துவத்தை அடுத்து அவர் குறிப்பிடுகிறார்.

> 'உழவு மாடுகளை சொந்தமாகக் கொண்டிராத ஒரு விவசாயி கூலிக்காரனாக மட்டுமே இருக்க முடியும். அவன் எசமான் ஒருவனின் வேலைக்காரனாவான், கிராமத்தின் பொருளாதாரக் கட்டமைப்பின் அடித்தளத்தில் அவன் இருக்கிறான். குத்தகைக்குடிகள் என்ற அடுத்த நிலைக்கு அவன் உயர வேண்டுமானால் அவனிடம் ஒரு சோடி எருதுகளும், ஒரு கலப்பையும் இருக்க வேண்டும், திறமையான குத்தகைக் குடியானாக அவன் பல ஆண்டுகள் உழைத்தால் மட்டுமே ஒருதுண்டு நிலத்தைக் கொள்வனவு செய்து பயிர்ச் செய்கை நிலத்தின் உரிமையாளனான குடியான் என்ற அடுத்த படிநிலைக்கு அவனால் உயர முடியும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால் ஒரு சோடி மாடுகள் அற்பபெறுமதி உடைய ஒரு சொத்து ஆயினும் அவற்றை குடியான் உடைமையாக வைத்திருப்பது என்பது பெரியதொரு விடயம். சமூகப்படி நிலையில் அடுத்த நிலைக்கு உயருவதற்கு (Social Mobility) முதற்தேவை இதுவாகும்! (மேலது பக் :131)

'நினைவில் நிற்கும் கிராமம்' நூலில் இருந்து தரப்பட்ட மேற்காட்டிய இரு மேற்கோள்களும் சிறினிவாஸ் அவர்களின் கள ஆய்வுகள் மானிடவியல், இனவரைவியல் விபரிப்புகளில் புகுத்திய புதுமைப் பண்புகளை எடுத்துக்காட்டும் உதாரணங்களாகும். பங்கேற்பு அவதானம் என்னும் ஆய்வு உத்தி, ஆய்வாளரை கிராமத்திற்கு வெளியே நின்று பார்க்கும் ஒருவராக அல்லாது, கிராமத்திற்குள்ளே கிராம மக்களில் ஒருவராக நின்று பார்க்கும் தகுதியை வழங்கியிருப்பதை இங்கே காண்கிறோம். மானிடவியலில் இதனை உள்ளாள் ஒருவரின் பார்வை (Insider's view) என்று கூறுவர்.

## உணர்வு எழுச்சியூட்டும் களஆய்வு அனுபவம்:

'நினைவில் நிற்கும் கிராமம்' நூலிற்கான கள ஆய்வு அனுபவம் எம்.என். சிறினிவாஸ் அவர்கள் ரட்கிளிவ் பிரவுண் (Radcliff Brown) என்ற பிரித்தானிய மானிடவியலாளரின் செயல்வாதம் (Functionalism) என்ற நோக்குமுறையை தழுவியதன் விளைவாகக் கிடைக்கப்பெற்றதாகும். ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் மாணவராக எம்.என். சிறினிவாஸ் இணைந்து கொண்டார். அங்கு ரட்கிளிவ் பிரவுணின் இறுதி அணி மாணவர்களில் ஒருவராக அவர் இருந்தார். ஓர் ஆண்டு கழிந்த பின் 1946ம் ஆண்டு யூலை மாதம் ரட்கிளிவ் பிரவுண் பேராசிரியர் பதவியில் இருந்து ஓய்வு பெற்றார். இந்தியாவில் பல்சாதிகளும் வாழக்கூடிய ஒரு கிராமத்தில் கள

ஆய்வு நிகழ்த்த வேண்டும் என்ற ஆலோசனையை ரட்கிளிப் பிர புண் தமக்கு வழங்கியதாகவும், அவரது ஓய்வுக்குப் பின்னர் பேரா சிரியராகப் பதவியேற்ற இவன்ஸ் - பிரிச்சார்ட் அவர்களும் தமக்கு ஆதரவும் வழிகாட்டுதலும் வழங்கியதாகவும் சிறினிவாஸ் குறிப்பிட் டுள்ளார். ரட்கிளிவ் பிரவுணின் நோக்கு முறையைத் தாம் தழு விக்கொண்டதைப் பற்றி அமரர் கூறியிருப்பது வருமாறு.

> நான் ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் மாணவனாக இருந்த போது ரட்கிளிவ் பிரவுண் வகைச் 'செயல்வாதத்தினை'த் தழுவி ஏற்றுக் கொண்டேன். (இது பின்னர் ஐக்கிய அமெரிக்காவில் அமைப்பியல் செயல்வாதம் எனப் பெயர் பெற்றது). இந்த நோக்குமுறையை நான் ஏற்றுக் கொண்டதால் எனது கள ஆய்வில் ஏற்படப்போகும் மாற்றம் குறித்து நான் சிந்தித்தேன். நிகழ்வுகளையும் நிறுவனங்களையும் நான் நேரடியாகவே அவதானிப்பேன் பரிசீலனை செய்யப் போகிறேன் அவ்விரு கூறுகளினதும் சிக்கலான இடைத்தொடர்புகளையும் நான் ஆரா யப் போகிறேன் என்ற எண்ணங்கள் என் மனதில் பெரும் உணர்வெழுச்சியை ஏற்படுத்தின!

பெரும் உணர்வெழுச்சியை எம்.என். சிறீனிவாஸ் மனதில் ஏற்படுத் திய இம்மானிடவியல் சிந்தனை பற்றி அடுத்து நோக்குவோம்.

## ரட்கிளிவ் பிரவுணின் செயல்வாதம்:

பிரித்தானியாவில் ரட்கிளிவ் பிரவுண், புறொன்சிலோவ் மலினோ வெஸ்கி ஆகிய இரு மானிடவியலாளர்கள் செயல்வாதம் என்ற மானிடவியல் கோட்பாட்டிற்கு வடிவம் கொடுத்த முன்னோடிக ளாவர். ரட்கிளிவ் பிரவுண் ஆபிரிக்காவிலும், அந்தமான் தீவுகளி லும் கள ஆய்வை மேற்கொண்டார். இவரது ஆய்வுகள் சிற்றள வுச் சமூகங்கள் பற்றியனவாக இருந்தன. இவர் தாம் ஆய்வு செய்த சமூகங்களின் அமைப்பியல் கட்டமைப்பை (Structure) ஆராய்ந்தார். சமூகக் கட்டமைப்பில் சமூக, அரசியல், சமய நிறுவனங்களின் வகிபாகம் (Role) பற்றிக் கருத்துச் செலுத்திய ரட்கிளிவ் பிரவுண் ஒவ்வொரு நிறுவனமும் சமூகத்தின் ஐக்கியப் பட்ட செயற்பாட்டிற்கு உதவும் பணியைச் செய்வதை எடுத்துக் காட்டினார். இதனை அவர் செயல்வகிபாகம் (Functional Role) எனக் குறிப்பிட்டார். சமயம், அரசியல், குடும்பம் போன்ற வெவ் வேறு நிறுவனங்கள் சமூகம் ஒன்றுபட்ட அலகாக இயங்குவதற்கு உதவுவதை எடுத்துக் காட்டினார். இவ்வாறான சமூக ஒற்று மையை (Solidarity) சமயச் சடங்குகள் ஏற்படுத்துகின்றன. சமயம் சமூகத்தின் உறுதிநிலையை, (Stability) குழு ஒற்றுமை மூலம் ஏற்படுத்துகிறது எனக்கூறினார். அமைப்பியல் செயல்வாத மானிட வியலின் முக்கியமான எண்ணக்கருக்களான 1. அமைப்பு 2. செயல் 3. ஒற்றுமை 4. செயல்வகிபாகம் 5. உறுதிநிலை ஆகியன அவரது கோட்பாட்டை விளங்கிக் கொள்வதற்கு அவசியமானவை.

சமஸ்கிருதமயமாதல், மேற்குமயமாதல் ஆகிய சிறினிவாஸின் கோட்பாடுகள் செயல்வாத நோக்கு முறையின் செல்வாக்கினால் எழுந்தவை. பிரித்தானிய மானிடவியலாளர்களின் செயல்வாதம் வளர்ச்சியுற்ற சமகாலத்தில் ஐக்கிய அமெரிக்காவில் செயல்வாதம் தனித்துவமாக வளர்ச்சியுற்றது. இது பின்னர் ரல்கொட் பார்சன்ஸ் என்பவரால் அமைப்பியல் செயல்வாதம் (Structural Functionalism) என்று பெயரிடப்பட்டது.

## விஞ்ஞானமுறை (Scientific Method):

அமைப்பியல் செயல்வாதத்தைத் தழுவியதன் மூலம், எம்.என்.சிறி னிவாஸ் சமூகவியல், மானிடவியல் ஆய்வுகளில் விஞ்ஞான முறையை புகுத்தினார் என்பது முக்கியமானது. அமைப்பியல் செயல்வாதம் சமூகத்தின் அமைப்பு, செயல்கள், செயலிகள் (Actors) ஆகியவற்றைப் பற்றி ஆய்வாளரின் கவனத்தைத் திருப்பு கிறது. இவை புறநிலையானவை. புறநிலையான இவ்விடயங்கள் பற்றிய தரவுகள் களஆய்வு மூலம் திரட்டப்படுகின்றன. கள ஆய் வின் போது ஆய்வாளர் பயன்படுத்தும் ஆய்வு உத்திகள் அவரது ஆய்வுக்கு புறநிலைத்தன்மை (Objectivity) என்ற பண்பைத் தரு வனவாக உள்ளன.

சமூகத்தில் ஆண்களும் பெண்களும் அன்றாடம் என்ன நடவடிக் கைகளை மேற்கொள்கிறார்கள் என்பதை அறியவிரும்பும் மானிட வியலாளர் நேரஒதுக்கீட்டுப் பகுப்பாய்வு (Time Allocation Study) என்னும் உத்தியைக்கையாள்வர். ஒருவர் வேலை, ஓய்வு, பொழு துபோக்கு, சமயச் சடங்குகள் எனப் பல்வேறு விடயங்களில் ஒரு நாளின் நேரத்தை எவ்வாறு செலவு செய்கிறார் என்பதை கிரம மாக பதிவுசெய்து வருவதன் மூலம் தெரிந்தெடுக்கப்பட்ட மாதிரிக் குடும்பங்களின் ஆண்களினதும், பெண்களினதும் நேர ஒதுக்கீடு பற்றிய தகவல்கள் கிடைக்கின்றன. இந்தியாவிலும், இலங்கையி லும் கிராமிய சமூகங்களில் நடத்தப்பட்ட ஆய்வுகளின் போது நேர ஒதுக்கீட்டுப் பகுப்பாய்வு உத்தி மூலம் கிடைத்த தகவல்கள் 'பெண்மை' பற்றிக் கட்டமைக்கப்படும் கருத்தியல்களை உடைப்ப னவாக அமைந்தன. விவசாயச் சமூகங்களின் பெண்கள் விவசாய வேலைகளோடு உணவு சமைத்தல், பிள்ளைகளை வளர்த்தல் வீட்டைப் பராமரித்தல், முதியவர்களைப் பராமரித்தல் போன்ற வேலைகளில் நாளாந்தம் ஓய்வின்றி உழைக்கிறார்கள் என்ற உண்மையை இவ்வாய்வுகள் வெளிப்படுத்தின. ஆண், பெண் பற்றிய பிம்பங்கள் இவ்வறான ஆய்வுகளால் உடைக்கப்பட்டன. புத்தக நோக்கில் இருந்து கள ஆய்வுக்கு மானிடவியலாளர்கள் திரும்பும் போது அவர்களால் யதார்த்த நிலைகளைச் சரியாக அறிந்து கொள்ளமுடிகிறது என்பதற்கு ஒரு உதாரணமாக நேர ஒதுக்கீட்டுப் பகுப்பாய்வு பற்றிக் குறிப்பிட்டோம். அமைப்பியல் செயல்வாதம் விஞ்ஞான முறைக்கு முதன்மை அளிப்பது என்பது கவனிப்புக்கு உரியது. 1952ல் எம்.என். சிறினிவாஸ் அவர்கள் எழுதி வெளியிட்ட கூர்க் மக்கள் (கோதவர்) பற்றிய ஆய்வும், 1976ல் அவர் வெளியிட்ட 'நினைவில் நிற்கும் கிராமம்' என்னும் தலைப்பிலான ராம்புர என்ற கிராமம் பற்றிய ஆய்வும் சிறந்த ஆய்வுகளாகப் போற்றப்படுவதன் காரணம் அவ்வாய்வுகளில் வெளிப்பட்ட புறவயத் தன்மையும், விஞ்ஞான நோக்கும் ஆகும்.

## எம்.என். சிறினிவாஸ் பற்றிய விமர்சனம்:

சிறினிவாஸ் அவர்களின் சமஸ்கிருதமயமாதல், மேற்குமயமாதல் ஆகிய எண்ணக்கருக்கள் அவருக்கு புகழைத் தேடித்தந்தன என் பதைக் குறிப்பிடும் பி.கே. நக்லா, இவை 'இந்திய சமூகத்திற்குப் பயனுடையனவா' என்ற கேள்வியை எழுப்புகிறார்.

> 'இந்தியா ஜனநாயகம், மதச்சார்பின்மை ஆகியவற்றை ஏற்றுக் கொண்டு முதலாளித்துவ சோஷலிச பாதையில் பயணிக்கும் தேசமாகும். இந்தியாவின் அடித்தட்டு மக்களுக்கு 'சமஸ்கிரு-தமயமாதல்' எதனை இலட்சியமாகக் காட்ட முனைகிறது? பழங் குடிகள் இந்துக்களாக மாறலாம் (இந்துத்துவ சக்திகளும் இத னையே விரும்புகின்றன), பழங்குடிகளுக்குக் கிடைக்கும் இந்து அடையாளம் எத்தகையதாக இருக்கும்? சாதிப் படிநிலைகள் ஊடாக அவர்கள் உயர்ந்து செல்ல முடியுமா? எமது சமூகவி யலாளர்களில் ஒரு பிரிவினரான என்.கே. போஸ், ஜி.எஸ். குர்யே, எம்.என். சிறினிவாஸ் போன்றோர் இந்துத்துவாவின் பாதுகாவலர்களாக ஆகியுள்ளனர். அவர்கள் போற்றும் நாகரி கம் இந்து நாகரிகம் ஆகும். அவர்கள் எழுதும் வரலாறு பண் டிதத் தனமானது (B.K. Nagla 2008.05)

சுதந்திரத்தின் பின்னர் இந்தியா ஐந்தாண்டு வளர்ச்சித் திட்டங் களை நடைமுறைப்படுத்தியது. பொருளாதார வளர்ச்சி குறித்த பிரச்சினைகளை ஆராய்வதில் எம்.என். சிறினிவாஸ் போன்ற இந் திய சமூகவியலாளர்கள் கவனம் செலுத்தவில்லை எனவும் பி.கே. நக்லா குறிப்பிடுகிறார்.

> 'சமூகவியலாளர்கள் (இந்தியாவின்) வளர்ச்சிச் செயல்முறை பற்றி மௌனம் காத்தனர். ஆயினும் அவர்கள் கிராமங்கள் பற் றிய ஆய்வுகளை வெளியிட்டனர், உண்மையில் அவை ஏரா ளம் வெளிவந்தன. இக்கிராமிய ஆய்வுகளின் பங்களிப்பு எனக் கூறக்கூடிய விடயங்கள் உள்ளன என்பதும் உண்மையே. ஆனால் இவை முன்வைக்கும் கோட்பாடுகளான 'மேலாதிக்கச் சாதி' 'சமஸ்கருதமயமாதல்', 'வட்டாரமயமாதல்', 'சர்வமயமாதல்' என்பன (முன்னேற்றத்திற்கு) தூண்டுதல் தரும் உள்ளடக்கம் இல்லாதவை. கிராமங்களின் அபிவிருத்தி நோக்கிய பயணத் திற்கு எவ்வகையிலும் உதவாத கற்பனாவாதம் இவற்றில் வெளிப்படுகிறது (மேலது பக் 27. இலகுபடுத்திய தமிழாக்கம்)

எம்.என். சிறினிவாஸ் அவர்களின் பலம், பலவீனம் என்ற இரண் டையும் பற்றி விமர்சன நோக்கில் குறிப்புரைக்கும் பி.கே. நக்லா அவரின் சிந்தனைகளைப் புரிந்து கொள்வதற்கான வரைசட்டம் ஒன்றினைத் தமது நூலில் தந்துள்ளார். அதனைக் கீழே தந்துள் ளோம்.

### சிறினிவாஸ் - சுருக்கமான வரைசட்டம்: (Srinivas Framework Summarised)

**பின்னணி:**

- சமூகவியல் துறையில் கல்வியும் பயிற்சியும்.
- பம்பாய் (மும்பை), பரோடா, டெல்கி, பங்களூர், ஒக்ஸ்போர்ட் ஆகிய இடங்களின் பல்கலைக் கழகங்களிலும் ஆய்வு நிறுவனங்களிலும் புலமைத்துறைப் பணி.
- கிராமிய சமூக வாழ்வைப் புரிந்துகொள்ளவேண்டும் என்ற ஆர்வம்.

**நோக்கம்:**

- கிராமியப் பின்புலத்தில் சாதிமுறைமையின் இயங்கியலை விளக்குதல்.

**அனுமானங்கள் (Assumptions):**

- கட்டமைப்பும் மாற்றமும்.
- நுண்நிலை மானிடவியலின் பார்வை வீச்சுக்களை, சமூகவியல் பொதுமைப்படுத்தல்களுடன் (Generalisations) இணைத்தல்.
- இந்திய மக்களின் வாழ்வியலையும் பண்பாட்டையும் மேற்கு நாட்டினர் எழுதிய பாடநூல்கள் மூலமாகப் பார்த்தல் அல்லது இந்தியாவின் புனித நூல்கள் ஊடாகப் பார்த்தல் என்ற இருவழிகளையும் புறந்தள்ளிவிட்டு, நேரடி அவதானிப்பு, கள ஆய்வு கள அனுபவம் என்பன மூலம் அறிந்து கொள்ளுதல்.

**நோக்குமுறை:**

- அமைப்பியல் செயல்வாதம்.
- பருநிலை - நுண்நிலை நோக்கு.

**முறையியல்:**

- சிற்றளவுச் சமூகங்கள் பற்றிய மானிடவியல் ஆய்வுகள்.
- சமூக இயக்கத்தின் செயல் ஒருமை (Functional Unity).
- கள ஆய்வு.
- விவரணமுறை ஆய்வு.

**வகைமாதிரிகள் (Typology):**

- மேலாதிக்கச் சாதி.
- பிராமணமயமாதல்.
- சமஸ்கிருதமயமாதல்.
- மேற்குமயமாதல்.
- மதச்சார்பில் இருந்து விடுபடுதல் (Secularisation).

**ஆய்வுப் பிரச்சனைகள்:**

- இந்திய சமூகமும் பண்பாடும்.
- சமயமும் சமூகமும்.
- கிராமங்களை ஆய்வு செய்தல்.
- சாதிகளுக்கிடையிலான இடையுறவுகள்.
- சமூக மாற்றம்.

**உசாத்துணை:**


- Nagla. B.K. Indian Sociological Thought, Rawat Publications, Jaipur, India (2008)
- Srinivas.M.N. The Remembered Village, University of California Press Berkeley, (1980 - Paper Back Ed.)


- நக்லாவின் நூலின் அத்தியாயம் 7 சிறினிவாஸ் சிந்தனைகள் பற்றியது.
- சிறினிவாஸின் 'இந்துத்துவ' உள்ளடக்கம் விமர்சன நோக்கில் பார்க்கப்பட வேண்டியது. ஆனால் அவரின் முறையியல் ஒதுக்கக் கூடியதன்று என்பதே நக்லாவின் கட்டுரை தெரிவிக்கும் செய்தி.
- 'நினைவில் நிற்கும் கிராமம்' சிறினிவாஸின் முறையியலின் உச்சபட்ச அறுவடைகளில் ஒன்று.




shanmugalingam@thaiveedu.com





# யாழ்ப்பாணத்தில் தமிழ் நிகழ்ச்சிகள் ஒளிப்பதிவு




ஜூலைக் கலவரத்தைத் தொடர்ந்து ஓகஸ்ட் மாதம் 11ம் திகதி காலை காங்கேசன்துறைக்குச் சென்று எனது பெற்றோர் சகோதரிகளோடு சந்தோஷமாகத் தங்கியிருந்தோம். ரூபவாஹினி, ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றில் பணியாற்றிய பெரும்பாலான தமிழர்கள் யாழ்ப்பாணம் வந்துவிட்டனர். ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பகுதிநேர அறிவிப்பாளராகவும் பகுதிநேர நிகழ்ச்சித் தயாரிப்பு உதவியாளராகவும் பணியாற்றிக்கொண்டிருந்த பாலசிங்கம் பிரபாகரன் எனது வீட்டிற்கு ஓகஸ்ட் மாத முடிவில் வந்தார். கொழும்பிலேயே சிறுவயதிலிருந்து வாழ்ந்த அவர் கலவரத்தைத் தொடர்ந்து பெற்றோருடன் இடம்பெயர்ந்து அவரது தந்தையின் ஊராகிய பண்டத்தரிப்பில் தங்கியிருந்தார். அவரை ரூபவாஹினியில் நிகழ்ச்சித் தயாரிப்பு உதவியாளராகச் சேர்த்துக் கொள்வதற்கு முயற்சிகள் மேற்கொண்டிருந்தோம். அவருக்கு நியமனம் வழங்கப்படப்போகிறதென்று நாம் எதிர்பார்த்துக்கொண்டிருந்த நேரத்தில் கலவரம் ஏற்பட்டுவிட்டது.

எமது வீட்டுக்கு வந்த பிரபாகரன் அதுபற்றிய தனது கரிசனையை என்னிடம் வெளிப்படுத்தியிருந்தார். நான் அடுத்தநாள் நடேஸ்வரா கல்லூரிக்குச் சென்று அங்கு இயங்கிக்கொண்டிருந்த கப்பலில் அகதிகளாக வருபவர்களுக்கான இடைத்தங்கல் முகாமுக்கென ஏற்படுத்தப்பட்டிருந்த தொலைபேசி இணைப்பினூடாக ரூபவாஹினிக்குத் தொடர்புகொண்டு தலைவர் எம்.ஜே. பெரேரா அவர்களுடன் பேசினேன். முதலில் எமது நலன்பற்றி விசாரித்த அவர் திருமதி. ஞானம் இரத்தினம் அவர்கள் பற்றியும் விசாரித்தார். ஞானம் இரத்தினம் அவர்கள் இடம்பெயர்ந்து அவரது சொந்த ஊராகிய இணுவிலில் தங்கியிருந்தார். எல்லோருடைய நலனையும் கேட்டறிந்த அவர், ‘இப்போது நாடு அமைதியாகிவிட்டது, நிலமைகள் வழமைக்குத் திரும்பிக்கொண்டிருக்கின்றன, நீங்கள் விரும்பினால் பணிக்குத் திரும்பலாம்’ என்றார். அப்போது அவரிடம் பாலசிங்கம் பிரபாகரனது பணி நியமனம்பற்றிக் கேட்டேன். ரூபவாஹினியில் நிலமை வழமைக்குத் திரும்பியதும் அதைச் செய்யலாம் என்றார். நான் வேலைக்குத் திரும்புவது பற்றிக் குடும்பத்தினருடன் பேசி முடிவெடுப்பதாகத் தெரிவித்துக் கலவர நாட்களில் அவர் செய்த உதவிகளுக்கு நன்றிகூறி தொலைபேசி உரையாடலை முடித்துக்கொண்டேன்.

செப்ரெம்பர்மாத நடுப்பகுதியில் பலர் கொழும்புக்குப் போகத் தொடங்கியிருந்தனர். நானும் சென்றேன். ஆனால் நான் ரூபவாஹினிக்குச் செல்லவில்லை. எமது வீடிருந்த ஈ.எஸ். ஃபர்னாண்டோ மாவத்தைக்கு எதிரேயுள்ள இராஜசிங்க றோட்டில் எனது பால்ய கால நண்பர் லிங்கவேலாயுதம் ஒரு தமிழரது வீட்டில் அனெக்ஸில் குடும்பத்துடன் வசித்துவந்தார். அவர் றெயில்வேத் திணைக்களத்தில் பணிபுரிந்தார். எனக்குத் திருமணமாவதற்கு முன்னர் நானும் அந்த வீட்டில் ஓர் அறையில் வசித்தேன். இப்போது அவரது குடும்பமும் காங்கேசன்துறைக்குச் சென்றுவிட்டதால் அவருடன் நானும் சேர்ந்து ஒரு லொறியை வாடகைக்கு அமர்த்தி, எமது இரண்டு வீடுகளிலுமிருந்த அலுமாரி, மேசை போன்ற பெரிய வீட்டுத் தளபாடங்களை அதில் ஏற்றி ஊருக்கு அனுப்பினோம். நிலமை எப்படி இருக்குமென்று தெரியாத நிலையில் இனிமேல் திரும்ப நாம் கொழும்புக்கு வந்தாலும் மிகக் குறைவான பொருட்களுடனேயே தங்கியிருப்பதென்று திட்டமிட்டோம். வீட்டுத் தளபாடங்களை ஊருக்கு அனுப்பிவிட்டு நானும் ஊருக்குத் திரும்பிவிட்டேன். பின்னர் செப்ரெம்பர் மாதப் பிற்பகுதியில் மனைவியையும் குழந்தையையும் ஊரில் விட்டுவிட்டு நான் மட்டும் கொழும்பு திரும்பி ரூபவாஹினிக்குச் செல்லத் தொடங்கினேன். ரூபவாஹினியில் பணிபுரிந்த சிங்கள ஊழியர்கள் அனைவரும் மிகஅக்கறையுடன் நலன் விசாரித்து அன்பாக நடந்துகொண்டார்கள். சிலர் நடந்தவற்றையிட்டுத் தாம் மிகுந்த மனவருத்தமும் அவமானமுமடைந்ததாகச் சொன்னார்கள். எனக்கு இரண்டு நாட்களிலேயே அனைத்தும் வழமைக்குத் திரும்பியது போன்ற உணர்வேற்பட்டது. சில்வெஸ்டர் பாலசுப்ரமணியம் செய்தி நிகழ்ச்சியைத் தயாரித்துக் கொண்டிருந்தார். அவர் கலவரத்தால் இடம்பெயரவில்லை. கலவர நாட்களில் ரஷீட் எம். ஹஃபீல், ஆயிஷா ஜுனைதீன், கமலா தம்பிராஜா ஆகியோர் மட்டுமே செய்திகளை வாசித்துக் கொண்டிருந்தார்கள். விஸ்வநாதன், நான் மற்றும் அனைவரும் மீண்டும் செய்தி வாசிக்கத் தொடங்கியதும் நிலமை சீரடைந்து நாடு வழமைக்குத் திரும்பிக்கொண்டிருக்கிறதென்ற மனநிலை அனைவரிடமும் தோன்ற ஆரம்பித்தது. பின்னர் படிப்படியாக எல்லோரும் திரும்பிவர ரூபவாஹனியும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும் இயல்புநிலைக்குத் திரும்பின. வீட்டில் மட்டும் எனக்கு இயல்பு நிலை ஏற்படவில்லை. மனைவியும் குழந்தையும் காங்கேசன்துறையிலேயே தங்கியிருந்தனர். நான் மட்டும் கொழும்பிலிருந்தேன்.

ரூபவாஹினியில் அனைத்துத் தமிழ் உத்தியோகத்தர்களும் திரும்பப் பணியாற்றத் தொடங்கிவிட்டாலும் நிகழ்ச்சிகளெதனையும் தயாரிக்க முடியவில்லை. வானொலியில் இசைத்தட்டுகளை வைத்துக்கொண்டே ஒரு நாளில் எத்தனை மணித்தியால ஒலிபரப்பென்றாலும் எத்தனை நாட்களுக்கென்றாலும் செய்துகொண்டிருந்துவிடலாம். தொலைக்காட்சியில் அவ்வாறு செய்யமுடியாது. முழுக்க முழுக்கப் புதிதாகத் தயாரிக்கவேண்டும். தொலைக்காட்சியில் தயாரிக்கப்படும் நிகழ்ச்சிகளுக்கு மறுஒளிபரப்புப் பெறுமானம் (repeat value) மிகக் குறைவானது. ஒரு திரைப்படப்பாடலை வானொலியில் பலதடவைகள் ஒலிபரப்பலாம். ஆனால் அதேபாடலைக் காட்சிவடிவத்தில் திரும்பத்திரும்ப ஒளிபரப்பமுடியாது. பார்வையாளர்களுக்குச் சலிப்பை ஏற்படுத்திவிடும். ஒருவர் ஐந்து நிமிடம்பேசும் நிகழ்ச்சியை வானொலியில் தயாரிப்பதற்குச் செலவாகும் பணம் மற்றும் தேவைப்படும் வழங்களை விடப் பலமடங்கு அதிக பணமும் வளமும் அதே நிகழ்ச்சியைத் தொலைக்காட்சியில் தயாரிப்பதற்குத் தேவைப்படும். எனவேதான் தொலைக்காட்சியென்ற ஊடகம் இலங்கை போன்ற வறியநாடுகளுக்குக் கட்டுப்படியாகாதென்று கருதித் தொலைக்காட்சிச் சேவையை இலங்கையில் ஆரம்பிப்பதற்கு மிகுந்த தயக்கம் காட்டப்பட்டது. இப்போது இனக்கலவரத்தால்ப் பாதிக்கப்பட்ட தமிழ்மக்கள் பெருமளவில் இடம்பெயர்ந்துவிட்ட நிலையில் கொழும்பில் புதிய தமிழ்நிகழ்ச்சிகளைத் தயாரிக்க முடியவில்லை. நாம் பணிக்குத் திரும்பியும் கலவரத்துக்கு முன்னரான ஒன்றரை வருடங்களில் தயாரித்த நிகழ்ச்சிகளையே மறுஒளிபரப்புச் செய்துகொண்டிருந்தோம்.

இந்தநேரத்தில் நான் திருமதி. ஞானம் இரத்தினம் அவர்களிடம் சென்று இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நாம் யாழ்ப்பாணம் சென்று நிகழ்ச்சிகளை ஒளிப்பதிவு செய்துகொண்டுவரலாமென்ற யோசனையை முன்வைத்தேன். ஞானம் இரத்தினம் அவர்களுக்கு அது நல்லயோசனையாகப்பட்டாலும் ரூபவாஹினி ஆரம்பித்த

பின்னர் மேற்கொள்ளப்படும் பெரிய தயாரிப்பு நடவடிக்கையாக அது இருக்கும், ரூபவாஹினி அதிக வளங்களைப் பாவிக்கநேரிடு மென்பதால் அதற்கு ரூபவாஹினியின் தலைவர் அனுமதியளிப் பாரா என்ற தயக்கம் அவருக்கிருந்தது. அப்படி அனுமதித்தாலும் இந்தப் பெரிய திட்டத்தைப் பொறுப்பெடுத்துச் செயற்படுத்துவதற் குரிய ஆட்பலம் எம்மிடம் இல்லையென்று யோசித்தார். நான் அதன் முழுப்பொறுப்பையும் ஏற்றுச் செய்கிறேனென்று சொன்ன தும் திருமதி. ஞானம் இரத்தினம் ரூபவாஹினித் தலைவருடன் பேசிப்பார்க்கிறேன் என்றார்.

இது ஒரு பெரிய முன்னெடுப்பு. மிகுந்த பணம் செலவாகும். எம்.ஜே. பெரேரா அவர்கள் அதற்கு உடன்படமாட்டாரென்று நினைத்திருந்தேன். ஞானம் இரத்தினம் அவர்களும் அப்படித்தான் நினைத்தார். ஆனால் நாம் ஆச்சரியப்படத்தக்க வகையில் இந் தத் திட்டத்தை ஞானம் இரத்தினம் அவர்கள் தெரிவித்ததுமே எம்.ஜே. பெரேரா அவர்கள் அதனை உற்சாகமாக வரவேற்று உட னேயே அனுமதித்துவிட்டார்.

எனக்கு உச்சக்கட்ட மகிழ்ச்சி. ஒரு நிறுவனத்திலோ அல்லது ஒரு துறையிலோ பணியாற்றும்போது அந்தப் பணியைச் செய்வதற்கு ரிய திறமையும் கடின உழைப்பும் கொண்டவர்கள் தாம் பணி-செய்யும் நிறுவனத்திலோ தாம் ஈடுபட்டுள்ள துறையிலோ முன் னேற்றமடையலாமென்பது உண்மை. ஆனால் தனித்துப் பிரகா சிக்கவேண்டுமாயின் சவாலான பணிகளைத் துணிந்து ஏற்று வெற்றிகரமாக நிறைவேற்றவேண்டும். அத்தகைய பல சவாலான தருணங்கள் இலங்கையின் புதிய ஊடகமாகிய தொலைக்காட் சியில் எனக்கு ஏற்பட்டிருக்கின்றன. பல முதல்த் தயாரிப்புகளைச் செய்து எல்லோரது கவனத்தையும்பெற்ற எனக்கு, எனது செயல்த் திறனை வெளிக்காட்டுவதற்கான அரிய சந்தர்ப்பமாக யாழ்ப்பாண நிகழ்ச்சித்திட்டத்தைக் கருதினேன். உடனேயே செயற்படத்தொடங் கினேன்.

ஞானம் இரத்தினம் அவர்களிடம் பணிசெய்வதற்கான விடுப்பைப் (duty leave) பெற்றுக்கொண்டு அன்றிரவே யாழ்ப்பாணம் பயண மானேன். கலவரத்தின் பின்னர் மனைவியையும் குழந்தையையும்



நவாலிப் படப்பிடிப்பில் என். துரைரட்ணம், பிரபாகரன், நான், மற்றும் ஒலிப்பதிவாளர் ஜயந்த டி. சில்வா ஆகியோர்

ஊரில் விட்டுவிட்டுத் தனியாகக் கொழும்பிலிருந்த எனக்கு மிகவும் சந்தோஷமான பயணமாக அந்த பஸ் பிரயாணமிருந்தது. யாழ்ப் பாணத்தில் நிகழ்ச்சிகள் செய்வதற்கான திட்டத்தின் ஆரம்பப் பய ணம். அந்தப் பயணத்தை நான் மேற்கொண்டது ஒக்ரோபர்மாத நடுப்பகுதியில். அதன்பின்னர் அடுத்த ஆண்டு 1984 பெப்பிரவரி-மாத முற்பகுதியில் அந்த நிகழ்ச்சித் திட்டத்தை நிறைவுசெய்து திரும்பும்வரை பல பயணங்களை மேற்கொண்டேன். எத்தனை-யென்பதை நான் கணக்கில் வைத்துக்கொள்ளவில்லை. முதலில் ஞானம் இரத்தினம் அவர்களிடம் கூறியபோது பொதுவாக நிகழ்ச் சிகள் ஒளிப்பதிவு செய்வதென்று மட்டுமே குறிப்பிட்டிருந்தேன். என்ன நிகழ்ச்சிகள் செய்வதென்ற எந்தவித திட்டமும் இருக்க வில்லை. யாழ்ப்பாணம் நோக்கி பஸ்ஸில் சென்றுகொண்டிருக்கை யில்த்தான் விரிவாகச் சிந்திக்கத்தொடங்கினேன்.

நான் யாழ்ப்பாணம் சென்று மூன்றுபேரைச் சந்தித்தேன். முதலில் காங்கேசன்துறையில் நடிகமணி வீ.வீ. வைரமுத்து அவர்களைச் சந்தித்து, யாழ்ப்பாணத்தில் கிராமியக்கலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்களை எனக்கு அறிமுகம் செய்துவைக்குமாறு கேட்டேன். பின்னர் மருதனார்மடம் சென்று இராமநாதன் நுண்க லைக் கல்லூரியில் அப்போது விரிவுரையாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்த பிரபல கர்நாடக சங்கீதவித்வானும் எனது நண்ப ருமாகிய ஏ.கே. கருணாகரனைச் சந்தித்து பல்வேறு இசை, மற் றும் நடன நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதற்கு எனக்கு உதவவேண்டு மென்று கேட்டுக்கொண்டேன். அதன்பின்னர் யாழ்ப்பாணம் நோக் கிச் செல்லுகின்ற காங்கேசன்துறை வீதியில் இராமநாதன் கல்லூ ரிக்குச் சற்றுத்தூரத்தில் இணுவில் வைத்தியசாலைக்குச் சற்று அண்மையில் அப்போது வசித்துக்கொண்டிருந்த கலைஞர் கே.எஸ். பாலச்சந்திரனிடம் சென்று நான் வந்த விடயத்தைச்சொல் லிப் பல நிகழ்ச்சிகளுடன் சேர்த்து ஒரு தொலைக்காட்சி நாட கத்தைத் தயாரிக்கப்போவதாகக் கூறியதும் மிகவும் சந்தோஷம டைந்த அவர், என்ன உதவிவேண்டுமானாலும் செய்வதாக உறுதி யளித்தார். கே.எஸ். பாலச்சந்திரன் 1977ம் ஆண்டுக் கலவரத்தைத் தொடர்ந்து பணிமாற்றம் பெற்று இறைவரித்திணைக்களத்தின் யாழ்ப்பாண அலுவலகத்தில் அப்போது பணியாற்றிக்கொண்டிருந் தார். அவரது மனைவி இணுவில் வைத்தியசாலையில் பணியாற் றியதால் வசதிகருதி அவர்களது சொந்த ஊரான கரவெட்டியை விட்டு இணுவிலில் வசித்துக்கொண்டிருந்தார்கள். அது எனக்கு அவரை அடிக்கடி சுலபமாகச் சந்திக்க வாய்ப்பாக அமைந்தது. நான் வானொலியில் நாடகத் தயாரிப்பாளராக இருந்த காலத்தி லும் நாடக எழுத்தாளர்களைச் சந்திப்பதற்காக யாழ்ப்பாணம் செல்லும்போதெல்லாம் பாலச்சந்திரன் என்னைத் தனது ஸ்கூட் டரில் அவர்களது வீடுகளுக்கு அழைத்துச்செல்வார். இப்போது தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைச் செய்வதற்காகச் சென்றிருந்த போதும் அவர்தான் என்னைப் பல இடங்களுக்கு அழைத்துச்சென் றார். ஏ.கே. கருணாகரன் பல இசைக்கலைஞர்களையும் நடனக் கலைஞர்களையும் சந்திப்பதற்குத் தனது மோட்டார்சைக்கிளில் என்னை அழைத்துச்செல்வார்.

1983ம் ஆண்டு ஒக்டோபர் மாத இறுதியில் ஆரம்பித்த அப்பணி அடுத்த ஆண்டு பெப்பிரவரிமாதத் தொடக்கத்தில் வெற்றிகரமாக நிறைவுபெற்றது. அந்த மூன்று மாதங்களும் நான் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்குமாக பல தடவைகள் பிரயாணம் செய்தேன். இதேவேளை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றிக்கொண் டிருந்த எனது மனைவிக்கும் வேலைக்குத் திரும்புமாறு அழைப்பு வரவே நவம்பர்மாத நடுப்பகுதியில் நான் நிகழ்ச்சி ஒளிப்பதிவு ஏற்பாடுகளைச் செய்வதற்காக மேற்கொண்ட பயணங்களிலொன் றின் போது எமது மகளை அம்மா, சகோதரிகளுடன் விட்டுவிட்டு நாம் இருவரும் கொழும்பு திரும்பினோம். குழந்தை காங்கேசன் துறையிலிருந்ததால் நான் பணிநிமித்தம் யாழ்ப்பாணம் செல்லும் போதெல்லாம் எனது மனைவியும் என்னுடன் வருவார்.

யாழ்ப்பாணத்தில் ஒரு தொலைக்காட்சி நாடகத்தைத் தயாரித்து விட வேண்டுமென்பது எனது முக்கிய குறிக்கோளாக இருந்தது. இந்தக் குறுகிய காலத்திற்குள் உடனடியாகத் தயாரிப்பதற்கு ஏற்ற நாடகப்பிரதியொன்றைத் தெரிவுசெய்வதானால் எனது முதல்த் தொலைக்காட்சி நாடகத்திற்குத் தெரிவுசெய்ததுபோலக் குறைந்த ளவு பாத்திரங்களைக்கொண்ட, நான் வானொலிக்கெனத் தயா ரித்த நாடகமொன்றைத் தெரிவுசெய்வதுதான் உகந்ததென்று தீர் மானித்தேன். அப்படி யோசித்தபோது நான் வானொலிக்கெனத் தயாரித்த 'வானத்து நட்சத்திரங்களும் மண்புழுக்களும்' என்ற நாடகம் நினைவுக்கு வந்தது. இந்துமகேஷ் என்ற பெயரில் பல வானொலி நாடகங்களை எழுதிக்கொண்டிருந்தவரின் இந்த நாட கம் அப்போதைய யாழ்ப்பாண சமூக சூழ்நிலையைச் சித்தரிப்ப தாக இருந்தது. எனவே, எனது முதற்பயணத்தின்போதே பாலச்சந் திரனோடு இந்துமகேஷின் வீட்டிற்குச்சென்று அவரது வானொலி நாடகத்தைத் தொலைக்காட்சி நாடகமாகத் தயாரிக்கப்போவதாகத் தெரிவித்தேன். ஆனால் அதில் தொலைக்காட்சிக்கேற்ற வகையில் சிறுசிறு மாற்றங்களைச் செய்வேனென்று சொன்னபோது அவர் மகிழ்ச்சியோடு சம்மதித்தார்.

இனி அதற்கேற்ற நடிகர்களைத் தேடவேண்டும். ஈழநாடு பத்திரி கையில் 'ரூபவாஹினி நாடகத்தில் நடிப்பதற்கு நடிகர்கள் தேவை' என்று விளம்பரம் செய்தேன். விரும்புபவர்கள் விண்ணப் பிப்பதற்காக ரூபவாஹினி முகவரியைக் கொடுத்திருந்தேன். இவ்

வாறு எனது முதற்பயணத்திலேயே ஆரம்ப ஒழுங்குகளைச் செய்துவிட்டுக் கொழும்பு திரும்பி, இந்துமகேஷின் பிரதிக்கு 'உதயத்தில் அஸ்தமனம்' என்று பெயரை மாற்றித் திரைக்கதையை எழுதினேன். எழுதி முடித்தபோது நடிப்பதற்கு விருப்பம்தெரிவித்துச் சில கடிதங்கள் வந்திருந்தன. அவை பத்துக்கும் குறைவானவையே. நாடகத்தில் நான்கு பெண்பாத்திரங்கள். மூன்று பெண்கள் மட்டுமே விண்ணப்பித்திருந்தார்கள். விண்ணப்பித்தவர்களுக்கு நான் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரிக்கு அருகிலிருக்கும் எனது மாமாவின் வீட்டு முகவரியைத் தெரிவித்து, அங்கு நடிகர் தேர்வுக்கு வருமாறு திகதி, நேரம் முதலியவற்றைக் குறிப்பிட்டுக் கடிதம் அனுப்பிவிட்டு யாழ்ப்பாணம் சென்றேன். அங்கு தேர்வுக்கு வந்தவர்களில் நாடகத்தில் வரும் பிரதான பாத்திரங்களில் நடிப்பதற்கு இராஜேஸ்வரன், றேமன்ட் என்ற இருவரைத் தெரிவுசெய்தேன். இருவருமே நடிப்புக்குப் புதியவர்கள். ஒருசில மேடைநாடகங்களில் நடித்த அனுபவமிருப்பதாகச் சொன்னார்கள். குமுதினியென்ற ஒரு சிறு பெண் வந்திருந்தார். உருவத்தில் சிறியவர். ஆனால் கிராமியத்தோற்றத்துக்குப்பொருத்தமானவராக இருந்தார். முன்னொருபோதும் நடித்ததில்லை. அவரை உடனேயே தெரிவுசெய்யாமல் குறித்துவைத்துவிட்டு, இராமநாதன் நுண்கலைக்கல்லூரியில் ஏ. கே. கருணாகரன் சில மாணவிகள் நடிப்பதற்கு விரும்புவதாகக் கூறியிருந்ததால் அங்கு சென்று அவர்களுடன் பேசினேன். ஒருவரும் அந்த நாடகத்தில் நடிப்பதற்குப் பொருத்தமானவர்களாக இருக்கவில்லை.

இப்போது நான் பிரதியைத் தயார்செய்துவிட்டதால் படப்பிடிப்பை நடத்ததுவதற்கான இடங்கள் (location) எப்படி இருக்கவேண்டுமென்ற திட்டம் என்னிடமிருந்தது. அதற்கான இடங்களைத் தேடத் தொடங்கினோம். யாழ்ப்பாணத்தை அழகாகக் காட்டும் இடங்களாக அவை இருக்கவேண்டுமென்று கருதி நானும் பாலச்சந்திரனும் அவரது ஸ்கூட்டரில் பல இடங்களைச் சென்று பார்த்தோம். புங்குடுதீவுவரை சென்று படம்பிடிப்பதற்கான இடங்களைப் பார்வையிட்டோம். புங்குடுதீவில் தம்பிஜயா தேவதாஸ் பல இடங்களுக்கு எங்களை அழைத்துச்சென்று காட்டினார். எல்லா இடங்களையும் பார்த்துவிட்டு இறுதியில் எனது தகப்பனாரின் ஊராகிய நவாலியில் படம்பிடிப்பதென்று முடிவெடுத்தேன். கோயில், குளம், வயலென்று அழகான ஊர். அப்போது மாரிகாலம். வயலெல்லாம் பச்சைப்பசேலெனக் காட்சியளித்தன. ஆனால் படப்பிடிப்பை நடத்துவதற்கெனத் தெரிந்தெடுத்த வீட்டில் மின்சாரம் இருக்கவில்லை. நாடகத்தில் இரவுக்காட்சியும் வருவதால் மிகுந்தளவு மின்சார விளக்குகளைப் பாவிக்கவேண்டியிருக்கும். அதற்கேற்றவகையில் மின்சார விநியோகமிருக்கவேண்டும். பிரதான வீதியிலிருந்து கிட்டத்தட்ட ஒருமைல் தூரத்திலிருந்த அந்த வீட்டுக்குப் பிரத்தியேகமாகத் தற்காலிக மின்னிணைப்புப் பெறவேண்டும். அதற்கு நகரசபையோடு பேசவேண்டும். அந்த மின்னிணைப்பைப் பெற்றுத்தரும் பொறுப்பை பாலச்சந்திரன் ஏற்றுக்கொண்டார். ரூபவாஹினி யாழ்ப்பாணம் சென்று முதல்முதல்ப் படப்பிடிப்பு நடத்துவதால் சகலரும் ஒத்துழைப்பு வழங்குவார்களென்ற எதிர்பார்ப்பு எமக்கிருந்தது. உண்மையில் எமக்கு அபரிமிதமான ஒத்துழைப்பு சகல-வழிகளிலும் கிடைத்தது.

நான் அந்த மூன்று மாதத்திற்குள் அடுத்தடுத்து மேற்கொண்ட பயணங்களில் பல நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்துவிட்டேன். ஏ.கே. கருணாகரன் நுண்கலைக்கல்லூரி மாணவிகள் சிலரின் இசை நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்து தந்தார். அவற்றின் விபரங்கள் இப்போது நினைவில் இல்லாவிட்டாலும் மாலினி சிறீனிவாசன் அவர்களுடன் மற்றும் சில கலைஞர்கள் இணைந்துவழங்கிய வீணைஇசை நிகழ்ச்சி நினைவிருக்கிறது. அதேபோல் அளவெட்டி சென்று என்.கே. பத்மநாதன் அவர்களுடன் பேசியபோது அவர் இரண்டு அரைமணித்தியால நிகழ்ச்சிகள் தருவதற்குச் சம்மதித்தார். கலையரங்கம் அரைமணித்தியாலத்திற்கு ஒளிபரப்பாகும் நிகழ்ச்சி. எனவே, நாம் அரைமணித்தியால நிகழ்ச்சிகளையே ஒளிப்பதிவு செய்தோம். அப்போது இராமநாதன் நுண்கலைக்கல்லூரியில் நடன ஆசிரியராகப் பணியாற்றிக்கொண்டிருந்த சாந்தினி சிவநேசன் அவர்கள் தனது மாணவர்களைக்கொண்டு 'இராகவ தூதன்' என்னும் நாட்டிய நாடகத்தைத் தயாரித்து வழங்குவதற்குச் சம்மதித்தார். சாந்தினி அவர்கள் அப்போது யாழ்ப்பாணத்தில் மிகப் பிரபலமான நடனஆசிரியராக விளங்கிய கொக்குவில் சுப்பையா மாஸ்டர் அவர்களது புதல்வி. அதேபோல் அப்போது நடனத்துறையில் ஆசிரியராகப் பணிபுரிய ஆரம்பித்திருந்த கௌசல்யா பஞ்சாட்சரம் அவர்கள் (பின்னர் கௌஷல்யா ஆனந்தராஜா) 'திருஞானசம்பந்தர்' என்னும் நாட்டியநாடகத்தைத் தயாரிப்பதற்கு முன்வந்தார். அதன் பிரதியை எழுதிய வீரமணி ஐயர் அவர்கள், அந்த நாட்டியநாடகத்திற்கு இசையமைத்ததோடு, அவரே அதன் பாடல்களையும் பாடினார். நாட்டுப்புறக் கலைகளை ஒளிப்பதிவு செய்வதற்கு நான் எடுத்த முயற்சிகள் அவ்வளவாக வெற்றியளிக்கவில்லை. வீ. வீ. வைரமுத்து அவர்கள் என்னைப் பல இடங்களுக்குக் கூட்டிச்சென்றார். நான் சென்று சந்தித்த நாட்டுக்கூத்துக் கலைஞர்கள் உடனடியாக மேடையேறுவதற்குத் தயாராக இருக்கவில்லை. கரகாட்டக்காரர்கள் இருக்கிறார்களென்று எங்கெங்கோ என்னை அழைத்துச்சென்றார் வீ.வீ. வைரமுத்து அவர்கள். ஒரு குறுகிய கால அவகாசத்தில் பல இடங்களுக்குச் சென்றதால் எந்தெந்த ஊர்களுக்குச் சென்றோம் என்பது இப்போது நினைவில் இல்லை. நாம் சென்று பார்த்த கரகாட்ட, மற்றும் காவடியாட்டக் கலைஞர்கள் எல்லோருமே அப்போது ஆடமுடியாதளவிற்கு மூப்படைந்திருந்தார்கள், அல்லது அந்தக் கலையைத் தாம் கைவிட்டுவிட்டதாகச் சொன்னார்கள். ஓர் ஊரில், கொல்லன்கலட்டி



படப்பிடிப்பு



நாடகத்தின் வெளிப்புறப்படப்பிடிப்பின்போது ஒலிப்பதிவை சிறப்பாகச்செய்ய முயற்சிசெய்யும் அனுரா முனசிங்ஹ

யென்று நினைக்கிறேன், ஒரு முதியவரும் அவரது மகனும் கரகம், காவடி முதலியவற்றை ஆடிக்காட்டினார்கள். அத்தோடு அந்த முதியவர் உருக்கொண்டு இரண்டு பெரிய கூரிய கத்திகளில் ஏறி ஆடினார். ஆனால் அவர்களது ஆட்டத்தின் தரம் பார்வையாளர்களைக் கவரக்கூடிய நேர்த்தியைக் கொண்டிருக்கவில்லை. இருந்தபோதிலும் அவற்றையும் ஒளிப்பதிவு செய்வோமென்று எமது நிகழ்ச்சிநிரலில் சேர்த்துக்கொண்டேன்.

யாழ்ப்பாணத்தின் மேடைநாடகமொன்றையும் ஒளிப்பதிவுசெய்வதற்கு முடிவெடுத்து அப்போது யாழ்ப்பாணத்தில் மேடைநாடகத் துறையில் உற்சாகமாக ஈடுபட்டுக்கொண்டிருந்த வீ.எம். குகராஜா அவர்களை அணுகினேன். குகராஜா வாசகர் காலத்திலும் எனது காலத்திலும் பல வானொலி நாடகங்களை எழுதியிருக்கிறார். வாசகர் காலத்தில் நடத்தப்பட்ட வானொலி நாடகப்பிரதி எழுத்துப் போட்டியில் பரிசுபெற்றவர். அவர் அப்போது தயாரித்து மேடை-யேற்றிக்கொண்டிருந்த 'புதிய சுவர்கள்' என்ற நாடகத்தை ஒளிப்பதிவு செய்யலாமென்றார். இவ்வளவு நிகழ்ச்சிகளையும் ஒழுங்குசெய்தபின்னர் அவற்றை ஒளிப்பதிவுசெய்வதற்கு ஏற்ற இடமாக யாழ்ப்பாணம், வீரசிங்கம் மண்டபத்தைத் தெரிவுசெய்து அதை மூன்று நாட்களுக்கு முன்பதிவு செய்தேன். 1984ம் ஆண்டு ஜனவரிமாதக் கடைசிவாரத்தில் ஒளிப்பதிவுகளை மேற்கொள்வதென்று முடிவுசெய்யப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் செய்யவேண்டிய சுமார் இருபது நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்து, ஒளிப்பதிவு செய்யும் இடங்கள், நாட்கள், நேரம் முதலியவற்றைத் தீர்மானித்து உறுதிசெய்துவிட்டு காங்கேசன்துறையிலிருந்து நாட்டுக்கூத்துகள் சிலவற்றைப் பார்ப்பதற்காக பஸ்ஸில் மட்டக்களப்புக்கு சென்றேன். நாட்டுக்கூத்துக்கலை பற்றிக் கருத்தரங்குகளில் பேசக்கேட்டும் கட்டுரைகளில் படித்துமிருந்தேனேயன்றி நான் அதுவரை நேரில் நாட்டுக்கூத்துகளை அவ்வளவாகப் பார்த்ததில்லை. ஊரில் நடிகமணி வீ.வீ. வைரமுத்து அவர்களின் இசைநாடகங்களைப் பார்த்திருக்கிறேன். சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகங்களைப் பெரும்பாலும் மேடையேற்றுவார். அந்த நாடகங்களில் இசையே பிரதானமாக இருக்கும். அந்த நாடகப்பாடல்களின் இசைத் தரம் மிகச்சிறப்பாக இருக்கும். ஒரு முறை எமது ஊரிலே காத்தவராயன் கூத்துப் பார்த்திருக்கிறேன். காத்தான் கூத்து என்றும் சொல்வார்கள். அதிலும் இசை நன்றாக இருக்கும்.

நாட்டுக்கூத்தை நேரில் அவ்வளவாகப் பார்க்காததாலும் நாட்டுக் கூத்துத்தான் எமது கலை என்று புத்திஜீவிகள் எழுதியும் பேசியும் வருபவற்றைப் படித்தும் கேட்டும் அந்தக் கலையின்மீது எனக்குப் பெரும் எதிர்பார்ப்பிருந்தது. குறிப்பாக, நவராத்திரி திரைப்படத்தில் சிவாஜி கணேஷன், சாவித்திரி ஆகியோர் ஆடிய 'சத்தியவான் சாவித்திரி' நாடகத்தைப்பார்த்து, நாட்டுக்கூத்தென்றால் அவ்வாறான தரத்திலிருக்குமென்ற கற்பனையிலிருந்தேன். எப்படியாவது நாட்டுக்கூத்துகளை ரூபவாஹினியில் ஒளிபரப்பிவிட வேண்டுமென்று நான் அதுபற்றி விசாரித்தபோது எழுத்தாளர் அன்புமணி நாகலிங்கம் அவர்கள் மட்டக்களப்பில் பொங்கலையொட்டி நடைபெறுகின்ற நாட்டுக்கூத்து விழாவொன்றை எனக்குத் தெரியப்படுத்தினார். அது வருடாவருடம் இடம்பெறுவதா அல்லது அந்த வருடம்தான் அது நடைபெற்றதா என்பது பற்றிய விபரம் எனக்கு இப்போது நினைவில் இல்லை. அவரது ஆலோசனைப்படி அந்த நாட்டுக்கூத்து விழாவைச் சென்று பார்ப்பதற்கு முடிவெடுத்து எனது யாழ்ப்பாண நிகழ்ச்சிகளின் மத்தியிலும் எப்படியாவது மட்டக்களப்பு சென்று நாட்டுக்கூத்துகளைப் பார்த்துவிடவேண்டுமென்று நான் பிரயாணத்தை மேற்கொண்டேன்.

மட்டக்களப்பு மகளிர் கல்லூரி மேடையில் சில நாட்டுக்கூத்துகளைப் பார்த்த எனக்கு மிகுந்த ஏமாற்றமாக இருந்தது. எத்தனையோ கற்பனைகளோடு நாட்டுக்கூத்துப் பார்க்கச்சென்ற எனக்கு இவ்வளவுதானா நாட்டுக்கூத்து என்றாகிவிட்டது. நாட்டுக் கூத்துகளில் இடம்பெற்ற பாடல்களின் தரம் மிகமோசமாக இருந்தது. அவற்றை ரூபவாஹினியில் ஒளிபரப்பினால் தமிழர் பற்றியும் அவர்தம் பாரம்பரியக் கலையாகிய நாட்டுக்கூத்து பற்றியும் மிகத்தாழ்வான அபிப்பிராயமே நாட்டு மக்களுக்கு ஏற்படுமென்று கருதினேன். ரூபவாஹினியில் ஒளிபரப்பப்படும் எல்லா நிகழ்ச்சிகளையும் நாட்டின் சகல மக்களும் அப்போது பார்த்தார்கள்.

அன்று திறமைமிக்க கலைஞர்கள் அந்த நிகழ்வில் பங்குபற்றவில்லைப்போலுமென்று நினைத்தேன். மேற்கொண்டு முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமென்ற எண்ணத்தோடு அன்புமணி அவர்கள் ஏற்பாடு செய்திருந்த மட்டக்களப்பு வாடிவீட்டில் இரவு தங்கினேன். 1970களின் நடுப்பகுதியில் ஜோர்ஜ் சந்திரசேகரனது திருமணம் மட்டக்களப்பில் நடைபெற்றபோது திருமணத்திற்கெனச் சென்றிருந்த நடராஜசிவமும் நானும் அந்த வாடிவீட்டில்தான் தங்கினோம். அதன்பின்னர் நான் மட்டக்களப்புக்கு மேற்கொண்ட இரண்டாவது பயணம் அது. இரவு வாடிவீட்டில் தங்கிய நான் அடுத்தநாட்காலை கொழும்புக்குப் பயணமானேன்.

நான் கொழும்புக்குத் திரும்பியபொழுது, நாம் பாலசிங்கம் பிரபாகரனைத் தயாரிப்பு உதவியாளராக ரூபவாஹினியில் சேர்த்துக் கொள்வதற்கு எடுத்த முயற்சிகள் பூர்த்தியாகி அவர் நியமனக் கடிதத்தைப் பெற்றிருந்தார்.

பாலசிங்கம் பிரபாகரனின் பெற்றோர் யாழ்ப்பாணத்தைச்சேர்ந்தவர்கள். அவர்கள் உத்தியோகம் காரணமாகக் கொழும்பில் வசித்ததால் அவர்களது பிள்ளைகள் கொழும்பிலேயே படித்து வளர்ந்தார்கள். பிரபாகரன் சிறுவயதிலிருந்தே மிகவும் துடிதுடிப்புடன் செயற்படுபவர். பள்ளிப்பருவத்திலேயே வயலினிசை கற்றதோடு, பேச்சுப்போட்டி, நாடகப்போட்டி ஆகியவற்றில் பங்குபற்றிப் பரிசுகள்பெற்று இளைஞர்கள் வட்டாரத்தில் நன்கு அறியப்பட்டவராக இருந்தார். சிறுவயதிலிருந்தே வானொலி சிறுவர் நிகழ்ச்சிகளில் பங்குபற்றியவர். உயர் வகுப்பில் படிக்கும்போதே வானொலி நாடக நடிகராகத் தெரிவாகிப் பல வானொலி நாடகங்களில் இளையவர்களின் பாத்திரங்களில் நடித்துக்கொண்டிருந்தார். எனது தயாரிப்பிலும் சில நாடகங்களில் நடித்திருக்கிறார். உயர்வகுப்புக் கல்வியை முடித்துக்கொண்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில் பகுதிநேர அறிவிப்பாளராகவும் பகுதிநேரத் தயாரிப்பு உதவியாளராகவும் இணைந்து பணியாற்றிக்கொண்டிருந்த அவரது சுறுசுறுப்பை அவதானித்த நான், திருமதி. ஞானம் இரத்தினம் அவர்களிடம் பிரபாகரனை உதவித் தயாரிப்பாளராக ரூபவாஹினியில் சேர்த்துக்கொண்டால் எமக்கு உதவியாக இருக்குமென்று கூறினேன். அப்போது பாலசுப்ரமணியம் மட்டுமே தயாரிப்பு உதவியாளராக இருந்தார். அவரும் சைவநீதி போன்ற நிகழ்ச்சிகளைச் செய்யத் தொடங்கியிருந்ததால் நிகழ்ச்சித் தயாரிப்பு உதவியாளராகப் பணியாற்றுவதற்கு எவரும் இருக்கவில்லை. ஞானம் இரத்தினம் அவர்களுக்கும் பிரபாகரனை நன்கு தெரியுமென்பதால் சுலபமாக அவரை ரூபவாஹினியில் தயாரிப்பு உதவியாளராகச் சேர்த்துக்கொள்ள முடிந்தது.

ரூபவாஹினி இலங்கையில் ஆரம்பிப்பதற்கு ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டபோது அதிலே பணியாற்றுவதற்குத் தகுதியான தயாரிப்பாளர்கள், தொழில்நுட்பவியலாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பியும் வெளிநாட்டு விற்பன்னர்களை இலங்கைக்கு வரவழைத்தும் அவர்களுக்குப் பயிற்சிகள் அளிக்கப்பட்டன. ரூபவாஹினி ஆரம்பிக்கப்பட்ட பின்னர் தயாரிப்பு உதவியாளர்களாகச் சேர்துக்கொள்ளப்பட்டவர்களுக்கு அவ்வாறான ஆரம்பப் பயிற்சிகள் அளிக்கப்படவில்லை. அவர்கள் ஏற்கனவே பயிற்சியளிக்கப்பட்டுப் பணியாற்றிக்கொண்டிருக்கும் தயாரிப்பாளர்கள், தொழில்நுட்பவியலாளர்களுடன் சேர்ந்து பணியாற்றித் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்புமுறைகளைக் கற்றுக்கொள்ளவேண்டுமென்று எதிர்பார்க்கப்பட்டது. அப்படித்தான் பாலசிங்கம் பிரபாகரனும் தயாரிப்பு உதவியாளராக நியமிக்கப்பட்டார். அவரது அதிஷ்டம் அவர் பணியில் சேர்ந்த அந்த மாதத்திலேயே யாழ்ப்பாணத்திற்குச் சென்று பலவகையான நிகழ்ச்சிகளை ஒருகிழமைக்குள் தயாரிக்கும் பாரிய திட்டமொன்றில் இணைந்துகொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் இணைந்துகொள்வதன்மூலம் நிகழ்ச்சி நிர்வாக நடவடிக்கைகளிலிருந்து பல்வேறு நிகழ்ச்சிகளைத் தயாரிக்கும் செயல்முறைகளை உடனடியாகவே குறுகிய காலத்தில் தெரிந்துகொள்ளும் சந்தர்ப்பம் அவருக்குக் கிடைத்தது. அவர் ஆர்வத்துடன் செயற்பட்டு எனக்கு மிக உதவியாக இருந்தார். தயாரிப்பு உதவியாளர்களுக்கு நிகழ்ச்சித் தயாரிப்பில் பல பணிகள் உள்ளன. அவற்றை அவர்கள் சரிவரச்செய்யாவிட்டால் நிகழ்ச்சித் தயாரிப்பில் பல தடைகள் ஏற்படும். அதனால் நிகழ்ச்சியின் தரம் பாதிக்கப்படும். தயாரிப்பு உதவியாளர் என்பது மிகமுக்கியமான பணியாகும். பிரபாகரன் நான் எதிர்பார்த்தபடியே மிகச் சுறுசுறுப்பாகத் தயாரிப்பு உதவியாளர் பணிகளைச் செய்தார். இந்த யாழ்ப்பாண வேலைத்திட்டம்போலவே பின்னர் மலையகத்திலும் நான் ஒரு நிகழ்ச்சித் தயாரிப்புத் திட்டத்தைமேற்கொண்டு அதை வெற்றிகரமாக நிறைவேற்ற பிரபாகரன் உதவியாக இருந்தார். தொழிலில் நான் காட்டும் தீவிரத்தன்மைக்கு ஈடுகொடுத்துப் பணிபுரிந்த பிரபாகரனிடம் சில விசேடநாள் நிகழ்ச்சிகளைத் தனித்துத் தயாரிக்கும் பொறுப்பைக் கொடுத்தபோது அவற்றையும் சரியாகச் செய்தார். 1986ம் ஆண்டு நடுப்பகுதியில் அவர் குடிபெயர்ந்து அவுஸ்திரேலியா செல்லும்வரை கடுமையாக உழைத்தவர்.

அவுஸ்திரேலியாவுக்குச் சென்ற பிரபாகரன் அங்கு 'இன்பத் தமிழ் ஒலி' என்னும் இருபத்துநான்குமணிநேர வானொலிச்சேவையை ஆரம்பித்து சிறப்பாக நடத்தினார். தான் பார்த்துக்கொண்டிருந்த அரசபணியைத் துறந்து முழுநேர ஒலிபரப்பாளரான அவர், 1997ம் ஆண்டு நான் சிட்னிக்குச் சென்றபோது என்னைத் தனது வானொலி நிலையத்திற்கு அழைத்துச்சென்று செவ்விகண்டதோடு, நான் அங்கு தங்கியிருந்த இரண்டு நாட்களும் என்னைப் பல இடங்களுக்குக்கூட்டிச்சென்று உபசரித்தார். இப்போதும் அவரது வானொலிச்சேவை நடைபெறுகிறது.

ரூபவாஹினித் தயாரிப்புக்குழு 1984ம் ஆண்டு ஜனவரிமாதம் 28ம் திகதி, சனிக்கிழமை கொழும்பிலிருந்து புறப்பட்டு 29ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை யாழ்ப்பாணத்தையடைந்து, பின்னர்

பெப்பிரவரி மாதம் 4ம் திகதி, சனிக்கிழமை இரவு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு ஞாயிற்றுக்கிழமை கொழும்பு திரும்புவதாக உறுதிசெய்யப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் தயாரிப்புக் குழுவினர் தங்குவதற்கான சுபாஸ் ஹொட்டேல், நிகழ்ச்சிகளை ஒளிப்பதிவு செய்வதற்கான யாழ்ப்பாணம், வீரசிங்கம் மண்டபம் ஆகியவற்றின் முற்பதிவுகளை நிச்சயப்படுத்துவதற்காகவும் நவாலியில் தொலைக்காட்சி நாடகப் படப்பிடிப்பை நடத்துவதற்கான மின்னிணைப்பை உறுதிசெய்வதற்காகவும் நிகழ்ச்சிகளின் இறுதி ஒத்திகைகளைப் பார்ப்பதற்காகவும் நான் நான்கைந்து நாட்கள் முன்பாகவே யாழ்ப்பாணம் சென்றுவிட்டேன்.

தொலைக்காட்சி நாடகத்தில் நடிப்பதற்குத் தேவையான நடிகர்களைத் தேர்ந்தெடுத்து முடிவுசெய்யும் வேலையும் இருந்தது. அதற்கு நான் மிகவும் சிரமப்பட்டேன். நாடகத் தயாரிப்பில் மிக முக்கிய பணியாகிய பாத்திரங்களுக்கேற்ற நடிகர்களைத் தெரிவு-செய்வது (casting) மிகச் சிரமமாக இருந்தது. அதிலும் பெண் பாத்திரங்களில் நடிப்பதற்கு யாரேனும் ஒரு பெண் கிடைத்தால் போதுமென்ற நிலைக்குத் தள்ளப்பட்டேன். ஏற்கனவே பிரதான பாத்திரத்தில் நடிப்பதற்கு றேமன்ட், இராஜேஸ்வரன் ஆகியோரைத் தெரிவுசெய்திருந்தேன். கொழும்பில் ஆசிரியராகப் பணியாற்றிக்கொண்டு வானொலி நாடகங்களிலும் நடித்துக்கொண்டிருந்த பாக்கியம் கந்தசாமி அவர்கள் கலவரம் காரணமாக இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தார். அவரைத் தாய்ப் பாத்திரத்தில் நடிப்பதற்குக் கேட்டதும் அதற்கு அவர் சம்மதித்ததால் அந்தப் பாத்திரத்துக்குச் சரியான நடிகர் கிடைத்தார். ராஜி என்பவர் கொழும்பில் பணியாற்றிக்கொண்டிருந்தவர். முன்னொரு போதும் நடிக்காதவர். ரூபவாஹினியில் வேறு அலுவல்களுக்காக வந்தபோது எமக்குப் பழக்கமானவர். அவரும் இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தார். ஒருவரும் கிடைக்காதமையால் அவரை அணுகி நடிக்குமாறு கேட்டபோது, அவர் தனக்கு நடிக்கத் தெரியாதென்று சொன்னபோதும் நான் அவரை அந்த நாடகத்தில் நடிப்பதற்கு இணைத்துக்கொண்டேன். நிலாணி. இவரும் கொழும்பிலிருந்து இடம்பெயர்ந்திருந்தவர். நடிப்பதில் அனுபவமற்றவர். இருந்தும் எனது முதல் நாடகத் தயாரிப்பொன்றில் அவர் தோன்றியிருந்தார். வேறு பெண் நடிகர்கள் இல்லாமையால் அவரையும் சேர்த்துக்கொண்டேன். பிரதான பெண் பாத்திரத்தில் நடிப்பதற்கு ஏற்றவரை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. முதலில் விண்ணப்பித்து நடிகர் தேர்வுக்கு வந்த குமுதினியை அந்தப் பாத்திரத்திற்குத் தெரிவுசெய்தேன். கதாநாயகனின் நண்பனாக நடிப்பதற்குக் கே. கமல்ராஜ் என்னும் ஓர் இளைஞரைத் தெரிவுசெய்தேன். இப்படி எல்லோருமே புதியவர்கள். கே.எஸ். பாலச்சந்திரன் கதாநாயகனின் அண்ணனாக நடித்தார். அவர் அனுபவம்வாய்ந்த நடிகரென்றாலும் அவரது அனுபவமும் அவரது தோற்றமும் அந்த நாடகத்தில் நடிப்பதற்குத் தேர்ந்தெடுத்த ஏனைய நடிகர்களைவிடக் கூடுதலாக இருந்ததால் அவரும் அந்தப் பாத்திரத்திற்குப் பொருத்தமற்றவராகவே தென்பட்டார். இருந்தாலும் வேறுவழி இருக்கவில்லை. ஒரு சிறிய பாத்திரத்தில் ஒரேயொரு வசனம் மட்டுமே பேசுவதற்காக எமக்கு ஒத்துழைப்பு வழங்கிய எஸ்.எஸ்.கணேஷபிள்ளை மாத்திரமே அவருக்கான பாத்திரத்திற்கு மிகவும் பொருத்தமானவராக இருந்தார்.

திட்டமிட்டவாறே ரூபவாஹினிப் படப்பிடிப்புக் குழுவினர் ஒரு பஸ், மற்றும் ரூபவாஹினி வான்களில் படப்பிடிப்பு உபகரணங்களோடு ஜனவரி மாதம் 29ம் திகதி காலை யாழ்ப்பாணம், சுபாஸ் ஹொட்டேலை வந்தடைந்தார்கள். அந்தக் குழுவில் இடம்பெற்றிருந்த அனைவரது பெயர்களும் இப்பொழுது எனக்கு ஞாபகமில்லாவிட்டாலும் சிலரது பெயர்களை நினைவுபடுத்த முடிந்தது. எனது இரண்டாவது நாடகமான நிஜங்களின் தரிசனத்துக்குத் தொழில்நுட்ப இயக்குனராக இருந்து மிகுந்த ஒத்துழைப்பு வழங்கிய என். துரைரட்ணம் இந்தக் குழுவிலும் தொழில்நுட்ப நெறியாளராக வந்திருந்தார். மற்றும் ஒளியமைப்பாளர் துஷித்த முனீந்திரதாஸ, படப்பிடிப்பாளர்கள் எம்.ஜீ. சந்திரலால் மனமேந்திர, ஈ.யூ.ஜீ. சமரக்கோன், ஒலிப்பதிவாளர்கள் அனுரா முனசிங்க, ஜயந்த டி. சில்வா, ஆர்.டி. சூரசிங்க, ஒப்பனைக் கலைஞர் ரஞ்சித் திலகசிறி, மற்றும் தொழில்நுட்பவியலாளர் சுரேந்திரன் ஆகியோருடன் சில ஒலி, ஒளியமைப்பு உதவியாளர்களும் இந்தக் குழுவில் இடம் பெற்றிருந்தார்கள். திருமதி. ஞானம் இரத்தினம் அவர்களும் புதிதாகத் தயாரிப்பு உதவியாளராகச் சேர்ந்திருந்த பிரபாகரனும் அவர்களுடனேயே வந்தனர். ஞானம் இரத்தினம் அவர்கள் அப்போது விவரணப்பிரிவில் தயாரிப்பாளராகப் பணியாற்றிக்கொண்டிருந்த சந்திரசோம விதானகே என்பவரையும் அழைத்துவந்திருந்தார். இவர் முன்னர் யாழ்ப்பாணத்தில் கலாச்சார உத்தியோகத்தராகப் பணியாற்றியவர். இவர்தான் 83ஆண்டுக் கலவரத்தின்போது எம்மை முகாமுக்கு அழைத்துச்சென்றவர். அவர் இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் எமக்குப் பெரிதும் உதவியாக இருந்தார். நான் முதலி-லேயே யாழ்ப்பாணம் வந்துவிட்டதால் படப்பிடிப்புக் குழுவினர், பிரயாண வசதிகளைச் செய்யும் பிரிவு ஆகியவற்றுடன் இடைவிடாது தொடர்புகளைப்பேணி எல்லோரையும் உரியநேரத்தில் ஒன்றிணைத்து யாழ்ப்பாணத்திற்கு அழைத்துவந்ததில் பிரபாகரனுக்கு ஆரம்பத்திலேயே நல்ல அனுபவம் ஏற்பட்டிருந்தது. திருமதி. ஞானம் இரத்தினம் அவர்களின் மேற்பார்வையில் அவற்றை அவர்



நவாலியில் நாடகப்படப்பிடிப்பு நடந்த வீட்டின் தாழ்வாரத்தில்
திருமதி. ஞானம் இரத்தினம் ரூபவாஹினி உத்தியோகத்தர்களுடன்



சிட்னியில் பாலசிங்கம் பிரபாகரனது வானொலிக் கலையகத்தில்

ஒழுங்காகச் செய்து எல்லோரும் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தார்கள்.

அடுத்த ஐந்து நாட்களில் முதல்நாட்காலை நவாலியில் தொலைக்காட்சி நாடகப் படப்பிடிப்பைத் தொடங்கினோம். இரண்டாவது தினத்திலிருந்து பகலில் நாடகப்படப்பிடிப்பும் இரவில் வீரசிங்கம் மண்டபத்தில் மற்றைய நிகழ்ச்சிகளின் படப்பிடிப்பும் இடம்பெற்றன. இவ்வாறு தொடர்ந்து மூன்று நாட்கள் பகலில் நாடகப் படப்பிடிப்பும் இரவில் வீரசிங்கம் மண்டபத்தில் ஏனைய நிகழ்ச்சிகளின் படப்பிடிப்புமாக ரூபவாஹினிக் குழுவினர் மிகக் கடுமையாக உழைத்தார்கள். நான்காம் நாள் நாடகத்தின் காட்சிகளை சில வெளிப்புறங்களில் படம்பிடித்துவிட்டு இரவில் நடைபெறும் காட்சி-யொன்றை அன்றிரவு நவாலியில் படம்பிடித்தோம். அடுத்தநாட் காலை நாடகத்தின் இறுதிக் காட்சியை நவாலியில் முடித்துவிட்டு இரவு ரூபவாஹினியில் அப்போது பணியாற்றிக்கொண்டிருந்த சிறீனிவாசனின் வீட்டிலே அவரால் தரப்பட்ட விருந்துக்கு எல்லோரும் சென்றோம். அத்துடன் எமது யாழ்ப்பாணப் படப்பிடிப்புப் பணி இனிதே நிறைவுற்றது. இப்படி நான் கூறினாலும் அந்தப் படப்பிடிப்பு எந்தவித இடையூறுமின்றி நடந்தேறியதென்று சொல்ல முடியாது. படப்பிடிப்பு ஆரம்பித்த முதல்நாட்காலை நாம் நவாலியில் தொலைக்காட்சி நாடகப்படப்பிடிப்பை ஆரம்பித்த சிறிது நேரத்திலேயே நாம் கொண்டுசென்றிருந்த கமராக்களில் ஒன்று இயங்கவில்லை. மற்றொரு கமராவால் படப்பிடிப்பைத் தொடர்ந்த அதேவேளை, அடுத்தநாள் இரவு வீரசிங்கம் மண்டபத்தில் ஒளிப்

பதிவு செய்யப்படவேண்டிய நிகழ்ச்சிகளுக்கு இரண்டு கமராக்கள் தேவையென்பதால் ஞானம் இரத்தினம் அவர்கள் உடனேயே ரூப வாஹினியைத் தொடர்புகொண்டு வேறொரு கமராவைக் கொண்டு வருவதற்கு ஒழுங்குகள் செய்தார். ரூபவாஹினியில் வழங்கல் பிரிவுக்கு பொறுப்பாகவிருந்த லோக்குகே அவர்களும், ரூபவாஹினியின் கொக்காவில் ஒளிபரப்பி நிலையத்திற்குப் பொறுப்பாகவிருந்த பொறியியலாளர் ஜயந்த விக்ரமசிங்ஹவும் ரூபவாஹினியிலிருந்து கமராவொன்றை அடுத்தநாட்காலையே கொண்டுவந்து தந்தார்கள். அன்று மாலைதான் நாம் வீரசிங்கம் மண்டபப் படப்பிடிப்பு ஆரம்பிக்க இருந்தமையால் பிரச்சினை எம்மைப் பாதிக்கவில்லை. திருமதி. ஞானம் இரத்தினம் போன்ற அதிகாரியொருவரும் எம்முடன் படப்பிடிப்புக்கு வந்திருந்தமை எமக்கும் பெரிதும் உதவியாக இருந்தது.

தொலைக்காட்சி நாடகத்தைப் பல நிகழ்ச்சிகளோடு சேர்த்து ஒரு நிகழ்ச்சியாகத் தயாரித்ததால் அப்படியொரு தயாரிப்பை மேற்கொள்வதற்குத் தேவையான நேரம் போதாமலிருந்தது. புதிய நடிகர்களிடமிருந்து மிகச் சரியான நடிப்பைப்பெற முடியவில்லை. அவர்களுக்குக் கமரா முன்பாக நடித்துப் பழக்கமில்லாததால் தனியாக எடுக்கப்படும் க்ளோஸ் அப் காட்சிகளில் நடிப்பதற்குச் சிரமப்பட்டார்கள். இப்படி நடிகர்கள் க்ளோஸ் அப் காட்சிகளில் உரிய உணர்வுகளை வெளிப்படுத்தமுடியாது திணறுவதை இலங்கையில் தயாரிக்கப்பட்ட தமிழ்த் திரைப்படங்கள் அனைத்திலும் பார்க்கலாம். போதிய அவகாசம் கிடைத்திருந்தால் எமது தொலைக்காட்சி நாடகத்தில் நடித்த நடிகர்களிடமிருந்து வேண்டிய நடிப்பைப்பெற்றிருக்கலாம்.

படப்பிடிப்பை வெற்றிகரமாக முடித்துத் திரும்பிய எம்மை ரூபவாஹினித் தலைவர் பெரிதும் பாராட்டினார். நான் ஏற்கனவே ரூபவாஹினியில் பல நிகழ்ச்சிகளைத் தயாரித்து அவரின் கவனத்தைப் பெற்றிருந்தபோதிலும், இந்த யாழ்ப்பாணத்திட்டம் நான் மிகத்தீவிரமாகச் செயற்படுபவனென்ற நற்பெயரை எனக்கு அவரிடம் பெற்றுத்தந்தது. அவர் என்மீதுகொண்ட நல்லெண்ணம் எனக்கு நான் எதிர்பாராதவகையில் நன்மைசெய்தது. அதைப் பின்னர் விபரிப்பேன்.

யாழ்ப்பாணத்திலிருந்து திரும்பியவுடனேயே நாடகத்தை எடிட் செய்யத் தொடங்கினேன். சுலபமாக எடிட் செய்யக்கூடிய வகையி-லேயே படப்பிடிப்பை மேற்கொண்டிருந்தோம். வசனங்கள் குறைவாகவும் முதல்முதலாக யாழ்ப்பாணத்தில் படம்பிடிப்பதால் முடிந்தவரை யாழ்ப்பாணத்தின் புறக்காட்சிகளைக் காட்டும் விதத்திலும் காட்சிகளை அமைத்திருந்தேன். அந்தக் காட்சிகளெல்லாம் மொன்ராஜ் என்று சொல்லப்படுகின்ற வகையில் இசையை மட்டுமே பின்னணியாகக்கொண்டு தொகுக்கப்பட்டவை. அதில் பாவிக்கப்பட்ட இசைகூட இசைத்தட்டுகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்டவை. இதனால் பின்னணி இசைச்சேர்க்கைக்கான நேரத்தை மீதப்படுத்தமுடிந்தது. பெப்பிரவரிமாத நடுப்பகுதியில் ஒளிபரப்பப்பட்ட இந்த நாடகம் மிகுந்த வரவேற்பைப்பெற்றது. அப்போது இந்தியாவிலிருந்து வெளிவந்துகொண்டிருந்த ‘சாவி’ என்ற சஞ்சிகையில் இந்த நாடகத்தை மிகவும் பாராட்டி எழுதியிருந்தார்கள்.

ரூபவாஹினி என்னும் அரச தொலைக்காட்சியின் வளங்களைத் தமிழ்நிகழ்ச்சிகள் தயாரிப்பதற்காக என்னால் முடிந்தவரை அதிக-ளவில் பாவித்திருக்கிறேனென்ற மனத்திருப்திக்கு இந்த யாழ்ப்பாண நிகழ்ச்சித் திட்டம் ஒரு சான்றாக இருக்கிறது. இதைப் போன்று சில முக்கிய திட்டங்களில் ஈடுபட்டுப் பெரும் வெற்றிக-ளைக் கண்டதோடு, மிகப்பெரும் தோல்வியையும் இவ்வாறான ஒரு வேலைத்திட்டத்தில் அடைந்திருக்கிறேனென்ற உண்மையும் பலருக்குத் தெரியும். அதை ஏற்கனவே இந்தக் கட்டுரைத்தொடரில் விபரித்திருக்கிறேன்.

இந்த யாழ்ப்பாண நிகழ்ச்சித் திட்டத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு ரூபவாஹினியின் அப்போதைய தலைவர் எம். ஜே. பெரேரா அவர்கள் அனுமதித்தமையையும் அந்த நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றிய சகலரின் கடின உழைப்பையும் குறிப்பாக நிகழ்ச்சிப்பிரிவு இயக்குனராக விளங்கிய திருமதி. ஞானம் இரத்தினம் அவர்கள் வழங்கிய ஒத்துழைப்பையும் நன்றியுடன் நினைவுகூருகிறேன்.



தொடரும்....

*wikneswaran.p@thaiveedu.com*



# தமிழ் இலக்கிய மரபில் மான்மியம்

- த.சிவபாலு

தமிழ் இலக்கிய வரலாற்றில் மான்மியம் என்னும் பதம் இடையில் வந்துசேர்ந்துள்ள ஒரு பதமாகவே கருதப் படுகின்றது. தலவிசேடத்தைக் கூறுவது 'மான்மியம்' என்னும் கருத்தே பொதுவாகக் கருதப்பட்டுவந்துள்ளது. ஆனால், மான்மியம் என்பது 'மகாத்மியம்' என்னும் வடசொல்லின் தமிழ் பதம் எனக்கொள்ளப்படுகின்றது. மான்மியம் என்பதற்கு மாண்பு, பெருமை, மகிமை. அழகு, நன்மை என்னும் பொருட்கள் பொதிந் துள்ளன. ஆங்கிலத்தில் glory, greatness, treatise on the greatness of a sacred place என்னும் பொருட்களைத் தருகின்றமை மான்மியத்துள் அடங்கியுள்ளவற்றைத் தெளிவுபடுத்துகின்றன. எனவே மான்மியம் என்பது இடத்தின் பெருமையையோ அன்றி வரலாற்றையோ மட் டும் கூறுவதாக அமைந்துவிடாது. அதனுள் பல்வேறு பொருட்கள் பொதிந்துள்ள மையைக் காணமுடியும். ஒரு இடத்தைப் பற்றிய-தாகவோ அன்றி ஆலயத்தைப் பற்றியதாகவோ அன்றி ஒரு தலைவனைப் பற்றியதாகவோ அன்றி இனத்தைப் பற்றியதாகவோ பெருமை பேசுவதாக மான்மியம் காணப்படலாம். பொதுவாக மான்மியம் என்பது ஆயலங்களைப் பற்றியதே என்பது பலரதும் புரிந்துணர்வாகக் காண்படுகின்றது. ஆனால் ஆலங்களின் பெரு-மைகளை மட்டுமன்றி இனத்தின், உறவினர்களின், இடத்தின் பெருமைகளைக் கூறும் நூல்களும் மான்மியம் என்ற பெயரிலே வெளிவந்துள்ளன.

மான்மியம் தமிழில் எப்போது ஆரம்பமானது என்பதற்கான போது மான ஆதாரங்கள் கிடைக்கவில்லை எனலாம். சங்க இலக்கியங் கள் அரசனின் புகழ்பாடுவதைக் காணலாம். 'சிந்தை மான்மியம்' 1115ம் ஆண்டு மா. சிதம்பரகுற்றாலம் பிள்ளை அவர்களால் எழு தப்பட்ட மான்மியமே இன்று கிடைக்கின்ற முதலாவது மான்மியம் எனக்கூறலாம். மான்மியம் என்பது பல்வேறு பெயர்களில் இடம் பெற்று வந்துள்ளமை கருத்திற் கொள்ளற்பாலது. ஆனால் சங்க இலக்கியங்கள் அரசர்கள், கொடை வள்ளல்களின் புகழைப் பாடி யுள்ளன என்பதற்கான ஆதாரங்கள் நிறையவே உள்ளன. மான்மி யம் என்பது பாட்டுடைத் தலைவனை பெருமைப்படுத்துவதாகவும் அதன்வழி அவன் வாழும் நாடு, அவனின் கொடைத்திறன், போர், வீரம் என்பனவற்றை உள்ளடக்கியவையாக உள்ளன. சங்க இலக் கியங்கள் பெரும்பாலும் பாட்டுடைத்தலைவனின் பெயரைக் கூறா மல் எழுதப்படுவது மரபாக இருந்து வந்துள்ளது. தன்னை வைத்து ஆதரித்த சடையப்ப வள்ளல் என்பாரை 'சடையப்ப அந்தாதி' என்னும் நூலில் அவரைப் பாட்டுடைத் தலைவனாக்கி கொடைத்திறத்தைப் போற்றுவதாக அமைந்துள்ளது. இது மான்மி யம் என்ற பெயர் கொண்டு அழைக்கப்படவில்லை. எனவே அந் தாதி, அகவல், சிந்து, வெண்பா போன்ற நடைகளில் தலைவ னைப் பாடும் வழக்கம் தமிழ்ப் புலவர்களிடையே இருந்து வந்துள் ளது. ஆனால் இவை மான்மியம் என அழைக்கப்படவில்லை. கம் பராமாயணம், மகாபாரதம் போன்றன வரலாற்றையும் பாட்டுடைத் தலைவனின் பெருமைகளையும் நாட்டின் பெருமையையும் எடுத் துக்காட்டுகின்றன. சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற ஐம்பெ ருங்காப்பியங்களும் பாட்டுடைத் தலைவன் தலைவி பற்றிப் பாடப்பட்டுள்ளன எனினும் இவற்றை மான்மியம் என்ற வகைக்குள் உள்ளடக்கப்படவில்லை. எனவே மான்மியம் என்பது 16ம் நூற் றாண்டின் பின்னர்தான் தமிழ் இலக்கியத்தில் இடம்பெறத் தொடங் கியுள்ளன எனக் கொள்ளப்படுகின்றது. 'திருக்குருகை மான்மியம்' என்னும் நூல் 16ம் நூற்றாண்டில் வாழ்ந்த திருக்குருகைப் பெரு மாள் கவிராயலால் இயற்றப்பட்டது (1548) என மு. அருணாசலம் அவர்கள் தனது 'தமிழ் இலக்கியவரலாறு 16ம் நூற்றாண்டு' நூலில் குறிப்பிட்டுள்ளார். யாழ்ப்பாணத்தை ஆண்ட பரராசகேகரனின் பெருமையையும் வரலாற்றையும் எடுத்துரைக்கும் நூல் 'வையா பாடல்' வையாபுரி ஐயரால் 1505க்கும் 1519க்கும் இடையில் எழு தப்பட்டுள்ளதாக பதிவாகியுள்ளது. தொல்காப்பியர் எழுதியது தொல்காப்பியம் என்பது போன்று வையாபுரி ஐயரால் எழுதப்பட்ட மையால் இந்நூலுக்கு 'வையாபாடல் எனப் பெயர் ஏற்பட்டிருக் கக்கூடும் என்பது பதிப்பாளர்களின் குறிப்பாகும். இவை அனைத் தும் ஏட்டுச்சுவடிகளாக இருந்து பின்னர் அச்சுவாகனம் ஏறியவை என்பது புலப்படும். வையாபாடலில்

**'இலங்கை மாநகர் அரசியற்றிடு மரசன்றன் குலங்களானதும், குடிகள் வந்திடு முறைதானும்'**

எனக் குறிப்பிடப்படுவதனால் இந்நூல் வரலாற்றைக்கூற எழுதப் பட்ட நூல் என்பது கருத்திற் கொள்ளற்பாலது. தொல்தமிழில் பெருந்தொகையான நூல்கள் 16ம் நூற்றாண்டிலிருந்தே அச்சாகி உள்ளன என்பதற்கு 'சீகன் பாக்கு' என்னும் ஐரோப்பியரே கார ணமாவார். அவர் இந்தியாவிற்கு முதன் அச்சியந்திரத்தைக் கொண்டு வந்தவர் என்பதும் தமிழில் முதன்முதலில் நூல்களை யும் பிரசுரங்களையும் அச்சுப்பதிப்பித்தவர் என்பதும் அனைவரும் அறிந்ததே.

ஈழத்தவர்களிலே முதலிலே மான்மியம் எழுதியவர் ஆறுமுக நாவ லர் எனக்கொள்ளப்படுகின்றது. 'சிதம்பர மான்மியம்' என்னும் நூலை அவர் உரைநடையில் எழுதியுள்ளார். 1852ல் இந்நூல் பதிவாகியுள்ளது. 46 பக்கங்களைக் கொண்ட இந்த நூல் ஒரு வசன நூலாக பாமரரும் வாசித்து அறியக்கூடியதாக சிதம்பரம் அல்லது கோயில் என அழைக்கப்படும் திருத்தலத்திற்குச் செல் வதால் ஏற்படும் பயன்கள் பற்றி விளக்கம் தரப்பட்டுள்ளது. கதிர வேற்பிள்ளை அவர்கள் 1906ல் 'கருவூர் மான்மியம்' என்னும் நூல் ஈழத்தவரான கதிரவேற்பிள்ளை அவர்கள் எழுதியுள்ளார். இக்கா லத்தில் காணப்பட்ட சந்தர்ப்ப சூழ்நிலைகள் மக்களின் பிரச்சி னைகளுக்கு மேலாக ஐரோப்பியரின் வருகையும் அவர்கள் மத மாற்றத்தில் ஈடுபட்டமைக்கும் எதிராக சைவ, வைணவ சமயங் களை நிலை நிறுத்துவதற்காக எழுதப்பட்டவையாக அவற்றின் பெருமைகளைக் கூறவேண்டி நிலை இருந்துள்ளமையும் வரலாறு கற்றுத்தரும் பாடம்.

கனடாவில் ஊர்களின் பெருமைகூறும் சில மான்மியங்கள் வெளி வந்துள்ளன. புங்குடுதீவு மான்மியம், மாதகல் மான்மியம், மாமாங் கேஸ்வரர் மான்மியம் என்பன பெயரிலேயே வெளிவந்துள்ளன. முதலிரண்டும் ஊர் பெருமை பேச மூன்றாவது ஆலயப்பெருமை பேசுகின்றது.

ஆனால் ஆறுமுகநாவலர் ஈழத்தவராக இருப்பினும் சிதம்பரமான் மியத்தை எழுதியதற்கு இதுவே காரணமாக அமைந்துள்ளது என் பது வெளிப்படை. 15.12.2020 முல்லைத்தீவில் 'பனை மான்மியம்' என்னும் நிகழ்வு இடம்பெற்றுள்ளது. 'தாலம் சஞ்சிகை' வெளியீடு. 'செட்டிநாட்டு மாமியர் மான்மியம்'. கண்ணதாசன் அவர்களால் எழுதப்பட்டுள்ளது. 1998ல் எப்.எக்.சி. நடராசா அவர்களால் எழு தப்பட்ட மட்டக்களப்பு மான்மியமும் 'காரை நகர் மான்மியமும் (1971) வெளியீடு செய்யப்பட்டன. யழ்ப்பாணம் சித்தங்கேணி அம் பலவாண நாவலர். 'திருநாவலூர் மான்மியம்' நூலை 1907ல் எழு-தினார். இதனை அருணாசலச்செட்டியார் வெளியீடு செய்து வைத் துள்ளார் (1907). வன்னி நாச்சிமார் மான்மியம் என்னும் நூலை

சண்முகசுந்தரம் அவர்கள் எழுதியுள்ளார். இது வீராங்கனைகளான வன்னிச்சிமார் போர்த்துக்கேயரை எதிர்த்துப்போரிட்டுத் தோற்றுப்போன பின்னர் மானம் காப்பதற்காக உயிர் துறந்த வரலாறும் அவர்களின் பெருமையும் பேசப்படுகின்றது.

கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்களால் பாடப்பட்டது 'மருமக்கள் மான்மியம்'. அதற்கு முன்னர் வந்த மான்மியங்களில் இருந்து வேறுபட்டதாக சமூக இடர்வினைகளை எடுத்து நல்லதோர் காவியமாகப் புனைந்து, சமுதாயத்தினை திருந்தவேண்டும் என்பதனை உள்ளீடாக்கி, சமூக மாற்றத்திற்கு அத்திவாரம் இட்டதாக அமைந்தது. கவிமணி அவர்களின் கவித்துவத்தை எடுத்துக் காட்டுவதோடு அங்கதச் சுவை சொட்ட அவர் தந்திருப்பது இன்றும் வியப்பிற்குரியதாக அமைந்துள்ளது. அங்கதம் பற்றி ஆங்கிலத்தில் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது: அங்கதம்-மேலை நாட்டார் விளக்கம்: சமுதாயத்தில் நிலவிய சொத்துடைமையின் சீர்கேடுகளையும் பெண்களை அடிமைகளாக மாமிமாரே நடத்துவதையும் கண்ணுற்ற பிள்ளையவர்கள் மனம் நொந்து. தான் வாழும் சமுதாயத்தைத் திருத்தவேண்டும் என்னும் நோக்கோடு எழுதியதே 'மருமக்கள் வழி மான்மியம்' என்னும் அங்கதக் காவியம். அங்கதம் என்பதற்கு ஆங்கிலத்தில் காணப்படும் பொருளை இவ்வாறு எடுத்துக் கூறுகின்றார் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள்.

'மனித இனத்தின் அல்லது தனிப்பட்ட மனிதரின் தீயகுணங்கள் அல்லது குறைபாடுகள் அல்லது மூடத்தனமான செயல்கள் ஆகியவற்றைக் கேலியாகவோ, 'குறிப்பு முரண்' (ஐரணி) ஆகவோ, வேறுவிதமாகவோ வெளிக்கொணர்ந்து, அதன்மூலம் அவற்றைத் திருத்திக்கொள்ள மனிதரைத் தூண்டும் இலக்கியப் படைப்பே அங்கதம் எனப்படும்' - பிரிட்டானிகா கலைக் களஞ்சியம்.

'நாஞ்சில் நாட்டு மருமக்கள்வழி மான்மியம்' ஒரு சமுதாய அங்கதப் பாட்டாகும். நகைச்சுவையும் கிண்டலும் நிறைந்த அப்பாட்டுக்கு நிகரானதொரு அங்கதப்பாட்டு இதுவரை கிடைக்கவில்லை'.

'இம்மான்மியம், திருவனந்தபுரத்திலிருந்து முன் பிரசுரிக்கப்பட்டு வந்த தமிழன் என்ற பத்திரிகையில் 1917-ம் வருஷம், மார்ச் மாதம் தொடங்கிப் பகுதி பகுதியாக வெளிவந்து கொண்டிருந்தது. 1918-பெப்பிரவரியோடு முற்றுப்பெற்றது. அக்காலத்தில் அப்பத்திரிக்கையின் ஆசிரியராயிருந்தவர்கள் பண்டித எஸ். முத்துசாமிப் பிள்ளையவர்களும், திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரி மலையாளப் பேராசிரியர் சி.என்.ஏ. அனந்தராமைய சாஸ்திரிகளும் ஆவார்கள். பத்திரிகையில் ஆசிரியர் பெயரோடு 'மான்மியம்' வெளிவரவில்லை. பழைய ஏட்டுச்சுவடியில் இருந்த நூலை அச்சிற் பதிப்பிக்கிற பாவனையிலே வெளியாகிக் கொண்டிருந்தது. ஆசிரியர் பெயர் காணப்பெறாவிட்டாலும், பழைய நூல் என்ற தோற்றத்தோடு பிரசுரமாகிய போதிலும் இத்தோற்றத்தை உறுதிப்படுத்துவதற்கு நூலிற் சிற்சில வரிகளும் சொற்களும் பொடிந்து போயின என்று குறிப்பிட்டிருந்த போதிலும், எழுதியவர்கள் இன்னார்தாமென்பது பலருக்குத் தெரிந்த இரகசியமாகத்தான் இருந்தது. ஒவ்வொரு பகுதியும் வெளிவர, வெளிவரத் தமிழ் மக்கள் அதனை ஆவலாய் வாங்கிப் படித்து வந்தார்கள். இலக்கியச் சுவையிலே ஈடுபட்ட ஸ்ரீ கே.ஜி. சேயைர் முதலானவர்கள் இந்நூலின் பெருமையைப் பலரும் அறியச்செய்து வந்தார்கள்.

நாஞ்சினாட்டு இளைஞர்கள் இதனை வாசித்து உள்ளங் கொதித்தார்கள். அவர்களில் முதியோர்கள் இதனை வாசித்த அளவில் இதிலே பொதிந்து கிடக்கும் உண்மையையும், சீர்திருத்தத்தின் அவசியத்தையும் உணர்ந்தார்கள். அந்நாட்டு ஆண்களும் பெண்களும், நூலிலுள்ள நகைச்சுவையில் ஈடுபட்டு உள்ளத்தாற் சிரித்து மகிழ்ந்தார்கள். தமிழிலே ஒரு 'நூதன இலக்கியம்' தோன்றிவிட்டது.

மான்மியம் ஒரு சமுதாயத்தில் சீர்திருத்தத்தை விளைத்தது, அப்படியே தமிழ்நடையிலும், கவிஞர் சமுதாயத்திலும் சீர்திருத்தத்தை இது விளைவிக்க வல்லது என்பதைத் தமிழ் அறிஞர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.' (20-11-1942)

அங்கதப் பாடல்களால் அமைந்தது மருமக்கள் மான்மியம் அதனைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. 'சமூகத்தின் போலி ஒழுக்கம், சொல்லுக்கும் செயலுக்கும் இடையேயுள்ள முரண்பாடு முதலிய சமுதாயக் குறைபாடுகளை வெளிச்சம் போட்டுக் காட்டி, கண்டித்துத் திருத்துவதே அங்கதப் பாடல்களின் நோக்கமாகும் என்பது மேனாட்டார் கருத்து.' - முனைவர் வை. கிருஷ்ணமூர்த்தி. அவர்கள் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் படைப்புக்கள் 2007 என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளமை கருத்திற் கொள்ளத்தக்கது.


'ஸ்ரீ சி. தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் முற்போக்காளரில் முதன்மை பெற்றவர். 'மலபார் குவார்ட்டர்லி ரிவியூ' என்ற பத்திரிகையில், இவர்கள் நாஞ்சினாட்டு மக்கள் குறித்து எழுதிய ஆங்கிலக்கட்டுரை, அதுகாறும் உறங்கிக் கிடந்த சமூகத்தினரின் கண்களைத் திறந்து விழிக்கச் செய்தது. பிள்ளையவர்களுடைய தூய உள்ளமும் சீரிய நோக்கமும் மனத்தைக் கவர்ந்தன. நாஞ்சினாட்டு மக்கள் பலவகை இன்னல்களும் நீங்கி அதற்குரிய உயரிய நிலையை அடைய வேண்டுமென்ற ஆழ்ந்த உணர்ச்சி அவர்களுடைய சம்பாஷணைகளிலும் எழுத்திலும் பிரதிபலிக்கத் தொடங்கியது. அவர்கள் தமிழ் இலக்கியங்களில் ஊறியவர்கள் தமிழ் மக்களுடைய சரிதத்தை நன்கு உணர்ந்தவர்கள் தமிழர்களுடைய உயர்ந்த லட்சியங்களிலும் ஒழுக்க நியதிகளிலும் ஈடுபட்டவர்கள் ஆங்கிலக் கவிஞர்களின் அறிவுரைகளில் திளைத்தவர்கள் பிற சமுதாயச் சரித்திரங்களை ஊன்றி நோக்கியுணர்ந்தவர்கள் நாஞ்சினாட்டு இளைஞர்களுக்கு ஒரு லட்சிய புருஷராக உள்ளவர்கள் ஆடம்பரம் சிறிதும் இல்லாதவர்கள் ஆதலால், பிரசங்க மேடைகளிலோ, பிரசங்கக் கூட்டங்களிலோ அவர்களைக் காணுதல் அரிது. ஆனால், அமைதியோடும் உள்ளுணர்ச்சியோடும் தங்கள் சமுதாய நன்மையின் பொருட்டு இடைவிடாது உழைத்து வந்தார்கள். அவர்கள் உழைப்பில் சுயநலம் என்பது சிறிதும் இருப்பதற்கிடமேயில்லை. தூய வாழ்க்கையையுடையவர்கள் சந்தானம் அற்றவர்கள் எனவே, அதுபற்றிய பாசபந்தங்களும் அற்றவர்கள் இல்லறத்தேயிருந்தும் துறவியே.

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது.**

என்ற வள்ளுவர் குறளுக்கு லட்சியமாயுள்ளவர்கள். எப்பொழுதும் கல்வியிலும் ஆராய்ச்சியிலும் கவித்வ நிவேதனத்திலும் வாழ்ந்து வருபவர்கள். தாம் ஆற்றவேண்டும் அரிய முதற் கடமையாகும் என்று நினைத்தே, தமது சமுதாயச் சீர்திருத்தத்திலும் சட்டச் சீர்திருத்தத்திலும் பிள்ளையவர்கள் முனைந்தார்கள்.

இச்சந்தர்ப்பத்தில் நான் திருவனந்தபுரத்தில் பிள்ளையவர்கள் அருகில் வசித்து வந்தேன். ஆதலால் இங்கே எழுதுவனவெல்லாம் எனக்கு நேரில் தெரிந்தவையே. சட்டத்தைச் சீர்திருத்தும் விடயமாகப் பல நண்பர்களும் பிள்ளையவர்களைக் கண்டு கலந்து கொண்டு சென்றார்கள். 'ஸ்ரீ மூலம் பிரஜாஸபை'யின் அங்கத்தினர் பலர், பிள்ளையவர்கள் கூடவே தங்கியிருந்து சட்ட விஷயமாக விவாதித்துப் பரிசீலனை செய்துவந்தார்கள். தமது சமுதாயத்தினர் சுயநலத்தின் காரணமாகச் சீர்திருத்தத்திற்கு இணங்காமற் போய்விடுவார்களோ என்ற கவலை பிள்ளையவர்களுக்கு இருந்தது. இக்கவலை மனத்திற் பட்டவுடன், 'நாஞ்சினாட்டு வேளாளருக்கு ஒரு கோட்டை வினாக்கள்' முதலிய பல துண்டுப் பத்திரங்களை வெளியிட்டார்கள். சமுதாயத்தின் பரிதாபகரமான நிலையைச் சித்திரித்துக் காட்டினால், தம்மவர்கள் உண்மையுணர்ந்து சீர்திருத்த விஷயத்தில் ஒரு முகமாய் உழைப்பார்கள் என்று பிள்ளையவர்கள் கருதினார்கள். இதுதான் நாஞ்சினாட்டு மருமக்கள் வழி மான்மியத்தின் உற்பத்தியாகும்.' - எஸ்.வையாபுரிப் பிள்ளை அவர்கள் இந்நூலுக்கு எழுதிய முன்னுரையில் காணப்படும் கூற்றுக்கள் மான்மியத்தின் வேறுபட்ட அமைப்பை எடுத்துக் காட்டுகின்றது. சமுதாயத்தில் வேருன்றிக் கிடந்த பெண்டிமை மட்டுமல்ல பெண்களே பெண்களால் அடிமைகளாக அதுவும் மருமக்களை அடிமைகளாக வேலை வாங்குவதையும் அதிகாரம் செலுத்துவதையும் எடுத்துக்காட்டுகின்றது.

இவ்விதமாக தங்கள் மருமக்களை அடிமைகளாக நடத்திய நாஞ்சில் நாட்டு மாமியரைக் குறிவைத்த அவர் பாடியதற்கான காரணம் என்ன என்பதற்கு அவரது பாடல்களே விளக்கம் தருகின் றன.



sivapalu@thaiveedu.com



FOR SALE/ LEASE
FOR ALL YOUR REAL ESTATE NEEDS
கனவு இல்லம்
கைகளில் வர...
உங்கள் வீடு விற்பனை முகவர்...
Outstanding Agent
for Outstanding Results.
RE/MAX
Excel Realty Ltd., Brokerage*
Bus: 905.475.4750 Fax: 905.475.4770 50 Acadia Ave. Suite 120, Markham, ON L3R 0B3
RAJ NADARAJAH
SALES REPRESENTATIVE
DIR: 416.333.6115
nanohomes@gmail.com

# மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறி 10

- மல்லியப்புசந்தி திலகர்




**இலங்கைத் தொழிலாளர் இம்சைக்குரல்:**

1950கள் தொடங்கி 1980கள் வரை நீடித்த, தோட்டப்புர பாடல்களாக அமைந்த முச்சந்திப் பாடல்களைத் தொகுத்து வைத்திருந்தவர் பாவலர் எம்.பி. வேலசாமிதாசன். பல பாவலர்களும் பாடிய பாடல்களை இவர் சேகரித்து வைத்து பத்திரிகையாளர் கண்டி க.ப. சிவம் அவர்கள் வசம் இருந்து அவரிடமிருந்து அந்தனி ஜீவா, பெ.முத்துலிங்கம் ஆகியோர் ஊடாக பரதேசம் போன தமிழர்களின் பரிதாபப் பாடல்கள் என தொகுப்பாக்கம் பெற்றுள்ளது.

அந்தவகையில் பாவலர் எம்.பி. வேல்சாமிதாசன் மலையக முச்சந்தி இலக்கியத்தை பதிவு செய்து வரலாறாக்குவதில் முக்கிய இடத்தைப் பெறுகின்றார். அவரது பாடல்களை மாத்திரமின்றி அவரோடு சமகாலத்தில் வாழ்ந்த ஏனைய பாவலர்களினதும் பாடல்களைச் சேகரித்து வைத்த அவரது பணி, என்றும் போற்றுதற்குரியது.

கண்டி மாவட்டத்தின் தெல்தோட்டை பகுதியில் பட்டிகாமம் தோட்டத்தில் வாழ்ந்தவர் பாவலர் வேல்சாமிதாசன். தோட்டத் தொழிலாளியான இவர், ஆரம்பத்தில் எம்.பி. வேல்சாமி எனும் பெயரில் தொழிலாளர் துயரங்கைளப் பாடி வந்துள்ளார். பின்னாளில் பக்திப் பாடல்களையும் இயற்றிப் பாடிவந்துள்ளார். 2000ம் ஆண்டிலேயே மரணித்த இவர் 1957ம் ஆண்டிலேயே ‘இலங்கைத் தொழிலாளர் இம்சைக் குரல்’ எனும் பாட்டுப் புத்தகம் ஒன்றை அச்சிட்டு வெளியிட்டுள்ளார். அப்போதே அந்தப் புத்தகம் இரண்டாம் பாகம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. தவிரவும் அந்தப் புத்தகத்தின் அட்டைப் படத்தில் அவதானிக்கத்தக்கதான பல அம்சங்கள் உள்ளன. அவரது பெயரை ‘மெய்லாங்கோன்பட்டி’ எம்.பி. வேல்சாமி எனக் குறிப்பிடுகிறார். அது இந்தியாவில் தமிழ் நாட்டில் அவரது பூர்விக கிராமத்தின் பெயர் என்பது தெளிவு. இதன் மூலம் மலையகத் தமிழருக்கும் தமிழகத்துக்குமான வேரின் அடையாளம் இங்கே பதிவு பெறுகிறது.

அதேநேரம் அட்டைப்படத்தில் மகாத்மா காந்தியினதும், ஜவகர்லால் நேருவினதும் நிழற்படங்களையும் மத்தியில் இந்திய தேச அடையாளத்தையும் அதில் பாரதமாதா அடையாளத்தையும்கூட பதிவு செய்துள்ளார். இந்தியா மீதான இவரது பற்றுதலை இவை காட்டி நிற்கின்றன. ஆச்சரியப்படத்தக்கவகையில் இவர் இந்தியா திரும்பிச் செல்லாது இலங்கையிலேயே வாழ்ந்து மடிந்துள்ளார்.

இந்த நினைவூட்டல் மூலம் இலங்கை - இந்தியா இடையே வாழ்ந்து வரும் இந்த மலையகத் தமிழரின் பரிமாற்றமுற்ற வாழ்க்கைப் பரிமாணம் குறித்த பல வெளிகளைத் திறந்து விடுகிறது. இந்தியாவில் பிறந்து இலங்கை வந்து மீண்டும் இந்தியா சென்று வாழும் எழுத்தாளர் சி. பன்னீர்செல்வம் அவர்களுக்கு அண்மையில் இணைய வழி பாராட்டு விழா ஒன்றை நடத்தி இருந்தோம். இது ஒரு அடையாளப்படுத்தலே.

அதேபோல இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு தாயகம் திரும்பியவர்களாகச் சென்ற ஒரு குடும்பத்தின் அடுத்த தலைமுறையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் எழுதி பாடிய ‘ரப்’ பாடல் ஒன்று அண்மையில் சமூக ஊடக வலைத்தளங்களில் வைரலாக பரவி வருகிறது. xccng இணையத்தில் பத்து மில்லியன் பார்வையாளர்களைக் கடந்து சாதனைப் பாடைத்திருக்கும் ‘என்ஜோய் ஏஞ்சாமி’ (Enjoy Enjami) எனும் பாடலை எழுதிய ‘அறிவு’ எனும் ரப் பாடகர் தனது பாடல்வரிகளுக்கான அடிப்படையை தனது பாட்டி வள்ளியம்மையே தந்தார் என்கிறார். அவரது பாட்டி தன்னை ‘ஏஞ்சாமி’ என அழைக்கும் அந்த ஆரம்பப் புள்ளியில் இருந்தே இந்த ரப் பாடல் நீட்சி பெறுகிறது. இடையில் தான் வள்ளியம்மை பேரன் எனவும் எழுதிச் செல்லும் அறிவு, மேலும் அந்தப் பாட்டியின் ஒப்பாரி வரிகளையும் பாடலில் சேர்த்துள்ளார். இலங்கைப் பின்புலம் கொண்ட பாடகி தீ யுடன் இணைந்து அறிவு பாடியுள்ள இந்தப் பாடல் சந்தோஷ் நாராயணன் இசையில், இசையமைப்பாளர் ஏ.ஆர். ரகுமான், இயக்குனர் பா. ரஞ்சித் ஆகியோரின் பங்களிப்புகளையும் இணைத்ததாக இன்று பரவலடைந்து விரிவாக்கம் பெற்று வருகிறது.

சிறிமா - சாஸ்த்திரி ஒப்பந்தத்தின்கீழ் இலங்கை மலையகத்தில் இருந்து தாயகம் திரும்பியவராக தமிழகம் சென்ற வள்ளியம்மை (பதுளை பகுதியில் இருந்து சென்றவர் என அறியமுடிகிறது) என்பவரின் வாய்மொழி பாடல் கொடுத்த அடிப்படை, இன்று அவரது அடுத்த இரண்டாவது தலைமுறை ஊடாக இந்திய மண்ணிலும் சர்வதேச அளவிலும் மலையக அடையாளத்தை ஒரு மாற்றுக் கலைப் பரிமாணத்தில் முன்வைப்பதனை அவதானிக்கலாம்.

எம்.பி. வேல்சாமிதாசன் இந்தியா திரும்பிய ஒருவராக மீண்டும் அவரது மெய்லாங்கோன்பட்டி கிராமத்துக்குச் சென்றிருந்தால் எப்படியான திருப்பங்கள் வந்திருக்கலாம் என்பதும், அல்லது இப்போது மெய்லாங்கோன்பட்டி எனும் கிராமத்தில் அவரது வேர்கள் ஏதும் கலைப் பரிமாணங்களைப் பெற்றிருக்கின்றனவா என்பதை ஆய்வு செய்யவுமே இந்தத் தகவல்கள் இங்கே இணைத்துப் பார்க்கப்படுகின்றன.

கண்டி, ராஜ வீதியில் அமையப் பெற்றிருந்த குருநாதன் அச்சுகூடத்தில் 1957-12-1 திகதியிடப்பட்டு அச்சிடப்பட்டுள்ள இந்த நூலின் அப்போதைய விலை 4 அனா என குறிப்பிடப்பட்டுள்ளது. சதமே மறைந்துவரும் இன்றைய காலத்தில் அனாவையும் ஞாபகப்படுத்திச் செல்கிறது இந்த நூல்.

‘இலங்கைத் தொழிலாளர்களின் இம்சைக்குரல்’ எனத் தலைப்பிடப்பட்டுள்ள இந்த நூல் இலங்கையில் இந்தியத் தொழிலாளர்களாக வந்த மக்கள் படும் துன்பத்தை, ‘இம்சைக் குரல்’ எனும் ஒரு சொல்லாடலின் ஊடாக முழுமையாக பதிவு செய்துவிடுவதை அவதானிக்கலாம்.

**வானம் பூமி நடு மத்தியிலுதித்த**
**மானுட நேயர்களே - சிறந்த**
**மானுட நேயர்களே**
**மானகர் லங்கையில் கானகமழித்து**
**மாடுபோலே நுழைத்தோம் - தினம்**
**மாடுபோலே யுழைத்தோம்**

**கங்காணிகள் தோட்டப் பங்காளிகள் போலவே**
**காவலாக வருவார் - நமக்கு**
**காவலாக வருவார்**
**சிந்தாமணியினில் விந்தைனீர் பெருக**
**சீறி மிரட்டிடுவார் - கங்காணி**
**ச்சீச்சிப்போ என்றுடுவார்**

**என்னையா கங்காணி எங்களையிப்படி**
**ஏசாதீரென்று சொன்னால் - தாறுமாறாக**
**ஏசாதீரென்று சொன்னால்**
**என்னா ரொம்ப சட்டமும் பேசுறாயென்று**
**ஏகி நடந்திடுவார் - துரையிடம்**
**ஏவலைப் போலுரைப்பார்**

இப்படி தொழிலாளர் துயரங்களைப் பாடியுள்ள பாவலர் வேல்சாமி தாசன், பின்வருமாறு தொழிலாளர் வாழ்க்கையைப் பதிவு செய்துள்ளார்.

**இந்தியாவிலிருந்துவந்த சேதி கேளுங்கோ - முன்**
**இறந்துபோன பாட்டன் படகில் வந்தார் பாருங்கோ**
**இலங்கை நகர் ஈ நுழையாக்காடு தானுங்கோ - பாட்டன்**
**இருதயத்தைக் கலங்கவிடா தழித்திட்டாருங்கோ**

என்ற வரிகளில் ஈ நுழையாத இலங்கை காடுகளை எவ்வாறு இந்தியத் தொழிலாளர்கள் வளமாக்கினர் என்பதையும்,

**காலை மணி ஐந்துக்கெல்லாம் தப்படிப்பாங்கோ - வந்து**
**கணக்குப் புள்ளே ஆறுக்கெல்லாம் பெரெட் எடுப்பாங்கோ**
**வேளையிலே ஏழுக்கெல்லாம் இல்லாவிட்டாங்கோ - நமக்கு**
**வேலையில்லை என்று சொல்லி விரட்டிடுவாங்கோ**

என்ற வரிகளில் காலை நேரத்தில் தொழிலாளர்களை வேலைக்குத் தயார் செய்யும் முறை பற்றி விபரிக்கிறார். காலையில் 'தப்பு' இசை எழுப்பி தொழிலாளர்களை வேலைக்கு தயாராக்கும் கலை 1980களின் இறுதி வரை தோட்டங்களில் நடைமுறையில் இருந்தது. இதனை இத்தகைய பாடல்கள் மாத்திரமே பதிவு செய்கின்றன. அதேபோல 'பெரெட்' எடுத்தல் எனும் இராணுவ நிர்வாக சொல்லாடல் பதிவு செய்யப்பட்டுள்ளமை அவதானத்துக்கு உரியது.

**தென்னிலங்கை வாழும் பெரியோரே கேளுங்கோ - இந்த**
**தேசத்தில் படுந்துயரங்களை பாடி வாருங்கோ**

**ஓட்டுரிமை நாட்டுரிமை ரெண்டும் போச்சுதே - இப்போ**
**ஓரவஞ்சகம் பேசும் நீதி அதிகமாச்சுதே**

**சங்கடங்களைத் துலைக்க ஒன்று சேருங்கள்- லங்கை**
**சாதனர்களாக்கும்படியாகப் பாருங்கள்**

**சங்கையோடிருந்துலங்கை வாழுமன்பரே - நமது**
**சச்சரவை நீக்கச் சங்கம் சேர்த்திடுவீரே**

இலங்கை சிங்கள அரசை தென்னிலங்கை என விளிக்கும் இப்போதைய பாங்கு அப்போதே மலையகத்தில் நிலவியிருக்கிறது. தவிரவும் பறிக்கப்பட்ட குடியுரிமையைப் பெற்று இலங்கையராக வேண்டும் என்ற அரசியல் முன்வைப்பே மலையகத்தில் இடம் பெற்றுள்ளமையை அவதானிக்கலாம்.

ஒரு தோட்டத் தொழிலாளியாக மலையக வாழ்வியலை, தொழில் வாழ்வை, அரசியலைத் தனது பாடல்களின் ஊடாக பதிவு செய்து, அதனை அச்சிட்டு வெளியீடும் செய்துள்ள பாவலர் வேல்சாமிதாசன் போன்ற ஆளுமைகள் மலையக வரலாற்றில் முக்கிய இடம் பெறுகின்றனர்.

(தொடரும்)



thilagar@thaiveedu.com



# இலெமூரியா அல்லது குமரிக்கண்டம் 12

- அ. கணபதிப்பிள்ளை

குமரிக்கண்டம் தொடர்பான ஆய்வாளர்கள் பல எதிர்ப்புக் குரல்களுக்குப் பதில் செல்ல வேண்டியவர்களாகவே இருந்து வருகிறார்கள். புவியியல், சமுத்திரவியல், புவிச்சரிதவியல், வானியல், வளிமண்டலவியல், வரலாறு தொல்பொருளியல் போன்ற துறைகளில் ஏற்பட்ட புதிய விஞ்ஞானச் சிந்தனைகளும் தொழில்நுட்பங்களும் கணினிப் பயன்பாட்டாய்வுகளும் உலகச் சிந்தனையாளர்களை ஒன்றிணைத்து புதிய காலப்பகுதியை நோக்கி மனித சமூகத்தை முன்னேற்றிக் கொண்டிருக்கிறது. எடுகோள்களும் கோட்பாடுகளும் மீளவும் வாய்ப்புப் பார்க்கப்பட்டு வருகின்றன.

கடைசிப் பனிக் காலமான பிளைஸ்தோசினின் இறுதிப்பகுதியில் கடலால் மூழ்கடிக்கப்பட்ட இந்துசமுத்திரத்தில் புவிவரலாற்றினைச் சற்றே பின்நோக்கித் திருப்பி இலெமூரியாவைத் தேடுதல் உய்த்தறிவு(Deductive Reasoning)ஆய்வுமுறையானது பேணப்பட வேண்டியிருக்கிறது. இது வலுவான காரணங்களிலிருந்து அல்லது ஊகத்திலிருந்து கோட்பாடென்றினை உருவாக்கும்முறை (கலி-போணியா பல்கலைக்கழகம்). இந்த ஆய்வுமுறையானது தரவு-களை மையப்படுத்தி முடிவினை வாய்ப்புப் பார்க்கும் தொகுத்தறிமுறையிலிருந்து (Inductive Reasoning) வேறுபடுகிறது.

இந்நிலையில் தான் குமரிக்கண்டம் அல்லது இலெமூரியா தொடர்பான ஆய்வினைச் சற்று பின்நோக்கி எடுத்துச் செல்லவேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது. இதற்குப் பலகாரணங்களிருப்பினும் அதில் முதன்மை பெறுவது, பல குமரிக்கண்ட ஆய்வாளர்களாற் சொல்லப்படும் 'இலெமூரியாவும் குமரிக்கண்டமும் ஒன்றல்ல வேறு வேறானவை' என்ற பதிவுகளாகும். இது ஒருவிதத்தில் குமரிக்கண்டம் என ஒரு நிலப்பரப்பு இந்துசமுத்திரத்தில் இருக்கவேயில்லை என்பதனை உறுதிப்படுத்த முயற்சிக்கும் உபாயமாகவும் இருந்து வருகிறது.

இலெமூரியாவின் பரந்த நிலப்பரப்பினைக் காட்டவென வரைந்த படமானது கற்பனையில் வரையப்பட்டதாகவே சாதாரண வாசகர்களிடையே எண்ணக்கருத்து உருவாகியிருக்கிறது. இதற்கான காரணம் இலெமூரியாக் கண்டமானது அவுஸ்திரேலியா, மடகஸ்கார், தென்னிந்தியா ஆகியவற்றை இணைக்கும் கூம்புவடிவத் தென் கண்டமாக மிகைப்படுத்தப்பட்ட பரப்பளவினைக் கொண்டு வரையப்பட்டிருந்தது. அதற்கான சரியான ஆதாரப் பின்னணி அங்கு பின்பற்றப்பட்டிருக்கவில்லை என்ற கருத்தும் பரவலாகத் தெரிவிக்கப்பட்டு வருவதனையும் காணக்கூடியதாகவுமிருந்தது.

அதனைவிடவும், இதுவரையில் நிகழ்த்தப்பட்ட குமரிக்கண்டம் தொடர்பான ஆய்வுகளில் புதிய புதிய முடிவுகள் வெளிவந்த வண்ணமுள்ளன. அவை புவிச்சரிதகாலம் முழுவதும் நிகழ்ந்த பல்வேறு மாற்றங்களை உறுதிப்படுத்துவனவாக இருப்பதுடன் புதிய கருதுகோள்கள், ஐயப்பாடுகள் பலவற்றுக்குச் சான்றளிப்பனவாகவும் இருந்துவருகின்றன. இந்நிலையில் குமரிக்கண்ட ஆய்வாளர்களால் பயன்படுத்தப்படும் புவிச்சரிதவியற் கால அட்டவணையானது சர்வதேச நியம அட்டவணைக்குப் பொருந்துவதாகக் காட்டப்பட்டிருக்காமையினால் பல விளக்கமின்மையினைத் தோற்றுவித்திருக்கிறது என்பதனை உறுதியாகக் கூறிவிட முடிகிறது.

சூரிய குடும்பத்தில் அகக்கோளாகவும் நிலக்கோளாகவும் இருக்கும் பூமி தோன்றி 4.56 பில்லியன் வருடங்கள் என்று விஞ்ஞானிகள் உறுதிப்படுத்தியிருக்கிறார்கள். சகாராப் பாலைவனத்தில் கண்டெடுக்கப்பட்ட கற்பாறையொன்றின் வயது 4.57 பில்லியனென உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. இதற்கு விஞ்ஞானிகள் தரும் விளக்கம் இரட்டை நட்சத்திரக் கருதுகோள் எனக் கூறிவருகின்றனர். கோளங்களில் நீர் வரக் காரணமாக இருந்தது இந்த இரண்டாவது நட்சத்திரம் என்பதுவும் கோட்பாட்டளவில் இருக்கிறது. இதேபோலவே பூமிக்கிரகத்தின் புதுமைகளை மனிதகுலம் இன்னமும் வியப்புடன் ஆராய்ந்து கொண்டுதானிருக்கிறது.

பூமித்தகடு எப்பொழுது நகரத் தொடங்கியது என்ற கேள்வியுடன் புதிய ஆய்வு முக்கியம் பெறத் தொடங்கியதிலிருந்து புமியில் ஏற்பட்டிருந்த மாற்றங்கள் நன்கு அவதானிக்கப்பட்டிருந்தன. லூகாஸ் ஜோயல், (செப்ரெம்பர் 6, 2019ல்) 'ரிங்கறிங் வித் ரெக்ரோனிகஸ் என்ற கட்டுரையில் (Tinkering with Tectonics Sept 6,2019) நோர்வே ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் இருந்து ஆய்வுசெய்த பேராசிரியர் பபியோ கிறமேறி 2016ல் இக்கேள்வியைக் கேட்டதாகக் குறிப்பிடுகிறார் (Fabio Crameri 2016). மாநாட்டில் பங்கேற்றவர்களில் ஒரு பிரிவினர் 4 பில்லியன் என்றும் மற்றையோர் 800 மில்லியன் ஆண்டெனவும் குறிப்பிட்டிருந்தனர். மீண்டும் கிறமேறி 2018ல் இதே கேள்வியைக் கேட்டிருந்தார். இவர் நியமித்த குழுவினர் அவுஸ்திரேலியா கன்பெறா தேசியப் பல்கலைக்கழகத்தில், சமுத்திரக் கண்டநகர்வின் புதிய பார்வையாக அதனை நோக்கியிருந்தனர். இக்குழுவினது ஆய்வின் இறுதியில் புவிமேலோட்டுத் தகட்டை மன்றில் மேற்காவுகைப் பெயர்ச்சியிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாது என்ற முடிவுக்கு வந்திருந்தனர். மேற்காவுகை சூடான மன்றில் படையை உயர்துவதன் மூலம் நடுக்கண்டப் பாறைத் தொடரை உருவாக்கியது. முடிவில் பூமிகுளிரத் தொடங்கியதால் வெளியேற்றப்பட்ட குளம்பு இறுகும் வாய்ப்பு ஏற்பட்டிருந்தது என்றும் குறிப்பிட்டுள்ளனர். இந்த மாற்றத்தினை பூமியில் உயிர்வாழக்கூடிய சூழலியல் மாற்றமாக உயிரினப் புவியியலாளர்கள் அவதானிக்கத் தொடங்கியிருந்தனர்.

புவி உயிரின வரலாற்றில் மன்றில் மேற்காவுகை பாரிய மாற்றத்தினை ஏறபடுத்தியிருந்தது. ஜி.எஸ்.ஏ. புவிச்சரிதவியற் கால அட்டவணையின் படி 800 மில்லியன் ஆண்டுகளில் ஏற்பட்ட மாற்றமானது நவீன முதலுயிர்காலத்தின் முடிவுக்காலமாக இருந்தது. பின்னர் பழைய உயிரினக் காலத்தில் மூன்றாம் பகுதியான சிலூரியனின் தொடக்கம் 445 மில்லியனாக இருந்தது. அது பேமியனுடன் 251 மில்லியனுடன் முடிவடைகிறது. பின்னர் இடைஉயிரினக்காலம் கிறிடேசியஸ் காலத்துடன் 66. மில்லியன் ஆண்டுடன் முடிவடைகிறது. அடுத்த புதிய உயிரினக்காலம் மூன்றாவது நான்காவது பிரிவுகளுக்குரியதாகப் பிரித்து அடையாளங் காணப்பட்டன. மூன்றாவது பிரிவுக் காலத்தில் மயோசின் 23 மில்லியனில் தொடங்கி 5.33 மில்லியனில் முடிவடைகிறது. நாலாவது பிரிவுக்

காலத்துக்குரிய பிளைஸ்தோசின் 2.58 மில்லியனில் தொடங்கி அண்மைக்காலமான 12,000 ஆண்டுகளுடன் முடிவடைந்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

இக்கால அளவினை ஒட்டியதாகப் பல ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டதுடன் பல உயிரினப் போரழிவுகளும் அடையாளப்படுத்தப் பட்டிருந்தன. புவிமேலோட்டிலும் மன்ரிலிலும் ஏற்பட்ட மாற்றங்கள் வளிமண்டலவியலிலும் மாற்றங்களை எற்படுத்தியிருந்தன. நாலாவது பிரிவான பிளைஸ்தோசின் மனிதகுலத் தோற்றத்துடன் தொடர்புபட்டிருப்பதனால் அக்காலப்பகுதியே குமரிக்கண்டம் தொடர்பான ஆய்வுகளில் கூர்ந்து கவனிக்கப்பட்டு வந்தமையினைக் காணலாம். அதேவேளை இந்துசமுத்திரக் கடல் தரை மேற்பரப்பு மாற்றங்களில் பேமியன்காலம் முதல் கவனஞ் செலுத்தப் பட்டது. இக்காலத்தைத் தொடர்ந்தே கொண்டுவானாவின் கண்ட மற்றும் உபகண்ட நாகர்வுகள் அடையாளப்படுத்தப்பட்டிருந்தன. இக்காலப்பகுதியினை முதன்மையாகக் கொண்டுதான் இலெமூறியாவின் தோற்றம் ஆராயப்பட்டாலும் உயிரினப்புவியியல் மற்றும் புவிச்சரிதவியல் ஆய்வுாளர்கள் பிளைஸ்தோசின் காலத்தினை முதன்மைப்படுத்துவதனைக் கவனத்துக்கு எடுத்துக்கொள்ளவேண்டும்.

240 மில்லியன் ஆண்டுகளில் ஒன்றாயிருந்த தென்கண்டங்களான தென்அமெரிக்கா, ஆபிரிக்கா இரண்டும் அண்டாட்டிக்கா, அவுஸ்திரேலியா, இந்தியா ஆகியவற்றிலிருந்து பிரியத் தொடங்கியிருந்தாலும் இந்துசமுத்திரக் கண்டநகர்வு மெதுவாகவே ஏற்பட்டிருந்ததாக ஆய்வுகள் வெளிக்கொண்டு வந்துள்ளன. ஆபிரிக்காவிலிருந்து ஒன்றுக்கு மேற்பட்ட பிளவுகள் ஏற்பட்டிருந்ததாகவும் அதில் கடைசியானது இப்பொழுது அவதானிக்கப்படுவதாகவும் சொல்லப்படுகிறது. இச்செயலானது இந்துசமுத்திரத்திலிருந்து மேற்காவுகைச் செயற்பாடு விரைவாகவும் மெதுவாகவும் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதனை உறுதிப்படுத்துகிறது.

இந்தியாவின் கொண்டிப் பழங்குடியினர் பரவலாக வாழ்ந்துவரும் வடக்கு விந்தியப் பிரதேசமான கொண்டுவானாலாந்து பேமியன்ரையாசிக் காலத்துக்குரிய அடையற்பாறைகளான நிலக்கரிப்பாறைகளைக் கொண்டிருந்தன. பிரித்தானியர் அப்பகுதியில் தமக்குத் தேவையான நிலக்கரியைப் பெறுவதில் 1850களில் ஆய்வுகள் நடத்தியிருந்தனர். இவர்கள் பலதடவைகள் பழங்குடியினருடன் முரண்படவேண்டியேற்பட்டது. இவ்வகையான அடையற்பாறையானது கண்டநகர்வுக்கு முன்னையதாக இருந்திருக்கவேண்டும். 90 மில்லியன் ஆண்டுகளில் பழைய ஈரவலயக் காடுகள் அண்டாட்டிக்கா பனியின் கீழாக இருப்பதனை அண்டாட்டிக்காவின் ஆய்வாளர் குழுவினர் அவதானித்திருந்தனர் இக்காலத்தினை 145 மில்லியனுக்கும் 65 மில்லியனுக்கும் இடைப்பட்டதாகவும் அக்காலத்தில் அங்கே 35 பாகை செல்சியஸ் வரை வெப்பம் இருந்ததாகவும் ஆய்வுகள் குறிப்பிட்டன.

மரக்காடுகள் புதையுண்டதால் உருவான அடையல் வகைப் பாறைகள் உருவாகிய 65 மில்லியனுக்குப் பின்னர்தான் தக்கண பீடபூமி அண்டாட்டிக்காவிலிருந்து பிரிந்து வந்திருக்கவேண்டும். இந்தப்பிரிவிளை 40 மில்லியனில் ஏற்பட்ட விரைவானதொரு கண்ட மிதவையாகவும் இதனால் ஏற்பட்ட இமயத்தின் மோதுகையும் நிலஉயர்ச்சியும் இன்றுவரையில் தொடர்வதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பேமியன் காலத்தைத் தொடர்ந்து பாரிய உயிரினங்களான டைனசோர்களது ஆக்கிரமிப்பும் காணப்பட்டிருக்கிறது. அச்செயற்பாடுகளினால் இன்று இந்துசமுத்திரத்திலும் அங்குள்ள தீவுகளிலும் தென்இந்தியாவிலும் கனிமவளத்துக்கான ஆதிக்க வல்லரசுகளின் தேடல்கள் அதிகரித்த வண்ணமுள்ளன.

இந்துசமுத்திரத்திலும் இந்தியாவிலும் பிரித்தானியரது கவனம் அதிகரிக்க பிரித்தானிய, ஐரோப்பியப் புவியியலாளர்களது ஆய்வும் தேவையும் கூடிக் கொண்டுவந்தது. உயிரினங்களின் பரிணமம், வளர்ச்சி தொடர்பான ஆய்வுகளில் மனித முன்னோடிகளான பாலூட்டிகளது பரம்பல் பற்றி அறியும் ஆவலும் அதிகரித்தது. இதன் பின்னணியில் மனிதரது தொன்மையிடம் எதுவென அறியும் ஆவலுக்கும் விதைபோடப்பட்டிருந்தது. பழைய வர்த்தகக் காலனித்துவ முறையிலிருந்து வேறுபட்ட பிரித்தானியர் இந்திய மற்றும் தென்தீவக மக்களை இணைத்து அவர்களது கலாச்சாரத்தாலும் அவர்களது செவிவழிக்கற்கைகளாலும் கவரப்பட்டதால் புதிய கோட்பாடுகளை உருவாக்குவதில் ஆர்வமாகக் காணப்பட்டனர். இதனால் இந்தியக் கருவூலங்கள் பல ஐரோப்பியரால் மேலைத் தேசத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு விட்டன.

இப்பொழுது மடகஸ்கால் தீவில் இருக்கும் நீந்தத்தெரியாத லெமூர் என்ற பாலுட்டி 65 மில்லியனாண்டில் ஆபிரிக்காவில் இருந்ததென்றும் கண்டநகர்வின் பின்னர் இந்தியாவிலிருந்து மடகஸ்காருக்கு வந்ததாகவும் அவை டைனசோருடன் வசித்ததாகவும் ஆய்வாளர்கள் குறிப்பிட்டிருந்தனர். இதிலிருந்து இந்தியத் தேவாங்குக்கும் லெமூருக்குமான தொடர்பும் உறுதிப்படுத்தப்பட்டது. தாய்வழி ஆதிக்கமுடைய நீலமான பெரிய கண்களையுடைய இவ்வின வகைகள் மேற்கே பார்த்துக் கொண்டிருப்பதாலும் மூதாதையினரது உயிராகவும் தமிழர்கள் பார்க்கத் தொடங்கியிருந்தனர் என்ற குறிப்பு இருப்பதனையும் இங்கு கவனத்தில் கொள்ளலாம்.

லேமூரின் பிரதேசப் பரம்பலானது ஏற்படுத்திய ஆர்வமானது இலெமூரியா என்ற நிலம் இந்து சமுத்திரத்தில் பரந்திருந்தது என்ற கருத்துக்கு உரமூட்டியிருந்தது. நடுக்கண்டப் பாறைத்தொடர்களது உருவாக்கமும் பனியுகக்காலத்தில் கடல் வற்றியமையும் இந்து சமுத்திரத்தில் பெரிய நிலப்பரப்பானது காணப்படக் காரணமாக அமைந்திருந்தன. இந்த நிலப்பரப்பினை என்ன பெயர் கொண்டு அழைக்கலாம் எனச் சிந்தித்த ஆய்வாளர்கள் அதனை இலெமூரியா என்று அழைத்திருந்தனர். இப்பாகம் தென்னிந்தியாவின் தொடர்ச்சியாக இருந்ததனால் குமரிக்கண்டம் என்பதாகவே தமிழ் ஆய்வாளர்களால் அழைக்கப்பட்டது. பனிக்காலத்தின் பல்வேறு மாற்றங்களுக்குத் தக்கதாக அதன் பரப்பளவானது விரிந்தும் சுருங்கியும் காணப்பட்டது. இதிலிருந்து இலெமூரியாவை எல்லைப்படுத்தும் படங்களில் தவறுகள் காணப்பட்டிருப்பதனைக் காணமுடிகிறது என்பது மீளவும் இங்கு வலியுறுத்தப்படுகிறது.

கடல்கொண்ட இலெமூரியாவைத் தேடியதைப் போலவே இன்றைய ஐரோப்பியக் கடலாய்வாளர்கள் அற்லான்ரிஸ் என்ற கடல் கொண்டுபோன கி.மு.3600 வருட நாகரிக நகரத்தினைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். கிமு 350 ஆண்டில் வாழ்ந்த கிரேக்க அறிஞர் பிளேடோவால் இந்த நகரத்துக்கான குறிப்புகள் கண்டறிந்து கொடுக்கப்பட்டிருந்தது. இந்த நகரத்தினைக் கண்டறிவதனால் ஐரோப்பிய இனமேலாண்மை உறுதிப்படுத்தப்படும் எனவும் சிலர் நம்பியிருந்தனர். பிளேடோவின் குறிப்புகளில் காணப்பட்ட இங்கே யானைகளிருந்தன. எருதுகளை இங்கிருந்த மக்கள் வழிபட்டனர். சிகப்பு, கறுப்பு, வெள்ளைப் பாறைகள் காணப்பட்டன, வட்ட வடிவமான நீர்வழிகொண்ட கட்டடக்கலை காணப்பட்டது, எரிமலையால் நகரமழிந்தது, கடலலையால் ஓர் இரவில் மூழ்கடிக்கப் பட்டது, கி.மு.9000 ஆண்டுக்கு முன்னைய ஆரம்பம் போன்றன இணைந்த 40,000 சொற்களைக் கொண்ட கதையினால் இன்னதும் தேடல் தொடர்கிறது.

இலெமூரியா என்ற குமரிக்கண்டத்தின் குறிப்பினைச் சிலப்பதிகாரப் பாடல் வரியான -'பஃறுளியாறும் பன்மலையடுக்கத்துக் குமரிக் கோடும்' - என்பதிலிருந்து பெறக்கூடியதாக இருக்கிறது. பன்மலை அடுக்கம் எனப்படும் தொடர்ச்சியான பல அடுக்குகளில் அமைந்திருந்த பீடபூமிகளும் (Plateau) மேருவை மையமாகக் கொண்ட குமரி மலைத்தொடரும் (Mountain Range) அதில் மேரு எனப்படும் மலைமுகடும் (மலைச்சிகரம்) மலைத்தொடரில் இருந்து ஓடிவரும் பஃறுளி என்ற ஆறும் செழித்தோடிய பூமியும் மக்கள் வாழ்வுக்கு ஏற்றபகுதியாக அடையாளப்படுத்தப் பட்டிருப்பதனைக் காணமுடிகிறது. இந்த நிலப்பகுதி எங்கிருந்து எங்கு வரையில் பரந்திருந்தது என்பதில் இறையனானார் அகப்பொருளுரையிலிருந்தும் ஆய்வுகளிலிருந்தும் சரியான விளக்கத்தினைப் பெறவேண்டியிருக்கிறது.

(தொடரும்)



kanapathipillai.a@thaiveedu.com

# தமிழ்வலை - 66


‘தாய்வீடு’ சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் ‘தமிழ்வலை’யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.

**பெயர்:**

**முகவரி:**

**தொலைபேசி எண்:**

**மின்னஞ்சல்வரி:**



## தமிழ்வலை-66 வினா

**இடமிருந்து வலம்**

3 இஸ்லாமிய கல்வி நிலையம்
6 பேர்போன வரைகலை ஓவியர்
7 உதவி
9 காதலரை பலர் புறங்கூறுதல்
11 துயரப்படு
12 மோதல் இடம்பெறும் ஆசிய நாடு
13 கொடை
14 பழம்பெரும் இந்திய மொழி
15 யாழ் குடாநாட்டில் ஓர் இடம்
18 2019ம் ஆண்டு இலங்கையில் படுகொலை இடம்பெற்ற நாள்

**மேலிருந்து கீழ்**

1 மாப்பிள்ளை
2 ஒரு மரம்
4 ஓர் இராசி
5 இலங்கை கீழ் மாகாண நா. உ.
6 வட இலங்கையில் பழம்பெரும் பௌத்த தலம்
8 இளம் பையன்
10 ஒரு பச்சைப் பறவை
11 சவுக்கு
16 கலப்பை
17 தோழி

தமிழ்வலை போட்டிக்கான விடையை இம்மாதம் 23-ம் தேதிக்கு முன்னர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வாயிலாக அனுப்பிவைக்கவும்.
அதற்கு தமிழ்வலையைப் பிரதிசெய்து அல்லது படப்பிரதியெடுத்து அல்லது கதிர்ப்பிரதியெடுத்து பயன்படுத்தவும்.
பெறுபேறுகள் நடுவர்களின் முடிபுக்கமைய அடுத்த மாத தாய்வீட்டில் வெளிவரும்.

**விடைகளை அனுப்பவேண்டிய முகவரி**
**மினன்னஞ்சல் முகவரி:**
**thamilvalai@thaiveedu.com**
**தொலைநகல்: 416 849 0594**

**Thaiveedu**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

## தமிழ்வலை - 65க்கான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 ஆ | | 2 து | | | | | 3 ஆ | |
| 4 பா | ல | சு | ப் | பி | ர | ம | ணி | ய | ம் |
| | வ | | ப | | | | | க | |
| 5 ப | ட் | ட | றி | | 6 சி | 7 கை | மா | லை | |
| | ட | | | 8 ம | த் | தி | | 9 க | ணை |
| 10 க | ம் | 11 ப | ளி | | த | | | ள் | |
| ம் | | ரி | | | ப் | | 12 வே | | 13 தீ |
| 14 போ | தி | | 15 கை | | 16 பி | ள் | ளை | யா | ர் |
| டி | | | யி | | ர | | | | வை |
| 17 யா | ழ் | நூ | ல் | | மை | | 18 கா | சா | |

## தமிழ்வலை-65 பெறுபேறுகள்

### முன்னணிப் போட்டியாளர்

த.செ. நடராசா, ஸ்கார்பரே
சிவம் கனகரட்ணம், ரொறன்ரோ
சியா, ஏஜக்ஸ்
அழகரத்தினம் பவளராணி, நோத்யோர்க்
ரூபன் கனகராஜா, ரொறன்ரோ
முரளீதரன் அரியரட்ணம், ஸ்கார்பரே
உமா கதிர், ஏஜக்ஸ்
வினோதா வசீகரன், மார்க்கம்
மணிஸ்வரன் மகிந்தா, நோத்யோர்க்

### பரிசுபெறும் போட்டியாளர்

**ஏ.எஸ். மகாலிங்கம்,**

**ரொறன்ரோ.**

thamilvalai@thaiveedu.com


கலைச்சொற்கோவை

தமிழிலிருந்து ஆங்கிலத்துக்கும் ஆங்கிலத்திலிருந்து தமிழுக்குமான கலைச்சொற்களின் மொழிபெயர்ப்புத் தொகுப்பு. துறைவாரியாக 38 கோவைகள் இதில் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் ஏறத்தாழ 10,000 பதங்கள் அடங்கியுள்ளன. அவை அனைத்தையும் “சொற்கோவைத் திரட்டு” என்னும் கோவை தன்னகத்தே கொண்டுள்ளது. பயனாளர் எவரும் தமது தேவைப்படி துறைவாரியாகவோ, திரட்டுவாரியாகவோ தேடுதலில் ஈடுபடலாம். “சொற்கோவைத் திரட்டு” ஏனைய கோவைகள் அனைத்தையும் மட்டுமன்றி மேலதிக பதங்களையும் கொண்டுள்ளது. மாணவர்கள், படைப்பாளிகள், கட்டுரையாளர்கள், மொழிபெயர்ப்பாளர்கள், ஊடகர்கள், கலைஞர்கள், கவிஞர்கள், சொற்கோவையாளர்கள் அனைவரையும் உள்ளத்தில் இருத்தி இக்கலைச்சொற்கோவை தொகுக்கப்பட்டுள்ளது.

http://kalaichotkovai.blogspot.ca

தமிழின் வீரியத்தை அகலிக்கும் மற்றுமொரு முயற்சி




# தமிழியல் ஆய்வுகள் - வரலாறும் வளர்ச்சியும்

- நா. சுப்பிரமணியன்

தமிழியல் ஆய்வுச் செல்நெறியின் 1960கள் வரையான இயங்குநிலை பற்றியும் அக்காலகட்டத்தில் நிகழத்தொடங்கிய மாற்றங்கள் பற்றியுமான பல முக்கிய தகவல்களை முன்னைய கட்டுரைகளில் நோக்கிவந்தோம். அவற்றையடுத்து குறிப்பாக கடந்த கட்டுரையிலே தமிழ் இலக்கியத்திறனாய்வியற் செயன்முறையின் 1960கள் வரையான இயங்குநிலை கோடிட்டுக்காட்டப்பட்டது. இவ்வாறான பார்வைகளையடுத்து 1960களிலிருந்து தொடங்கும் தமிழியலாய்வின் இயங்குநிலை நேரடியாகவே நமது கவனத்துக்கு வருகிறது.

## 1960களிலிருந்து தொடரும் தமிழியல் இயங்கு நிலைகள் - சில பின்புல அம்சங்கள்:

மேற்படி காலகட்ட இயங்குநிலை பற்றிய அவதானிப்பிலே இங்கு நமது முதற்கவனத்துக்கு வரும் அம்சம், தமிழியலாய்வின் உள்ளடக்கப்பரப்பானது அகலமும் ஆழமும் பெற்றுவந்துள்ள காலப் பகுதி, இது என்பதாகும். 1960கள் வரையான காலகட்டம்சார் தமிழியலாய்வுகள் மொழி, இலக்கியம், கலைகள் மற்றும் பண்பாட்டுக் கூறுகள் ஆகியனவற்றுள் குறித்த சில பகுதிகளை மட்டுமே மையப்படுத்திய பொதுநிலைப் பார்வைகள் என்ற கணிப்புக்கே உரியனவாகும். 1960களிலிருந்து தொடரும் அடுத்துவந்த காலப் பகுதியின் தமிழியலாய்வுகளிலே அந்த மையப்பட்டுநிலை படிப்படியாக மாறத் தொடங்குகிறது. ஆய்வுப்பொருட்பரப்பானது விரிவு பெற்று வந்தது. அத்துடன் புதுவரவுகளான சிறப்பு நிலைப் பார்வைகள் மற்றும் அணுகுமுறைகள் ஆகியவற்றினூடாக அது ஆழமும்பெறத் தொடங்கியது.

இன்று அது, உலகின் பல்வேறு திசைகளின் அறிவுசார் அம்சங்கள் மற்றும் பார்வை விரிவுகள் ஆகிய அனைத்தும் சங்கமிக்கும் நிலையிலான பரந்த தளமாக விரிந்து சென்று கொண்டிருக்கிறது. சுருங்கக் கூறுவதானால் உலகளாவிய அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல்சார் திறன்கள் கணிப்பொறித் தொழில்நுட்பத்திறன் உட்பட அனைத்தையும் தன்வசப்படுத்திக்கொண்டு விரிந்துசென்று கொண்டிருக்கிறது.

இவ்வாறாக கடந்த அரைநூற்றாண்டுகளுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் புதிய பரிணாமங்களுடன் தொடர்கின்றதான தமிழியலாய்வின் வரலாற்றைத் தரிசிப்பதான முயற்சியிலே முதலில் இங்கு நாம் கவனத்திற்கொள்ளவேண்டிய விடயம்,'1960களில் நிகழத்தொடங்கிய மாற்றமானது - அதாவது சமூகவியல், ஒப்பியல் முதலிய புதிய வரவுகளால் நிகழத்தொடங்கிய மாற்றமானது சமகாலத்தோராலும் பின்வந்தோராலும் எவ்வாறு புரிந்துகொள்ளப்பட்டது? என்பதாகும்.

இத்தொடர்பிலே முதலில் இங்கு குறிப்பிடவேண்டிய விடயம் சமகாலத் தமிழியலாளர்களில் ஒரு பெரும்பகுதியினர் - குறிப்பாக தமிழியலில் அடிபதிக்கத் தொடங்கிய இளந்தலைமுறை ஆய்வாளருள் பலர் - 'மேற்படி மாற்றத்தை மனமுவந்து வரவேற்றதோடு அதனை மேலும் முன்னெடுக்கவும் முற்பட்டனர்' என்பதாகும். இவர்களுள் ஒருசாரார் மார்க்ஸிய சமூகவியலில் ஈடுபாடு கொண்டவர்களாகவும் அத்தொடர்பிலான அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டவர்களாகவும் திகழ்ந்தோராவர். இன்னொருசாரார் மரபான ஆய்வுமுறைகளில் திருப்தியுறாத நிலையில் புதிய பார்வைகள் அணுகுமுறைகள் ஆகியவற்றை அவாவி நின்றோராவர்.

மேற்படி இருசாராரும் மேற்சுட்டிய மாற்றத்தை நிகழ்த்திய முன்னோடிகளான பேராசிரியர்கள் க. கைலாசபதி கா. சிவத்தம்பி மற்றும் நா. வானமாமலை, தொ.மு.சி. ரகுநாதன் முதலியவர்களின் சமூகவியல் சிந்தனைகளால் கவரப்பட்டுத் தாமும் அவர்களைப் போலவே சிந்திக்கவும் உரைகள் நிகழ்த்தவும் எழுதவும் முற்பட்டனர் என்பதும் இங்கு பதிவு பெறவேண்டிய முக்கிய செய்தியாகிறது. தமிழகத்திலே திரு.நா.வானமாமலையவர்களின் வழிநடத்தலில் 'நெல்லை ஆய்வுக்குழு' என்ற பெயரிலான சிந்தனையாளர் வட்டமொன்று 1960களில் உருவாகி, 12 ஆண்டுகள் இயங்கி நின்றது என்பதையும் அதனைச்சார்ந்து 'ஆராய்ச்சி' என்ற ஆய்விதழ் வெளியிடப்பட்டு வந்ததென்பதையும் முன்னரே (11வது கட்டுரையில்) நோக்கியுள்ளோம். கைலாசபதி, சிவத்தம்பி ஆகியோருடைய எழுத்துகளை மேற்கோள்களாக எடுத்தாள்வதும் உசாத்துணைகளாகப் பதிவு செய்வதும் 1960-70களில் தமிழ் ஆய்வுலகில் ஒரு மரபாகவே உருவாகிவிட்டதென்பதுங்கூட இங்கு பதிவுபெற வேண்டிய செய்தியாகிறது.

இவ்வாறான சூழலிலே மேற்சுட்டிய புதியமாற்றத்தை நிகழ்த்திய சிந்தனைகளான மொழியியல், சமூகவியல், மானுடவியல், வரலாற்றியல், ஒப்பியல், இலக்கியத் திறனாய்வியல் முதலியன சார்ந்த கோட்பாடுகளை மையப்படுத்திய உயர்நிலை உரையாடல்கள் பரவலாகவே நிகழத்தொடங்கிவிட்டன என்பதும் இங்கு பதிவுபெற வேண்டிய செய்தியாகிறது.

இவ்வாறான உரையாடல்களுக்குச் சான்றாகக் கொள்ளக்கூடிய ஒரு நிகழ்வு பற்றிய தகவலொன்றை இங்க பதிவுசெய்ய விழைகிறேன். அந்நிகழ்வு, 1975-76 காலப்பகுதியில் பேராசிரியர் க.கைலாசபதி அவர்களின் வழிகாட்டலிலே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 'ஆக்க இலக்கியமும் அறிவியலும்' என்ற தலைப்பிலான கருத்தரங்கத் தொடர் நிகழ்வாகும்.

அக்கருத்தரங்கத் தொடரானது கைலாசபதியவர்கள் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகத்தின் தலைவராகவும் தமிழ்ப் பேராசிரியராகவும் பணியாற்றிவந்த காலப்பகுதியில் (1974-1977)அவரது ஆலோசனைப்படி தமிழ்த்துறையின் சார்பில் நிகழ்த்தப்பட்டு வந்ததாகும். அத்தொடரிலே அவரும் வேறு சில கல்வியாளர்களும் இலக்கியவாதிகளும் எழுதிய பத்து ஆய்வுரைகள் வாசிக்கப்பட்டன.

மேற்படி கருத்தரங்கத் தொடரானது ஆக்க இலக்கியம் எனப்படும் புனைவு நிலைசார் ஆக்கங்களான புனைகதை, கவிதை முதலியவற்றுக்கும் அறிவியல்துறைகள் பலவற்றுக்குமுள்ள உறவுநிலைகள் பற்றிய உரத்த சிந்தனைகளுக்காகத் திட்டமிடப்பட்டதாகும். அறிவியல் துறைகள் என்ற வகையிலே குறிப்பாக மானிடவியல், உளவியல், சமூகவியல், மொழியியல், நடையியல், வரலாறு, அழ

கியல், அரசியல், நாட்டுப் பண்பாட்டியல், பாலியல் ஆகியனவே இதில் கவனத்துள் கொள்ளப்பட்டன. இவ்வாறான துறைகள் சார்ந்து முறையே க.சண்முகலிங்கம், சோ.கிருஷ்ணராசா, க.கைலாசபதி, அ. சண்முகதாஸ், எம்.ஏ. நுஃமான், சித்திரலேகா மௌனகுரு, என்.சண்முகரத்தினம், மு.நித்தியானந்தன், சி.மௌன குரு மற்றும் என்.கே. ரகுநாதன் ஆகியோர் கட்டுரைகள் வாசித்த னர். அக்கட்டுரைகள் தொடர்பாக விரிவான கலந்துரையாடல்க ளும் நிகழ்ந்தன. பின்னர் அவ்வாய்வுரைகள் ஆக்க இலக்கிய மும் அறிவியலும் என்ற தலைப்பிலே 1977ல் நூலுருவும் எய்தின.

இவ்வாறாக அமைந்த கருத்தரங்க உரைகளும் அவற்றின் தேற லாக உருவான ஆக்க இலக்கியமும் அறிவியலும் என்ற நூலாக் கமும் 1960-70கள் காலகட்டத்தின் இலக்கியக் கல்விச்சூழலிலே - குறிப்பாகத் திறனாய்வியல்சார் செயன்முறைகளிலே நிகழத் தொடங்கிய சிந்தனை மாற்றமொன்றை அடையாளப்படுத்தி நிற் பன என்பது வெளிப்படை. அதாவது, 'இலக்கியத் திறனாய்விய லானது, குறித்த படைப்பானது வாசகருக்கு நல்கும் அநுபவம் என்ற தளம்சார் பார்வைகளுக்குள் மட்டும் செயற்பட்டு நிற்பது' என்பதாக அக்காலப்பகுதியில் நிலவி வந்த பொதுவான கருத்தி யலை மாற்றும் முயற்சியாக அக்கட்டுரைகளுட்பல அமைந்திருந் தன.

அத்துடன், 'திறனாய்வு என்ற செயன்முறைகள் உட்பட தமிழியல் சார் பல்வேறு துறைகள்சார் ஆய்வுகளுங்கூட மேற்படி அறிவியல் துறைகள் சார் அணுகுமுறைகளுடன் மேற்கொள்ளப்படவேண்டி யவை' என்பதான சிந்தனையையும் அக்கட்டுரைகளிற் பல தெளி வாக உணர்த்தி நின்றன. அவ்வகையில், 1960களில் நிகழத் தொடங்கிய மாற்றமானது அடுத்த பத்தாண்டுகள்வரை சீரான கதி யில் தொடரப்பட்டு வந்தது என்பதை உணர்த்தும் ஒரு முக்கிய சான்றாக மேற்படி கருத்தரங்க முயற்சியையும் நூலாக்க முயற் சியையும் சுட்ட முடியும்.

தமிழகத்திலும் மேற்படி மாற்றங்கள் சீராகத் தொடர்ந்தன என்ப தற்கு பல சான்றுகள்உள. குறிப்பாக எழுபதுகளை அடுத்து ஏறத் தாழ முப்பதாண்டுக் காலப்பகுதியில் மேற்படி அறிவுத்துறைகள் பலவற்றையும் சார்ந்து பெருந்தொகையான நூல்கள் வெளிவந் தன. பேராசிரியர் கி. அரங்கன் அவர்களின் மாற்றிலக்கண மொழி யியல்(1975),தொடரியல்-மாற்றிலக்கண அணுகுமுறை(1985), பேரா சிரியர் ச.அகத்தியலிங்கமவர்களின் மொழியியல், சொல்லியல், வினையியல் (1982), பேராசிரியர் சு. சக்திவேல் அவர்களின் தமிழ் மொழி வரலாறு(1984), பேராசிரியர் கி.கருணாகரன், முனைவர் வ. ஜெயா இணைந்தெழுதிய தமிழ்மொழி அமைப்பியல்(2002) முத லிய மொழியியல் சார்ந்த நூல்களும் சமூகவியல்சார்ந்து பேராசிரி யர் மறைமலை இலக்குவனார் எழுதிய இலக்கியமும் சமூகவிய லும்(1991), அமைப்பியல் என்ற திறனாய்வுக் கோட்பாடுகளை அறிமுகம் செய்யும் வகையில் பேராசிரியர் தமிழவன் எழுதிய ஸ்டரக்சுரலிஸம்(1982), பேராசிரியர் க. பூணச்சந்திரன் எழுதிய அமைப்பு மையவாதம் பின் அமைப்புவாதம்(1991) மற்றும் பொது வாகத் திறனாய்வியல் சார்ந்து பேராசிரியர் சோ. கிருஷ்ணராஜா எழுதிய விமர்சனமுறையியல்(1992), அழகியல்(1996), பேராசிரியர் தி.சு. நடராசன் எழுதிய திறனாய்வுக்கலை(1996), நாட்டாரியல் துறைசார்ந்து பேராசியர் தே.லூர்து அவர்களால் எழுதப்பட்ட நாட் டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள்(2000), பேராசிரியர்கள் என். பக்தவத்சல ரெட்டி மற்றும் ஆறு. இராமநாதன் ஆகியோரின் பதிப்பில் வெளிவந்த நாட்டுப்புறவியல் கோட்பாட்டுப் பார்வைகள் (2003)என்ற கருத்தரங்கத் தொகுப்பு, மானிடவியல் சார்ந்து முனை வர் பக்தவத்சல பாரதி எழுதிய பண்பாட்டு மானிடவியல்(1990, 2003), மானிடவியல் கோட்பாடுகள்(2003) முதலியனவாக மேற்படி கோட்பாட்டு நூல்வரிசை தொடர்கிறது. மிகப்பெருந்தொகையாக வெளிவந்துள்ள ஆக்கங்களில் வகைமாதிரிக்கான சில மட்டுமே இங்கு சுட்டப்பட்டன.

(மேற்சுட்டிய நூலாசிரியர்களுள் பேராசிரியர் சோ. கிருஷ்ணராஜா அவர்கள் ஈழத்தவராவார். இவருடைய ஆக்கங்கள் தமிழகத்தில் வெளிவந்தனவாகும். ஈழத்தவரான பேராசிரியர் க. கைலாசபதி யவர்கள் எழுதிய இலக்கியமும் திறனாய்வும் என்ற நூல் 1972ல் ஈழத்தில் வரதர் வெளியீடாக நூலுருப்பெற்றதாகும். இது பின்னர் தமிழகத்திலே பல பதிப்புகளைக்கண்டது என்பதும் இங்கு நினை விற்கொள்ள வேண்டிய செய்தியாகும்.)

இவ்வாறான கோட்பாட்டு நிலைகளிலான நூல்களின் உருவாக்கம் என்பது தமிழக உயர்கல்விச் சூழலிலும் கலை இலக்கியவாதிகள் மத்தியிலும் அவ்வத்துறைகள் மீது இருந்த பேரீடுபாட்டைத் தெளி வாக உணர்த்தி நிற்பது என்பது வெளிப்படை. இத்தொடர்பில் மேலதிக குறிப்பொன்றையும் இங்கு முன்வைப்பது அவசியமாகி றது.

1960-70களை அடுத்துவந்த காலப்பகுதியிலே ஆய்வுக்களங்க ளான பல்கலைக்கழகங்கள் மற்றும் உயராய்வு மையங்கள் பல உருவான சூழலில் தமிழியலாய்வுத்துறைகள் பெருகியமை பற்றி யும் ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கானோர் தமிழியல்சார் துறைக- ளில் ஆய்வுகள் நிகழ்த்த முற்பட்டமை பற்றியும் முன்னரே (10வது கட்டுரையில்) நோக்கியிருந்தோம். அத்தொடர்பில் இங்கு கவனத் திற்கொள்ள வேண்டிய செய்தி மேற்படி பல்வேறு பல்கலைக்கழ கங்களிலும் மொழியியல் சமூவியல், நாட்டாரியல் முதலியவற் றைக் கற்பிப்பதற்கான தனித்துறைகளும் உருவாகி வளர்ந்து வந் தன என்பதாகும். அவ்வத்துறைகள் சார்ந்து நிகழ்ந்துவந்த பல் வேறு விரிவுரைகள், கலந்துரையாடல்கள், கருத்தரங்கங்கள் முத லியன தமிழியலுக்கு வளம்சேர்ப்பனவாக அமைந்திருக்கும் என் பது வெளிப்படை. இவ்வாறான ஊடாட்டங்களின் தொடர்ச்சிகளா கவும் வளர்ச்சிகளாகவுமே மேற்சுட்டியவாறான நூல்கள் பலவும் உருவாயின என்பதும் உருவாகிக் கொண்டிருக்கின்றன என்பதும் ஊகித்துணரக்கூடிய செய்திகளேயாகும்.

1960களில் தொடங்கிய மாற்றமானது அடுத்துவரும் காலப்பகுதிக- ளில் சீரான கதியிலே தொடர்ந்தது என்பதோடு ஆழமும் அகல மும் பெற்று வந்தது என்பதை மேற்படி பின்புலச்செய்திகள் தெளி வுறுத்தி நிற்கின்றன.

அடுத்து இக்காலத் தமிழியல் இயங்குநிலைகள் நமது நேரடிக் கவனத்துக்கு வருகின்றன. மேற்படி இயங்குநிலைகளை நாம் நிறை நிலையில் தரிசிப்பது என்பது இத்தகு கட்டுரைத் தொடர் முயற்சிகளில் சாத்தியமானதொன்றன்று என்பதை இங்கு குறிப்பி டுவது அவசியம். அத்தகு தரிசன முயற்சியானது நிறுவன நிலை களில் ஆய்வாளர்கள் பலருடைய பங்களிப்புகளின் ஊடாக மேற் கொள்ளப்பட வேண்டியதென்பது பொதுவாக ஆய்வுலகம் அறிந்த செய்தியேயாகும். எனவே இங்கு மேற்படி காலகட்டத்தில் குறித்த சில முக்கிய பொருட்பரப்புகள் சார்ந்து நிகழ்ந்துள்ள ஆய்வு முயற்சிகளை மையப்படுத்திய ஒரு வரலாற்றுப்பார்வை மட்டுமே இத்தொடரில் முன்வைக்கப்படவுள்ளது.

இவ்வகையில் முதலில் நமது கவனத்துக்கு வருவது இக்காலத் தமிழியலை வழிநடத்தி நின்ற கோட்பாடுகளின் இயங்குநிலைகள் பற்றியதாகும். அதாவது ஆய்வு மூலங்கள் என்ற கணிப்புக்குரிய வையான இலக்கிய இலக்கண ஆக்கங்கள், கலைகள் மற்றும் வரலாறுசார் சான்றுகள் முதலியவற்றை அணுகுதல் தொடர்பாக இக்காலத்தில் நிலவிவந்த கோட்பாடுகளின் இயல்பு மற்றும் வர லாறு என்பனவே இங்கு முதற்கவனத்துக்கு உரியவாகின்றன. அவ்வகையில் இலக்கிய மற்றும் கலைகள் தொடர்பாக இக்காலத் தில் நிலவிவந்த கோட்பாட்டுச் சூழல் பற்றிய - குறிப்பாகத் திற னாய்வியற் சிந்தனைச் சூழல் பற்றிய முக்கிய அவதானிப்புகளை இங்கு பதிவு செய்வது அவசியமாகிறது.

1960கள் வரையான காலகட்டத்திலே இலக்கியத்தை ஒரு 'அழகி யல் வெளிப்பாடாக' நோக்கும் முறைமையே முனைப்பானதாக அமைந்திருந்தது என்பதை முன்னைய கட்டுரையிறுதியில் நோக் கியுள்ளோம். அம்முறைமையானது கோட்பாட்டு நிலைகளில் குறிப்பாக, நவீனத்துவம் மற்றும் உருவவியல் ஆகியன சார்ந்தன வாகவே கணிக்கப்படுவன என்பதும் அங்கு குறிப்பிடப்பட்டது. இவ்வாறாக அக்காலப்பகுதியில் நிலவிவந்த கோட்பாடுகள்சார் பார்வைகளையும் அணுகுமுறைகளையும் விமர்சிப்பதான சிந்த னைப்போக்கொன்று தமிழ்ச்சூழலில் முன்னிலைக்கு வந்ததென்ப தும் அதன் தொடர்ச்சியாக 'கோட்பாட்டு விவாதச்சூழல்' ஒன்று உருவாகியது என்பதுமே இங்கு நமது கவனத்துக்குரிய முதலா வது செய்தியாகும்.

இவ்வாறு 1960களில் முன்னிலைக்கு வந்த புதிய சிந்தனையானது ஆங்கிலத்தில் Realism எனவும் தமிழில் யதார்த்தவாதம் அல்லது நடப்பியல் எனவும் அடையாளப்படுத்தப்படும் கோட்பாடாகும்.

இது படைப்பாக்கத்தின் உள்ளடக்கம் என்ற சமூக அம்சத்துக்கு முக்கியத்துவமளிப்பது. குறிப்பாக, கலை, இலக்கியம் என்பவற்றின் சமூகப்பொறுப்பை வலியுறுத்தி நிற்பது. அவ்வகையில் யதார்த்த வாதமானது மேலே நோக்கியவாறாக படைப்புகளை, 'அழகியல் வெளிப்பாடுகளாக' மட்டும் தரிசிப்பதான கோட்பாடுகளுடன் முரண்படுவது என்பது வெளிப்படை.

இக்கோட்பாடானது 1940களில் தமிழ்ச்சூழலிலே மார்க்ஸிய சமூகவியல்நோக்கு அறிமுகமான பொழுதே அதன் இலக்கியக் குரலாகக்காலூன்றத் தொடங்கிவிட்டது. இவ்விலக்கியக்குரலானது சமூக இயக்கம் என்றவகையிலே 'முற்போக்கு இலக்கியம்' என்ற அடையாளம் பெற்று வளர்ந்து வந்தது. படிப்படியாக நிகழ்ந்து வந்த இவ்வளர்ச்சியின் ஒரு கட்டமாகவே 1960களிலான அதன் இயங்கு நிலையை நாம் தரிசிக்கிறோம்.

இவ்வாறான யதார்த்தவாதத்தின் வருகையுடன் தமிழிலக்கியச் சூழலில் 'கோட்பாட்டு விவாத நிலை'யொன்று உருவாகியது. இவ்விவாதநிலையானது அடுத்த ஒரு தலைமுறைக்காலம்வரை வெவ்வேறு பரிமாணங்களில் தீவிர கதியில் தொடர்ந்தது. அவ்வாறான தொடர்ச்சிச் சூழலிலே புதிய சில கோட்பாடுகளும் - குறிப்பாக மு. தளையசிங்கமவர்கள் முன்வைத்த 'மெய்யுள்' எனப்படும் பிரபஞ்ச யதார்த்தவாதம், அமைப்பியல்பின் அமைப்பியல் மற்றும் பின் நவீனத்துவம் ஆகியனவும் தமிழுக்கு அறிமுகமாகி மேற்படி விவாதச்சூழல்களை அகலப்படுத்தின. ஆழமுறவுஞ்செய்தன. இவ்வாறான கோட்பாட்டு விவாதச் சூழல் பற்றிய ஒரு வரலாற்றுக் குறிப்பு வருமாறு:

## கோட்பாட்டு விவாதச்சூழலும் புதிய கோட்பாடுகளின் வருகையும்:

இவ்வகையில் முதலிலே யதார்த்தவாதத்தின் வருகையுடன் தொடங்கிய கோட்பாட்டு விவாதங்கள் பற்றி நோக்கலாம். இவ்விவாதங்கள் இரு வகையின. இவற்றுள் முதல் வகையின அழகியலை முதன்மைப்படுத்தும் கோட்பாடுகளுடன் அது நிகழ்த்திய விவாதமாகும். அதாவது, 'அழகியலா அல்லது உள்ளடக்கத்தின் சமூகப்பெறுமதியா? என எதிரெதிர் நிலைகளில் நின்று நிகழ்த்தப்பட்ட விவாதம் இது. அழகியல்சார்ந்து க.நா. சுப்பிரமணியம், வெங்கட்சாமிநாதன் முதலியோரும் உள்ளடக்கம்சார்ந்து க.கைலாசபதி மற்றும் வானமாமலை முதலியோரும் தத்தம் நிலைப்பாடுகளை முன்வைத்துவந்த நிலை, இது.

இரண்டாவது விவாதமானது யதார்த்தவாதத்துக்குள்ளேயே நிகழ்ந்து வந்ததாகும். அதாவது யதார்த்தவாதமானது விமர்சன யதார்த்தவாதம் மற்றும் சோஷலிஸ யதார்த்தவாதம் என இரு பிரிவுகளாக நின்று மேற்கொண்ட விவாதமே, இது. மேற்படி கைலாசபதி மற்றும் கேசவன் முதலியோர் சோஷலிஸ யதார்த்தவாதம் என்ற பிரிவின் சார்பில் நின்றுவாதிட, ஏ.ஜே. கனகரத்னா, எஸ்.என். நாகராசன், ஞானி, எம்.ஏ.நுஃமான் முதலியோர் விமர்சன யதார்த்தவாதம் என்ற தளத்தில் நின்று வாதிட்டுவந்தனர்.

மேற்சுட்டியவாறான இருவகை விவாதங்களின் சாராம்ச நிலைகளை நாம் தெளிந்துகொள்ள வேண்டுமெனின் யதார்த்தவாதத்தின் மேற்படி இரு தளநிலைகள் பற்றிய புரிதல் மற்றும் அவற்றின் உருவாக்க நிலைகள், தமிழ்ச்சூழலுக்கு அவை அறிமுகமான நிலைகள் பற்றிய வலாற்றுத்தெளிவு ஆகியன இங்கு அவசியமாகின்றன.

Realism என்ற பெயரில் 19ம் நூற்றாண்டில் உருவான கோட்பாடானது Romanticism என்ற பெயரிலான புனைவியல் என்ற கோட்பாட்டின் கட்டற்ற கற்பனை அம்சங்களுக்குக் கடிவாளமிடும் நோக்கிலும் நடைமுறை வாழ்வியலின் அநுபவங்களை நோக்கிக் கலை இலக்கியங்களை இட்டுச்செல்லும் நோக்கிலும் உருவானதாகும். சமூக உணர்வு என்ற அம்சத்தை மையப்படுத்தியதான மார்க்ஸியத்துக்கு மேற்படி யதார்த்தவாதமானது உவப்பானதாக அமைந்தது. இத்தொடர்பிலான மேலதிக விளக்கத்திற்கு 'மார்க்ஸிய இலக்கியநோக்கு' தொடர்பான வரலாற்றுக் குறிப்பொன்றைப்பதிவு செய்வது அவசியமாகிறது.

மார்க்ஸியம் என்ற தத்துவம் ஒரு 'சமூக - அரசியல் - பொருளியல் சிந்தனை'யாக மட்டுமே உருவானதாகும். மார்க்ஸிய மூலவர்களான கார்ல் மார்க்ஸ் மற்றும் பிரடெரிக் ஏங்கல்ஸ் ஆகியோர் கலை, இலக்கியம் என்பன தொடர்பாகத் திட்டப்பாங்கான கோட்பாடுகளை உருவாக்கியவர்களல்லர். அவை தொடர்பான சில கருத்துகளை மட்டுமே அவர்கள் அவ்வப்போது முன்வைத்து வந்துள்ளனர். அக்கருத்துகள் அவர்களின் கடிதங்கள், விமர்சனங்கள் முதலானவற்றில் பதிவுபெற்றிருந்தன. அக்கருத்துகளின் தொடர்ச்சியாக அவர்களின் வழிவந்த சிந்தனையாளர் பலர் முன்வைத்த கருத்தாக்கங்களினூடாக நமக்குக் கிடைத்துள்ள சிந்தனைப் பரப்பையே இலக்கியம் சார்ந்த கோட்பாட்டுநிலைசார் உரையாடல்களில் 'மார்க்ஸிய இலக்கிய நோக்கு' எனப்படுகிறது.

இவ்வாறான மார்க்ஸிய நோக்கானது இருவேறுநிலைப்பட்ட கோட்பாடுகளாக வடிவமெய்தி வந்துளது. முதலாவது வகையானது, படைப்பாக்கமொன்றின் உள்ளடக்கம் எனப்படும் சமூக அம்சத்தின் தகுதிப்பாட்டை வலியுறுத்துவதோடு படைப்பாளியின் அநுபவ அம்சத்துக்கும் அது படைப்பாக உருவம் எய்திய கட்டமைப்பு நிலைக்கும் உரிய மதிப்பளிப்பதாகும். இதுவே பொதுவாக விமர்சன யதார்த்தவாதம் (critical realism) என வழங்கப்பட்டு வருவதாகும்.

மார்க்ஸிய மூலவர்களில் ஒருவரான பிரடெரிக் ஏங்கல்ஸ்' எழுத்தாளன் தீர்வுகளைத் தட்டில் வைத்துத் தரவேண்டியதில்லை', என்று கூறியுள்ளார் என்பதை மார்க்ஸிய இலக்கியவாதிகள் அடிக்கடி எடுத்துரைப்பதுண்டு. அதேபோல மார்க்ஸிய சிந்தனையாளர்களிலொருவரான லியோ ட்ராஸ்கி என்பார் முன்வைத்ததான 'ஒரு கலைப்படைப்பானது தனது சொந்தக் கலையாக்க விதிகளால் தீர்மானிக்கப்பட வேண்டியது' என்ற கூற்றும் மார்க்ஸிய விவாதங்களில் பரவலாக எடுத்தாளப்படுவதாகும். இவையிரண்டுமே மேலே நாம் நோக்கிய 'விமர்சன யதார்த்தவாத' சார்பான கருத்தாக்கங்களாகக் கொள்ளப்படுவனவாகும்.

இவ்வாறாக அழகியலுக்கு மதிப்பளிப்பதான சிந்தனைகள் பின்னாளில் ஜோர்ஜ் லூகாக்ஸ், அந்தோனியோ கிராம்சி, ஹேபர்ட் மார்க்யூஸ், பியர்மெஷரி முதலிய பலரால் பலநிலைகளில் எடுத்துப் பேசப்பட்டுள்ளன.

மார்க்ஸியத்தின் மேற்சுட்டிய இரண்டாவது வகையான யதார்த்தவாதக் கோட்பாடானது படைப்பின் உள்ளடக்க அம்சத்துக்கே முதன்மை தருவதாகும். குறிப்பாக, படைப்பினுடைய உள்ளடக்கத்தின் 'வர்க்கச்சார்பு' என்ற அம்சத்துக்கு இது முதன்மை தருகி


சொர்க்கமே என்றாலும் அது சொந்த வீடு போல வருமா...

Uthayan Alex Sivasambu B.Sc. (Hons), M.B.A

Broker

Ottawa: 613.276.SALE (7253)
Toronto: 416.659.SELL (7355)
alex-sivasambu@coldwellbanker.ca, www.sivasamburealty.com

COLDWELL BANKER



றது. அவ்வகையில் ‘உழைக்கும் மக்களுக்கு நம்பிக்கையூட்டிச் சோஷலிஸக் கட்டமைப்பை முன்னெடுக்கும் வகையில் கலைகளும், இலக்கியங்களும் உருவாக்கம் பெறவேண்டும்’ என்பதே இதன் அடிநாதமான குறிக்கோளாகும். இதுவே சோஷலிஸ யதார்த்தவாதம் (socialist realism) என்ற பெயரில் வழங்கப்படுவதாகும். இவ்வாறாக உள்ளடக்கத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதனூடாக இக்கோட்பாடானது குறித்த படைப்பாக்கமொன்றின் அநுபவ அம்சம், கட்டமைப்புநிலை என்பவற்றிற்குரிய முக்கியத்துவத்தைப் பின் தள்ளுகின்றமை வெளிப்படை.

மேற்படி, சோஷலிஸ யதார்த்தவாதமானது ரஷ்யாவில் மார்க்ஸியம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றியிருந்த வரலாற்றுச் சூழலிலே குறிப்பாக ஸ்டாலினுடைய ஆட்சிச் சூழலில் அவருடைய ஆசியுடன், 1934ல் திட்டப்பாங்காக உருவாக்கப்பட்டதாகும்.

தமிழ்ச் சூழலைப் பொறுத்தவரை மார்க்ஸிய இலக்கியப் பார்வையானது முதலில் (1940-60கள் காலகட்டத்தில்) சோவியத் ரஷ்யச்சூழல் சார் இலக்கியப் பார்வைகளினூடாகவே அறிமுகமாகியுள்ளது. அவ்வகையில், சோஷலிஸ யதார்த்தவாதம் சார்ந்ததான இலக்கியப் பார்வையே - அதாவது சோஷலிஸக் கட்டமைப்பை மனங்கொண்டதும் அவ்வகையில் வர்க்கச்சார்பு என்ற அணுகுமுறையை முன்னிறுத்துவதுமான பார்வையே அன்று தமிழக மற்றும் ஈழச் சூழல்களில் கலை இலக்கியம் என்பவற்றுக்கான மார்க்ஸிய நோக்காக அறிமுகம் எய்தியது.

இவ்வாறு அறிமுகமான சோஷலிஸ யதார்த்தவாதத்தையே அக்கால (1940-60 காலகட்ட) மார்க்ஸிய இலக்கியவாதிகள் முற்போக்கு இலக்கியக்குரலாக முன்வைத்தனர். இவ்வாறான மார்க்ஸிய அரசியல் சார்பானதானதும் வர்க்கப்பார்வையை வலியுறுத்துவதுமான சோஷலிஸ யதார்த்தவாதமே அக்காலம்வரை தமிழ்ச்சூழலில் நிலவிவந்த அழகியல்சார்பான சிந்தனைகளுடன் நேருக்கு நேர் விவாதம் மேற்கொண்டது. இதுவே நாம் மேலே குறிப்பிட்ட முதலாவது வகை விவாதமாகும். இவ்வாறான வர்க்கப் பார்வை சார் கருத்தாக்கமொன்றுக்குச் சான்றாக ‘முற்போக்கு இலக்கிய இயக்கத்தின் தளகர்த்தர்’ என்ற கணிப்பைப் பெற்றிருந்தவரான பேராசிரியர் க. கைலாசபதியவர்களுடைய கூற்றொன்றை இங்கு கவனத்துக்கு இட்டுவர விழைகிறேன்.

*‘ஆழமாக நோக்கினால் கலைவாதிகள் அறிந்தோ அறியாமலோ சமுதாய மாற்றத்துக்காகப் பாடுபடும் எழுத்தாளனின் ஆக்கங்களையே அழகியலின் பெயரில் நிராகரிக்கின்றனர். இது தற்செயல் நிகழ்ச்சியல்ல வர்க்க முரண்பாட்டின் பிரதிபலிப்பாகவே உள்ளது.’*

கைலாசபதியவர்களின் இக்கூற்றானது முற்போக்கு இலக்கியவாதியாகத் திகழ்ந்தவரான டானியல் அன்ரனி என்பார் வெளியிட்ட சமர் என்ற கலை இலக்கிய இதழின் 2வது வெளியீட்டிலே (ஜுலை1979) ‘முற்போக்கு இலக்கியமும் அழகியல் பிரச்சினைகளும்’ என்ற தலைப்பில் எழுதியுள்ள கட்டுரையிற் பதிவாகியுள்ளதாகும். இக்கூற்றானது, ‘அக்கால முற்போக்கு இலக்கியத்துக்கு அழகியலானது ஒரு ‘பிரச்சினை அம்ச’மாக அமைந்திருந்தது’ என்பதை உணர்த்தி நிற்பதாகும். இதனை மேற்படி கட்டுரைத் தலைப்பே உணர்த்தி நிற்கின்றமை தெளிவு. அதாவது, ‘முற்போக்குவாதிகள் பலரின் இலக்கிய ஆக்கங்கள் அழகியல் நிலைகளில் முழுமை பெற்றனவாக அமைந்திருக்கவில்லை’ என்பதாக எழுந்த விமர்சனங்களுக்கு விடையளிக்கும் வகைகளில் முன்வைக்கப்பட்ட சோஷலிஸ யதார்த்தவாதசார்பான குரலையே கைலாசபதியவர்கள் மேற்படி கட்டுரையில் பதிவு செய்துள்ளார் என்பது வெளிப்படை. (மேற்படி கட்டுரை கைலாசபதியவர்கள் இயற்கை எய்தியதன் பின்னர் 1983ல் வெளிவந்த இலக்கியச் சிந்தனைகள் என்ற கட்டுரைத் தொகுப்பில்(பக்117-125) மறுபதிவு எய்தியுள்ளது.

முற்போக்கு அணிசார் படைப்பாக்கங்களின் அழகியல் பற்றிய விமர்சனங்களை யாராவது முன்வைக்க முற்படும் பொழுது அதனை, ‘சமுதாய மாற்றத்தை விரும்பும் மார்க்ஸிய நோக்குக்கு எதிரான நிலைப்பாடு’ என அக்கால மார்க்ஸிய இலக்கியவாதிகளுள் முக்கியமான சிலர் கருதினர் என்பதற்கான வலுவான சான்றாக கைலாசபதியவர்களின் மேற்படி கூற்று திகழ்கின்றமை வெளிப்படை.

இதுவே அன்றைய விவாதச்சூழலின் ஒரு முகம். அதாவது ‘அழகியல் எதிர் சோஷலிஸ யதார்த்தவாதம்’ என்ற முதலாவது முகம்.

மேலே நாம் யதார்த்தவாதத்தின் முதலாவது வகையாகக் குறிப்பிட்ட ‘விமர்சன யதார்த்தவாத’ சார்பான சிந்தனைகள் அறுபதுகளின் நடுப்பகுதியிலிருந்தே தமிழ்ச் சூழலுக்கு அறிமுகமாகத் தொடங்கின. இவை, ‘மார்க்ஸிய இலக்கிய நோக்கு’ என்றால் அது ‘சோஷலிஸ யதார்த்தவாத அணுகுமுறை ஒன்று மட்டுமே’ என்பதான ஒற்றைப்பரிமாணப் பார்வையை மாற்றியமைத்தன. சோஷலிஸ யதார்த்த வாதத்தில் நம்பிக்கை கொண்டிருந்த பலர் அதனை மறுபரிசீலனைக்கு உட்படுத்தினர். அதன் தகுதிப்பாடு பற்றிய விவாதங்கள் தமிழ் மார்க்ஸியரிடையே உருவாயின. இதுவே நாம் மேலே குறிப்பிட்ட இரண்டாவது வகை விவாதமாகும்.

மேற்சுட்டிய விமர்சன யதார்த்தவாதம் சார்பான கருத்தாக்கங்களைத் தமிழ்ச் சூழலுக்கு முதலில் இட்டுவந்த மார்க்ஸியர்களுள் முக்கியமான ஒருவர், ஈழத்தின் முதல் வரிசை விமர்சகராகத் திகழ்ந்தவரான ஏ.ஜே. கனகரத்னா அவர்களாவார் (1934-2006). ஆங்கிலப் புலமைவாய்ந்த அவர் மார்க்ஸிய இலக்கியம் தொடர்பான மேலைத்தேய விமர்சன எழுத்துகளைத் தமிழுக்கு அறிமுகஞ் செய்தவர்களுள் முக்கியமான ஒருவராவார். அத்துடன் சமகால இலக்கியச்செல்நெறிகள் தொடர்பான கனதியான விமர்சனங்களை முன்வைத்து வந்தவருங்கூட. இவர் 1966ல் ‘மார்க்சியமும் இலக்கியமும் - சில நோக்குகள்’ என்ற தலைப்பில் வெளியிட்ட கட்டுரைத் தொகுப்பிலே சோஷலிஸ யதார்த்தவாதச் சூழல் சார்ந்தோரின் இலக்கிய முயற்சிகளைக் கடுமையாக விமர்சித்தவர் என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டிய முக்கிய செய்தியாகும். இவ்வகையில் அவர் சோஷலிஸ யதார்த்தவாதக் கோட்பாட்டின் கருத்தியல் அடிப்படைகளை விமர்சனத்துக்கு உட்படுத்தினார். அக்கோட்பாட்டின் அடித்தளத்தையே அசைக்கும் வகையில் அவருடைய விமர்சனங்கள் அமைந்திருந்தன.

இவர் அலன் ஸ்விஞ்வுட்(Alan Swingewood) என்ற விமர்சகரின் கருத்தாக தமிழில் தந்துள்ள பின்வரும் குறிப்பு சோஷலிஸ யதார்த்தவாதம் பற்றியும் அது ரஷ்யச் சூழலில் முன்வைக்கப்பட்ட காலகட்ட நிலை பற்றியுமான கடுமையான விமர்சனமாக அமைந்ததாகும்.

*‘சோசலிச யதார்த்த வாதம் சோசலிச அழகியலுடன் பிணைப்புற்றிருந்த கலைப்பாணி என்று சொல்வதைவிட இலக்கியக் கற்பனா சக்தியை ஒழுங்குபடுத்திக் கட்டுப்படுத்துவதற்கான ஒரு நிருவாகக் கருவியாகவே இருந்தது எனக் கொள்வதே பொருத்தமாகும். 1934ல் கலைச் சுதந்திரத்துக்குச் சாவுமணி அடிக்கப்பட்டது. சோவியத் ஒன்றியத்தின் மூலம் எல்லாவகையான கலையாற்றல் மீதும் இறுக்கமான அரசாங்கக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது.. ‘(மேற்படி தொகுப்பு ப.60)*

இவ்வாறாக சோஷலிஸ யதார்த்தவாதத்துக்கு எதிராக ஏ.ஜே. கனகரத்னாவின் எழுத்துகளிலே புலப்பட்ட இவ்விமர்சனப்பார்வையைப் பின்னாளில் தமிழகச் சூழலிலே முதல்வரிசை மார்க்ஸிய விமர்சகர்களாகத் திகழும் எஸ்.வி ராஜதுரை மற்றும் கோவை ஞானி (கி.பழனிச்சாமி) முதலியவர்களும் பிரதிபலித்துள்ளனர். எஸ்.வி. ராஜதுரை அவர்கள் தாம் எழுதிய ரஷ்யப் புரட்சி: இலக்கியசாட்சியம்(1989) என்ற நூலிலே, சோஷலிஸ யதார்த்தவாதம் என்ற பெயரிலான கோட்பாடு அறிமுகப்படுத்தப்பட்ட ‘அதிகாரப் பின்புலம்’ பற்றி விரிவாகவே பேசியுள்ளார்.

*‘கலை இலக்கியத்தில் எத்தகைய முறைகள், பாணிகள், நடைகள் பின்பற்றப்படவேண்டும் என்பதைக் கட்சி தீர்மானித்தது. ‘சோசலிசயதார்த்த வாதம்’ என்ற பெயரால் கட்சித் தீர்மானங்களுக்கேற்ற வெறுங் கற்பனையான, ஒற்றைப் பரிமாண, தட்டையான பாத்திரங்களே இலக்கியப் படைப்புகளில் உருவாக்கப்பட்டன.’ (ப. 256)*

என்பதாக அக்கோட்பாடு பற்றி அவர் பதிவு செய்துள்ளதான விமர்சனக் குறிப்பு இங்கு நமது கவனத்துக்குரியது.

*'கட்சி அதிகாரத்தை இலக்கியத்தின் மூலம் செயல்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டதுதான் சோசலிச யதார்த்த வாதம்' என்பது ஞானியவர்களின் கருத்தாகும். (படைப்பியல் நோக்கில் தமிழ் இலக்கியம்-1994.ப. 49).*

இவ்வாறாக இவர்கள் முன்வைத்துள்ள இம் மதிப்பீடுகள், சோஷலிஸ யதார்த்தவாதக் கோட்பாடானது, 'இலக்கியச் சிந்தனை மரபின் இயல்பான ஒரு வளர்ச்சிக்கட்டம் அல்ல' என்பதையும் 'அரசியல் தேவைகருதிய ஒரு நடவடிக்கையே' என்பதையும் உணர்த்தி நின்றன.

இவ்வாறாக சோஷலிச யதார்த்தவாதம் தொடர்பாக முன்வைக்கப்பட்ட கடுமையான விமர்சனங்களை மேற்படி கோட்பாடு சார்ந்து நின்று மறுத்துரைக்கும் கருத்துகளும் சமகாலத்தில் பதிவாகியுள்ளன. குறிப்பாக, க. கைலாசபதி, நா. வானமாமலை, வெ. கிருஷ்ணமூர்த்தி, எஸ்.தோதாத்திரி, கோ.கேசவன், கே.முத்தையா, ச.செந்தில்நாதன், அருணன் முதலிய பலர் அக் கோட்பாட்டை ஆதரித்து நின்று விவாதங்களை நடத்தியவர்கள் - நடத்தி வருபவர்கள்.

சோஷலிச யதார்த்தவாதக் கோட்பாடானது, 'அழகியலைப் புறக்கணிப்பதன்று' எனவும் 'சரியான அரசியல், நேர்த்தியான அழகியல் ஆகிய இரண்டையும் இணைக்க முயல்வது' எனக் கோ.கேசவன் குறிப்பிடுவர். 'சில நடைமுறைக் குறைபாடுகள் இருப்பினும் மிகச் சரியான ஒரு கோட்பாடாகவே அது திகழ்கிறது' என்பதே அவருடைய வாதமாகும். (கோ. கேசவன் இலக்கிய விமர்சனம் - ஒரு மார்க்சியப் பார்வை - 1984. பக். 205-207). 1960களிலிருந்து தொடரும் யதார்த்தவாதம் சார் விவாதச் சூழலின் இரண்டாவது முகம், இதுவே.

மேற்படி இருவகை யதார்த்தவாதங்களின் விவாதப் பொருண்மைகள் தொடர்பாக முக்கிய கவனத்திற் கொள்ளப்பட்ட பிரச்சினை அம்சங்கள் இரு வகைப்படுவன. அவற்றுள் முதலாவது அம்சம், தமிழ்ச்சூழலில் சோஷலிஸ யதார்த்தவாதம் பேசப்பட்டகால அரசியற் பின்புலநிலை தொடர்பானது. இரண்டாவது அம்சம் இலக்கியப் பாரம்பரிய நிலை தொடர்பானதாகும். அரசியற் பின்புலநிலை என்ற வகையில் இங்கு நமது கவனத்துக்குரிய அம்சம், சோஷலிஸ யதார்த்வாதமானது, 'சோஷலிஸப் புரட்சி ஏற்பட்டு, அது அரசியல் அதிகாரநிலையில் நடைமுறைப்படுத்தப்படும் நாட்டிற்குப் பொருத்தமானதொன்று' என்பதாகும். அத்தகு புரட்சி தமிழ்ச் சூழலில் 1960-70களில் மட்டுமல்ல இன்றுவரைகூட நிகழவில்லை. எனவே அக்கோட்பாடு பொருத்தமற்ற அரசியற் சூழலிலே பேசப்பட்டுளது என்பதே நாம் புரிந்துகொள்ள வேண்டிய விடயமாகும். இந்நிகழ்வு ஒரு 'வரலாற்றுத் தவறு' என்பதே பேராசிரியர் கா. சிவத்தம்பியவர்களின் கருத்தாகும் (பார்க்க: கார்த்திகேசு சிவத்தம்பியின் நேர்காணல்கள் - 2003. பக் 237-38.)

இரண்டாவதாக அமைந்த 'இலக்கியப் பாரம்பரியம்' என்ற அம்சம், 'தமிழக-இந்திய சூழலின் பாரம்பரியமான இலக்கியப் பின்புலநிலை' பற்றியதாகும். இந்தியமண், இராமாயணம் மற்றும் மஹாபாரதம் ஆகிய இருபெரும் பேரிலக்கிய பாரம்பரியங்களைச் சார்ந்த பண்பாட்டு மரபுகளைக் கொண்டதென்பதை அறிவோம். தமிழர் பண்பாட்டைக் கட்டமைப்பதில் சங்க இலக்கியம், சிலப்பதிகாரம், மணிமேகலை, பக்தி இலக்கியம், பெரியபுராணம், கம்பராமாயணம் முதலிய இலக்கிய ஆக்கங்கள் மிகப் பெரும் பங்களிப்பைச் செய்துள்ளன என்பது யாவரும் அறிந்ததே. இவ்வாறானவற்றைப் பண்பாட்டு மூலங்கள் என்ற நிலையில் உரியவாறு பயின்று தெளியவும், இவற்றின் உள்ளார்ந்த சாராம்சங்களை இனங்கண்டு பயன் கொள்ளவும் மேற்படி சோஷலிஸ யதார்த்த வாதக் கோட்பாடு எந்த அளவுக்குத் துணைநிற்கும்? என்பதே மேற்படி இரண்டாவது அம்சம் சார்ந்து எழும் வினாவாகும்.

இந்த வினாவுக்கு விடைகாண முயலும்போது சோஷலிஸ யதார்த்தவாதம் சார்ந்த 'வர்க்கச் சார்பு நோக்கு' என்ற அளவுகோலானது பயன்பட்டுள்ள நிலை பற்றிய ஒரு குறிப்பையும் இங்கு பதிவுசெய்வது அவசியமாகிறது. அது, மேற்படி இலக்கியப் பரப்பைச் சமூகத்தளநிலையில் வேறுபடுத்திக்காணத் துணை நின்றது என்பதாகும். குறிப்பாக 'பழம் பொதுமைச் சமூக இலக்கியம்', 'வீரயுக இலக்கியம்', 'அடிமைச்சமூக இலக்கியம்', 'வணிக வர்க்க இலக்கியம்', 'நிலவுடைமைச் சூழலின் வேளாண்வர்க்க எழுச்சிக்கால இலக்கியம்', பேரரசுச் சூழலின் இலக்கியம், 'முதலாளியச் சமூக இலக்கியம்' முதலியனவாகக் குறித்த சில சமூக வர்க்க அடையாளங்களுக்குள் மேற்சுட்டிய இலக்கியப்பரப்பைப் பொருத்தி நோக்க இக்கோட்பாடு துணை நின்றுளது. கைலாசபதி, வானமாமலை முதலியோருடைய எழுத்துகளில் இதனை நாம் தெரிந்து கொள்ளலாம். அவ்வச் சமூகப் பிற்புல அம்சங்களை விளக்கிப் பேசவும் இந்நோக்கு பயன்பட்டுளது. ஆனால் அவ்விலக்கியங்களின் சாரமாக அமைந்த மனிதநேய அம்சங்களை எடுத்துப் பேசவும் அவைசார் பண்பாட்டு விழுமியங்களை விளங்கிக் கொள்ளவும் இவ்வர்க்க அளவுகோல் துணைபுரியவில்லை. அதுமட்டுமன்றித் தடைபுரிவதாகவும்கூட அமைந்தது.

இதற்கான காரணம் மேற்சுட்டிய பண்டைத் தமிழிலக்கியப் பரப்பில் மிகப் பெரும்பகுதி சைவம், வைணவம், சமணம், பௌத்தம் முதலான சமயங்கள் சார்ந்தவை என்பதேயாகும். தமிழ்சூழல்சார் மார்க்ஸியரின் வர்க்க அளவு கோலிலே சமயங்கள் எனப்படுபவை பொதுவாக, 'ஆளும் வர்க்கத்தின் கருவி'களாகவும் அவ்வகையில் 'சுரண்டலுக்குத் துணைபோகும் சமூக சக்திக'ளாகவுமே கணிக்கப்பட்டன. இது, 'மதம் என்பது ஒரு அபின்' என கார்ல் மார்க்ஸ் ஜெர்மன் மொழியிற் கூறிய வாசகத்தை அடியொற்றிய சிந்தனையாகும். தமிழ்மார்க்ஸியர் பலரும் தொடக்க நாள்களில் மேற்படி மார்க்ஸின் கூற்றைத் தவறாகப் பொருள் கொண்டமையின் விளைவாகும். இவர்கள் அபின் என்பதைப் 'போதைப் பொருள்'- அதாவது மனிதரின் அறிவை மயக்கும் பொருள் என அர்த்தப்படுத்திக் கொண்டிருந்தனர். இப்புரிதலின் அடிப்படையிலேயே அவர்கள் சமயங்களை 'ஆக்கசக்தி'களாகக் கொள்ளாமல் 'அழிப்பு சக்தி'களாகவே கருதி வெறுத்தனர். மேற்படி சமயச்சார்பான இலக்கியப் பரப்பை ஆரம்பகால மார்க்ஸியர் உரியவாறு அணுக முடியாது போனதற்கான முக்கிய காரணி, இது.

மேற்படி அபின் என மொழியாக்கம் செய்யப்பட்டதன் ஜெர்மன் மூலச்சொல்லானது அம்மொழியிலே போதைப் பொருளை மட்டும் சுட்டுவதன்று. அது 'தற்காலிக வலிநிவாரணி' என்ற பொருளையும் தருவது. இப்பொருள் தெளிவு தமிழ்ச் சூழலில் பின்னாளில் அறியப்பட்டது என்பது இங்கு நாம் கவனத்திற் கொள்ள வேண்டிய வரலாற்றம்சம் ஆகும். (இத்தொடர்பிலான மேலதிக தெளிவுக்கு: முனைவர் சு. துரை. எழுதிய மார்க்சியநோக்கு என்ற நூல். ப. 110-114)

மேலே நோக்கியவாறான சமயங்கள் பற்றிய தவறான புரிதல் காரணமாக தமிழின் முக்கிய இலக்கியங்கள் பலவற்றின் சாராம்சங்களை ஆரம்பகால மார்க்ஸியர் பலரும் காணத் தவறியுள்ளனர். ஆயினும் குறித்த சில மார்க்ஸியர் மேற்சுட்டியவாறான புரிதலுக்கு அப்பால் சென்று மேற்படி இலக்கியங்களை உரிவாறு அணுக முற்பட்டனர் என்ற செய்தியையும் இங்கு பதிவு செய்வது வரலாற்று நோக்கில் அவசியமாகிறது.

இவ்வகையில் தமிழக மார்க்ஸியத்தின் முன்னோடிகளாகத்

*தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveedu.com***
***Fax: 1-416-849-0594 Tel: 1-416-857-6406***

திகழ்ந்த தோழர்கள் ப. ஜீவானந்தம், தொ.மு.சி. ரகுநாதன் மற்றும் டாக்டர் எஸ். இராமகிருஷ்ணன் முதலிய சிலர் இங்கு சுட்டப்பட வேண்டிய முக்கியத்துவமுடையவர்களாவர். இவர்கள் முக்கியமா கக் கம்பராமாயணத்தின் மீது சிறப்பான ஈடுபாடு காட்டியவர்கள். கம்பன் புலப்படுத்தி நிற்கும் 'மானுட'த்துக்கு இவர்கள் உரிய மதிப்பளித்தவர்கள். அந்த அடிப்படையில் ப. ஜீவானந்தமும் ரகு-நாதனும் அப்பேரிலக்கியத்திலே சோஷலிஸம் மற்றும் கம்யூனி ஸம் என்பன சார்பான சிந்தனைகளை இனங்காண முற்பட்டுள்ள னர். ஜீவா அவர்கள் கம்பன் விழாக்களில் பங்குகொண்டு அப்பே ரிலக்கியத்தின் சிறப்புகளை எடுத்துப் பேசியவருங்கூட. அவர் கம் பன் கண்ட தமிழகம் என்ற தலைப்பில் ஒரு நூலையும் 1954ல் எழுதியுள்ளார். இதுவே மார்க்ஸிய நோக்கில் கம்பனை அணுகிய முதலாவது ஆக்கம் எனக் கருதப்படுகிறது.

இவ்வாறு இவர்கள் மேற்கொண்ட இந்த நெகிழ்வான அணுகு முறை தமிழகச் சூழலில் மார்க்ஸியரில் இன்னொருசாராரால் கடு மையாக விமர்சிக்கப்பட்டன என்பது இங்கு நமது கவனத்துக்குரி யது. குறிப்பாக ஜீவானந்தம் அவர்களது இவ்வகை இலக்கிய முயற்சிகள், 'முதலாளிய எதிர்ப்பு என்பதான மார்க்ஸிய நோக்கின் திசைவழியிலிருந்து விலகிச் செல்வதான தவறான செயன்முறை களே' என்பதான குற்றச்சாட்டு மார்க்ஸியர் சிலரால் முன்வைக்கப் பட்டு வந்தது. (மேலதிக விளக்கத்திற்கு: முனைவர் சு. துரை. மேற்படிநூல் பக். 151- 155).

மேற்சுட்டியவாறு ஆரம்பகால மார்ஸியரிடையே இருநிலைப்பட்ட போக்குகள் நிலவிக்கொண்டிருந்த வரலாற்றுக் கட்டத்திலே, 60களின் நடுப்பகுதியிலிருந்து தமிழ்ச்சூழலிலே விமர்சன யதார்த்த வாதம் அறிமுகமாகத் தொடங்குகிறது. இது ஜீவா போன்றோரின் பார்வை அணுகுமுறை என்பவற்றுக்கு வலுச்சேர்ப்பதாக அமைந் தது. சமயங்கள் பற்றிய மார்க்ஸியரின் பார்வையில் குறிப்பிடத் தக்க மாற்றத்தையும் இது ஏற்படுத்தியது. கம்பராமாயணத்தை உள்ளடக்கிய தமிழ் இலக்கியப் பரப்பையும் சமயச் சார்புடை யனவாகிய அனைத்திந்திய இலக்கியப்பரப்பையும் உடன்பாட்டு நோக்கில் அணுகி அவற்றைப் பயன்கொள்ள வேண்டும் என்ப தான சிந்தனைகள் தமிழ் மார்க்ஸியரிடையில் உருவாகின. அவ் வவ்வாக்கங்களில் உள்ளுறைந்திருக்கும் மானுடச் சார்பினை நுனித்து நோக்கி எடுத்துப் பேசுவது தவிர்க்க முடியாதது என்ற எண்ணம் அக்காலப் புதிய தலைமுறை மார்க்சியர் பலரிடம் முகிழ்த்தது. இவ்வாறான பார்வைக்கு ஒரு முக்கிய சான்றாக பேராசிரியர் எம்.ஏ. நுஃமான் அவர்களின் பின்வரும் கூற்று அமை கிறது.

*'ராமாயணம் பாரதம் போன்ற பழங்கலைகளின் நிலவுடைமைச் சார்புக்காக நாம் அவற்றை நிராகரிக்க முடியாது. அவை வால் மீகியினதும், வியாசரதும் மூளையிலிருந்து மட்டும் உதிக்க வில்லை. பல்வேறு மக்கள் தொகுதியின் மிக நீண்டகால அனுப வத்தில் இருந்தும் கற்பனையில் இருந்தும் பிறந்தவை. வியாசரும் வால்மீகியும் அவற்றுக்கு இறுதிவடிவம் கொடுத்தவர்கள் மட்டுமே. இன்னும் நீண்டகாலத்துக்கு மனிதனின் கலை ஆளுமையை அவை வெளிப்படுத்திக்கொண்டே இருக்கும் என்றே எனக்குத் தோன்றுகிறது'. (மார்க்ஸியமும் இலக்கியத் திறனாய்வும்-1987 .ப.15.)*

இவ்வாறான நோக்குடன் தமிழகச் சூழலில் சிந்தித்து நின்றவர் களில் 'ஞானி' என அறியப்பட்ட கி. பழனிச்சாமி அவர்கள் முக்கி யமானவர். ஏறத்தாழத் தமிழிலக்கியப் பரப்பு முழுவதையுமே மார்க்ஸியநோக்கில் இவர் தரிசிக்க முயன்றுள்ளார். இந்திய - தமிழக - வாழ்வியலுக்கு ஏற்ற வகையிலான மார்க்ஸியப் பார்வை மற்றும் அணுகுமுறை என்பன தேவை என அவர் சிந்தித்துள்ளார். இவ்வகையில் அவர் எழுதிய இந்திய வாழ்க்கையும் மார்க்ஸிய மும் - விவாதத்துக்கான ஒரு முன்னுரை(1976) என்ற நூல் முக்கி யமான ஒன்றாகும்.

(தொடரும்)



subramanian.n@thaiveedu.com



# வேளிர்!
# கபிலரும் இருங்கோவேளும்

5

- செல்வநாயகி ஸ்ரீதாஸ்

## இருங்கோவேள்:

இருங்கோவேள் பதினெண்குடி வேளிருள் ஒருவன். இவன் வேளிர் குடியில் 50வது மன்னன் என்று ஏற்கெனவே கண்டோம். இருங் கோவேள் தமிழகத்தின் வடபகுதியிலுள்ள எருமை ஊரிலிருந்து அரசாண்டான் என்று அறியப்படுகிறது.

'வடபான் முனைவன் தடவினுட் தோன்றிச் செம்பு புனைந்து இயற்றிய சேணெடும் புரிசை' என்னும் பாடற்பகுதிக்குப் பலரும் பலவாறு விளக்கம் கொடுக்க முனைந்தாலும் இப் பாடலுக்கு...

'மேற்கு மலைத் தொடர்ப் பகுதியினர் நாற்புறமும் மலையால் சூழப்பட்ட இடைநிலத்தை 'தடவு' என்றும் 'கோட்டம்' என்றும் வழங்குவதால், முனிவன் தடவு என்றது முனிவன் ஒருவன் இருந்த இடைநிலம் என்றும் அந்நிலத்து வேளிர் தலைவன் ஒருவன், அப் பகுதிக்குக் கிழக்கே புலிநாடு என்றும் பன்னாடு என்றும் வழங்கிய இன்றைய கன்னட நாட்டு வேந்தனை வென்றது பற்றிப் 'புலிகடி மால்' எனப்பட்டான் என்று கொள்வது நேரிதாகத் தோன்றுகிறது' என்று கூறும் வித்துவான் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை அவர்க ளது உரை மிகவும் பொருந்துவதாக உள்ளது.

அக்காலத்தில் அப்பகுதியை ஆண்ட ஆந்திர சாதவாகன வேந்த ருள் ஒருவனான புலிமாய் என்பவனை இருங்கோவேள் வென்றிருக் கலாம். மேனாட்டு அறிஞரான ரொலமியும் 'புலிமாய்' வேந்தனைக் குறிப்பிட்டுள்ளார். சாத்தவாகனர் என்னும் மன்னர் குடியினர் கி.மு. 3ம் நூற்றாண்டிலிருந்தே இப்பகுதியில் ஆண்டதாக அறியக்கிடக் கிறது. நரசிம்ம பல்லவன் போரிட்டு வென்ற சாளுக்கிய நாட்டுப் புலிகேசியையும் இவ்விடத்து நினைவு கொள்வது பொருந்தும்.

ஔவை சு. துரைசாமிப்பிள்ளை அவர்களது கருத்துப்படி வேளிர் குலத்தவர் ஆதியில் அக்காலத் தமிழகத்தின் வடமேற்குப் பகுதி களில் தமது ஆட்சியைத் தொடங்கிப் பிற்காலத்தில் தமிழகத்தின் பல பகுதிகளிலும் குறுநில மன்னர்களாக ஆட்சி புரிந்தனர் என்று கொள்வது ஏற்றுக் கொள்ளத்தக்கதாகவுள்ளது.

பிற்காலத்து இருக்குவேள் அரசர்களைச் சங்ககால இருங்கோ-வேளுடன் தொடர்பு செய்து கூறும் ஆய்வாளர் ஆரோக்கியசாமி அவர்களுடைய கருத்து ஏற்புடையது அல்ல. இவ்விரு குடிக ளுக்கும் யாதொரு தொடர்பும் இருப்பதாகத் தெரியவில்லை. பெயர்களில் காணப்படும் ஒற்றுமை காரணமாக ஆரோக்கியசாமி அவர்கள் அவ்வாறு கருதியிருக்கலாம்.

இருங்கோவேள் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற தலையாலங்கானத் துப் போருடன் நேரடியாகத் தொடர்புடையவன்.

## தலையாலங்கானத்துப் போர்:

சங்ககாலத்தில் நடந்த போர்கள் பலவற்றுள்ளும் புலவர்கள் பல ராலும் பாடப்பட்ட போர் இதுவாகும். தலையாலங்கானம் என்னும் இடம் தற்காலத்தில் திருவாரூர் மாவட்டத்திலுள்ளது. கானம் என் பது காடு. பிற்காலத்தில் இவ்வூர் தலையாலங்காடு என்று அழைக்கப்பட்டது.

அரச விரிவாக்க காலத்தில் முடியுடை வேந்தர்களான சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையும் சோழன் கிள்ளிவளவனும் திதியன், எழினி, எருமையூரன், இளங்கோ வேண்மான், பொருநன் ஆகிய வேளிர்களுடன் இணைந்து இளை-யோனாகிய பாண்டியன் நெடுஞ்செழியனை இழிவாகப் பேசிப் போர் தொடுத்தனர். தலையாலங்கானத்தில் அவர்களை எதிர் கொண்ட பாண்டியன் நெடுஞ்செழியன் எதிரிப் படைகளை முறிய டித்து அவர்களது அரச சின்னங்களான முரசு, வெண்கொற்றக் குடை யாவற்றையும் தனதாக்கிக் கொண்டான். (அகம். 34).

இப் போர் குறித்து பாண்டியன் நெடுஞ்செழியன் பாடிய பாடல் ஒன்று புறநானூற்றில் இடம் பெற்றிருக்கிறது. அக்கால அரசியல், வஞ்சினம் உரைத்தல், சங்ககால மன்னர் உயர்வாகக் கொண் டவை என்று பல அரிய செய்திகள் இப்பாடல் வாயிலாக அறியப் படுகிறது. பாடல் வருமாறு,

**'நகுதக்கனரே, நாடுமீக் கூறுநர்**
**'இளையன் இவன்' என உளையக் கூறி,**
**'படு மணி இரட்டும் பா அடிப் பணைத் தாள்**
**நெடு நல் யானையும், தேரும், மாவும்,**
**படை அமை மறவரும், உடையம் யாம்' என்று**
**உறு துப்பு அஞ்சாது, உடல் சினம் செருக்கி,**
**சிறு சொல் சொல்லிய சினம் கெழு வேந்தரை**
**அருஞ் சமம் சிதையத் தாக்கி, முரசமொடு**
**ஒருங்கு அகப்படேஎன் ஆயின் பொருந்திய**
**என் நிழல் வாழ்நர் செல் நிழல் காணாது,**
**'கொடியன் எம் இறை' எனக் கண்ணீர் பரப்பி,**
**குடி பழி தூற்றும் கோலேன் ஆகுக்**
**ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி**
**மாங்குடி மருதன் தலைவன் ஆக,**
**உலகமொடு நிலைஇய பலர் புகழ் சிறப்பின்**
**புலவர் பாடாது வரைக, என் நிலவரை**
**புரப்போர் புன்கண் கூர,**
**இரப்போர்க்கு ஈயா இன்மை யான் உறவே.**

- புறநானூறு 75

பாடல் பொருள் வருமாறு - இவன் ஆளும் நாட்டின் பெருமை-களை மிகுத்துக் கூறுவர் என்றும் என்னை இளையவன் என்றும் மனம் வருந்தும்படி கூறுபவர்கள் நகைப்புக்கு இடமானவர்கள். யானை, குதிரை, தேர், காலாள் படைகளை உடையவர்களாகச் செருக்குற்று, எனது பெரு வலிக்கு அஞ்சாது சின்னத்தனமாகப் பேசிய இவ்வரசர்களது படையைப் போரில் சிதைந்து ஓடும்படி யாகத் தாக்கி அவர்களின் அரச சின்னங்களாகிய முரசுகளையும் வெண்கொற்றக் குடையையும் நான் கைப்பற்றுவேன். அவ்வாறு நான் செய்யாவிட்டால்

- எனது குடிமக்கள், வாழ நிழலற்று 'எமது தலைவன் கொடி யவன்' என்று என்னைத் தூற்றும் கொடுங்கோலனாக ஆவே-னாக.
- மாங்குடி மருதனைத் தலைமைப் புலவனாகக் கொண்ட புலவர் அவை என்னைப் பாடாமல் விடட்டும்
- பாதுகாக்கப்படும் சுற்றம் துன்பப்படட்டும்
- இரந்து வருவோருக்குக் கொடை செய்யமுடியாத வறுமை என்னை வந்தடையட்டும்.



சங்க கால மன்னன் ஒருவனது கடமை இங்கு வஞ்சினமாகக் கூறப்படுகிறது. செங்கோலனாக, புலவரால் பாடப்படும் பெருமை மிக்கவனாக, சுற்றத்தின் காவலனாக, இரப்போர்க்கு இல்லை என்னாது வாரி வழங்குபவனாக மன்னன் இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டான்.

இப்போர் வெற்றியின் காரணமாக நெடுஞ்செழியன், தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் என்று வர லாற்றில் இடம்பெற்றான்.

இப்போர், இருங்கோவேளுக்குப் பெருந் தோல்வியைத் தந்தாலும் வேளிர் வரலாற்றின் காலத்தைக் கணிப்பதற்கு ஒரு சான்றாக அமைந்தது.

பாண்டியன் நெடுஞ்செழியன் காலம் ஆய்வுக்குரிய ஒன்றாக உள் ளது. நெடுஞ்செழியன் என்னும் பெயரால் ஒன்றுக்கு மேற்பட்ட மன் னர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். ஆய்வாளர்கள், பாண்டியன் நெடுஞ் செழியன் காலத்தை இருவகையாகக் கணிக்க முயன்றுள்ளனர். சிலப்பதிகாரத்தில் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனுக்கு இவன் முன்னோனாகக் குறிப்பிடப்படுகிறான்.

- சிலப்பதிகாரத்தில் ஆரியப்படைகடந்த நெடுஞ்செழியனைக் குறிப்பிடுகையில், 'இளையராயினும் பகையரசு கடியும், செரு மாண் தென்னர் குலமுதலாகலின்' (சிலப்பதிகாரம், அந்தி-மாலைச் சிறப்புச் செய் காதை), என்னும் அடிகள், தலையா லங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைக் குறிப்பதாகக் கொண்டால், அவன் ஆரியப்படைகடந்த நெடுஞ் செழியனின் முன்னையோன் என்ற முடிவுக்கு வரலாம்.
- கி.மு. 3ம் நூற்றாண்டுக்கு உரியதாக மதிக்கப்படும் மாங்குளம் கல்வெட்டு நெடுஞ்செழியன் பெயரைக் குறிக்கிறது. கல்வெட்டு வாசகம் வருமாறு,

நந்த ஸிரிகுவன் என்ற சமணத் துறவிக்கு பாண்டியன் நெடுஞ்செ ழியனின் பணியாள் கடலன் வழுதி என்பவர் படுக்கை பொளிந்து கொடுத்தார்.

இந்தக் கட்டுரையின் தேவைக்காக, வேறு உறுதியான தடயங்கள் கிடைக்கும் வரை, பாண்டியன் நெடுஞ்செழியன் காலம் கி.மு. 3ம் நூற்றாண்டாக இருக்கலாம் என்று எடுத்துக் கொள்ளலாம்.

இருங்கோவேள் தலையாலங்கானத்துப் போரில் பாண்டியன் நெடுஞ்செழியனுக்குத் தோற்றான். பாண்டியன் நெடுஞ்செழியன் காலம் கி.மு. 3ம் நூற்றாண்டாக ஏற்றுக் கொண்டால் இருங்கோ-வேளின் காலமும் ஏறக்குறைய கி.மு. 3ம் நூற்றாண்டு எனக் கொள்ளலாம்.

தமிழ்நாட்டில் நடந்த அகழாய்வுகளில் சுட்ட செங்கற்களால் ஆன கட்டிடங்களுடன் கூடிய நகர நாகரிகம் கீழடியில் கண்டறியப்பட் டுள்ளது. கி.மு 3ம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 2ம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதியே தமிழ் நாட்டின் வீரயுகம் என்று கூறப்படும் சங்ககாலம் இருந்ததாக இதுவரை கருதப்பட்டுவந்தது. ஆனால், கீழடி அகழ்வாய்வுகள் சங்க காலத்தை மேலும் மூன்று நூற்றாண்டுகள் பழமையானதாக ஆக்குகின்றன. அதாவது, வைகை நதிக்கரையில் நகரமயமாதல் கி.மு. 6ம் நூற்றாண்டி லேயே தொடங்கிவிட்டது என்பது இதன் மூலம் தெளிவாகிறது. தமிழ் இலக்கியத்தோடு அகழ்வாய்வை ஒப்பிட்டுப் பார்க்கும் அள வுக்கு அகழ்வாய்வு முன்னேறி இருக்கிறது. மேலும், கீழடி அக ழாய்வில் கிடைத்த அறிவியல் அடிப்படையிலான காலக் கணிப் புகள் தமிழ் பிராமியின் காலம் கி.மு 6ம் நூற்றாண்டு என்னும் முடிவுக்கும் இட்டுச் செல்கிறது. இதன் மூலம் கி.மு. 6ம் நூற் றாண்டளவிலேயே தமிழகம் எழுத்தறிவு பெற்ற நகர நாகரீகச் சமூ கமாக விளங்கியுள்ளதும் உறுதியாகிறது.

## கபிலரும் இருங்கோவேளும்:

எமது கதை தொடர்கிறது.

இருங்கோவேளின் அரச சபை, கபிலர், ஒரு புலவனுக்கு இயல் பாகவே உரிய மிடுக்குடன், கம்பீரமாக அரச அவையுள் நுழைகி-றார், கூடவே பாரிமகளிர் இருவர்.

கபிலர், தான் அழைத்து வந்திருந்த அரசிளம் குமரிகள் இருவ ரையும் முன்னிலைப்படுத்துகிறார்.

**'இவர் யார் என்குவை யாயின் இவரே**
**ஊருடன் இரவலர்க்கு அருளித் தேருடன்**
**முல்லைக்கு ஈத்த செல்லா நல்லிசைப்**
**படுமணி யானைப் பறம்பின் கோமான்**
**நெடுமாப் பாரி மகளிர் யானே**
**தந்தை தோழன் இவர் என் மகளிர்'**

- புறநானூறு 201

இவர்கள் யார் என்று கேட்பாயாயின், தனக்குச் சொந்தமான ஊர் கள் யாவற்றையும் இரவலருக்குத் தானமாக வழங்கியவனும் முல் லைக்கொடி படர்வதற்குத் தேரைக் கொடுத்தவனுமாகிய பறம்பு மலையின் தலைவன் பாரியின் மகளிர், என்றார் கபிலர். இவ்வாறு கூறும்போதே, இவர்களைச் சாதாரணமாக எண்ணிவிடாதே அப் பனே என்னும் தொனி அவரது வாசகத்தில் தொக்கு நின்றது. அது மட்டுமல்ல, நான் அவர்கள் தந்தையின் தோழன், எனவே, இவர்கள் என் மக்கள், என்கிறார். 'உயிர் காப்பான் தோழன்' என்னும் ஆன்றோர் வாக்கை இங்கு நினைவில் கொள்ளலாம்.
அடுத்ததாக, 'அந்தணன் புலவன் கொண்டு வந்தனனே' என்று ஒற்றை வாய்க்கியத்தில், கபிலர் தம்மை ஒரு அந்தணராகவும் புலவர் என்றும் அறிமுகப்படுத்திக் கொள்கிறார். இங்கு, கபிலரது அறிமுகம், அவர் வந்த தேவை தொடர்பானது. தம்மை அறம் சார்ந்தவர் என்னும் பொருளில் 'அந்தணர்' என்று அறிமுகம் செய் கிறார் என்றே நாம் எடுத்துக் கொள்ளவேண்டும். உலகப் பொது மறையான வள்ளுவத்தின் வாக்குப்படியும் கபிலர் ஒரு அந்த ணரே.

**அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்**
**செந்தண்மை பூண்டு ஒழுகலான்**

இந்த அருளுடைமை தான் கபிலரை அத்தனை கம்பீரமாக, செருக்குடன் நடப்பதற்குக் காரணமாக அமைந்திருக்கிறது. கபி லர் வார்த்தை அத்தனை சக்திவாய்ந்ததா என்று கேட்கலாம். ஆம், அது 'கபிலரது ஆளுமை' என்று கூறுவது பொருத்தமாக இருக்கும். அவரது ஆளுமை தான் என்ன?

கபிலர், கல்வியிற் சிறந்தவர், பாரியின் அவைப்புலவர், மிகப் பெரிய எண்ணிக்கையிலான சங்கப் பாடல்கள் பாடியவர், 'குறிஞ் சிக்குக் கபிலர்' என்னும் பெயர் பெற்றவர், புலவரும் புரவலரும் போற்றிப் பாடிய பெருமைக்கு உரியவர், பிற்கால வரலாற்றை அறிவதற்கு ஆவணமாக அமையுமே என்னும் எண்ணம் எதுவுமின் றியே அதிகப்படியான வரலாற்றுச் செய்திகளைத் தன் பாடல்க ளில் தன்னிச்சையாகப் பதிவு செய்தவர், புலன் அழுக்கற்ற அந்த ணாளன், தனக்கென வாழாதவர், நட்புக்காகத் தன்னையே அர்ப்ப ணித்த பேராளன்.

இவர்கள் பாரிமகளிர், நான் அந்தணன், புலவன் என்று அறிமுகம் முற்றுப் பெற்றது. அடுத்ததாக, தான் நாடி வந்த காரியத்தை நிறைவேற்றி வைக்கவேண்டிய இருங்கோவேள் பற்றிக் கூறுகிறார்.

**'நீயே...**
**நாற்பத் ஒன்பது வழிமுறை வந்த**
**வேளிருள் வேளே விறற்போர் அண்ணல்**
**தார் அணி யானைச் சேட்டு இருங்கோவே**
**ஆண் கடன் உடைமையில் பாண் கடன் ஆற்றிய**
**ஒலியற் கண்ணிப் புலிகடி மாஅல்**
**யான் தர இவரைக் கொண்மதி வான் கவித்து'**

- புறநானூறு 201, அடி8-16

நீயோ, பழமையான வேளிர் குடியில் வந்தவன். 49 தலைமுறை கண்டவன், வேளிர்களுக்கு எல்லாம் தலைவனே! இருங்கோ-வேளே! தலைவன் கடமையை அறிந்து அதனைத் தனது கடப் பாடாகக் கொண்டு பாணர்க்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்பவன் நீ. யான் தர, இவர்களை நீ ஏற்றுக் கொள்வாயாக என்று கூறுவதாக அமைகிறது இப்பாடல்.

மிகவும் ஆளமாகவும் சொல்ல வேண்டுவன அனைத்தையும் உள் ளடக்கியதாகவும் சொற் சுருக்கமாகவும் பொருட் செறிவுள்ளதாக வும் மறுத்துரைக்க முடியாத வகையிலும் கபிலர் பாடல் அமைந் திருக்கிறது.

இடையிலே நடந்து முடிந்த விடயம் திரைக்குப் பின்னால் நடந் தது போல எமது கவனத்திற்கு வருகிறது.

கபிலர், உலக அனுபவம் மிக்கவர், யாரிடம், எதனை, எவ்வாறு கூறவேண்டும் என்னும் வழிமுறை நன்கு தெரிந்தவர், தனது வேண் டுதலை, வேண்டப்படுபவன் தட்ட முடியாத முறையில், மிக அழ காக முன்வைத்தார். பாணர்க்கு வேண்டியது வேண்டியவாறு முறை செய்யும் வள்ளலான இருங்கோவேளிடம், அவனோடு ஒத்த முது குடியில் வந்த, வேள் பாரியின் மகளிரை மணந்து கொள் ளும்படி கேட்டார். அவரது கணக்கு எவ்வாறு தப்பாகியது? கபி லரின் வேண்டுகோளுக்கு இணங்க இருங்கோவேள் மறுத்து விட் டான்.

'பாரி மகளிரை நான் தர, நீ மணந்து கொள்' என்று அந்தணாள-னாகிய கபிலர் வேண்டியும், இருங்கோவேள் மறுத்துவிட்டான். இந்த மறுப்பு தனது புலமைக்கும் பாரியின் வள்ளல் தன்மைக்கும் ஏற்பட்ட இழுக்காகக் கபிலரால் பார்க்கப்பட்டது. இயல்பாக அவ ருக்கு ஏற்பட்டிருக்க வேண்டியது, கோபம். எதிர்பாராத இந்தப் பதில் அவரை நிலைகுலைய வைத்திருக்கும், அவரது மறுபக்கம் தெரிந்திருக்கவேண்டும்.

ஆனால், கபிலர் நிதானித்துக் கொண்டார், கோபத்தைத் தன்னுள் அடக்கிக் கொண்டார். அவரது வார்த்தைகள் நிதானமாக மட்டு மல்லாமல் மிகத் தெளிவாகவும் வெளிவந்தன. தன் உள்ளக் குமு றலை மறைமுகமாகக் குறிப்பிடுகிறார்.

**'வெட்சிக் கானத்து வேட்டுவர் ஆட்டக்**
**கட்சி காணாக் கடமா நல்லேறு**
**கடறுமணி கிளரச் சிதறுபொன் மிளிரக்**
**கடிய கதழும் நெடுவரைப் படப்பை'**

- புறநானூறு 202, 1-4

'இருங்கோவேளே! செல்வ வளம் கொழிக்கும் உனது நாட்டில், வெட்சிச் செடிகள் நிறைந்த காடு, அக் காட்டில் வேட்டுவர்களால் விரட்டப்பட்ட மதம் கொண்ட யானை ஒன்று, புகலிடம் காணாது, காலில் கட்டப்பட்ட மணி, ஓசையை எழுப்பியபடி, பொன் துகள் கள் எங்கும் பரவும்படியாக விரைந்து ஓடும், வளப்பம் மிக்க, நெடிய மலைப்பாங்கான இடம் கொண்டது.'

**'வென்றி நிலை இய விழுப்புகழ் ஒன்றி**
**இருபால் பெயரிய உருகெழு மூதூர்க்**
**கோடிபல அடுக்கிய பொருள்நுமக்கு உதவிய**
**நீடுநிலை அரையத்துக் கேடும் கேளினி'**

- புறநானூறு 202, 5-8

'வேளே! மேலும் கேட்பாயாக. வளப்பம் மிக்க, மலைப்பாங்கான உனது நாட்டிலே, வெற்றியை நிலையாகக் கொண்ட, புகழ் பெற்ற சிற்றரையம், பேரரையம் என்னும் பெயரால் அச்சத்தைத் தரும் இரு பெருநகர்கள் இருந்தன. அந்நகர்கள், கோடிக்கணக்கான பொன்னையும் பொருளையும் கொடுத்து உன் முன்னோரின் வளர்ச்சிக்குக் காரணமாக இருந்தன. இப்பழம் பெரும் ஊர்கள் இன்று அழிந்து ஒழிந்தன. அதற்குக் காரணம் என்ன என்று கூறுகி றேன் கேள்.'

**'நுந்தை தாயம் நிறைவுற எய்திய**
**ஒலியற் கண்ணிப் புலிகடி மாஅல்**
**நும்போல் அறிவின் நுமருள் ஒருவன்**
**புகழ்ந்த செய்யுள் கழாஅத் தலையை**
**இகழ்ந்ததன் பயனே'**

- புறநானூறு 202, 9-13

புலிகடிமாலே! உன் தந்தை வழி உரிமையாகப் பெரும் செல்வங் களுடன் கூடிய இவ்வரசை நீ பெற்றாய். உன்னைப்போல் அறிவு டைய உன் முதாதையருள் ஒருவன், செந்நாப் புலவரான கழா அத் தலையாரை இகழ்ந்தான். புலவரது சீற்றத்தின் விளைவே, செல்வம் கொழித்த சிற்றரயம், பேரரயம் ஆகிய இவ்விரு நகரங்க ளின் அழிவு.

**'இயல்தேர் அண்ணல்!**
**எவ்வி தொல்குடிப் படீஇயர், மற்றுஇவர்**
**கைவண் பாரி மகளிர் என்றஎன்**
**தேற்றாப் புன்சொல் நோற்றிசிற் பெரும!'**

- புறநானூறு 202, 14-16

'நன்கு செய்யப்பட்ட தேரையுடைய தலைவனே! இவர்கள் எவ்வி

என்னும் பழங்குடியைச் சார்ந்தவர்கள் என்றும் வள்ளல் பாரியின் மகளிர் என்றும் கூறிய என் தெளிவில்லாத சொற்களைக் கருணை கூர்ந்து பொறுத்தருள்வாய்.'

**'விடுத்தனென் வெலீஇயர்நின் வேலே; அடுக்கத்து**
**அரும்புஅற மலர்ந்த கருங்கால் வேங்கை**
**மாத்தகட்டு ஒள்வீ தாய துறுகல்**
**இரும்புலி வரிப்புறம் கடுக்கும்**
**பெருங்கல் வைப்பின் நாடுகிழ வோயே!'**

- புறநானூறு 202, 17-21

'மலைச்சாரலில், கரிய அடிமரத்தையுடைய வேங்கை மரம், மொட்டுக்கள் அவிழ்ந்து, பூத்துக் குலுங்கிக் காட்சியளிக்கின்றது. வேங்கை பூக்கள் கரிய புற இதழ்களையுடையவை. அப்பூக்கள் கரிய மலைப் பாறைகளில் கொட்டிக் கிடக்கின்றன. பூக்கள் கொட்டிக் கிடக்கும் பாறையானது பார்ப்பவர் கண்களுக்கு வரிப் புலியின் முதுகு போலக் காட்சியளிக்கின்றது. அத்தகைய இயற்கை எழில் கொழிக்கும் பெரிய மலை நாட்டுக்குச் சொந்தக் காரனே! நான் செல்கிறேன். உன் வேல் வெற்றி பெறட்டும்.' என்று கூறி விடை பெறுகிறார் என்று பாடல் முடிவுறுகிறது. இது வாழ்த்தா? சாபமா?

வெளிப் பார்வைக்கு கபிலர், இருங்கோவேளிடம் விடை பெற்றுச் செல்வது போலத் தோன்றினாலும் இது ஒரு வினயம் நிறைந்த பாடலாகும். கபிலர் தாம் கூறக் கருதியவற்றை நேரடியாகக் கூறாது குறிப்பினால் கூறிச் சென்றார்.

- இருங்கோவேளின் மூதாதையரில் ஒருவன் கழாஅத்தலையரை இகழ்ந்ததால் 'அரையம்' என்னும் மாநகர் அழிந்தது என்று முன்னை நடந்து முடிந்த கதையை இருங்கோவேளின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். இங்கு, தன் சொல் கேளாது தன்னை இகழ்ந்ததால் இருங்கோவேளின் நாட்டுக்குக் கேடு நிகழும் என்பதை மறைமுகமாகக் கூறியிருக்கிறார்.
- அரையம் அழிந்த கதையைக் கூறும் போது 'நும்போல் அறிவின் நுமருள் ஒருவன்' என்றது, 'உன்னை ஒத்த அறிவிலி' என்று மறைமுகமாக, இளங்கோவேளின் 'அறிவின்மையைச்' சுட்டிக் காட்டுகிறார்.
- 'நுந்தை தாயம் நிறைவுற எய்திய' என்று அவனைப் புகழ்வது போல 'நீ அனுபவிக்கும் செல்வம் யாவும் உனது முதாதையர் உனக்கு விட்டுச் சென்றவை. உன் சொந்த முயற்சியால் நீ ஈட்டியவை அல்ல என்று மறைமுகமாகக் கூறுகிறார்.
- யான் இவர்களை 'எவ்வி தொல்குடிப் படீஇயர் கைவண் பாரி மகளிர்' என்றது உனக்குப் பகை தோற்றுவிப்பது போன்றதொரு அச்சத்தைக் கொடுத்தது போலும் என்று ஏளனம் செய்கிறார். பாரி மகளிரை மணந்தால் மூவேந்தரைப் பகைத்துக் கொள்ள வேண்டி வரும் என்று இளங்கோவேள், அஞ்சுவதாகவும், அஞ்ச வேண்டாதவற்றிற்கு அவன் அஞ்சுவதாகவும் குறிப்பிடுகிறார். இதனை, வேங்கைப் பூக்கள் கொட்டிக் கிடக்கும் பாறை, புலி போலக் காட்சியளிப்பதான உவமை மூலமாகக் குறிப்பிடுகிறார்.
- 'விடுத்தனென் வெலீஇயர்நின் வேலே' என்றது, 'நான் விடைபெறுகிறேன். என் வேண்டுகோளை நிறைவேற்றாத உன் வேல் தோற்றுப் போகட்டும்' என்று அவர் கூற விரும்பினாலும் அதை நேரிடையாகக் கூறாது குறிப்பாகக் கூறுகிறார்.

இவ்வாறு எதிர்மறைக் குறிப்பாகக் கூறுவதைத் தொல்காப்பியர், 'எழுத்தொடும் சொல்லொடும் புணரா தாகிப் பொருட் புறத்ததுவே குறிப்புமொழி யென்ப' (செய்யுளியல் - 172) என்கிறார். பண்டைய புலவர்களது தன்மை இப் பாடல் வழி நன்கு புலனாகிறது.

முடிவாக, அறம் காத்த குடியில் பிறந்த பாரி மகளிர் கோழையான உன் வீட்டில் வாழ்க்கைப்பட ஒருப்படார் என்று கூறி விடை பெறுகிறார் என்று கொள்ளலாம்.

புலவருக்கே உரிய செருக்கு இப் பாடலில் சிறப்புற அமைந்துள்ளது. இப் பாடலுடன் கபிலர், சேரன் செல்வக் கடுங்கோ வாழியாதனைப் பாடிய பதிற்றுப்பத்து, ஏழாம் பத்தில் வரும் 'இரக்கு வாரேன் எஞ்சிக் கூறேன்' என்னும் அடி கபிலரின் தன்மையை, தனித்துவத்தை விளக்கி நிற்கிறது.

தொடரும்.



selvanayaki.s@thaiveedu.com



# கர்நாடக சங்கீதமும் தமிழிசையும்

- மைதிலி தயாநிதி

Yoshitaka Terada எனும் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த புலமையாளர் 2008ம் ஆண்டு எழுதிய Tamil Isai as a Challenge to Brahmanical Music Culture in South India (Senri Ethnological Studies 71: 203-226) எனும் கட்டுரையின் பேசுபொருள் எனக்கு இசை கற்பித்த ஆசிரியர்களுள் ஒருவரை நினைவுபடுத்துவது. அக்காலத்தில் சென்னையில் பிரபல்யமான சங்கீத வித்துவான்களுள் ஒருவராகத் திகழ்ந்த அவர், பண்டைத் தமிழிசை பற்றிய ஆய்வு நூல்கள் எழுதியவர். அவர் மதராஸ் மியூசிக் அக்கடமியில் (இக்கட்டுரையில் இது சங்கீத வித்வத் சபை என்றே இனிக் குறிப்பிடப்படும்) பாடுவதற்கு 1979ம் ஆண்டு முயற்சி செய்தார் எனினும் அது கைகூடவில்லை. அதனால் விசனமுற்றிருந்தார். சங்கீத வித்வத் சபையில் பாடுவது என்பது மிக்க கௌரவமானதொன்றாகக் கருதப்பட்ட காலம் அது. முதலியார் வகுப்பைச் சேர்ந்த அப்பெண்மணிக்கு சங்கீத வித்வத் சபையில் பாடச் சந்தர்ப்பம் கொடுக்கப்படாமைக்கு வித்துவான்களிடையே நிலவிய கடும் போட்டியே காரணம் என்று நினைத்திருந்தேன். ஆனால் இருபதாம் நூற்றாண்டுத் தமிழிசை வரலாறு தொடர்பான நூல்களைப் படிக்கும்போதுதான், இத்தகைய புறக்கணிப்பின் பின்னணியில் சாதியம் தொழிற்பட்டிருக்கிறது என்பது புலனாயிற்று.

Terada எழுதிய கட்டுரை கர்நாடக சங்கீதம் என வழங்கப்படும் தென்னிந்திய சங்கீதத்திற்கும், சாதிக்குமிடையில் உள்ள தொடர்பினை ஆராய்கிறது. இந்நீண்ட கட்டுரையின் முக்கியமான பகுதி-களைத் தமிழில் மொழிபெயர்ப்பதன் மூலம் அது பேசும் விடயங்களை அறிமுகம் செய்வதே எனது நோக்கமாகும். ஆங்கிலத்தில் 24 பக்கங்களில் அமைந்த இக்கட்டுரை தமிழிசையின் பிரதான இரு காலகட்டங்களைக் கூர்ந்து நோக்குகின்றது. ஒன்று தமிழிசை இயக்கம் தோன்றிய 1940களை ஒட்டிய கால கட்டம். மற்றையது தமிழிசையின் சமகாலநிலைமைகளில் அதிருப்தி அடைந்தோர் அதற்குப் புத்துயிரூட்ட முயற்சிகள் எடுத்த 1990களை ஒட்டிய காலகட்டம். இக்கட்டுரையில் தமிழிசை இயக்கம் தோன்றிய காலகட்டப்பகுதியே நோக்கப்படுகின்றது. 1990களை அண்மித்த காலகட்டம் பற்றி இன்னொரு கட்டுரையிற் பார்க்கலாம்.

தமிழிசை என்பது பிராமணர்கள் கட்டமைத்த கர்நாடக இசைப் பண்பாட்டிற்கு எதிரான கலைவடிவம் என்பதே அவரது கட்டுரையின் அடிப்படை வாதமாகும். தென்னிந்திய செவ்வியல் இசைக்குத் தியாகராஜரின் பங்களிப்பினைத் தமிழிசை இயக்கம் மறுதலிக்கவில்லை. ஆனால், தியாகராஜர் பிராமணிய சங்கீதப் பண்பாட்டின் பிரத்தியேகமாகமான, சக்தி வாய்ந்த சின்னமாக இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் மாற்றப்பட்ட முறைமையையே அது விமர்சிக்கின்றது என்று அவர் கூறுகின்றார்.

கர்நாடக சங்கீதம், தமிழிசை என்பவற்றை அவர் தனது கட்டுரையின் ஆரம்பத்தில் வரையறுத்துக் கொள்கிறார். தென்னிந்திய செவ்வியல் இசை மரபைச் சுட்டுவதற்கு இரண்டு பதங்கள் இன்று பயன்பாட்டில் உள்ளன: ஒன்று கர்நாடக இசை, மற்றையது தமிழிசை. தமிழிசை என்ற பதத்தினும் பார்க்க கர்நாடக சங்கீதம் என்ற சொல்லே பெரிதும் வழங்கி வருகின்றது. சங்கீதம், இசை என்ற இரு சொற்களுமே சாதி, மொழிப் பிளவுகளைக் குறிப்பால் உணர்த்த வல்லவை. இக்கட்டுரையில் கர்நாடக சங்கீதம் என்பது தெலுங்கு, வடமொழிக் கீர்த்தனைகளை முதன்மைப்படுத்தும், பிராமணர்களினால் ஆதரிக்கப்படும் இசைப் பண்பாட்டைக் குறிக்கும். மாறாக, தமிழிசை என்பது தமிழ்மொழிப் பாடல்களை மையமாகக் கொண்டு, தமிழர்களினால் மரபு ரீதியாக வளர்க்கப்பட்ட இசை எனப் பிராமணரல்லாதார் முன்னிறுத்தும் இசையாகும். கர்நாடக இசையையும் தமிழிசையையும் வேறுபடுத்துவன இசை அம்சங்கள் அல்ல, மொழியும், சாதியும் ஆகும் என்பது கருத்திற் கொள்ளப்பட வேண்டியவை.

இப்புலமையாளரின் கட்டுரை எவ்வளவு தூரம் சங்கீத வித்வத் சபையானது பிராமண வாக்கேயகாரர்களை (composers.) மையமாகக் கொண்ட வரலாற்றினைத் தொடர்ச்சியாக அங்கீகரிப்பதன் மூலம் பிராமணர்கள் தமது அதிகாரத்தை இசைத்துறையில் நிலைநாட்டவும், தக்க வைத்துக் கொள்ளவும் பங்களித்துள்ளது என்பதையும், எந்த அளவுக்குப் பிராமணரல்லாதாரின் சங்கங்கள் சங்கீத வித்வத் சபைக்கு எதிரான சக்திகளை உருவாக்குவதற்கு, ஒடுக்கப்பட்டவர்களின் கருத்துகளை முன்வைத்துள்ளன என்பதையும் மதிப்பிடும் நோக்கத்துடன் எழுதப்பட்டதாகும்.

## சங்கீத வித்வத் சபை:

முதலில் அவர் பிராமணிய சங்கீதப் பண்பாட்டின் கோட்டையான சங்கீத வித்வத் சபையின் செயற்பாடுகளை ஆராய்கின்றார். சங்கீத வித்வத் சபையானது 1927ல் மதராசில் நடந்த இந்திய காங்கிரஸ் கூட்டத் தீர்மானத்திற்கு அமைவாக மதராசில் 1928ம் ஆண்டு நிறுவப்பட்டது. தென்னிந்திய செவ்வியல் இசை மரபு இதற்கு முன்னதாக தஞ்சாவூர் முதலிய அரசவைகளின் ஆதரவில் செழித்திருந்தது. ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் காலனித்துவ ஆட்சியில் இவ்வரச சபைகளின் வீழ்ச்சி காரணமாக இசைக் கலைஞர்கள் புதிய புரவலர் நாடி மதராஸ் பட்டினத்திற்குச் சென்றார்கள். நகரத்தில் உதயமாகும் உயர் மத்தியதர வகுப்பினரின் இரசனைக்கேற்ப, இக்கலைஞர்களின் இசையை மீளுருவாக்கம் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டது. மதராஸ் நகர சபாக்களில் கச்சேரி வடிவில் மீளுருவாக்கப்பட்ட இசைக்கு அங்கீகாரம் வழங்கும் நிறுவனமாக சங்கீத வித்வத் சபை தொழிற்பட்டது.

நிகழ்த்துகையிலும், ஆய்விலும் ஆரம்பம் முதலே ஈடுபட்ட சங்கீத வித்வத் சபை தென்னிந்திய செவ்வியல் இசையின் அதிசிறந்த கௌரவமிக்க, செல்வாக்குப் பொருந்திய முதன்மை நிறுவனமாக இன்று வரை திகழ்கிறது. வருடாவருடம் சங்கீத கலாநிதிப் பட்டங்களை மார்கழிமாத இசைவிழாவில் வழங்கி வருகிறது. சங்கீத வித்வத் சபையின் இசைவிழாவில் பாடுவது என்பது இசையைத்தொழிலாகக் கொண்டவர்களைப் பொறுத்தவரையில், சக வித்துவான்களின் அங்கீகாரம் பெறுவதற்குரிய சிறந்த வழியாகும். ஒரு வித்துவானின் தரத்தையும், தொழில் வெற்றியையும் அளக்கும் கருவியாக அவர் சங்கீத வித்வத் சபையில் நிகழ்த்தும் கச்சேரி திகழ்கிறது.

மேலும், சங்கீத வித்வத் சபை இருபதாம் நூற்றாண்டில் பெரும் எண்ணிக்கையில் நிறுவப்பட்ட வேறுபல இசைச் சங்கங்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தது. வருடாந்த இசை, நடன விழாக்களை இச்சங்கங்கள் ஒழுங்கு செய்தமையினால் கலைஞர்களின் நிகழ்த்து கைக்கான வாய்ப்பு வசதிகள் அதிகரித்தன. சபாக்களின் எண் ணிக்கை கூடினாலும், சங்கீத வித்வத் சபையானது தனது செயற் பாடுகள் மூலமாகத் தன் தனித்துவத்தைப் பேணிக்கொண்டது. சபையின் இசைவிழாக்காலங்களில் விசேட அமர்வுகளில் சங்கீதம் தொடர்பான பல்வேறு விடயங்கள் வித்துவான்களாலும், சங்கீதக் கோட்பாட்டு ஞானம் உடையவர்களாலும் விவாதிக்கப்பட்டன. இவ் வமர்வுகளில் பேசப்பட்ட விடயங்களை முன்னணிப் பத்திரிகை யான 'ஹிந்து' மக்களிடத்துக் கொண்டு சென்றது. இவ்வுரையா டல்களிற் பங்குபற்றியவர்களில் மதராஸ் பல்கலைக் கழகத்துடன் தொடர்புடைய பி. சாம்பமூர்த்தி, (1901-73), வி. ராகவன் (1908-1979) என்போர் முக்கியமானவர்கள். இவ்வாறு வருடாந்த மகாநா டுகள், சஞ்சிகை என்பன மூலமாக ஆய்வுச் செயற்பாடுகளுக்கு




ரிய தளமாக சங்கீத வித்வத் சபை விளங்கியது. அத்துடன் அது மதராஸ் பல்கலைக்கழகத்துடன் இணைந்து, பிராமண வித்துவான் கள், இரசிகர், விமர்சகர், பத்திரிகையாளர் என்பவர்களுக்குப் பௌதிக இடத்தை ஒதுக்கிக் கொடுத்ததுடன், நிறுவன ரீதியான ஒத்துழைப்பையும் வழங்கியது. இது மேற்கூறப்பட்ட நால்வகைக் குழுவினர்கள் பரஸ்பர ஆதரவு, ஊக்கம் என்பவற்றுக்காகத் தமக் கிடையே பிரத்தியேகமான வலைப்பின்னலை உருவாக்கிக் கொள்ள வழி சமைத்தது.

அடுத்து, அவர் சங்கீத வித்வத் சபையினால் பிராமண சமூகத் தைச் சேர்ந்த, தெலுங்கு, வடமொழி கீர்த்தனைகள் இயற்றிய மூன்று வாக்கேயகாரர்கள் தெய்வங்களாக்கப்பட்டு, சங்கீத மும் மூர்த்திகள் எனப் போற்றப்பட்டமை குறித்துப் பேசுகின்றார். தியா-கராஜர், முத்துஸ்வாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரிகளெனும் மும் மூர்த்திகளை மையமாகக் கொண்டே கர்நாடக சங்கீதத்தின் வரலா றானது சங்கீத வித்வத் சபையினால் கட்டமைக்கப்பட்டது. அவர்க ளுள்ளும் விசேடமாக, தியாகராஜரே கர்நாடக சங்கீதத்திற்கு முக் கியமானவராக அடையாளம் காணப்பட்டார். 1930ல் தொடங்கப் பட்ட Journal of the Music Academy எனும் சஞ்சிகையில் மும் மூர்த்திகள் பற்றிய கட்டுரைகள் வெளியாயின. 1931ல் அங்குரார்ப் பணம் செய்யப்பட்ட இசை ஆசிரியர் கல்லூரியில் அவர்களின் கீர்த்தனைகள் கற்பிக்கப்பட்டன. மும்மூர்த்திகள் ஞாபகார்த்தமாக விழாக்கள் நடத்தப்பட்டன. அவர்களின் கீர்த்தனைகளைப் பாடுவ தற்காகப் போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டன. வருடாந்த சங்கீத மகாநாடுகளில் அவர்களின் இசைத்தொண்டு விதந்து போற்றப் பட்டது. சங்கீத வித்வத் சபையின் அவைக்கூடத்தை மும்மூர்த்திக-ளின் படங்கள் அலங்கரித்தன. இத்தகைய செயற்பாடுகள் மூல மாக, தென்னிந்திய செவ்வியல் இசையை வரையறை செய்பவர் கள் இம்மும்மூர்த்திகளே என்ற கருத்து மீண்டும், மீண்டும் நினை வூட்டப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டது.

மும்மூர்த்திகளின் சாதியும் எவ்வாறு அவர்கள் சங்கீதத்தைத் தலைமுறை தலைமுறையாகப் பெற்று வந்தனர் என்ற கதையாட லும் நமது கவனத்தைப் பெற வேண்டியவை என்று Terada கருது கின்றார். மும்மூர்த்திகள் பிராமண சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மட் டுமன்றி, தமது முன்னோர்களான பிராமண வாக்கேயகாரர்கள் மூலம் கடத்தப்பட்ட சங்கீதத்தையே அவர்கள் தமது மரபுரிமையா கப் பெற்றுக் கொண்டனர் என்று கூறப்படுகின்றது. தியாகராஜர் தொடர்பில் அடிக்கடி குறிப்பிடப்படும் பெயர்கள் புரந்தரதாசர் (16ம் நூற்றாண்டு), சேத்திரக்ஞர் (17ம் நூற்றாண்டு), சொண்டி வெங்கட ரமணய்யா என்பவர்களாவர். இவர்களுள் சொண்டி வெங் கடரமணய்யா தியாகராஜரின் குரு ஆவர். ஆதிக்கம் செலுத்தும் இக்கதையாடலானது 'பிராமண வித்துவான்கள் சங்கீதத்தைத் தமது மரபுரிமையாகப் பெற்றிருக்கின்றனர் அவர்களின் சொந்த சங்கீத பாரம்பரியத்தின் உன்னத வெளிப்பாட்டினைத் தியாகராஜ ரிடத்துக் காணலாம்' என்ற முடிவுக்கு ஒருவரை இலகுவாக இட் டுச் செல்கிறது. இவ்வாறு கூறுவதன் மூலமாக தியாகராஜரின் அளப்பரிய பங்களிப்பைக் குறைத்து மதிப்பிடுவது தனது நோக்க மன்று என்றும், மாறாக, எவராலும் கேள்விக்குட்படுத்தப்படாத யதார்த்தமான மாயையை (illusion of unmediated reality) உருவாக் கும் இத்தகைய கதையாடலின் வலிமையைச் சுட்டிக் காட்டுவதே தனது நோக்கம் என்றும் Terada தெளிவுபடுத்துகின்றார். இக்கதை யாடல்தான், இசையில் பிராமண ஆதிக்கத்தைக் கண்டிக்கும் பிராமணரல்லாத தனிமனிதர்கள், அமைப்புகளின் விவாதத்தின் பிரதானமான மையப்புள்ளியானது.

தெலுங்குப் பிராமணரான தியாகராஜர் தெலுங்கில் கீர்த்தனைகள் இயற்றினார். (சில வடமொழியிலும் உண்டு). முத்துஸ்வாமி தீட்சி தரும், சியாமா சாஸ்திரிகளும் தமிழ்ப் பிராமணர்கள் எனினும், அவர்களது பெரும்பாலான கீர்த்தனைகள் வடமொழியிலும் தெலுங்கிலும் உள்ளன. கச்சேரியில் மும்மூர்த்திகளின் தெலுங்கு, வடமொழிக் கீர்த்தனைகள் பிரதான உருப்படிகளாகப் பாடப்பட் டன. இவற்றின் பின்னரே தமிழ்ப் பாடல்கள் துக்கடா (பல்வேறு வகையான, முக்கியமல்லாத) என்ற வகையில் பாடப்பட்டன. தமி ழின் தொன்மை தொடர்பான கருத்துகள் பரவலாகிக் கொண்டி ருந்த இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிராமணரல்லாத சமூகங்களைச் சார்ந்த பலர், 'தமிழ் பேசும் பகுதிகளில் நடக்கும் கச்சேரிகளில் ஏன் தமிழுக்குக் குறைந்த அளவு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது?' என எளிமையான (deceptively simple) கேள்வியைக் கேட்கத் தொடங்கினர்.

## தமிழிசை இயக்கம்:

அடுத்து, Terada தமிழிசை இயக்கத்தின் தோற்றத்தையும், தமிழி சையைப் பரப்ப தமிழிசைச் சங்கம் தாபிக்கப்பட்டமையையும் குறித்து எழுதுகின்றார். தமிழ் பெரும்பான்மையாகப் பேசப்படும்



இடங்களில் நடைபெறும் கச்சேரிகளில் தமிழ்ப் பாடல்கள் புறக் கணிக்கப்பட்டமை அல்லது அவற்றுக்கு உரிய இடம் வழங்கப்ப டாமை, இதன் மூலம் தமிழ் மொழி புறக்கணிக்கப்படல் என்பன தமிழிசை இயக்கத்திற்கு வித்திட்டது. பிராமணர்கள் தலைமுறை தலைமுறையாகத் தேர்ச்சி பெற்றிருந்த தெலுங்கு, வடமொழிப் பாடல்களின் ஆதிக்கத்தினை முறியடிப்பதற்காகத் தமிழ்ப் பாடல் களைப் பிரசித்தப்படுத்த இவ்வியக்கம் முனைந்தது. இதற்கான ஆக்கபூர்வமான முயற்சிகளில் ஈடுபட்டவர் தமிழ்ப்பண்பாட்டுக் காவலரான அண்ணாமலைச் செட்டியார் (1881-1948) அவர்கள். அவர் தான் நிறுவிய அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமி ழிசைக்காக 1935ல் பெரு நிதியுதவி அளித்தார்.

தமிழிசை இயக்கத்தின் மந்த வளர்ச்சியில் ஆர்வலர்கள் அதி ருப்தி கொண்டமையால் 1940களின் ஆரம்பகாலங்களில் இசை மகாநாடுகள் நடத்தப்பட்டன. 1941ல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இசை மகாநாட்டினைத் தொடக்கி வைத்த அண்ணாம லைச் செட்டியார் கச்சேரிகள் தமிழ்ப் பாடலுடன் தொடங்கித் தமிழ்ப் பாடலுடன் நிறைவுறுதல் வேண்டும் என்றும் பெரும்பா லான கீர்த்தனைகள் தமிழிற்றான் பாடப்படல் வேண்டும் என்றும் சிறுபான்மை வேறு மொழிகளில் அமைந்திருக்கலாம் என்றும் கூறி னார். இக்கருத்து செவ்வியல் இசையுலகினை இடிமுழக்கம் போன்று அதிரச் செய்தது. இத்தகைய கருத்துகள் மகாநாடுகளி லும், ஊடகங்களிலும், பொதுக் கூட்டங்களிலும் ‘இசையில் மொழி யின் பங்கு’ எனும் பிரச்சினை பற்றிய மிகச் சூடான விவாதங்க ளைத் தோற்றுவித்தன.

பிராமணரல்லாதாரால் முன்னெடுக்கப்பட்ட தமிழிசை இயக்கத்திற் கான எதிர்ப்பு சங்கீத வித்வத் சபையிலிருந்தும், அதனுடன் தொடர்புற்றிருந்த பிராமணர்களிடமிருந்தும் எழுந்தது. இவ் எதிர்ப் பினை நான்கு வகையாகப் பாகுபடுத்தலாம்.

**முதலாவது, மொழியைவிட இசையே முக்கியம் என்ற வாதம்:** 1941ல் நிறைவேற்றப்பட்ட அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தீர்மானத்திற்கு எதிராக முடிகொண்டான் வேங்கடராமையர் (1897-1975) ‘சங்கீதம் உச்ச நிலையை எட்டும்போது அதற்கு மொழி அவசியமில்லை’ என்றார். ‘சங்கீதத்தின் சாரம் இராகமே அன்றி மொழி அன்று’ என்ற கருத்து, பலரால் வலியுறுத்தப்பட் டது. சங்கீத வித்வத் சபை போஷகருள் ஒருவரான கிருஷ்ணமா சாரி ‘ஒலியிலே அழகை வார்த்தைகளற்றுத் தேடுவதே சங்கீதம்’ என்றார். 1941ல் நடைபெற்ற மகாநாட்டில் சங்கீத வித்வத் சபை, ‘சகல இசைக் கலைஞர்களினதும், இரசிகர்களினதும் நோக்கம் செவ்வியல் இசையான கர்நாடக சங்கீதத்தின் அதியுயர் தரத்தைப் பேணிப் பாதுகாப்பதாக இருத்தல் வேண்டும். அதன் தரத்தைப் பாதிக்கும் அல்லது நலிவடையச் செய்யும் வகையில் மொழியா னது கருத்தில் எடுத்துக் கொள்ளப்படல் ஆகாது’ என்ற தீர்மா னத்தை நிறைவேற்றியது.

**இரண்டாவது, கலைஞர்களின் கலைச் சுதந்திரம் தொடர் பான வாதம்:** ‘கச்சேரிகளில் பாடுவதற்கான உருப்படிகளைத் தேர்ந்தெடுக்கும் தமது உள்ளார்ந்த உரிமைக்குத் தனித் தமிழ் இயக்கத் தீர்மானம் குந்தகம் விளைவிக்கின்றது’ எனச் சில பிரா மண வித்துவான்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். ‘வித்துவான்கள் கச் சேரிகளில் என்ன பாடலாம் என்று வெளியிலிருந்து வரும் அறிவு றுத்தலானது வித்துவான்களுடைய தனிப்பட்ட சுதந்திரத்தைப் பாதிக்கிறது’ என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. 1941ல் நடை-பெற்ற சங்கீத வித்வத் சபை மகாநாட்டிலே முசிரி சுப்பிரமணிய அய்யர் (1899-1975) ‘சங்கீத வித்துவானுக்குத் தான் பாடும் உருப் படிகளைத் தெரிவு செய்யும் உரிமை உண்டு’ என்பதை வலியு றுத்தினார். (முசிரி தமிழிசை இயக்கத்தின் நோக்கத்தை விட, அது தன் குறிக்கோளை நிறைவேற்ற முயலும் வழிவகைகளையே எதிர்த்தார்.) செம்மங்குடி ஸ்ரீநிவாசையர் ‘நல்ல இசையைப் பொது சனத்தினால் வரையறுக்க முடியாது’ என்றும் ‘இசையில் ஜனநா யகம் என்பது ஒரு தீமை’ எனவும் கூறினார்.

**மூன்றாவது, உயர்தரத்தினதான கீர்த்தனைகள் தமிழில் இல்லை என்ற வாதம்:** ‘பெருமைமிகு வாக்கேயகாரர்கள் தெலுங்கு, வடமொழி எனும் மொழிகளிற்றான் கீர்த்தனைகளை இயற்றியுள்ளனர். பிறமொழிகளிலிருக்கும் தரமான அக்கீர்த்தனை-களைக் கைவிட்டுத் தமிழ்க் கீர்த்தனைகளைப் பிரபலப்படுத்தல் தவறாகும்’ என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. இவ்வாதத்திற்குப் பின்னாலிருப்பது ‘தெலுங்கே இசைக்கு உகந்த மொழி’ எனப் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாகும். பெரும் எண்ணிக்கை யிலான தமிழ்ப் பாடல்களைக் கச்சேரிகளில் சேர்த்துக் கொள்வது கர்நாடக சங்கீதத்தின் தரத்தைக் குறைக்கும் என்பதே சங்கீத விதவத் சபையின் பொதுவான எண்ணமாக இருந்தது.

இதற்குத் தமிழிசை இயக்க ஆதரவாளர்கள் ‘தமிழில் நல்ல தரமான கீர்த்தனைகள் உண்டு. ஆனால் அவற்றை சங்கீத வித்து வான்கள் புறக்கணித்துவிட்டனர்’ எனப் பதிலிறுத்தனர். பிராமணத் தமிழ் அறிஞரான உ.வே.சாமிநாதையர் ((1885-1942) தமிழ்ப்பாடல் கள் பாடும் வழக்கம் முற்காலத்திலிருந்து பின்னர் அவ்வழக்கம் அற்று விட்டதென நினைவு கூர்ந்தமையைச் சுட்டிக்காட்டினர். வேறு சில தமிழிசை இயக்க ஆதரவாளர்கள் ‘முத்துத்தாண்டவர் போன்றோரின் தமிழ்க் கீர்த்தனைகள் 1900களில் தெலுங்கு மோகம் பீடிக்கும் வரை கர்நாடக சங்கீதத்திற் செல்வாக்குச் செலுத்தியது’ என்று கூறினர். அதே சமயம் தமிழிசை இயக்கத்தினர் உயர்ந்த தரமுள்ள தமிழ்க் கீர்த்தனைகளின் எண்ணிக்கையைப் பெருப்பிப்ப திலும் கவனம் செலுத்தினர். பணப்பரிசுகளுடன் தமிழ்க் கீர்த்த னைப் போட்டிகள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நடத் தப்பட்டன. 1943ம் ஆண்டு முதல் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் 1300க்கும் மேற்பட்ட கீர்த்தனைகளைச் சுரப்படுத்தி பல தொகுதிகளாக வெளியிட்டது.

**நான்காவது, தமிழிசை இயக்கம் என்பது மொழி மற்றும் சாதிக் காழ்ப்பின் அடிப்படையில் தோன்றி, மறைமுகமாக இயங்கும் ஓர் அரசியல் இயக்கமாகும் எனும் வாதம்:** சங்கீத வித்வத் சபையைப் பொறுத்தவரையில், ‘தமிழிசை இயக் கம் என்பது இசையைப் பற்றியதே அல்ல. மாறாக, பிராமணக் கருத்தியலையும், அதிகாரத்தையும் தந்திரமாகத் தோற்கடிப்பதற் கான, பிராமணரல்லாதாரின் அரசியற் கட்சியின் (நீதிக்கட்சியின்) வடிகாலே’ எனும் கருத்தைக் கொண்டிருந்தது. ஆனால், தமிழிசை இயக்கத்தினர், C. இராஜகோபாலாசாரியார் (1878-1972), கல்கி கிருஷ்ணமூர்த்தி (1897-1968) போன்ற பல பிராமண தமிழிசை ஆதரவாளர்கள் இருப்பதைச் சுட்டிக்காட்டி, சங்கீத வித்வத் சபை யின் இவ் விமர்சனத்தை நிராகரித்தனர். உண்மையில் சங்கீத வித் வத் சபையின் செயலாளராகக் கடமையாற்றிய E. கிருஷ்ணையர் (1897-1968) ‘அதிகளவு தமிழ்க் கீர்த்தனைகள் பாடப்படல் வேண் டும்’ என்று 1929ம் ஆண்டிலேயே கூறியிருந்தார். ஆனால் சங்கீத வித்வத் சபையில் அவர் ஒரு விதி விலக்கு. 1941ம் ஆண்டு தமி ழிசை இயக்கத்தைக் கண்டிக்க சங்கீத வித்வத் சபை எடுத்த தீர் மானம் அவர் நிலைப்பாட்டைப் பிரதிபலிக்கவில்லை. இருதரப்பு வாதங்களையும் ஓர் இணக்கப்பாட்டிற்கு கொண்டு வரும் அவர் முன்மொழிவை அனைத்து பிராமணர் நிபுணர் குழு நிராகரித்து விட்டது.

## தமிழிசைச் சங்கம்:

தமிழிசை தொடர்பான சர்ச்சைகள் உச்சக்கட்டத்திலிருந்தபோது தமிழிசைச் சங்கம் 1943ம் ஆண்டு தாபிக்கப்பட்டது. சங்கீத வித் வத் சபையின் கடுமையான எதிர்ப்பிற்கு முகம் கொடுத்த தமி ழிசை இயக்க முன்னோடிகள் தங்கள் நம்பிக்கைகளின் அடிப்ப டையில் ஓர் அமைப்பொன்றைத் தாபிக்க வேண்டியதன் அவசி யத்தை உணர்ந்தனர். சங்கீத வித்வத் சபையின் ஆதிக்கத்திற்குச் சவால் விடும் வகையில் தமிழிசைப் பாடல்கள் பலவற்றை உள்ள டக்கிய வருடாந்த இசை நிகழ்வை டிசம்பரில் தமிழிசைச் சங்கம் ஒழுங்கு செய்தது. தமிழிசைச் சங்கத்தின் இசைக் கச்சேரிகளில் பிராமண, பிராமணரல்லாத என இருதரப்பு வித்துவான்களும் மேடையேறினர். ஆனால், சங்கீத வித்வத் சபையில் கச்சேரி செய் யும் பிராமணரல்லாத வித்துவான்களின் எண்ணிக்கையைவிட, தமி ழிசைச் சங்கத்தில் பிராமணரல்லாத வித்துவான்களின் எண் ணிக்கை மிகவும் அதிகமாக இருந்தது. அத்துடன், தமிழிசை மாநாடுகளையும் சங்கம் நடத்தியது. இம்மகாநாடுகளில் பழந்தமி ழிசைக்கும் சமகால இசைக்குமுரிய தொடர்புகள் ஆராயப்பட்டன.

தமிழிசையைப் பிரபலப்படுத்த 1944ல் மதராசிலும், பின்னர் ஏனைய இடங்களிலும் தமிழிசைக் கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட் டன. பாடத்திட்டத்தில் பிறமொழிப் பாடல்கள் விலக்கப்பட்டன. பெரும்பாலும் வாய்ப்பாட்டிசையிலேயே பயிற்சி அளிக்கப்பட்டது.

பெரிய மேளத்திற்கான (நாதஸ்வரம், தவில்) கற்கைநெறியும் உருவாக்கப்பட்டது. தமிழ்ப் பாடல்களையும் பெரிய மேளத்தையும் பிரபல்யப்படுத்துவதற்கு பணப்பரிசுகளுடன் போட்டிகள் நடாத்தப் பட்டன.

பிராமணரல்லாத வித்துவான்களே தமிழ்ப் பாடல்களைப் பாடு பவர்களாக இருந்தமையால், தமிழிசைச் சங்கம் பிராமணரல்லாத இசைக் கலைஞர்களினதும், தமிழ் உருப்படிகளினதும் தனியொரு புரவலனாக விளங்கியது. பிராமணரல்லாத இசைக்கலைஞர்களின் கருத்தின்படி, சங்கீத வித்வத் சபையும், பிராமணர் கட்டுப்பாட்டில் இருக்கும் இதர சங்கங்களும் பிராமண வித்துவான்களுக்கே முன் னுரிமை அளித்தன.

## தமிழ்ப்பாடல்களின் செல்வாக்கு:

தமிழ்ப் பாடல்கள் இன்று செல்வாக்குடையனவாகத் திகழ்கின்ற னவா என்ற கேள்வியைத் தனது கட்டுரையில் Terada எழுப்புகின் றார். பல பிராமணர்கள் ‘பிரதான செவ்வியலிசை நீரோட்டத்தில் தமிழ்ப் பாடல்கள் படிப்படியாகக் கலந்துவிட்டன. ஆகவே தமி ழிசை இயக்கத்தின் கோரிக்கை வெற்றி பெற்றுவிட்டது’ என்றே கருதுகின்றனர். ஆரம்பத்தில் தமிழிசை இயக்கத்தை விமர்சித்த முசிரி சுப்பிரமணிய ஐயரும், செம்மங்குடி ஸ்ரீநிவாசய்யரும், முடி வில், தமிழிசைச் சங்கத்தின் ஆதரவில் நிகழ்ந்த கச்சேரிகளில் தமிழ்ப் பாடல்கள் பாடியதுடன், ‘இசைப்பேரறிஞர்’ என்ற பட்டத் தையும் முறையே 1963, 1969ம் ஆண்டுகளில் பெற்றுக் கொண்ட னர்.

எனினும், சங்கீத வித்வத் சபையிலும், பிராமணர்களினால் நிர்வ கிக்கப்படும் சென்னையில் உள்ள ஏனைய சபாக்களிலும் தமி ழிசை பாடப்படுவது கடந்த அறுபது வருடங்களில் பெரிதாக அதிகரித்துள்ளதெனக் கூறவியலாது என Terada கூறுகின்றார். எடுத்துக்காட்டாக 1998ல் இந்த சபாக்களில் நிகழ்ந்த மார்கழி இசை விழாவில் பாடப்பட்ட தமிழ்க்கீர்த்தனைகளின் விகிதாசாரம் வெறும் 5 வீதம் மாத்திரமே. இதே போன்றே, 1949ல் தாபிக்கப் பட்ட தமிழ் நாடு அரசு இசைக்கல்லூரியில் இசை வேளாளரான திருப்பாம்புரம் எஸ். சண்முகசுந்தரம் அவர்கள் 1988ல் கல்லூரி முதல்வரானபோது, தெலுங்கு, வடமொழிக் கீர்த்தனங்களைப் பெரும்பான்மையாகக் கொண்டிருந்த பாடவிதானத்தை மாற்றித் தமிழ்க் கீர்த்தனைகளைப் புகுத்தியும், பிராமணரல்லாத வித்து வான்களை ஆசிரியர் பணிக்கு அமர்த்தியும் எனப் பல மாற்றங்க ளைச் செய்தாலும், 1999ல் அவர் இளைப்பாறியதுடன் பாடவிதா னத்தில் மீண்டும் தெலுங்கு, வடமொழிப் பாடல்கள் ஆட்சி செலுத் தலாயின.

ஆயினும், பிராமண சங்கீதப்புலமையின் இன்னொரு நிலையமா கத் திகழ்ந்த சென்னைப் பல்கலைக்கழகத்தின் பாடவிதானத்தில் தமிழிசைக்கு முதன்மை கொடுக்கவேண்டும் என்ற தீர்மானம் அப் பல்கலைக்கழகத்தின் பிராமணரல்லாத உபவேந்தர் காலத்தில் முன்னெடுக்கப்பட்டு அமுற்படுத்தப்பட்டது. 2004ம் ஆண்டில் பல் கலைக்கழகப் பாடவிதானம் தமிழை மையமாகக் கொண்டே அமைந்திருந்தது. அத்துடன், இசையில் புழக்கத்திலிருக்கும் வட மொழிக் கலைச்சொற்களைத் தமிழ்ப்படுத்தல் வேண்டும் என்ற தீர் மானமும் நிறைவேற்றப்பட்டு, அதைச் செயற்படுத்தும் முயற்சிக ளும் ஆரம்பமாயின.

Terada அவர்களின் கட்டுரையை இரு பாகங்களாகப் பிரித்து, அதன் முதற்பாகத்திலுள்ள முக்கிய விடயங்களை மொழிமாற்றம் செய்து தந்துள்ளேன். இப்பகுதியில் சங்கீத வித்வத் சபைச் செயற் பாடுகளும், அதற்கு எதிராகத் தோன்றிய தமிழிசை இயக்கச் செயற்பாடுகளும் விவரிக்கப்பட்டன. இறுதியாக, பிராமணர் நிர்வ கிக்கும் சங்கீத சபாக்களில் 1990களின் பிற்பகுதியில் தமிழிசை யின் அதிக முன்னேற்றமில்லாத நிலை பற்றியும், அதே சமயம் சென்னைப் பல்கலைக்கழகப் பாடவிதானத்தில் தமிழிசைக்கு முக் கியத்துவம் வழங்கப்பட்டமை பற்றியும் அவர் குறிப்பிட்டார். இனி, 1990களில் பிராமணிய சங்கீத கலாசாரத்திற்கு எதிராகத் தோன் றிய புதிய தீவிரவாதம் குறித்து அவர் என்ன கூறுகிறார் என்பதை அடுத்த கட்டுரையில் பார்ப்போம்.



maithilithayanithy@thaiveedu.com



# இசைத் தமிழ்ப் பாடற்பரப்பும் சமகாலப் பயன்பாட்டு நிலையும்

5

- கௌசல்யா சுப்பிரமணியன்

இத்தொடரில் தமிழிசை மூவரில் காலத்தால் முற்பட்டவரான முத்துத்தாண்டவரின் (கி.பி. 1560-1640) கீர்த்தனைகள் கடந்த இரு கட்டுரைகளில் நோக்கப்பட்டன. ஏனைய இருவர்களான அருணாசலக்கவிராயர் (கி.பி. 1711-1779) மற்றும் மாரிமுத்தாபிள்ளை (கி.பி. 1712-1787) ஆகியோரின் கீர்த்தனைகள் அடுத்து நோக்கப்படவுள்ளன.

இவ்விருவரும் முத்துத்தாண்டவரிலிருந்து சிற்சில அம்சங்களில் வேறுபட்டவர்கள். இவர்கள் இருவருமே தமிழ்நாட்டில் நாகப்பட்டினம் என்னும் மாவட்டத்தில் ஏறத்தாள ஒரே காலகட்டத்தில் வாழ்ந்தவர்கள் என்பதும் இங்கு நினைவிற் கொள்ளப்படவேண்டிய வரலாற்றுத் தகவலாகும். பல இலக்கிய நூல்களைக் கற்றுத் தமிழறிவோடு இசையறிவும் வாய்க்கப் பெற்றவர்களாகத் திகழ்ந்தவர்கள் இவர்கள். 'அசோமுகி நாடகம்', சீர்காழித்தலபுராணம், சீர்காழிக் கோவை, சீரகாழிஅந்தாதி, சீரகாழிக்கலம்பகம், அனுமார்பிள்ளைத் தமிழ், தியாகேசர் வண்ணம் ஆகியவை அருணாசலக்கவிராயரால் எழுதப்பட்ட இலக்கிய நூல்களாகும்.

புலியூர் வெண்பா, சிதம்பரேசர் விரலிவிடுதூது, தில்லைப்பள்ளு, சித்திரக்கவிகள், வருணபுரி மூலேசர் குறவஞ்சி, வருணாபுரிப் பள்ளு, நொண்டிநாடகம், விடங்கேசர் பதிகம், அநீதிநாடகம் என்பன மாரிமுத்தா பிள்ளையவர்களால் எழுதப்பட்ட இலக்கிய நூல்களாகும். மேற்கூறிய நூல்கள் பற்றிய தகவல்கள் இவர்களின் இலக்கிய அறிவினையும் கலையறிவினையும் எமக்கு எடுத்துக் காட்டுவன.

பக்தியிசை காலத்தில் (கி.பி. 300-900) தோன்றியவை திருமுறை திவ்வியப் பிரபந்தப் பாடல்களாகும். இவற்றில் பெரும்பான்மையானவை பதிக முறைமையிலேயே அமைந்திருந்தன. இவர்கள் இருவரும் வாழ்ந்த காலத்தில் தமது காலச் சூழலுக்கேற்ப பள்ளு, குறவஞ்சி, பிள்ளைத்தமிழ், நாடகம் முதலான பல்வேறு சிற்றிலக்கிய வகைசார் ஆக்கங்களைத் தந்துள்ளனர். அனைத்து மக்களையும் சென்றடையக் கூடிய எளிமையான வடிவங்களாகவும் கதாப்பிரசங்கங்களுக்கும் மேடைநாடகங்களுக்கும் ஏற்றவையாகவும் இதிகாச-புராணக்கதைகளை சமூகத்தின் அனைத்துத் தரப்பினர்க்கும் எடுத்துரைக்கத் துணைபுரிவனவாகவும் அமைந்தவையே மேற்சுட்டிய சிற்றிலக்கிய வகைகள். இவற்றை இயற்றுவதற்கு இவர்களுக்கிருந்த தமிழறிவும் சமய அறிவும் இசையறிவும் உதவின எனலாம். இவ்வாறான ஆக்க முயற்சிகளின் தொடர்ச்சியாகவே இவர்கள் இருவரும் கீர்த்தனை என்னும் இசைப்பாடல் துறையில் அடிபதித்தனர்.

கீர்த்தனை வடிவத்தைக் கையாண்ட முறைமையில் இவ்விருவருக்கும் தனித்தன்மைகள் உள்ளன. அருணாசலக்கவிராயர் தனிநிலைக் கீர்த்தனைகள் பலவற்றையும் இயற்றியதுடன் இக்கீர்த்தனை வடிவத்தை நாடகம் என்ற கட்டமைப்புக்குப் பயன்படுத்துவதிலும் சிறப்புடன் திகழ்ந்தவர். அவ்வகையில் அவர் பாடிய இராமநாடகக்கீர்த்தனையானது தமிழ் நாடகக் கீர்த்தனை மரபுக்கு ஒரு முன்னோடி முயற்சியாகக் கொள்ளப்படுவது. மாரிமுத்தா பிள்ளையவர்களும் தனிநிலைக்கீர்த்தனைகளை இயற்றியவர். இவரின் பல கீர்த்தனைகள் 'நிந்தாஸ்துதியாக' - பழிப்பது போல் புகழ்தல் - அமைந்தவையாகும். இவ்வாறான பழிப்பது போல் புகழ்தல் என்னும் முறைமையானது திருமுறை மரபிலே காரைக்காலம்மையார் மற்றும் சுந்தரமூர்த்திநாயனார் போன்றவர்களால் கையாளப்பட்ட தொன்றாகும். கீர்த்தனை மரபிலே மாரிமுத்தாபிள்ளையவர்களே இம்முறைமையினைக் கையாண்ட முன்னோடியாகின்றார். இக்கீர்த்தனைகள் பெரிதும் மக்களால் வரவேற்கப்பட்டுப் புகழ்பெற்றவையுமாகும். இவர் பல பதங்கள் என்ற வகைசார் கீர்த்தனைகளையும் பாடியுள்ளார்கள். இவ்விருவரையும் நோக்கும் முயற்சியில் மூத்தவரான அருணாசலக்கவிராயரின் இராமநாடகக் கீர்த்தனை பற்றி முதலில் நோக்கலாம்.

## இராமநாடகக் கீர்த்தனை - தோற்றப்பின்புலமும் அமைப்புச் சிறப்பும்:

அருணாசலக்கவிராயர் வாழ்ந்த காலம் தஞ்சையை மராட்டியர்கள் ஆட்சிபுரிந்த காலமாகும். மராட்டியர்களும் தமிழர்களைப் போன்று கலைமரபுகளைப் பேணிவந்தவர்களாவர். இதிகாச புராணக்கதைகளை இசைநாடகங்களாக எழுதுவதிலும் நடிப்பதிலும் ஈடுபாடு கொண்டிருந்தனர். அவ்வகை முயற்சிகள் 'பாகவதமேளா' எனப் பெயர் பெற்றிருந்தன. பாகவதர்கள் எனப்படும் பக்திப்பாடகர்களின் இசைமரபினூடாக உருவான நாடக மரபு இது என இதனைக் கூறலாம். இதனை ஆங்கிலத்தின் 'Opera' என்ற இசைசார் ஆடல் முறையுடன் ஒப்பிடும் மரபும் உளது.

தஞ்சையை மராட்டியர் ஆண்ட காலப்பகுதியில் நிகழ்த்தப்பட்ட பாகவதமேளா வகைசார் இசைநாடகங்களில் பிரகலாத பக்த விஜயம், அரிச்சந்திரா நாடகம் என்பவை முக்கியமானவையாகும். தஞ்சையில் மெலட்டூர் வெங்கட்டராம சாஸ்த்திரி அவர்கள் இவ்வகையான இசைநாடகங்களை எழுதுவதில் வல்லவராக அக்காலத்தில் இருந்தார் என அறிகிறோம். இவரின் இவ்வகை நாடகங்களைக் காண்பதற்கு பெருந்தொகையான மக்கள் இரவு நேரங்களில் விழித்திருப்பர். இசையை இரசிப்பதற்காகவும் இதிகாசப் புராணக்கதைகளைக் கேட்பதற்காகவும் பக்திபூர்வமாக மக்கள் கூடுவர். இவ்வாறான மக்கள் வாழ்கின்ற ஒரு சூழலிலேயே அருணாசலக்கவிராயர் இராமாயணக்கதையைக் கீர்த்தனை நாடகமாக உருவாக்கித் தந்துள்ளார்.

இராமாயணக்கதை யாவரும் அறிந்ததே. இக்கதை வால்மீகி முனிவரால் வடமொழியில் இயற்றப்பட்டதாகும். இவரைத் தழுவித் தமிழில் கி.பி. 12ம் நூற்றாண்டில் வாழ்ந்தவரான கவிச்சக்கரவர்த்தி கம்பரால் இராமாவதாரம் என்னும் பெருங்காவியம் பாடப்பட்டது. இதனையே கம்பராமாயணம் என நாம் வழங்கி வருகிறோம். வால்மீகி இராமாயணமும் கம்பராமாயணமும் புலமைத்திறன் உடையவர்கள் வாசித்து சுவைப்பதற்கான மொழி வடிவங்களில் அமைந்தவையாகும். அவ்வாறான கதையைச் சராசரி பொதுமக்கள் பார்த்துச் சுவைப்பதற்கும் கேட்டுச் சுவைப்பதற்கும் ஏற்றவகையில் இசைநாடகமாகக் கட்டமைத்த வகையிலேயே அருணாசலக்கவிராயர் முக்கியத்துவமுடைய ஒரு படைப்பாளியாகத் திகழ்கிறார். அவரை இவ்வாறான ஓர் ஆக்கத்தைத் தருவதற்கான அருட்டுணர்வைத் தந்த அம்சமாகவே அக்காலத்தில் பயன்பாட்டிலிருந்த பாகவதமேளா என்ற இசைநாடக மரபானது திகழ்ந்தது எனலாம்.

அடுத்து அருணாசலக்கவிராயர் இராமநாடகக் கீர்த்தனை இயற்றியது தொடர்பாகவும் அதை அரங்கேற்றியது தொடர்பாகவும் வழங்கிவரும் மரபான தகவல்கள் சிலவற்றைச் சுருக்கமாக நோக்கலாம். அருணாசலக்கவிராயர் பல இலக்கியங்களைக் கற்றதோடு அதனைக் கற்பித்தும் இன்னிசையுடன் பிரசங்கம் செய்தும் வந்தவராவார். இவரிடம் தமிழ் கற்க வந்த இசைக்கலைஞர்களான வெங்கட்ராம அய்யர் மற்றும் கோதண்டராம அய்யர் என்போரின்

நட்பால் இராமாயணக்கதையைக் கீர்த்தனைகளாக இயற்றும் எண்ணம் இவர்களுக்கு ஏற்பட்டது. இதற்கு மக்கள் மத்தியில் கிடைத்த ஊக்குதலே இராமர் கதையை முழுமையாகச் செய்யவும் தூண்டியதெனலாம். இதன் பேறாகக் கிடைத்ததே சொற்சுவை, பொருட்சுவை, இசைநயம் என்பவற்றுடனான இராமநாடகக் கீர்த்தனை ஆகும். 1771ம் ஆண்டில் இராமநாடகக் கீர்த்தனையை சிறப்புடன் நிறைவு செய்த அருணாசலக்கவிராயர் கவிச்சக்கரவர்த்தி கம்பர் தமது இராமாயணத்தை அரங்கேற்றிய திருவரங்கத்திலேயே தமது நூலையும் அரங்கேற்றினார். (தகவல்: இந்திய இசைக்கருவூலம் - டாக்டர் கே.ஏ. பக்கிரிசாமி, 2002)

அருணாசலக்கவிராயரின் மேற்கூறிய இராமநாடகக் கீர்த்தனையானது கம்பரின் இராமாயணத்தைத் தழுவியதொரு ஆக்கமாகும். கம்பராமாயணம் போன்றே பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிஷ்கிந்தா காண்டம், சுந்தரகாண்டம், யுத்த காண்டம் ஆகிய பகுதிகளைக் கொண்டமைந்துள்ளது. பண்டிதர்களுக்கு மட்டுமேயுரிய கம்பராமாயணத்தினின்றும் வேறுபட்டு பாமர மக்களையும் சென்றடைய வேண்டுமென்ற நோக்கில் உருவாக்கப்பட்டதே இராமநாடகக் கீர்த்தனைகள் என அவர் கூறியுள்ளார்.

இவ் இராம நாடகக்கீர்த்தனையில் அமைந்த பாடல்கள் நால்வகைப்படுவன. முதல் வகையின 'தருக்கள்' என்ற பெயரில் அமைந்தவை. பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற உருப்புக்களைக் கொண்ட கீர்த்தனை அமைப்பே இங்கு தரு எனச் சுட்டப்படுகிறது. இவ்வகைத்தருக்கள் 197 உள்ளன.

இரண்டாவது வகை 'திபதை' என்ற பெயரில் அமைந்த பாடல்களாகும். திபதை என்பது 'துவி - பதை' என்ற வடமொழிச் சொல்லின் திரிபாகும். இரண்டடிகள் உடைய பாடல் என்பதே இதன் பொருள். இவற்றைகண்ணிகள் எனச் சுட்டும் மரபையும் இந்நூல்களில் காண்கின்றோம். இவ்வகைப் பாடல்கள் 60 உள்ளன.

மூன்றாவது வகை 'தோடயம்'எனப்படும் பாடல் வகையாகும். இப்பாடல் ஒன்று மட்டுமே கீர்த்தனை அமைப்பில் நான்கு சரணங்கள் மட்டுமே கொண்டதான அமைப்பில் திகழ்கிறது. இப்பாடல் பால காண்டத்தில் கடவுள் வணக்கப்பகுதியில் அமைந்துள்ளது.

நாலாவது வகைப்பாடல் விருத்தவகையாகும். விருத்தமே கதையைத் தொடர்ந்து நகர்த்திச் செல்கின்ற பாடலாக அமைந்திருக்கும். 'அறுசீர்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்', 'எண்சீர்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்', 'தரவு கொச்சகக் கலிப்பா', 'இரட்டைஆசிரிய விருத்தம்', 'வஞ்சிவிருத்தம்', 'விருத்தம்' என்பனவாக பல்வேறு வகை விருத்தங்கள் இதில் பயில்கின்றன. தருக்களும் இரண்டடிக் கண்ணிகளும் எப்பொழுதும் ஒரு விருத்த வகைப்பாடலுக்குப் பின்பே பாடப்படுதல் வழக்காகும்.

இவ்விருத்தங்கள் இசையுடன் தாளமின்றிப் பாடப்படும். தருக்களுக்கும் கண்ணிகளுக்கும் இராகமும் தாளமும் குறிக்கப்பட்டுள்ளன.

மேலே நாம் நோக்கிய 'தரு' என்பதன் பொருள் மற்றும் அது அமைந்திருக்கும் முறைமை என்பன பற்றிய சில மேலதிக விளக்கங்கள் வருமாறு.

தருக்கள் எனப்படுபவை வடிவ நிலைகளில் கீர்த்தனை அமைப்புக்களே என்பதை முன்னரேயே நோக்கியுள்ளோம். பொதுவான கீர்த்தனைகள் வாக்கேயகாரர்களின் - பாடுபவரின் கூற்றுக்களாகவே அமைந்திருப்பனவாகும். ஆனால் இங்கு கூறப்படும் தருக்கள் என்ற கீர்த்தனைகள் இவ்விசை நாடகத்தில் இடம்பெறும் பாத்திரங்களின் கூற்றுக்களாக அமைபவையாகும். அதாவது பாத்திரங்களே அவற்றைப் பாடுவதாக அவை சித்தரிக்கப்பட்டிருக்கும். எனவேதான் இசைநாடகங்களின் பயன்பாட்டில் கீர்த்தனைகள் தரு என்ற பெயரில் வழங்கி வருகின்றன எனக் கருதமுடிகிறது. பரத சாஸ்த்திரத்தில் பல்வேறு தருக்கள் உள்ளன. அது வேறு. ஆனால் இங்கு கூறப்படும் தரு 'தோரியம்' என்ற அடிச்சொல்லிலிருந்து வந்ததாகச் சுதா சேஷய்யன் என்ற சொற்பொழிவாளர் கூறுகிறார். தோர்' என்றால் பாடல், 'இயம்' என்றால் இசை எனப் பொருள் கொள்வதிலிருந்து தமிழில் தரு என்பது இசைப்பாடலையே குறிப்பதாக அவர் விளக்கம் தருகிறார். நாடகப் பாத்திரங்கள் மேடையில் தோற்றும் பொழுது தருக்களைப் பாடிக் கொண்டே வருவார்கள். ஆனால் அவர்கள் நடிக்கத் தொடங்கியதும் பாடலின் மிகுதி அடிகளைத் திரைக்குப்பின் உள்ள பாடகர்களே பாடுவார்கள்.

இராமநாடகத்திலமைந்துள்ள பாடல்களில் நாற்பதுக்கு மேற்பட்ட இராகங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆதிதாளம், அடதாளம், சாபுதாளங்கள், ரூபகதாளம், ஐம்பைதாளம் ஆகிய தாளங்களில் இப்பாடல்கள் பாடப்பட்டுள்ளன. பல மணிநேரங்கள் நடைபெறும் இந்நிகழ்வினை திரைஅரங்குகள், தொலைக்காட்சிகள் போன்ற ஊடகங்கள் இல்லாத காலங்களில் மக்கள் விரும்பிக் கேட்டு தமது இசையறிவினையும் இதிகாச புராணக்கதைகள் தரும் அற ஒழுக்க நெறிமுறைகளையும் பெற்றுப் பயனடைந்தார்கள் என்பதை இவற்றால் புரிந்துகொள்ள முடிகிறது.

இதுவரை இராமநாடகக் கீர்த்னையின் அமைப்பு நோக்கப்பட்டது. அடுத்து அதில் இடம்பெற்ற தருக்கள் எனப்படும் கீர்த்தனைகள் பாடப்பட்ட முறைமைகள் மற்றும் சந்தர்ப்பங்கள் பற்றி அடுத்து நோக்குவோம். இவற்றில் முதலாவதாக நமது கவனத்தில் வருவது திருவரங்கத்தில் இவர் இந்நூலை அரங்கேற்ற முயன்ற சூழலில் இறையருளை வேண்டிப் பாடிய, 'ஏன் பள்ளி கொண்டீரய்யா ஸ்ரீரங்கநாதா ஏன்பள்ளி கொண்டீரய்யா...' என்ற கீர்த்னையாகும். (சீர்காழி மூவர் கீர்த்தனைகள் - முதல் பாகம் - பக்:178-182).

இக்கீர்த்தனை 'மோகன' இராகத்தில் 'ஆதி' தாளத்தில் அமைந்ததாகும். இதன் முதற்சரணத்திற்கே ஸ்வரதாளக்குறிப்புகள் மேற்குறிப்பிட்ட நூலில் உளது. மூன்று சரணங்கள் கொண்ட இக்கீர்த்தனையின் முதற்சரணம் இராம அவதாரத்திலும் இரண்டாவது சரணம் கிருஷ்ண அவதாரத்திலும் நிகழ்ந்த பல அருட்செயல்களைக் கூறுவதாக அமைந்துள்ளன. மேற்கூறிய அவதாரங்களின் அருட்செயல்கள் பலவற்றைக் கூறி இவ்வகையான அருட்செயல்களைப் புரிந்ததனால்தான் நீர் களைத்தோ, அலுத்தோ அன்றி வருத்தம் கொண்டோ இப்படிப்பள்ளி கொண்டிருக்கின்றீரோ? எனக் கேட்பதாக இக்கீர்த்தனையின் முதலிரு சரணங்களிலுமுள்ள அடிகள் அமைந்துள்ளதைக் காண்கின்றோம். ஒவ்வொரு சரணமும் பத்து அடிகள் கொண்டதான இவ்வமைப்பில் முதல் நான்கு அடிகளின் பின்னமைந்த சில அடிகள் 'மத்திம கால'த்தில் பாடப்படுகின்றன.

இக்கீர்த்தனையின் மூன்றாவது சரணம் முக்கியமானது. ஆனால் அச்சரணம் பொதுவாகப் பலராலும் பாடப்படுவதில்லை. அச்சரணத்திலேயே 'உன்னிடம் சரணடைந்துள்ளேன் என்னை அடிமை கொள்வீராக' எனக் கேட்பதான சரணாகதி தத்துவம் பேசப்படுகிறது. புராணக்கதைகளில் பலர் காப்பாற்றப்பட்டுள்ளதைக் கூறுவதனூடாக தமது துயரத்தையும் நீக்கும் வண்ணம் கேட்பதாக அமைந்த கீர்த்தனையாகும். இதன் மூலம் தமது நூலினை திருவரங்கத்திலே அரங்கேற்றம் செய்யும் பேற்றினைப்பெற்று அறிஞர்களின் புகழினையும் பாராட்டுதல்களையும் பெற்றார் அருணாசலக் கவிராயர்.

பொதுவாக முதலாவது சரணம் மோகன இராகத்திலும் இரண்டாவது சரணம் காபி இராகத்திலும் இராகமாலிகையாகப்பாடிய பதிவுகளே பெரும்பாலும் கிடைக்கின்றன. மோகன இராகத்தில் முதற் சரணத்தை மட்டுமோ அன்றி இரண்டு சரணங்களையுமோ பாடிய பதிவுகளும் கிடைக்கின்றன. புகழ்வாய்ந்த இசைக்கலைஞர்களான என்.சி. வசந்தகோகிலம், எம்.எல். வசந்தகுமாரி, எம்.எஸ். சுப்புலக்ஷ்மி, அருணாசாய்ராம், சுதாரகுநாதன், மதுரைமணி ஐயர், மகாராஜபுரம் சந்தானம், காயத்ரி கிறிஷ், டி.எம். கிருஷ்ணா போன்ற பலர் இக்கீர்த்தனையைப் பாடியுள்ளதை அவதானிக்கலாம். எம்.எல். வசந்தகுமாரி மற்றும் என்.சி. வசந்தகோகிலம் ஆகியோர் பாடிய ஒலி இணைப்பினைக் கேட்க:

(எம்.எல். வசந்தகுமாரி)
https://youtu.be/45MdQIszxGY

(என்.சி. வசந்தகோகிலம்)
https://youtu.be/w8t86GrQVlc

'இக்கீர்த்தனையை பரதநாட்டியத்தில் சிறந்து விளங்கிய பால சரஸ்வதியவர்களின் தாயார் அவர்கள் வறிய பெண்மணி ஒருவர் மத்தியமாவதி இராகத்தில் தமக்குள் பாடக்கேட்டு அவரைத் தம் வீடு அழைத்துச் சென்று அவரிடமிருந்து அக்கீர்த்தனையைக் கற்றுக்கொண்டார். பின்னர் பாலசரஸ்வதியவர்களும் இசைக்கலைஞர் பிருந்தா அவர்களின் முதல் மாணவியான ஸ்ரீமதி ஏ.ஆர். சுந்தரம்

அவர்களுமாக இக்கீர்த்தனையை மத்தியமாவதி இராகத்தில் பாடியதோடு பாலசரஸ்வதி அவர்கள் இதற்கு நடனமும் ஆடியுள்ளார்கள்', என்ற தகவல் இக்கீர்த்தனை ஆரம்பகாலங்களில் மத்தியமாவதி இராகத்தில்தான் பாடியுள்ளார்களோ என்ற ஐயப்பாட்டினை ஏற்படுத்துகிறது. அதன் ஒலி இணைப்பினையும் தகவலையும் கீழுள்ள இணைப்பில் கேட்டறிக:

(பாலசரஸ்வதி - ஏ.ஆர். சுந்தரம்)
https://youtu.be/X4RsZjt0vmo

இராம நாடகக் கீர்த்தனைகளைப் பலர் தற்பொழுது பாடிப் புகழடையச் செய்து வருகிறார்கள். இவ்வகைச் செயற்பாடுகளில் முக்கிய மூன்றினை முதற்கண் இங்கு கூறவிழைகிறேன். ஒன்று பம்பே சகோதரிகளான ஸ்ரீமதி சி. சரோஜா, ஸ்ரீமதி சி. லலிதா அவர்கள் பன்னிரண்டு பாடல்களைப் பாடிப் பதிவேற்றியுள்ளார்கள். இரண்டாவது செயற்பாடானது ஸ்ரீ டி.என். ஷேசகோபாலன் அவர்கள் பாடிய பதிவாகும். இப்பதிவின் முதல்ப் பகுதிய மட்டுமே கிடைத்துள்ளது. இதில் பதினான்கு கீர்த்தனைகள் பாடப்பட்டுள்ளன. இவற்றை விட 'அமுதம் மியூசிக் வீடியோஸ்' அமைப்பினரும் பல சிறந்த இசையாளர்களைக் கொண்டு இவரின் கீர்த்தனைகளைப் பாடிப் பதிவேற்றியுள்ளார்கள். இவையாவும் 2014-15 காலகட்டங்களில் நடைபெற்றவையாகும். இவ்வாறமைந்த மூன்று பதிவுகளிலுமுள்ள இராமநாடகக் கீர்த்தனைகளில் பம்பே சகோதரிகள் பாடியவற்றை முதலில் நோக்குவோம். அக்கீர்த்தனைகளைக் கீழேயுள்ள ஒலி இணைப்பில் கேட்கலாம்:

https://youtu.be/AarSeTNppmg

இப்பதிவிலுள்ள முதலாவது கீர்த்தனையானது 'பாலகாண்டப்பகுதி' சார்ந்ததாகும். இக்கீர்த்தனையின் தொடக்கத்திலமைந்த விருத்தப்பாடல் தசரதன் வசிஷ்டரிடம் பிள்ளையில்லாத தமது வருத்தத்தைக் கூறுவதாக அமைந்ததாகும். அதனைத் தொடர்ந்தே மேற்கூறிய கீர்த்தனை அமைகிறது. இது, தேவர்கள் பெருமாள் சந்நிதியில் அரக்க இனத்தவரால் ஏற்படுத்தப்படும் துயரைக் கூறி முறையிடுவதாக அமைந்ததாகும். 'அஸாவேரி' இராகத்தில் 'ஆதி' தாளத்தில் அமைந்த இக்கீர்த்தனை, 'கடைக்கண்ணால் இரங்கிப்பார் அய்யா...'என்ற தொடக்கத்தையுடையதாகும். (இராம நாடகக் கீர்த்தனை: பக்37-38) இரு பழமொழிகள் இக்கீர்த்தனையில் அமைந்துள்ளன. 'செக்குள்ளே அகப்பட்ட எள்ளு', 'கிளியை வளர்த்து பூனைக்கிட்டக் கொடுக்கலாமோ'ஆகிய பழமொழிகள் முதலிரு சரணங்களின் ஈற்றடியிலும் அமைந்துள்ளன. இவை அரக்கர் தேவர்களுக்கு ஏற்படுத்தும் துன்பத்தைக் குறிப்பால் உணர்த்தும் பழமொழிகளாக அமைந்துள்ளன.

பம்பே சகோதரிகளின் பதிவிலுள்ள இரண்டாவது கீர்த்தனையை அடுத்து நோக்குவோம். இது ஸ்ரீராமர் சீதையைக் காணவிழைந்த பொழுது அவரை யாரென அறியும் ஆர்வத்தில் வெளிப்படுத்திய உணர்வோட்டங்களைக் கூறும் இக்கீர்த்தனை 'பாலகாண்டப்பகுதி' யில் அமைந்ததாகும்.' ஆரோ இவர் ஆரோ என்ன பேரோ அறி-யேனே...' என்ற தொடக்கத்தையுடைய (இராமநாடகக் கீர்த்தனை: பக்46-47) புகழ்பெற்ற கீர்த்தனை 'ஸாவேரி' இராகத்தில் நூலில் இருந்தாலும் 'பைரவி' இராகத்தில் 'ஆதி' தாளத்திலேயே பாடப்படுவது வழக்கமாகவுள்ளது.

கௌசிக முனிவர் இராமனின் குணநலங்களை ஜனகனுக்கு அறி-முகம் செய்வதாக 'பாலகாண்டப்பகுதி'யிலமைந்தது மூன்றாவது கீர்த்தனையாகும். இது, 'ஆர் என்றெண்ணாமலே நாளும் இவன் அதிசயங்களைச் சொல்லக் கேளும்...' என்ற பல்லவியைத் தொடக்கமாகக் கொண்ட 'சங்கராபரண' இராக 'ஆதி' தாளக்கீர்த்தனையாகும். (இராமநாடகக் கீர்த்தனை: பக:47-48)

அடுத்தமைந்த நான்காவது கீர்த்தனை 'அயோத்தியா காண்டப் பகுதி'யில் கைகேகிக்கும் கூனிக்கும் இடையே நடைபெற்ற உரையாடலாக அமைகின்றதொரு புகழ்பெற்ற கீர்த்தனையாகும். 'ராமனுக்கு மன்னன் முடித(ந்)(ரித்)தாலே நன்மையுண்டொருக்காலே... இராமநாடகக் கீர்த்தனை: பக்67-68) என்ற தொடக்கத்ததையுடைய கீர்த்தனை ஆகும். இது 'ஆனந்தபைரவி' இராகத்தில் 'அடதாள சாபு' தாளத்தில் அமைந்திருந்தாலும் 'ஹிந்தோள' இராகத்தில் 'ஆதி' தாளத்திலேயே இது பலராலும் பாடிப் புகழ் அடைந்துள்ளதைக் காண்கின்றோம். மேலே உள்ள இணைப்பில் பாடிய பம்பே சகோதரிகள் மட்டுமல்லாமல் ஸ்ரீமதி நித்திய ஸ்ரீமகாதேவன் மற்றும் டி.வி. சங்கரநாராயணன் போன்ற பலரும் இதனைப் பாடியுள்ளார்கள். மூன்று சரணங்கள் கொண்ட இக்கீர்த்தனையின் இரண்டாவது சரணத்தையே அனைவரும் பாடியுள்ளதையும் அவதானிக்க முடிகிறது. மேலும் இக்கீர்த்தனையில் அநுபல்லவியின் இரண்டாவது அடியில் 'பழம் நழுவிப் பாலில் விழுந்தாற்போலாச்சே...' என்ற பழமொழியும் காணப்படுகிறது. இராமர் முடிசூட்டும் மகிழ்ச்சியான செய்தியைக் கூறிய கைகேகிக்கு ரத்னமாலையைக்கொடுத்த கைகேகி இச்செய்தி பழம் நழுவிப் பாலில் விழுந்தாற் போன்றதொரு நற்செய்தியாகவே எண்ணி மகிழ்வடைகிறாள்.

அடுத்தமைந்த ஐந்தாவது கீர்த்தனையானது இராமர் காட்டுக்கு இலட்சுமணனுடன் புறப்படுகிறேன் எனக் கூறுகையில் அதற்கு சீதை பதில் கூறுவதாக அமைந்தாகும். 'அயோத்தியா காண்டப் பகுதி'யில் அமைந்த இக்கீர்த்தனையானது 'எப்படி மனம் துணிந்ததோசாமி வனம் போய்வருகிறேன் என்றால் இதை ஏற்குமோ பூமி...'என்ற பல்லவித் தொடக்கத்துடன் 'உசேனி' இராகத்திலும் 'சாபு' (மிஸ்ரசாபு) தாளத்திலும் பாடப்படுவதாகும். மூன்று சரணங்களையுடைய இக்கீர்த்தனையின் முதலாவது சரணமே பாடப்படுகிறது. இக்கீர்த்தனையை பம்பே சகோதரிகள் மட்டுமல்லாது இசைக்கலைஞர்கள் சஞ்சை சுப்பிரமணியன், சௌமியா, டி.வி. சங்கரநாராயணன் போன்ற பலரும் பாடியுள்ளார்கள்.

அடுத்து யுத்தகாண்டப்பகுதியில் அமையும் 'சரணம் சரணம் என்றானே காவாதேவிட்டால் திரணம் அல்லவே நான்தானே...' (இராம நாடகக் கீர்த்தனை: பக்: 231-232) என்ற தொடக்கமுடைய ஆறாவது கீர்த்தனையாகும். பலவிதமாக எடுத்துச் சொல்லியும் திருந்தாத இராவணனின் செயலால் மனம் வருந்திய தம்பி விபீஷணன் இராமபிரானிடம் சரணடையச் செல்கிறார். விபீஷணனது நல்ல குணங்களை அனுமான் இராமரிடம் கூறுகிறார். அச்சமயத்தில் இராமர் விபீஷணனை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற தமது எண்ணத்தை உணர்த்தும் வகையில் அமைந்த கீர்த்தனை, இது. 'காவாதேவிட்டால் திரணம்.' என்ற அடியானது 'இப்படி வருபவனைக் காப்பாற்றாது விட்டால் நான் ஒரு சிறு புல்லாகிவிடுவேனே' எனப் பெருந்தன்மையுடன் இராமர் கூறுவதான பொருளில் இக்கீர்த்தனை அமைகிறது. மூன்று சரணங்கள் கொண்ட இக்கீர்த்தனையின் மூன்றாவது சரணமே பாடப்படுகிறது. இக்கீர்த்தனையையும் புகழ்பெற்ற இசைக்கலைஞர்களான எம்.எஸ். சுப்புலக்ஷ்மி, அரியக்குடி இராமானுஜ ஐயங்கார் ஆகியோர் பாடியுள்ளார்கள்.

அடுத்தமைந்த ஏழாவது கீர்த்தனையானது சீதையைக் கண்டு சென்ற சூர்ப்பனைகையானவள் இராவணனிடத்தில் அவள் அழகை வர்ணித்து ஆசையூட்டுவதாயமைந்ததாகும். 'காணவேணும் லட்சம் கண்கள் சீதாதேவிதன் காலுக்கு நிகரோ பெண்கள்...' (இராமநாடகக் கீர்த்தனை: ப: 130) என்ற பல்லவி தொடக்கத்திலமைந்த சுருட்டி இராகஅடதாளசாபு தாள கீர்த்தனையாகும். பரத் சுந்தர் அவர்களும் இதனைப் பாடியுள்ளார்கள். மூன்று சரணங்களில் முதலாவது சரணமே பாடப்படுகிறது.

அடுத்தமைந்த எட்டாவது கீர்த்தனையானது மாரீச மானை நம்ப வேண்டாமென இலட்சுமணன் கூறிய பின்பும் கேட்காத சீதையைத் தேற்றுவதாக அமைந்ததாகும். 'ஆர் என்று ராகவனை எண்ணினீரம்மா - இத்தை அறிந்து சொன்னீரோ அறியீரோ நீரம்மா...' (இராமநாடகக் கீர்த்தனை: ப: 134) என்ற பல்லவித் தொடக்கத்தையுடைய இக்கீர்த்தனை 'பைரவி' இராகத்தில் அமைந்ததாகும். இக்கீர்த்தனையை பம்பே சகோதரிகள் 'யதுகுலகாம்போதி' இராகத்திலும் 'ஆதி' தாளத்திலும் பாடியுள்ளார்கள். இராமரின் வீரதீரச்செயலை நம்பாத சீதையின் பெண் புத்தியைச் சாடுவதாகவும் இராமனின் வீரத்தைச் சொல்லிச் சீதையைத் தேற்றுவதாகவும் அமைந்ததொரு கீர்த்தனையாகும். இராமனின் ஆற்றலை முழுமையாகச் சீதை அறியவில்லையோ என்ற மனக்கவலை இலக்ஷ்மணனிடம் இருப்பதை உணரமுடிகிறது. இக்கீர்த்தனையின் இரண்டாவது சரணமே பாடப்பட்டுள்ளதைக் காண்கின்றோம்.

அடுத்தமைவது 'இந்தா விபீஷணா லங்காபுரிராச்சியம்...' (இராம நாடகக் கீர்த்தனை: பக்: 236-232) என்ற பல்லவித்தொடக்கமுடைய ஒன்பதாவது கீர்த்தனையானது 'பரசு' இராகத்திலமைந்துள்ளது. இதனை பம்பே சகோதரிகள் 'கமாஸ்' இராகத்தில் 'ஆதி' தாளத்தில் மூன்று அடிகளிலமைந்த மூன்று சரணங்களையுமே முழுமையாகப் பாடியுள்ளார்கள். இக்கீர்த்தனையானது வேதம், சூரிய சந்திரர்கள், பஞ்சபூதம், தேவர்கள், கார், பார், கடல்நீர், தன்பெயர் என அனைத்தையும் சுட்டி அவை உள்ள காலம் வரை லங்காபுரி

இராச்சியம் உனக்கே உரியது என இராமர் விபீஷணனிடம் கூறுவதாக அமைந்ததாகும்.

யுத்தம் புரிந்து சிறை வைத்த சீதையை இலங்கையிலிருந்து மீட்ட பின்னர் பதினான்கு ஆண்டுகள் நிறைவடையும் காலகட்டத்தில் அயோத்தியில் பரதன் தீயில் குளிக்க தயாராகின்றான். அச் சந்தர்ப்பத்தில் பாடப்பட்ட பத்தாவது கீர்த்தனை' வந்தான் வந்தான் பரதா - ரகுராமன் வந்தான் வந்தான் பரதா...' (இராமநாடகக் கீர்த்தனை: பக்: 407-408) என்ற பல்லவித் தொடக்கத்தையுடையதாகும். இக்கீர்த்தனை 'மத்தியமாவதி' இராகத்தில் பாடப்பட்டுள்ளதை பம்பே சகோதரிகள் 'மோகன' இராகத்தில் 'ஆதி' தாளத்தில் பாடியுள்ளார்கள். மூன்று சரணங்களில் முதற்சரணமே பாடப்பட்டுள்ளதையும் இவற்றில் முதலிரு அடிகளைப்பாடியபின் அடுத்த இரு அடிகளும் 'மத்திமகால'த்தில் பாடப்படுவதையும் காண்கின்றோம். இவற்றில் சில 'பழமொழி'களும் பயின்றிருத்தலைக் காணமுடிகிறது. 'காயும் புழுவுக்குச் சாயும் நிழல்போல...', 'தீயும் பயிருக்கு பெய்யும் மழைபோல...', 'பிரிந்த கன்றைத்தேடித் திரும்பும் பசுவைப்போல...' என அமையும் அடிகள் 'தீயில் குளிக்கப்போகும் பரதனின் மனநிலையையும் அச்சமயத்தில் அனுமான் இராமன் வரும் செய்தியை பரதருக்குக் கூறும் பொழுது அவரின் உணர்வு நிலை மாற்றத்தினையும் எமக்கு உணர்த்தி நிற்கின்றன.

மேற்கூறிய ஒலி இணைப்பில் அமைந்த நிறைவான இரு பாடல்களில் ஒன்று, இராம நாடகக் கீர்த்தனை நூலினை எழுதி முடித்த அருணாசலக்கவிராயர் அதனை கம்பர் அரங்கேற்றிய திருவரங்கத்தில் அரங்கேற்றுவதற்காக இறைவனை இரந்து கேட்கும் முன்னர் மேலே சுட்டியகீர்த்தனையான 'ஏன் பள்ளி கொண்டீரய்யா ஸ்ரீரங்கநாதா...' என்பதாகும். பம்பே சகோதரிகள் முதலிரு சரணங்களை 'மோகனம்' மற்றும் 'காபி' இராகங்களிலேயே இராகமாலிகையாகப் பாடியுள்ளார்கள். அடுத்து அமைந்த பன்னிரண்டாவது நிறைவுப்பாடல் விருத்தமாக அமைந்த 'ஸ்ரீராமர் பட்டாபிஷேக'ப் பாடலாகும். இதனை மத்தியமாவதி இராகத்தில் விருத்த முறையில் பாடிய பம்பே சகோதரிகள் தமது ஒலி இணைப்பினைப் பூர்த்தி செய்துள்ளார்கள். இவ்விருத்தம் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்ததாகும்.

இதுவரை இராம நாடகக் கீர்த்தனைகள் பற்றிய பதிவின் மூன்று செயற்பாடுகளில் முதற்செயற்பாடு நோக்கப்பட்டது. இரண்டாவது செயற்பாடு இசைக்கலைஞர் டி.என். சேஷகோபாலனுடைய பதிவுகளாகும். இவரது இரு பகுதிகளாயமைந்த செயற்பாட்டிலே ஒன்று மட்டுமே கிடைக்கிறது. அவற்றில் பதினான்கு உருப்படிகள் அமைந்துள்ளன.

முதலாவதாக ஒரு விருத்தம் பாடப்படுகிறது. இவ்விருத்தம் நாட்டை இராகத்தில் அமைந்ததாகும். இப்பாடல் இராம நாடக நூலிலுள்ள 'காப்பு' என்ற பகுதியில் அமைந்த விநாயகர் தோத்திரம், அநுமார் தோத்திரம,' பெருமாள் தோத்திரம் என்பவற்றில் பெருமாள் தோத்திரத்தின் விருத்தப்பாடலாகும். (இராமநாடகக் கீர்த்தனை: ப: 25) இராமரின் முழுமையான கதையும் இவ்விருத்தம் அமைந்த கீர்த்தனையிலேயே அமைந்திருக்கிறது.

அடுத்தமைந்த கீர்த்தனை 'அவதாரஞ்செய்திடுவீரே நீங்கள் அரக்கர் பயத்தை விடுவீரே...' என்பதாகும். பாலகாண்டப்பகுதியில் அமைந்த இக்கீர்த்தனை இராமரின் பிறப்பின் நோக்கம் கூறுவதாயமைந்ததாகும். 'மோகன' இராகத்தில் 'அடதாள'த்தில் அமைந்த இக்கீர்த்தனையானது 'ஜோன்பூரி' இராகத்தில் 'ஆதி' தாளத்தில் ஷேசகோபாலன் அவர்களால் பாடப்படுகிறது. இப்பாடல் பெருமாள் எல்லோரையும் தான் பூலோகத்திற்கு வரமுன் அனைவரையும் பூலோகத்தில் போய்ப் பிறக்குமாறு வேண்டுவதாய் அமைகிறது. அதுமட்டுமல்ல வானரவடிவு மானிட வடிவு இரண்டையும் விட்டு ஏனைய வடிவங்களால் மரணம் ஏற்படாத வரம் இராவணனுக்குக் கொடுக்கப்பட்டுள்ளதால் அதற்கேற்ப உங்கள் வடிவங்களை எடுக்கத் தேவர்கள் பணிக்கப்படுகிறார்கள் என்பதே இக்கீர்த்தனையால் கூறப்படுவதாகும். இதன் மூன்று சரணங்களில் இரண்டாவது சரணமே பாடப்படுகிறது.

(தொடரும்)



kawsalya.s@thaiveedu.com

Sky Route Courier Services
Worldwide & Domestic Courier Service
Compare Save Send
♦LOCAL ♦PROVINCIAL ♦NATIONAL ♦INTERNATIONAL
" Lot Cheaper Than You Think"
upto 70% Discount from Major Courier Companies
416.297.7368
www.skyroutecourier.com
Affordable Courier Rates For Individuals and Businesss
285 Milliken Blvd, unit 30
Scarborough, ON
Off: 416-297-7368
EXPRESS DELIVERY

# Commercial Mortgages
# Business Loans
# Business Line of Credit

*for*

Buying new business

Improve your business

Operating capital

Commercial real estate investments

Residential Mortgages | Commercial Business Loans

1st and 2nd Mortgages | Private Funds Available

Debt Consolidation - Refinance | No Income Confirmation

Call us more details...



KAPITAL CARE MORTGAGE INC. Lic#12623



**Rambo Tharmalingam**

Mortgage Agent Licence # M08008479


**647-290-3416**

**Kethes Sivasubramaniyam**

Licence # M08006105 Mortgage Agent

**416-873-5780**

5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5



# நான் பிறவாதிருந்திருந்தால்!

**- நெடுந்தீவு மகேஷ்**

இயேசு சிலுவையில் அறையுண்டு மரித்த தினம்!

கிறிஸ்து இயேசு தாம் நேசித்த மக்களின் பாவங்களைக் களையும் முனைப்போடு அனுபவித்த பாடுகளை நினைவூட்டும் அந்தநாள்! ஓர் உன்னத திருநாள்.

புனித வெள்ளிக்கிழமை! பெரிய வெள்ளியாகக் கொண்டாடப்படுகிறது.

அன்று அந்தக் கிறிஸ்தவ தேவாலயம், வெள்ளிமணிகள் பொருத்திய வெண்ணிற ஆடைகளாலும் வெள்ளை வர்ணக் கடதாசிகளாலும் கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது.

இயேசுபிரான் மக்களின் பாவங்களைப் போக்கச் சிலுவையில் அறையுண்டு உயிர் நீத்த உன்னத பெருநாள்.

வெண்ணாடை தரித்த பக்தர் கூட்டம், தேவாலயத்தின் உள்ளும் புறமும் நிரம்பி வழிகிறது. வெண்மையின் வண்ணம் தூய்மையின் அடையாளமாக...! பாடல்களாலும் பிரார்த்தனைகளாலும் இறை பக்தியை விசிறி நிற்கும் ஒவ்வொருவரினதும் எண்ணங்களில் ஒளி பிரகாசிக்கிறது.

ஒவ்வொரு வருடமும் போன்றே இன்றும் அந்தப் பரிசுத்த திருநாள் தேவாலயங்கள்தோறும் இயேசுவின் சிலுவைப் பாடுகளை நினைவூட்டும் துயர நிகழ்வாகக் கொண்டாடப்படுகிறது.

தம்மை வருத்தி உயிர் துறந்த இயேசுவை நினைவு கூர்ந்து எமது பாவங்களுக்காக இறைவனிடம் மன்னிப்பை வேண்டி நிற்கும் புனித சிலுவைப்பாதைத் திருக்காட்சி.

இயேசுவின் மரணத்தை நினைவுகூர்ந்து தேவாலயத்தில் கூடி நிற்கும் மக்களின் முகங்களில் தோய்ந்த துயரம்.

உறுதியாய் உரத்தொலிக்கும் குருவானவரின் பிரசங்கம்! வழிபாட்டில் ஒன்றிநின்ற பக்தர்களின் கவனத்தை அது ஈர்க்கிறது.

'இவன் பிறவாதிருந்திருந்தால் அவனுக்கு நலமாய் இருந்திருக்கும்' என்ற வார்த்தை என் காதுகளில் பலமாக ஓங்கி அறைகிறது. அது என் உணர்வுகளைச் சிலிர்க்கச் செய்கிறது.

தேவாலயத்தின் சுவர்களில் அவை மோதி மீண்டும் மீண்டும் எதிரொலிக்கின்றன. என்னுள் அவை எழுப்பிய வினாக்களால் விளைந்த உவப்பற்ற விடைகள் என்னை வேதனைக்குள் வீழ்த்தியதால் தத்தளித்தேன்.

'இவன் பிறவாதிருந்திருந்தால் நலமாய் இருந்திருக்கும்'.

கிறிஸ்து இயேசு பல பாடுகளை அனுபவித்துச் சிலுவையைச் சுமந்து அச்சிலுவையிலேயே அறையுண்டு இறக்க நிச்சயிக்கப்பட்ட தினத்திற்கு முன்னரான ஒருநாள், அவரது சீடருள்ளே ஒருவனான யூதாஸ் காரியோத் தன்னைக் காட்டிக் கொடுப்பான் என்பதை இயேசு முன்னரே அறிந்திருந்தார். அந்த உண்மையைச்

சீடர்களுடனான இராப்போசன வேளையில் நினைவுபடுத்தி வருந் தும் இயேசுவின் வார்த்தைகளே அவை!

அதனை உரத்துக் கூறி எமது சிந்தனையை இயேசுவின் பாடுக-ளின்பால் ஈர்த்தார் குருவானவர்.

என் உள்ளத்தில் இரத்தம் கசிந்தது. இயேசுவின் மரணத்துயர் என்னை வாட்டியது குருவானவர் அந்தத் திருப்பலி பூசையில் ஆற்றிய பிரசங்கத்தின் வழியே ஒலித்த அர்த்தம் பொலிந்த உண்மைகள் தொடர்ந்தும் என்னை வேதனைக்கு உள்ளாக்கின. மனம் கலங்கினேன்.

இப்பொழுது 'நான் ஏன் பிறந்தேன்?' என்ற கேள்வி எனக்குள்ளே எழுந்து என்னை உசுப்பத் தொடங்கியது. என்றோ எனக்குள் எழுந்த கேள்வி இன்று குருவானவரின் பிரசங்க வார்த்தைகளால் மீண்டும் விஸ்வரூபம் எடுத்து எழுந்து நின்றது.

எப்படியேனும் விடைகாண வேண்டும் என்ற வேகத்தோடு ஓர் உயிர்ப்புள்ள வினாவாக அது என்னைத் துரத்தி வருவதாக உணர்ந்தேன். என்னால் அதற்கான விடையைத் தேடும் வலுவற்று நான் சோம்பித் துவள்வதாகத் தெரிகிறது.

'இவன் பிறவாதிருந்திருந்தால் அவனுக்கு நலமாயிருந்திருக்கும்' என்ற குருவானவரின் திருமறை வாக்கியமோ இப்பொழுது 'நான் ஏன் பிறந்தேன்?' என்று வினாவைப் பிறப்பித்தவாறு என்னை ஓட ஓட விரட்டி வருகிறது.

இவனும் அவனும் என்னைப் பாடாய்ப் படுத்தினர். நானும் இந்த வாழ்தலின், ஏன் பிறந்தேன்? என்ற கேள்வியின், அர்த்தம் புரியாத வாழ்க்கையின், ஆசைகளோடு உலவும் பிறப்பின் மர்மங்கள் புரி யாமல் கலங்குகிறேன்.

இவன் வாழ்வதற்காக அவனை அகற்றவும் அவன் வாழ்வதற்காக இவனை அழிக்கவும் அவனும் இவனும் செய்யும் அர்த்தமற்ற மரதனோட்ட அநியாயங்களும் அட்டுழியங்களும் ஓய்வின்றித் தொடர் கின்றன.

என்னிடத்தில் எழுந்து நிற்கும் 'ஏன் பிறந்தேன்? ஏன் வாழ்கிறேன்?' என்ற கேள்விகளுக்கான பதில்களைக் கண்டறியாமலே பயணிக் கும் எனது வாழ்க்கை!

'ஏன் பிறந்தேன்? நான் பிறவாதிருந்திருந்தால்?!'

கண்களை மூடி ஜெபித்தேன். சிறிதுநேரம் மன ஆறுதல் கிடைத் தது.

அந்த ஆதரவற்ற வயதான மூதாட்டியைக் கொலை செய்து, அந் தக் கிழவி சேகரித்து வைத்திருந்த ஒரு சிறுதொகைப் பணத்தை யும் நகையையும் களவாடிச் சென்ற திருடன்!

இரவில் உறக்கத்தில் மயங்கிக் கிடந்த மக்கள் சபை வேட்பாள ரைக் கொலை செய்து அடுத்தவன் வெற்றியை நிச்சயிக்கத் தீர்மா னித்து ஒளிந்து உயிர்வாழும் மர்மக் கொலைஞன்.

உண்மையை உரத்து உரைத்து நிற்கும் ஊடகவியலாளரைக் கொன்றொழித்துப் பொய்மைக்குப் புகழ்மாலை சூட மறைந்தொ ழுகும் இனம்காண இயலாத கொலைகாரன்.

இத்தனைபேரும் பத்திரிகைச் செய்திக்குள் கொலைகாரராய், எம் மைப் பயமுறுத்தும் கொடியோராய் வாழ்ந்திருக்க, அவற்றை வாசிக்கும் மனங்கள் துணுக்குற்றன.

இவர்கள் பிறவாதிருந்திருந்தால் நலமானதாய் இருந்திருக்குமோ!

எண்ணினேன்! விடைகள் கிடைக்கவில்லை!

'கண் கெட்ட பின்னெதற்கு சூரிய நமஸ்காரம்'.

பொய்யும் புரட்டும் பொறாமையும் வஞ்சனையும் கொலையும் கொள்ளையும் வாள்வெட்டும் தூள்கடத்தலும் வழக்கும் கணக்கும் போட்டியும் போராட்டங்களும் ஏன்? எதற்கு?. என்னையும் அவை சூழ்ந்து வருத்திக் கலைத்து வருகின்றன.

நான் அவற்றின் நடுவிலே என்னைக் காத்துக் கொள்ள ஓடிக் கொண்டிருக்கிறேன். வாழத் தவிக்கிறேன்!

ஒருவரோடொருவர் அன்பால், பண்பால் இணைந்து வாழும் வாழ்க்கையை நாம் விரும்பினாலும் அதனை மகிழ்ச்சியாக முன் னெடுக்க இயலாதிருக்கிறது.

மகிழ்ச்சிக்குத் தடையாக நீதியின் மாண்பறியா மானிடம் என்ற மலை, என்னெதிரில் உயர்ந்து தெரிகிறது.

இவர்கள் பிறவாதிருந்திருந்தால் நலமானதாக இருந்திருக்கும்!

இவர்கள் எங்கனம் பிறந்தார்கள்? ஏன் பிறந்தார்கள்?

நம்பிக்கையுடனே தர்மம் உரைத்து நல்வழி காட்டி மக்கள் மன்றம் காக்கத் தேர்தலில் நின்றார்கள். அவர்தம் சொல்லைக் குழப்பி, பொய்யுரைத்தும் புளுகுரைத்தும் சத்தியத்தின் வெற்றிக்கு எதிராகி அவர்தம் தோல்விக்கு வழி தேடினார்கள்.

நீதியைக் கொன்று அநீதிக்கு முலாம் பூசி இப்பொழுது 'அத னையே ஆராதனை செய்' என்கிறார்கள்.

இவர்கள் பிறவாதிருந்திருந்தால் எவ்வளவு நலமானதாக இருந்தி ருக்கும்.

இயேசுக் கிறிஸ்துவுக்கு ஒரு யூதாஸ் காரியோத்!

பண்டாரவன்னியனுக்கு ஒரு காக்கை வன்னியன்!

கட்டப்பொம்மனுக்கு ஓர் எட்டப்பன்!

யூலியஸ் சீசருக்கு ஒரு புரூட்டஸ்!

இவர்கள் பிறவாதிருந்திருந்தால் எவ்வளவு நலமானதாக இருந்தி ருக்கும்!

நீதிக்காகப் போராடிய போதும் போராட்டத்தின் போக்கைத் திசை மாறச் செய்து அப்பாவி மக்களைத் தடுமாற வைத்து அவலத்தில் நீதியைச் சாகவிட்ட காரியோத்களும் அன்றும் எம்முடனே இருந்த வர்கள்தாம்! இன்றும் எம்மருகில் இருப்பவர்கள்தாம்! மனம் அழு தது!



இந்தவருடம் தேவாலயத் திருப்பலிப் பூசையில் குருவானவர் செய்த இந்தப் பிரசங்கம் எனது நினைவை நிறைத்தது.

மீண்டும் மீண்டும் இயேசு பாடுகளை அனுபவித்த அந்தச் சிலுவைத் துயரத்தில் இயேசு பட்ட காயங்கள் சிந்திய இரத்தங்கள் என் உள்ளத்தில் விரிந்த துயரக் கடலுக்குள் என்னை மூழ்கடித்தன.

இன்றுபோல் அன்றும் ஒரு தேவாலயத் திருநாள். இயேசு எமக்காகப் பாடுகளை அனுபவித்து மரித்து அடக்கத்திலிருந்து உயிர்த்த ஞாயிறு மகிழ்நாள்!

இலங்கைத் தலைநகரை அண்மித்த தேவாலயங்களிலும் விடுதிகளிலும் குண்டுகளோடு பாய்ந்து ஏதுமறியாத அப்பாவி மக்களைக் கொன்று குவித்தார்கள்!

பெண்கள், குழந்தைகள், வயோதிபர் உட்பட அத்தனை நூறு பேர்களும் துடிதுடித்து இறந்தார்கள்.

காயங்களோடு அங்கவீனர்களாகி வேதனையோடு வினைகெட்டு வாழ்வோர் எத்தனைபேர்?

இதற்குக் காரணமானவர்கள், ஏன் பிறந்தார்கள்?

இவர்கள் பிறவாதிருந்திருந்தால் நலமானதாக இருந்திருக்கும்!

தேவாலயத்தை விட்டு வெளியே வந்த நான், வீடு நோக்கி நடக்க ஆரம்பிக்கிறேன்.

பாதை நெடுகிலும் விரையும் வாகனங்கள்! நான் பாதை ஓரமாக என் பாதங்கள் நோகாமல் நடக்கிறேன்.

எனது வீடு அருகிலேதான் உள்ளது. வீடு அதோ தெரிகிறது.

எதிரிலே விரைந்து வந்த முச்சக்கர வண்டியொன்று என்னை மோதித் தள்ளுகிறது!

நான் நினைவிழந்த நிலைகடந்து இப்பொழுதுதான் விழித்திருக்கிறேன்.

எனக்குள்ளே அந்தக் குறித்த விபத்தின் குலைந்த ஞாபகம்!

என் உடம்பின் காயங்கள் வலிக்கின்றன. இந்த மானிடத்தின் வாழ்வு புரியவில்லை!

என்னை மோதித் தள்ளிய முச்சக்கரவண்டியையோ அதனை ஓட்டிவந்த சாரதியையோ நான் அறியவில்லை. அவனோ சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கிய இலஞ்சம் பெற்ற ஓர் அதிகாரியின் அடையாளமாகத் தெரிகிறான்.

என்னை விபத்துக்கு உள்ளாக்கிய காட்சியைக் கண்ட சாட்சிகள்? அவர்களும் தப்பிவிட்டார்கள்.

சட்டங்களைத் தமதாக்கிக் குற்றங்களை வெற்றிகளாக்கிக் கெட்டித்தனமாக வாழ்க்கையை முன்னெடுப்பவர்களாகச் சிலர் சீவிக்கிறார்கள்! இவர்கள்?

இவர்கள் பிறவாதிருந்திருந்தால் நலமானதாக இருந்திருக்கும்!

குற்றமற்ற இயேசுவை முப்பது வெள்ளிக் காசுக்காகக் காட்டிக் கொடுத்த யூதாஸ்காரியோத் தான் செய்த காரியத்துக்காகக் கவலைப்பட்டு அவன் பெற்ற முப்பது வெள்ளிக் காசுகளையும் தேவாலயத்தில் எறிந்துவிட்டுப் புறப்பட்டுப் போய்த் தூக்கிட்டு தன்னைத் தானே மாய்த்துக் கொண்டான்!



mahesu@thaiveedu.com










# இருட்டிய பிறகு ஒரு கிராமம்

- காஷுவோ இஷிகுறோ

தமிழில்:
என்.கே. மகாலிங்கம்

ஒரு காலத்தில் நான் பல கிழமைகள் தொடர்ந்து இங்கிலாந்தில் பயணித்திருக்கிறேன். மிகவும் அதிக மாகச் செயல்பட்டும் இருக்கிறேன். சொல்லப்போனால் நான் செய்த பயணங்களே எனக்கு அந்தச் சக்தியைத் தந்திருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். இப்பொழுது எனக்கு வயதேறி விட்டது. மிக எளிதாக நான் குழம்பிப்போய் விடுகிறேன். நான் அந்தக் கிராமத்தைச் சற்று இருட்டிய பிறகு வந்தடைந்தேன். அதனால் நான் எங்கே இருக்கிறேன் என்பதை முற்றாக மறந்து விட்டேன். அதே கிராமத்தில் சில காலத்திற்கு நான் வாழ்ந்தையும் அந்தக் கிராமம் என் வாழ்க்கையில் அதிக செல்வாக்குச் செலுத் தியதையும் என்னால் நம்பவே முடியவில்லை.

அந்தக் கிராமத்தில் எதையுமே என்னால் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. இரண்டு பக்கமும் கல்லால் கட்டிய சிறிய குடிசைகளை கொண்ட குறைவான வெளிச்சமுள்ள வீதிகள் இருந்தன. எல்லாவிடமும் அப்படியான வீடுகள் தான் அமைந்தி ருந்தன. அங்கே திரும்பத் திரும்ப அலைந்து கொண்டிருந்தேன். வீதிகள் அடிக்கடி ஒடுக்கமாக இருந்தன. அதனால் மேற்கொண்டு செல்வதில் சிரமப்பட்டேன். என் பை அல்லது என் முழங்கை கரடு முரடான ஒரு சுவரையோ ஏதவாது ஒன்றையோ உரசிக் கொண்டிருந்தது. கிராமச் சதுக்கத்தை அடைந்து விடலாம் என்ற நம்பிக்கையில் தட்டுத் தடுமாறி இருட்டில் நடந்துகொண்டிருந் தேன். குறைந்தது அங்கே நின்று என்னைச் சுதாகரித்துக் கொள்ள லாம் என்று எண்ணினேன். அல்லது ஒரு கிராமத்தையாவது சந் தித்துவிடலாம் என்று நினைத்தேன். இரண்டையும் நான் செய்யா மல் நின்றபோது என்னைச் சோர்வு ஆட்கொண்டது. அதனால் அப்படி நில்லாது ஏதாவது ஒரு குடிசையின் கதவைத் தட்டுவது என்று தீர்மானித்தேன். அப்படித் தட்டினால் என்னை நினைவில் வைத்திருப்பவர் எவராவது இருக்கலாம் என்று நம்பினேன்.

பாழடைந்து போய்க் கொண்டிருந்த கதவொன்றின் பக்கம் நின்று கதவைத் தட்டினேன். அதன் மேலுள்ள உத்தரம் மிகவும் தாழ்ந் தது. கதவின் ஊடாக மிகவும் குனிந்து தான் நுழைய வேண்டியி ருந்தது. கதவின் ஓரங்கள் ஊடாக மங்கலான வெளிச்சம் வழிந்து கொண்டிருந்தது. உள்ளே இருந்து பேச்சுக் குரல்களும் சிரிப்பும் வந்து கொண்டிருந்ததைக் கேட்டேன். அவர்களின் பேச்சுக்களின் மேலாக நான் தட்டுவதை அவர்கள் கேட்பதற்காக உரத்து தட்டி னேன். அந்த வேளையில் என் பின்னாலிருந்து யாரோ ஒருவர் ‘ஹலோ,’ என்றார்.

நான் திரும்பிப் பார்த்தேன். கந்தலான ஜீன்சும் கிழிந்த சுவெற்ற ரும் அணிந்த இருபது வயதிருக்கும் ஓர் இளம் பெண் சிறிது தூரம் தள்ளி இருட்டில் நின்று கொண்டிருந்தாள்.

‘சற்று முந்தி நான் உங்களைக் கூப்பிட்டேன். ஆனால் நீங்கள் என்னைக் கடந்து தான் வந்து விட்டீர்கள்,’ என்றாள்.

‘உண்மையாகவா? மன்னித்துக் கொள். நான் வேண்டுமென்றே மரி யாதை இல்லாமல் நடக்கவில்லை,’ என்றேன்.

‘நீங்கள் தான் ஃப்ளெச்சர், இல்லையா?’ என்றாள்.

‘ஓம்,’ என்றேன். சற்று தற்புகழ்ச்சி அடைந்து.

‘எங்கள் குடிசையைத் தாண்டி வந்தபோது அது நீங்கள் தான் என்று வெண்டி நினைத்தாள். நாங்கள் எல்லோரும் மிகவும் உணர்ச்சி வசமாகி விட்டோம். நீங்கள் அவர்களில் ஒருவர் இல் லையா? டேவிட் மக்கிஸ் போன்றவர்களில்.’

‘ஓம், ஆனால் மக்கிஸ் அவர்களில் மிகவும் முக்கியமானவர் அல்ல, அவரை நீங்கள் ஒருவராக எடுத்தது எனக்கு ஆச்சரிய மாக இருக்கிறது. அவரை விட இன்னும் பலர் இருக்கிறார்கள். அவரிலும் பார்க்க மிகவும் முக்கியமானவர்கள்,’ என்றேன். அப்ப டிச் சொல்லி விட்டு பலருடைய பெயர்களை அடுக்கிக் கொண்டே போனேன். அப்படிச் சொன்னபோது அந்தப் பெண் அவர்கள் யாரென உணர்ந்து சரியெனத் தலையை ஆட்டிக் கொண்டிருந் தாள். ‘ஆனால் அவை எல்லாம் உன்னுடைய காலத்திற்கு முன்பு நடந்திருக்கவேண்டும். அப்படியானவற்றை உனக்குத் தெரிந்திருக் கிறதே என்று எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது,’ என்றேன்.

‘அது எங்கள் காலத்திற்கு முன் நடந்தவை. ஆனால் நாங்கள் எல்லோரும் அதில் நிபுணர்கள். அந்தக் காலத்தில் இங்கே இருந்த பழைய ஆட்கள் பலரிலும் பார்க்க எங்களுக்கு அவற் றைப் பற்றி அதிகம் தெரியும். வெண்டி உடனடியாகவே உங்க ளைக் கண்டு பிடித்து விட்டாள், உங்கள் புகைப்படங்களிலி ருந்தே.’

‘உங்களைப் போன்ற இளைஞர்கள் எங்களில் அப்படியாக ஆர் வம் காட்டுவார்கள் என்று நான் நினைத்திருக்கவே இல்லை. நான் உங்களைக் கடந்து வந்ததற்கு என்னை மன்னிக்கவும். பாருங்கள், எனக்கு இப்போ வயதாகி விட்டது. அதனால் நான் பயணம் செய்யும்போது சற்று தடுமாறி விடுகிறேன்.’

கதவிற்குப் பின்னிருந்து இப்போது மூர்க்கத்தனமான சத்தங்கள் வந்து கொண்டிருந்தன. கதவை திரும்பவும் சத்தமாகத் தட்டி னேன். சற்று பொறுமையில்லாமல். அந்தப் பெண்ணுடனான என் னுடைய உரையாடலை நிறுத்தவும் எனக்கு விருப்பமில்லை.

அவள் என்னை ஒரு கணம் பார்த்து விட்டு, அந்த நாட்களிலி ருந்த நீங்கள் எல்லோரும் அப்படித்தான். டேவிட் மக்கிஸ் சில ஆண்டுகளுக்கு முன் இங்கே வந்திருந்தார். அது 93ம் ஆண்டாக இருக்கலாம். அல்லது 94 ஆக இருக்கலாம். சரியாக நினை வில்லை. நீங்கள் தொடர்ந்து பயணம் செய்து கொண்டிருப்பதால் அப்படித்தான் உங்களுக்கு நடக்கும்,’ என்றாள்.

‘அப்போ மக்கிஸ் இங்கே வந்திருக்கிறான்.. எத்தனை ஆர்வமான விஷயம். உண்மையில் அவன் அத்தனை முக்கியமான ஆள் இல்லை. அப்படியான எண்ணத்துடன் நீங்கள் இருக்கக் கூடாது. சரி, இந்தக் குடிசையில் யார் வசிக்கிறார்கள் என்று எனக்குச் சொல்ல முடியுமா?’ திரும்பவும் கதவில் இறுக்கிக் குத்தினேன்.



‘பீற்றர்சன்ஸ் குடும்பம். இதுவொரு பழைய வீடு. அவர்களுக்கு உங்களை நினைவிருக்கலாம்,’ என்றாள்.

‘பீற்றர்சன்ஸ்,’ என்று நானும் திரும்பச் சொல்லிக் கொண்டேன். அந்தப் பெயர் எனக்கு நினைவில் இல்லை.

‘அப்படி என்றால் எங்கள் குடிசைக்கு வாருங்களேன். உங்களைப் பார்க்க வேண்டி மிகவும் ஆர்வமாக இருக்கிறாள். அப்படியே நாங்களும் இருக்கிறோம். இது எங்களுக்கு உண்மையாகவே நல்ல சந்தர்ப்பம். அந்த நாட்களிலிருந்த ஒருவருடன் கதைப்பது.’

‘நானும் அதை மிகவும் விரும்புகிறேன். ஆனால் முதலில் நான் ஒரு இடத்தில் தங்க வேண்டும். பீற்றர்சன் என்று சொல்கிறாய், இல்லையா?’

திரும்பவும் கதவில் இறுக்கிக் குத்தினேன். இந்த முறை மிகவும் மூர்க்கமாக. இறுதியில் கதவு திறந்தது. அதற்குள்ளிருந்து வீதிக்கு வெதுவெதுப்பும் வெளிச்சமும் வெளிவந்தன. ஒரு முதியவர் கதவடியில் நின்றார். என்னைக் உற்றுப் பார்த்தார். பின், ‘நீ ஃப்ளெச்சர், இல்லையா?’ என்றார்.

‘ஓம், நான் இப்போ தான் கிராமத்திற்குள் நுழைந்திருக்கிறேன். பல நாட்களாக பயணம் செய்து கொண்டிருக்கிறேன்.’

அவர் ஒரு கணம் சிந்தித்து விட்டு, ‘சரி, உள்ளே வா,’ என்றார்.

இடக்குறைவான துப்புரவில்லாத அறை அது. அதற்குள் கரடு முரடான மரப்பலகைகளும் உடைந்த தளபாடங்களும் கிடந்தன. கணவடுப்பில் மரத்துண்டொன்று எரிந்து கொண்டிருந்தது. அதுவே அங்கேயுள்ள ஒரேயொரு வெளிச்சம். அந்த வெளிச்சத்தில் அறையைச் சுற்றிவர குனிந்திருந்த பல உருவங்களைக் கண்டேன். கணப்பிற்குப் பக்கத்தில் இருந்த ஒரு கதிரைக்கு முதியவர் என்னை எரிச்சலுடன் அழைத்துச் சென்றார். அந்தக் கதிரையில் தான் அவர் இதுவரை குந்தியிருந்தார் என்பது தெரிந்தது. நான் அதில் இருந்தவுடன் அந்த அறையில் இருந்த மற்றவர்களையோ அவ்விடத்தையோ அதிலிருந்து திரும்பிப் பார்க்க முடியாது என்பதைக் கண்டு கொண்டேன். ஆனால் கணப்பிலிருந்து வந்த வெதுவெதுப்பு வரவேற்கத்தக்கதாக இருந்தது. ஒரு கணம் தீப்பிழம்புகளை உற்றுப் பார்த்தேன். இனிமையான மயக்கம் என்னை ஆட்கொண்டது. என் பின்னால் இருந்து குரல்கள் வந்தன. நான் நலமாக இருக்கிறேனா, தூர இருந்து வருகிறேனா, பசியுடன் இருக்கிறேனா என்றெல்லாம் அவை கேட்டன. இயன்றவரை பதிலளித்தேன். என்னுடைய பதில்கள் நிறைவானதல்ல என்பது எனக்குத் தெரியும். கடைசியில், கேள்விகள் நின்றன. நான் அங்கே இருப்பது அவர்களுக்குப் பெரும் சங்கடத்தை உருவாக்குகின்றது என்பதை உணர்ந்தேன். ஆனால் அங்குள்ள வெதுவெதுப்புக்கும் அங்கே நான் அதிகம் கவனிக்காத இளைப்பாறலுக்கும் மிகவும்

நன்றியுடையவனாக இருந்தேன்.

எனக்குப் பின்னால் பல நிமிஷங்கள் தொடர்ந்து அமைதியாக இருந்தன. அவ்வேளையில் நான் என்னை வரவேற்றவர்களைப் பார்த்துச் சற்று மரியாதையாகப் பேசுவதற்காக என் கதிரையிலிருந்து திரும்பினேன். அப்பொழுதுதான் அந்தக் குடிசை எனக்கு முன்னரே தெரிந்த ஒன்று என்பதைச் சடுதியாக உணர்ந்தேன். நான் அந்தக் குடிசையை தற்செயலாகத்தான் தெரிவு செய்தேன். ஆனால் பல ஆண்டுகளுக்கு முன் தங்கியிருந்த கிராமத்திலுள்ள அதே குடிசை தான் இது வேறொன்றும் இல்லை என்று தெரிந்தது. என் பார்வை தூர இருந்த மூலைக்குச் சென்றது. அது இருட்டாக இருந்தது. அதுவே என் முந்திய இடம். அங்கே தான் என் படுக்கும் மெத்தை இருந்தது. அங்கே தான் என் அமைதியான பொழுதுகளைக் கழித்தேன். புத்தகங்களைத் மேலால் தட்டிப் பார்த்துக் கொண்டோ அங்கே தடுமாறி அங்கே வந்தவர்களுடன் உரையாடிக் கொண்டோ இருந்தேன். கோடை கால நாட்களில் மென்காற்று உள்ளே வருவதற்காக யன்னல்களும் கதவுகளும் அடிக்கடி திறந்த விடப்பட்டே இருக்கும். அந்த நாட்களில் குடிசைகளைச் சுற்றி வரத் திறந்த வயல்கள் இருந்தன. வெளியே இருந்து என்னுடைய நண்பர்களின் குரல்கள் நீண்டு வளர்ந்த புல்லுகளின் ஊடாக அமைதியாக வரும். நண்பர்களுடன் நான் கவிதைகள் பற்றியோ மெய்யியல் பற்றியோ விவாதிப்பேன். கடந்து போன அந்த மதிப்பான கணங்கள் சில வலிமையுடன் மனதில் வந்து போயின. அதை மட்டும் தான் அப்போது செய்ய முடிந்தது. அந்தப் பழைய மூலைக்கு உடனடியாக என்னால் போக முடியவில்லை.

யாரோ திரும்பவும் என்னுடன் கதைத்தார்கள். சிலவேளை இன்னுமொரு கேள்வியாக இருக்கலாம். ஆனால் அதை செவி கொடுத்து அதிகம் கேட்க முடியவில்லை. எழும்பிப் போய் நிழல்கள் ஊடாகக் கவனித்துப் பார்த்தேன். அங்கே ஓர் ஒடுங்கிய கட்டில் கிடப்பதைக் கண்டேன். அதைப் பழையதொரு திரைச்சீலையால் மூடியிருந்தார்கள். அந்தக் கட்டில் முந்திப் போட்டிருந்த மெத்தை அளவு இடத்தையே ஏறக்குறையப் பிடித்திருந்தது. கட்டில் என்னை வா வா என்று தீவிரமாக அழைத்தது. முதியவர் சொல்லிக் கொண்டிருந்த எந்தக் கதைக்குள் குறுக்கிட்டுக் கேட்டேன்:

'பாருங்கள். நான் கேட்பது சற்று இங்கிதமில்லாமல் இருக்கலாம். ஆனால் உங்களுக்குத் தெரியும், நான் இன்றைக்கு மிகவும் தூர இடத்திலிருந்து வந்திருக்கிறேன். உண்மையாகவே நான் கொஞ்சம் படுத்துக் கண்களை மூட வேணும். ஒரு ஐஞ்சு நிமிஷமாவது. அதன் பின், நான் உங்களுடன் நீங்கள் விரும்பிய மாதிரிக் கதைக்கிறேன்,' என்றேன்.

அப்போது அறையில் இருந்த உருவங்கள் அசௌகரியமாக அசைந்தார்கள். பின் புதியதொரு குரல், சற்று வெறுப்புடன், 'போங்கள். போய்த் தூங்குங்கள், எங்களைப் பற்றிக் கவலைப் பட வேண்டாம்,' என்றது.

என்னுடைய மூலைக்குப் போவதற்காக அலங்கோலமாகக் கிடந்த பொருட்களைத் தாண்டி ஏற்கெனவே வெளிக்கிட்டு விட்டிருந்தேன். கட்டில் ஈரமாக இருந்தது. என்னுடைய பாரத்தைத் தாங்காமல் சுருள்விசைகள் கிறீச்சிட்டன. முதுகை அறைக்குக் காட்டிக் கொண்டு குறுகிப் படுத்தேன். படுத்தவுடனே பல மணி நேர பயணக் களைப்பு என்னை நித்திரை ஆட்கொண்டு விட்டது. நித்திரையாகிக் கொண்டிருந்தபோது அந்த முதியவர், 'இது ஃப்ளெச்சர் தான். ஆனால் அவனுக்கு வயதேறி விட்டது,' என்று சொன்னது கேட்டது.

ஒரு பெண்ணின் குரல், 'அவனை அப்படிப் படுக்க விடுவதா? இன்னும் சில மணி நேரத்தில் அவன் எழும்பி விடலாம். அதன் பின் அவனைப் படுக்கவிடாமல் கதைக்கலாம்,' என்றாள்.

'ஒரு மணித்தியாலம் வரை நித்திரை கொள்ளட்டும். ஒரு மணித்தியாலத்தின் பின்னும் அவன் நித்திரை கொண்டான் என்றால் அவனை நாங்கள் எழுப்பி விடுவோம்,' என்றது இன்னொருவனின் குரல்.

அந்த வேளையில் முழுக் களைப்பு என்னை ஆட்கொண்டு விட்டது.

அது தொடர்ச்சியான அல்லது சௌகரியமான நித்திரை அல்ல. நித்திரைக்கும் விழிப்புக்கும் இடையே ஊசலாடிக் கொண்டிருந்தேன். எனக்குப் பின்னால் அறையிலிருந்து வந்த குரல்கள் பற்றிய உணர்வு எனக்கு இருந்து கொண்டே இருந்தது. ஒரு புள்ளியில் அந்தப் பெண், 'எப்படித்தான் நான் அவனால் வசீகரிக்கப்பட்டிருந்தேனோ எனக்குத் தெரியவில்லை. இப்போ அவன் கந்தலும் கிந்தலுமாய் இருக்கிறான்,' என்றாள்.

பாதி நித்திரையில் அந்தச் சொற்கள் என்னைப் பிரதிபலிக்கிறதா, அல்லது டேவிட் மக்கிஸைப் பிரதிபலிக்கிறதா? என்று நினைத்தேன். அதற்கிடையில் திரும்பவும் நித்திரை என்னை ஆட்கொண்டது.

திரும்பவும் நான் விழித்தபோது, அறை இருட்டாகவும் குளிராகவும் ஆகி விட்டிருந்தது போலத் தோன்றியது. எனக்குப் பின்னால் குரல்கள் தாழ்ந்த குரலில் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தன. அந்த உரையாடலின் பொருள் எனக்குப் புரியவில்லை. அப்படி நான் நித்திரை கொண்டதை இட்டு சங்கடப்பட்டேன். இன்னும் சில கணங்கள் முகத்தை சுவரின் பக்கம் திருப்பி வைத்துக் கொண்டு அசையாமல் படுத்துக் கிடந்தேன். ஆனால் நான் விழித்திருக்கிறேன் என்பதை ஏதோ ஒன்று அவர்களுக்கு உணர்த்தியிருக்க வேண்டும். ஏனென்றால் அப்போது ஒரு பெண்ணின் குரல் நடந்த உரையாடலை நிறுத்தி, 'ஓ, அங்கே பாருங்கள்,' என்றது. சிலர் குசுகுசுத்தனர். அதன் பின் யாரோ ஒருவர் எனது மூலைக்கு வரும் சத்தம் கேட்டது. எனது தோளில் ஒரு கை மெல்லத் தொட்டது. நான் முகத்தைத் தூக்கிப் பார்த்தபோது ஒரு பெண் எனக்குப் பக்கத்தில் முழங்காலில் இருந்தாள். அப்போது அறையை முழுவதாகப் பார்ப்பதற்கு என் உடல் முழுவதையும் நான் திருப்பவில்லை. அறைக்கான வெளிச்சம் மங்கிக் கொண்டிருக்கும் கணப்பிலிருந்து வந்து கொண்டிருந்தது. அந்தப் பெண்ணின் முகம் நிழலாகவே தெரிந்தது.

'இப்போ, ஃப்ளெச்சர், நாங்கள் கதைக்க வேண்டிய நேரம் வந்து விட்டது. நீ திரும்பவும் வருவாய் என்று நான் பல காலம் காத்திருந்தேன். அடிக்கடி உன்னை நினைத்திருக்கிறேன்,' என்றாள் அவள்.

அவளை நன்றாகப் பார்ப்பதற்காக வலுக்கட்டாயமாக முயன்றேன். அவள் நாற்பது வயதுகளில் இருந்தாள். தெளிவற்ற அந்த இருளில் அவளுடைய கண்களில் ஒருவகையான கிளர்ச்சியற்ற சோகத்தைக் கண்டேன். ஆனால் அவளுடைய முகம் எனக்குத் துப்புரவாக நினைவுக்கு வரவில்லை.

'என்னை மன்னிக்க வேணும். உன்னை எனக்கு நினைவில்லை. நாங்கள் முந்தி எப்போதாவது சந்திந்திருந்தால் என்னைத் தயவு-செய்து மன்னிக்கவும். இந்த நாட்களில் நான் தன்னிலை இழந்திருக்கிறேன்.'

'ஃப்ளெச்சர், எங்களை ஒருவர் தெரிந்த அந்தக் காலத்தில் நான் இளமையாகவும் அழகாகவும் இருந்தேன். உன்னை நான் போற்றி வழிபட்டிருக்கிறேன். நீ சொன்ன அத்தனையும் எனக்குரிய பதில்கள் போலவே அப்போது அமைந்திருந்தன. இப்பொழுது திரும்பவும் வந்திருக்கிறாய். நீ என் வாழ்க்கையை பாழாக்கி விட்டாய் என்று சொல்வதற்காக நான் பல ஆண்டுகள் காத்திருந்தேன்.'

'நீ சொல்வதில் நியாயமில்லை. சரி, நான் சொன்ன பலவற்றில் தவறுகள் இருந்திருக்கின்றன. ஆனால் என்னிடம் எல்லாவற்றுக்கும் பதில்கள் இருந்தன என்று நான் ஒருபோதுமே உரிமை கோரவில்லையே. அந்த நாட்களில் நான் சொன்னவை எல்லாம் விவாதங்களில் பங்களிக்க வேண்டும், அது எங்களின் கடமை என்று தான் சொன்னேன். இங்கே உள்ள சாதாரண மக்களிலும் பார்க்க பிரச்சினைகளைப் பற்றி அதிகம் எங்களுக்குத் தெரியும். எங்களைப் போன்றவர்கள் எங்களுக்கு அதிகம் தெரியாது என்று தள்ளிப் போட்டால் யார் அதற்காகச் செயல்படப் போகிறார்கள் என்று தான் சொன்னேன். ஆனால் என்னிடம் பதில்கள் இருக்கின்றன என்று நான் எப்போதுமே உரிமை கோரவில்லை. இல்லை, நீ



காஷுவோ இஷிகுரோ 1954இல் யப்பானிலுள்ள நாகசாகி என்ற இடத்தில் பிறந்தார். அவரின் குடும்பம் அவருக்கு ஐந்து வயதாக இருக்கும்போது இங்கிலாந்துக்குக் குடிபெயர்ந்தது. அவர் நாவல், திரைப்படக்கதை, சிறுகதை எழுதியுள்ளார். ஆங்கிலத்தில். சமகால பிரித்தானியாவில் மிகப் புகழ் பெற்ற புனைவெழுத்தாளரானார். The Remains of the Day என்ற நாவலுக்காக 1989இல் அவருக்கு மான் புக்கர் பரிசு கிடைத்தது. அந்த நாவல் பின்னர் திரைப்படமாகவும் எடுக்கப்பட்டுள்ளது. அவரின் Never Let Me Go என்ற நாவலை ரைம் சஞ்சிகை 2005ம் ஆண்டின் மிகச் சிறந்த நாவலாகக் கணித்துள்ளது. அத்துடன் 1923-2005 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் வெளிவந்துள்ள 100 சிறந்த நாவல்களுள் ஒன்றாகவும் அதை எடுத்துள்ளது. அவரின் ஏழாவது நாவலான The Buried Giant 2005இல் வெளிவந்துள்ளது. பிரித்தானியாவில் வாழும் யப்பானியக் குடும்பத்தின் பின்னணி அவர் எழுத்துக்குத் தீர்க்கமாகத் துணைபோய் உள்ளது என்று அவர் கூறுகின்றனர். பல விருதுகளைப்பெற்ற அவருக்கு 2017இல் இலக்கியத்துக்கான நோபல் பரிசும் வழங்கப் பெற்றுள்ளது. அதைக் கொடுத்தபோது அவர்கள், ‘பெரும் உணர்ச்சிகரமான சக்தியைக் கொண்டது இவரின் நாவல்கள் என்றும், நாம் உலகத்துடன் கொண்டுள்ள மாயத் தோற்றத்தின் பின்னால் உள்ள படுகுழிகளை இவர் வெளியே கொண்டு வருகிறார்,’ என்றும் கூறியுள்ளனர்.

அவரின் முதல் நாவல் இரண்டிலும் அவர் கற்பனையில் நினைத்திருந்த யப்பானைப் பின்னணியாக வைத்தே எழுதியுள்ளார் என்று கூறுகின்றார், அவர் தன் முப்பதாவது வயதில் முதன் முதல் யப்பானுக்குத் திரும்பச் சென்றபோது. ‘நான் ஆங்கிலேயர்களைப் போன்றவன் அல்ல. ஏனென்றால் நான் யப்பானிய பெற்றோர்களால் யப்பானிய மொழி பேசும் வீட்டுச் சூழலில் வளர்க்கப்பட்டவன். என் பெற்றோர்கள் இந்த நாட்டில் - பிரித்தானியாவில் - நிரந்தரதமாக வாழப் போவதாக எண்ணியிருக்கவில்லை. அதனால் நான் யப்பானிய விழுமியங்களுடன் வளர்ந்ததற்கு அவர்கள் தான் பொறுப்பு. அவர்களின் கண்களாலே தான் நான் உலகத்தைப் பார்த்தேன்’ என்று கூறுகிறார்.

இஷுகுறோ பல பாடல்களை, பாடகர் ஸ்ரேஸி கென்ரின் கணவரான சக்ஸபோனிஸ்ரான ஜிம் ரொமில்சனுடன் இணைந்து எழுதியுள்ளார். வேறு பல இசைப் பாடல்களையும் எழுதியுள்ளார். அவை அவரின் புனைவுகளிலும் வெளிப்பட்டுள்ளன. அவர் தன்னை ஒரு திரைப்படக் காதலர் என்றே சொல்லிக் கொள்கிறார்.

இவருக்கு முன் கனடிய எழுத்தாளரான மாகறெற் அற்வுட், கென்ய எழுத்தாளரான நுகெகி வா தியாங்கோ, யப்பானிய எழுத்தாளரான ஹாருகி முரகாமி ஆகியோருக்கு நோபல் பரிசு கிடைக்கலாம் என்று பலரும் எதிர்பார்த்தார்கள். ஆனால் இவருக்குத்தான் அவர்களுக்கு முன் கிடைத்தது.

சொல்வது நியாயமற்றது.’

‘ஃப்ளெச்சர்,’ என்றாள் அவள். அவளுடைய குரல் எதிர்பாராத வகையில் கனிவாக இருந்தது. ‘ஒவ்வொரு முறை நான் உன்னுடைய அறைக்கு இங்கே வந்தபோது, நீ என்னுடன் உடலுறவு வைத்திருக்கிறாய். இதே மூலையில், இங்கே அழகானவற்றையும் அழுக்கானவற்றையும் நாம் செய்திருக்கிறோம். உன்னால் நான் உடல்ரீதியாக எப்படித் தூண்டப் பெற்றிருந்தேன் என்பதை நினைக்கவே விந்தையாக இருக்கிறது. இப்போ இங்கே நீ துர்நாற்றம் வீசுகின்ற கிழிந்த துணி மூட்டையாக இருக்கிறாய். என்னைப் பார். நான் இப்பொழுதும் கவர்ச்சியுடையவளாகவே இருக்கிறேன். என் முகத்தில் சில ரேகைகள் விழுந்துள்ளன. இருந்தும் நான் கிராமத்தின் வீதிகளில் நடக்கும்போது என் உருவத்தைக் காண்பிப்பதற்காக விசேஷமாகத் தயாரிக்கப்பட்ட உடைகளைத்தான் அணிந்து செல்வேன். பல ஆண்கள் இன்னும் என்னை விரும்புகிறார்கள். ஆனால் உன்னை ஒரு பெண்ணும் இப்போது திரும்பிப் பார்க்க மாட்டாள். நீ நாற்றமெடுக்கும் கிழிந்த துணியும் சதையும் உள்ள மூட்டை தான்.’

‘எனக்கு உன்னை நினைவில்லை. இந்த நாட்களில் உடலுறவு கொள்ள எனக்கு நேரமில்லை. கவலைப்படுவதற்கு வேறு பல விஷயங்கள் இருக்கின்றன, தீவிரமான வேறு விஷயங்கள். நல்லது, அந்த நாட்களில் நான் பல விஷயங்களில் தவறு விட்டிருக்கிறேன். ஆனால் நான் பலரிலும் பார்க்க அவற்றுக்கான பரிகாரம் செய்யவும் முயன்றிருக்கிறேன். பார், இப்பொழுதும் நான் பயணம் செய்கிறேன். இன்னும் நிறுத்தவில்லை. நான் முன்பு செய்த தீங்குகளை நீக்குவதற்காக பயணம் செய்து கொண்டே இருக்கிறேன். அந்தக் காலத்தில் பலரும் செய்ததிலும் பார்க்க அது அதிகம் என்று சொல்லலாம். உதாரணமாக, மக்கிஸ் அந்தளவு சரியாகச் செய்ய முயலவில்லை என்று தான் நான் அடித்துச் சொல்லுவேன்.

அவள் என்னுடைய தலைமயிரைக் கோதிக் கொண்டிருந்தாள்.

‘பார், முன்பு நான் இப்படிச் செய்து கொண்டிருப்பேன். என் விரல்களால் உன் முடியைக் கோதுவேன். இப்போ பார் உன் அழுக்கான கழிவை. பலவகையான ஒட்டுண்ணிகளால் வந்த நோய்களையும் பெற்றிருப்பாய் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்,’ என்றாள். இருந்தும் அவள் என் தலைமுடியிலுள்ள அழுக்காக முடிச்சுகள் ஊடாக தன் விரல்களை மெதுவாகத் தடவிக் கொண்டே இருந்தாள். ஆனால் அதனால் நான் எந்தவித பாலுணர்ச்சிகளுக்கும் தூண்டப்படவில்லை. அப்படி நான் தூண்டப்பெறலாம் என்று அவள் சிலவேளை விரும்பியிருக்கலாம். அப்படி இல்லாமல் அவளுடைய வருடல்கள் ஒரு தாயினுடையவை போலவே உணர்ந்தேன். அந்த வேளையில் உண்மையில் நான் பாதுகாப்பான ஒரு இடத்தை அடைந்து விட்டேன் என்றே எண்ணினேன். அதனால் திரும்பவும் தூக்கம் வருவது போல இருந்தது. ஆனால் சடுதியாக அவள் வருடுவதை நிறுத்த விட்டு, என் நெற்றியில் கடுமையாக அறைந்து கொண்டே இருந்தாள்.

‘இப்போ நீ ஏன் எங்களுடன் வந்து கலந்து கொள்ளக் கூடாது. நீ நன்றாக நித்திரை கொண்டு விட்டாய். பல விளக்கங்களை நீ எங்களுக்குத் தர வேண்டியிருக்கிறது.’ அதைச் சொல்லிவிட்டு அவள் எழும்பி சென்று விட்டாள்.

அறையை நோட்டம் விடுவதற்காக முதல் முதலாக என்னுடைய உடம்பைப் போதுமான அளவு திருப்பினேன். நிலத்தில் தாறுமாறாகக் கிடந்த பொருட்களைத் தாண்டி அவள் போவதைக் கண்டேன். அதன் பின் கணவடுப்புக்குப் பக்கத்தில் இருந்த ஆடும் கதிரையில் அவள் அமர்ந்தாள். அணைந்து கொண்டு போகும் தீக்குப் பக்கத்தில் சுற்றிவர இன்னும் மூன்று உருவங்கள் இருந்தன. அதிலிருந்த ஓர் உருவம் எனக்குக் கதவு திறந்த அந்த முதியவர் என்று கண்டு பிடித்தேன். மரக் குத்தி போன்ற ஒன்றில் இருந்த மற்ற இருவரும் என்னுடன் பேசிய பெண்ணின் வயதை ஒத்தவர்கள் போல இருந்தனர்.

முதியவர் நான் திரும்பியதை அவதானித்தார். நான் அவர்களைக் கவனிக்கிறேன் என்பதை அவர்களுக்கு அவர் சுட்டிக் காட்டினார். நால்வரும் கதைக்காமல் விறைப்பாக இருந்து கொண்டிருந்தார்கள். அப்படி அவர்கள் இருந்ததைப் பார்த்தபோது, நான் உறங்கிக் கொண்டிருக்கும்போது என்னைப் பற்றி முற்று முழுவதாக விவாதித்துக் கொண்டிருந்தார்கள் என்பது தெளிவாகத் தெரிந்தது. உண்மையில் அவர்களைக் கவனித்தபோது அவர்களின் உரையாடல் என்னவாக இருந்திருக்கும் என்பதை என்னால் ஏறக்குறைய ஊகிக்கவும் முடிந்தது. உதாரணமாக, நான் வெளியே சந்தித்த இளம் பெண்ணைப் பற்றிய கவலையை அவர்கள் தங்கள் நேரத்தைச் செலவிட்டிருப்பார்கள். அவளுடைய தோழிகளில் நான் செலுத்திய செல்வாக்கினால் ஏற்பட்ட ஏற்பட்ட விளைவுகளைப் பற்றி உரையாடி இருப்பார்கள்.

‘அவர்கள் எல்லோரும் எளிதாக எதையும் ஏற்கும் இயல்புடையவர்கள், அவள் இவனைத் தங்களைச் சந்திக்க வருமாறு கேட்டதை நான் காதால் கேட்டேன்,’ என்றும் அந்த முதியவர் சொல்லியிருப்பார்.

அதற்கு சந்தேகமில்லாமல் மரக்குத்தியில் இருக்கும் பெண்களில் ஒருத்தி, 'இப்போது அவனால் அவர்களுக்கு அதிக தீங்கு விளைவிக்க முடியாது,' என்று சொல்லியிருப்பாள். எங்கள் காலத்தில் நாங்கள் எல்லோரும் ஏமாற்றப்பட்டபோது அவர்கள் அனைவரும் இளைஞர்களாகவும் எங்களை மயக்குகிறவர்களாகவும் இருந்தார்கள். ஆனால் இந்தக் காலத்தில் அவர்கள் முதுமையடைந்து, ஊக்கமழிந்தவர்களாய்த் தோன்றும் ஓரிருவர் தான் இந்தப் பக்கத்தால் போய்க் கொண்டிருக்கிறார்கள். அவர்களைக் கண்டவர்களுக்கு பழைய நாட்களின் மயக்கங்கள் இருந்தால் அவை அனைத்தும் இல்லாமலாகி விடும். என்னவோ அவர்களைப் போன்றவர்கள் இந்த நாட்களில் தங்கள் நிலைப்பாடுகளை அதிகமும் மாற்றிக் கொண்டு விடுவார்கள். தாங்கள் எதை நம்புகிறார்கள் என்பதும் அவர்களுக்குத் தெரியாது.'

அதற்கு முதியவர் தன் தலையை ஆட்டியிருப்பார். 'அவனை அந்த இளம் பெண் பார்த்த பார்வையை நான் கண்டேன். சரி, இப்பொழுது அவன் இருக்கும் இரங்கத்தக்க நிலைமையைப் பார்க்க வேணும். அவனுடைய தன்முனைப்புக்கு சிறிய தீனி கிடைத்து விட்டால், இளைஞர்கள் அவனை மட்டின்றிப் புகழ்ந்து விட்டால், அவனுடைய கருத்துகளை அவர்கள் கேட்டால், அதன் பிறகு அவனை எவரும் நிறுத்த முடியாது. அதன் பின் அவன் முந்திய மாதிரியே ஆகி விடுவான். அவர்கள் அனைவரையும் அவனுடைய குறிக்கோள்களுக்காக வேலை செய்யச் செய்து விடுவான். இளம் பெண்களுக்கு இந்தக் காலத்தில் நம்புவதற்கு அதிகம் ஒன்றும் இல்லை. இவனைப் போன்ற நாற்றமெடுக்கும் நாடோடி கூட அவர்களுக்கு ஒரு குறிக்கோளைக் கொடுத்து விடுவான்.'

நான் துயின்றபோது அவர்களுடைய உரையாடல் இப்படித்தான் அதிகம் போய்க் கொண்டிருந்திருக்கும். இப்போது நான் என் மூலையிலிருந்து கவனித்தபோது அவர்கள் குற்றம் செய்த அமைதியில் தீயை உற்றுப் பார்த்துக் கொண்டு தொடர்ந்து இருந்து கொண்டிருந்தார்கள். சில நேரத்தின் பின் நான் எழுந்து நின்றேன். அபத்தமாக, நால்வரும் என்னைப் பார்ப்பதை தவிர்த்துக் கொண்டிருந்தார்கள். சில கணங்கள் காத்திருந்தேன், அவர்களில் யாராவது ஏதாவது சொல்வார்களா என்று. இறுதியில், 'சரி, முன்பு நான் துயின்று கொண்டிருந்தேன். நீங்கள் என்ன சொல்லிக் கொண்டிருந்தீர்கள் என்று என்னால் ஊகிக்க முடியும். சரி, நீங்கள் பயந்த அதை நான் செய்யப் போகிறேன். இந்தக் கணமே அந்த இளைஞர்கள் இருக்கும் குடிசைக்கு நான் போகப் போகிறேன். அவர்களிடமிருக்கும் முழு ஆற்றலையும், அவர்களின் சகல கனவுகளையும், இந்த உலகத்தில் நிலையான ஒன்றை அடைந்து விடலாம் என்ற அவர்களின் உந்துதலை வைத்து என்ன செய்யலாம் என்று அவர்களுக்குச் சொல்லப் போகிறேன். உங்களைப் பாருங்கள். எத்தனை இரக்கத்துரிய கூட்டம். குடிசைக்குள் பதுங்கிக் கொண்டு, எதையும் செய்வதற்குப் பயந்து கொண்டு, அந்தக் காலத்தில் மக்கிஸ் சொன்னதையோ அல்லது வேறு எவர் சொன்னதையும் செய்யாமல் இருக்கிறீர்கள். ஒருமுறை நாங்கள் சில தவறுகளைச் செய்தபடியால் இப்போது உலகத்தில் எதைச் செய்வதற்கும் பயப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள். சரி, இத்தனை ஆண்டுகள் நீங்கள் செய்து வந்த மந்தநிலைக்கான உபதேசங்களையும் கடந்தும், அந்த இளைஞர்கள் அந்தளவு மோசமாகக் கீழிறங்கி விடவில்லை. நான் அவர்களுடன் கதைப்பேன். நீங்கள் செய்த மோசமான முயற்சிகளை எல்லாம் நான் அரை மணி நேரத்தில் இல்லாமல் செய்து விடுவேன்.'

'பாருங்கள்,' என்றார் அந்த முதியவர் மற்றவர்களைப் பார்த்து. 'அது இப்படித்தான் நடக்கும் என்று எனக்குத் தெரியும். இவனை நாங்கள் நிறுத்த வேணும். ஆனால் நாங்கள் என்ன செய்வது?'

நான் சடுதியாக அறைக்குள் குறுக்காகச் சென்றேன். என் பையை எடுத்துக் கொண்டு இரவுக்குள் புகுந்தேன்.

நான் வெளியேறியபோது அந்தப் பெண் இன்னும் வெளியே நின்றாள். அவள் என்னை எதிர்பார்த்துக் கொண்டு நின்றாள் போலத் தோன்றியது. ஒரு தலையாட்டுதலுடன் அந்த வழிகாட்டி என்னை அழைத்துச் சென்றாள்.

இரவு மழைத் தூறலுடன் இருட்டாகவும் இருந்தது. குடிசைகளின் இடையே ஒடுங்கிய பாதைகளின் வழியே வளைந்து வளைந்து சென்றோம். நாங்கள் சென்ற வழியிலிருந்த சில குடிசைகள் சிதைந்தும், நொருங்கியும் காணப்பட்டன. அதில் ஒன்றை நான் முட்டினாலே என் பாரத்தினால் அதை விழுத்தி விடலாம் என்று நினைத்தேன்.

அந்தப் பெண் என் முன்னால் சில அடி தூரத்தில் சென்று கொண்டிருந்தாள். இடைக்கிடை பின்னால் திரும்பி என்னைப் பார்த்தாள். ஒருமுறை, 'வெண்டி மிகவும் மிகவும் மகிழ்ச்சி அடையப் போகிறாள். நீங்கள் முன்பு கடந்து போகையில் அது நீங்கள் தான் என்று அவள் நிச்சயமாக நம்பினாள். இப்பொழுது தான் ஊகித்தது சரி என்று சொல்வாள். நான் இவ்வளவு நேரம் வரவில்லை என்பதால் அவள் முழுக் கூட்டத்தையும் அழைத்து வந்திருப்பாள். அவர்கள் எங்களுக்காகக் காத்துக் கொண்டிருப்பார்கள்,' என்றாள்.

'டேவிட் மக்கிஸ்ஸிற்கும் இப்படியான வரவேற்புக் கொடுத்தீர்களா?'

'ஓம், அவர் வந்தபோது உண்மையாகவே நாங்கள் அனைவரும் உற்சாகமாக இருந்தோம்.'

'அவரும் அதைக் கண்டு மிகவும் மனநிறைவு அடைந்திருப்பார். அவர் எப்பொழுதும் தன் முக்கியத்துவத்தை அதிகமாக எண்ணுபவர்.'

'மக்கிஸ் வசீகரமானவர்களுள் ஒருத்தர் என்று வெண்டி சொல்லுவாள். ஆனால் நீங்கள் முக்கியவானவர் என்பாள். நீங்கள் உண்மையாக முக்கியமானவர் என்று நினைக்கிறாள்.'

அதைப்பற்றி நான் ஒரு கணம் சிந்தித்தேன்.

'நான் பல விஷயங்களைப் பற்றி என் எண்ணங்களை மாற்றியிருக்கிறேன், தெரியுமா? பல ஆண்டுகளுக்கு முன்னால் நான் சொன்ன எல்லாவற்றையும் வெண்டி இன்னும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தால் அவள் ஏமாற்றமடைவாள்,' என்றேன்.

நான் சொன்னது அந்தப் பெண்ணுக்குக் கேட்கவில்லைப் போலத் தோன்றியது. கொத்துக் கொத்தாக இருந்த குடிசைகளின் ஊடாக வேண்டுமென்றே என்னைத் தொடர்ந்தும் அழைத்துச் சென்று கொண்டிருந்தாள்.

எங்களுக்குப் பின்னால் பத்துப் பதினைந்து காலடிகள் தொடர்ந்து வரும் சத்தத்தைக் கேட்டேன். முதலில் அது யாரோ ஒரு கிராமத்தவன் என்று எண்ணி பின்னால் பார்க்கவில்லை. அந்தப் பெண் வீதி விளக்குக்குக் கீழே நின்று பின்னால் பார்த்தாள். அதனால் நானும் நின்று பின்னால் பார்த்தேன். நடு வயதுள்ள ஒருத்தன் கறுத்த மேலங்கியில் எங்களை நோக்கி வந்து கொண்டிருந்தான். அவன் எங்களை வந்தடைந்தபோது அவன் தன் கையை நீட்டி என் கைகளைக் குலுக்கினான், முறுவலிக்காமல்.

'அப்போ நீ இங்கே வந்து விட்டாய்,' என்றான்.

அப்போது அவனை ஏற்கெனவே எனக்குத் தெரியும் என்று உணர்ந்து கொண்டேன். நாங்கள் ஒருவரை ஒருவர் எங்கள் பத்து வயதிற்குப் பின் சந்திக்கவில்லை. அவனுடைய பெயர் றோஜர் பட்டன். கனடாவில் என் பள்ளியில் என் வகுப்பில் படித்தவன். அங்கே நான் இரண்டு ஆண்டுகள் கல்வி கற்றேன். கனடாவிலிருந்து இங்கிலாந்துக்குத் திரும்பி வரும்வரை. றோஜர் பட்டனும் நானும் அத்தனை நெருங்கிய நண்பர்கள் அல்லர். ஆனால் அவன் அத்தனை மனத்தைரியமில்லாதவன் என்பதாலும், அவனும் இங்கிலாந்திலிருந்து வந்தவன் என்பதாலும், அவன் சிலகாலம் என்னை எல்லாவிடமும் தொடர்ந்து வருவான். அந்தக் காலத்திற்குப் பின் அவனை நான் காணவும் இல்லை. அவனைப் பற்றிக் கேள்விப்படவுமில்லை. இப்பொழுது அவனுடைய தோற்றத்தை வீதி விளக்கில் அவதானித்தபோது நான் காணாமல் இருந்த இந்த ஆண்டுகள் நல்லவையாக அவனுக்கு அமையவில்லைப் போலத் தோன்றியது. தலை மொட்டை விழுந்திருந்தது. முகத்தில் தழும்புகளும் கோடுகளும் விழுந்திருந்தன. அவனுடைய முழு தோற்றத்திலும் சோர்ந்துபோன தொய்வு காணப்பட்

டது. அப்படி இருந்தும் அவன் என்னுடைய பழைய வகுப்புத் தோழன் தான். அது வேறு யாருமல்ல.

‘றோஜர், இந்த இளம் பெண்ணின் சிநேகிதிகளைப் பார்க்கப் போய்க் கொண்டிருக்கிறேன். என்னை வரவேற்பதற்காக அவர்கள் அனைவரும் ஒன்றாகக் கூடிக் காத்திருக்கிறார்கள். அப்படி இல் லாவிட்டால் உன்னை நேராக வந்து பார்த்திருப்பேன். அவர்க ளைப் பார்த்த பின் இன்று படுப்பதற்கு முன் உன்னிடம் தான் வந்திருப்பேன். நான் உன்னைத் தான் நினைத்துக் கொண்டிருந் தேன். இந்த இளைஞர்களுடன் குடிசையில் எவ்வளவு நேரம் செல வழிந்த பின்னாலும் றோஜருடைய வீட்டுக் கதைவை வந்து தட்ட வேணும் என்று நினைத்திருந்தேன்,’ என்றேன்.

‘அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம்,’ என்று றோஜர் பட்டன் சொன்னான். திரும்பவும் நாங்கள் நடந்து கொண்டிருந்தோம். உனக்குப் பல வேலைகள் உள்ளன என்று எனக்குத் தெரியும். ஆனால் நாங்கள் இருவரும் கதைக்க வேணும். பழைய காலத்தை இரை மீட்க வேணும். நீ என்னைக் கடைசியாக பள்ளி யில் கண்டபோது நான் பலவீமானதொரு மாதிரிப் பொருளாகவே காட்சி அளித்தேன். ஆனால் அவை எல்லாம் என் பதினாலோ பதினைந்தோ வயதுக்குப் பின் மாறி விட்டன. அதன் பின் நான் மனதில் உறுதியானவனாகி விட்டேன். தலைவனுக்குரிய பண்புகள் எனக்கு வந்து விட்டன. ஆனால் அப்போது நீ கனடாவை விட்டுப் போய் விட்டாய். என் பதினைந்து வயதில் நாங்கள் சந்தித்திருந் தால் என்ன நிகழ்ந்திருக்கும் என்று நான் எப்பொழுதும் வியந்தி ருக்கிறேன். எங்களிடையே உள்ள உறவு வித்தியாசமாக இருந்தி ருக்கும். அதை உறுதியுடன் என்னால் சொல்ல முடியும்.,’ என் றான்.

அதைச் சொன்னபோது, பழைய நினைவுகள் எனக்குள் பீரிட்டு வந்தன. அந்த நாட்களில் றோஜர் பட்டன் என்னைப் போற்றிப் பாராட்டி வந்தான். அதற்குப் பதிலாக அவனை நான் இடைவிடா மல் பயமுறுத்தி வந்தேன். இருந்தும், எங்கள் இருவருக்கும் இடையில் விசித்திரமான ஒரு புரிதலும் இருந்தது. எனது பயமு றுத்தல் எல்லாம் அவனுடைய நன்மைக்காகவே என்ற புரிதல். நான் விளையாட்டு மைதானத்தில் அவனுடைய வயிற்றில் சடுதி யாகக் குத்தினால் அல்லது தாழ்வாரத்தில் அவனைக் கண்ட போது அவன் அழும்வரை அவனுடைய கையை முதுகுக்குப் பின்னால் முறுக்கினால் அவனுக்கு மனவுறுதியைக் கொடுக்கவே அப்படிச் செய்தேன் என்று நினைத்தேன். அதனால் எங்களிக்கி டையே நிகழ்ந்த பிரதானமான பயன் என்னவென்றால் என்னில் அவனுக்கு ஒருவித பயபக்தி உண்டானது. இந்த நினைவெல்லாம் இளைத்துப் போனது போல் உள்ள அவன் எனக்குப் பக்கத்தில் இப்போது நடந்து வந்து கொண்டிருந்தபோது வந்து கொண்டிருந் தன.

‘உண்மையில், நீ அப்படி எல்லாம் செய்திருக்காவிட்டால் நான் என் பதினைந்து வயதில் செய்தவற்றைச் செய்திருக்க மாட்டேன்,’ என்றான், நான் நினைத்துக் கொண்டிருந்தவற்றை அறிந்து கொண் டது போல. ‘எப்படியோ சில வருஷங்களுக்குப் பிறகு நாங்கள் சந்தித்திருந்தால் எப்படி இருந்திருக்கும் என்று நான் வியந்திருக் கிறேன். அந்த நேரம் உண்மையில் என்னையும் ஒரு ஆளாகக் கணிக்கும் நிலைக்கு வந்து விட்டேன்.’

நாங்கள் திரும்பவும் குடிசைகள் இடையே ஒடுங்கிய திருப்பங்கள் நிறைந்த பாதைகள் ஊடாக நடந்து கொண்டிருந்தோம். அந்தப் பெண் இன்னும் எங்களுக்கு முன்னே வழிகாட்டிக் கொண்டு நடந்து கொண்டிருந்தாள். ஆனால் அவள் இப்போ விரைவாக நடந்து கொண்டிருந்தாள். எங்களுக்கு முன்னால் சில மூலைக-ளில் அவள் திரும்புவது மட்டும் எங்கள் கண்ணுக்குப் புலப்படும். அவளை இழந்து விடாமல் தொடர்வது என்றால் நாங்கள் விழிப் பாக இருக்க வேண்டும் என்பது தெரிந்தது.

‘இன்றைக்கு, நிச்சயமாக,’ என்று றோஜர் பட்டன் சொல்லிக் கொண்டிருந்தான், ‘நான் கொஞ்சம் என் நலைனைக் கவனிக்கா மல் விட்டேன். ஆனால், என் பழைய நண்பனே, நீ இன்னும் மோசமாக இருக்கிறாய் என்று சொல்லத் தான் வேணும். உன்னு டன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது நான் ஒரு விளையாட்டு வீரன் போல இருக்கிறேன். அப்பட்டமாகச் சொன்னால், நீ இப்போ அரு வருப்பான பழம் நாடோடி போல இருக்கிறாய். உண்மையாகவே, இல்லையா? உனக்குத் தெரியும், நீ சென்ற பிறகும் பல காலமாக தொடர்ந்து உன்னைப் பின்பற்றி வழிபாட்டுணர்வுடன் நடந்திருக்கி றேன். இதை ஃப்ளெச்சர் செய்வானா? இதைச் செய்தால் ஃப்ளெச் சர் என்ன நினைப்பான்? ஓம். எனக்குப் பதினைந்தோ பதினாறோ வயது ஆனபோது தான் நான் என்னை உணர்ந்து, உன்னை உள்நோக்கிப் பார்த்தேன். அதன் பின் உன்னில் மிகவும் கோபப் பட்டேன். இப்பவும் சிலவேளைகளில் அதைப்பற்றி யோசிப்பேன். திரும்பிப் பார்த்து யோசிப்பேன். சரி, அவன் மிக மோசமான ஆள். என்னிலும் பார்க்க அந்த வயதில் அவன் கொஞ்சம் சதைப்பற்றும் எடையும் போட்டிருந்தான். அத்துடன், கொஞ்சம் அதிக தன்னம்பிக்கையும் கொண்டிருந்தான். அவற்றை அவன் தனக்குச் சாதகமாகப் பாவித்துக் கொண்டான். ஓம், திரும்பிப் பார்க்கும்போது அது மிகவும் தெளிவாகத் தெரிந்தது. நீ மோச மான சிறியவன். இப்போதும் அப்படி என்று நான் சொல்ல வர வில்லை. நாம் எல்லோரும் மாறிக் கொண்டிருக்கிறோம். அதை மட்டும் ஏற்றுக் கொள்ள விரும்புகிறேன்,’ என்றான்.

‘இங்கே நீ கன காலமாய் வாழுகிறாயா?’ என்று கேட்டேன், பேசிக் கொண்டிருக்கும் விஷயத்தை மாற்றுவதற்காக.

‘ஓ, ஏழோ எட்டோ வருஷமாக. உண்மை, இங்கே உன்னைப் பற்றி அதிகம் பேசிக் கொண்டிருக்கிறார்கள். எங்களுடைய பழைய தொடர்பைப் பற்றிச் சிலவேளை அவர்களுக்கு நான் சொல்லுவேன். ஆனால் அவன் என்னை நினைவில் இப்போது வைத்திருப்பானோ தெரியாது என்றும் சொல்லுவேன். ஏனென்றால், எலும்பும் தோலுமான ஒரு சிறுவனை, எப்போதும் வெருட்டி அச்சுறுத்தித் திரிந்த ஒருவனை, கூப்பிட்டதற்கெல்லாம் போன ஒருத்தனை, ஏன் அவன் நினைவில் வைத்திருக்க வேணும்? எப் படியோ இங்கேயுள்ள இளைஞர்கள் இந்த நாட்களில் உன்னைப் பற்றி அதிகம் பேசிக் கொண்டிருக்கிறார்கள். நிச்சயமாக, உன்னை ஒரு காலமும் பார்க்காதவர்கள் தான் உன்னை மிகவும் உயர்வாக மதிக்கிறார்கள். அதை மூலதனமாக்க நீ இப்போ திரும்ப வந்திருக்கிறாய் என்று தான் நான் நினைக்கிறேன். இருந் தும், உன்னை நான் பழி முடிக்கவில்லை. உனக்கு வரவேண்டிய சிறிய சுயமரியாதையை முயன்று மீட்டெடுக்கும் உரிமை உனக்கி ருக்கிறது.’

அந்த நேரத்தில் திறந்த வெளியை ஒன்றைச் சடுதியாகக் கண்ட தால் இருவரும் நின்றோம். பின்னால் திரும்பிப் பார்த்தபோது, கிராமத்திலிருந்து வெளியே வந்து விட்டதைக் கண்டேன். கடைசி யாக இருந்த குடிசையும் எங்களுக்குச் சற்றுத் தூரமாக தெரிந் தது. நான் பயந்தது போலவே அந்த இளம் பெண்ணைத் தவற விட்டு விட்டோம். உண்மையில், கொஞ்ச நேரமாக அவளை நாங் கள் பின் தொடரவில்லை என்பதையும் உணர்ந்தேன்.

அந்தக் கணத்தில் சந்திரன் மேல் எழுந்து விட்டான். விசாலமான நீண்டு சென்ற புல்வெளியின் ஓரத்தில் நாங்கள் நின்றுக் கொண்டி ருந்தோம். நிலவொளியில் நாங்கள் கண்பார்வைக்கும் அது நீண்டு சென்று கொண்டிருக்கிறது என்று நினைத்தேன்.

றோஜர் பட்டன் என்னைத் திரும்பிப் பார்த்தான். அவன் முகம் நிலவொளியில் மென்மையாகவும் பாசத்துடனும் காணப்பட்டது.

‘மேலும், மன்னிப்பதற்கு காலம் வந்து விட்டது. நீ அதைப் பற்றி அதிகம் கவலைப்படாதே. நீ பார்ப்பது போல பழைய சில விஷ யங்கள் கடைசியில் உனக்குத் திரும்ப வந்து சேரும். நாங்கள் மிகவும் இளம் வயதில் செய்தவற்றுக்கு இப்பொழுது எங்களைப் பொறுப்பாக்க முடியாது,’ என்றான்.

‘சந்தேகமில்லாமல் நீ சொல்வது சரியே,’ என்றேன். அதன் பின் சுற்றி வரத் திரும்பவும் இருட்டில் பார்த்தேன். ‘ஆனால் இப்போது நான் எங்கே போவது என்று எனக்குத் தெரியவில்லை. சில இளை ஞர்கள் தங்கள் குடிசையில் எனக்காகக் காத்துக் கொண்டிருக்கி றார்கள். இப்போ எனக்காக வெதுவெதுப்பான கணவடுப்பை போட்டு சூடான தேநீருடன் தயாராக இருப்பார்கள். அத்துடன் கொஞ்ச வீட்டில் தயாரித்த கேக்கையும் வைத்திருப்பார்கள். சில வேளை இறைச்சியும் மரக்கறியும் போட்ட உணவு கூட வைத்தி ருக்கலாம். நாங்கள் பின் தொடர்ந்து சென்ற அந்தப் இளம்

பெண் என்னை அங்கே அழைத்துக் கொண்டு போய் அங்கே நான் நுழைந்தவுடன் எல்லோரும் கைதட்டி என்னை வரவேற்பார்கள். புன்னகை செய்வார்கள். என்னைச் சுற்றிவர நேசிக்கும் முகங்கள் இருக்கும். அது தான் எனக்காக எங்கோ காத்திருக்கிறது. ஆனால் எங்கே போவது என்று தான் எனக்குத் தெரியவில்லை.'

றோஜர் பட்டன் தன் தோள்களைக் குலுக்கினான். 'கவலைப்படாதே அங்கே எளிதாகப் போய்ச் சேர்ந்து விடுவாய். ஆனால் அந்தப் பெண் உன்னைக் கொஞ்சம் தவறாக வழி நடத்துகிறாள். அவள் வெண்டியின் குடிசை என்று சொன்னது அதையே உணர்த்துகிறது. அந்த இடம் மிகவும் தூர இருக்கிறது. உண்மையில் நீ ஒரு பஸ்ஸைப் பிடித்துத்தான் அங்கே போக வேணும். இருந்தும் அது சற்றே நீண்ட பயணம். இரண்டு மணி நேரம் செல்லும் என்று சொல்வேன். ஆனால் கவலைப்பட வேணாம். நீ எங்கே பஸ் பிடிக்கலாம் என்று உனக்கு நான் காட்டித் தருவேன்.'

அதைச் சொன்னபின் அவன் குடிசைகளை நோக்கி பின்னால் சென்றான். நான் அவனைப் பின் தொடர்ந்து சென்றபோது நேரம் மிகவும் சென்று விட்டது என்பதையும், நித்திரை கொள்ள வேண்டும் என்ற அவதியும் அவனிடம் இருந்தது போலவும் உணர்ந்தேன். குடிசைகளைச் சுற்றி பல நிமிஷங்கள் திரும்பவும் நடந்தோம். அதன் பின் அவன் எங்களை கிராமத்தின் சதுக்கத்திற்கு அழைத்துச் சென்றான். உண்மையில் அந்தச் சதுக்கம் மிகவும் சிறியது. அவலட்சணமானது. சதுக்கம் என்று சொல்வதற்கே அது தகுதியற்றது. தனித்து நின்றதொரு வீதி விளக்குக்குப் பக்கத்தில் இருந்த ஒரு சிறிய புல்தரைத் துண்டு தான் அது. அந்த விளக்கின் வெளிச்சம் விழுந்த இடத்தில் சில கடைகள் சாடையாகத் தெரிந்தன. அவை இரவு மூடப்பட்டு இருந்தன. இடம் முழு அமைதியில் இருந்தது. எதுவும் அசையவில்லை. நிலத்தின் மேல் மெல்லிய மூடுபனி படர்ந்திருந்தது.

நாங்கள் புல்தரையை அடைய முன் றோஜர் பட்டன் நின்று கையைக் காட்டினான்.

'அங்கே பார், அந்த இடத்தில் நின்றால் ஒரு பஸ் வரும். நான் சொன்னது போல அது சிறியதொரு பயணமல்ல. இரண்டு மணி நேரம் எடுக்கும் பயணம். கவலைப்படாதே. அந்த இளைஞர்கள் உனக்காகக் காத்திருப்பார்கள். இந்த நாட்களில் நம்பிக்கை வைப்பதற்கு அவர்களுக்கு அதிகம் ஒன்றுமில்லை. அது எனக்குத் தெரியும்.'

'நேரம் நல்லாப் பிந்தி விட்டது. உண்மையில் பஸ் வரும் என்று நீ நினைக்கிறயா?' என்று நான் கேட்டேன்.

'ஓ, வரும். ஆனால் நீ காத்திருக்க வேண்டியிருக்கும். கடைசியில் பஸ் வரும்,' என்று சொன்ன பின் அவன் என் தோள்களை நம்பிக்கையூட்டுகிற வகையில் தொட்டான். 'இங்கே நிற்பது கொஞ்சம் தனிமையானது தான் என்று எனக்குத் தெரியும். ஆனால் பஸ் வந்து விட்டால் உனக்கு ஊக்கம் பிறந்து விடும். என்னை நம்பு. ஓம். அந்த பஸ் எப்போதுமே மகிழ்ச்சியை அளிக்கும். அதனுள் வெளிச்சம் பிரகாசிக்கும். உள்ளிருக்கும் எல்லாப் பயணிகளும் குதுகலமானவர்கள். எந்நேரமும் சிரித்துக் கொண்டும், பகிடி பண்ணிக் கொண்டும், யன்னலைக் காட்டிக் கொண்டும் இருப்பார்கள். நீ அதற்குள் ஏறியவுடன் வெதுவெதுப்பாகவும் சௌகரியமாகவும் உணர்வாய். மற்றப் பயணிகள் உன்னுடன் உரையாடுவார்கள். சிலவேளை உண்ணவும், குடிக்கவும் ஏதாவது தருவார்கள். சாரதியைப் பொறுத்துப் பாட்டுக் கூட பாடுவார்கள். சில சாரதிகள் அதை ஊக்கப்படுத்துவார்கள். சிலர் அப்படிச் செய்ய மாட்டார்கள். சரி, ஃப்ளெச்சர், உன்னைக் கண்டது எனக்குச் சந்தோசம்.'

நாங்கள் கை குலுக்கினோம். அதன் பின் அவன் திரும்பி நடந்து சென்று விட்டான். இரண்டு குடிசைகளுக்கு ஊடாக இருளில் அவன் மறைந்து செல்வதை நான் கவனித்தேன்.

நான் புல்தரைக்கு நடந்து சென்று விளக்குக் கம்பத்திற்குக் கீழே என் பையை வைத்தேன். தூரத்தில் வாகனம் வரும் சத்தத்திற்காக உற்றுக் கேட்டுக் கேட்டுக் கொண்டிருந்தேன். இரவு முற்றிலும் அமைதியாக இருந்தது. இருந்தும், றோஜர் பட்டன் பஸ்ஸைப் பற்றிய விவரணை என்னை உற்சாகப்படுத்தியிருந்தது. மேலும், என் பயணத்தின் முடிவில் எனக்குக் கிடைக்கவிருக்கும் வரவேற்பைப் பற்றியும் நினைத்தேன். இளைஞர்களின் நேசமான முகங்களையும் நினைத்தேன். என்னுள் ஆழமாக எங்கோ ஒளிந்திருக்கும் ஒளிமயமான நம்பிக்கையின் அசைவுகளை நான் உணர்ந்தேன்.



mahalingam.k@thaiveedu.com





# காலுங்காதலும்

‘மிஸ்ரர் லிங்கம் வேக் அப். வேக் அப் மிஸ்ரர் லிங்கம்’

யாரோ என்னை உலுக்குவதை உணரமுடிந்தது. இமைகளைத் திறக்கமுடியாதவாறு பெருங்கனமொன்று வந்து அதன்மேல் குந்தியிருந்தது. உடலின் ஒருபகுதியையேனும் அசைக்கமுடியா இயலாமையில் தத்தளித்துக்கொண்டிருக்கையில் மீண்டும் அதே-குரல்...

‘ஆர் யூ ஓகே மிஸ்ரர் லிங்கம்? ற்றை ரு வேக் அப். யூ ஆர் ஓகே நௌ’

மிகுந்த சிரமத்துடன் இமைகளைத் திறக்கிறேன். ராசலெட்சுமி!

வந்திற்றியா என்ரை ராசாத்தி!

‘மிஸ்ரர் லிங்கம் மிஸ்ரர் லிங்கம். டொக்ரர் திஸ் பேஷன்ற் இஸ் லூசிங் ஹிஸ்...’

•

‘என்ரை அல்லிராணி அரளிவிதைய அரச்சுக்குடிச்சிற்றுது எண்டு கேள்விப்பட்டோடண நான் துடிச்சுப் போய்ற்றன் தெரியுமா? ஏனடியாத்தை அப்பிடிச்செய்தனீ?’

‘அதுக்காக இப்பிடியா மாட்டுவண்டிலக் கொண்டுபோய் பத்தைக்குள்ள விடுவீங்க? பாருங்க உடம்பெல்லாம் ஒரே கீறல் காயம். காலில வேற பத்துப்போட்டுக் கிடக்கு’

‘நீ கதையை மாத்தாதையணை. ஏனெணை என்ரை குஞ்சு நஞ்சைக் குடிச்சது?’

‘நஞ்சைக் குடிச்சதாலதானே இப்ப அப்பு உங்களைப் பாக்க விட்டவர்’

‘தச்சலா(தற்செயலாக) ஒண்டு கிடக்க ஒண்டு நடந்திருந்தா?’

‘நான் ஒரு எற்பன்தான் குடிச்சனான்’.

‘எண்டாலுமெணை நஞ்சோடை ஆரும் விளையாடுறதே? தச்சலா உனக்கொண்டு நடந்திருந்தா?’

‘அய்! அய்யான்ரை ஆசையைப்பாருங்கோவன். எனக்கொண்டு நடந்திருந்தா இன்னொருத்தியைப் பிடிக்கலாமெண்டு நினைச்சியளோ? நான் சாகிறதாயிருந்தா உங்களையும் கொண்டுபோட்டுத்தான் சாவன் தெரிஞ்சுகொள்ளுங்கோ?’

‘ஏனடியாத்தை இப்ப இப்பிடியெல்லாம் கதைக்கிறாய்?’

‘அப்ப சத்தம் போடாம படுங்க பாப்பம். இன்னும் ரெண்டு மாதத்தில பள்ளிக்கூட விளையாட்டுப்போட்டில நீங்க வெல்லாட்டா கூட்டாளிப் பெட்டையளிட்டை என்ரை மானம் போயிரும்’.

‘போனமுறை விளையாட்டுப் போட்டியிலதான் நீ என்னோட முதன் முதல் கதைச்சனீ ஞாபகமிருக்கோ?’

‘அதுக்குப் பிறகு நீங்க எனக்குப் பின்னால வந்து பம்மினதும் ஞாபகமிருக்கு’.

இல்ல விளையாட்டுப் போட்டியின் இறுதிநாள் அது. அஞ்சலோட்டத்தின் போது எமது இல்லத்தின் மூன்றாவது வீரர் தடக்கி விழவே மற்றைய இல்ல வீரர்களுக்கும் எங்களுக்கும் இடையே நீண்ட இடைவெளி உண்டாகிவிட, இறுதியாளாய்த், தோல்வி நிச்சயம் என்கின்ற உறுதியில் ஓடிக்கொண்டிருக்க...

'கமோன் லிங்கம் வேகமா ஓடுங்க! முன்னுக்குப் போற ஆக்களைப் பிடிச்சிரலாம். கமோன்'
குரல்கேட்டு இடப்புறமாய்த் திரும்ப, ராசலெட்சுமி! ஓட்ட வீரர்கள் குறுக்காகப் போகாமல் தடுப்பதற்காக இடையிடையே நிறுத்தப்பட்டிருந்த மாணவிகளில் ஒருத்தியாய். ஒருகணம் எனக்கே திகைப்பாகிப் போனது. ராசலெட்சுமிக்கு, எங்கள் பள்ளிக்கூடத் தேவதைக்கு, ஊரின் பேரழகிக்கு என்னை, எனது பெயரை, தெரிந்திருக்கிறதா?

'கன்னியர் கடைக்கண் காட்டிவிட்டால் மண்ணில் காளையர்க்கு மாமலையும் ஓர்கடுகாம்'.

உயிரைக் கொடுத்து ஓடுவது என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அப்படியொரு ஓட்டம். மயிரிழையில் மூன்றாமவனை முந்தி மூன்றாமிடத்தைத் தட்டிப்பறித்தேன். யாருமே எதிர்பார்த்திராத வெற்றி அது.

திகைத்துப் போயிருந்த நண்பர்களிடம் உண்மையைச் சொன்னேன். நம்ப மறுத்தனர். தாங்கள் பார்க்க ராசலெட்சுமியுடன் நான் உரையாடினால் கள்ளும் கள்ளக்கோழியும் தருவதாய்ப் பந்தயம் கட்டினார்கள்.

கொஞ்சம் அழகிகளுக்கே திமிரிருக்கும் எங்கள் ஊரில், எழில் கொஞ்சும் ரதியாய், அழகிகளின் ராணியாய்த் திகழும் ராசலெட்சுமி மட்டும் அதற்கென்ன விதிவிலக்கா? படிப்பில் பெயரெடுத்த பல மாணவர்களையே எடுத்தெறிந்துபேசி செருப்பைக் கழற்றிக் காட்டுபவள். வெறும் ஓட்டக்காரனான என்னை ஊக்கப்படுத்தியதை நான்கூடத்தான் நம்பத் தயாராயிருக்கவில்லை.

வெள்ளி அல்லது சனி இரவுகளில் ஈரச்சாக்குப் போட்டுப் பிடிக்கும் கோழியை மறுநாள் மதியம் நண்பர்களுடன் தனியிடத்தில் நெருப்பில் வாட்டி கள்ளுடன் சேர்த்தடிக்கும்போது வரும் ஒருவித போதை தரும் சந்தோஷத்திலும், இதைச்சாட்டாய் வைத்து ராசலெட்சுமியுடன் ஒருமுறை உரையாடிவிடலாம் என்பதே மனதிற்கு மகிழ்ச்சியாயிருந்தது.

பந்தயப்படி மறுநாள் பள்ளிக்கூடம் முடிவடைந்தது வீடுசெல்லும் போது அவளைப் பின்தொடர்ந்தோம். நண்பர்கள் விலகி நிற்க நான் அவளை நெருங்கினேன்.

காலடியோசை கேட்டு நின்று திரும்பி முறைத்தாள்.

'அம்மாணை செருப்பைக் கழட்டிப் போடாதையும் ஐசே! பெடியளோட பந்தயம் கட்டினபடியாலதான் உம்மோடை கதைக்க வந்தனான். நீர் என்னோடை கதைக்கத் தேவையில்லை. சும்மா கதைக்கிற மாதிரி நடிச்சாலே காணும். நான் பந்தயத்தில வெண்டிருவன்'.

'ம். அவ்வளவு பயமிருந்தாக் காணும்'.

'நான் ஓடேக்குள்ள நீர் எனக்கு கமோன் சொன்னீர் என்று சொல்ல ஒருத்தரும் நம்பயில்லை. நீர் சரியான திமிர் பிடிச்சனீராம். பெடியளோட கதைக்கமாட்டீராம் எண்டுசொல்லி என்னைப் பொய்யன் எண்டுறாங்கள்'.

'ஏன் என்னைப்பார்த்தா திமிர்பிடிச்சவள் மாதிரியா இருக்கு?'

'ஐயையோ. அம்மாண நான் அப்பிடிச்சொல்லேல்ல. மற்றப் பெடியள்தான் அப்பிடிச் சொன்னவங்கள்'.

'வேறென்ன சொன்னவங்கள்?'

'நீர் நல்ல வடிவெண்டு உமக்குப் பெரிய எண்ணமாம்.'

'ஏன் அப்ப நான் வடிவில்லையோ?'

'இஞ்ச பாரும் ஐசே! நான் ஒண்டுமே சொல்லேல்லை. அவங்கள் தான் எல்லாம் சொன்னவங்கள்?'

'அப்ப உமக்கு நான் வடிவான ஆளாத் தெரியேல்லை என?'
அவள் முறைப்பது தெரியவே நான் தடக்கியது உறைத்தது.
'இல்லையில்லை நீர் சரியான வடிவு. உம்மைப்போல இவ்வளவு வடிவான ஒரு பெட்டையை நான் பார்த்ததேயில்லை'.

'அப்ப இதுவரைக்கும் எத்தனை பெட்டையளைப் பார்த்திருக்கிறீர்?'

'என்ன நீர்? நான் அப்பிடியான ஆளில்லை' முகத்தில் கோபத்தைக் காட்டினேன்.

'இதென்ன நீர்? லூசு மாதிரி. இதுக்கேன் கோவிக்கிறீர்?'

'ஓம் நான் லூசுதான். அவங்களோட பந்தயம் கட்டி உம்மோடை வந்து கதைச்சன்பாரும்'.

'அப்ப அவங்களோட பந்தயம் கட்டியிருக்காட்டி என்னோட வந்து கதைச்சிருக்க மாட்டீரோ?'

'நான் ஏன் உம்மோடை வந்து கதைக்கிறன். நீரும் உம்மடை திமிரும் உம்மோடையே இருக்கட்டும் எண்டு விட்டிட்டிருந்திருப்பன்'.

'அப்ப உங்களுக்கு உண்மையா என்னில விருப்பமில்லையா?'

அவள் குரல் கரகரத்திருந்தது. இவ்வளவு நேரமும் என்னை நீர் என்று அழைத்தவள் இப்போது நீங்கள் என்கிறாள். அப்படியானால் இவளுக்கும் என்னைப் பிடித்திருக்கிறதா? வயிற்றினுள் வண்ணத்துப்பூச்சிகள் பறக்கத் தொடங்கின.

'விருப்பம் இல்லாமலா உம்மோடை வந்து இவ்வளவு நேரமும் கதைச்சுக் கொண்டிருக்கிறன்?'

'இல்லை. நீங்க பொய் சொல்லுறீங்க. உங்களுக்கு என்னில விருப்பமில்ல. இனி என்னோடை கதைக்க வேண்டாம். நான் போறன்'.

முகத்தைத் திருப்பிக்கொண்டு புறப்பட்டாள். அவள் நயனங்கள் இரண்டிலும் இரு கண்ணீர் முத்துக்களை நான் கண்டேன்.

காதலுக்கும் கண்ணில்லை. காதலில் வீழ்ந்திருப்பவர்கட்கும் கண்ணில்லை. ஆனால் மற்றவர்களுக்கு இருக்கிறதே.

ஊருக்குள் காதலிப்பது அவ்வளவு இலகுவான விடயமல்ல. சில மாதங்களிலேயே எங்கள் காதல் அவள் தந்தைக்குத் தெரியவர, ராசலெட்சுமியின் பள்ளிப்படிப்பு நிறுத்தப்பட்டது.

சனி, ஞாயிறு காலைகளில் சந்தைக்குச் சென்றுவிட்டு வரும் வழியினை ராசலெட்சுமியின் வீட்டினருக்காக வருவதற்கும், வீட்டிற்கு அடுத்துள்ள பனங்காணியினுள் ஓய்வெடுப்பதற்கும் வண்டில் மாடுகள் பழகிவிட..., அவள் தந்தை அவளை வீட்டின் முற்றத்திற்குக் கூட வரவிடாமல் சிறைவைக்க... அவள் அரளிவிதையினை விழுங்கியிருந்தாள்.

ராசலெட்சுமி அரளி விதையை அரைச்சுக் குடிச்சிற்றாளாம் எண்டு கேள்விப்பட்டவுடன்... சந்தைக்குக் கொண்டு சென்றிருந்த வெங்காயத்தை அப்படியே விட்டுவிட்டு, மாடுகளை அரையும் குறையுமாக வண்டிலில் இழுத்துக் கட்டிவிட்டு, மாடுகளை அவளின் வீட்டை நோக்கி விரட்டிய போதுதான்... நுகத்தடியிலிருந்து ஒரு மாடு விலக, வண்டி முட்பற்றைக்குள் சாய்ந்தது.

(தொடரும்)



suganthan.v@thaiveedu.com

# எழுத்தாளர் 'குரு அரவிந்தன் வாசகர் வட்டம்' நடத்தும் திறனாய்வுப் போட்டி.

தமிழ் இலக்கிய உலகில் புகழ் பெற்ற எழுத்தாளர் குரு அரவிந்தன் அவர்களின் 50வது ஆண்டு நிறைவான தமிழ் இலக்கிய சேவையைப் பாராட்டும் முகமாகவும், வாசிப்பு, எழுத்துப் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கமாகவும் நடக்கும் உலகளாவிய நாவல், சிறுகதை திறனாய்வுப் போட்டி.

## பரிசு பெறும் எழுத்தாளர்களுக்காகப் 13 பரிசுகள்,

(பரிசுகள் இலங்கை நாணயத்தில் வழங்கப்படும்.)

**முதலாம் பரிசு இலங்கை ரூபாய்: 25,000.**
**இரண்டாவது பரிசு இலங்கை ரூபாய்: 20,000.**
**மூன்றாவது பரிசு இலங்கை ரூபாய்: 15,000.**
**10 பாராட்டுப் பரிசுகள் (ஒவ்வொருவருக்கும்) இலங்கை ரூபாய்: 5,000.**

குரு அரவிந்தன் அவர்களின் படைப்புக்களுக்கான திறனாய்வுப் போட்டி. குறைந்தது 2 புதினங்கள் அல்லது 4 சிறுகதைகள் பற்றி உங்களின் கருத்துரைகளைத் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் 4 பக்கங்களுக்குள் அல்லது 1500 சொற்களுக்கு மேற்படாமல் யூனிக்கோட் மற்றும் வேர்ட் (Unicode and Word) அச்சுப்பிரதியாக அனுப்பவும். மாணவ, மாணவிகளாயின் தனியாகக் குறிப்பிடவும். வயது வரம்பு இல்லை. ஒருவர் ஒரு கட்டுரை மட்டுமே அனுப்பலாம். பரிசுபெற்ற கட்டுரைகளைத் திருத்தி நூலாக வெளியிடும் உரிமை வாசகர் வட்டத்திற்கு உரியது.

மின்னஞ்சல் வழியாக ஆங்கிலத்தில் உங்களின் முழுப்பெயர், தெளிவான அஞ்சல் முகவரி, மின்னஞ்சல் முகவரி, செல்போன் எண் விவரங்களோடு அனுப்பவேண்டும்.

## உங்கள் திறனாய்வு எமக்குக் கிடைக்க வேண்டிய கடைசி நாள்: 30.04.2021

போட்டி முடிவுகள் 2021 மே மாதம் 24 ஆம் திகதி இணையத்தில் வெளியிடப்படும்.

மின்னஞ்சல்: kurufanclub@gmail.com – (kurufanclub@gmail.com)
இணையம்: //kurunovelstory.blogspot.com/ (kurunovelstory.blogspot.com)
https://canadiantamilsliterature.blogspot.com/

இந்த அறிவிப்பினை உங்களின் முகநூல் பக்கத்திலும் பகிரிக்குழுக்களிலும் (whattsapp) பகிர்ந்து உதவுங்கள். நன்றி!



# பனிவிழும் பனை வனம்

- செல்வம் அருளானந்தம்

அவசரமாய் கொழும்புக்கு வரும்படி முதலாளி தந்தி அனுப்பியிருந்தார். உடன புறப்பட்டிட்டன். அங்கை போக, முதலாளி என்னைக் கூட்டிக்கொண்டு நாங்கள் றால் அனுப்பும் கொம்பனி மனேஜரைப் பார்க்கப் போனார்.

மனேஜர், 'யப்பான்காறங்கள் றால் விலையை குறைத்துப் போட்டார்கள். முன்பு தந்த விலை இனித் தரமாட்டோம் எண்டும் றாத்தலுக்கு இரண்டு ரூபாய் குறைக்கப்போகிறோம்' எண்டும் சொன்னார்.

துக்கமான செய்திதான்.. றால் பிடிபாடும் குறைஞ்சிருக்கிற இந்த நேரத்திலை காசைக் குறைக்கிறத்துக்கு தொழிலாளிகள் சம்மதிக்க மாட்டார்கள்.

பெரிய கவலையோடை மன்னாருக்கு ரயிலில் திரும்பிக் கொண்டிருந்தேன். பகல் முழுவதும் கொழும்பில் அலைந்த களை...ரெயிலிலும் பெரிதாய்சனம் இல்லை. ஒரு சீற்றிலை நீட்டி நிமிர்ந்து படுத்து விட்டேன்.

நல்ல நித்திரை... திடீரென்று நித்திரை முறிஞ்சு எழும்பிப் பார்க்கிறன்... ரயில் பெட்டிகுள்ளை ஒருவரும் இல்லை... வெளியிலை நல்ல இருட்டு. ரயிலும் ஓடாமல் நிற்குது.

வெளியே எட்டி, என்ன ஸ்ரேசன் என்று பார்த்தன். மாகோ ரயில் நிலையம் எண்டு இருந்தது. 77 கலவரம் நடந்து கனகாலம் இல்லை. வெளியே போகப் பயமாய் இருந்தது. கொஞ்ச நேரம் பெட்டிக்குள்ளேயே இருந்தன்.

இப்படியே இருந்து என்ன செய்யிறது? யாரிடமாவது கேட்க வேணும். இறங்கிப் போக, கண்ணில ஒருவர் பட்டார். அவரிட்டை இரயில் ஏன் நிக்குது எண்டு கேட்க, 'அது பழுதாய் போய் ஒரு மணித்தியாலயம் ஆச்சு. வெளியில் போய் பஸ் ஏறித்தான் மன்னாருக்கு போகலாம்' எண்டு சொன்னார். ரெயிலுக்குள்ள இருந்த பயணப்பையை எடுத்துக் கொண்டு வெளியில் வந்தன்.

இன்னும் களைப்புத் தீரேல்லை. ஸ்ரேசனுக்கு முன்னால் ஒரு தேத்தண்ணிக் கடையிருந்தது. ஒன்றிரண்டு பேர் தேத்தண்ணி குடித்துக் கொண்டிருந்தவை.

சுற்றிவரத் தமிழர்களின்ரை கடைகள் எரிஞ்ச தடயங்கள் தெரிஞ்சுது. பயமும் கவலையும் கூடி வந்தது. சிங்களத்திலை எப்படி பால் தேத்தண்ணி கேட்கிறது எண்டு தெரியாம முழிச்சுக்கொண்டு நிற்க, அப்பதான் ஒருவர் வந்து 'கிரிதே தெண்ட' என்று சொல்லிப் பால் தேநீர் வேண்டிக் குடித்தார்.

ஓ, இது ஒரு சின்ன விடயம் என எண்ணிக்கொண்டு... அப்பிடியே அதைக் நினைவில் வைத்து கடைக்காரிட்டை போய் 'கிரிதே தெக்காய்' எண்டன். வாய் கொஞ்சம் சிலிப் ஆயிட்டுது.

'தா' என்று சொல்லுற 'தெண்ட' என்ற சொல்லையும் 'இரண்டு' எண்டு சொல்லுற 'தெக்காய்' எண்ட சொல்லையும் ஏன் இவ்வளவு கிட்ட வைச்சிருக்கிறாங்கள்? சிங்கள்மொழி இன்னும் வளர்சி அடைய வேணும் எண்டு நினைக்க, கடைக்காரர் இரண்டு பால் தேநீர் தந்தார்.

இரண்டையும் வாங்கி, கொதிக்க கொதிக்க இரண்டு கையிலையும் வைச்சிருந்ததைப் பக்கத்தில் நின்றவர் ஆச்சரியமாய்ப் பார்த்தார்.

இரண்டையும் குடிக்க, நல்லாய்த்தான் இருந்தது.

பிறகு ரெயில்வே ஸ்ரேசனுக்குள்ளே போய் ஒரு தமிழ் உத்தியோகத்தரைத் தேடிப் பிடிச்சன். எப்பிடி மன்னாருக்குப் போறது எண்டு அவரிட்டைக் கேட்க, 'நீ எங்கை நிண்டு வாறாய்? இப்ப தான் மன்னாருக்கு பஸ் ஒன்று வெளிக்கிட்டுப் போகுது. இனி விடியத் தான் பஸ்' எண்டவர், 'மன்னாருக்கு போற கொஞ்சப்பேர் ஒரு மினி வான் பிடிச்சு தங்கடை காசிலை போறத்துக்கு ஆயுத்தப்படுத்துகினம். மற்றப் பக்கத்தாலை போய் வெளியிலை பார். அவையளோட சேர்ந்து போறதெண்டால் போ' எண்டார்.

மற்றப் பக்கத்தாலை போய்ப் பார்த்தன். பெண்களும் ஆண்களுமாய்க் கொஞ்சப்பேர் நிண்டிச்சினம். அங்க நிண்ட ஒரு இளம் ஆளிட்டப் போய், மன்னாருக்கோ போறீங்கள்? நானும் வரலாமோ? எண்டன். 'ஓம்... இடம் இருக்கு, 25 ருபா வரும்... நீங்களும் வாறியளோ?' எண்டார்.

நான், ஓம் எண்டு சொல்ல, இன்னுமொருவர் பக்கத்திலை வந்தார். வந்தவர் என்னைக் கொஞ்சம் ஆழமாயப் பார்த்துப்போட்டு, மன்னாரிலை எங்கே இருக்கிறாய்? எண்டார். நான் இருக்கிற இடத்தைச் சொன்னன். உன்னையும் உன்ர பேச்சையும் பார்க்கேக்கை, நீர் அந்தப்பகுதி ஆள் இல்லை போல் தெரியுதே? எண்டு இழுத்தார்.

'நான் யாழ்பாணத்சை சேர்ந்தனான். இங்கை றால் எடுக்கிற ஒரு கம்பனியிலை வேலை செய்யுறன் எண்டன். இதைக் கேட்டவுடன, மருந்து குடிக்கிற குழந்தைப் பிள்ளையின்ர முகம் போல, அவற்ரை முகம் விகாரமாய் மாறிச்சுது.

நானும் இப்படியான தொழிலிலதான் இருக்கிறன் எண்டு இருமிக்கொண்டு சொன்ன அவர், 'ஏன்ரா.. யாழ்பாணத்திலை இருந்து வந்து எங்களுக்கு கஸ்ரம் கொடுக்கிறியள்? றால், நண்டு எடுத்து வியாபாரம் செய்து, உள்ளூரில் பிழைச்சுக்கொண்டு இருக்கின்ற எங்களின்ர பிழைப்பை ஏன் கெடுக்கிறியள்' எண்டார்.

தரப்படுத்தல் எண்டவுடன, அங்கை பெரிய பள்ளிக்கூடங்களிலை படிச்சுபோட்டு இங்கு வந்து சோதனை எழுதுவியள். மன்னாருக்கு கிடைக்கக்கூடிய சிறிய பல்கலைக்கழகக் கோட்டாவையும் பறிப்பீர்கள். றால், கணவாய்க்கு விலையை ஏத்தி, எங்களை மாதிரியான ஆக்களின்ர வாழ்வாதரத்திலை கை வைக்கிறியள்' எண்டு கோபமாய்த்தான் பேசினார்.

எப்பவாவது ஒரு யாழ்ப்பாணத்தான் சிக்கினா, அவனுக்கு நல்லாய்க் குடுக்க வேணும் எண்டு நினைச்சு வைச்சுத் செய்த மாதிரி இருந்தது அவற்றை பேச்சு.

நான் என்ர முகத்திலை எந்த உணர்ச்சியையும் காட்டவில்லை. அப்ப, நான் மன்னாருக்கு போகலாமோ எண்டு கேட்ட இளைஞர், 'ஏன் அண்ணன் இந்தப் பெடியனோடை போறாய்...? விடியப்புறத்திலும் தண்ணியைப் போட்டிட்டு கொழுவித் திரிறாய்...? எண்டார்.

நீ வாயை பொத்து... நான் ஞாயத்தைதான் கதைக்கிறன். நீயும் தானே என்னுடன் சேர்ந்து குடிச்சனி எண்டார்.

இல்லையண்ணன்... ஒரு சம்பளத்துக்கு வேலை செய்யிற ஒரு பெடியனோடை சண்டைக்கு போறாய்? நீங்கள் தவிச்ச முயல் அடிச்ச மாதிரி இரண்டு மூன்று ரூபவுக்கு றால் எடுத்து சிங்களவனுக்கு அனுப்பிக் கொமிசன் அடிக்கிறியள். இவங்கைளைப் போல ஆட்கள்தான் எங்கட கடலுணவுக்கு உண்மையான விலையை தாறாங்கள். எங்கட கடற்றொழிலாளர் இவையளாலைதான் பிழைக்கினம், எண்டு சொல்லிப்போட்டு, என்னைப் பார்த்து, நீங்கள் அங்காலை போய் நில்லுங்கோ. பஸ் வரக்கே சொல்லுறன் எண்டார்.

அங்காலை கொஞ்சம் இருட்டாய் இருந்தது. என்னர சம்மாட்டி, தொழிலாளருக்குச் கூலியாகக் குடுக்கிறத்துக்கு எண்டு தந்த 20 ஆயிரம் ரூபா பண முடிச்சைக் கட்டி இடுப்பிலை வைச்சிருந்தன். சனம் இல்லாத இடத்துக்குப் போக பயமாய் இருந்தது.

கொஞ்சம் தள்ளிப் போய் நிண்டன். அங்கால இருட்டுக்குள்ள ஏதோ சத்தம்... உற்றுப் பார்க்க ஒரு சோடி, ரெயிலுக்குள்ளை ஸ்ராட் பண்ணியிருக்க வேணும். இங்க தொடர்ந்து கொண்டிருந்தனம். இந்த சிணுங்கலையாவது என்னெண்டு எட்டடிப் பார்ப்பம் எண்டு ஒரு அடி எடுத்து வைக்க, பொம்பிளையை இறுக்கிப் பிடிச்சுக் கொண்டு, அங்காலை போ எண்டு சிங்களத்தில் துரத்தியது அந்த ஆண்குரல்.

என்னர கற்பனையிலை ஆற்றையோ பெண்சாதியும் ஆற்றையோ புருசனும் தற்செயலாக சந்தித்துபோது காமன் வலையில் விழுந்த மாதிரி கிடந்தது.

தள்ளி அங்காலை போனன். இருளும் தனிமையும் மனசை கொஞ்சம் குழப்பிக் கொண்டிருந்தது. அண்ணாந்து இருண்ட வானத்தைப் பார்த்தன். இனி எப்படி இந்த வாழ்வு போகப் போகின்றது? மன்னார் வேலை போனால் இனி என்ன செய்யலாம்? பத்மினி சொல்லுற மாதிரி வெளி நாட்டுக்கு போவதா?

ஊரைவிட்டுப் போறது மனசுக்கு இஸ்டமாயில்லை. வாழுறது கொஞ்சக்காலம். அதுக்குள்ளை ஊரையும் உறவுகளையும் விட்டு பிரிஞ்சு... எங்கையோ கண்காணாத தேசத்திலை...?

இவையள் சொல்லுறமாதிரி வெளியிலை போனாலும் என்ர படிப்பின்ர அளவுக்கு வேலை ஒண்டும் எடுக்க இயலாது.

எங்கையாவது இரண்டு ஒரு வருசம் போய் உழைத்துக்கொண்டு வந்தால் நல்லதுதான். அதுக்கு மத்திய கிழக்கு நாடுகள் தான் சரி. பத்மினி சொல்லுற மாதிரி இங்கிலண்ட், ஜெர்மனி, பிரான்ஸ் என்று போனால்... திரும்பி வரக் கனகாலம் செல்லும். நான் சின்னனாய் இருக்கேக்கை லண்டன் போன எங்கட உறவினர் ஒருவர் பத்து வருசமாகியும் திருப்பி வரேல்லை. தகப்பன்ரை செத்த வீட்டுக்குக்கூட வரேல்லை.

இப்படி ஒரு சீவியம் தேவையோ? எண்டு யோசிச்சுக் கொண்டிருக்கேக்கை, அந்த இளைஞர் ஓடி வந்தார். மினி பஸ் வந்திட்டுது போய் ஏறுங்கோ எண்டார்.

25 ரூபாவை ஏறேக்கையே வேண்டி விட்டார்கள். நான் போய் ஒரு நல்ல சீற்றாய் பார்த்து இருக்க, எனக்கு பக்கத்திலை எனக்காக பேசிய அந்த இளைஞர் வந்து இருந்தார்.

எனக்கும் நித்திரை வரவில்லை, அவருக்கும் சாடையான வெறி... பேசத் தொடங்கினார். 'நீங்கள் அவற்ரை கதையை மனசிலை வையாதேயுங்கோ. அவர் போல ஆட்கள் மன்னாரிலை கனபேர் இருக்கினம்' என்றார்.

நான் ஒன்றும் பேசாமல் இருந்தன். 'இப்படியே போனால் என்ன நடக்குமோ தெரியாது? அவன் சிங்களவன், இவன் முஸ்லீம், அவன் யாழ்ப்பாணத்தான், இவன் கிழக்கான், மற்றவன் மலைநாட்டான் எண்டு பிரிஞ்சு கொண்டு நிண்டால், நாங்கள் எப்பவும் அடிமைதான்'.

எனக்கு விளங்கிட்டுது. ஏதோ அரசியலில் இவர் இருக்கிறார். அது பிரதிபலிக்கத் தொடங்கிட்டுது.

எலெக்சன் நேரத்திலை நீங்கள் மன்னாரிலை இருந்தனீங்களோ? எண்டு கேக்க, நான் இல்லை எண்டன்.

யாழ்ப்பாணத்தாருக்கு எதிராக மன்னார் ரவுணிலை பெரிய ஊர்வலமே நடந்தது. அதுவின்ர நோக்கம் யாழ்ப்பாண எதிர்ப்பு மட்டுமில்ல... தமிழர் விடுதலை கூட்டணி வெல்லப்படாது எண்டதும் தான். அப்படியானவங்கள்தான் அதை ஒழுங்கு செய்தாங்கள். யாழ்பாணத்துக்காரற்ரை கலாபதி கடையடியில் பெரிய கலவரமே வரப் பார்த்தது. இதைக் கேள்விப்பட்டு வங்காலையில் இருந்து வந்திருந்த எம்.பி சூசைதாசனும் அவருடைய ஆதரவாளர்களும் ஆர்ப்பாட்டக்காறருடன் இழுபறிபட்டிச்சினம். பொலிசார் குறுக்க வர, பொலீசோடையும் மோதல் நடந்தது.

இப்படி ஒரு ஊர்வலத்துக்கு எப்படி அனுமதி கொடுத்தீங்கள்? எண்டு எம்.பி. சூசைதாசன் ஒரு இன்ஸ்பெக்டரைப் பிடிச்சுக் கேட்க, வாக்குவாதம் முத்திப் போச்சுது. ஒரு கட்டத்திலை இன்பெக்டரின்ரை சேட்டைப் பிடிச்சு ஒரு கையால தூக்கி, யாழ்பாணத்திலை அமிர்தலிங்கத்தக்கு அடிச்ச மாதிரி அல்லது அங்கை விடுற சேட்டை மாதிரி மன்னாரிலை விடலாம் எண்டு நினைக்கா-தேயுங்கோ எண்டு சத்தம் போட்டுச் சொல்ல, சனம் பெரிசாய்க கூடிட்டுது.

பொலிசும் ஊர்வலம் ஒழுங்கு செய்தவங்களும் விட்டிட்டுப்போயிட்டாங்கள்.

நான் சொன்னன். 'யாழ்ப்பாணத்தாரும் மோசமானவர்கள்தான்.' தனி நாடு கேட்கிறது சரிதான். ஆனா தங்கடை சனத்தையே சாதி சொல்லிப் பிரிச்சு வைச்சுக் கொடுமையளும் செய்துகொண்டு, தங்கடை படிப்பாலையும் வசதிகளாலையும் இலங்கை முழுக்க பரந்து போய், மற்றவர்களையும் சுரண்டுறது சரியோ? எண்டு நான் சொல்ல,

அதுதான் நான் நினைக்கின்றன்... தனிநாடு எண்டு வரேக்கை, பழைய கொள்கைகளையெல்லாம் விட்டுப் போட்டு, சமத்துவ கொள்கைகயோட புதுநாடு உருவாக வேணும். எண்டார் அந்த இளைஞர்.

இப்போது இவர் மேற்படியான் சிவப்பு சாயம் முழுதாகப் புரிந்துவிட்டது. வாயைக் கொடுப்பதை குறைப்போம் எண்டு மௌனமாகிட்டன். அவர் விடுகிறதாய் இல்லை. உங்களுக்கு சொன்னால் என்ன... இது சம்மந்தமான கொஞ்ச யாழ்பாண பெடியளோட எனக்குத் தொடர்பு இருக்கு. அவங்கள்தான் நாளைக்கு எங்கடை ஈழத்தைப் பெறுபேற்கப் போறாங்கள்.

இஞ்சை ஒரு பண்ணைக்கு போய் வாறனான். சும்மா கூலிக்காறப் பெடியள் போல் இருப்பாங்கள். பாலிஸ்தீனத்திற்கு ரெயினிங்குக்குப் போய் வந்தவங்களையும் சந்திச்சிருக்கிறன். ஒரு துவக்காலை ஒரு பொலிஸ் ஸ்ரேசனையே தாக்கி அழிக்கக் கூடிய ஆட்கள். ஆயுதப்பயிற்சி மாத்திரமல்லை... பெரிய கொள்கைகளிலும் ஈடுபாடு கொண்டவங்கள்.

எனக்கு என் நண்பன் யோண்சன் சொன்ன கதையொன்று ஞாபகம் வந்தது. ஒரு புளுகன் சொன்னானாம் வவுனியா காட்டுக்குள்ளை வேட்டைக்கு போன போது கூட்டமாக வந்த மான்களை சுட்டதில் ஒன்பது மான்கள் செத்தது. இத்தனைக்கும் ஒரு தோட்டா தான் என்று. கதையை கேட்டவர் என்னெண்டு ஒரு தோட்டாவிலை ஒன்பது மான் விழும் என (இந்த இடத்திலை யோண்சன் நடித்து காட்டுவான்) சுடேக்கை அப்படியே துவக்கை சிலாவிக்கொண்டு சுட்டேன் என. ஓ சிலாவிச் சுடுறது எண்டால் சுடலாம்தானே என கேட்டவர் சிரிக்காமல் சொன்னாராம். இதை நினைக்கை எனக்கு மனதுக்குள்ளை சிரிப்பு வந்தாலும்...

நான் சினத்தோடு, பாலிஸ்தீனம் ஏன் எங்கடை பெடியளுக்கு பயிற்சி கொடுக்க வேணும்? அவங்களுக்கும் தமிழ் ஈழம் வேணுமோ? நானும் கேள்விப்பட்டனான்தான், ஆனால் நம்பேல்லை. ஏதாவது உதவி தேவையெண்டால், இந்தியாதான் செய்யும். கருணாநிதி ஆட்கள் எங்களைக் கைவிட மாட்டினம் எண்டன்.

பாலிஸ்தீனம் ஏன் எங்களுக்கு உதவி செய்யுது எண்டால், அமெரிக்காதான் இலங்கை அரசாங்கத்துக்கு உதவி செய்யிது. அமெரிக்காவை விழுத்தாமல் பாலிஸ்தீனம் சுதந்திரம் பெற முடியாது. அதுவின்ர வேர்களை ஒவ்வொரு இடமாய் வெட்ட வேணும். இலங்கை அரசாங்கத்தை எதிர்க்கிறது எண்டுறது அமெரிக்காவை எதிர்க்கின்ற மாதிரித்தான்.

இப்ப பஸ்ரியாம்பிள்ளையின்னர கொலையோட எங்கடை ஆட்களும் கொஞ்சம் தலைமறைவாயிட்டினம். நானும் அவங்களோடை போய்ச் சேர்ந்து பலஸ்தீனத்துக்கு போக இருக்கின்றன். வீட்டிலை கொஞ்சம் பிரச்சினையிருக்கு. அதை முடிச்சுக்கொண்டு வெளிக்கிட்டிடுவன். என்ன... முதலிலை போய்ச் சேருகிற ஆட்களுக்குத்தான் கொமாண்டோ போஸ்ற் கொடுப்பினம்.

நீங்கள் விரும்பினால், உங்களை ஒரு நாளைக்கு கூட்டிக் கொண்டு போறன்... எண்டு சொல்லிப்போட்டு என்னைப்பற்றி விசாரிக்க வெளிகிட்டார்.

நான் மௌனமாக இருக்க...,

'இந்த பெடியள் நினைக்கிற மாதிரி நடந்திச்சுது எண்டால், இந்த சாதி குறைந்தவன், சாதி கூடியவன், யாழ்பாணத்தான், மட்டக்களப்பான், மன்னாரான் என்ற வேற்றுமையே மறைஞ்சு போயிரும். நீங்களே யோசிச்சுப் பாருங்கோ' எல்லாருக்கும் படிப்பும் வேலையும் கிடைச்சுட்டுது எண்டால், முக்கால்வாசி மக்களின்ர பிரச்சனை தீர்ந்து போயிடும்.' எண்டு அவரே கதைச்சுக் கொண்டிருந்தார்.

இதென்டா அலுப்பு எண்டு எண்ணிக்கொண்டு நித்திரை தூங்கிற மாதிரி நடிச்சன்.

இதைக் கவனிச்ச அவர், 'ஓ... உங்களுக்குக் களைப்பு வந்திட்டுது. அந்தாளோடை சேர்ந்து தண்ணியும் கொஞ்சம் அடிச்சது, எனக்கும் நித்திரை வருகுது.' எண்டு சொல்லி டப்பெண்டு சீற்றிலை சரிஞ்சிட்டார்.

ரெயினுக்குள்ள நித்திரை கொண்டதாலை, விழிச்சபடியே இருந்தன். மடுக்கோயிலடியிலை என்னோடை சாய்ந்தபோது, இல்லா இடையை அணைச்ச பத்மினி நினைவுக்கு வந்தாள்.

கண் அகன்று செங்கழுத்துவரை செழித்திருக்கும் மரிய கொறற்றியின் அழகைக் கற்பனை பண்ணினேன்.

கொஞ்ச நேரத்திற்கு முதலில, இருளுக்குள்ள கண்ட சோடியின்ரை செய்கைகள், மனதுக்குள்ள அட்டையைப் போல ஊர்ந்தது.

இந்த நினைவுகளை மீறி, பஸ் ஏற முதல்ல என்னோட சண்டைக்கு வந்தவர் ஞாபகம் வந்தார்.

'யாழ்பாணத்திலையிருந்து இங்கை மயிரையோ பிடுங்க வாறியள்..?' என்று கேட்டவர் வெறியிலை என்னை தாக்கியிருந்தால்... இல்ல இனியும் மன்னாரிலை இந்தமாதிரித் தாக்குதல் நடக்காதெண்டு என்ன நிச்சயம்? இந்த வேலை போனால் பிழைப்புக்கு என்ன செய்யிறது? இந்த வாழ்க்கை எப்படி போகப் போகுது?

வயசிலை வரவேண்டிய ஆசைகளைப் புறந்தள்ளி, மனசு எதிர்காலத்தைச் சுற்றிச் சுழண்டுது.

வெளிநாட்டுக்கு போறதுதான் ஒரே வழியா? இஞ்சை இருந்து வாழ்வை நகர்த்த முடியாதா? இப்படியெல்லாம் இடர்களைச் சந்திச்சுக் கொண்டு, எதையும் சாதிச்சோம் எண்டு இல்லாம ஒரு நாளைக்கு இந்த உலகத்தை விட்டு விட்டு போகத்தானே வேணும். சிந்தனை சிதறிச் சிக்குண்டு திரிஞ்சுது.

விளங்கிகொள்ளவும் விளங்கினதைச் சொல்லவும் எதையும்புரிஞ்சு கொள்ளமுடியா இந்த வாழ்வை எப்படி வாழ்ந்து முடிக்கப் போறன் எண்ட துயரம் உணர்வுக்குள்ள ஊடுறுத்து நிண்டுது.

பஸ்சில் முழுப்பேரும் தூங்கிவிட்ட மாதிரி பெரிய அமைதி.

றைவர் நல்ல சினிமாப் பாட்டுகளைப் போட்டுவிட்டு, வேகமாக ஓடிக்கொண்டிருந்தான். நானும் தூக்கத்தின்ர அரைமயக்கத்துக்குப் போனன்.

ஆட்டுவித்தால் யார் ஒருவர்
ஆடாதார் கண்ணா!

ஆசையென்னும் தொட்டிலிலே
ஆடாதாரோ கண்ணா!

கடல் அளவு கிடைத்தாலும் மயங்கமாட்டேன்
அது கை அளவு ஆனாலும் கலங்கமாட்டேன்
உள்ளத்தில் உள்ளதே உலகம் கண்ணா!

அப்ப எனக்குப் பிடிச்சிருந்த கண்ணதாசனின்ர பிரபல்யமான பாட்டு காதில விழ, வந்த நித்திரையும் போட்டுது. வெளியே பார்த்தன். மன்னாருக்குக் கிட்ட பஸ் வந்துவிட்டமாதிரிக் கிடந்தது.

நீ நடத்தும் நாடகத்தில் நானும் உண்டு, என் நிழலில் கூட அனுபவத்தில் சோகம் உண்டு...

பாடல் நெஞ்சை நிறைத்தது. பஸ் வேகத்தைக் குறைத்தது. விடியிறத்துக்கான அறிகுறி வானத்தில் தெரிந்தது.



selvam.a@thaiveedu.com

# Income Tax
## Augustine & Associates
25 Years Canadian Experience

" Rapid,Accurate & Affordable Service."

(Quebec, Ontario & Other Provinces)

Personal
Business
Corporate
GST,HST & QST
Bookkeeping
Payroll
T4 & T4A
Rental Releve 31

EFILE




**Wimal Augustine**
ON: 416 617 6735
QC: 514 279 7138
Toll: 1 800 668 9048



## YOUR CHOICE IN REAL ESTATE

**Jesmine J Wimalendran**
647.871.1921

**Wimal Augustine**
416.617.6735

www.propertyrealtors.ca



HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife/Future**
Realty Inc., Brokerage. Independently Owned And Operated
Office: 905.201.9977



## RESIDENTIAL SECOND MORTGAGES FROM 8.99% QUICKLY AND EFFICIENTLY

Residential 1st & 2nd Mortgages
Commercial 1st & 2nd Mortgages
Refinance & Home Equity Line of Credit
Renovation and Debt Consolidation Loan

DON'T FORGET, WE CAN CLOSE YOUR RESIDENTIAL MORTGAGE WITHIN 48 HOURS



## PURCHASE AND REFINANCE

- ✓ Gas Stations, Restaurants and Retail Plazas, Auto Body Shop, Churches, Motels and Cottages
- ✓ Business Loan for Existing and New Business
- ✓ Start up Business and Business Line of Credit
- ✓ Construction Financing for Commercial and Residential
- ✓ Store with Apartment, Duplex, Triplex and Rental Properties
- ✓ Vacant Land & Farm Financing and more...

We can arrange COMMERCIAL MORTGAGES with 10% down (some conditions may apply)

"Every great business is built on friendship"
CALL FOR FREE CONSULTATION OR VISIT MY OFFICE



**T. Antony Ponrajah**
Mortgage Agent License: M08004007
Brokerage License# 10216

416.457.0651
Email: antonyres@gmail.com

40 New Delhi Dr. Unit 107A, Markham ON, L3S 0B5
Tel: 416.431.5115

# ஆண்டவனை மாற்றிய அதிசய மன்னன்




நிமால் நாகராஜா

எகிப்தியர்களின் நீண்ட வரலாற்றில் அரசன் அக்நாடன் ஆண்டு போனது வெறும் பதினேழு ஆண்டுகள் மட்டும் தான். ஆனாலும் அந்த மன்னன் நிகழ்த்திக் காட்டிய புரட்சியை உலகத்தின் எந்த மூலையிலும், எந்தவொரு சக்ரவர்த்தியும், எந்தவொரு காலத்திலும் செய்திருக்கவேயில்லை.

அக்நாடனின் தந்தையின் பெயர் மூன்றாவது ஆமன்ஹொடப். மிகப் புகழ் பெற்ற இந்த மன்னனின் அந்தப்புரத்தில் ஏகப்பட்ட ராணிகள் இருந்தாலும், அவனது மனதுக்கு பிடித்தவள் ரியே என்னும் அரச வம்சமில்லாத ஓர் அழகி. அவளே பட்டத்து ராணி. அவர்களது இரண்டாவது மகன் அக்நாடன். மூத்த மகன் இளவயதிலேயே இறந்து போய் விட, அக்நாடனுக்குத்தான் அடுத்த அரசனாகும் வாய்ப்பு இருந்தது.

ஆனாலும் சிறுவன் அக்நாடனின் வாழ்வு அத்தனை சுவாரசியமாக இருந்திருக்கவில்லை. அரச குடும்பங்களின் ஆடம்பர விழாக்களில் அவனைக் காண முடிவதில்லை. கோலாகலமான கோயில் திருவிழாக்களில் அவன் தலை தெரிவதில்லை. செதுக்கப்பட்ட சிலைகளில் அவன் உருவங்கள் இல்லை. அரச குடும்ப ஓவியங்களில் அவன் விம்பங்கள் அறவே இல்லை.

இளவரசன் நாளாந்த வாழ்வில் இருந்து விருப்புடன் ஒதுங்கி இருக்கவில்லை, குடும்பத்தால் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தான். காரணம் மிகவும் கவலையானது. பிறப்பிலேயே மார்ஃபன் எனும் நோயால் அக்நாடன் பாதிக்கப்பட, கழுத்து, முகம், கைகள், கால்கள் எல்லாம் ஏகத்துக்கும் நீளமாகி, உள்ளிழுத்த கண்களோடு, பருத்த இடையோடு வளைய வந்த அக்நாடனை குடும்பமே வெறுக்கத் தொடங்கியது. (அமெரிக்க ஜனாதிபதி ஆபிரஹாம் லிங்கன் கூட இந்த நோயால் பாதிக்கப்பட்டவர் தான்.)

ஓரம் கட்டப்படும் தன் மகன் மீது மகாராணிக்கு அளவற்ற அன்பு உண்டு. சரியான தருணம் பார்த்திருந்த அவள், கணவன் இறந்ததும் செய்த முதல் காரியம் மகனைத் தூக்கி அரியணையில் வைத்து அழகு பார்த்தது தான். மாபெரும் எகிப்திய சாம் ராஜ்ஜியத்தை ஆளுவதற்கு அக்நாடனை விடவும் வீரமான இளவரசர்கள் பலர் மாளிகையில் இருந்தார்கள். ஆனாலும், பலம் கொண்ட மகாராணியை எதிர்க்க எவருக்கும் துணிவிருக்கவில்லை.

தாயின் தயவால் ஆட்சிக்கு வந்த அக்நாடன் அதிரடிப் புரட்சிகளை அடுத்தடுத்து அரங்கேற்றத் தொடங்கினான்.

அக்நாடனுக்கு சிறுவயதில் இருந்தே, எகிப்தியர்கள் வழிபடும் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட கடவுள்களில் இஷ்டமிருக்கவில்லை. கண்ணுக்கு தெரியாத கடவுள்களை விட, தினமும் தரிசனம் தரும், ஆடன் என்றழைக்கப்பட்ட சூரியன் அவனுக்கு அதிகமாக பிடித்திருந்தது. உலகத்தின் இயக்கத்திற்கு சூரியனின் ஒளியே முக்கியம் என அக்நாடன் நம்பினான்.

நாலாவது ஆமன்ஹொடப் எனும் தன் இயற்பெயரை தூக்கி எறிந்த மன்னன், ‘சூரியக்கடவுளின் தொண்டன்’ என பொருள்படும் அக்நாடன் ஆகிவிட்டான்.

சிறுவயதில் தனிமைப்பட்டதால் நிறைய சிந்தித்திருப்பானோ என்னவோ, எகிப்துக்கு ஏகப்பட்ட கடவுள்கள் தேவையில்லை, ஒரேயொரு கடவுளே போதும் என அக்நாடன் அதிரடியாக முடிவு செய்தான்.

மிஸ்டர் சூரியனுக்கு திடீரென எகிப்தின் ஒரேயொரு கடவுள் என்ற பெரும் பதவி கிடைத்தது. மனித வடிவிலான சிலைகளை வழிபட்டு வந்த எகிப்தியர்களுக்கு இனிமேல் ஒரு சூரிய வட்டம் தான் கடவுள் என்றாயிற்று.

கடவுள் மாறியாயிற்று. ஆனால் எகிப்திய தலைநகரம் தீப்ஸ் முழுக்க பிரமாண்டமாக நிமிர்ந்து நின்ற மற்றைய கடவுள்களின் கோயில்களின் நிலை என்னவாவது?

கொஞ்சம் கூட அலட்டிக் கொள்ளாமல் அக்நாடன் அடுத்த உத்தரவு போட்டான், ‘தலைநகரை புது இடத்திற்கு மாற்றி விடுகிறேன், தீப்ஸில் இருக்கும் அத்தனை கோயில்களையும் இடித்துத் தரைமட்டமாக்கி விடுங்கள்.’

கோயில்களில் வசதியாக, வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்த ஆயிரக்கணக்கான பூசாரிகளுக்கு அடக்க முடியாத கோபம் வந்தது. ஆனாலும், மன்னனை எதிர்க்க முடியாது, ஏனென்றால் அன்றைய எகிப்தில் அரசனும் கடவுள் தான்.

சொன்னது போலவே மன்னன், அமர்ணா எனும் புதிய தலைநகரை புத்தம் புதிதாக வெறும் ஆறுவருடங்களில் மிக பிரமாண்டமாக நிர்மாணித்துக் காட்டவே, மக்கள் இருநூறு மைல்கள் தூரத்தில் இருந்த புதிய தலைநகருக்கு இடம் பெயர வேண்டியதாயிற்று.

நகர் நடுவே சூரியக்கடவுளின் பிரமாண்டமான கோயில் கம்பீரமாக ஜொலித்தது. தெய்வீகமான சூரியக்கதிர்கள் கோயில் முழுவதும் பரவ வேண்டும் என்பதால் கோயிலுக்கு கூரைகளே கிடையாது.

வேறு வழியின்றி சூரியக்கடவுளை நம்பத் தொடங்கிய எகிப்திய மக்களுக்கு இன்னுமொரு விடயத்தை மட்டும் கொஞ்சம் கூட ஜீரணிக்கவே முடியவில்லை. அது அவர்களது ‘மறுவாழ்வு’ பற்றிய நம்பிக்கைகள் தகர்ந்தது தான்.

எகிப்தில் இறப்பவர்களுக்கு பொறுப்பாகவும் ஒரு கடவுள் இருந்தார். நரி முகமும், மனித உடலும் கொண்ட அவருக்கு ‘அனுபிஸ்’ என்று பெயர். அவருடைய மெயின் தொழில் எங்கள் சித்திர குப்தன் போலவே, பாவ, புண்ணிய கணக்கு பார்ப்பது தான். இறந்தவரின் இதயம் தராசு ஒன்றில், ஒரு தட்டில் வைக்கப்படும். மறுதட்டில் ஒரு மெல்லிய பறவை இறகு வைக்கப்படும். புண்ணியம் செய்தவர்களின் இதயத்தின் நிறை, இறகை விட இலகு

வாக இருக்கும் என்பது எகிப்தியர்களின் நம்பிக்கை. இறகின் தட்டு கீழே இறங்கினால், ஆத்மா சொர்க்கத்தை நோக்கி பய ணப்படும். இல்லையேல் இரைக்காக காத்திருக்கும், முதலைத் தலை கொண்ட அமுட் என்ற பெண் கடவுளால் இதயம் ‘லபக்’ கென்று விழுங்கப்படும். அத்துடன் அந்த ஆத்மாவின் ஆட்டம் குளோஸ்.

காலம், காலமாக இதையே நம்பிக் கொண்டிருந்த எகிப்திய மக்களுக்கு இனிமேல் ‘அனுபிஸ்’ கடவுள் அறவே இல்லை என அக்நாடன் கறாராக சொல்லிவிட, அவர்கள் ஏகத்துக்கும் குழம்பிப் போனார்கள்.

அடுத்தடுத்து புரட்சிகளை அறிமுகம் செய்து கொண்டிருந்த அக் நாடன் அடுத்ததாக எடுத்து விட்ட அஸ்திரத்தை வரலாற்றாசிரியர் கள் இன்றும் மனம் குளிர வாழ்த்துகிறார்கள்.

அதுவரை அரசர்களை ஆஜானுபாகுவான போர்வீரர்களாகவும், அரசிகளை அற்புத பேரழகிகளாகவும் மட்டுமே சிலைகளாக வடித்துக் கொண்டிருந்த கலைஞர்களை அழைத்து, ‘உங்கள் படைப்புக்களில் ஏனிந்த கற்பனைகள்? நிஜத்தில் பார்பதையே செதுக்குங்கள், வாழ்க்கையில் உண்மை தன்மை இருக்க வேண் டும்.’ என அரசர் கண்டிப்பான உத்தரவு போட, அரச குடும்பத்தி னர் உட்பட, அந்தக் கால மக்களின் இயல்பான உருவங்களை கலைஞர்கள் சிலைகளாக வடித்து, ஓவியங்களாக வரைந்து தள் ளினார்கள். அதனால் தான் அகன்ற இடுப்புடனும், நீண்ட முகத் துடனும் அக்நாடன் எகிப்திய வரலாற்றில் இடம் பெற்றிருக்கிறான்.

அக்நாடன், அவன் மனைவி பேரழகி நெஃபிரெட்டிஸ், அவனது குழந்தைகள் சகலரும் அரண்மனையில் சாவகாசமாக, சந்தோச மாக இருக்கும் தருணங்களை எல்லாம் கலைஞர்கள் தடையின்றி கலைப்படைப்புகளில் காட்டிவிட, அக்நாடனின் உதவியால் எகிப் தின் உண்மையான முகத்தை வரலாறு பதிந்து வைத்துக் கொண் டிருக்கிறது. அதற்காகவே அந்த புரட்சி மன்னனுக்கு ஒரு பெரிய நன்றி சொல்லலாம்.

‘ஒரு கடவுள்’ கொள்கையை மனித வரலாற்றில் முதன்முதலில் பதிந்தவன் அக்நாடன் தான் என ஆராய்ச்சியாளர்கள் அடித்துச் சொல்கிறார்கள். இவனது கொள்கையைத் தான் பின்நாட்களில் மோசஸ் பின்பற்ற, கிறிஸ்தவ மதம் ஒரு கடவுள் கொள்கையை வரித்துக் கொண்டது எனவும் சில வரலாற்றாசிரியர்கள் வாதிடுகி- றார்கள்.

கிறுக்கு மன்னன், கிரிமினல் மன்னன், புரட்சி மன்னன் என வரலாற் றில் சர்ச்சைகளால் சூழப்பட்ட அரசன் அக்நாடனைப் பற்றி பல் வேறு கருத்துக்கள் இருந்தாலும், மனித சரித்திரத்தில் ‘சுயமாக சிந்தித்து, மாற்றங்களை நோக்கி நகர்ந்த முதல் மனிதன்’ என வரலாற்று அறிஞர்கள் அவனைப் போற்றுகிறார்கள். புகழ்பெற்ற மனோதத்துவ நிபுணர் சிக்மன்ட் பெரொய்ட், தனது மரணப்படுக் கையில் இருந்தவாறே எழுதிய கடைசிப் புத்தகத்தில் அக்நாட னைப் பற்றி நிறையவே எழுதியிருக்கிறார்.

எகிப்திய வரலாற்றை தலைகீழாக மாற்றிக் காட்டிய அக்நாடன், கி.மு. 1336ம் ஆண்டில், திடீரென இறந்து போனான்.

பிறகென்ன... அவனது அத்தனை மாற்றங்களும் மண்ணுக்குள் போய் விட, பழையபடியே இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட கடவுள்க ளும் வனவாசம் முடித்து, சிரித்தபடியே நாட்டுக்குள் வந்து சேர்ந் தார்கள். பூசாரிகளின் வாயெல்லாம் பற்கள் தான்.

அக்நாடனின் சிலைகள் நாடெங்கும் உடைக்கப்பட்டன, சூரியக் கடவுளின் கோயில்கள் தகர்க்கப்பட்டு அதன் கற்களில் மற்றைய கோயில்கள் எழுந்தன. எல்லாவற்றிற்கும் மேலாக அக்நாடனின் பெயரே எகிப்திய அரசர்களின் லிஸ்டில் இருந்து அழிக்கப்பட்டா யிற்று. அக்நாடன் கட்டியெழுப்பிய புதிய தலைநகரம் கைவிடப் பட்டு மெதுவாக மண்ணுக்குள் புதைந்து போயிற்று.

கடந்த நூற்றாண்டில் மண்ணுக்குள் புதைந்திருந்த அமர்ணா நகரை ஆய்வாளர்கள் கண்டுபிடித்த பின்பு தான் அக்நாடன் என்றொரு மன்னன் எகிப்திய வரலாற்றில் இருந்தான் என உலகம்



தெரிந்து கொண்டது.

அவனது கல்லறை சூறையாடப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப் பட்டாலும், இன்றுவரை அவனது மம்மி அகப்படவேயில்லை.

அக்நாடன் இறந்து, இருவருடங்களில் ஆட்சியேறிய அவனது மகன் டுடங் ஆமனுக்கு அப்போது வயது வெறும் எட்டு. பத்து வருடங்கள் மட்டுமே ஆட்சி செய்த அந்த இளம் மன்னன், எகிப்தின் மிகப் புகழ் பெற்ற மன்னனாக பிரபல்யம் பெற்றதற்கு காரணம் அவனது ஆட்சி கிடையாது, அவன் இறந்து மூன்றாயி ரம் வருடங்களுக்கு பின்னர் கண்டுபிடிக்கப்பட்ட அவனது கல் லறை தான் காரணம்.

1922ம் ஆண்டு, இங்கிலாந்து அகழ்வாராய்ச்சியாளர் ஹோவார்ட் கார்டர், டுடங் ஆமனின் கல்லறையை திறந்த போது, அதிர்ச்சி யில் உறைந்து போனார். இன்று வரைக்கும் உலகத்தில் கண்டு பிடிக்கப்பட்ட அத்தனை பொக்கிசங்களிலும் தலைசிறந்ததாகக் கருதப்படும், விலைமதிப்பற்ற பெரும் புதையல்கள் அவர் முன்னே கொட்டிக் கிடக்க, அதன் நடுவே தன்னுடைய தங்கப் பேழைக்குள் டுடங் ஆமன் மம்மியாக கிடந்தான்.



nimal.nagaraj@thaiveedu.com

# நீங்கள் ஒரு பிறைவேட் மோட்கேஜ் கொடுப்பவரா?

# உங்கள் முதலீட்டை மீள பெற சிக்கலாக உள்ளதா?

அப்படியானால் இப்படிப்பட்ட சில சிக்கல்களை எதிர்கொள்கிறீர்களா?

அடமானம் எடுத்தவர்கள் மாதாந்த கட்டுப்பணம் செலுத்த தவறுதல்.


மற்றைய மோட்கேஜ்களுக்கு ஒழுங்காக பணம் செலுத்த தவறுதல்.

வீட்டுக் காப்புறுதி கட்டணம் ஒழுங்காக செலுத்த தவறுதல்.

கொண்டோ காசு, புறப்பட்டி ரக்ஸ் செலுத்த தவறுதல்.

வேறு மோட்கேஜ் கொடுத்தவர்கள் பவர் ஒப் சேல் நோட்டீஸ் அனுப்பி இருப்பது.

அடமானம் பெற்றவர்கள் மீளத்தர முடியாமல் மறுக்கும் நிலைமை.



COURT FILE NO.:

ONTARIO
SUPERIOR COURT OF JUSTICE

BETWEEN: [redacted] Plaintiff

- AND -

[redacted] Defendant

STATEMENT OF CLAIM (MORTGAGE ACTION - FORECLOSURE)

TO THE DEFENDANTS

A LEGAL PROCEEDING HAS BEEN COMMENCED AGAINST YOU by the Plaintiff. The claim made against you is set out in the following pages:

IF YOU WISH TO DEFEND THIS PROCEEDING, you or an Ontario lawyer acting for you must prepare a statement of defence in Form 18A prescribed by the Rules of Civil Procedure, serve it on the Plaintiff's lawyer or, where the Plaintiff does not have a lawyer, serve it on the Plaintiff, and file it, with proof of service in this court office, WITHIN TWENTY (20) DAYS after this Statement of Claim is served on you, if you are served in Ontario.

If you are served in another province or territory of Canada or in the United States of America, the period for serving and filing your Statement of Defence is 40 days. If you are served outside Canada and the United States of America, the period is 60 days.

...d file a ...e. This ...fence.

SPECIMEN

NOTICE OF SALE UNDER CHARGE

TO: THE PARTIES SHOWN ON SCHEDULE "A" ATTACHED HERETO

TAKE NOTICE that default has been made respecting payments and other covenants under a certain charge of land made between [redacted] as chargor and [redacted] as chargee, on the security of:

[redacted], METROPOLITAN TORONTO CONDOMINIUM [redacted] PT BLK 43 66M2131, PTS 15, 16, 17, 18 & 19 66R15502 AS DESCRIBED IN SCHEDULE "A" OF DECLARATION D203234 SCARBOROUGH, CITY OF TORONTO

PIN [redacted]

Municipally known as: [redacted], Toronto, Ontario M1V 5E3.

and registered in the Land Registry Office for the Land Titles Division of Toronto (No. 80), on the 20th day of December, 2017 as Instrument No. [redacted] (the "Charge").

AND [redacted] hereby gives you notice that the amounts now due on the Charge for principal, interest and costs, are as follows:

| | |
|---|---|
| Principal Balance | $70,000.00 |
| Interest to October 22, 2019 | $6,928.00 |
| Pre-Payment Interest Penalty | $2,598.00 |
| NSF Fee | $1,200.00 |
| Administration Fee | $1,500.00 |
| Statement Preparation | $475.00 |
| Legal Fees and Disbursements to the ... this notice | $2,500.00 |
| TOTAL | $85,201.00 |

SPECIMEN

(such amount for costs being up to and including the service of this notice only, and thereafter such further costs and disbursements will be charged as may be proper), together with interest at the rate of 13.00% per annum, on the principal, interest and costs hereinbefore mentioned, from May 15, 2019.

**AND UNLESS** the said sums are paid on or before June 20, 2019, the undersigned shall sell the property covered by the said Charge under the provisions contained in it.

**THIS NOTICE** is given to you as you appear to have an interest in the charged property and may be entitled to redeem the same.

**DATED** at Toronto, Ontario on May 14, 2019.

[redacted]

By its solicitors

[redacted]

Barrister & Solicitor

[redacted]

## வருமுன் காப்பதே சிறந்தது

**தயா PK கந்தையா** BAS, LLB (Hons)

வழக்கறிஞர்

**மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்**

## 416-333-1001

(மெசேஜ்சிலை விடுங்கோ, கட்டாயம் திருப்பி உங்களுக்கு போன் அடிப்பேன்)

# KANDIAH LAW

PROFESSIONAL CORPORATION

T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002


Credit Recovery - Mortgage Enforcement - Real Estate Law - Family Law

Legal Advise - Legal Research - Legal Analysis - Legal Referrals - Document Review - Document Drafting



**Thaya PK Kandiah** BAS, LLB (Hons)

Barrister, Solicitor & Notary Public


NO MEDICAL
UP TO $500,000
$0 first month's premium
No medical exams
Simple and straightforward
18-80 years can apply
MEDICAL INUSRANCE FOR
SUPER VISA
100%
REFUND IF VISA DENIED
Sritharan Thurairajah
Chartered Life Underwriter, Certified Health Insurance Specialist
Direct: 416.918.9771
Business: 416.321.2500
MDRT
Member of Million Dollar Round Table
Life100
INSURANCE & INVESTMENTS INC.
10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6
Web: www.life100.ca, E-mail: info@life100.ca
LaCapitale
iA Financial Group
Are you getting Million Dollar advice


Residential Mortgages | Commercial Business Loans | 1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation | No Down Payment Confirmation
Call me more details...
வீட்டுக்கடன்
வியாபாரக்கடன்
முதலீட்டுக்கடன்
வருமான உத்தரவாதம்
இல்லாமலே
பெற்றுக் கொடுக்கப்படும்
கடன் தேவையா?
என்னை அழையுங்கள்
ரம்போ தர்மலிங்கம்
KAPITAL CARE
MORTGAGE INC.
Rambo
Tharmalingam
Mortgage Agent
5200 Finch Ave. E. Unit 306, Scarborough, ON. M1S 4Z5
647-290-3416 / 416-543-1111


Call Me First and Say "YES"
to Get Your Dream Home at a
Dream Rate!
For all your Mortgage needs
சகல Mortgage தேவைகளுக்கும்
தமிழில் உரையாட என்னை அழையுங்கள்
Peter Sober
Manager, Mobile Mortgage Specialist
Paragon Sales Award
Dir: 416-275-3571
Pager: 1-866-767-5446 | Fax: 905-240-3882
Email: peter.sober@td.com
Your Smile Is My Best Return!
Purchase, Pre-Approvals, Refinances,
Renewals and Switch, Builder Purchase,
Home Line Of Credit, Self Employed,
New Immigrants, Multi Rental Properties.
2019 Platinum Sales Award "Top 70 in the country"
2018 Gold Sales Award "Top 100 in the country"
2017 Paragon Sales Award "top 35 in the country"
2016 Gold Sales Award
2015 Platinum Sales Award
2014 Gold Sales Award
TD Banking can be this comfortable.
Five Branch Locations to serve you better
Scarborough, Markham, Ajax, Brampton & Mississauga


நியூ
ரங்கனாஸ் நகைமாடம்
சிங்கப்பூர் நகைகளை மிகக் குறைவான விலையில்
பெற்றுக்கொள்ளலாம்
பழைய தங்க நகைகள் அதிகூடிய விலைக்கு வாங்கப்படும்
தங்க நகை அடகு சேவை குறைந்த வட்டி வீதம்
புதிய தங்க நகை சேமிப்பு திட்டம் ஆரம்பம்
647-702-2159
MARKHAM & STEELES
YELLOW BUILING
6055 STEELES AVE ESCARBOROUGH, ON M1V 5P6


Ravi Kana
COMMITTED TO EXCELLENCE
Call me now to get your HOME SOLD 416-725-7284
CENTURY 21.
Percy Fulton Ltd.
Ravi Kana
Broker
Cell 416.725.7284 (RAVI)
ravikana33@gmail.com
www.ravikana.com
2911 Kennedy Rd. Toronto, ON M1V 1S8 Office 416.298.8200


"Serving With Dignity,
Compassion and Excellence"
WELL GUARD INSURANCE
220 Commerce Valley Dr W Suite 480,
Thornhill, ON L3T 0A8
LOTUS
Funeral and Cremation Centre Inc.
121 City View Dr, Etobicoke,
ON M9W 5A8.
Patricia Peter BBM
Licenced Funeral Preplanning Director & After Care Advisor
Licenced Insurance & Investment Advisor
Direct: 416-834 5753
Email: advisorpat10@gmail.com


Residential Mortgages | Commercial Business Loans
1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation
Call us more details...
KAPITAL CARE
MORTGAGE INC. Lic#12623
Rambo
Tharmalingam
Mortgage Agent Licence # M08008479
647-290-3416
Kethes
Sivasubramaniyam
Licence # M08006105 Mortgage Agent
416-873-5780
5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5


DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills
Vasuki Devadas
Barrister, Solicitor & Notary Public
vasuki@vdlaw.ca
Vinayagamoorthy Devadas CPA, CMA, MBA
Barrister & Solicitor
devadas@vdlaw.ca
1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Next to RBC @ Kennedy & Ellesmere
Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000 | www.vdlaw.ca
Contacting us should be easy as 1,2,3,4 Just remember "266"

NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law

RAMAN HOME COMFORT INC
HEATING
Quality Products, Certified Technicians, Reliable Service & Reasonable Prices
எமக்கூடாக Furnace வாங்கும்போது ஒன்ராறியோ அரசு வழங்கும் Rebateஐப் பெற்றுக்கொள்ளலாம்
SAVE $2000 WHEN PURCHASING A NEW HIGH-EFFICIENCY FURNACE
LENNOX
Raman Chelliah
Sales Person
647-893-4414
Tel: 416-332-2989
Email: info@ramanhomecomfort.com
Scarborough : C105-6055 Steeles Ave. East, Scarborough, ON M1X0A7

15 years of Success
500+ Agents
Selva Vettyvel
Broker of Record
HomeLife/Future Realty Inc., Brokerage
416.568.4301
VettyvelLaw
Professional Corporation
Rishani Vettyvel
BARRISTER AND SOLICITOR
BBA, LLB, LLM
Real Estate Law
416.261.1544

AEREN Thiyagarajah BEng
Realtor
aeren.realtor@gmail.com
Dir: 647-888 3500
DILEEP Thangavel
Realtor
dileep.realtor@gmail.com
Dir: 416-666 2300
BUS: 905 201 9977 | FAX: 905 201 9229
HomeLife/ Future Realty Inc., Brokerage
Independently Owned And Operated
205 - 7 Eastvale Drive, Markham, ON L3S 4N8

அனைத்து மோட்கேஜ் தேவைகளுக்கும்
BonaFide
Mortgage Solutions Inc.
Brokerage Lic# 10216
Suren Nathan AMP
Mortgage Broker
License# M08004479
Dir. 416-436-1111
Office. 416-548-7475 Fax: 416-548-7496
suren@bonafidemortgage.ca, 7 Eastvale Drive,Unit 203, Markham, ON, L3S 4N8

ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
வீடு என்பது தொடுவானம் அல்ல
கலங்கரை விளக்கு...
Thana Yoganathan
Sales Representative
416.418.5749 www.thanahomes.com
HOMELIFE LANDMARK REALTY INC.BROKERAGE* OFFICE: 905-305-1600

வீடு வியாபார நிலையம்
வாங்க விற்க
HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
Bus: 416-298-3200, Fax: 416-298-3440,
E-mail: kuna@kunahomes.ca
*Independently Owned and Operated.
Kuna Nagalingam
Sales Representative
Sujatha Kunasegar
Sales Representative
416.402.4545

RL RAMACHANDRAN LAW
PROFESSIONAL CORPORATION
CIVIL LITIGATION
REAL ESTATE
FAMILY
CORPORATE
EMPLOYMENT
WILLS & ESTATE
VITHU RAMACHANDRAN
J.D., B.Com (Honours)
Barrister & Solicitor
416-902-8225
VITHU@RAMACHANDRANLAW | FAX: 416-391-6056

Ahilan Thanabalasingham
Sales Representative
416.617.1767
RE/MAX ROYAL PROPERTIES
RE/MAX Royal Properties Realty Ltd., Brokerage
Office: 905.471.0002
7595 Markham Road, Unit 19 Markham, ON L3S 0B6

UTHAYAN SIVARAJAH
416.301.5555
SUGAN SIVARAJAH 416.890.9999
RAJ SIVARAJAH 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH 416.453.7777
ROYAL LEPAGE Ignite
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS

LIFEPLAN INVESTMENTS
Ahilan Balachandran, CFP, CLU, CHS, EPC
Founder and CEO
WE CAN HELP BUILD YOUR FUTURE
Insurance • Investments • Tax and Estate Planning
905-294-PLAN (7526)
www.lifeplaninvestments.ca
416-894-2009
Download Free MyLIFEPLAN App
App Store
Google Play

Your Lifelong Realtor
Nanda Kandasamy
Broker
DIR: 416 457 4509
OFF: 416 270 1111
nandakandasamy@gmail.com
RE/MAX ACE REALTY INC., BROKERAGE

Mega Financial Group
உங்கள் அனைத்து விதமான காப்புறுதித் தேவைகளுக்கும்.
Call Now
Raj Nadarajah
416-666-1120

நீங்கள் வீடு வாங்கும்போது
$8475.00
வரை அரச வரிச்சலுகை
பெற்றுக்கொள்ள தகுதியானவரா?
விபரங்களுக்கு 416-888-9492
Swapna Chari, Broker HomeLife Galaxy Realestate Brokerage, Ltd.
301-111 Grangeway Ave, Toronto, Ontario, M1H 3E9 tel: 416-284-5555

Rathiga Thillaivannan BCom
Sales Representative
Buying / Selling/ Leasing/ Investing
Dir: 647.839.0079
rathiga24@hotmail.com
HomeLife/Future Realty Inc.,Brokerage*
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
205-7 Eastvale Dr, Markham ON. L3S 4N8
*Independently owned And Operated

GAJAN
MAHAKANAPATHY
416.999.2777
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
Realtorgajan.com
905.239.9222 info@realtorgajan.com

Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
CSC Credit Solution Centre
309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: 416.439.0224
Cell: 416.450.5011
Fax: 416.439.0226
www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com

Vaheesan Jeyaveerasingam
Sales Representative
Re/Max Ace Realty Inc. Brokerage
3-1286 Kennedy Road, Scarborough, Ontario. M1P2L5
Dir:
Bus:416-270-1111 | Fax:416-270-7000
www.vaheesanrealtor.com.
Email:gvaheesan@hotmail.com
RE/MAX ACE REALTY INC., BROKERAGE

BUY / SELL / INVEST
Please Contact
RAVI PARAMU
Broker
Dir : 416-262-4176
Bus : 416-298-3200
rparamu1558@gmail.com
HomeLife Today Realty Ltd., Brokerage* 31 Progress Ave, Suite 210,Toronto ON, M1P 4S6

NOW HIRING
JOIN OUR DYNAMIC TEAM
CHANDRAN RASALINGAM CHS
President & CEO
INFORCE LIFE Financial Services Inc.
10 Milner Business Court, Suite 707
Scarborough, ON M1B 3C6
Dir: 416-909-0400 Bus: 416-321-6000 x400
career@inforcelife.com www.inforcelife.com
QUALITY ADVICE YOU CAN TRUST

Tharma Iyathurai
Sales Representative
HomeLife/GTA Realty Inc., Brokerage*
5215 Finch Ave. E., Suite: 203
Toronto, Ontario
Cell: 416 505 8532
Office: 416 321 6969
Fax: 416 321 6963
tharma11@yahoo.com
5215 Finch Ave. E., Suite: 203, Toronto, Ontario

DR. YALINI ARAVINTHAN BDS. DDS.
DENTIST
YA Smiles Dental Clinic
ALL YOUR DENTAL NEEDS...
CALL US: 905-554-5524
7475 MCCOWAN RD, MARKHAM, ON L3S 3J6
WWW.YASMILES.CA

உலகின் முன்னணி காணி, வீடு விற்பனை நிறுவனமான RE/MAX முதல் தடவையாக யாழ் மண்ணில்
RE/MAX NORTH REALTY
077 566 0000
www.remaxnorth.lk
info@remaxnorth.lk
83 Kannathiddy Road, Jaffna
LATHAN VARATHARAJAH
Broker Owner
+94 76 493 3331
+1 416 230 7007
lathan@remaxnorth.lk